ORIENTAL RESEARCH INSTITUTE
LIBRARY

ACCESSION No. 030359

T-1

CALL No. 24, cc + c43

SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

உ

சிவமயம்.

திருக்குறட் சுமோச வெண்பா 359

அறத்துப்பால்

மூலமும்—உரையும்.

ஆசிரியர்

மெஞ்ஞானபாண்டியன்.

தூத்துக்குடி,

பாதுதல மித்தின் பிஸில் பதிப்பிக்கப் பெற்றன.

இரண்டாம்பதிப்பு.

தூளை-ம் ஞ கார்த்திகை மீ.

1931

[Reserved rights]

உ

குமரன் துணை.

முகவுரை

தெய்வப்புலமைத் திருவள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம் பாரதமுதலிய இதிகாசங்களினும், காந்தம் பாகவத முதலிய புராணங்களினும், சிந்தாமணி சிலப்பதிகார முதலிய காவியங்களினும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களினும், வேறு பல நூல்களினும் இருந்து தெரிந்தெடுத்து எமது குலதெய்வமாகிய குமரேசனது முன்னிலையில் விண்ணப்பித்து அவற்றிற்கு விளக்கூறு முறைமையில் குறள்களை உதாரணமாக எடுத்துக்காட்டி யிற்றைக்கு மூன்று வருடங்கட்கு முன்னரே யிந்நூலை முடித்துவைத்தும் வெளிப்படுத்தக் கூசி வாளா விருந்தேன். இங்ஙனமிருப்ப, அறிஞர் பலர் இந்நூலிட் சில பாக்களைக் கேட்டு மகிழ்ந்து இதனை அச்சிலேற்றி அனைவருக்கும் உபகரிக்க வேண்டுமென்று என்பால் அன்பால் என்னைத் தூண்டினர் அன்னோர் வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு இதுபொழுது இதனை வெளிப்படுத்துகின்றேன்.

கதைகளைக் குட்டாவின் அமைத்துத் திருக்குறள்களோடிணைத்துத் தனிச்சிறும் சேர்த்திருத்தலினால் இந்நூல் முழுதும் நேரிசை வெண்பாவால் நிறைந்துள்ளது. தெய்வ வணக்கமும் அவையடக்கமும் உள்பட இதில் 1332 வெண்பாக்கள் அடங்கியுள்ளன.

செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய சிறந்த சொற்சுவையும் இருவினையும் நீக்கும் அருமருந்தனைய உயர்ந்த பொருட்பெர்லிவும், பொருந்திவிளங்கும் நமது தமிழ்வேதத்தின் அமிழ்தமயமான நீதியொழுக்கங்களையும் பொருள் நுணுக்கங்களையும் அநிந்தனுபவித்து ஆனந்த மடைவதே மக்கட்பிறப்பின் மாண்பயனுகும். அருமையான இத் தருமநூலை யருளிய நாயனாரகத்துக்கல்லி தாயாரவர். தாய்மார் தனவமுதூட்டி உடற்குறுதி செய்வர்.

காயனர் குறளமுதூட்டி உயிர்க்குறுதி செய்கின்றார். இக் கருணை வள்ளல் காட்டியுள்ள குறள் நீதிகளும் அவற்றிற்கு உரிமையான பல அரிய சரிதங்களும் இதில் ஒருங்கமைந்துள்ளன. பாலொடு கலந்த நீர்பாலாகு மாறுபோல் வள்ளுவர் நூலொடுகலந்த இதுவும் ஓர் நூலாகும் என்பது சால்பாம்.

எவ்வகையிலாவது திருக்குறளின்பயனை எல்லாரும் பெற்று இன்புற வேண்டு மென்பதே என் வேட்கை. இவ் வேட்கையே யெனது நாணத்தை ஒருபுறமொதுக்கி யென்னை யிந்நூலை யியற்றும்படி செய்தது. இந்த நல்ல எண்ணத்தை என் உள்ளத்தில் தோற்றுவித்து அதனைநிறைவேற்றிய திருவருளையும் குருவருளையும் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

திருவள்ளுவர் நிலையம்,
தூத்துக்குடி.

} லெகவீரபாண்டியன்.

Introduction.

1. The present volume is a fitting companion to Thirukural, the divine work of great creative genius Thiruvalluvar who is universally revered as a saint throughout the Tamil World.

2. This book, the first of its kind in the field of Tamil Literature, is composed by the Great Scholar and Poet **Jagaveerapandian** of Ottanatham and every page of it, which is replete with the grace and splendour of word beauty enhanced by the ethical import of each couplet, is a clear proof of the author's deep penetration and critical powers of research in the religious literature of the land.

3. The abstract ethical import of each couplet of the Kural is illustrated by suitable anecdotes culled out from the Puranic and other Hindu literature of the past and is written in the very same sweet rythym as that of the Kural which is a striking evidence of the author's poetic composition which is as much inspired as the original itself. For the reason that each Kural is definitely backed and aptly illustrated by some Puranic anecdotes and other, the value of original work is enhanced hundread fold, its meaning of each couplet being made richer and fuller. Hence such a useful and interesting work as the present, which is a genuine and patriotic attempt on the part of the author to renovate the past will surely attract the attention of the Tamil world.

4. At the same time, wherever the reader may turn his eye through the 1332 stanzas of this volume, each section bears the strong impression of the author's profound scholarship, critical powers of research and admirable talents of poetic composition. For the reasons stated above it is no doubt that the present volume is a rich addition to the Tamil literature. The Tamil world itself owes a deep debt of gratitude to the author for having broken a new ground in the field of research.

5. This book must be in the hands of all lovers of Tamil literature, especially the readers of Kural if the full meaning of the divine work should be understood in its proper setting. Also the work may be placed in the hands of school boys and taught regularly as class lessons to them to produce in them a love and reverence for the past.

6. It is finally hoped that by the kind of reception given to the present volume by Tamil reading public, the author would be spurred into fresh composition of a similar nature and thus enrich the Tamil Literature.

Swami Vidyanantha,

Madras.

நான்முகம்.

புனிதம் நிறைந்த இனிய இந்நூலே
நூலென நினைந்து சாலவும் மகிழ்ந்தேன்.

இந்நூல் பொய்யாமொழியைத் தழுவியுள்ளது. புராதன மான பல சரிதசாரங்களை உதாரணமாக எடுத்துக்காட்டிக் குறள் நீதிகளை யினிதாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. திருக்குற ளுக்கு எளிய நடையில் தெளிய எழுதிய ஒரு சிறந்த விரிவுரை என்றே யிதனைச் சொல்லிவிடலாம். இவ்வரிசையில் முன்னரே பெரியோர்களால் சில நூல்கள் செய்யப்பட்டுள்ளன. ஆயின், அவற்றிற்கும் இந்நூலுக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. அவை அதிகாரத்துக்கு ஒவ்வொரு குறளையே தெரிந்தெடுத்துச் செய்யப் பட்டன. இது குறள்கள் முழுமையும் தழுவியுள்ளது.

ஆயிரத்து முந்நூற்று முப்பது அரியகுறள்களுக்கும் பொருத்தமான கதைகளைத் திருத்தமாக இணைத்து இந்நூல் செய்யப் பெற்றிருக்கிறது. இதனையே இதன் அருமையும் பெருமையும் இனிது புலனும். இது சிறந்த உரையும் நிறைந்த கதைவிளக்க மும் திருந்தியநலனும் பொருந்தி யுள்ளது.

இந்த அரியநூலை ஸ்ரீமான் ஜெகவீரபாண்டியனவர்கள் செய்து உதவியிருக்கின்றார்கள். இவர்கள் நுண்ணிய நூலறிவோடு தண்ணிய சீலமும் வாய்ந்தவர்கள். இந்நூலே முடித்தநிறமே இவர்களது கல்வித்திறத்தை யினிது காட்டும். இதனைப் படித்த வுடனே பாண்டியனவர்களுடைய கவித்துவசக்தியும் மதிநுட்பமும் ஆராய்ச்சித்திறனும் பயிற்சியின்பரப்பும் எவர்க்கும் நன்கு தெளி வாகும். உலகுக்கெல்லாம் இஃதொரு கல்விருந்தாக இருக்குமென்று நம்புகின்றேன். இந்நூலின்பயனை யெல்லாரும் எய்தி இன்புறு மாறு திருவருளைச் சிந்திக்கின்றேன்.

திகம்பரவித்தியானந்த சுவாமிகள்,
சென்னை.

உ

சிற்றுப்பாயிரம்.

வள்ளுவர்வாய் வந்திருந்த தெள்ளமுதாந் திருக்குறளை
மருவி யின்பம்
துள்ளுமுயர் குமரேச வெண்பாவொன் றுலகுவந்து
துதிக்கச் செய்தான்
கொள்ளுமியற் புலமையொடு கோதறுநற் குணங்கள்குடி
கொண்ட தூயோன்
தெள்ளுபுகழ்ச் செகவீர பாண்டியனுங் கவிராஜ
சிங்க மன்னே.

உ

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா.

காப்பு

போதந் தருசெய்ய பொய்யா மொழிபுனைத்தி
ஓதுகின்ற இந்நூற் குறுதுணையாச்—சோதிமிகு
மாதங்கங் கொண்டே மகிழ்பரமன் தந்தவொரு
மாதங்கங் கொண்டேன் மனம்.

இதன் பொருள்.

மெய்ப்புணர்வைத் தருகின்ற செவ்விய திருக்குறளை யிணைத்துச் சொல்லுகின்ற இந்நூலுக்கு நல்லதுணையாக, ஒளிமிக்க உமாதேவியை யொருபாகத்தில் வைத்து, மகிழ்கின்ற பரமபதிதந்த ஒரு மாதங்கத்தை யான் மனத்துட் கொண்டேன் (என்பதாம்.)

மனத்துட் கோடல்—நினைத்துத்துதித்தல்.
பொய்யாமொழி என்றது திருக்குறளை.
மெய்யான நூல் ஆதலால் இஃது இப்பெயர்பெற்றது.

தான் உணர்த்திய நெறியில் வழுவாது ஒழுகுவார்க்குப் பொருந்திய பயனைப் பொய்படாதபடி விளைவிக்கும் திருந்திய மெய் மொழிகளால் தேவர் இந்நூலைச் செய்துள்ளமை தேற்றம். செய்ய பொய்யாமொழி—செம்மையும், மெய்மையும் சேர்ந்த மொழி, செம்மை— செவ்வியதன்மை. ஆஃதாவது முழுமுதற்பரமன் அருள்நெறியோடு யாதும் மாறுபடாத நேர்மை என்க. மெய்மை—உயிர்கட்கு என்றும் உறுதிபயக்கும் உண்மை.

மாதங்கம்—யானை. அது தனது முகத்தையுடைய விநாயக மூர்த்தியை யிண்டுவிளக்கி நின்றது. ஒரு என்றது தனிமை புதுமை குறித்து. மாதை அங்கத்தில் வைத்து மகிழ்பரமன்தந்த ஒரு மாதங்கத்தை எனது மனத்தில்வைத்து யான் இந்நூலைச் செய்கின்றேன் என்பதாம்.

இதனால் இஃது இனிது முடியும் என்பது துணிபு.

இஃது இந்நூல் மங்கலமா முடியும்பொருட்டு ஐங்கரக்கட வுளை வாழ்த்திய தென்க.

திருக்குறளைத் தழுவிக் குமரேசனை முன்னிலையாக் கொண்டு வெண்பாவால் செய்தபடியால் இந்நூல் திருக்குறட் குமரேச வெண்பா எனப் பெயர்பெற்றது.

அவையடக்கம்.

அங்கணீர் கங்கை யடைந்தவுட னேபுனித
மங்கலநீர் ஆகி வயங்காதோ—இங்கெனது
புன்பாவும் வள்ளுவர்தம் பொன்பாவைச் சேர்ந்ததலால்
இன்பாகு மன்றே இனி.

புன்மை, எளிமையைக்குறிக்கும்; பொன்மை அருமையை உணர்த்தும். ஓகாரங்கள் ஆக்கந்தோன்ற நின்றன.

உடனே ஆகி வயங்காதோ—அடைந்த அப்பொழுதே விழுமிய தீர்த்தமாய் விளங்காதோ? விளங்குமென்பது உலகம் தெளிந்த வுண்மையாதலால் விரை துணிவுதோன்ற நின்றது. அன்றே என அடியில்வரும் விரைவின்கண்ணும் இவ்வுண்மையை ஆய்ந்து கொள்க. உடம்பை மாத்திரம் தூய்மைசெய்து நிற்கும் பிறநீர் போலாது உயிரையும் புனிதமாக்கி நலங்கனிந்து நிலவுதலால் கங்கை, புனிதநீர் மங்கலநீர் என நின்றது. புனிதம்—தூய்மை. மங்கலம்—நன்மை.

அவையடக்கமாவது அவையிலுள்ள புலவோர் அடங்கி அமருமாறு நால்செய்யும் புலவோன் பணிவுடைமைதோன்ற வழிமொழி கூறல்.

அவை யடக்கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென் றறு
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.
(தொல்காப்பியம்)

ஆசிரியர் தொல்காப்பியனார் புலவர்க்கு என்னாது மாந்தர்க்கு என இதில் அருளியுள்ளதன் பொருளிலுண்மையை ஆய்ந்துணர்ந்து கொள்க. அரில்தப—குற்றம் நீங்க.

தம் வழிபாட்டைப்புலப்படுத்தி இனியவாகச் சொல்லிப் புல முடைய அவையை முதலில் மகிழ்வித்து நவையகற்றி உலகம் நல முற நூலை உதவுதல் புலவர் இயல்பாம் என்க. தன் அடக்கம் காட்டிக் கவி அவையை அடக்குதலால் இது, அவையடக்கம் என நின்றது. உலகிற் பல்வேறிடங்களில் பரவியிருக்கும் புலவர் பெரு மக்களெல்லாரும் ஒருகாலத்தே ஓரிடத்தே ஒருங்குகுழீஇ சேர் முகமாயிருப்பதாக நினைந்துகொண்டு இங்ஙனம் புனைந்து கூறுதல் கவிமரபென்க. கடவுள்வாழ்த்துப்போல் மக்கட்கு இது, மிக்க நற் பயனை விளைத்து வருதலால் அதனோடு ஒக்கவைத்தெண்ணும் உயர் வுடையதாம். அது தெய்வநிந்தனையை உணர்த்திநிற்கும்; இது அடங்காமையை யொழித்து அடக்கத்தை வளர்த்துவரும் என்க.

நதிகள் எவற்றினும் சிறந்து புனிதமும் இனிமையும் பொரு ந்தித் தன்னைச்சார்ந்தவுயிர்களுக்கு நலங்கள் பலவுந் தந்து வரு கின்ற தெய்வநதியாகிய கங்கை, எல்லாநூல்களினுஞ் சிறந்து தூய் மையும் வாய்மையும் தோய்ந்து, ஆழமும் தெளிவும் வாய்ந்து தன் னையாய்ந்த மக்களுக்கு எல்லா நலங்களையும் இனிது உதவி வருகின்ற தெய்வ நூலாகிய திருக்குறளோடு இங்கு உவமை கூறநின்றது.

அங்கண நீர் கங்கை நீரைக் கலந்தவுடனே தனது இழிவு நீங்கி விழுமிய தீர்த்த மாதல்போல, எனது எளிய பாவும் வள்ளு வரது அரிய பாவைத்தழுவி யுள்ளதலால் அதன் எளிமை நீங்கி அருமையும் பெருமையும் அடையும் என்பது கருத்து.

இதனால் அவையடக்கம் கூறப்பட்டது.

உ

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா.

முதல் அதிகாரம்.

கடவுள் வாழ்த்து.

அஃதாவது கடவுளை வாழ்த்துதல். கடவுள் என்னும் சொல் கடந்து நிற்பது என்னும் பொருளது. எல்லாத் தத்துவங்களையும் கடந்து நம்மனோரது உரையுணர் வெவற்றிற்கும் எட்டாதபடி உயர்ந்துநிற்கும் பரம்பொருளை அஃது உணர்த்திநின்றது. இம் மூழுமுதற்பொருளை மனம் மொழி மெய்களால் நினைந்து வாழ்த்தி வணங்கி வாழ்தல் மன்னுயிர்க்கெல்லாம் முன்னுறுகடமையாம். நம் உயிர்க்கு உறுதி யெனக் கருதப்பட்ட பொருள் நான்கு அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள் இறுதி யிலுள்ள வீடு தனித்த அனுபவத்தாலன்றி இனைத்தென உரையால் உணர்த்த இயலாது ஆதலால் அதனை அனுபவ வாயிலாக உறுதி பெற வைத்துவிட்டு முன்னுள்ள மூன்று பொருள்களையும் முறை யே நூலால் உரைக்கட்டுருந்த அடிகள் தம்கருத்து இனிது நிறை வேறுமாறு முதலில் இங்ஙனம் தெய்வ வழிபாடு செய்யலுற்றார். மேற்குறித்த அறம் முதலிய மூன்றும் சத்துவம் இராசதம் தாம தம் என்னும் முக்குணங்களின் கூறுக முறையே எண்ணப் படுமாதலால் அக்குணங்களைத் தமக்கு வடிவங்களாகக் கொண்டுள்ள மும்மூர்த்திகட்கும் பொதுவாக இதுகூறப்பட்டது என்க. எனவே மேல்நின்ற வீடுபோல் என்றும் வீடாது நின்று இம் மூன்று கினைகளுக்கும் மூலமாயுள்ள மூவாமுதல்வனையே தாவா இன்பம் தலைவரும்படி ஓவா அன்புடன் உவந்து நினைந்து, உல மூய்யப் பாவால் வணங்கு நமோதுவர் வாழ்த்திரோயிற்று.

பூவுலகோ டெங்குமேன் பூண்ட துமைமகேள்வன்
கோழுகிழ்த்த தன்மை குமரேசா—மேவும்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. (க)

இதன் பொருள்

குமரேசா! உமைமகேள்வன் கோழுகிழ்த்த தன்மை பூவுலகோடு எங்குமேன் பூண்டது? எனின், எழுத்து எல்லாம் அகரம் முதல; அதுபோல உலகு ஆதிபகவன் முதற்று என்க.

இது, கடவுளருண்மையை ஓர் உவமங் கூறி யுணர்த்துகின்றது. கேள்வன்—கணவன். கோ—கண். முகிழ்த்த—குவித்த.

பூவுலகோடு எங்குமென்றது இந்நிலவுலக முதலாக மேல் கீழ் உள்ளன எங்கணும் என்றவாறு. பூ எனத் தொடுத்தது இனமும் மங்கலமும் இசைந்து தோன்ற என்க. ஓடு எண்ணிடைச் சொல். உம்மை எஞ்சாமையை யுணர்த்திநின்றது. வேறுபெயராற் கூறாது உமைமகேள்வன் என்றது ஆண்மை பெண்மை என்னும் இருவகை இயல்புங் கலந்தே இவ்வுலகம் இயங்குகின்ற தென்னும் உண்மை தோன்ற. "உமை சிவம் என்ப என்றும் ஒளிர்குண குணியாய் மேவி, அமையு மிவ்வுலகுக் கெல்லாம் ஆதியாய் நிற்கு மன்றே" என்றபடி நின்று நிலவுதலால் இப்பெயர் இங்கு நிலைபெற வந்தது.

நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவ னிருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன மூன்றே. (ஐங்குறுநூறு.)

உலகு உயிர்க்கெல்லாம் தலைவனும் இறைவன் ஒருவன் உளன் என்பதனை உணர்த்தற்கு அகரத்தை இணைத்துக் கூறியது உறுதிபெற எளிதாகத் தெளிவுறும் என்பது கருதி.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலீடுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலீடுடையது என்பதாம்.

முதற்றே என்பதில் ஏகாரம் தேற்றம். இங்ஙனம் தோற்ற வைத்தது முதல்வனுண்மையை உறுதிபெறக்கொண்டு உய்ய வேண்டி என்க.

எழுத்து உயிரும் ஒற்றும் என இருவகைப்படும். உலகம் உயிருடைப்பொருளும் உயிரில் பொருளும் என இருவகைப்படும். அகரம் எல்லா எழுத்துக்களோடும் கலந்து இயக்கித் தானும் தனித்தியங்கும். ஆதிபகவனும் எல்லாப் பொருள்களோடும் கலந்து இயக்கித் தானும் தனித்து இயங்குவன். அகரம் இயங்காவழி அனைத்தெழுத்தும் எனைத்தும் இயங்கா. அவன் அசையாவழி அணுவும் அசையாது. இவ்வுண்மை உமைகேள்வன் திருக்கண் குவித்த காலத்தில் காணப்பட்டது. அது பின்வரும் சரிதத்துட் காட்டப்படும்.

நம்மால் காணப்படுகின்ற இவ்வுலகத்தைக்கொண்டு காணப் படாத கடவுள் உண்மையை நமக்குக் காட்டவந்த நாயனார், நாம் அறிந்துள்ள அகரமாகிய எழுத்தின் தன்மையைக்காட்டி நம் அறிவுக்கெட்டாத ஆதிபகவனது இயல்பை இவ்வாறுணர்த்தினர்.

இறைவன் அடங்கினால் எல்லாம் அடங்கும், அவன் அசைந் தால் அகிலமும் அசையும் என்னும் இத்தலைமைத்தன்மை அகரத் திற்கும் ஒருவகையில் அமைந்திருத்தலால் அஃது இங்கு ஆதி பகவனுக்கு உவமையாக வந்தது.

ஆயின், அகரம் அறியார்க்கு இது கருவியன்றே? யெனின், கடவுளது உண்மையை எடுத்துக்காட்டும் இவ்வுவமையானது எழுத்தறிவுடையார்க்கே அமையுமென்று கொள்க. அறியார்க்கு வேறு வகையான் உணர்த்தப்படும் என்க. "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்றது தொல்காப்பியம்.

நமது தேவர் அருளியுள்ள திருக்குறளானது தமிழ்ச்சுவை முழுவதுந்தழுவி தமிழுக்கே பெருஞ்சிறப்பாக அமைந்துள்ள ஒரு தனி நூல் என்பது அதில் காணப்படும் சில குறியீடுகளை உய்த் துணர்வார்க்கு இனிது புலனும். அவற்றுட் சிலவருமாறு:— "அக

முதல், னகர இறுவாய்" என ஆசிரியர் தொல்காப்பியனர் அருளிய படி தமிழ் மொழியானது தனது எழுத்துக்களுள் அகரம் முதலி லும் னகரம் இறுதியிலும் அமையப்பெற்றுள்ளது. திருக்குறளும் அவ்வுரிமைபோன்ற முதலில் அகரமும் முடிவில் னகரமும் பெற்று விளங்குகின்றது. எங்கே பேறினின்! "அக முதல" என ஆதி யில் தொடங்கியும், "முயங்கப்பெறின்" என முடிவில் முடிந்தும் நிலவுதல்காண்க. இன்னும் தமிழெழுத்துக்கள் உயிரும் மெய்யும் என இருவகையாய் முப்பதென்னும் ஒரு தொகையுள் அடங்கும். அவை உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நால்வகைக் கணங்களாகவும் வழங்கப்படும். இவ்வினமுந்தான்ற முதற் குறள் முதல், நான்காவது வரை இக்கணங்கள் நான்கும் முறையே இணைந்துள்ளன.

இன்னும், நுண்ணுணர்வான் ஆராய்வார்க்கு நப்பல கலங்களும் பயங்களும் இதில் தோன்றும்; அவையெல்லாம் திருக்குறளானது தமிழுக்கே உரிமையும் பெருமையும் தரவந்த ஒரு தனி நூல் என் பதை ॥ ர்த்தும் என்க.

எழுத்துக்களுக்கு அகரம்போல் இவ்வுலகிற்கு ஓர் முதல்வ னன்; அவன் எல்லாமுடையவன்; அவனது அருள் வலியால் யாவும் நிலைபெற்றுள்ளன என இம்முதணர்த்தி நின்றது.

உமைகேள்வன் கோமுகிழ்த்த தன்மை:—பிரமாவின் மான சபுத்திரர்களாகிய சனகாதியர் நால்வரும் உமாபதியை யணுகித் தங்களுக்குத் தத்துவஞானத்தை புணர்த்தும்படி வேண்டினர் அது, வாக்காற் சொல்லிப்போதிக்கும் இயல்பினையுடையதன்றாக. லால் அப்பரமன் சொல்லாமல் சொல்லல் என்னும் மோனநிலையால் அவர்கட்கு ஞானநிலையை புணர்த்தினர். எள்ளுள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்துள்ள அம்முழுமுதற் பரமன் அங்ஙனம் உணர்த்துங்கால் திருக்கண் முகிழ்த்துச் செங்கை குவித்துச் சின் முத்திரை தரித்தார். சிறிதுபொழுது அசைவற்று மோனமுற்றி ருந்தார். அவ்வமயம் அகிலமும் அவ்வண்ணமே அடங்கியிருந் தன. உயிர்களெல்லாம் முயற்சியும் இச்சையும் முற்றுந்துறந்தன. அலகின்ற காரணங்கள் அடங்கி நின்றன. பின்னர் மோனம் நீங்கி

விழித்தார். எல்லாவுயிர்களுந்தம் இச்சையுற்றெழுந்தன. உலக போகங்களை நாடின. நிலவி எங்கணும் நீடின. உலவினின்புறலாடின. அயர்ச்சியற்றனர். முயற்சியைக்கூடின என்பதாம்.

உடலில் உயிர்போல் எல்லாவற்றுள்ளும் கலந்து இறைவன் எழுந்தருளியிருக்கின்றார் என்பதும், சகல சீவகோடிகளும் அண்ட கோடிகளும் அவருக்குத் திருமேனிகளாக அமைந்துள்ளன என்பதும், அவரே உலகமுதல்வர் என்பதும், இதனால் இனிதுபுலனும். இச்சரித உண்மையை இதனடியில் வருகின்ற கவிகளினின்றுங் தெளியலாம்.

காரணமுதல்வன் மோனக் காட்சியால் அமரரெல்லாம்
சூர்அரமகளிர் தங்கள் துணைமுலைப் போகமின்றி
ஆரிடர்நிலைமை தன்னை யடைந்தனர் அளக்கர்சூழ்ந்த
பாரிடையுயிரும் காமப் பற்றுவிட் டிருந்த வன்றே. (க)

ஆரணன் தனது மைந்தர்க் கரும்பெறன் ஞானபோதம்
ஓரிறை காட்டு முன்னர் உலகெலாம் ஒருப்பாடொன்றி
யீருடல் முயங்கும் ஆர்வமின்றியே யிருந்த யார்க்கும்
காரணன் சிவனே யென்கை கழறவும் வேண்டற் பாற்றே. (உ)
(கந்தபுராணம்)

இனி, உமை, கேள்வன் கோலை முகிழ்த்த தன்மையென்று கொண்டு உமாதேவி பரமனது திருக்கண்களைப் புதைத்தபோழுது நிகழ்ந்ததையும் கொள்ளலாம். அது வருமாறு:—

பண்டொரு காலத்தில் பரமனும் பார்வதியும் ஓர் ஆனைந்தில் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது இனிய பலமொழிகள் இடையே நிகழ்ந்தன. முடிவில் அம்மையார் ஐயனை நோக்கி, "தேவே! சூரியனும் சந்திரனும் தேவரீருக்குத் திருக்கண்களாக அமைந்துள்ளன என்று தத்துவநூல்கள் சாற்றுகின்றனவே அஃதுண்மைதானே?" என்று புன்னகையோடு விளவினர். இறைவன் உள்ளதுதான் என்றார். பகலொளியும், இரவொளியும் தேவரீரது விழியொளிகளாகவா விளங்குகின்றன என்று வியந்தார்; மகிழ்ந்தார். உடனே விநோதமாக அம்மையார் ஐயன் திருக்கண்களைப் புதைத்தார். உலகமுழுதும் இருண்டது. உயிர்க

ளெல்லாம் இருளில் மருள் அடைந்தன. திடீர் என்று பயந்து அம்மையார் கையை யெடுத்தார். உடனே வையமெங்கும் வான் ஒளி பரந்தது. மருண்ட உயிர்க்ளெம் தெருண்டெழுந்தன. இவ்வுண்மை பின்வரும் கவிகளில் இனிது தோன்றும்.

ஈசனூர் விழி புதைத்தலும் இருட்பிழம் புருக்கிப்
பூசினெலென இருண்டன திசைகளும் புவியும்
மாசில்நீலமால் வரையெனக் கருகின மலைகள்
காசுலாவிய நதியெலாம் யமுனைபோற் கறுத்த. (க)

மறையவனும் நாரணனும் முனிவர்களும் வசுக்களும் நான்
மறையும் வாழ்ளெர்
இறையவனும் விழியொளிபோய்ப் பிறவிநெடுங் குருடென
இருந்தார் மற்றைக்
கறைவங்கை முதல்வில்லங்கு பறவைகளும் ஒளியிழந்த
கண்ணை வான
துறவறமும் பிறவறமும் தொலைந்தன மற்றுளதொழிலும்
தொலைந்த தன்றே. (உ)

அஞ்சலென அமைத்தகரத் திருவணுதல் விழிதிறந்தான்
அவனி எழுடம்
துஞ்சுமிருள் அகன்றதுபன் னிருகோடி சூரியர்தங்
தோற்றம் போல
வஞ்சியுமை இறைவன்விழி புனைத்திருக் காமலரை
வாங்கி நின்றுள்
விஞ்சுமறை யவர்வளர்க்கும் கனல்போல விழிமூன்றும்
விளங்கிற் றன்றே. (அருணைசலப்புராணம்)

இனி, கோ என்பதற்கு அரசன் என்று பொருள்கொண்டு அருச்சுனனையும், பாண்டியனையும் கொள்ளலாம். வில்லாலும் பிரம்பாலும் இவ்விருவரும் பரமனை அடித்தபொழுது அவ் அடி அகிலமும் பரந்துநின்றமை தெளிய நின்றது. இப்பொருளில் உமைகேள்வனை, கோ கைதுகிழ்த்த தன்மையென்று கொள்ளுக.

அருச்சுனன் வில்லால் அடித்தகதை.

அருச்சுனன் காடிழந்து காடுபுகுந்தபின் பாசுபதம் என்னும் உயர்கணை பெறும்பொருட்டுச் சிவபெருமானை நோக்கி அயர்வற நின்று அருந்தவஞ்செய்தான். அக்காலத்தில் அவ்வில்வீரனைக் கெடுக்கும் பொருட்டு மூகன்என்னும் அசுரனைத் துரியோதனன் ஏவினன். மாயவடிவங்கொண்டு அம்மூகன் அங்குமுனைந்து வந்தான். தன் அடியவனுக்கு அவன் இடர்செய்ய வருதலையறிந்து அருள்வள்ள லாகிய முதல்வன் ஒரு வேடவடிவங்கொண்டு வில்லுங் கையுமாய் அங்கு விரைந்துமேவிப் பன்றிவடிவாய் வந்த அவன்மீது ஓர் பகழியை ஏவினன். விசயனும் முன்னதாக ஒருகணையை விசை யுடன் விடுத்து அதனைவீழ்த்தினன். "என் வேட்டையில் வந்தது; நானே அடித்தேன்; எனக்கே உரியது; உனக்கு இதில் என்ன உரிமை?" என்று வள்ளல் வல்வழக்காடினன். அவ் ஆடலைக்கண்டு அவ் வில்லாளிநகைத்து,

"எனக்கருந்தவம் முயறலாலுநிர் சருகலா தணவில்லையால், உன க்கும் உன்படை வேடருக்கும் நல் உண்டியாம் இதுகொண்டுபோ" என்று குறித்துநின்றனன். நின்றும் ஐயன் நில்லாமல் "என் குறி ப்பில் நின்றதை நீ எப்படி எய்யலாம்? நான்தான் வென்றேன் என்று நானே நீ சொல்லிக் கொள்ளவா? நின் எண்ணம் நன்று! நன்று! உன் நிலைஎன்ன? இப்பொழுது நீ செய்தசெயல் என்ன? "நின்றுபெருந் தவமுயல்வோர் தாங்கள் கொண்ட நினைவொழியப் புறத்தொன்று நினைவரோ? சொல், பொன்றிடினும் நீயறியப் பசுத்தோல்போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வரோ? புரிவிலாதாய்" என்று மேலும் மேலும் எதிர்த்து வாதுக்கு இழுத்தான். அருள் நலங்கனிய இவ்வாறு முதிர்ந்து நிகழ்ந்த வாதத்தில் அப்பெரு மானை இனந்தெரியாமல் சினந்து அவன் வில்லால் அடித்தான். அவ் அடி உலகமெங்கும் உடனே சென்று சேறிந்தது. இதனை வில்லியாழ்வார் சொல்லியுள்ள இன்கவிகளால் நன்கு காணலாம். அடியில் வருவன காண்க.

வேதம் அடியுண்டன; விரிந்தபல ஆகம
விதங்கள் அடியுண்டன; ஞாலம்

பூதம் அடியுண்டன; விநாழிகை முதற் புகல்செய்
பொருளோடு சஷிப்பில் பொருளின்

பேதம் அடியுண்டன; பிறப்பிலி இறப்பிலி
பிறங்கல் அரசன்றன் மகளார்

நாதன் அமலன் சமரவேட வடிவங்கொடு
நரண்கை யடியுண்ட பொழுதே. (க)

விண்ணி லுறை வானவரில் யாரடி படாதவர்?
விரிஞ்சன் முதலோர் உததிசூழ்

மண்ணி லுறை மானவரில் யாரடி படாதவர்?
மனுக்கள் முதலோர்கள் அதலக்

கண்ணி லுறை நாகர்களில் யாரடி. படாதவர்கள்?
கட்செவி மகீபன் முதலோர்

எண்ணில் பலயோனியி லும் யாவடி படாதன?
இருந்துழி யிருந்துழியரோ. (பாரதம்) (உ)

பாண்டியன் பிரம்பால் அடித்த கதை.

முன்னொரு காலத்தில், வைகை நதியில் பெருவெள்ளந் தோன்றி யிருகரைகளையும் உடைத்துச் சென்றது பாண்டிய மன்னன் ஏவலால் மதுரை நகர்வாசிகள் எல்லாரும் அக்கரைகளை யழுங்குபடுத்தச் சென்றனர். அந்நகரில் பிட்டு விற்று வரும் நரை மூதாட்டி ஒருத்தி யிருந்தாள். அவள் பங்குக்கு ஆள் வரவில்லை. அதனால் அவள் வருந்தினாள். அருள்வள்ளலாகிய பரமன் அவளது நடுக்கத்தைத் தீர்க்கத்துணிந்தார். ஒரு கூலியாள்போல் வடிவங் கொண்டார். அவளிடம் வந்தார். கூலிக்காகக் கொஞ்சம் பிட்டு வாங்கினர். தின்றார். அவள்பங்கின் கரையை அடைக்கச்சென்றார். சென்றவர் உள்ளபடி வேலை செய்யவில்லை. செய்வது போல் நடித்தார். அங்குமிங்குமாலைத்துநின்றார். இந்நிலையைத் தானைத்தலைவர்கள் அறிந்தார். அரசனுக்கு அறிவித்தார். அரசன் சினந்தான். விரைந்து வந்து ஐயன்முதுகில் பிரம்பால் அடித்தான். அவ் அடி உலகமெங்கும் ஒருங்கேபட்டது. இவ்வுண்மை யிதன் அடியில் வருகின்ற கவிகளால் இனிது தெளிவாம்.

வள்ளல்தன் கோபங்கண்ட மாறுகோற் கையர்அஞ்சித்
தள்ளருஞ் சினத்தராகித் தடக்கைதொட் டூர்த்துப்பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலா யுயிர்தொறும் ஒளித்து நின்ற
கள்வனை யிவன்றன் வந்தி யாளனைக் காட்டிநின்றார். (க)

கண்டனன் கனன்றுவேந்தன் கையிற்பொற் பிரம்புவாங்கி
அண்டமும் அளவிலாத வுயிர்களும் ஆகமாகக்
கொண்டவன் முதுகில்வீசிப் புடைத்தனன் கூடையோடு
மண்டனை புடைப்பிற்கொட்டி மறைந்தனன் நிறைந்தசோதி. (உ)

பாண்டியன் முதுகிற்பட்டது; செழியன்
பன்னியர் உடம்பினிற் பட்டது;
ஆண்டகை அமைச்சர் மேனிமேற்பட்டது;
அரசிளங் குமரர்மேற் பட்டது;

ஈண்டிய கழற்கால் வீரர்மேற்பட்டது;
இவுளிமேற் பட்டது; பருமம்
பூண்டவெங் கரிமேற்பட்டது; எவ்வுயிர்க்கும்
போதன்மேற் பட்ட அத்தழும்பு. (ங)

பரிதியும் மதியும் பாம்பும் ஐங்கோளும்
பன்னிறம் படைத்த நாண்மீனும்
இருநிலம் புனல்கால் எரிகடுங் கனல்வான்
என்னும் ஐம்பூதமும் காரும்

சுருதியும் ஆறு சமய வானவரும்
சுரர்களும் முனிவரும் தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட
மதுரை நாயக னடித்தழும்பு. (ச)

வானவர் மனிதர் நாகர் புள்விலங்கு
மாசுணஞ் சிதல் எறும் பாதி
யானபல் சரமும், மலைமரம் கொடிபுல்
ஆதியாம் அசரமும், பட்ட;

ஆனைட கருவும் பட்டன; தழும்போடு
உதித்தன; வுயிரில் ஓவியமும்
தானடி பட்ட சராசர சடங்கள் தமக்கு
உயி ராயினேன் தழும்பு. (ஞ)

துண்ணென மாயோன் விழித்தனன்; கமலச்
சோதியும் யாதென வியந்தான்;
விண்ணவர் பெருமான் வெருவினன்; வாணர்
வேறுளார் மெய்ப்பனிப் படைந்தார்,
வண்ணயாழியக்கர் சித்தர் சாரணர்தம் வடுப்படா
உடம்பினிற் பட்ட
புண்ணியாதென்று தத்தமிற் காட்டி மயங்கினர்
புகுந்தவா றறியார். (திருவிளையாடற்புராணம்)

இன்னவாறே உலக முதல்வனென இப்பராமனது தன்மையைப் பல நூல்களும் பலபடியாக உணர்த்தியுள்ளன.

இவ்வெல்லாவற்றாலும் கடவுள் ஒருவர் உளர் என்பதும், அவர் அகரம்போல் உலகு உயிர் எங்கும்ஒழிவற நிறைந்த ஒண் பொருள் என்பதும் தெளியப்படும்.

உட்புலனால் நோக்கின் ஒருபொருளுண் டிவ்வுலகம்
கட்புலனைக் காட்டிநிற்கும் காண்.

கடவுளது உண்மையும் தன்மையும் இச்செய்யுளால் கூறப்பட்டன.

கற்றறிந்துடன் தாருவனர் கல்விநலம் எய்தாமல்
குற்றமுற்றார் என்னே குமரேசா—வெற்றிபெறக்
கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (உ)

ள.

குமரேசா! தாருவனர் கற்றும் அறிவுற்றிருந்தும் கல்வி கலத்தை அடையாமல் ஏன் குற்றமுற்றார்? எனின், வாலறிவன் நல்தாள் தொழார் எனின் கற்றதனால் ஆய பயன் இல்லை என்க.

இது, கடவுளைத் தொழுதலே கல்விக்குப் பயனும் என்கின்றது. வெற்றிபெறனென்றது வெல்லாமல் எவரையும் வெருட்டிவிட வல்ல ராய்க் கல்வியில் விளங்கியிருந்தாலும் இறைவன் அருளுக்கு இணங்கி நில்லாராயின் அவர் கல்வி விளங்காது என்பது விளங்க என்க. வாலறிவு—மெய்ப்புணர்வு. அதனை இயல்பாகவே யுடை யவன் என்பார் வாலறிவன் என்றார். தொழுவார்க்குத் துன்ப நீக்கமும், இன்பப்பேறும் நல்கும் எனுங்கருத்தி நற்றாள் என்றார்.

என் என்னும் வினா இன்மைகுறித்து நின்றது. வேறுபயன் ஒன்றும் இல்லையென்பது தெளிந்த உண்மையாதலால் அது விளங்க இங்ஙனம் வினவியருளினர். கொல் என்னும் இடைச்சொல் ஒரு பொருளையும் குறியாது ஈண்டு அசை நிலையாய் அமர்ந்ததாயி னும் இசை அமையநின்றது. தாள் என்றது தொழுகின்ற அப்பொருளின் தலைமையும், தொழுவார்தம் நிலைமையும் தோன்ற. அன்பும் பணிவுடைமையும் அமைய இது கூறியதென்க. அள பெடை செய்யுளிசை நிறைக்கவந்தது.

மேல், கடவுள் உண்மைகூறினர்; இதில், அவர் நன்மையை உணர்த்தி அவர் தாளை வணங்கவேண்டும் என்கின்றார்.

மெய்யறிவினையுடைய கடவுளது நல்ல தாள்களை வணங்கா ராயின் அவர் கல்வி அறிவால் யாதும் பயன் இல்லை என்பதாம்.

ஒருவனது அறிவுடைமைக்குப் பயன் அறிவு வடிவமாய் விளங்கும் பரமனது அடிமலரை நினைந்து வணங்குதலேயா மென்பது கருத்து.

இறைவன் மெய்யறிவுடையான் என்பதும், தன்னைத்தொழு வார்க்கு அழிவில்லாத இன்பத்தை அருளுவான் என்பதும், கல்வி யறிவுடையார் எவரும் அவனது அடிகளைத் தொழுதல்வேண்டும் என்பதும், தொழுவில்லையாலுல் அவ்வறிவாற் பயனில்லை என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை தாருவனர் பால் உணரப் படும்.

கதை.

பூர்வகாலத்தில் இமயமலையருகில் தாருகம் என்னுரு வனம் இருந்தது. அதில் முனிவர் பலர் வாசஞ்செய்திருந்தனர். இவர் யோகநெறிகளில் பிகத்தேர்ந்தவர். நால்பலகற்று நுண் ணறிவுபெற்று மேன்மைபுற்று விளங்கி நின்றனர். தாம் செய் கின்ற வேள்விமுதலிய நல்லகருமங்களே கருதியபயன்கள் எவற் றையும் தருமென்று உறுதியாகத் துணிந்தனர். அதலால் மற் றொருகடவுளை வழிபடல் வேண்டாமென்று மனச்செருக்குற்று மதியாதிருந்தனர். இங்ஙனம் இருந்த இவர்களை உய்விக்கும்

பொருட்டு கண்ணுதற்பரமன் எண்ணினர். கண்டார் எவரும் காதல் கொள்ளத் தக்க ஒரு புருடவேடந்தாங்கினர். திருமாலே மோகினி வடிவெடுத்து உடன்வரச் செய்தார். அவ்வனத்தில் புகுந்தார். அம்முனிவரையும் அவர்தம் பத்தினிமார்களையும் நிலைகுலைத்து அவர் கொண்டிருந்த செருக்கை அகற்றித் தெளிவித்தார். அவரும் தெளிந்தார். தங்கள் சிறுமையை உணர்ந்தார். இறைவனது பெருமையை எண்ணினர். முன்னர் அறியாதிருந்தமையை நினைந்து வருந்தினர். பின்னர் கற்றுள் தொழுதார். கற்பயன்பெற்றார். முற்று முணர்ந்து குற்றமற்று நின்று பற்றற்றுவிளங்கும் ஒப்பற்ற ஒருவன் பொற்றாள்வணங்கலே கற்ற தனாற் பயன்என்பதை இவர் காட்டிநின்றார். விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

வாய்படைத்தும் மாந்தரந்த வல்லானை வாழ்த்தாரேல்
நோய்படைத்தார் நின்றழுவார் நொந்து.

வாலறிவனைத் தொழுதலே நாலறிவுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

நீடியவாழ் வெய்தி நிலமிசையோன் மார்க்கண்டர்
கூடினர்பே ரின்பம் குமரேசா—நாடி
மலர்மிசை யகிறன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 5)

இ—ள்.

குமரேசா! மார்க்கண்டர் நீடியவாழ்வையும் பேரின்பத்தையும் என் கூடினர்? எனின், மலர்மிசை யகிறன் மாண் அடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார் என்க.

இது, கடவுளை நினைவார் உயர்பயனடைவார் என்கின்றது. மலர் என்றது இங்கு மனமாகிய தாமரையை. மனம் தாமரை போன்ற வடிவினையுடையதென்பது தத்துவநூலார் துணிபு ஆகலால் இங்ஙனம் இது சாற்றினர்நின்றது. இதனை "உள்ளக்கமலம்" என்று குலபதிநாயனாரும் கூறியுள்ளார்.

அன்பர்களது நெஞ்சத்தாமரையில் அவர் நினைந்தவடிவோடு போய் இறைவன் அமைந்து நிற்பன் ஆதலால் மலர்மிசையகிறன் என்றார்.

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற் றைம்புலனும் அடக்கி ஞானப், புகலுடையோர் தம் உள்ளப் புண்டரிகத்துள்ளி ருக்கும் புராணர்" எனத்திருஞானச் சம்பந்தப்பெருமான் அருளி யுள்ளமை காண்க.

சேர்ந்தாரை நீடுவாழச்செய்யும் சிறப்புநோக்கி மாண் அடி என்றார். ஒரு உடம்பால் இத்திருவடியைச் சேர இயலாதாதலின் சேர்தல் என்றது இங்கு நினைத்தல் என்னும் பொருளைக் குறித்து நின்றது.

மேல், கடவுளடியைத் தொழவேண்டும் என்றார்; இதில் அங்ஙனம் தொழுவார் பெருவாழ்வை யடைவர் என்கின்றார்.

அன்பரது உள்ளத்தாமரையில் உவந்திருக்கும் பரமனது மாட்சிமைப்பட்ட திருவடிகளை நினைந்து நின்றவர், உயர்ந்த பதத்தை யடைந்து என்றும் சிறந்து வாழ்வார் என்பதாம்.

அன்போடு நினைப்பவரது நெஞ்சத்தில் இறைவன் இன்போடு எழுந்தருளி யிருப்பன் என்பதும், அவனது அடிகளைச் சேர்ந்தவர் அழியாவாழ்வும் கழியா இன்பமும் பெறுவர் என்பதும் இதில் காட்டப்பட்டன. இவ்வுண்மை மார்க்கண்டர்பால் காணப்படும்.

கதை

ஆதியூழியில் கடக நகரத்தில் குச்சகன் மரபில் மிருகண்டு என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் மருத்துவதி யென்னும் உத்தமியை மணந்து இல்லறம் புரிந்து இன்புடன் வாழ்ந்தார். பொறையும் அருளும் பூண்டொழி சிறந்தார். நூலறிவுடனே சீலமும் வாய்ந்தார். ஆயினும் மகப்பேறு இன் மையால் மனமிக மெலிந்தார். இறைவனை நோக்கி யருந்தவஞ் செய்தார். அருளுடைப் பரமனும் இவர் தம் அன்புக்கிரங்கி இன்புறத் தோன்றி எதிருறநின்று அருந்தவ,

தீங்குறு குணமே மிக்குச் சிறிதுமெய் யுணர்விலாமல்
மூங்கையும் வெதிருமாகி முடமுமாய் விழியுமின்றி
யீயாங்கிய ஆண்டுநூறும் உறுபிணி யுழப்போனுகி
யீங்கொரு புதல்வன் றன்னை யீதுமோ? மாதவத்தோய்!

அல்லது

கோலமெய் வனப்புமிக்குக் குறைவிலா வடிவமெய்தி யேலுறு பிணிகள்இன்றி யெமக்கும் அன்புடையோனெகிக் காலம் எண்ணிரண்டே பெற்றுக் கலிபல பயின்றுவல்ல பாலனைத்தருதுமோ நின்னெண்ணம் என்? பகர்தி என்றான்.

இறைவன் அருளிய இத் திரு மொழிகளைக் கேட்ட மிரு கண்டுமுனிவர் சிறிதுபொழுது சிந்தித்தார். பின் அந்திவண்ணனை வந்தித்தார். ஆயுள் சிறிதுடையதெனினும் அறிவு பெரிதுடையதே எனக்கு வேண்டுமென வேண்டினர். அங்ஙனமேயருள அருமை யான ஆண்மக வொன்று இவர் மனைவிபால் வந்துதித்தது மார்க்கண்டேயன் என்று அம்மகவுக்குப் பெயரிட்டனர். பிறை யென நாளும் பெருகி வளர்ந்தது. வளர்ச்சியில் மகிழ்ச்சியுற்றி ருந்த பெற்றோர் இப் புதல்வனுக்கு வயது பதினேறு யென்று இறைவனருளியிருந்த உண்மையை யெண்ணியெண்ணி வருந்தி னர். மகனும் வளர வளர இவர்மனத்தில் வருத்தமும் கினைத்து வளர்ந்தது. பெற்றோர் கவலையைக் குறிப்பாலுணர்ந்த இம் மகன் உண்மையை வினவியோர்ந்தான். தாயையும் தந்தையையும் தேற்றினன். தவத்தால் எவற்றையும் பெறலாமென்று தூணிந் தான். மணிகர்ணிகையை யடைந்தான். பெருமானை நினைந்து பெருந்தவஞ் செய்திருந்தான். காலனும் காலம் பார்த்து இப் பாலன்பால் வந்தான். அழைத்தான். அதட்டினன். வெகுண்டான். விரைந்தான். மருட்டினன். வெருட்டினன். பாலன் ஒன்றுக்கும் அஞ்சவில்லை. மூடவில் காலன் பாசத்தால் பாலனை யீர்த்தான். உடனே பரமன் தோன்றிப் பாலனைக்காத்துக் காலனை வீழ்த்தினர். இத் தவப் புதல்வனுக்கு முன்னர் யாம் தந்தவயது பதினாறு என் றெண்ணற்க. "என்றும் பதினாறென்றே யெண்ணுக" என்று திரு வருள் செய்து காலனையும் மகிழ்வித்து மறைந்தார். மார்க்கண்டே யரும் அழியாவாழ்வு பெற்று ஆனந்தம் அடைந்தார். இதன் விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

மார்க்கண்டர் தமக்குக் கருவிலே யமைந்த பதினாறுவயதை இறைவன் அருளால் என்றும் பதினாறாகப் பெற்று இன்றும் வாழ்ந்து வருதல் தேற்றம்.

நித்த னடியை நினைவார் துயர்நீங்கி
நித்தராய் வாழ்வர் நிலத்து.

இறைவன் அடிசேர்ந்தார் நெடிது வாழ்வர் என்பது இதனுல் கூறப்பட்டது.

எள்ளிச் சமணர் இடும்பைசெய்தும் அப்பரென்
கொள்ளவில்லை துன்பம் குமரேசா—உள்ளியொன்றை
வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை யில. (அ)

இ—ள்.

குமரேசா! சமணர்கள் இகழ்ந்து இடும்பைகளைச்செய்திருந்தும் அத்துன்பங்களை என் அப்பர் அடையவில்லை! எனின் வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல என்க.

இது, முன்பதினை நினைந்தால் துன்பம் நீங்கும் என்கின்றது.

வேண்டுதல் = விரும்புதல். வேண்டாமை = விரும்பாமை.

எல்லாமுடையானை இலான் எனச் சுட்டி அவனது பரந்துய சமத்துவத்தை இதில் உணர்த்தியிருத்தல் காண்க.

இல்லா னடிசேர்ந்தார் யாண்டும் இடும்பையிலர் எனவும் பாடம்.

விருப்பும் வெறுப்பும் இல்லாதானது அடிகளைக் கனிந்த அன்போடு நினைந்திருப்பார்க்குத் துன்பங்கள் என்றும் உளவாகா என்பதாம்.

இறைவன், துன்பம் தொடர்வறுத்த சோதியாதலால் அவனது அடியைச் சேர்ந்தார்க்கு அவை இலவாயின என்க.

எக்காலத்தும், எவ்விடத்தும், எவராலும், எவற்றாலும், எவ்வகையாலும் என்பார் யாண்டும் என்றார். இடும்பை = துன்பங்கள். அவை தன்னால் வருவன, பிறரால் வருவன, தெய்வத்தால்வருவன, என மூவகைப்படும். இவற்றைத் தாபத்திரயம் என்பர். வேண்டியபொருள் எய்தாவிடினும் துன்பம்; வேண்டாதன எய்தினும் துன்பம். ஆதலால் விழுமமும் வெறுப்பும்

துன்பங்கட் கேதுவாயின; இதனால் ஒருபிர்க்கு இருவகையாது வான் மூவகைத்துன்பங்கள் வருமென்பது தெளிவாம்.

எல்லாம் அறிந்து எங்கும் நிறைந்து என்றுமுள்ள பரம்பொருள் விழைதற்கும் வெறுத்தற்கும் உரியதொரு பொருள் ஒன்றும் இன்மையால் அப்பரம் பொருளுக்கு வேண்டுதல் வேண்டாமையிலான் என்று பெயரிட்டனர்.

கடவுள் விருப்பும் வெறுப்பும் இல்லாதவர் என்பதும், அவரது திருவடிகளைச் சேர்ந்தாரைத் துன்பங்கள் சேரா என்பதும் இதால் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அப்பர்பால் உணரப்படும்.

கதை

அப்பர் என்பார் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே, வேளாளர்குலத்திலே, கொற்றங்குடியிலே தோன்றியிருந்த புகழனுருக்கும் மாதினியாருக்கும் புதல்வராய்த் தோன்றினர். இளமைப்பருவத்திலேயே பல கலைகளையும் வழுவறக் கற்றார். அதன்பின் சமணமதத்தைச் சார்ந்தார். அம் மதநூல்கள் பலவற்றையும் ஆய்ந்தார் புலமையும் போதனை சத்தியும் வாய்ந்தார். இவரது பெருமையைக் கண்ட சமணர்கள் இவரைத் தங்கள் மதத்துக்குத் தலைவராக்கித் தருமசேனர் என்ற பட்டமும் தந்து வழிபட்டு வந்தார். மருணீக்கியார் என்பதுதான் இவரது பிள்ளைத்திருநாமம். இங்ஙனம் இருப்ப, இவருடன் பிறந்த திலகவதியார் என்னும் அம்மையார் தமது தம்பி சமணமதபோதகனாய் நின்று வரும் நிலைமையை நினைந்து மிகவும் வருந்தினர். தாம் எழுந்தருளியிருந்த திருவதிகைவீரட்டானத்துச் சிவபெருமானை வணங்கித் தம்பி சமணமதத்தைக் கைவிட்டுச் சைவமதத்தைச் சாரவேண்டுமென்று மனமுருகி வேண்டினர். பெருமானும் அவ்வம்மையார் வேண்டுகோட்கிரங்கித் தருமசேனரைச் சூலநோயால் வருத்தியாட்கொண்டார். சைவமதத்தை இவர் சார்ந்தமையைச் சமணர்கள் அறிந்தனர். உடனே வெகுண்டு திரண்டார். தமது மதம் இனி நிலைகுலையுமென மருண்டார். அக்காலத்தில் தங்கள் மதத்தைத் தழுவியிருந்த பல்லவராசனை வந்து கண்டார். அவன்பால் உற்றதை முற்றும் ஒழியாதுரைத்தார். அடங்காக் கோபம் அவனும் அடை

ந்தான். அவனது உதவியால் நமது அப்பருக்குச் செப்புதற்கரிய பெருந்துன்பங்களைச் சமணர்கள் தணிந்து செய்தனர். முதலில் யானையை மேலே ஓட்டினர். நஞ்சை யுள்ளே யூட்டினர். நீற்ற றையில் ஆழ்த்தினர். கல்லுடன் பிணித்துக் கடலில் வீழ்த்தினர். இன்னும் பலவே இவர் செய்தஇடும்பைகள். இவற்றுல் ஒரு சிறிது துன்பமும் நமது நாயனர் அடைந்திலர். மகிழ்ச்சியும் இன்பமும் மாறுதிருந்தனர். மண்டியெரிகின்ற நீற்றறையினுள்ளே தள்ளி யபொழுதளவும் மூடப்பட்டிருந்தனர். அதில் நமது ஐம்புலன் களுடம் அளவில் இன்பத்தை யடைவித்தன. இவ்வண்ணமாய நமது அப்பர் அப்பொழுது செப்பிய அருமைத் திருவிருத்தம் தெளிவுறுத்து கின்றது:—

மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும், போன்றதே
யீசன் எந்தை யிணையடி நீழலே. (தேவாரம்)

இறைவன் அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில என் னும் உண்மையை யிப்புனித வாக்கால் நாம் இனிதுணர்கின் றோம். இதன் விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.

இன்ப வடிவன் இணையடியை எண்ணினர்
இன்ப மடைவர் இனிது.

இறைவனது அடிகளைச் சேர்ந்தாரை இடும்பைகள் சேரா என்பது இதனுல் கூறப்பட்டது.

வாட்புலிபோற் பாய்ந்துகொன்ற வல்வினைபோன் சேரவில்லை.
கோட்புலியார் தம்மைமைக் குமரேசா —கேட்பின்
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (நி)

இ—ள்.

குமரேசா! கோட்புலிநாயனர் புலிபோல் பாய்ந்து தமது சுற்றத்தாரைக் கொன்றிருந்தும் அக்கொலைவினை என் அவரைச் சேரவில்லை? எனின், இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு இருள்சேர் இருவினையும் சேரா என்க.

இது, முனைவனை நினைந்தால் வினைகள் நீங்கும் என்கின்றது.

புகழ் புரிந்தார் = புகழை விரும்பி நின்றார். மாட்டு = இடத்து. புரிதல் = விரும்புதல். எப்பொழுதும் உள்ளிநிற்றல், உவந்துரை யாடல் என்க. வினைகள் மயக்கத்தால் வரும் என்பார் இருள்சேர் வினை என்றார். உண்மையான புகழ் என்பார் பொருள்சேர் புகழ் என்றார்.

இருவினை = நல்வினை, தீவினை. இந்த இரண்டு வினைகளும் மூன்று கரணங்களின் வழியாக உளவாம். நினைத்தல் சொல்லல் செய்தல் என்னும் இம் மனம் வாக்கு காயங்களின் தொழில்கள் நல்லனவாயின் நல்வினையாம். தீயனவாயின் தீவினையாம். நல் வினை இன்பத்தை நல்கும்; தீவினை துன்பத்திற்கு ஏதுவாம். துற க்க முதலிய சிறந்த போகங்களை யூட்டி உயிர்களைப் பேரின்பத்தைப் பெற வொட்டாதபடி தடுத்தலினால் நல்வினையும் சேராதென்றார்.

இறைவனது உண்மையான புகழை எப்பொழுதும் விரும்பி நிற்பாரிடத்து அறியாமையாலமைந்துள்ள இருவினைகளும் அணுகா என்பதாம்.

இறைவன் மெய்ப்புகழுடையான் என்பதும், அவனது கலி யாண குணங்களை விரும்பித் துதித்தல் வேண்டும் என்பதும், அங் ஙனம் துதிப்போரை வினைகள் சேரா என்பதும் இதில் உணர்த் தப்பட்டன. இவ்வுண்மை கோட்புலி நாயனாரிடம் உணரப்படும்.

கதை

கோட்புலிநாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார் களில் ஒருவர். இவர் சோழ நாட்டிலே வேளாளர் குலத்திலே நாட்டியத்தான் குடியிலே பிறந்தவர். சிவபத்தியிற் சிறந்தவர். அஞ்சா நெஞ்சும் எஞ்சாவலிமையும் வாய்ந்தவர். வாள்வேல் முத லிய ஆயுதப்பயிற்சியில் தேர்ந்தவர். அந்நாட்டு அரசனிடத்தில் சேனைத்தலைவரா யமர்ந்திருந்தார். தாம் ஈட்டிய பெரும் பொரு ளைச் சிவாலயங்களுக்கும் சிவனடியார்க்குமே மகிழ்ந்து உதவி வந்தார். இங்ஙனம் வருநாளில் பொருபடை கொண்டு ஒரு போர் மூனைக்குப் போகும்படி அரசன் இவரை ஏவினன். போர்மேற் சென்று மீண்டு வருகின்றவரையும் சிவாலயங்களுக்குச் செல்லை

யாகத் திருவழுது செய்யும்படி திட்டஞ் செய்தார். அதன்பொரு ட்டு வேண்டிய நெல்லைத் தொகுத்தார். சேமஞ்செய்தார். தமது சுற்றத்தரை யழைத்தார். எவ்விதமான காரணத்தாலும் இந்நெற் பொதியில் சிறிதும் எடுத்தலாகாது என்று அவர்கட்குக் கட்டளைபிட் டார். அரசன் கட்டளைப்படி தாமும் போர்மேற் போனர். போனவர் பகைவரைப் பொருதுடன் வென்றார். வெற்றியும் புக ழும் முற்றவும் பெற்றார். இவர் சென்றிருந்த சிலகாலத்துள் தமது நாட்டிற் பஞ்சந் தோன்றிற்று. அதனல் இவரது பெற்றோ ரும் சுற்றத்தாரும் சேமஞ்செய்திருந்த நெல்பொதியிற் சிறிதெடுத் துச் சீவித்திருந்தனர். வெற்றிபெற்று மீண்டுவந்த நாயனர் ஆண்டு நிகழ்ந்ததைக் கேட்டறிந்தார். கொண்டார் கோபம். எடுத்தார் வாளை. தமது மனைவி முதலிய சுற்றத்தார் அனைவரையும் வாளால் வீசித் துணித்தார். இறுதியில் அங்கோர் இளங் குழவியையும் வெட்டச் சினந்தார். அதுகண்ட சிலர் நடு நடுங்கி "ஐயா! இப் பசிய பாலன் நமது நெல்லின் அன்னத்தை யுண்ணவில்லையே' என வேண்டினர். இக்குழவி யெனது நெல்லின் அன்னத்தைக் உண்ணவில்லை யென்ப துண்மை; ஆனலும் அவ்வன்னத்தை உண்ட தாயின்பாலை உண்டிருந்து மல்லவா? என்று மொழிந்து பாலனை மேலே வீசி எறிந்தார். தமதுவாளால் கூசாது அரிந்தார். உடனே பரமன் இவரது திடபத்தினையக்கண்டு வியந்து மகிழ்ந்தார் காட்சி தந்து கருணைசெய்தார். அன்பனே! உனது வாளால் மடி ந்த உன் சுற்றத்தாரனைவரும் துறக்க இன்பந்துய்க்கின்றனர். நம் பால்வைத்த உனது அன்பிற்கு யாம் அகமிக மகிழ்ந்தோம். நீயும் பெறுக பேரின்பம் என்று பெருமான் அருளினர். நாயனாரும் இருவினை நீங்கினர். இன்பம் எய்தினர். இதன் விரிவு பெரிய புராணத்தில் காணப்படும்.

ஆண்டவனை நாடி அகமுருகின் அப்பொழுதே
பூண்டவினை மாண்டோழிந்து போம்.

இறைவனது அருள் சேர்ந்தாரை யிருவினைகள சேரா என்பது இதனல் கூறப்பட்டது.

நாடி நெறிநின்ற நல்லசன காதியரேன்
கூடினர்நீள் வாழ்வைக் குமரேசா—ஓடும்
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றூர் நீடுவாழ் வார். (சு)

இ—ள்.

குமரேசா! சனகர் முதலிய நால்வரும் என்றும் அழியாத வாழ்வை என் எய்திரூர்? எனின், பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றூர் நீடுவாழ்வார் என்க.

இது, இறைவனருள்வழி ஒழுகினர் அழியாவாழ்வை அடைவர் என்கின்றது.

சனகாதியர் என்றது சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்னும் முனிவர் நால்வரை..

பொறி என்றது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து ஞான இந்திரியங்களை. ஐந்து என்றது ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐம்புலன்களாகிய இச்சைகளை.

பொறிகளின் வழியாகச் சென்று சத்தம் பரிசம் முதலிய புலன்களை நாடியலையும் புன்மை இறைவனுக்கு இன்மையால் "பொறி வாயில் ஐந்து அவித்தான்" என்றார். அவித்தவினை உருவுடன் காணப்படும்; ஆனால் முளைக்காது. அதுபோல் பொறிகள் இருக்கும்; புலன்களைப் பற்று என்பதாம்.

ஐம்பொறிகளின் வழியாக வரும் அவா ஐந்தையும் ஒறித்தானது மெய்யான ஒழுக்க நெறியின் கண்ணே வழுவாது நின்றவர் என்றும் பிறப்பின்றி இன்புற்று வாழ்வர் என்பதாம்.

பரமனது அருள் நெறியின் கண்ணே வழுவற அமர்ந்து ஒழுகி நின்றவர் அழிவில்லாத விழுமியவாழ்வை யெய்தி என்றும் விளங்கி நிற்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சனகாதியர் பால் உணரப்படும்.

கதை

சனகர் முதலிய நால்வரும் பிரமனுடைய அருமைப் புதல்வர். இவர் பருவமெய்து முன்னரே அரியகலைகள் பலவும் பயின்றவர். விழுமிய விரத ஒழுக்கமுடையவர். அருந்தவர்களனைவரும் விய

ந்து நோக்கும்படியான சிறந்த ஞானசீலராய் இவர் விளங்கி யிருந் தனர். தனு கரண புவன போகங்களைக்கொண்டு உயிர்கள் பல வகைக் கதிகளிலும் நின்று மாறி மாறிச் சுழன்றுவருதலை யறிந்து பிறவியை அஞ்சி என்றும் பிறவாநெறியினைப் பெற விழைந்தார். இறைவனை நினைந்து உளமிக உருகினர்.

"இருட்பெருங் கடலுள்யாமத் தெறிமருத் திடைப்பட்டாங்குப்
பொருட்பெருங் கடலாம் வேதம்புடைதொறு மலைப்பதிந்நாள்
அருட்பெருங் கடலே! எய்த்தேம்; அமைந்திலை துணர்வுயாங்கள்,
மருட்பெருங் கடலினீங்கும் வண்ணமொன் றருடிஎன்றார்."

(கந்தபுராணம்.)

இங்ஙனம் உருகி வேண்டியபோது பரமன்தோன்றி உண்மை நெறியை உறுதிபெற உணர்த்தினர். இவர் உணர்ந்து தெளிந் தார். உற்ற பொருள்களில் பற்றற்று நின்றார். மனத்தைப் புற த்தில் செலுத்தாமல் பரத்திற் செலுத்தினர். அதனால் அந்தமில் இன்பத்தை அடைந்தார். சிவயோகிகள் என்னும் சிறப்பினைப் பெற்றார். நித்தியவுலகில் நீடுவாழ்வுற்றார். பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடுவாழ்வார் என்னும் உண்மையை இவர் நின்றுணர்த் தினர். இதன் விரிவைச் சிவமகாபுராணத்தில் காண்க.

உண்மை நெறிநின் றொழுகின் உயரின்பம்
எண்ணையா யெய்தும் எளிது.

இறைவனருளிய மெய்நெறி நின்றார் எய்தும் பேறு இதனால் கூறப்பட்டது.

வானவரேன் நஞ்சினால் வந்ததுன்ப மாற்றவுமை
கோனடியைச் சேர்ந்தார் குமரேசா—வேனர்
தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (எ)

இ—ள்.

குமரேசா! நஞ்சினால் வந்த துன்பத்தை மாற்றுதற்காக வானவர் என் உமைகோன் அடியைச் சேர்ந்தார்? எனின், தன க்கு உவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது என்க.

அரிது என்பது இன்மைகுறித்து நின்றது. மாற்றமுடியா தென்றவாறு. மாற்றல் = நீக்குதல்.

ஆதியும் நடுவும் அந்தமுமின்றி அநாதியாய்ப் அருமறைகளுக் குப் ஓதவும் எட்டாத உயர்ந்து, என்றும் நின்றான் ஒருவனே யென்பதுகருதி "தனக்குவமை யில்லாதான்" என்றார். உவமை யில்லாதவன் தானைச் சேர்ந்தவரே கவலையில்லாதவரா யிருப்பர் பிறர்க்கு அஃது உண்டு என்க. தனக்கு உவமை யில்லாதவன் தாளை மனக்கவலை மாற்றும் மருந்து என்பது கருத்து.

"ஒப்புஇல்லாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த்திருப்பா தத்து அப்பன்" என்றது திருவாசகம்.

தனக்கு யாரும் ஒப்பில்லாத இறைவனது திருவடியைச்சேர்ந் தவர்க்கல்லது மனக்கவலை மாற்ற முடியா தென்பதாம்.

எவ்வகையினும் எவரும் தனக்கு நிகரில்லாதவன் இறைவன் என்பதும், அவனது அடியைச்சேர்ந்தவர்க்குத் துன்பங்கள் நீங் கும் என்பதும், இதற்குச்சான்றாகத் தேவர்கள் நஞ்சினால் சேர்ந்த கவலையை இவன் தான்சேர்ந்து நீக்கினர் என்பதும் இதில் உணரப்படும்.

கதை.

முன்னொரு காலத்தில் துருவாசரது சாபத்தால் திறக்கப் பொருள்கள் எல்லாம் கடலிலடைப்புண்டன. அவற்றை மீண்டு மெடுத்தற்பொருட்டுச் சுரரும் அசுரரும் பாற்கடல் கடையத்துணி ந்தார். மந்தரமலையை மத்தாகநாட்டினர். சந்திரனைத் துணைக அமைத்தார். வாசுகியென்னும் பாம்பை நாணைகப் பிணித்தார். இருதிறத்தாரும் கடைந்தார். விடத்தும் கடைபுண்டபோ ழுது நாணுகிய வாசுகியிடமிருந்து நஞ்சு வெளிவந்தது. அப்பெரு நஞ்சு மண்டி மேல் எழுந்தது. வானவர் கண்டு பயந்தார். மரு ண்டு வெருண்டார். என்செய்வோமென்று நிரண்டு ஓடினர். அஞ்சி ஓடிய தேவர் முடிவில் உமாபதியே தஞ்சமென்றடைந்தார், அப்பதியும், "அஞ்சன்மின்" என்று அவர்கட்கு ஆதரவு செய்து மண்டிவந்த நஞ்சை தம் செங்கையில் கொண்டார். கண்டமட்டும் உண்டார். அது கண்டம் மட்டில் நின்றது. அதனால் அவர்

நீலகண்டன் எனப் பெயர் பெற்றார். வானவர் கவலை நீங்கினர் பரமனை வாழ்த்தி மகிழ்ந்தார். முதல்வனடியை அடைந்தவர்க்கே. கவலை நீங்கும் என்பதை உலகம் காண இவர் உணர்த்தி நின்றார். இதன் விரிவை இராமாவதாரத்தில் தெளிக.

அன்னையுறிற் பிள்ளை அழிபசிபோம் அல்லலெலாம்
முன்னவனைச் சேரிலறு முந்து.

உயிர்கள் மனக்கவலை மாற்றுதற்கு வழி யிதனால் கூறப்பட்டது

காதற் கடலைக் கடந்தான் சனகனென்
கோதற்றார் மற்றோர் குமரேசா—நீதில்
அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. (அ)

இ—ள்.

குமரேசா! சனகன் காதற்கடலைக் கடந்தான், மற்றவரென் அதில் ஆழ்ந்தார் எனின், அறவாழி அந்தணனது தாளைச் சேர்ந்தவர்கட் கல்லது பிற ஆழியை நீந்துதல் அரிது என்க.

பிறவென்றது, ஈண்டு பொருளையும் இன்பத்தையும் சுட்டி நின்றது. மறத்தையும் குறிக்கும். இனி பிற ஆழி, பிறவிக்கடல் எனவும் படும். மற்றவர் என்றது சூரன், கனகன், துரியோதனன் முதலாயினோரை.

அறக்கடலாகிய இறைவன் அடியினை நினைந்துருகி அவனருள்வழி ஒழுகினலன்றிப் பாவக்கடலாகிய பிறவித்துன்பத்தை யாவரும் கடக்கமுடியா தென்பதாம்.

அவலக் கவலைகள் நிரம்பிய பிறவிக்கடலை நீந்தி ஒருவன் பேரின்பம் பெறவேண்டுமாயின் அவன் பரமனை எண்ணி யொழுக வேண்டும் என்பது கருத்து.

இறைவன் தருமவுருவினன் என்பதும், கண்ணெளி யுடையவன் என்பதும், அவனது தாளைச் சேர்ந்தவரே காதற்கடலைக் கடப்பர் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சனக மன்னன்பால் உணரப்படும்.

கதை.

சனகன் என்பவன் விதேசநாட்டு வேந்தன். சீதைக்குத் தாதை. தசரதராமனுக்கு மாமன். இவர் மெய்ப்புணர்வு மிக்கவர். இல்லற ஞானிகட்கு ஓர் எடுத்துக்காட்டாக வள்ளவர். முற்றத் துறந்த சுகமுனிவருடம் தம்மிடம் வந்து தத்துவ உபதேசம் பெறும் படி நின்ற உத்தமர். அருளும் பொறையும் அறிவும் நிறைந்தவர். மருளற நின்ற மாதவ சீலர். பற்றற்ற பரமயோகி. "அறன் நிரம்பிய அருளுடை யருந்தவர்க்கேனும், பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிரிதாம்" என்றபடி பொருட் செல்வமானது எத்தகைய பேரறிவாளரையும் மயக்கிச் செருக்குக யுண்டாக்கும் இயல்பினையுடையது. அதனை இவர் அளவறப் பெற்றும் அரசபதவியைபுற்றும் அகங்காரமுதலிய இழிகுணங்கள் சிறிதும் இலராய் மறுமை நோக்கோடு மருவியிருந்தார். பொருளினில் உளவாம் சிற்றின்பங்களில் அழுந்தாமல் பேரின்பம் பேணி நின்றார். அற வாழி அந்தணனாகிய இறைவன் தானேயே என்றும் எண்ணி யிருந்து புண்ணியம் புரிந்தார். அதனால் பிறவாழி நீந்தினர்.

அன்பமைந்த நெஞ்சில் அருளமைந் தெஞ்ஞான்றும்
இன்பமைய நிற்கும் இறை.

சனகன் இறைவன் தாள் சேர்ந்து பிறவாழி நீந்தினன் என்பது இதனால் கூறப்பட்டது.

வேதன் உயர்தலையும் வெண்டலையாய் வீழ்ந்துபலிக்
கோதடைந்த தென்னை குமரேசா—பூதலத்திற்
கோளில் பொறியிற் குணமிலவே யென்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (கூ)

இ—ள்.

குமரேசா! வேதனது உயர்ந்ததலையும் வெள்ளிய தலையாய் மாறி யென் குற்றமுற்றதனின், என் குணத்தானது தாளை வணங்காத தலைகள் கோள் இல் பொறியிற் குணம் இல என்க.

உம்மை சிறப்பும்மை. கோள் இல்பொறி = புலன்களைக் கொள்ளுதல் இல்லாதபொறிகள். இனி அறிவு இல்லாதபாவைகள் எனவு

மாம். எண் என்றது எட்டு என்னும் தொகைப்பெயரைச் சுட்டி. நின்றது. இது வினை முதலாலல் எண்ணுகின்ற குணத்தான் எனப்படும்.

தலைமை, தாய்மை, தத்துவ வுணர்வு, அருள், வலி, இன்பம், அமலம், தெளிவு, என்னும் எண்வகைக் குணங்களோடும் தனக்கு இயல்பாகவே உடையான் என்பார் எண்குணத்தான் என்றார்.

பரிசம் தெரியாத மெய்யும், சுவையை உணராத வாயும், ஒளியைக்காணுத கண்ணும், நாற்றத்தை அறியாத மூக்கும், ஓசையைக் கேளாத செவியும், உருவுடன் இருப்பினும் அவை எவ்வாறு பயன்படாவோ, அவ்வாறே, இறைவனது தாளை வணங்காத தலை உருவுடன் இருப்பினும் பயன் இலை யென்பார் "கோள் இல் பொறியிற்குணம் இல" என்றார்.

தலைமை முதலிய என் வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத தலைகள் புலன்களைக் கொள்ளாத பொறிகள் போல் பயன்படா என்பதாம்.

இறைவன் எண்வகைக் குணங்களை யுடையவன் என்பதும், அவனது தாளை வணங்குதலை ஒருவன் பிறவிக்குப் பயனும் என்பதும், வணங்காத தலை யிழிவுறுமென்பதுமே, இதில் உணர்த்தப் பட்டன. இவ்வுண்மை பிரமன்பால் உணரப்படும்.

கதை.

ஒரு காலத்தில் பிரமன் தானே தலைமைக்கடவுள் என்று எண்ணிச் சிவபெருமானை வணங்காமல் செருக்குற்று இருந்தான். அதனையறிந்த பரமபதி அப்பிரமனது தலைகளுள் ஒன்றைக் கிள்ளி யெறிந்தார். கிள்ளப்பட்ட. அத்தலை பெருமையிழந்து பிச்சைப் பாத்திர மாயிற்று. இதன் விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

பெருவிதியும் சிறுவிதியும் பெருமானை வணங்காமல்
பிணங்கி யந்தோ
இருதலையும் இழந்திழிந்தார் என்பதனை மன்பதைகள்
இனிது தேர்ந்தும்
அருமறைகள் புகழ்ந்துமகிழ் அவன்தாளை வணங்காமல்
ஆசை மோயால்
கருமமிகப் புரிந்துபிறர் திறந்துபவக் கடல்விழுந்து
கவல்வ தென்னே.

என்றதுங் காண்க. பெறுவிதி = பிரமன். சிறுவிதி = தக்கன். தக்கன் சிவபிரான் தாளை வணங்காமையால் தனது சிறந்த தலையை யிழந்தான். இழிந்த ஆட்டுத்தலையை யடைந்தான். இறைவனடி யினை அன்பால் நினைந்து வணங்காதவன் எவ்வளவு உயர்ந்த பிற வியை யடைந்திருந்தாலும் அவன் இழிந்தழிவான் என்பதை உலகம் இவ்பால் உணர்ந்து நின்றது.

உடையானை நாடி யுளங்கனியா ரேகில்
கடையா மவன்பிறப்புக் காண்.

இதனால் ஒருவன் தலைக்குப் பயன் சாற்றப்பட்டது.

சேர்ந்தநிண்ணர் வெம்பிறவி தீர்ந்தார்பின் சேராதார்
கூர்ந்தாழ்ந்தார் என்னே குமரேசா—ஆர்ந்த
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். (டு)

குமரேசா! இறைவன் அடியைச் சேர்ந்த நிண்ணரர் பிறவியைத்தீர்த்தார்; அதனைச் சேராதார் என் ஆதில் அழுந்தினர் எனின், இறைவன் அடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் சேராதார் நீந்தார் என்க.

இஃது இறைவனடி சேர்வார் பிறவி தீர்வர் என்கின்றது.

நிண்ணர் = கண்ணப்பர். சேர்ந்த என்றது உலகியலை மறந்து இறைவனடியையே உறுதியாகப் பற்றி உருகி நின்றமை குறித்து. ஐயோவென அரற்றியழுங்குமாறு வெய்யதுன்பங்கட் கெல்லாம் பிறவி இடமாகுமாதலால் வெம்மை அதற்கு அடையாகி நின்றது. காய்ந்த இருப்பு கொண்ட நீர் போற் கலந்நிறையைத் தாய்ந் தென்றுந் தோன்றுத்துணை சேர்ந்தார் ஆதலால் பிறவி தீர்ந்தார் என்றும். சேராதார் என்றது கண்ணப்பருடைய வேட்டைத் தோழர்களை. ஆர்ந்த என்றது துன்பங்கள் நிறைந்த என்றவாறு.

சேராதார் நீந்தார் என்றதலால் சேர்ந்தார் நீந்துவர் என்பது பெறப்படுமாயினும் உறுதி தோன்ற உடன் கூறினர். நீந்துவர் என்னும் பயனிலைக்கு எழுவாயாகச் சேர்ந்தார் என்பது இதில்

வருவிக்கப் பட்டது. பொருள்கோடற்கு இசைவில்லாமல் சொல் எஞ்சி நிற்குமாயின் இசைவு நோக்கி அதனை இசைத்துக் கொள்ளலாம் என்க. இங்ஙனம் கொள்வதைச் சொல் எச்சம் என்பர்.

இறைவன் அடிசேர்ந்தார் கடல் சேர்ந்து நில்லார் என்க. மேல், இறைவன் தாளைவணங்கலே ஒருவன் தலைக்குப் பயனும் என்றார்; இதில் அதனையடைந்தவர் பின்பு பிறவியை அடையார் என்கின்றார்.

இறைவன் அடியைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெரியகடலைக் கடந்து விடுவர்; அதனைச் சேராதவர் கடக்கமாட்டாராய் அதனுள் ஆழ்ந்து அழுந்துவர் என்பதாம்.

பிறவியைப் பெருங்கடல் என்றது முடிவின்மையும்கடத்தற்கு அருமையும் கருதி என்க.

இவ்வுலகுக்கு ஒரு முதல்வனுளன்; அவன் தூய அறிவினையுடையவன்; அவனடியைத்தொழுதலே அறிவுடைமைக்குப் பயன்; அங்ஙனம் தொழுவார் பெரு வாழ்வுடையராய் எல்லா நலங்களையும் மெய்தி இன்புற்றிருப்பரென இதுவரை உரைத்து வந்து இறுதியாக அவனடியை அடைந்தவர் பின்பு பிறவியை அடையார் என உறுதி பெற அறுதிபிட்டு இதில் உணர்த்தியருளினார் என்க.

பிறவிக்கடலைக் கடத்தற்கு இறைவன்தாளை புணையாய்ப் நின்று துணை செய்யும் என்பது குறிப்பு.

பிணி மூப்பு சாக்காடு முதலிய பெருந்துன்பங்கட்கெல்லாம் நிலைக்களனுடைய பிறவியை ஒருவன் கடக்கவேண்டுமாயின் அவன் இறைவனை நினைக்கவேண்டும் என்பது கருத்து.

இறைவனடியை நினைந்து உருகி நின்றவரே பிறவி நீங்குவர்; அல்லாதார் அதனில் அழுந்தி வருந்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கண்ணப்பர் கண்ணனும், அவர் தோழர் பாலும் உணரப்படும்.

கதை.

கண்ணப்பர் என்பவர் பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரிலே வேடர்களுக்குத் தலைவனாகிய நாகன் என்பவனுக்கும் தத்தை என்பவளுக்கும் புத்திரராய்த் தோன்றினர். பிறந்தபொழுதே இவர்

தேகம் திண்மையா யிருந்தபடியால் பெற்றோர் இவருக்குத் திண்ணனூர் என்று பெயரிட்டனர். பருவம் வந்தபின் இவர் தமது மரபுக்குரிய வேட்டைத்தொழிலை மேற்கொண்டு வேடர் சிலருடன் காட்டில் புகுந்தார். பல மிருகங்களையும் வேட்டையாடிச் சென்றார். சென்றவர், தெய்வாதீனமாகத் திருக்காளத்தி மலையைக் கண்டார். அதின் மேல் ஏறினர். அங்குவிளங்கியிருந்த சிவலிங்கத்தை அணுகினர். உடனே அன்பால் உருகினர். உண்ணும் உணவும், பருகும் நீரும் துறந்தார். ஆறுதினங்களாக இரவும் பகலும் அம் மூர்த்தியையே கண்ணும் கருத்துமாகக் காத்தார். பலவகையிலும் அன்புசெலுத்தினர். என்பும் உருகும் இயல்பில் உரிமை பூண்டிருந்தார். இங்ஙனம் இருப்ப ஆறுவது காளில் அச் சிவலிங்கத்தின் வலக்கண்ணில் உதிரம் வரும்படியான ஒருசோதனை நிகழ்ந்தது. அதனைக் கண்டவுடனே யிவர் உளம் பதைத்தார். உடல் துடித்தார். ஐயகோ! என் ஐயன் கண்ணில் இரத்தம்தோன்றிற்றே! யென்று அலறினர். அழுது ஓடிப் பல பசிய இலைகளைக் கொண்டு வந்தார். தமது வலிய கரத்தில் வைத்து கலியர் பிசைந்தார். அச்சாறத்தை அக்கண்ணில் பிழிந்தார். குணமின்மை கண்டார். வருந்தினர். தமது வலக்கண்ணையே தோண்டி யதில் அப்பினர். உடனே யிடக்கண்ணிலும் உதிரம் பெருகினது. அதுகண்ட திண்ணனார் தமது இடக்கண்ணையும் அப்புதற்கு ஓப்பிக் கையிலிருந்த கூரிய அம்பால் அதனைக் கிளறித் தோண்டினர். உடனே எம்பெருமான் தோன்றி "நில்லுகண்ணப்ப, நில்லுகண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல், நில்லு கண்ணப்ப" என்று கூவித் தமது செங்கையால் அவரது திண்கையைப் பிடித்துத் தடுத்து ஆட்கொண்டார். கண்ணை அப்பினதினாலே கண்ணப்பன் என்னும் பெயரைப்பெற்றார். பிறவிப்பெருங்கடல் நீந்திப் பேரின்பம் உற்றார். உடன் சென்ற வேட்டைத் தொழர்களாகிய நானன் காடன் என்பவர் நகரைநோக்கி மீண்டார். பின்புபிறவியை யடைந்தார். இதன் விரிவு பெரியபுராணத்தில் இனிது புலனும்.

ஈசனெயுள் ளோத்தின்றார் இன்புறுவர் இல்லாதார்
நீசராய்த் துன்புறுவர் நின்று.

இறைவனது அடிகளை அடைந்தார் பிறவியை அடையார் னன்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தோகைப்பொருள்.

கடவுள் ஒருவர் உளர். அவர் அகரம்போல் உலகு உயிரெங் கும் ஒழிவற நிறைந்த ஒன்பொருள். அப்பொருளின் அடிகளைத் தொழுதலே அறிவுடைமைக்குப் பயன். அங்ஙனம் தொழுபவர் அழிவில் வாழ்வையடைவர். அவரைத் துன்பங்கள் தொடரா. வினைகள் சேரா. அவர் இன்பவாழ்வை எய்துவர். அவரைக் கவலைகள் கதுவா. பற்றுக்கள் பற்று. தலைவனதுதாளை வணங்கு தலே தலைக்குப் பெருமை. தாளை யடைந்தார் பிறவியை யடை யார் என்பனவாம்.

பின்வரும் திருநாமங்கள் கடவுளைக் குறித்து முறையே இவ்வதிகாரத்தில் வந்துள்ளன.

1. ஆதிபகவன்.
2. வாலறிவன்.
3. மலர்மிசையேகினான்.
4. வேண்டுதல் வேண்டாமைபிலான்.
5. இறைவன்.
6. பொறிவாயில் ஐந்தவித்தான்.
7. தனக்குவமையில்லாதான்.
8. அறவாழியந்தணன்.
9. எண் குணத்தான்.
10. இறைவன்.

முதலாவது கடவுள் வாழ்த்து முற்றிற்று.

2-ம் அதிகாரம் வான் சிறப்பு.

ஆம்தாவது மழைபினது பெருமை. இம்மழை கடவுளது அருள்வடிவாய் நின்று பருவங்கண்டுபெய்து இவ்வுலகை நிலைபெற ச்செய்து வருகின்றதாதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

"வானம் பரவுதூஉம் வானம் பரவுதூஉம்
ஞான முதல்வன் அருள்போல ஞாலக்குப்
பானழு மாகி- வளமும் பலவளித்துத்
தானே துணையாத லான்"

என்றபடி இது நின்றுவருதலை நாளும் கண்குணரலாம். தோன்றுத் துணையாய் நிற்கும் ஆதிபகவன் மழையைத் தோன்றுந் துணையாய் நிறுத்தித் தன் உலகத்தைக் காத்துவருகின்றுன் என்க.

11. ஏரே அமிழ்தியான் இந்திரன்முன் வாணயிந்தக்
கோனுலகுக் கீந்தான் குமரேசா — ஆனமல்
வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. (க)

இ—ள்.

குமரேசா! முன்னர் இந்திரன் அமிழ்தத்தைக் கொடுக்காமல் என் இவ்வுலகுக்கு மழையைக் கொடுத்தான்? எனின், வான் நின்று உலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று என்க.

இது, மழையின் மாட்சி கூறுகின்றது.

கோனுலகு என்றது சிறந்த உலகம் என்றவாறு. சிறப்புஎன்னை எனின்? போகந்துய்த்துப் புண்ணியங்கழிய நிற்கும் பொன்னுடு போலாது எண்ணிய அறங்களைச்செய்து என்றும் நிலைதியாதவீட்டின்பத்தைதப் பெறுதற்கிடனாய் நிற்கும் பெருமை என்க. சுட்டு அண்மைமேதான்று நின்றது ஆனமல் = நீங்காமல்; இது வானின் நிலைத்த நிலையினை விளக்கி நின்றது.

உணரற்பாற்று=உணருடம் பான்மையுடையது; அமிழ்தம் என்று உணர்ந்து மதிக்கத்தக்க தகுதியை மழை உடையது என்றவாறு.

வான் என்றது மழைபினை. இஃது ஆகுபெயர். நின்று என்னும் வினையெச்சம் வழங்கி வருதல் என்னும் உலக வினையே நிற்று உற்று முடியாதாதலால் அதற்கினையன அதனை நிற்ப அல்லது நிற்றலால் எனத் திருத்திக்கொள்க. வினை எச்சங்கள் வேறு வாய்பாடுகளாக மாறிவந்தாலும் அவற்றின் பொருள்கள் வேறுபடா என்க.

இனி, நின்று என்பதை உலகோடு இணைத்து வானுல் உலகம் நின்று வழங்கிவருதலால் எனினும் அமையும். இதில் வான்மேல் ஆலுருபை வருவிக்கவேண்டும். நின்று என்பதை ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபாக்கொண்டு எதுவாக்கி உரைப்பினுமாம்.

மழையினால் இவ்வுலகம் நிலைபெற்று வருதலால் அஃது இவ்வுலகத்துக்கு அமிழ்தம் என்று உணருடம் பான்மைபுடையது என்பதாம்.

தான் என்றது அம்மழையை. அமுதம்போல் மழையும் உயிர்களை நிலைத்து வாழச்செய்து வருகின்றது ஆகலால் அதன் பெருமையை நினைந்து போற்றுக என்பது குறிப்பு. தொட்ட இடமெல்லாம் தோன்றும் நீர் தானே என்று மழையை இகழற்க; தோன்றுந் துணையாய் நின்று உயிர்களைக் காத்துவருதல் அமிழ்தம் என்று அதனைப் புகழ்க என்றபடி.

பொது நோக்கில் நீர் என மழை எளிதாகத் தோன்றினும் சிறப்பாக வுன்றி நோக்கின் அரிய அமிழ்தின் தன்மையை அஃது தொடர்ந்துள்ளதாதலால் அவ்வுண்மையை உணர்வுடை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதாம்.

தனக்கு உதவிசெய்து வருவாரது பெருமையை ஒருவன் உணர்ந்து போற்றுதலின் அவன் செய்ந்நன்றி கொன்ற மகனுய்ச் சிறையுறுதல்போல், நமக்கு இதஞ்செய்து நிற்கும் மழையின் மாட்சியை மக்கள் மதியாராயின் மதியிலராய் மதிப்பிழப்பர் ஆகலால் இதன் அருமையை உணர்ந்தொழுகவேண்டுமென இங்ஙனம் உணர்த்தியருளினர்.

மழையினாலேதான் உலகம் நிலைபெற்றுவருகின்றதென்பதும் அஃது உயிர்களுக்கு அமிழ்தம்போல்வதென்பதும். அமிழ்தத்தை யுடைய இந்திரனும் முன்னொரு காலத்தில் தான் நன்மைசெய்ய விரும்பிய உயிர்கட்கு இம்மழையையே உதவினன் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

முன்பு ஒரு காலத்தில் இவ்வுலகில் மழைபெய்யாது பொய்த்தது. அதனால் உயிர்களெல்லாம் வருந்தி நொந்தன. அக்காலத்தில் ஆபுத்திரன் என்பவன் ஒருவன் இருந்தான். இவன் வாரணசி என்னும் ஊரிலே அபஞ்சிகன் என்னும் அந்தணன் மனைவியாகிய சாலி என்பவளுடைய மகன். ஒரு காரணத்தால் அத்தாய் இவனை ஒரு காட்டில் விட்டுப்பிரிந்தாள். இவன், பசி நோயால் வாடியழுதான். அப்பொழுது தெய்வப் பசு ஒன்று இவனை அணுகிப் பாலூட்டி வளர்த்தது. ஆ ஆதரித்த காரணத்தால் இவன் ஆபுத்திரன் எனப்பட்டான். பெரியவனானபின் தென் மதுரையைச் சேர்ந்தான். அங்குப் பசியால் வருந்திய உயிர்களைக் கண்டான். உள்ளம் இரங்கினான். தான் பெற்றிருந்த அக்ஷய பாத்திரத்தின் மகிமையால் அவ்வெல்லா வுயிர்கட்கும் நல்லுணவூட்டினன். உயிர்களெல்லாம் உண்டு மகிழ்ந்தன. பற்றிநின்ற பசிநோய் முற்றுப் அகன்றது. இந்த உண்மையை இந்திரன் அறிந்தான். ஆபுத்திரன் பால் அன்புடன் வந்தான். பேரருளாளா! என்று பேணியழைத்தான். நின் புண்ணியத்திற்கு மகிழ்ந்தேன்; என்னுலகம் வா என்றழைத்தான். அவனை நோக்கி இவன் புன்னகை செய்தான். பசி நோயகற்றி உயிர்களை மகிழ்விக்கும் இப்பெரும் பேற்றை இழந்து நின்னுடன் வருதற்கு யான் இசையேன் என்று மறுத்தான்.

"எண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந்திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுளர் அல்லது
அறஞ்செய் மாக்கள், புறங்காத்து ஓம்புநர்,
நற்றவஞ் செய்வோர், பற்றற முயல்வோர்,
யாவருமில்லாத் தேவர் நன் னாட்டுக்கு
இறைவனுகிய பெருவிறல் வேந்தே!

வருந்தி வந்தோர் அரும்பசி கூர்ந்தவர்
திருந்து முகங் காட்டும் என் தெய்வக் கடி னை,
உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவை யீங்களிப்பன தேவர் கோன்!" என இவன் சிரித் துரைத்தான். தானச் செருக்கால் தன்னை இங்ஙனம் மதியா துரைத்தானேயென்று அவன் முதிர்சினங் கொண்டான். உடனே எல்லா வுயிர்களுக்கும் பசியிலவாம்படி செய்ய அவன் பரிந்து நினைந்தான். தன்பாலுள்ள எதையும்உதவவில்லை. மழையையே உதவினன். அதனால் மாநிலம் செழித்தது. வளமிகப் பெற்றது அன்றுமுதல் எல்லாவுயிர்களும் பசிநோயகன்றன. உலகமும் இனிதா ஒரு நிலை நின்றது. மழையை உருவம் நோக்கி நீர் என நினையாமல் அதன் தன்மையை வியந்து அமிழ்தென உணர்ந்தது. இதன் விரிவை மணிமேகலையில் காண்க.

மன்னுயிர்கட் கின்னமிர்தாம் மாமழையின் றேலுலகம்
என்னுயிர்த்து வாழும் இனிது.

மழையை அமிழ்தமென்று மதிக்கவேண்டும் என்பது இதனால் கூறப்பட்டது.

12. உண்டிதரு நீரும் உணவாகச் சீதைபண்டு
கொண்டிருந்தாள் என்னே குமரேசா—உண்டிதனைத்
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (உ)

இ-- ள்.

குமரேசா! நீரையே உணவாகவும் கொண்டு சீதை என் முன்பு உறைந்திருந்தாள்? எனின், துப்பார்க்கு துப்பு ஆய துப்பு ஆக்கி துப்பார்க்கு துப்பு ஆயதூஉம் மழை என்க.

உண்டிதரும் = உணவுகளை உளவாக்கித் தருகின்ற. இது நீருக்கு அடையாகி அதன் நீர்மையை விளக்கி நின்றது.

மழையை அமிழ்தமென்று உணரவேண்டுமென மேல் உணர்த்த, அங்ஙனம் உணர்தற்கு அது நமக்கு என்ன செய்கின்றதென்பாரை நோக்கி இஃதுணர்த்தியதாகக் கொள்க.

துப்பு என்னும் சொல் உணவு, சுத்தம், வலிமை முதலிய பல பொருள்களையும் உணர்த்திவரும்.

துப்பார் = உண்பார். துப்பு ஆய துப்பு ஆக்கி = சுத்தமான உணவுகளை உளவாக்கி. துப்பு ஆயதும் = உணவாயதும்; என்றது தண்ணீராயும் உண்ணப்படுதலை. இதில் அளபெடை இசை நிறைத்து நின்றது.

துப்பார்க்கு என்ற இரண்டனுள் முன்னது உணவுப்பொருள்களை அமைத்துச் சுவைபெறச் சமைத்துண்போரெல்லாரையும் பொதுவாக உணர்த்தி நின்றது. பின்னது அவற்றை உண்கின்ற்ரைச் சிறப்பாகக் குறித்ததென்க.

துப்பு ஆய துப்பு ஆக்காமலே உதிர் சருகு கந்த மூலங்களை உண்டு நிற்கும் யோகிகளுக்கும், விலங்கினங்கள் முதலியவற்றிற்கும் நீர் துப்பாய் நிற்பதூஉம் காண்க.

மேல், மழையினாலேதான் உலகம் நிலைபெறுகின்றதென்றார். இதில், நிலையாய் நின்று உயிர்களுக்குப் பலவகையிலும் அது பயன்படுகின்றதென்கின்றார்.

உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி உதவி, அவற்றை உண்ணுங்கால் தானும் அவர்க்கு உணவாய் நிற்பதும் மழையே என்பதாம்.

மழை பலவகையானும் நின்று உயிர்களது பசியையும் தாகத்தையும் நீக்கி வருகின்றதென்பதும், ஒரு காலத்தில் சீதை தனி நீரையே தனது உணவாகக் கொண்டிருந்தாள் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

சீதை இலங்கையில் சிறைவாசஞ் செய்தபொழுது வேறு சிறந்த உணவுகளை உண்ணுமல் நீரையே பருகி உயிர் வாழ்ந்திருந்

தாள். இந்த வுண்மை, தூதுவந்த அனுமான்பால் அந்த அம்மை அருளியுள்ள திருமொழிகளால் இனிது புலனும். அவை "அனு மானே! இந்த இடத்தைவிட்டு யான் வேறெங்குஞ் செல்வதில்லை; தளர்கின்ற எனது அரிய உயிரைக் காக்கும்பொருட்டுச் சிறிது நீர் பருகுதற்காகச் சிற்சில சமயங்களில் இரகுவீரனது திருமேனியை யொத்திருக்கின்ற இதோ தோன்றுகின்ற நீர்நிலைக்கு மட்டும் செல் வேன்" என்பனவாம்.

தீர்விலேன் இது ஒருபகலும்; சிலை
வீரன்மேனியை மானும்இவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரும் ஆருயிர் காக்குந் துணிவிலை. (இராமாயணம்.)

நண்ணுவேன் என்றதனால் சிலைவீரனது மேனியையொத்த நீர் நிலையின் காட்சியால் சேடர்வு நீங்கி உயிர் நிலைத்தனர் என்பது மாம். ஆருயிரை நீரால் பேணி இத்திருமகள் அமர்ந்திருந்த உண் மைமையை யிஃதுணர்த்தி நிற்றல் காண்க. உயிர்களுக்கு நல்ல உணவு கனி உளவாக்கித் தருதலோடு தானும் இங்ஙனம் உண்ணப்பட்டு நீர் உதவி வருதலால் உலகிற்கு அமிழ்தமென அது நிலவியுள்ளது. "தப்பார்க்குத் தப்பாயதும் மழை" என்பதை உலகம்காண இவர் உணர்த்தி நின்றார்.

எங்கும் இறையருள்போல் எல்லாமாய் நின்றமழை
தங்குமுயிர் இன்பமுறத் தான்.

மழையினது அரிய உதவிகள் இதனால் கூறப்பட்டன.

---

13. தேசுமிகு கோசிகனும் செத்தநா யூனைபுன்னைக்
கூசாத தென்னே குமரேசா—மாசகன்ற
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று டற்றும் பசி.

இ—ள்.

குமரேசா! கோசிக முனிவரும் கடவுள் ஆணை என் கூசாபல் தின்னத் துணிந்தார்? எனின், விண் நின்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்துள் பசி நின்று உடற்றும் என்க.

உயர்ந்த தேவர்களும் உவந்து போற்றுமாறு தவ ஒளியால் சிறந்து நின்றாதலால் தேசுமிகு கோசிகன் என்றும். உம்மை சிறப்புணர நின்றது. கூசாதது என்னை? என்றது இழிந்த விலங்கும் உண்ண எண்ணுத அவ்வனவுனை ஞாணசீலனாகிய இவ்வுயர்ந்த வன் உண்ணத் துணிந்தமையை வியந்தென்க.

விண் என்றது மழையினை. ஆகாயத்தின் பெயர் அங்குள்ள மழையை உணர்த்தி நின்றமையின் இது, ஆகு பெயரென்க.

விண் நின்று பொய்ப்பின் = வானம் நிலையாகப் பெய்யாதாயின்; நின்று என்பது பொய்ப்பிற்கு அடையாய் நின்று அதன் தொடர்ச்சி நிலைமையை நிலைபெற விளக்கிற்று.

பருவங்கண்டு மழை பெய்யாமல் பெய்தது என்ற பெருக்கு இடையிடையே சிறிது பெய்யுமாயின் அது நில்லாது பொய்த்தாம்; யாதும் பெய்யாது ஆண்டுக்கணக்காக அறவே பொழியுமாயின் அது நின்று பொய்த்ததாம் என்க. இனி, இன்று என்று பிரித்து மழை இல்லை பாய்ப் பொய்க்குமாயின் எனவுங் கொள்ளலாம்.

விரிநீர் = கடல். விரிந்த நீர் என்னும் ஏது வான் வந்தது. மழைநீர் இல்வழி விரிநீரால் பயனில்லை யென்பது குறிப்பு.

மேல், உண்ண உணவும் பருகநீரும் மழை உதவும் என்றார்; இதில், அம்மழையாயின் உயிர்களெல்லாம் பசிநோயால் வருந்தும் என்கின்றார்.

மழை நிலையாகப் பெய்யாதாயின் விரிந்த நீரினையுடைய அகன்ற உலகத்தின்கண் பசி நிலைத்து உயிர்களை வருத்தும் என்பதாம்.

மழை நிலைத்து மறுத்தால் பசி நிலைத்து வருத்தும் என்பார்; "விண்ணின்று பொய்ப்பின் பசி நின்று உடற்றும்" என்றார்.

இவ்வுலகில் மழையில்லையாயின் சிறந்த முனிவர்களாயினும் பசிநோயால் வருந்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோசிகர்பால் உணரப்படும்.

கதை.

கோசிகர் என்பவர் காதி என்னும் மன்னனுடைய அருமைத் திருமகனார். கௌசிகர் மரபில் பிறந்தவராதலால் இவர் கோசிகர் எனப் பெற்றார். தவம் புரிந்து முனிவராயபின் இவருக்கு விசுவாமித்திரர் என்று பெயர். இவர் நிறைந்த அறிவும் சிறந்த வீரமும் உடையவர். மிக்க கீர்த்தியோடு அரசு புரிந்து வந்தார். ஒருநாள் வேட்டைக்குச் சென்றார். தவத்தின் பெருமையை வசிட்டரிடத்தில் நன்கு தெளிந்தார், அதனால் அரசைத் துறந்தார். அருந்தவஞ்செய்ய வனத்தில் புகுந்தார். கண்மூடி மௌனியாகி நீண்ட காலம் யோகத்திலிருந்து இவர் ஒருசமயம் விழித்தார். மழை இல்லாததடியால் உலகம் நிலைகுலைந்திருந்தது. பலவுயிர்களும் மடிந்து கிடந்தன, அக்கொடுங் காட்சிகளைக் கண்டார். தாமும் பெரும்பசியால் வருந்தினர். உணவுப்பொருள்களை நாடித் தேடினர். ஒன்றுந் தோன்றவில்லை. முனிவர் பலவுந்தேடி முடிவில் இறந்து கிடந்த ஒரு நாயின் பிணத்தைக் கண்டார். பசிக்கொடுமையால் அந்த ஈன ஊனையுந் தின்னத் துணிந்தார். உடனே இந்திரன் வந்து தடுத்து மழைவளம் பெருகச்செய்தான். அதன் பின் உலகம் தெளித்தது. உயிர்கள் பசிநோய்நீங்கி உளமிக மகிழ்ந்தன. மழை பொய்த்து நின்றபொழுது வருத்தநின்ற பசி அது பெய்தபின் ஓடிந்து போயதைத நினைந்து அமரரும் உவந்து நின்றனர். "விண்ணின்று பொய்ப்பின், விரிநீர் வியனுலகத்துள் பசி நின்று உடற்றும்" என்னும் உண்மையை உலகம் அன்று உணர்ந்து தெளிந்தது. இதனால், உற்றநோய் ஆற்றும் தவத்தினரும் பசிநோய் ஆற்றுது படைப்பர் என்பதும், தன்னையுடையான மானமுதலியவற்றை இழப்பித்து இழிவுறும்படி அது தூண்டிவிடும் என்பதும், இகழ்கின்ற மழை இன்மையானே நிகழும் என்பதும், தெளியப்படும்.

"புண்மாரம் புலைகடாப் புகையழற் பிரசந்தி

மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசி கூர்ய ஆற்றுவது காணேன்
திருத்த காயூன் றின்னுத லுறுவோன்,
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றே.” (மணிமேகலை.)

இது; தீவதிலகை என்னும் தெய்வமகள் சொல்லியது, மேற்குறித்த சரித உண்மை இதன் கண் விளங்கி நிற்றல் காண்க.

“குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி கூளியும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பணி யென்னும் பாவி.” (மணிமேகலை)

மானங் குலங்கல்வி வண்மை யறிவொழுக்கம்
தானம் தவமுயற்சி தாளாண்மை—தேனிற்
கசிவந்த சொல்லியர்பால் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். (நீதிவெண்பா)

இனைய அப் பசிக்கொடுமையை விளக்கி நிற்றலுணர்க.

வெய்ய பசிநோயால் வெம்பியுயிர் வீயுமே
செய்யமழை பெய்யா தெனின்.

மழை மறுத்தால் பசிவருத்தும் என்பது இதனுல் கூறப் பட்டது.

---

14. எர் நிலங்கள் வைத்திருந்தும் எனுழவு செய்யவில்லை
கூரருள்சேர் நல்லான் குமரேசா—சீர்நிறைந்த
எரின் உழாஅர் உழுவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். (சு)

இ—ள்.

குமரேசா! நல்லான் என்பவர் எக்கினையும் நிலங்களையும், வைத்திருந்தும் என் உழுதலைச் செய்யவில்லை? எனின், புயல் என்

னும் வாரி வழங்குன்றினால் உழவர்கள் எரின் உழா அர்என்க.

இதுமழையில்லையானால் உழவில்லை யென்கின்றது.

புயல் = மழை. வாரி = வருவாய். எல்லா வருவாய்களுக்கும் மழையே காரணமாகுமாதலால் அதன் தலைமை தோன்றப் புயல் என்னும் வாரி என்றார்.

மழையென்னும் வருவாய் தன் வளங்குன்றினால் இவ்வுலகில் உழவர்கள் ஏரால் உழுதலைச் செய்யார் என்பதாம்.

பசி நோய்க்கு மருந்தாகிய உணவுப்பொருள்களை உளவாக்குதற்கு நீர் நிலம் ஏர் எரு முதலிய உபகரணங்கள் பல வேண்டும் ஆயினும் அவற்றுள் முக்கியமானது நீர் ஆதலால் அம்மழை யில்லையானால் பசி உண்டாம் என்றும், புன்னுவதில் அம்மழை யில்லையானால் பசி உண்டாம் என்றும் கூறி இதில், அப்பசியுண்மைக்குரிய வகை கூறினார்.

மழையில்லையானால் உழவர்தங்கள் நிலங்களை உழார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கல்லான்பால் உணரப்படும்.

கதை.

கல்லான் என்பவர் இற்றைக்கு ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன்னர் மதுரையிலிருந்தவர். வேளாள குலத்திற் பிறந்தவர். விசித்த நிலங்களும் நிறைந்த செல்வமும் உடையவர். மிக்க வள்ளற் குணம் வாய்ந்தவர். இறைவன்பால் என்றும் பெருகிய அன்பினர்.

"பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனிதவேற்றுக்
கொடியார்க்கு வேதக்குடுமிக் கிணைபான கூடற்

படியார்க்குஞ் சீர்த்திப்பதி ஏருழவோருள் நல்லான்;
அடியார்க்கு நல்லான்; அறத்திற்கும் புகழ்க்கும் நல்லான். (1)

அனையான் அறத்திற்கருள் போன்றவள்; ஆன்றகற்பின்
மனையாள்; மரபின் வழுவாத தருபசீலன்;
எனையாரு நன்குமதிக்க இருக்கு நீராள்;
தனையாள் பதிக்குக் கதிக்குத் தனிச்சார்பு போல்வாள். (2)

பல்லே ருழவின் தொழில் பூண்டு பயன்கள் கொள்வான்;
வில்லே ருழவர் கடன் கொண்டு மிகுந்தவெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வம் இயற்றியேய்ந்த
அல்லே லறு கண்டன் அடியாரை அருத்தும் நீரான்" (3)

என்றபடி யாவரும் புகழ்ந்து போற்ற ஏர் வளத்தோடு சீர்பல எய்தி இவர் விளங்கி யிருந்தார். தமது செல்வத்தைப் பலர்க்கும் பகுத்து உதவி செய்து வந்தார். சிறப்பாகச் சிவனடியார்க்குச் செய்தார். இங்ஙனம் வாழ்ந்துவரும் நாளில் ஒருகாலத்தில் மழை வளங் குன்றினது. அதனல் இவர் நிலவளங் குறைந்தது. பலர் கள் வைத்திருந்தும் உழுதலைச் செய்யமுடியவில்லை. வறுமை கூர்ந்தார். வருந்தினர். அதன்பின் சோமசுந்தரப் பெருமானிடம் போய் முறையிட்டார். அப்பெருமான் அருளால் இவர் உலவாக் கோட்டை பெற்றார், உவந்தார். புயல் என்னும் வாரி வளங்குன் றினல் உழவர் ஏரின் உழார் என்னும் உண்மையை உலகம் காண இவர் உணர்த்தி நின்றார். (விரிவைத் திருவிளையாடலில் காண்க.)

வான்மாறி நின்றக்கால் மண்ணுலகில் யாவுமே
கான்மாறி வீழுங் கலுழ்ந்து.

வாரி வளங்குன்றினல் ஏர் வளங் குன்றும் என்பது இதனல் கூறப்பட்டது.

---

15. உற்றமழை பெய்ய உரோமபதன் கேடன்று
கொற்றமுற்றன் என்னே குமரேசா—வற்றிக்
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
யெடுப்பதூஉம் எல்லா மழை. (நி)

இ—ள்.

குமரேசா! மழைபின்மையால் கேடுற்றிருந்த உரோம பதன் என்னும் அரசன் அது பெய்தவுடன் கேடுநீங்கி என் மேன்

மைபுற்றான்? எனின், கெடுப்பதும், கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதும் எல்லாம் மழை என்க.

சார்வு = துணை. மற்று ஆங்கே = மறுபடியும் அப்படியே. என்றது முன்பு பெய்யாது கெடுத்ததுபோல் பின்பு பெய்து எடுக்கும் என்றவாறு.

பெய்யாமல் நின்று கெடுப்பதும்; அங்ஙனம் கெட்டார்க்குத் துணையாய் நின்று பெய்து எடுப்பதுமாகிய எல்லாம் வல்லது மழை என்பதாம்.

முயற்சியால் ஆக்கமும், மடியால் கேடும் ஒருவனுக்கு வரும் எனினும், அம்முயற்சியும், மடியும் மழையினது உண்மை இன்மைகளால் நிலைபெறுதலின் மழையே ஆக்கமும் கேடும் ஆக்கவல்லது என்றார்.

மழைபெய்யாமல் நின்று உலகத்தைத் தாழ்விக்கும் என்பதும், பெய்து அதனை வாழ்விக்கும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை உரோமபதன்பால் உணரப்படும்.

கதை.

உரோமபதன் என்பவன் உத்தானபாதன் என்னும் அரசன் புதல்வன். தசரதன் காலத்தவன். வீரமும் அறிவும் மிகவும் வாய்ந்தவன். ஒரு குடைநிழலில் இருநிலம் புரந்தவன். ஒருகாலத்தில் தன் நாட்டில் மழைபெய்யாமல் நின்றது. அதனால் இவன் பெருங்கேடடைந்தான். மழைவழங் கருதிப் பலவகைத் தானங்கள் செய்தான். அவற்றாலும் பயனொன்றுங் கண்டிலன். மிகச் சுருங்கி நின்று முடிவில் கல்லக்கோட்டு முனிவரைத் தனது நாட்டுக்குக் கொண்டுவந்தான். அம்மாதவன் வருகையால் மழைவளஞ்சுரந்தது. மாநிலஞ் செழித்தது. கேடு நீங்கிற்று. நாடும் நகரமும் நலமுறவாழ்ந்தன. மன்னுயிர்காக்கும் இம்மன்னனும் மகிழ்ந்தனன். கெடுக்கவும், அவ்வாறே எடுக்கவும் மழைவல்லதென்பதை உலகம்காண இவன் உணர்த்தி நின்றனன். விரிவை இராமாயணத்தில் காண்க.

புத்தானகொடுவினையோ டருந்துயரம் போயொழிப்பப் புவனந்தாங்கும்
சத்தானகுணமுடையான் தயையிலெடு தண்ணளியின் சாலேபோல்வான்
எத்தானும்வலற்கரியான் மனுகுலத்தே வந்துதித்தோன் இலங்குமௌலி
உத்தானபாதன்அருள் உரோமபதன் என்றுளன் இவ்வுலகை யாள்வான்.

அன்னவன்றான் புரந்தளிக்குந் திருநாட்டில் நெடுங்காலமளவதாக
மின்னியெழுமுகிலின்றி வெந்துயரம் பெருகுதலும் வேதநன்னூல்
மன்னுமுனிவரையயழைத்து மாதானம் கொடுக்கினும்வான் வழங்காதாகப்
பின்னுமுனிவரர்க்கேட்பக்கலக்கோட்டு முனிவரின்வான் பிலிற்றுமென்றார்.

வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடிவெனக் கருகி வான்மிசைச்
சுளசுள எனமழைத் தாரை சான்றன
குளமெனு நதிகள்தங் குறைகள் தீரவே. (3)

பெரும்புனல் நதிகளும் குளனும் பெட்பறக்
கரும்பொடு செந்நெலும் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் சகனமீ திடைவிடா தெழுந்
தரும்புனல் சொரிந்தபோ தரசுணர்ந்தனன். (இராமாயணம்) (4)

மேற்குறித்த வுண்மைகள் இவற்றால் இனிதுணரலாகும்.

ஆதி முதல்வன் அழித்தருளல் போன்மழையும்
மோதி யருளு முனைந்து.

மழையினது வன்மையும் நன்மையும் இதனால் கூறப்பட்டன.

---

16. பண்டோர் பசும்புல்லும் பாரா திடைக்காடர்
கொண்டார் வரகேன் குமரேசா—கண்ட
விசும்பிற் றுளிவீழி னல்லாண்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. (சு)

இ—ள்.

குமரேசா! இடைக்காடர் ஒரு பசியபுல்லையும் காணுமல் ஏன் வரகையே உணவாகக் கொண்டார்? எனின், விசும்பில் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே பசும்புல் தலைகாண்பு அரிதாதலன்க.

விசும்பு = மேகம். ஆகாயத்தைக் குறித்துவருஞ் இது, ஆகு பெயராய் இங்கு மேகத்தையுணர்த்தி நின்றது.

மேகத்தினின்று துளி வீழ்ந்தாலன்றி இவ்வுலகத்தில் பசிய புல்லின் தலையையும் காண்டல் அரிது என்பதாம்.

பசுமை புல்லின் இளமை தோன்றநின்றது. முளைகூட வெளிக்கிளம்பா தென்றபடி. தலை = நுனி.

விசும்பு தூளியை வீழ்த்திலுல் நிலம் பசும்புல்லைக் காட்டும்; இல்லையாலுல் யாதும் காட்டாதென்றவாறு. புல்லைக் குறித்தது பரிசத்தைதமட்டும் அறியும் அதன் கீழ்நல்ல கருதி.

ஓர்அறிவுயிரும் தோன்றுதனவே மற்றைய உயிர்களின்தோற்றம் சொல்லவேண்டாவாயிற்று.

"புல்லும் மரனும் ஓரறி வினவே" (தொல்காப்பியம்)

மழைபில்லையாலுல் இவ்வுலகில் ஓரறிவுயிரும் உண்டாகாதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இடைக்காடர்பால் உணரப்படும்.

கதை.

இடைக்காடர் என்பவர் கடைச்சங்க காலத்தில் இருந்த ஒரு பெரியவர். சோதிடத்தில் சிறந்தவர். தத்துவநூல்கள் முற்றவுங் கற்றவர். சித்திகள்பல கைவரப்பெற்றவர். நல்ல வுத்தமர். இவர் ஒருகாலத்தில் பன்னிருவருடங்கள் வரையும் இந்நில வுலகத்தில் மழை பெய்யாதென்பதைத் தமது நுண்ணறிவால் முன்னுணர்ந்தார். அதனால் பின்வரும் தமது வாழ்வுக்கு வரகைச் சேகரித்து வீரகுடன் லைத்தார். காயசித்தியால் வாழ்ந்தார். மழையின்மையால் உயிர்கள்பலவும் அழிவுறலாயின. உலகமெங்கும் நிலுகுநிலை நிருந்தது. அப்பஞ்சகாலத்தில் ஒரு பசும்புல்லையுமை இவர் காண்பதரிதாயிருந்தது. "விசும்பிற்றுளிவீழின் அல்லால், மற்றது அங்கே பசும்புற்றலைகாண்பரிது" என்னும் உண்மையை உலகம் காண இவர் உணர்த்திநின்றார்.

"மன்னியசீர் இடைக்காடன் மாநிலத்திற் பாவுத்தால்
பன்னிரண்டாண் டளவிலொரு பஞ்சம்வரும் விதந்தேதறிக்
கன்னிடத்தாட் டினங்களுக்குச் சூழுத்திரத்தின் தண்ணீருடம்
உன்னிவளர்உதிரியிலை உணவும் உணும்படி பழக்கி. (க)

வரகொடுமண்கலந்துசுவர் வைத்தொரு கோட்டையுஞ் சமைத்திட்
டுரமொடுவாழ்ந் தாட்டினங்கள் உரைந்துரைந்து சுவரடியில்
தரவருநல் லரிகியினைத் தனிப்பாலில் அட்டருந்திக்
காவில்சிவ யோகத்தாற் கண்துயின்றுங் களிகூர்ந்தான்." (உ)

(புலவர்புராணம்.)

மேற்குறித்தவுண்மை இதன்கண்ணும் விளங்கநிற்றல்காண்க.

நின்று மழைமறுத்தால் நீளுலகில் மன்னுயிர்கள்
பொன்றும் ஒருங்கே பொரிந்து.

நிலம் உளதாயினும் மழையிலதாயின் அதனற் பயனில்லை யென்பது இதனல் கூறப்பட்டது.

---

17. மண்டுகடல் பெற்றிருந்தும் வான்போயேன் பண்டுமழை
கொண்டுவந்தார் மூவர் குமரேசா—கொண்ட
நெடுங்கடலும் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். (எ)

இ—ள்.

குமரேசா! மூவர் கடல்பெற்றிருந்தும் வான்போய் என் பண்டு மழையைக் கொண்டுவந்தார்? எனின், தடிந்து எழிலிதான் நல்காதாகிவிடின், நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் என்க.

மூவர் என்றது சேர சோழ பாண்டியர் என்னும் மூவரசரை.

எழிலி = மேகம். நீர்மை = தன்மை. நல்கல் = கொடுத்தல்; ஈண்டுப் பெய்தல்லென்க. தடிந்து = முகந்து; நீரைவாரி என்றவாறு.

மேகமானது கடல்நீரைமொண்டு நிலத்தின்கட்பெய்யவில்லையானல் அக்கடலும் தன் தன்மைகுன்றும் என்பதாம்.

நிலத்துக்கே அன்றிக் கடலுக்கும் மழைவேண்டும் என்றபடி

மழையில்லையானல் நீர் நிறைந்த கடலிருந்தும் பயன் இல்லை என்பது கருத்து. இவ்வுண்மை மூவேந்தர்பாலும் ஒருகாலத்தில் காணப்பட்டது.

கதை.

சேரநாடு சோழநாடு பாண்டிநாடு என்னும் இம்மூன்று நாடுகளும் ஒருகாலத்தில் மழைவளங்குன்றி வறுமைமிக்கிருந்தன. அதனல் துயர்பல தொடர்ந்தன. உயிர்கள் பல மாண்டன. அந்நாட்டு அரசர் மூவருமம் இக்குறையை நினைந்தார். உளமிகநொந்தார். ஒன்றுசேர்ந்தார். நின்று சூழ்ந்தார். பின்பு அகத்தியமுனிவரிடஞ் சென்றார். உற்றதை யுரைத்தார். அம்முனிவர்பெரு

மானும் கோள்கள் நிலைமாறியுள்ளமையைத் தெளிந்து, நீவிர் மூவ ரும் இந்திரனெய்தி மழைவளங்கேண்மின் என்று பணித்தார். விண்ணுலகம் போதற்குரிய விரதமந்திரங்களோடும் உபதேசித்தார். இவரும் அவற்றின்படி தொடந்து வான்புகுந்தார். வானவர்கோனைக் கண்டார். மகிழ்ந்தார். அவ் அமரர்கோனும் இவர்களோடாதரித்து வேண்டிய மழைவரம் விருப்புடன் தந்தான். விடைபெற்றிவரும் விரைவுடன் மீண்டார். மழை பெய்தது. தம்முடைய நாடுகள் நன்னிலையுற்றன. மன்னுயிர்யாவும் மகிழ்ச்சிமீக் கூர்ந்தன. கடல் நீர் இருந்தும் மழைநீர்க்காக இம்மன்னர் மூவரும் வானகம் புகுந்தனர். அதன்பின் இம் மூந்நாடுகளும் நன்னாடுகளாய் நன்குசெழித்தன. "தடிந்தெழிலி தான் நல்காதாகி விடின், நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்" என்னும் உண்மையை உலகம் அன்று நன்கு உணர்ந்தது.

"கோமகன் நிகழ்நாளில் கோள்நிலை பிழைத்துக் கொண்மூ மாமழைமறப்பப் பைங்கூழ் வறந்துபுற்றலைகள் தீர்ந்து காமருநாடுமூன்றுங் கையற வெய்த மன்னர் காமதுதீர்வுநோக்கித் தமிழ்முனி யிருக்கைசார்ந்தார். (1)

முனிவனையடைந்து வேந்தர் மூவருந் தங்கள்நாட்டில் பனிவருமாரியின்றி வறந்தமை பகர மேமருக் குனிவருசிலையார்க் கன்பன் கோள்நிலை குறித்துநோக்கி இனிவருமாரியில்லை யாதிரைல் என்னிற் கேண்மின். (2)

காய்சினவெய்யோன் சேயோன் மூன்செலக் கதிர்கால்வெள்ளித் தேசிகன்பின்புசென்று தடக்கும்இச் செயலான் மூந்நீர்த் தூசினஉலகிற் பன்னீ ராண்டுவான் சுரந்துமென்று பேசினநூல்கள்; மாரிபெய்விப்போற் சென்று கேண்மின்.

(திருவிளையாடல்.)

மேற்குறித்த வுண்மை இதன்கண்ணும் விளங்குதல் காண்க.

வாழ்வித்த மாமழையே மன்னுயிர்கள் இன்னலுறத்
தாழ்வித்து நிற்குந் தணந்து.

மழையில்லையாரல் கடலும் நிலைகுலையுமென்பது இதனால் கூறப்பட்டது.

18. வென்றி மதுரையில்முன் மெய்சிறப்பும் பூசனையும்
குன்றிநின்ற தென்னே குமரேசா—என்றும்
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வாழ்நர்க்கு மீண்டு. (அ)

இ—ள்.

குமரேசா! முன்னம் மழையில்லாதபொழுது மதுரையில் பூசையும் சிறப்பும் என் குன்றிநின்றன? எனின், வானம் வறக்கு மேல் வாழ்நர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாதென்க.

சிறப்பு = திருவிழா. செல்லுதல் = நடத்தல். வறத்தல் = பெய்யாது புலர்தல். ஈண்டு = இவ்வுலகில். நித்தலும் செய்துவந்த வழிபாடுகளினேர்ந்த குற்றங் குறைகள் தீர முற்றிய நெறியோடு தெய்வம்பராவிச் சிறப்புச்செய்தலின் திருவிழா சிறப்புளனின்றது.

மழை பொழியாதாயின் இவ் வுலகத்தாரால் தேவர்கட்குச் செய்யப்படும் விழவும் பூசையும் நடவா என்பதாம்

தேவர்க்கும் என்பதில் உம்மை சிறப்புணர நின்றது. ஆலய வழிபாடுகள் குன்றும் என்றபடி.

மழை பெய்யவில்லையானால் தெய்வ வழிபாடுமுதலிய மெய்யறங்கள் யாதும் செய்யமுடியாதென்பது கருத்து. இவ்வுண்மை நெடுஞ்செழியன் காலத்தில் மதுரையில் காணப்பட்டது.

கதை.

கண்ணகி காலத்தில் மதுரையிலிருந்து அரசுபுரிந்த நெடுஞ்செழியன் என்னும் அரசர்பெருமான் கோவலனை ஆராயாமல் கொல்வித்தான். அத்தீவினையால் அவனது நாட்டில் மழை பெய்யவில்லை. அதனால் நகரிலும் நாட்டிலும் தயர்பல நிறைந்தன. வறுமையும் நோயும் பெருகி வளர்ந்தன. அக்காலத்தில் தெய்வங்கட்குச் செய்யக்கக சிறப்பும் பூசையும் செல்லாவாயின. வளமலி மதுரையும் பொலிவிழந் திருந்தது. இது நீங்கும் பொருட்டு அத்தீவினைகுப் பிராயச்சித்தம் ஒன்று செய்தார். அதன்பின் இங்கு மழைபெய்தது. விழவுமுதலிய வளங்களெங்கும் விளங்கி நின்றன. தெய்வ வழிபாடுகள் சிறந்து தோன்றின. பூசையும் சிறப்பும் பொலிவுற நடந்தன. வானம் வறந்திருந்தபோது இறந்திருந்த விழவுமுதலிய

நலங்களெல்லாம் மழைபெய்தபின்பு செழித்து நின்றன. வானம் வறக்குமேல் வாழ்வோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது என்னுடம் உண்மை அன்று தெளிய நின்றது.

விண்பொய்த்து நின்றக்கால் மெய்யறங்க ளாவும்போய்
மண்பொய்த்து நிற்கு மருண்டு.

மழையில்லையாலால் விழவும் பூசையும் உளவாகா என்பது இதனால் கூறப்பட்டது.

---

19. பண்டுபலர் சோன்பிழந்தார் பாண்டியனும் பாவலரைக்
கொண்டிலன்என் விட்டான் குமரேசா—கொண்டதொரு
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (க)

குமரேசா! பண்டொருகாலத்தில் பலர் தவத்தை துறந்தனர்; பாண்டியனும் புலவர்களைப் போற்றுமல் என்னைகவிட்டான்? எனின், வானம் வழங்காது எனின், தானம் தவம் இரண்டும் தங்கா என்க.

உம்மை அவனது வள்ளற்குணத்தை விளக்கி நின்றது. பலர் என்றது கௌதமர் முதலிய மாதவர்களை.

வானம் வழங்குதல் = மழைபெய்தல்.

வியன் உலகம் = அகன்ற உலகம். தங்குதல் = நிலைத்தல்.

மேல், மழையில்லையாலால் விழவும் பூசையும் கடவா என்றார்; இதில், தானமும் தவமும் இலவாம் என்கின்றார்.

மழையில்லையாலால் நெல் மணி முதலிய பொருள்கள் இவ்வுலகில் இலவாய் முடியும்; அதனால் ஒருபொருளை ஒருவருக்குக் கொடுத்தலாகிய தானம் தங்காதாயிற்று. எத்தகைய தவசிகளாயினும் உயிர் உடலில் நிலைத்திருத்தற்பொருட்டு உணவினும் நீரினும் சிறிது உட்கொள்ளல்வேண்டும்; அவ்வுணவும் நீரும் மழையில்லையாலால் தவம் தங்காதாயிற்று.

மழைபெய்யாதாயின் இவ்வுலகில் தானமும் தவமும் ஆகிய இரண்டறங்களும் நிலையா என்பதாம். தானம் நிலையாமை பாண்டியன்பாலும், தவம் நிலையாமை கௌதமர் முதலிய மாதவர்பாலும் காணப்படும்.

TL 4.0 T E+D43

கதை

இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன்னர் மதுரையம் பதியில் அரசர் பெருமானகிய பாண்டியன் ஒருவன் இருந்தான். இவன் அருந்திறலும் பெரும் புலமையும் ஒருங்கு நிறைந்தவன். பல்லாயிரம் புலவர்களை ஒருங்குசேர்த்து ஆதரித்துவந்தான். வரு நாளில் அங்கு மழைபெய்யவில்லை. புலவர்களைப்பாதுகாக்க முடி யாமல் அரசன் வருந்தினன். ஒருநாள் அவரை அழைத்தான். புலவீர்! "என் நாடு நலமடைந்தபின் வம்மின்; இப்பொழுது செழி த்த நாட்டைச்சேர்மின்" என்று அவரனைவரையும் அனுப்பினன். பெருவள்ளலாயிருந்தும் மழைபில்லாமையால் அவ் அறிஞரைப் போற்றமுடியாமலும், யாதொரு தானமும் செய்யமுடியாமலும் இம்மன்னர் பெருந்தகை மறுகியிருந்தான். வானம் வழங்காதெ னின் தானம் தங்கா தென்பதை உலகம் இவன்பால் உணர்ந்து நின்றது. (இஃது இறையனரில் உள்ளது.)

கதை 2.

கௌதமர் என்பவர் அநேகமுனிவர்களுடன் தென் நிசையில் பிரமகிரியில் அருந்தவம் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் பலவருடங்களாக மழைபெய்யாது பொய்த்தது. உயிர்கள் பல மாண்டன. முனிவர்பலரும் தவநிலை குலைந்தார். பதைத்தார். பல திசைகளிலும் பிரிந்தகன்றார். கௌதமர்மட்டும் கலங்காமல் நின் றார். வருணனைக் கருதினர். இவரது தவமகிமையால் அவன் வந் தான். அவன்பால் இவர் மழைவேண்டினர். அவன் என்றுங் குன்றாத ஒரு நீர் நிலையை அருளிப்போயினன். அதனால் இவர் ஒழுக்கம்பேணி விழுப்பமொடு நின்று கனிப்புற்று வாழ்ந்தார். வானம் வழங்கினலென்ன? தவம் தங்காதென்பதை உலகம் கான இவர் உணர்த்தி நின்றார். இதன்விளைவு ஞானசங்கிதையில் காண்க.

வானம் வறந்தால் மதியழிந்து மன்னுயிர்கள்
தானம் மறந்து விடும்.

தானமும் தவமும் உலகவாழ்விற்கு மழைதரும் காரணம் என்பது இதனால் கூறப்பட்டது.

20. வானீர் இலாமையினால் மாதவருந் அத்திரிப்போர்க்
கோனுமேன் றொந்தார் குமரேசா — ஊனமிலா
நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. (20)

இ — ள்.

குமரேசா! அத்திரிமுனிவருந் மற்றைய மாதவருந் வான் நீர் இலாமையால் என் வருந்தினர்? எனின், உலகு நீர் இன்று அமையாதெனின், வான் இன்றி ஒழுக்கு அமையா தென்க.

எவ்வகைப்பட்ட சிறப்பினை யுடையார்க்கும் என்பார், யார் யார்க்கும் என்றார். முற்றத்துறந்த முனிவரரும் நீர் இல்லாமல் உலகில் ஒரு கருமமும் செய்யமுடியா தென்பதாம்.

நீரையின்றி உலகியல் நடவாதெனின் எத்தகையோர்க்கும் மழையில்லையானால் ஒழுக்கம் அமையா தென்பதாம்.

மழையில்லையானால் இவ்வுலகில் நீர் இல்லையாம்; அவ்வின்மை யால் எல்லா நன்மைகளும் பொன்றுமென்றபடி.

உலகியல் ஒழுங்காக நடைபெறுதற்கு நீரே காரணமென்பதும், அந்நீரும் மழையிலேதான் உளதாகின்ற தென்பதும், இம் மழையில்வழி யெத்தகையோர்க்கும் எதுவும் செய்ய முடியாதென் பதும் இதில் காட்டப்பட்டன. இவ்வுண்மை அத்திரி முனிவர் பால் காணப்படும்.

கதை.

முன்னொருகாலத்தில் காமதம் என்னும் வனத்தில் அத்திரி முனிவர் அருந்தவஞ் செய்து கொண்டிருந்தார். அவ்வனம் பசிய இலைகளையும் இனிய கனிகளையுமுடைய பலவகை மரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இளஞ்செடிகளும் செழுங் கொடிகளும் அதில் நிறைந்திருந்தன. விழுமிய முனிவர் பலர் சூழுமியிருந்தனர். இங்ஙனம் இருந்துவருநாளில் பலவருடங்களாக உலகில் மழைபெய்யாது நின்றது. உயிர்கள்பலவும் மறுகிமாண்டன. புல் மரமெல்லாம் பொரிந்து கரிந்தன. சூழுமிய முனிவரும் குலைந்து நடுங்கினர். ஐம்பத்துமூன்று வருடம் யோகத்திலிருந்த அத்திரி முனிவரும் தத்தளித்தார். விழித்தார். நீர் இன்மையை நினைந்தார்.

நெஞ்சுருகினர். சில வருடங்கள் கழிந்தபின் இறைவனருளால் மழை பெய்தது. அதனல் அளவில் இன்பம் அடைந்தார். உலகியலும் நலமுற நடந்தது. பொருளும் இன்பமும் பொருந்தி வளர்ந்தன. இதன் விரிவு சிவமகாபுராணத்தில் காணப்படும்.

உயிரின்றேல் நின்ற உடம்பென்னும் அற்றே
உயர்மழை இன்றேல் உலகு.

எல்லாவற்றிற்கும் மழையே காரணம் என்பது இதனல் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

மழை அமிழ்தம்போல்வது. அது பலவகையிலும் உயிர்களுக்கு உதவி புரிகின்றது. மழை பெய்யாது மறுத்தால் பசி உயிர்களை வருத்தும். மழைபொழியாதாயின் உலகில் உழவு தொழில்கள் நடவா. மழையே ஆக்கமும் கேடும் ஆக்கவல்லது. அஃதில்லையாளல் உலகில் ஓரறிவுயிரும் இல்லை. மழை நீர் இன்றேல் கடல் நீரும் தண்ணியல்குன்றும். மழைபொழியாதாயின் விழவும் பூசையும் நடவா. அஃதில்லையாளல் தானமும் தவமும் இல்லை. அஃதால் எதாளல் உலகியலும், உயிரொழுக்கங்களும் நன்கு நடைபெறும்.

3-ம் அதிகாரம் நீத்தார் பெருமை.

அஃதாவது துறந்தாரது பெருமை. இறைவன் அருள்வழியொழுகி மழைபோல் எவர்க்கும் இனிய நீராய் நின்று என்றும் உலகிற்கு இவர் இதஞ்செய்து வருவர் ஆதலால் அதன்பின் இது வைக்கப் பட்டது. மழை உலகினை வளம்பெறச் செய்யும்; இவர் உணர்வை உரம்பெறச்செய்வர் என்க.

"நீத்தாரைப் போற்றுதூஉம் நீத்தாரைப் போற்றுதூஉம்
நேத்திர மென்ன உலகை நெறிநிறீஇ
மூத்த அறிவினு னூற்பொருள் முற்காட்டி-
ஆத்தனையுங் காட்டிவிட லான்" எனவும், "மழைபோலும் தவத்திலார் இவ்வழியில்லை" எனவும், "எல்லாரொருவ ருளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யும் மழை" எனவும் வருவன எண்ணிடண்ணற்குரியன.

21. மண்டுபுகழ் மாணிக்க வாசகர்சீ ரைப்பனுவல்
கொண்டுபுகல் வானேன் குமரேசா—கொண்ட
ஒழுக்கத்து நீத்தார். பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. (ந)

குமரேசா! மூற்றத்துறந்த மாணிக்கவாசகரது பெருமையை நூல்கள் என் மகிழ்வுகொண்டு புகல்கின்றன எனின், ஒழுக்கத்துநீத்தார்பெருமை பனுவல்துணிவு விழுப்பத்து வேண்டும்என்க.

இது, துறந்தவரே எவரினும் சிறந்தவரென்கின்றது.

மண்டுபுகழ் என்றது மிகுந்த கீர்த்தியால் எங்கும் சிறந்துள்ளமை கருதி. மண்டுதல் = மிகுதல், நிறைதல். பனுவல் கொண்டு புகல் என்றது "நலமலி வாதவூர் நல்லிசைப்புலவ, மனநின்றுருக்கு மதுர வாசக, கலங்குறு புலனேறி விலங்குறு வீர" என்பனவாக நூலோர் பலரும் இவரது பெருமையை மேலாகமதித்துப் போற்றுதல் கருதி என்க. கொண்ட என்றது கத்தமக்குரித்தாக வைத்துகொண்ட என்றவாறு.

நீத்தார் = துறந்தவர். அஃதாவது அகம் புறம் என்னும் இருவகைப் பற்றுக்களையும் அறவே விடுத்தவர். பனுவல்துணிவு = நூல்களின்முடிவு. விழுப்பத்து வேண்டும் = மேன்மையாக விரும்பும். தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே வழுவாது நின்று துறந்தாரது பெருமையை நூல்களின் துணிவு விழுமிதாக விரும்பும் என்பதாம்.

உறுதி நூல்களைச் செய்யும் அறிவுடையோரெல்லாரும் துறந்தவர்களது பெருமையையே எவற்றுள்ளும் மிகச் சிறந்தது என்று புகழ்ந்து போற்றிக்கொள்வர் என்பார் பனுவல் துணிவு விழுப்பத்து வேண்டும் என்றார். விழுப்பம் = சிறப்பு, மேன்மை.

உயர்ந்தோரெவரும் விரும்பிப் போற்றுதற்குரிய பெருமை துறந்தார்க்கே யுண்டாம் என்பது கருத்து.

ஒழுக்கமுடையராய் நின்று துறந்தோரே பெரியர் என்பதும் அவரது பெருமையை எல்லா நூல்களும் விழுமிதாக விரும்பும் என்

பதும் இதில் உணர்த்தப்பட்டன. ஏவுண்ணை மாணிக்கவாசகர் பால் உணரப்படும்.

கதை.

மாணிக்கவாசக சுவாமிகள் ஈசுவரமய குரவர் நால்வருள் ஒருவர். பாண்டிநாட்டிலே திருவாதவூரிலே அந்தணர் குலத்திலே அமாத்தியர் மரபிலே இவர் அவதரித்தார். இவருடைய தாயார் சிவஞானவதியார். தந்தையார் சம்புபாதாசிரியர். இளமையிலேயே வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங்கள் முதலிய பலநூல்களையும் இவர் வழுவறக்கற்றார். நிறைந்த அறிவும் சிறந்த ஒழுக்கமும் பெற்றார். அக்காலத்தில் மதுரையிலிருந்து அரசபுரிந்துவந்த அரிமர்த்தன பாண்டியனுக்கு இவர் அமைச்சராய் அமர்ந்தார். அவ் அரசன் இவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டமும் தந்து சீர்கள் பலவுஞ் செய்தான். மதிநுட்பத்தோடு நின்று அவன் ஆட்சியை இவர் மாட்சிபெற நடாத்திவந்தார். இவரது பெருங்குணங்களைக்கண்டு அம்மன்னன் மகிழ்ந்து புகழ்ந்தான். அன்பு மிகுந்தான். ஆதரித்து வந்தான். ஆயினும், இவர் இம்மை மறுமையின்பங்களை வெறுத்துப் பேரின்பத்தையே நாடினர். ஒழுக்க நெறியில் நின்று வழுவாமல் ஒழுகினர். பின்பு துறவுற்றார். மெய்ப்புணர்வு பெற்றார். இருவகைப் பற்றுக்களையும் இகந்தார். இறைவன் திருவருளை யெப்தி யின்புற்று நின்றார். இவ்வண்ணம்,

"சுற்றமுஞ் சுடர்பும் நீத்தேதம்; துன்பமும் இன்பும் அற்றேறம்; வெற்றுடல் மானந்தீர்ந்தேதம்; வெறுக்கைமேல் வெறுக்கைவைத் தேதம்; செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேதம்; தீவினை இரண்டுந் தீர்ந்தேதம்; கற்றைவார் சடையான் கோலங் காட்டியாட்கொண்ட அன்றே."

என்ற இவர் திருவாக்கால் நன்று தெளிவாம். வெறுக்கை = பொருள். இங்ஙனம் துறந்துநின்ற இவரது பெருமையைக் கச்சியப்பசிவாசிரியர், பரஞ்சோதி முனிவர், சிவப்பிரகாசர் முதலிய சிறந்த நூலாசிரிய ரெல்லாரும் தம் நூல்களில் வியந்து புகழ்ந்து விருப்பிப்போற்றியுள்ளார். திருவாத வூர்ப்புராணமுதலிய பலநூல்களும் இவரது பெருமையை விழுமிதாக விருப்பிப் பாடுகின்றன. ஒழுக்கத்து நீத்தார் பெருமையை நாற்கள்யாவும் மிகமேலாக விருப்பிநிற்றும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து நின்றது.

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக் கடல்
முகந்துல குவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீர் ஓழுகி
ஓதுவார் மனமெனும் ஓண்குளம் புகுந்து
நாவெனு மதகில் நடந்து, கேட்போர்
செவியெனு மடைபயிற் செவ்விதிற் செல்லா
உளமெனு நிலம்புக வூன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே.
(நால்வர் நான்மணிமாலை.)

மழைபோல் நின்று இவர் உலகிற்கு உதவியுள்ள தன்மையை இஃதுணர்த்தி நிற்றல் காண்க.

மாமணிசேர் நூல்போல் வனப்பாம் உயர்ந்தார்தங்
காமருசீர் கூறுநூல் காண்.

நீத்தார் பெருமையையே நூல்கள் மேன்மையாக விரும்பும் என்பது இதனால் கூறப்பட்டது.

22. பண்டு கடல்பருகிப் பார்சமன்செய் மாதவன்சீர்
கொண்டதுணை யென்னே குமரேசா—கண்டு
துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. (உ)

இ—ள்.

குமரேசா! கடலைக்குடித்து இவ்வுலகத்தைச் சமன்செய்த அகத்தியமுனிவரதுபெருமையின் அளவு எவ்வளவு? எனின், துறந்தார்பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்க.

இது துறவிகளின் பெருமை அளவிடலரிய தென்கின்றது.

பெருமை துணைக்கூறின் = பெருமையை அளவிட்டுச்சொல்லின். மேல், துறந்தார் பெருமையை நூலோர் மேலாக விரும்புவர் என்றார்; இதில், அவர் பெருமை அளவிடலரிய தென்கின்றார். இது

கைப்பற்றுக்கலையும் அறவே விட்டாரது பெருமையை அளவிட்டுச்சொல்லத்தொடங்கின் இவ்வுலகத்தில் இறந்து போனவரை இத்தனையரென எண்ணி அறியலுற்றாற் போலும் என்பதாம்.

அப்பெருமை அளவிடமுடியாதென்பது குறிப்பு. கொண்டால் என்பது கொண்டு எனநின்றது. துறந்தவர் பெருமைக்கும் இறந்தவர் தொகைக்கும் அளவில்லை என்றவாறு.

இறந்தார் தொகை மேல் வைத்துத் துறந்தார் பெருமைக்கு இதில் வரம்பின்மை கூறினர்.

துறந்தார் பெருமை எத்துணைத்து என்று ஒருவன் அளந்தறிய விரும்பி மிகமுயன்றும் அளவிட முடியாமை கண்டு அடிகளிடம் வந்து அதன் அளவு எத்துணைத்து என வினவ அவனை நோக்கி இது கூறியதாகக் காண்க.

துறந்தார் பெருமையை உணர்த்தற்கு இறந்தார் தொகையை யெடுத்துக்காட்டியது பயனின்றி வறிதே கழிந்துபோன அவர் தொகை நாளும் வளர்தல் போல் பயனுற உறுதி பெற்று நின்ற இவர் பெருமை நாளும் மிகுதல் கருதி என்க.

முனிவரர் பெருமை அளவிடலரியது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அகத்தியர்பாலுணரப்படும்.

கதை

அகத்தியர் என்பவர் முற்றத்துறந்த முனிவரெவரினும் முதன்மை வாய்ந்தவர். முன்னொரு காலத்தில் பிரமன் ஒரு வேள்விசெய்தான். அதில் அமைந்திருந்த கும்பம் ஒன்றில் இவர் பிறந்து வந்தார். அதனால் உம்பரும் இம்பரும் இவரைக்கும்ப முனிவர் என்றழைத்தார். இருவகைப் புலவரும் இவரது பெரும்புகழைவிரும்பிப் போற்றுவர். இவர் செய்துள்ள அற்புதங்கள் அளவிடலரியன. இவர் எவலைச் செய்யத் தேவரும் ஆவலுறுவர். தேவர்கோனும் இவரது சாபமெய்தினன். திருமாலையும் சிவபெருமானை இவர் செய்தார்எனின் வேறு கூறுவதென். திருக்குற்றாலத்து மாலடியார் இவரோடு மாறுகொண்டு வாதுபுரிந்த காலத்தில் இவர் வைணவ வேடங்கொண்டார். ஆலயத்துட் புகுந்தார். திருமால் வடிவோடு அங்கு எழுந்தருளியிருந்த மூர்த்தியைக் கண்டார். அணுகினர். வைணவவேடியர் பலருங்காண அம் மூர்த்தியின் முடிமேல் தமது செங்கையை வைத்தார். சிவமாகச் சிந்தித்தார். உடனே;

முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுக்கப் பெரியதுழாய் முடியின்மீது
சிறியமதிக் கலைகுறுகத், திலகநுதல்விழிகுறுகச் செழுஞ்பூண்மார்பில்
நிறையரவப் பணிகுறுக, நிகிலவுல கமுநிறைந்து நீண்டமேனி
குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமுனிவன் குறுகுங் காலை. (1)

தவம்பெருக அறம்பெருகப் பொருள்பெருகத்தெருள்பெருகச் சைவம்ஓங்கச்
சுவம்பெருக மநுநீதித் துறைபெருக நிறைபெருகச் சுருதிவாய்மை
நவம்பெருகச் சரியாதி சதுட்டயங்கள் நனிபெருக ஞாலமெல்லாம்
சிவம்பெருகக் குறுகியருள் பெருகிஞன் குற்றாலத் தேவதேவன். (2)

வேறு.

சித்திரைற் கரும்பொன்மேனி செம்பொனும் படிபோற்கும்பன்
பத்தியால் உருகி மாலாம் படிவனே பரமனுனன்;
சத்துடன் அசத்துமாகிச் சதசத்து மானஞான
நித்திய நிமலானந்த நிட்கள சகளமூர்த்தி. (திருக்குற்றாலத்தலபுராணம்)

இதனுல் இவரது அற்புதத் தவவன்மை அறியலாகும்.

கடல்குடித்த கதை.

விருத்திரன் என்னும் அசுரன் இந்திரனோடு பெரும்போர்புரிந்தான். முடிவில் ஆற்றுமல் கடல்புக்கொளிந்தான். இந்திரன் அகத்தியரை அணுகி அதனை அறிவித்தான். முனிவர் கடல் நீரைக் கையிலேந்தி முற்றவும் வற்றப்பருகி அவ்வசுரனை அமரர் கோனுக்குக் காட்டினர். அவனுங் கண்டான். குலிசத்தால் அவனைக்கொன்றான். வென்றி கொண்டான். முனிவரும் பருகியகடலை மீண்டு உமிழ்ந்தார். அனைவரும் கண்டார். அன்புடன் வியந்தார்) இதன் விரிவைத் திருவினையாடற் புராணத்தில் காண்க.

பார்சமன் செய்தது.

இறைவனது திருக்கலியாண கோலத்தைத் தரிசிக்கும்பொருட்டு எல்லாவுயிர்களும் இமயம் சார்ந்தன. அதனுல் வடதிசை தாழ்ந்தது. உலகம் தனது நிலைகுலைந்தது. உயிர்கள் அஞ்சி அலமந்தன. தேவர்களும் தியங்கினர். மாதவர்களும் மயங்கினர். மேருவுந் தளர்ந்தது. சேடனுங் கலங்கினன். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன் மகத்துவமிகுத்த நமது அகத்திய முனிவனை நோக்கினர். முனிவர் திலகமே! இங்கு வருக என்றழைத்தார். இவரும் வந்து வணங்கினர். அருந்தவமிகுந்த பெருந்தகையே! நீ தென்திசை சென்று பொதிகையில் நின்றால் இவ்வுலகம் சமமாய்

நிலைபெறும்; உயிர்களும் கலந்துறும்; என்று பரமன் பணித்தார். முனிவரும் அப்பணியைத் தலைமேற்கொண்டார்; திருவுருவை உளத்தில் சிந்தித்தார். தென்திசை நோக்கி நடந்தார். பொதிகை மலையை வந்து எண்ணினர். எண்ணலும் உலகம் சமமாய் நிலைபுற்றது. வருதிய உயிர்களும் மகிழ்ந்திருந்தன தேவர்முதலிய யாவரும் குறுமுனியின் பெருமையை வியந்து புகழ்ந்தார். இதனால் அளவிடலரிய பெருமை நமது முனிவர் பால் அமைந்துள்ளமை தெளியப்படும்.

பொதியம தென்னும் வெற்பில் புனிதமா முனிவன்னைவகத்
துதியுறு வடபாற் றென்பாற் புவனியோர் தலைபோலொப்ப
அதுபொழு துயிர்களாதேனுர் அணங்கொரீஇ அரணேயத்தி
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கைசால்வாம்.

அணங்கு = வருத்தம். ஓரீஇ = நீங்கி. (கந்தபுராணம்.)

மேற்குறித்த வண்மை இதன்கண்ணும் விளங்குதல் காண்க. இங்ஙனம் அளவிடலரிய மாட்சியோடு இவர் அமைந்து விளங்கினர். துறந்தார்பெருமையை எண்ணி யறியமுடியாதென்னும் உண்மையை உலகம் இவர்பாலுணர்ந்து நின்றது.

வானுலக மெல்லாம் வரைந்தாலுங் கோள்ளுமோ
ஞானி உயர்வி னலம்.

துறந்தார் பெருமை வரம்பிடலரிய தென்பது இதனுல் கூறப்பட்டது.

23. பண்டு துறவுகொண்ட பட்டினத்தார் மாண்புலகில்
கொண்டதுயர் வென்னே குமரேசா—கண்ட
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (க)

குமரேசா! துறவறம் பூண்ட பட்டினத்தார் பெருமை என் உலகில் உயர்ந்து விளங்கியது? எனின், இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார் பெருமை, உலகு பிறங்கிற்று என்க.

இது, துறந்தவர்பெருமையே இவ்வுலகில் உயர்ந்ததென்கின்றது.

இருமை என்றது பிறப்பு வீடு என்னும் இரண்டினை. வகை தெரிதலாவது அவற்றின் துன்ப இன்பக் கூறுபாடுகளை முறையே ஆராய்ந்தறிதல். ஈண்டு அறம் என்றது துறவறத்தை.

உலகு பிறங்கிற்று = உலகின்கண் உயர்ந்தது. பிறங்குதல் = மிகுந்துவிளங்குதல்.

துன்பந்தோன்றின் எவரும் துறந்து ஏகராய்த்தனித்தே இன்பந்தேடல் இயற்கை ஆதலால் இருமை வகைதெரிதலே துறவு பூணுதற்கு ஏதுவாயிற்று. ஈண்டு = இவ்விடத்தே; என்றது இப்பிறப்பின் கண்ணேயே என்றவாறு.

மேல், துறவிகள் பெருமை அளவிடமுடியாதென்றார்; இதில், அதுவே இவ்வுலகில் உயர்ந்தது என்கின்றார்.

பிறப்பு பிறவாமை என்னும் இரண்டினது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து இவ்விடத்தே துறவறத்தை மேற்கொண்டவரது பெருமையே உலகில் மிக உயர்ந்தது என்பதாம்.

உலகப்பொருள்கள் முழுவதுமுடைய அரசர் பெருமையினும் அவற்றை முற்றவுந்துறந்த முனிவர் பெருமையே சிறந்ததென்றவாறு. இருமை வகைதெரிதலே துறவு பூணுதற்கு ஏதுவென்பதுப், அங்ஙனம் பூண்டவர் பெருமையே புவியில் சிறந்ததென்பதுப், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை பட்டினத்துப் பிள்ளையார் பால் உணரப்படும்.

கதை.

பட்டினத்தார் என்பவர் உத்தமத் துறவுபூண்ட ஒரு தத்துவஞானி. இவர் பிறந்தவூர் காவிரிப்பூம்பட்டினம். வணிககுலதிலகரான இவர் சென்னையில் வசித்திருந்தாராதலால் பட்டினத்தார் எனவிளங்கி நின்றார். இவரது பிள்ளைத்திருநாமம் திருவெண்காடர் என்பதே. இவர் பல மரக்கலங்களுக்குத் தலைவராய்விளங்கினர். இவர் கலங்கள் கலவாக் கடல்களேயில்லை. மறுபுலத்தவரொடும் வாணிகஞ்செய்தார். அரசரும் விரும்பும் பெரும்பொருள் பெற்றார். உலகபோகங்களுக்குரிய எல்லாநலங்களும் இவர்பால் ஒருங்கே அமைந்திருந்தன. வணிகமுறையில் இவரது பெருமைகழ் எங்கும் பரவிநின்றது. இம்மையின்பங்களில் இவர் மனம் சென்மையாக அழுந்தியிருந்தது. இங்ஙனம் இருந்துவருநாளில் இவர் பணியி

யிருந்த புண்ணியபலத்தால் ஒரு பெரியவர் இவர்பால் நண்ணினர். தம்பால் வந்த அந்தச்சந்நியாசியை இவர் நன்முக வுபசரித்தார். அன்புசெய்தார். உலக இன்பத்தில் இவர்மனம் ஊன்றி நிற்குந்தன்மையை அப்பெரியவர் ஓர்ந்தார். உண்மையான இவரது பரிபக்குவத்தையும் தெளிந்தார். ஒரு முறியில் ஒரு சிறு வாக்கியத்தை எழுதி இவர் மனைவிபால் தந்து இவரிடம் சேர்க்கும்படி கட்டளையிட்டுச் சென்றார். துறைமுகம்போயிருந்த இவர் மனையகம் புகுந்தார். உண்டுமகிழ்ந்தார். அப்பொழுது மனைவி விநயமாக அம்முறியினை இவரிடம் தந்தாள். தந்தைதவாங்கித் தனியே நோக்கினர். அதில் "காதற்றஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே" என்று எழுதியிருந்தது. அதன்கருத்தைத் தமது கருத்தில் இருத்தினர். சிந்தித்தார். பிறவியிலுளவாகுந் துன்பக்கூறுபாடுகளையும், வீட்டில் நிலவும் இன்பநலங்களையும் நன்குதெளிந்தார். அரும்பொருளனைத்தையும் விடுத்தார். துறவறம் பூண்டார். அதன்பின் இவரது பெருமை உலகமெங்கும் பரவி ஓங்கி உயர்ந்தது. இவரது சிறந்ததுறவைக்குறித்து நூல்கள்பலவுரைத்து கூறுகின்றன.

"பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறக்கை
அரிது அரிது" (தாயுமானவர்.)

"பட்டினத்துப் பிள்ளையினைப் பத்திரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடார்." (ஒழிவிலொடுக்கம்)

இன்னவாறு எல்லோரும் போற்ற இவர் பெருமை எங்கும் விளங்கியுள்ளது. இருமை வகைதெரிந்து ஈண்டறம்பூண்டார் பெருமை பிறங்குமென்பதை உலகம் இவர்பால் உணர்ந்து நின்றது.

முற்றத் துறந்த முனிவோரை வானவரும்
உற்றுப் பணிவ ருவந்து.

துறவியின் பெருமையே யிவ்வுலகில் உயர்ந்ததென்பது இதனால் கூறப்பட்டது.

---

24. கொண்டபொரி கொண்டொன்றும் கொள்ளாது நம்மாழ்வார்
கொண்டனர்வீ டென்னே ருமரேசா—கொண்ட
உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (சு)

குமரேசா! பொறிகளால் புலன்களைக் கொள்ளாத நம்மாழ்வார் என் வீட்டின்பத்தைக் கொண்டார்? எனின், உரன் என்னுந்தோட்டியான் ஓரைந்துங்காப்பான் வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து என்க.

உரன் = அறிவு. தோட்டி = யானையையடக்குங் கருவி. அஃது அங்குசம் எனப்படும். ஓர் ஐந்து என்றது மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளை.

வரன் என்னும் வைப்பு = மேலான இடம்; அஃதாவது முத்தி நிலம்.

அறிவென்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பவன் முத்தி நிலத்திற்கோர் வித்தாவன் என்பதாம்.

அறிவைத் தோட்டி என்று உருவகஞ் செய்தமையால் ஐம்பொறிகளும் யானைகளாகக் கொள்ளப்பட்டன. புலன் மீறிச்செல்லும் பொறிகளை மதமீறிச்செல்லும் யானைகளாகக் கருதி யிது கூறினர். ஐம்பொறிகளையும் அடக்கினவனை முத்திநிலத்தில் முளைத்துக் கிளைத்து விளங்குவான் என்பார் "ஐந்துங்காப்பான் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து" என்றார். ஓர் என்பது அருமையை யுணர்த்திற்று.

முத்திநிலத்துக்கு வித்துளென்றதனால் இந்நிலத்தில் வந்து பிறந்து வருந்தான் என்பதாம். சிற்றின்பத்தில் சிந்தையைச் செலுத்தாதவன் பேரின்பத்தில் நின்று பெருமையடைவான் என்றபடி.

பொறிகள் எப்பொழுதும் புலன்களையே நாடிச்செல்லும் என்பதும், அறிவால் அவற்றை யடக்கவேண்டும் என்பதும், அங்ஙனம் அடக்கினவனை வீட்டினை யடைவான் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நம்மாழ்வார்பால் உணரப்படும்.

கதை.

நம்மாழ்வார் என்பவர் இற்றைக்கு ஐயாயிரவாண்டுகட்கு முன்னர்ப் பாண்டி நாட்டிலே, திருநகரி என்னும் திருக்குருகூரிலே வேளாளவருணத்திலே சிறந்திருந்த காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும் புத்திரராய்ப் வந்து அவதரித்தார். இவர் கருவிலே திருவுடையவர். தெய்வத்தன்மை நிறைந்தவர். ஆன்மா உடலோடு இவ்வுலகில் உருவாகத் தோன்றியவுடனே ஒருவித வாயு வந்து அதனைப் பற்றும். அப்பற்றுதலால் அது [illegible]

யும், பெருமையையும் இழந்து அவிச்சையின் வயப்படும். அதன் பின் அழுதல் அரற்றல் பருகுதல் முதலியவற்றைச் செய்து உலக வாசனையையெய்தும். இது சடவாயு எனப்படும். இவ்வாயு தனது இயல்பால் இவர் தோன்றியவுடனே இவரையும் தொடுதற்கு வந்தது. தன்னை அணுகுமுன்னரே இவர் அதனை உங்காரத்தால் அடித்தோட்டினர். அதனால் இவர்சடகோபர் என்னும் பெயரையெய்தினர். மாறனர் என்பதுதான் இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர். வேறுநாட்டமின்றி உலகியலுக்குமாறாக இருந்தமையால் இவருக்கு இப்பெயர் இடப்பட்டது. இவரதுபிறப்பும் இருப்பும் வளர்ச்சியும் மிக்க அற்புதமுடையன. பதினாறுபருவம் வரையும் கண்விழியாமல் இவர் மௌனமாயிருந்தார். ஓதாதணர்த்தையும் ஓதிவறவுணர்ந்தார். தத்துவ வுணர்வை முற்றவும் பெற்றார். திருமாலடிக்கே பெருமால் கொண்டார். அவரது அடியாரெவரிலும் முடியாய் நின்றார். பகவானது கலியாணகுணங்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பவ ராதலால் மாலடியவர் ஆழ்வார் எனப் பட்டார். அவரெல்லாருள்ளும் பிரித்துப் பெருமானால் இவர் நம் ஆழ்வார் என்று அழைக்கப்பட்டார். திருமாலும் தமது மலர் வாய்திறந்து "நம்" என்னும் அடைகொடுத்து இவரை அழைத்தார். அதுமுதல் இவர் நம்மாழ்வார் என்னும் நற்பெயர் பெற்றார். இஃதொன்றே இவரது பெருமையை மிக நன்கு விளக்கும். இவர் பொறிகளைப் புறத்திற் செலுத்தாமல் பரத்திற் செலுத்தினர். அதனால் பிறவி தீர்ந்தார். முத்தியுலகில் நித்தராய் முனைத்தார். தத்துவ வித்துக்களெவரும் இவரை நித்தியமுத்தரென நித்தலும் புகழ்வர். திருநகரியென்னும் ஊர் இவர் அவதரித்தபின்னர் ஆழ்வார் திருநகரி என்று வழங்கி வருகின்றது. உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்தங்காப்பான் வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து என்னும் உண்மையை உலகம் காண இவர் உணர்த்தினின்றார்.

போதமுட னின்று பொறியடக்கும் புண்ணியரே
சாதல் பிறப்பற்றார் தாம்.

ஐம்பொறிகளை யடக்கினவனே வீட்டினை யடைவான் என்பது இதனால் கூறப்பட்டது.

25. மாதவத்துக் கோதமன்றன் வாய்மொழியின் வண்மையெவர்
கோதலக் கண்டார் குமரேசா—பூதலத்தில்
ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (ரு)

இ—ள்.

குமரேசா! கோதமனது வலிமையைக் குற்றமறக்கண்டார் யாவர்? எனின், ஐந்தவித்தான் ஆற்றலுக்கு அகல்விசும்பு உளார் கோமான் இந்திரனே சாலுங்கரி என்க.

கோமான் இந்திரன்—இருபெயரொட்டு. கரி = சான்று.

ஐந்து அவாக்களையும் அவித்தானது ஆற்றலுக்கு அகன்ற வானத்துள்ள அமரர் கோமானாகிய இந்திரனே அமையுஞ் சான்று என்பதாம்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்கள் மேற் செல்கின்ற அவா ஐந்தையும் அடக்கினனது பெருமையும், அவற்றையடக்காதவனது சிறுமையும் கூறுவார் ஐந்தவித்தான் ஆற்றற்கு இந்திரனே கரினன்றார். ஐந்து என்பதில் முற்றும்மையும், ஆற்றல் என்பதில் குவ்வுருபும் தொக்கு நின்றன. எகாரம் சாட்சியின் தனி மாட்சி தோன்ற நின்றது.

இங்கு ஐந்தவித்தான் என்றது கௌதமரை. இவரது வலிமையை உலகிற்கு நன்கு காட்டினன் இந்திரனே ஆதலால் அவனைச் சாலுங்கரி என்றார்.

ஐந்தவித்தானுக்கே அளவில்லாத ஆற்றல்உளதாம் என்பதும், வேறு ஒருவன் எவ்வகை ஆற்றலையுடையனையினும் அவனுக்கு ஈடாகான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கௌதமர்பாலும், இந்திரன் கண்ணும் காணப்படும்.

கதை.

கோதமர் என்பவர் பெருந்தன்மை நிறைந்த ஓர் அருந்தவர். நெறிதிறம்பாத நீர்மையர். மாசற்ற மனமுடையவர். இவர் அகலிகை என்னும் மனைவியோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தார். அவள் அழகனைத்தும் ஒருங்கே குடி கொண்ட திருமேனியை உடையவள். உத்தமகுணங்கள் முற்றும்வாய்ந்தவள். இந்திரன் இவள்மீது பெரு

ங்காதல் கொண்டான். இவளது அழகென்னும் பெருங்கடலில் விழுந்து கரைகாணுது வருந்கிறன். எவ்வகையிலும் இவளைக் கலந்து இன்புறவேண்டுமென்று கருதிறன். கலங்கிறன். தெய்வ போகங்கள் அனைத்தையும் வெறுத்தான். அயலொன்றையும் நாடான். மயலையே கொண்டான். பலகாலமும் முயன்றான். ஒரு நாள் நடுநிசியில் முனிவரது ஆச்சிரமத்துக்கு வந்தான். கோழி போல் கூவினான். விடிந்ததுபொழுது என்று கருதி முனிவர் எழுந்தார். காலைக் கருமங்களைச்செய்ய நீர்நிலையை நோக்கிப் போனார். உடனே இந்திரன் முனிவர் உருவங்கொண்டான். உள்ளே புகுந்தான். பேதை அகலிகையும் பேதந் தெரிந்திலள். தனது கணவனென்றே முழுதும்நம்பினாள். கள்ள இந்திரனும் மெள்ள நெருங்கிறன். அகலிகையை அணைந்தான். அவளும் இணங்கினாள். இருவரும் கலந்தார். இன்பந்துய்த்தார். நீர்நிலையைநோக்கிச் சென்ற கௌதமர் உரியகாலம் வரவில்லை என்றுணர்ந்தார். மனையில் நிகழும் வினையைத் தமது ஞானத்தால் தெளிந்தார். விரைந்து மீண்டார். புகுந்தார் மனையுள். வந்தனர் முனிவரென்றிந்திரன் கண்டான், உள்ளம் கலங்கினான். உடலும் நடுங்கினான். புரந்தரன் பயந்து ஒரு பூனையாய் ஓடினான். முனிவர் பெருங்கோபங் கொண்டார். அவன் உடல் முற்றும் பெண்குறிகளாகக் கடவதென்று சபித்தார். அவையெல்லாம் அவ்வாறே யுடனே அவனுடலில் வந்தமைந்தன. திரும்பினர். அங்கங்குலைந்த அகலிகையை நோக்கினர். சீறினர். நீ பொல்லாதது புரிந்தாய். ஆதலால் கல்லாகுக என்று சபித்தார். சபிக்குமுன் கணவன் காலில் அகலிகை விழுந்தாள். அறியாமலை அடியாள் அரும்பிழை செய்தேன். இதற்கொருமுடிவை எனக்கருள் என்றாள். தசரதராமன் திருவடித்தூகள் படுமேல் இக்கல்லுருவம் நீங்கி நல்லுருப் பெறுவாய் என்று கௌதமர் கருணை செய்தார். அதன்படின் மனைபிகந்தார். வனமே புகுந்தார்.

இவ்வுண்மை பிதனடிபில் வருகின்ற கவிகளில் இனிது தெளியப்படும்.

தையலாள் நயனவேலும் மன்மதன் சரமும்பாய
உய்யலாம் உறுதிநாடி யுழல்பவன் ஒருநாளுற்ற
மையலால் அறிவுநீங்கி மாமுனிக்கு அற்றஞ்செய்து
பொய்யிலா உள்ளத்தான்தன் உருவமே கொண்டுபுக்கான். (1)

புக்கவளோடும் காமப் புதுமண மதுவின்றேறல்
ஒக்கவுண் டிருத்தலோடும் உணர்ந்தனளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்னவோராள் தாழ்ந்தன ளிருப்பத்தாழா
மூக்கணன் அனையஆற்றல் முனிவனும் முடுகிவந்தான். (2)

சரந்தரு சாபமல்லால் தடுப்பருஞ் சாபம்வல்ல
வரந்தருமுனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்நின்றூள்
புரந்தரன் நடுங்கி யாங்கோர் பூசையாய்ப்போகலுற்றூன். (3)

தீவிழி சிந்தநோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவன் அவனைநின்கைச் சுடுசரம் அனையசொல்லால்
ஆயிர மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாகென்
றேயினன் அவையெலாம்வந் தினையந்தன இமைப்பின்மூன்னர். (4)

எல்லையில் நாணமெய்தி யாவர்க்கும் கணவந் தெய்தப்
புல்லிய பழியிலேதும் புரந்தரன் போயபின்றை
மெல்லிய லாளைநோக்கி விலமக ளனையநீயும்
கல்லிய லாதியென்றூன் கருங்கலாய் மருங்குவீழ்வாள். (5)

பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனேஎன்பர்
அழற்றருங் கடவுளன்னுய் முடிவிதற் கருளுகென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராமன் என்பான்
கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத்தவிர்தி யென்றூன். (6)

(இராமாயணம்.)

மிதிலைக்கு வரும்வழியில் இராமன்பால் விசுவாமித்திரர் அகலி கைசரித்திரத்தை யிவ்வாறு கூறினர். எனவே யிது இராமாவதா ரத்துக்கு வெகுகாலத்துக்கு முன்னரே நிகழ்ந்துள்ளமை பெறப்படும். தவ வலியானது தெய்வ வலியிலும் சாலச் சிறந்ததென்பது இதில் காணப்பட்டது.

பிறப்பால் மனிதனுயினும் ஐந்து அவித்தவன் இந்திரனிலும் சிறந்தவன் என்பது குறிப்பு,

ஆதி பகவன் அருள்போல் அமைந்தென்றும்
மாதவர்கள் நிற்பர் மகிழ்ந்து.

கௌதமனது பெருமைக்கும் இந்திரனது சிறுமைக்கும் இது இனைவ் வாயிட்டது

26 வீடுமைனர் மெய்த்தவத்தை மேவினர் சந்தனுவேன்
கூடினைன் காமம் குமரேசா—நாடிச்
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (கூ)

இ —ள்.

குமரேசா! வீடுமன் மனத்தையடக்கித் தவத்தைச் செய்தான்; சந்தனு என் அதனை அடக்கமாட்டாமல் காமத்தைக் கூடினான்? எனின், பெரிபர் செயற்கு அரிய செய்வார்; சிறியர் செயற்கு அரிய செய்கலாதார் என்க.

இது, பெரியவர் தன்மை இன்னதாம் என்கின்றது.

செய்தற்கு அரியனவற்றைச் செய்வாரே பெரியர்; அங்ஙனம் செய்யமாட்டாதார் சிறியரேயாவர் என்பதாம்.

அறியது, ஐம்பொறியடக்கம். எளியது, அஃதின்மை. மனம் போனபடியெல்லாம் போய்த்திரிவார் சிறியர்; அங்ஙனம் இழிந்து திரியாது அறிவறிந்து பொறியடக்கி ஞானசீலராய் அமைந்திருப்பார் பெரியர் என்றவாறு.

செயற்கரிய செய்வார் பெரியர் எனப்பொதுவாகக் கூறியுள்ளபடியால் இதுதான் செயற்கு அரியது, இதுதான் செயற்கு அரியது என ஒவ்வொருவருந் தத்தமக்கு வேண்டியவாறே கூறலாம்; ஆயினும் பிற்காலத்துப் பெரியார் ஒருவர் அதனை வரையறுத்துளார். அஃது இதனடியில் வருகின்றது.

கந்துக மதக்கரியை வசமா கடத்துலாடம்;
கரடிவெம் புலிவா யையும்
கட்டலாடம்; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாடம்;
கட்செவி எடுத்தாட்டலாடம்;
வெந்தழலின் இரதம்வைத் தைதுந்தீ வாய கத்தையும்
வேதித்து விற்றுண்ணை லாடம்;
வேறொருவர் காணுமல் உலகத் துலாவலாடம்;
விண்ணைவரை எவல் கொளலாடம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாடம்; மற்றொருசார்
தத்தி னுடம்பு புகுதலாடம்;

சலமேல் நடக்கலாம்; கனல்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் "அரிது" சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோமயானந்தமே. (சாயுமானவர்.)

கட்செவி = பாம்பு.

செயற்கு அரியது இது வென்பது இதனால் இனிது புலனாம். பெருமைக்கும், சிறுமைக்கும் உரிமையான உவமைக்கருவியை இதில் ஒருங்குணர்த்தினர்.

கல்வி செல்வம் குலம் அதிகாரம் பருவம் உருவம் முதலியவற்றால் சிறிய ராயினும் அரியன செய்வரேல் அவரே பெரியர் என்பதும், அவற்றால் பெரிய ராயினும் அரியன செய்யாரேல் அவர் சிறியரே என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை விடுமர்கண்ணும், சந்தனுபாலும் உணரப்படும்.

கதை.

சந்தனு என்பவன் சந்திரகுல வேந்தன். வருணனதுகூற்றாய் வந்து பிறந்தவன். இப்பரதகண்டத்தில் அத்தினபுரியில் இருந்து அரசுபுரிந்தான். போரழகும் வீரமும் ஒருங்கே உடையவன். கங்கை என்னும் தெய்வமகளை மணந்து வீடுமன் என்னும் மெய்மகனைப் பெற்றான். மகனும் பருவமடைந்து மதனனைத் திகழ்ந்தான். இங்ஙனம் வருநாளில் ஒருநாள் சந்தனு வேட்டைபோற்சென்றான். யமுனை நதியை யணுகினான். அங்கே மச்சகந்தியைக் கண்டான். அவள் அந்நதியில் நாவாய் விடுகின்ற பரதவர்பதியின் மகள். அவளது திருமேனியின் நறுமணம் வெகுதூரம் சென்று வீசுகின்றபடியால் யோசனகந்தி எனவும், பரிமளகந்தினெனவும் அவள் புகழ் பெற்றிருந்தாள். அரசன் அவளைக் காதலித்தான். மணஞ்செய்யக் கருதினான். தனது கருத்தை அவளது தந்தைக் குணர்த்தினான். நின் முதன் மகன் இருப்ப என்புதல்வியை நல்கேன் என்று தந்தை மறுத்தான். இவன் மனம் கலர்ந்தான் உடல் மெலிந்தான். நகாரயடைந்தான். மாளிகைபிற்புகுந்து வாடியிருந்தான். இளவரசாகிய வீடுமன் தந்தையின் நிலைமையை வினவியறிந்தான்.

பரதவர்பதிபாற் சென்றான். பாட்டா! என்று விளித்தான். நின் மகளை எனக்குத்தாய் என்றான். இத்தாய்வயிற்றில் தோன்றிய புதல்வர்கட்கே அரசுரிமையுண்டு. எனக்கு அது வேண்டாம். என்றும் மணத்தை யான் இனிச்செய்யேன். என்னும் உறுதியை முன்னே கூறினான். பரிமளகந்தியைக் கொணர்ந்தான். தந்தைக்கு மணமுடித்தான். தந்தையின் பொருட்டுத் தான் ஐம்பொறி யடக்கினான். அரிய விரதத்தை உரியவாக் கொண்டான். சந்தனு அவளை மணந்தான். இன்பம் துய்த்தான்.

"இனையர் முதியர் எனஇருபால் பற்றி
வினையும் அறிவென்ன வேண்டா—இனையளைப்
தன்தாளை காமம் நுகர்தற்குத் தான்காமம்
ஒன்றுது நின்றான் உளன்."

என யாவரும் உளமகிழ்ந்துபோற்ற அக்குலமகன் புகழ்மிகுந்து நின்றான். பருவத்திற் சிறியராயிருந்தும் அரிய செய்து வீடுபேர் பெரியர் ஆயினர். அதிற் பெரியராய் இருந்தும் சந்தனு எளிய செய்து சிறியராயினர். இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.

தன்னுள்ளாங் காப்பர் தகவோர் தகவிலார்
பின்னுரைடி வீழ்வர் பிழை.

செயற்கரிய செய்து வீடுமர் பெரியராயினர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

27. உற்ற சுகன்பால் உலகொடுங்கி நிற்கவென்
கொற்றமுற்ற தென்னே குமரேசா—முற்றும்
சுவையொளி யூறோசை காற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. (எ)

இ—ள்.

குமரேசா! உலகமானது சுகமுனிவாது அறிவில் அமைந்து நிற்ப அவர்மேன்மையுற்றது என்னே? எனின், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்வகை தெரிவான் கட்டே உலகு என்க.

தெரிவான் கட்டே = தெளிந்தவன் கண்ணதே. பிறர் கண் இல்லையென்பது தோன்ற நின்றமையின் எகாரம் பிரிநிலை.

காணப்படுகின்ற இத்தூலவுலகத்திற்கு மூலமான சூக்கும

காரணங்களை ஆராய்ந்து தெளிந்தவன் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காமல் தத்துவ ஞானியாய் விளங்குவான் என்பார் உலகு வகைதெரிவான் கண்ணதே என்றார்.

சுவைமுதலிய ஐம்புலன்களின் கூறுபாடுகளை ஐயமறத் தெளிந்துள்ளவன்கண்ணே இவ்வையம் உள்ளதென்பதாம்.

இவ்வுலகம் ஐவகைப் பூதங்களின் காரியம் என்பதும், இதனைத்தெரிதலே மெய்யுணர்வு என்பதும், இவ் வுணர்வுடையவன் அதன் தோற்றத்தில் மயங்கான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சுகமுனிவர்பால் உணரப்படும்.

கதை.

சுகர் என்பவர் வியாசருடைய பிள்ளை. பிறந்தபொழுதே துறந்து சென்றவர். உலகியலிலும் உணர்வியலிலும் நன்கு தெரிந்தவர். சுகம் என்பது கிளி என்னும் ஒரு பறவைக்குப் பெயர். அதன் முகம்போன்ற முகத்தை இவர் பெற்றிருந்தமையால் சுகன் என்னும் பெயரை இவர் பெற்றார். இவர் தந்தையினும் சிறந்த தத்துவ உணர்வினர். உலகப்பற்றை முற்றத்துறந்து விரைந்துசென்றார். தந்தை மகவாசையால் பின்தொடர்ந்தார். அழைத்தார். அப்பொழுது எல்லாப் பொருள்களும் என்னை என்னை என்று எதிர்மொழி தந்தன. சுவைமுதலிய ஐந்தின் வகைதெரிவான் கண்ணதே உலகம் என்பது இவர்பால் அன்று உணரநின்றது. இதனை இதன் அடியில் வருவதால் காண்க.

பிறந்த பொழுதேதுறந்து பிறைக்குழவி போல்தடப்பப்
பின்போய்த் தொன்னூல்
அறைந்தபுகழ் வியாதமுனி யாதரத்தால் மதலையென்
றழைப்பச் செவ்வாய்
திறந்துநகை பொழிமுமலர்ச் செழுந்தருவும் எண்ணெண்ண
உயிர்கள் யாவும்
நிறைந்துறையும் சுகமுனிவ னிரைமிதித்தா மரைமலர்த்தாள்
நினைதல் செய்வாம். (பாகவதம்)

பிண்ட நிலையைப் பிழையறநன் கோர்ந்தார்பால்
அண்டநிலை நிற்கும் அமைந்து.

சுகமுனிவர் மெய்ப்புணர்வுடையராய்த் துறந்தார் என்பது இதனால் கூறப்பட்டது.

28. காட்டினாக் கீரன்சீர் கம்பன் பெருமையவர்
கூட்டுமொழி யென்னே குமரேசா—பாட்டில்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (அ)

இ—ள்.

குமரேசா! நக்கீரரது சீரையும் கம்பரது பெருமையையும் என் அவர்களுடைய மொழிகளே காட்டின? எனின், நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும் என்க.

நிறைமொழி = அறிவும் தவமும் நிரம்பியமொழி.

மறைமொழி = ஆணையிட்டுச் சொல்கின்ற மந்திரமொழி.

காட்டுதல் = பிறரறிய உணர்த்துதல்.

நிறைந்த மொழியினையுடைய துறக்காரது பெருமையை இந்நிலவுலகில் அவர்தம் மறைமொழிகளே கண்கூடாகக் காட்டிவிடும் என்பதாம்.

மாந்தர் என்னுஞ்சொல் என்றும் பன்மையாகவே நின்றமைச் சுட்டும்.

பெரியாரது மொழிகள் தம்பயனை யாண்டும் தப்பாமல பயக்கும்என்பது "காட்டிவிடும்" என்னும் தொடரால்காண்பிக்கப்படும்.

சிறந்த பெரியார்களிடத்தில் நிறைந்த மொழிகள் உளவாம் என்பதும், அம்மொழிகளே அவர்களுடையபெருமைகளை உலகறிய உணர்த்திவிடும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நக்கீரர் பாலும், கம்பர்பாலும் உணரப்படும்.

கதை

நக்கீரர் என்பவர் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூற்று வருடங் கட்கு முன்னர் மதுரையில் இருந்தவர். சங்கப்புலவருள் தலைவராய் நின்றவர். பொய்யில் புலவர் என்னும் புகழினையுடையவர். பரம்பொருள் தாலுக்கு அரும்பொருள் கண்டவர். நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே யென்று கண்ணுதற் பரமன் முன்னின்று கலங்காமல் வாதித்த கல்விவீரர். இவர் சங்கத்தில் தலையாய பிற்று விளங்கியிருந்தார். அக்காலத்தில் கொண்டான் என்னும் ஆயன் ஒருவன் அங்குவந்தான். சங்கத்தை மதியாது தருக்கு ஆற்று நின்றனன். வடமொழியை சிறந்தென்று வாதித்தான்.

அவ்வளவில் அமையாமல் தமிழை யிழித்துக்கூறினன். அதனால் நக்கீரர் அவனை வெகுண்டார். மறமொழி யொன்றை விரைவில் மொழிந்தார்.

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணை கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா." என்று இங்ஙனம் சொல்லிய உடனே அவன் துள்ளி விழுந்தான். துடித்து உயிர் துறந்தான். அதன்பின் அவன்மேல் அருளி,

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணைபோல்
செந்தமிழே தீர்க்கசுவா கா."

என்றொரு கவியை நன்றுமொழிந்தார். விழுந்து மடிந்து கொண்டான் எழுந்து மகிழ்ந்து நின்றனன். இம்மொழி இவர் பெருமையை அன்று நன்று காட்டி நின்றது.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.

என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில் இது தெளியப்படும்.

கதை 2.

கம்பர் என்பார் இற்றைக்கு ஆயிரவருடங்கட்கு முன்னர்ச் சோழநாட்டிலே திருவழுந்தூரிலே அவதரித்தார். இவரது குலத்தைப்பற்றிப் புலவர் பலர் பலவாறு கூறுகின்றனர். இவரை அந்தணர் என்பார் பலர்; வேறுசிலர் அரசர் என்பார்; இன்னுஞ் சிலர் வேளாளர் என்பார்; பின்னுஞ் சிலர் உவச்சர் என்பார். "கன்னன் பிறப்பும் பின்னளிற் றுலங்கிற்று கம்பன் பிறப்பு இன்னம் அறிந்தார்கள் இலையில்லை முக்காலும் இது மெய்ம்மையே" என்றார் மற்றொரு பெரியவர். இவர் குலம் எதுவாயினும் இவரது தோற்றம் தெய்வத்தன்மை வாய்ந்த தென்பது தேற்றம். இராமாயணம் என்னும் காவிய அமுதத்தை மன்பதைகள் என்றும் அநுபவித்து இன்புறுவண்ணம் அருளுடன் தந்த திருவினையுடையவர். புலியரசர்களும் கவியரசர்களும் போற்றி வணங்கத் தக்க சீர்த்தி வாய்ந்தவர். கல்வியிற் பெரியவர். கவிச்சக்கிரவர்த்தி யென்னும் அரும் பெயர் பெற்றவர். பின்னைப் பருவத்திலேயே கலைமகள் கருணையை இவர் எவ்வ

றப் பெற்றார். அதனால் நிறைமொழி யுடையராய் நிலத்தில் விளங் கினர். அக்காலத்தில் காளிங்கராயன் என்னும் குறுநில மன்ன னது குதிரை ஒன்று இவரது குருவின் நிலைநிலத்தில் மேய்ந்து கொண்டு நின்றது. அதனை இவர் ஓட்டினர்; அஃது ஓடவில்லை. வெகுண்டார்

"வாய்த்த வயிரடிர மாகாளி அர்மேகேன்
காய்த்த நினைப்புனத்தில் காள்வைத்துக்—காய்த்துக்
கதிரை மாளத்தின்று காளிங்க ராயன்
குதிரை மாளக்கொண்டு போ."

என்று வசைகளிலென்னை நிகைபுடன் மொழிந்தார். உடனே அக்குதிரை மாண்டு விழுந்தது. கண்டார் அதனை. கொண் டார் கருணை. கூறிய வெண்பாவின் ஈற்றடியை மாற்றி "குதி ரை மீளக்கொண்டு வா" என்றார். மாண்ட குதிரை மீண்டெழுந் தது. மேற்குறித்தபெரியார் இருவருடும் நிறைமொழி மாந்தர் என்பதை அவர்தம் மறைமொழிகளாலே உலகம் நன்குணர்ந்தது.

துறந்தார் சினந்தோருசோற் சோற்றக்கால் யாரே
இறந்துபடார் நிற்ப ரெதிர்ந்து.

பெரியார்பெருமை அவர் மொழியால் அறியலாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

29. வென்றிக் கபிலர் வெகுளியால் என்சகார்
குன்றி மடிந்தார் குமரேசா—என்றும்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. (சு)

இ—ள்.

குமரேசா! கபில முனிவர் வெகுளியால் சகரர் எல்லா ரும் எவ்வாறு உடனே இறந்தார்? எனின், குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது என்க.

சகரர் என்றது சகரன் என்னும் அரசன்புதல்வர் அறுபதினா யிரவரை. கணம் = மிகச்சிறிதுகாலம் அளவு. அரசரும் திண்மையும் பெருமையும் கருதிக் குணத்தைக் குன்று என்று உருவகித்தார்.

மேல், நீத்தாரது மொழியால் அழிவும் ஆக்கமும் உளவாம் என்றார்; இதில், அவர் எண்ணிலும் பார்த்தாலும் அவை நிகழும் என்கின்றார்.

குணங்களாகிய மலைமேல்நின்ற முனிவரது வெகுளியை யாவராலும் சிறிதும் பொறுக்கமுடியாதென்பதாம்.

வாய்மை, தூய்மை, அருள், தவம், மெய்யுணர்வு முதலிய குணநலங்களையுடையாரே பெரியர் என்பதும், அவர்பால் வெகுளி தோன்றுதுளன்பதும், எதாவது ஓர்எதுவால் தோன்றினும் தோன்றியபொழுதே அவ்வெகுளி அழியும் என்பதும், அத்துணைப் பொழுதினும் அதனைத்தடுத்தற்கு எவர்க்கும் முடியாதென்பதும், 'கணமேயும் காத்தல் அரிது" என்பதனால் உணரப்படும்.

குணமிலார் வெகுளியினும் அதனையுடையாரது வெகுளிக்கே அஞ்சவேண்டும் என்பது குறிப்பு. இல்லார்வெகுளி யாதும்செய்யாது; உடையார் வெகுளி எல்லாம்செய்யும் என்பதாம்.

அருந்தவர் சினந்தால் எவரும் எரிந்தொழிவர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை கபிலர்பால் உணரப்படும்.

கதை.

கபிலர் என்பவர் அருந்தவமிருந்த ஓர்சிறந்த முனிவரர். உயரிய குணங்களெல்லாம் ஒருங்கேயுடையவர். பாதலத்தில் அமர்ந்து நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தார். அக்காலத்தில் அயோத்தியில் சகரன்னென்னும் ஓர்அரசனிருந்தான். அம்மன்னனுக்குத் தெய்வத்திருவருளால் அறுபதினாயிரம் புதல்வர் தோன்றினர். அதன்பின் பரிவேள்வி ஒன்று செய்யக்கருதி அதற்கு உரியமுறைப்படி ஓர் அசுவத்தை உலகை வலம்வரும்படி விட்டான். அவன் புதல்வராகிய அறுபதினாயிரவரும் அதனைத் தொடர்ந்து பின்சென்றார். அவ்வேள்விக்கு இடையூறுசெய்ய எண்ணியிருந்த இந்திரன் அவரனைவரும் அறியாவண்ணம் அப்பரியைப்பிடித்துப் பாதலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த இம்முனிவர் பக்கத்தில் உள்ள ஓர் மரத்தில் பிணித்துவிட்டு மறைந்து போயினான். குதிரையைக் காணுமல் சகரர் பல இடங்களிலும் தேடினர். வாடினர். வருந்தினர் முடிவில் கண்முடி அருந்தவம் புரியும் கபிலர்பக்கல் வந்து

அதீனைக்கண்டார். இம்முனிவரே தம்குதிரையை மறைத்துவைத் துள்ளார்என்று மாறுபடமதித்தார். அனைவரும் சீறினர். ஆராயா மல் இவரை வைதார். முனிவர் வெகுண்டு விழித்தார். இவரது வெகுளித்தீயால் சகரர் அனைவரும் உடனே சாம்பராயினர்.

"மூளுமம்வெஞ்சினத் தருந்தவன் முனிந்தெரி விழிப்பப்
பூளைசூடிதன் நகையினில் எயில்பொடித் தனபோல்
ஆளுநமைந்தர் ஆறயுதரும் சாம்பராய் அவிந்தார்
வேள்விகொண்டகல் வேந்தனுக் குரைத்தனர் வேய்கள்."

அயுதம் = பதினாயிரம். வேய்கள் = ஒற்றர்கள். (இராமாயணம்.)

இங்ஙனம்அவர் மாண்டொழிந்த பின் மீண்டும் பழமைபோல் இவர் யோகநிலையில் மேவியிருந்தார். இவரது வெகுளியின்வேகத் தைபுனர்த்துதற்குக் கவி இதில்இணைத்திருக்கும் உவமையை யுன் றியுணர்க. இதனல் இவர் முதல்வனேடு ஒப்ப வைத்தெண்ணும் நிலைமையுடையார் என்பது புலனும்.

பெரு வீரராகிய அறுபதினாயிர அரசகுமாரரையும் தமதுபார் வையால் ஒருகணத்துள் ஒருங்கே அழித்தமையால் வென்றி என் னும் பதம் இவர்க்கு அடையாய்நின்றது. "குணமென்னும் குன் றேறிநின்றார் வெகுளிகணமேயும் காத்தல் அரிது" என்பதை உலகம் காண இவர்உணர்த்தி நின்றார். (விரிவைஇராமாயணத்தில்காண்க.)

மாதவர்கள் உள்ள மறுகின் உலகமெல்லாம்
தீதடைந்து தேம்பும் திரிந்து.

சான்றோர் வெகுளியின் தன்மையும் வன்மையும் இதனால் சாற்றப்பட்டன.

30. பண்டேன் சடபரதர் பல்லுயிர்க்கும் செந்தண்மை
கொண்டு நடந்தார் குமரேசா—கொண்டாடும்
அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (ம)

இ—ள்.

குமரேசா! சடபரதர் எல்லாவுயிர்களிடத்தும் செவ்விய அருளை ஏன் செய்து ஒழுகினர்? எனின், எவ்வுயிர்க்கும் செந்த ண்மை பூண்டு ஒழுகலான் அந்தணர் என்போர் அறவோர் என்க.

அந்தணர் = அழகிய தண்ணளியை உடையவர். அளி = இரக்கம். செந்தண்மை = செவ்வியதண்ணளி. அஃதாவது கோடாத அருளுடைமை. பூண்டு ஒழுகல் = என்றும் விரதமாகக்கொண்டு நடத்தல்.

எல்லா வுயிர்கள்மேலும் அருளைச் செய்தொழுகும் இயல்பினராதலால் அந்தணர் என்று சொல்லப்படுவோர் அறவோரே யாவர் எனபதாம்.

தாம் எண்ணியபடியே எவரையும் அழிக்கவும், ஆக்கவும் வல்லவராயினும் எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாகவே அருளுடையராதலால் அறநெறிதிறம்பி அருந்தவர் யாதுபசெய்யார் என்பது கருத்து. இதனால் அவரது வரம்பிலாற்றலும் பேரருளுடன்மையும் உணரலாகும். அவரருள்வழி யொழுகவேண்டும் என்பது குறிப்பு.

உயிர்களிடத்துச் செவ்விய அளியைச்செய்து ஒழுகுதலே அந்தணர்க்குக் கடமை என்பதும, அஃதில்லார்க்கு அந்தணத் தன்மை இல்லை என்பதும், அருளுடையார் எவராயினும் அவரே அந்தணர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சடபரதர் பால் உணரப்படும்.

கதை.

பரதன் என்பவன் இப்பரதகண்டத்தில் பெரும்புகழ் நிறுவிய ஒரு பெரிய அரசன். பிறிதின்நோய் தன்னோய்போல் கருதும் பெற்றியையுடையான். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் புண்ணியன். உலகியலையும் உணர்வியலையும் இவர் உள்ளபடியுணர்ந்தார். பிறவி வீடு என்னும் இருமைவகையினையும் ஒருங்கமையில்தெளிந்தார். அரசுமுதலிய அனைத்தையுந் துறந்தார். ஞானியாய் மோனமுற்றிருந்தார். அதன்பின் அந்தணராய்த் தோன்றினர். எல்லாம் தெரிந்திருந்தும் யாதும் தெரியாதவரைப்போல் நடித்தமையால் இவர் ஜடபரதர் எனப்பட்டார். தாம்நடந்துசெல்லும் வழியில் எறும்பு முதலிய சிறுபிராணிகள் வருந்துமே யென்று குந்திநடந்தார். அளி நிறைந்த நெஞ்சும் ஒளிநிறைந்த மேனியும் உடையராயிருந்தார். பெரியார் எவரும் இவரது செந்தண்மையை மதித்துத் துதித்தார். அந்தணர் இவரென அனைவரும் போற்றினர். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுமோர் அந்தணரவரென்பதை உலகம் காண இவர் உணர்த்தி

நின்றார். இதன்விரிவை விண்டுபுராணத்தில் கண்டுதெளிக.

அருளொழுக்கம் பூண்ட அவரே உயர்ந்து
தேருலுடைய ராவர் சிறந்து.

செந்தண்மையே அந்தணர் தண்மை யென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

ஒழுக்கத்தின்கண்ணே வழுவாமல் நிற்றல். பற்றுக்களைவிடுத்தல். பிறப்பு வீடுகளின் பெற்றியைத் தெளிதல். ஐம்பொறி அடக்கல். அவாவினை அறுத்தல். செயற்கரிய செய்தல். உலகியல்ஓர்தல். நிறைமொழிகொள்ளல். குணங்களால் விளங்குதல். செந்தண்மை பூணல் என்பனவாம். இவை, முற்றத்துறந்த முனிவருக்குரிய குணங்களாக முறையே இதில் உணர்த்தப்பட்டன.

4-ம் அதிகாரம் அறன்வலியுறுத்தல்.

அஃதாவது அறத்தினது சிறப்பினை யுணர்த்துதல். இருமை வகைதெரிந்து அறமெறி நின்று துறந்தார்பெருமையை முன்னர்க் கூறினார்; இதில் அவ் அறத்தின் பெருமையை உணர்த்துகின்றாதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

31. பண்டுபல அல்லலுற்றும் பாண்டவர்கள் எனறத்தைக்
கொண்டார் துணையாக் குமரேசா—மண்டு
சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனே உயிர்க்கு. (க)

இ—ள்.

குமரேசா! பாண்டவர்கள் அல்லல்பல அடைந்தும் அறத்தை என் உறுதியாகப்பற்றி நின்றார்? எனின், அறம் சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு உயிர்க்கு ஆக்கம் எவனே? என்க. எவன்என் னும் வினா இன்மைகுறித்து நின்றது.

சிறப்பையும் செல்வத்தையும் பயக்குமாதலால் அறத்தினும் சிறந்த ஆக்கம் உயிர்க்கு வேறு இல்லை என்பதாம்.

சிறப்பு = முத்தி. உயிர்கள்பெறத்தக்க எல்லாப்பேற்றினும் பெருஞ் சிறப்புடையது முத்தியே ஆதலால் சிறப்பு என்றதற்கு ஈண்டு இப்பொருள் கொள்ளப்பட்டது. ஊங்கு, மிகுதியென்னும் பொருளை விளக்குவதோர் சொல்.

உயிர்க்கு அறத்தின்ஊங்கு ஆக்கம் எவன்—உயிர்கட்கு அறத்தினும் மிக்கஆக்கம்யாது? வேறுஒன்றும்இல்லையென்பதுகுறிப்பு.

ஆக்கம், ஆகிவருவது. அஃதாவது இன்பசாதனங்கள். ஒருவனுக்கு மேன்மேலும் பெருகிவருதல். சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் என்றதனால் இருமையினும் அறம் இன்பந்தரும் என்பது பெற்றும். பொருளான் ஆக்கம் வருமெனல் போக்கி அறமே அதனைத் தருமென்றிணைக்க என்பதாம்.

அறமே எல்லா நலங்களையும்அருளும் என்பதும், தமக்கு ஆக்கம் என்றுகருதி உயிர்கள் அவ்வறத்தையே செய்யவேண்டும் என்பதும், இதற்குச்சான்றாக ஆக்கமுதலிய அனைத்தையும்விடுத்து அறத்தைமட்டும் விடாமல் பாண்டவர்கள் உறுதியாகப்பற்றி நின்றார் என்பதும், அதன்பயனாக அவர்கள் சிறப்பையும் செல்வத்தையும் அடைந்தார்கள் என்பதும் இதில் உணரப்படும்.

கதை.

பாண்டவர் பாண்டு என்னும் அரசன் புதல்வர். அவராவார் தருமன், வீமன், விசயன், நகுலன், சகாதேவன் என ஐவர். இற்றைக்கு 5000-வருடங்களுக்கு முன்னரே அத்தினைபுரியில் இருந்தார். இப்பொழுது டில்லியென்று வழங்கப்படுகிற இடமே பண்டு அப்புரி இருந்த இடமாம். சந்திரகுலத்தில் தோன்றிய அத்திபென்னும் அரசனை முதன் முதல் அதனை வனப்புற ஆக்கினன். அதனால் இப்புரிக்கு அப்பெயரிடப்பட்டது. அதிலிருந்து தருமன் முதலிய ஐவரும் பெருமையோடு வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் இவரது பெரிய தந்தையாரின் புதல்வராகிய துரியோதனன் முதலியோர் பொறுமையால் இவருக்குப் பெருந்துயர் விளைத்தனர். அவர்செய்த சூழ்ச்சியால் இவர் அரசபதவியையும் இழந்தார். ஆக்கழுந்துறந்தார். அடவியிற் புகுந்தார். அருந்துயர் அடைந்தார். ஆயினும் அறமே ஆக்கம் என்று அறிவுடனிருந்தார். அறவோர் இவரென அனைவரும் புகழ்ந்தார். இவ்வரிமையும் உண்மையுட்

திருமன் என்னும்பெயரானே நன்கு விளங்கும். சிறப்பும் செல்வமும் இவர்கள் அறத்தால் பெற்றனர். உயிர்க்கு அறத்தினூங்கு ஆக்கம் இல்லையென்பதை உலகம் காண இவர் உணர்த்திநின்றார். விரிவைப் பாரதத்தில் காண்க.

தருமமேயினை யில்பொருள்; தரையிடத் தகைசால்
ஒருமையின்பினை யுதவிவிண் ணுலகினும் உடன்போய்
அருமையின்பழுப்த் தந்தகர்ச் செறுமெனில் அறமே
இருமையுந்துணை யாகுவ தன்றி மற்றில்லை.
(திருக்கூவப்புராணம்.

தருமமே உலகம்போற்றச் சகலகா ரணமதாகும்
தருமமே யழியாதென்றும் தாபர மாகநிற்கும்
தருமமே தினைவெட்டோர்க்குச் சுவுக்கியம்அனத்தும்நல்கும்
தருமமே முத்திசேரும் சாதனம் என்றுட்கொள்வான்.
(காசிரகசியம்.)

ஈட்டிய ஒண்பொருளும் இல்லாழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரியின் உடம்பழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியின் அறமே துணை. (அறநெறிச்சாரம்.)

எண்ணியசீ ரெல்லாம் இனிதுதவும் நல்லறம்போல்
நண்ணியநற் கேளார் நமக்கு.

அறமே உயிர்கட்குச் சிறந்த உறுதிப் பொருள் என்பது இதனால் கூறப்பட்டது.

---

32. வீடணனுர் ஆக்கமுற வேலிலங்கை மன்னவனேன்
கூடினனென் கேடு குமரேசா—கேடில்
அறத்தினூஉங் காக்கமும் இல்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (உ)

இ—ள்.

குமரேசா! வீடணன் ஆக்கம்பெற இராவணன் என் கேட்டை அடைந்தான்? எனின், உயிர்கட்கு அறஞ்செய்தலினும் மிகுந்த ஆக்கமுடைய தில்லை; அவ்வறத்தை மறந்து விடுதலினும் மிக்க கேடும் இல்லை என்க.

அறஞ்செய்தவன் சிறப்பைபடும், செல்வத்தைதடும் அடைவான் என்று மேலே கூறினர்; இதில் அதனைச் செய்யாமல் மறந்தவன் கெடுவான் என்கின்றார்.

ஆக்கத்தை விழைதலும் கேட்டை வெறுத்தலும் உயிர்க்களது இயல்பு, ஆதலால் விரும்பியவற்றை விரும்பியவண்ணமே ஒருவன் பெறவேண்டுமாயின் அவன் அறஞ்செய்யவேண்டும் என்பதாம்.

கேட்டை அடைதற்கு ஒருவன் யாதும் செய்யவேண்டாம் அறம் செய்யாமையே அமையும் என்றபடி.

அறம் செய்தவன் ஆக்கம் பெறுவான், அதனைமறந்தவன் கேட்டை அடைவான் என்னும் உண்மை வீடணன்பாலும் இராவணனிடமும் முறையே காணப்படும்.

கதை.

இராவணன் புலத்திய முனிவரது புதல்வராகிய விச்சிரவசுவுக்கும் கேகசிக்கும் பிறந்தவன். அரக்கர் குலதிலகன். சிறந்த வர பலங்களை புடையவன். இலங்கையிலிருந்து அரசு புரிந்தான். நல்லபோர்வீரன். தேவர்முதலியஅனைவரையும் சிறையில்வென்று நிக்கு விசயம் செய்தான். மூன்று உலகங்கட்கும் தானே முதல்வனாய்நின்றான். அதனால் திரிலோகாதிபதியெனச் சிறந்து விளங்கினான். இத்துணை கலங்களை யெய்தியிருந்தும் இவன் அறத்தை மறந்தான். மறத்தையே புரிந்தான். அதனால் பெருங்கேடுற்றான்.

"கறங்குகால்புகா; கதிரவன் ஒளிபுகா; மறலி
மறம்புகாது; இனிவானவர் புகார்என்னை வப்பே
நிறம்புகாலத்துள் யாவையும் சிலதியினும் சிறையா
அறமபுகாதிந்த அணிமதிற் கிடக்கைகின் றகத்தின்"

இஃது இராவணனது இராஜதானியாகிய இலங்கையைப்பார்த்தபொழுது அனுமான் கூறினது. இதனால் இராவணன் எல்லாவலிமைகளையும் எய்தி இருந்தான் என்பதும், அவன் இருந்த உளரிலுங்கூட அறம் இல்லையென்பதும், அதனால் அழிந்தான் என்பதும் தெளியப்படும். இதன்விரிவை இராமாயணத்தில் காண்க.

கதை 2.

வீடணன் அரக்கர் குலதிலகனாகிய இராவணன் உடன்பிறந்த தம்பி. அறமும் அறிவும் அருளும் உடையவன். அறமே எல்லா நலங்களையும் அருளுமென்று கருதி அதனை மறவாமற் செய்தான். கம்பர் அடிக்கடி இவனைத் தருமஉருவினன் என்பர். தன்தமையன் செய்கின்ற மறக்கொடுமைகளை நினைந்து வருந்தினன். அறத்தை மறந்தால் கேடுவரும் என்று அண்ணனுக்கு அறிவுறுத்தினன். அவன் கேட்கவில்லை. அதன்பின் தருமமூர்த்தியாகிய இராமமூர்த்தியைச் சார்ந்தான். ஆக்கம் அனைத்தையும் அடைந்துமகிழ்ந்தான்.

மன்னுதவத்துப் புலத்தியன்றன் மரபுவிளங்க மறைவிளங்கத்
தன்னேரில்லாத் தந்தைக்குத் தக்கமகவாய்ச் சண்டாளர்
அன்னேரை முன்னேரைவருவித்த அத்தவியிற் சுத்தமுற
மின்னேரிலையாள் தன்வயிற்றில் விளங்குபுகழ் வீடணன்பிறந்
தான்.

பொய்புலைகளவும் பாதகமும்பொல்லா வெவ்வழுக்குப் அனைகடிந்து
மெய்புலைதயாவும் தருமமுடன் விளங்கும் பொறையும் இனவுணர்வும்
செய்யும் செயல்களனைவையெல்லாம் சிட்டர்செய்யும் செயலதென
அய்யன்புகழ்வீடணன் மறைகள்அனைத்த அறத்தின்வழிநின்றனன்"
(இராமாயணம்.)

இங்ஙனம் அறமுடையனாய் நின்ற இவன் சிறந்துவாழ்ந்தான். அதனை மறந்த அவ்வண்ணன் இழிந்து வீழ்ந்தான். "அறத்தின் உளங்கு ஆக்கமுமில்லை; அதனை மறத்தினுளங்கில்லைகேடு" என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து நின்றது.

உயிர்க்கு உறுதிபயக்கத்தக்க அறத்தை ஒருபோதும் ஒருவன் மறக்கலாகாது என்பது கருத்து.

திருவு மின்புஞ் சிறப்பும் புகழுமற்
றருவு ராக்கலும் நீக்கலு மூள்ளவோ
மருவும் புண்ணிய மாந்தர்க் கவையெலாம்
தருமம் மின்றெனில் தாமே சிலதையுமால். (சேதுபுராணம்)

ஓர்ந்தறத்தைக் கொண்டா ருயர்ந்தார் அதைமறந்தார்
கூர்ந்திழிந்து வீழ்ந்தார் குடி.

அறம்செய்யாதவன் கெடுவான் என்பது இதனால்கூறப்பட்டது.

33 கண்டாடல் செய்தார்என் கண்டி யடிகளன்று
கொண்ட விணையைக் குமரேசா—கண்டென்றும்
ஓவ்வும் வகையான் அறவிணை யோவாதே
செவ்வும்வாய் எல்லாஞ் செயல். (க)

உ—ள.

குமரேசா! கண்டியடிகள் தாம்கொண்ட அறவிணையை யேன் இடைவிடாமற் செய்தார்? எனின், அறவிணையை ஓவ்வும் வகையால் செவ்வும்வாயெல்லாம் ஓவாதே செயல் என்க.

ஓவுதல் = ஒழிதல். ஓவாதே = இடைவிடாமலே. ஓவ்வும் வகையால் = தமக்குஇயன்றவகையில். செவ்வும்வாயெல்லாம்செ யல் = செய்யமுடியுமான இடங்களிலெல்லாம் செய்க.

தம்மாலியன்றவரையும் அமயம் வாய்த்தபோதெல்லாம் ஒவ் வொருவரும் அறஞ்செய்யவேண்டும் என்பதாம்.

அறமாகிய நல்விணையை ஒருவன் தனது தகுதிக்கேற்பச்செய் யலாம் என்பதும், இடம்பொருள் ஏவல்கள் இல்லாதவணும் மனம் மொழி மெய்களால் அதனைச் செய்யலாம் என்பதும், அங்ஙனம் செய்புங்கால் அதனை யிடையே விடலாகாது என்பதும், இதற்குச் சான்றாகத் கண்டியடிகள் அறவிணையை ஓல்லும் வகையால் ஓவா தேசெய்தார் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

கண்டியடிகள் என்பவர் அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழநாட்டிலே திருவாரூரிலே யிருந்தார் பிறவி யிலேயே குருடர். பொருள்வளங் குறைந்தவர். ஆயினும் அரு ள்வளம் மிகுந்தவர். அறவிணையை நாளும் மறவாமற்செய்தார். திருவாரூர்ச் சிவாலயத்தின் மேற்றிசையில் ஒரு சிறு குளம் இருந் தது. அது சேறும் மணலும் நிறைந்து தூர்ந்திருந்தது. அக்குளத் தைஇவர் கண்டு பண்படுத்தினர். இந் நல்விணையை யிவர் செய்து வரும்பொழுது குளத்துள்ஒருதறியும் கரைமேல் ஒன்றும் நட்டினர். அவ்விரண்டற்கும் தொடர்பாக நீண்ட கயிறொன்று கட்டினர். அக்கயிற்றைத் தடவிக்கொண்டே சென்று மண்ணைக் கூடையில் எடுத்து வெளியே கொண்டு கட்டினர். ஓல்லுவகையால் ஓவா தேயிதனைச் செய்துவருங்காலத்தில் சாணைப்பார் இவருக்கு இட

றூறுகள் பலசெய்தனர். எவர் எதைச் செய்தாலும் தடையின்றி யிவர் தமது அறவினையை யிடைவிடாமல் செய்துவந்தார். அதனல் இவர் குருடுநீங்கினர். பெரும்புகழுற்றார். பேரின்பம்பெற்றார். செல்லும்வாயெல்லாம் அறத்தை ஓவாது செய்துவந்தாராதலால் இவர் சிறந்துநின்றார். விரிவைப் பெரியபுராணத்தில்காண்க.

ஆனடோ தெல்லாம் அறஞ்செய்க அஃதுனக்குத்
தானினைந்த வெல்லாந் தரும்.

அறம்செய்யும் திறம் இதனுல் அறிவிக்கப்பட்டது.

34. வேடமின்றிப் பூசையின்றி மெய்யறத்தைச் சாக்கியனர்
கூடினர் என்னே குமரேசா—ஓடும்
மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (சு)

இ—ள்.

குமரேசா! சாக்கியநாயனர் வேடமும் பூசையும் இல்லாமலே அறத்தின்பயனை யென்அடைந்தார்? எனின், ஒருவன் தனது மனத்துக்கண் மாசுஇலன் ஆதலே அறம்; பிற ஆகுல நீர என்க.

மாசு = குற்றம். ஆகுல நீர = ஆரவார நீர்மையன. அவையாவன பிறர் அறியவேண்டிச் செய்கின்ற ஆடம்பரங்கள்.

மனத்தில் குற்றமிலனுயிருத்தலே ஒருவனுக்கு அறமாம்; பிறவெல்லாம் வெறும் வேடங்களேயாம் என்பதாம்.

மொழியும், மெய்யும், மனத்தின்வழிப்பட்டன. இதன் நிலைமைக்குத்தக்கபடியே அவை நிலைத்துநிற்கும். ஆதலால் ஒருவன் மனம் மாசுஇலதாயிருந்தால் அவன் மொழியினும் மெய்யினும் மாசிலனும் என்க.

தீயவினைகளைச் சிந்தித்தல் மனத்தின்குற்றம். பொய்முதலியவற்றைப் பேசுதல் மொழியின்குற்றம். இரத்தல் முதலியவற்றைச் செய்தல் மெய்யின்குற்றம். மூக்காரணங்களினும் இக்குற்றங்கள் இல்லாமற்செய்தலே அறம் என்பது கருத்து. மேல் செல்லும் இடமெல்லாம் அறம் செய்க என்றார்; இதில் அதனைச் செய்தற்குச் சிறந்த இடம் இஃது என்று சுட்டினர்.

மாசு இல்லாத மனமுடைமையே ஒருவனுக்கு அறமாம் என்பதும், மனக்குற்றமுள்ளவன் எனைத்தறங்கள் செய்யினும் அதனால் பயனில்லை என்பதும், இதற்குச் சான்றாகச் சாக்கியனார் மனமலம் ஒன்றாலே அறமலங்கள் எல்லாம் அடைந்தார் என்பதும் இதில் உணர்த்தப் பட்டன.

கதை.

சாக்கியநாயனார் என்பவர் தொண்டைமண்டலத்திலே சங்கமங்கையென்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். கருவி நூல்களோடும் அறிவு நூல்களோடும் கசடறக்கற்றார். அக்காலத்தில் எங்கும் பரவியிருந்த புத்தமதத்தில் புகுந்தார். அதன் உண்மைகளை ஓதி யுணர்ந்தார். அதன்பின் சிவத்தைப்பேணுதலே தவத்திற்கு அழகு என்று நன்கு தெளிந்தார். ஆயினும் தாம் முன்னிருந்தபடியே யிருந்தார். வேறு எவ்வித வெளிவேடங்களும் கொள்ளவில்லை. மனத்தில்மட்டும் மாசு இலராயினர். அந்தரங்கத்தில் அரனை வழிபட்டு வந்தார். அறப்பயன் அனைத்தும் சிறப்புடன் பெற்றார். மாசறுமனத்தால் இவர் ஈசனருள் எய்தினர். எங்கும் புகழுற இன்புற்றிருந்தார். மனத்துக்கண் மாசு இல்லாதவரே அறத்தின்பயனை அடைவர் என்பதை உலகம்காண இவர்உணர்த்தி நின்றார். விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.

மனத்தின்கண் மாசுஇல்லாதவன் செய்யும் அறமே சிறந்த பயனை விளைவிக்கும் என்பது கருத்து.

கற்றதங் கல்வியும் கடவுட் பூசையும்
நற்றவம் இயற்றலும் நலையில் தானமும்
மற்றுள அறங்களனைத்தும் மனத்தின் பாலழுக்
கற்றவர்க் கேபயன் அளிக்கும் என்பரால். (காசிகாண்டம்)

என்னேமற் றிவ்வுடம்பு பெற்றும் அறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—அன்னே
அளவிறந்த காதற்றம் ஆருயிர் ரண்ணுர்க்
கொளவிளைக் குங் கூற்றமுங் கண்டு. (காலடியார்.)

உள்ளம் புனித முறலே உயரறமாம்
கள்ளமே மற்றவெலாங் காண்.

அறத்தின இயல்பு இதனால் அறிவிக்கப்பட்டது.

85. வெற்றி மிகுதக்கன் வேள்வியறம் செய்துமேன்
குற்றமிக வுற்றான் குமரேசா — உற்ற
அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (ஙு)

இ—ள்.

குமரேசா! தக்கன் வேள்வியாகிய அறத்தைச் செய்தும் என் குற்றம் உற்றான்? எனின், அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் என்க.

இழுக்கா இயன்றது = நீக்கிநடந்தது. செய்யா என்னும் வாய்பாட்டைச் செய்தென்னும் வாய்பாடாகத்திரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

அழுக்காறு = பிறருடைய நலங்களைக்கண்டு பொறாமல் மனம் புழுங்குதல். மற்றவற்றினும் இது மிக்க இழிகுணமாதலால் இதனை முன்வைத்தார்.

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்னும் இந்நான்கும் இன்றி நடப்பதே அறமாம் என்பதாம்.

அழுக்காறு முதலிய மூன்றும் மனக்குற்றமாகவும், இன்னாச்சொல் மொழிக்குற்றமாகவும் கொள்ளப்படும்.

மனம் மொழி மெய் என்னும் மூன்று கரணங்களானும் அறம் செய்யப்படுதல் என்பதும், அவற்றான் அதனைச் செய்யுங்கால் மேற்குறித்த நான்கும் விரவாமல் இருக்கவேண்டும் என்பதும், அவற்றுள் ஒன்றுகலந்தாலும் அறம் நன்றுகாதென்பதும், இதற்குச் சான்றாகத் தக்கன் வேள்வியறம் செய்தும் பொறாமையும் வெகுளியும் பொருந்தியிருந்ததினால் அது பொன்றியதென்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

தக்கன் என்பவன் பிரமாவின் மானசபுத்திரருள் ஒருவன். சிறவிதியென்று ஒரு மறுபெயருடையவன். உமாதேவியார் தனக்குப் புத்திரியாக வந்து தோன்றும்படி அருந்தவஞ்செய்தான் அம்மையும் அவ்வாறே வந்து அவதரித்தார். உலகமாதாவைத் தனது மகளாகப் பெற்றமையை நினைந்து இவன் பெருமகிழ்வடைந்தான். தாட்சாயணியென்று அம்மைக்குத் தன் சம்பந்தமாக

வோர் தனிப்பெயரிட்டான். போற்றி வளர்த்தான். பருவமுற்ற பின் பரமனுக்குத் திருமணஞ்செய்து உதவினன். அதன்பின் சிவ பெருமானைத் தனது மருமகனைக் கருதினன். இக் கருத்தால் பெருமான்பெருமையை இவன் அறவே மறந்தான். செருக்குடன் ஒருநாள் கைலைக்குச்சென்றனன். அங்குள்ள சிவகணங்கள் இவனை அவமதித்தன. அதனல் இவன் வெகுண்டான். விரைந்து மீண் டான். பொறுமைகொண்டான். பரமனையிகழும் நோக்கத்தோடு வெகுளியால் இவன் ஒரு பெருவேள்வி செய்தான். இந்த உண் மையை யிறைவன் அறிந்து வீரபத்திரரை யேவினர். அவர் இவன் வேள்வியைச் சிதைத்தார். வெகுளியும் பொறுமையும் விரவிச்செய்ததால் இவனது அறஞ்சிதைந்தது. விரிவைக் கந்தபுரா ணத்தில் காண்க.

கோட்ட முறுநெஞ்சன் கோடியறஞ் செய்தாலும்
காட்டில் எரித்தநிலாக் காண்.

அழுக்காறு முதலிய இழிகுணங்கள் சிறிதும் விரவாமல் செய்தலே அறமாம் என்பது இதனல் கூறப்பட்டது.

36. அன்றிளைபம் என்ன தறமேன் விரைந்துசெய்தான்
குன்றுத் துருவன் குமரேசா—இன்றிருந்து
அன்றறிவாம் என்ன தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை. (சு)

இ—ள்.

குமரேசா! துருவன் தன்னை இளையவன் என்று எண்ணு மல் அன்றேறன் அறத்தை விரைந்துசெய்தான்? எனின், அன் று அறிவாம் என்னது அறஞ்செய்க; அஃது ஒருவன் பொன் றுங்கால் அவனுக்குப் பொன்றுத் துணையாய் நின்று உதவும் என்க.

பொன்றுதல் = அழிதல். பொன்றுத்துணை = அழியாததுணை. நிலையான உண்மைத்துணை என்றபடி. அறமானது தன்னைச்செய்த உடம்பு அழியினும் தான் அழியாமல் நின்று அவ்வுயிர் புக்குழிப் புகுந்து தன்பயனை அதற்கு என்றும் இனிது உதவும் ஆதலால் அதனைப்பொன்றுத்துணை யென்றார்.

பின்புசெய்வோம் என்னாது அறத்தை முன்னதாக விரைந்து செய்க; அழியுங்காலத்து அழியாத் துணையாய் அஃது அமைந்து நிற்கும் என்பதாம்.

இத்தகைய துணையை ஒருவன் விரைந்து செய்துகொள்ள வேண்டும் என்பது கருத்து. கேற்றிருந்தார் இன்று வெந்துதீர்ஞர் என்றபடி நிலையாமையே மிகுந்துள்ள இவ்வுலகத்தில் ஒருவன் நிலைத்துள்ளபொழுதே நிலையான துணையைத் தேடிக்கொள்வானுகில் அவன் அழிவில் இன்பத்தை யடைந்தவனுவான் என்பதாம். அன்று என்றது மாற்ருந்தாய் துருவனை யிகழ்ந்த அக்காலத்தை.

அறமே ஒருவனுக்கு அழிவில்லாததுணையென்பதும், அதனை இளமைப்பருவத்தே விரைந்து செய்யவேண்டும் என்பதும், இதற்குச்சான்ருகத் துருவன் இளம்பருவத்தே யறம்புரிந்தான் என்பதும், அதனுல் அவன் பொன்ரு இன்பம் பொருந்தினன் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

உத்தானபாதன் என்னும் அரசன் ஒருவன் பண்டு இப்பரதகண்டத்தின் வடபாலிருந்து அரசு புரிந்துவந்தான். இவனுக்குச் சுநீதி சுருசி என்று இரண்டுமனைவிகள் உண்டு. இவ்விருவருள் சுநீதிபால் ஒரு புதல்வன் தோன்றினன். அவனுக்குத் துருவன் என்று பெயரிட்டார். அருமையாக வளர்த்தார். ஒருநாள் இப்பாலன் தந்தையின்மடிமேல் தங்கச் சார்ந்தான். இவன் சிறியதாயாராகிய சுருசி சகியாதவளாய் இவனை வைதாள். இவனும் நாணிவருந்தித் தாயிடம் சென்ருன். தாயுந்தெரிந்து தனதுளந்தளர்ந்தாள். மகன் தானைத்தேற்றினன். அறமே துணையென்று அருங்கானலடைந்தான் நாரதர் அருளால் நற்றவஞ் செய்தான். அதனுல் இவன் இளம்பருவத்திலேயே யிறைவன் அருளை யெய்தி யறங்கள்பல புரிந்து பெரும்புகழ்பெற்ருன். அழிவில்வாழ்வை யுற்ருன். இதன்விரிவு பாகவதம் காசிகாண்டம் முதலிய பல நூல்களிலும் காணப்படும்.

வேளாயுள்ள போழ்தே விரைந்தறஞ்செய் துய்கபின்
நாளாயெனல் பீழையா நாடு

அறமே ஒருவனுக்கு அழியாத் துணையென்பது இதனல் அறிவிக்கப்பட்டது.

37. உற்ற மணிச்சிவிகை யூர்ந்தாரேன் மூர்த்தியார்
கொற்றவனேன் தாழ்ந்தான் குமரேசா—பற்றும்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தலே ஊர்ந்தா னிடை. (எ)

இ—ள்.

குமரேசா! அறம்புரிந்த மூர்த்திநாயனார் சிவிகையூர்ந்தார்; அதனைத்துறந்த ஓர் அரசன் என் தாழ்ந்தான்? எனின், அறத்து ஆறு இது எனல் வேண்டா; சிவிகை பொறுத்தாரே டு ஊர்ந்தானிடைக் காணப்படும் என்க.

ஆறு = பயன். சிவிகை = பல்லக்கு. பொறுத்தல் = சுமத்தல். ஊர்தல் = செலுத்தல். காணப்படும் என்பது வருவிக்கப்பட்டது.

அறத்தின்பயனை நாம் சுருதிகொண்டு அறியவேண்டா; காட்சியானே காணலாம் என்பதாம். மேல் அறம் பொன்றுத் துணையென்றார்; இதில் அது துணையாந் தன்மையைத் தெளிவித்தார்.

பல்லக்கின்மேல் அமர்ந்திருப்பவன் அறஞ்செய்தவன் என்றும், அதனைச் சுமந்து செல்பவன் அறம் செய்யாதவன் என்றார்; நீவீரே கண்கூடாக அறிந்துகொள்ளலாம்; யாம் வேறு கூறவேண்டா என்று தேவர் கூறியபடியிது

அறத்தால் சிறந்த அரசஇன்பத்தைப்பெறலாம் என்பது கருத்து. இவ்வுண்மை மூர்த்திநாயனார்பால் உணரப்படும்.

கதை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய மூர்த்திநாயனார் என்பவர் மதுரையில் இருந்தார். சிவபெருமானுக்குத் தினந்தோறும் சந்தனக்காப்பு இட்டுவந்தார். இந்த அறத்தின்பயனால் இவர் அரசரானார். யானை இரதம் சிவிகை முதலியவற்றில் இருந்து செலுத்தினர். இன்பம்பெற்றார். இவர் செய்துவந்த அறத்துக்கு இடையூறுசெய்த கருநாடதேசத்து அரசன் தனது அரசபதவியையிழந்திறந்தான். அவனது பரிசனங்கள் மூர்த்தியாருக்குச் சிவிகை தாங்கினர். சீர்கள் பல செய்தார். மூர்த்தியார் அறத்தாற்றால் சிவிகையூர்ந்தார். மறத்தால் மற்றையோர் அதனைச் சுமந்துசென்றார். இதன்விரிவு பெரியபுராணத்தில் காணப்படும். இனி, பண்டு

சிவிகை பொறுத்த சடபரதருக்கும் அதனை யூர்ந்த சவ்வீரன் என்னும் அரசனுக்கும் இடையே நிகழ்ந்த மொழிகளால் அறத்தாறு உணரப்படும்; யாம் உணர்த்தவேண்டா என்று தேவர் அவ்விரு வரைச் சுட்டியதுபோலவும் இது தோன்று மென்பாரு முளர்.

அம்மைத்தாம் செய்த அறத்தின் வருபயனை
இம்மைத்துய்த் தின்புறு நின்றவர்—உம்மைக்கு
அறஞ்செய்யா தைம்புலனும் ஆற்றுதல் கல்லாக்
கறந்துண்டஃ தோம்பாமை யாம். (அறனெறிச்சாரம்.)

ஆண்டவனுய் நின்றறவோ னுள்வா னஃதில்லான்
பூண்டமை யாவன் புகுந்து.

அறத்தின் பயனைக் கண்கூடாகக் காணலாம் என்பது இதனுல் கூறப்பட்டது.

---

38. நன்றே புரிந்துவந்த நந்தனர் வாழ்நாள்போய்க்
குன்றிநின்ற தென்னே குபேரசா—என்றேனும்
வீழ்நாள் படாஅமை நன்றுற்றின் அஃதாருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (அ)

இ—ள்.

குபேரசா! நாள்தோறும் அறமேசெய்துவந்த நந்தனரது வாழ்நாள் என் குன்றிநின்றது? எனின், வீழ்நாள்படாமை நன்று ஆற்றின் அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் என்க.

வீழ்தல் = கழிதல். நன்று = அறம். அஃது = அச்செயல். வீழ்நாள் படாமை = கழியும்நாள் இல்லாமல். அஃதாவது அறம் செய்யாமல் கழிந்தநாள் ஒன்று இருந்தது என்று உண்டாகாதபடி என்க. ஒருவன் அறத்தைச் செய்வானுகில் அச்செயல் அவன் பிறவினையைத் தீர்த்துவிடும் என்பார் "அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல்" என்றார்.

நன்றை இடைவிடாமல் என்றும் செய்யவேண்டும் என்பது குறிப்பு. அறமானது தன்னைச்செய்த உயிரைப் பின்பு பிறவியிற் சேரவொட்டாதபடி செய்து விடுமாதலால் அதனை உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

வாழ் நாள் = (உயிர் உடலோடு கூடி) வாழும் நாள். பிறவி என்றபடி. இடையறாது தொடர்பாக வந்துகொண்டிருக்கிற பிறவியின் வழியை யினிவாராமல் அடைப்பதற்கோர் தகுதியான கதவு இதுவெனத் தேவர் இதில் அருளியுள்ளமை காண்க. கல் என்றது அதன் திண்மை கருதி.

ஒருநாளும் வீணுகாமல் நாளும் ஒருவன் அறத்தைச் செய்து வருவானுகில் அவன்பிறவிதீர்ந்து பேரின்பம்அடைவான்என்பதாம்.

நல்லது நினைத்தல், நல்லது சொல்லல், நல்லது செய்யலே அறமாகும் ஆதலால் அது நன்று என நின்றது. இத்தகைய புண்ணியத்தை நாளும் ஒருவன் செய்துவந்தால் அவன் புனிதனுவன்; ஆகவே இன்னுயிர்க்கு இறைவனுய் இன்பமூர்த்தியாய், பொன்னுயிராய்ப் பிறந்து உய்ந்து போவன் என்க.

இயன்றவரையில் ஒருவன் நாள்தோறும் அறம் செய்யவேண்டும் என்பதும், அங்ஙனம் செய்வானுயின் அவன் பிறவிதீர்வான் என்பதும், இதற்குச் சான்றுக நாளும் நன்று ஆற்றிவந்த நந்தனர் பிறவிதீர்ந்தார் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

நந்தனர் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழமண்டலத்திலே, மேற்கா நாட்டிலுள்ள ஆதனூர் என்னும் ஊரிலே பறையர் குலத்திலே பிறந்தார். வெட்டிமைத்தொழில் புரிந்தார். தமது மரபுக்கேற்ற வகையால் இயன்றவரை நாளும் நல்வினையை நயந்து செய்துவந்தார். அதனுல் இவர் மனந்தூயராயினர்.

"பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபால்
சிறந்தபெருங் காதலினுல் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரி கொள்கையராயே அடித்தொண்டு னெறிநின்றூர்"

இங்ஙனம் நின்ற இவர், சிவாலயங்கள் தோறும் சென்று தரிசனம் செய்யவிரும்பினர். திருப்புன்கூர்என்னுந்திவ்வியதலத்துக்குச்சென்றூர். அங்கே ஒரு பெரியகுளத்தை வெட்டினர். ஆலயங்களுக்குரிய பேரிகை, முழவு, யாழ் முதலியவற்றிற்குத் தோல் வார் தைப்பு முதலியன உதவினர். சிதம்பர தரிசனம் செய்யச் சிந்தித்தார்.

தமது குலம் இழிந்தது என்றும், தாம் எவ்வாறு அங்கே புகமுடியும் என்றும் எண்ணி யெண்ணி வருந்தினர். ஆயினும் சிதம்பரத்துக்குச் செல்ல வேண்டும் என்னும் ஆசை யிவர்க்கு அதிகரித்தது. வேறு நாட்டமின்றிச் சிதம்பரத்தையே நாடினர். இப்பொழுதே செல்வேன் என்று துணிந்து எழுவார். நான் புலையனையிற்றே! எவ்வாறு அங்குப் புகுவேன் என்று எண்ணி யமர்வார். "நாளைப்போவேன், நாளைப்போவேன்," என்று நாள்பல கழித்தார். அதனால் திருநாளைப்போவார் என்னும் ஒரு திருப் பெயரை இவர்பெற்றார். காதல் அதிகரித்ததால் நல்லநாள் ஒன்றில் தில்லையை நோக்கிச் சென்றார். சென்றவர் நகரினுட் செல்லாமல் நின்றார். தில்லையின் எல்லையை மெல்லச் சுற்றினர். ஐயனை நினைந்து மெய்ம்மயிர் சிலிர்த்தார். புறத்தே நின்று தொழுதார். அகத்தே நினைந்து அழுதார். அன்று இவர் உருகின்றபடியை எவர் உரைக்கவல்லார்? எம்பெருமானும் இவரை யாட்கொள்ள அருள்கூர்ந்தார். தில்லைவாழ் அந்தணர்கட் குணர்த்தினர். உணர்த்தினபடியே அவரனைவரும் இவரைப் புலைமகன் என்று இகழாமல் தலைமகன் என்று புகழ்ந்தார். கொணர்ந்தார். மங்கலமருப்பைப் பொங்கமுற வளர்த்தார். விருப்புடன் நந்தனர் அம்மருப்பில் குதித்தார். விண்ணவர்போற்றும் புண்ணிய வுருவைப்பெற்றார். அந்தணர் உடன்வர அடைந்தனர் ஆலயம். கண்டவர் அனைவரும் காணற்பால் நின்றனர். கனகசபையிற் கலந்தனர் நந்தனர். காணுட அறம்புரிந்தமையால் நந்தனர் வாழ்நாள் வழி தூர்ந்தது.

"தில்லைவா ழந்தணரு முடன்சென்று சென்றிறைஞ்சிக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யுள்புகுந்தார் உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்.

அந்தணர்க ளதிசயித்தார்; அருமுனிவர் துதிசெய்தார்;
வந்தணைந்த நிருத்தனாண்டார் தம்மையினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையும் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா வானந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்."

என்றபடி தெருளடைந்து இவர் பிறவிதீர்ந்து நின்றார். வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃது ஒருவன் வாழ்நாள் வழியடைக்கும்

கல்லாம் என்பதை உலகம் காண இவ்வுணர்த்தினான். இதன் விரிவு பெரியபுராணத்தில் காணப்படும்.

சென்றநா ளெல்லாம் சிறுவிரல்வைத் தெண்ணாலாம்
நின்றநாள் யார்க்கும் உணர்வரி—தென்றிருவன்
நன்மை புரியாது காலுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்.

(நாலடியார்.)

என்று முயிரின்பம் எய்த விரும்பினால்
நன்று புரிக நயந்து.

அறம் பிறவினையை நீக்கிப் பேரின்பம் தரும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

39. கூடிமனை யின்பமுற்ற கோவலனென் மாதவியால்
கோடிதுன்பம் கொண்டான் குமரேசா—தேடும்
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

(க)

இ—ள்.

குமரேசா! மனைவியோடு கூடி யின்பமுற்ற கோவலன் மாதவியால் என் பெருந்துன்பம் அடைந்தான்? எனின், அறத்தான் வருவதே யின்பம்; மற்ற எல்லாம் புறத்தபுகழும் இல என்க.

மற்று என்னும் இலேடச்சொல் அறத்துக்கு மறுதலையான மறத்தைக் குறித்து நின்றது.

மற்று எல்லாம் = பாவத்தால் வருவனவெல்லாம்.

புறத்த என்றது இன்பத்துக்குப் புறமாகிய துன்பத்தை. இறந்தது தழுவிய எச்சவும்மையானது இன்பமும் இல்லையென் பதை விளக்கி நின்றது.

அறநெறியால் வரும்பொருளே ஒருவனுக்கு இன்பமும் புகழும் தரும்பொருளாம் என்பதும், பிறநெறியில் வருவன துன்பமும் பழியுமே தருவனவாம் என்பதும், இதற்குச் சான்றாகக் கோவலன் அறநெறியாற் பெற்ற கண்ணகியால் இன்பமும் புகழும் எய்தினான் என்பதும், பிறநெறியால் கொண்ட மாதவியால் துன்பமும் பழியும் அடைந்தான் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

சோழநாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்திலே வணிகர்குலதில கனகிய மாசாத்துவான் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் இருநிதிக்கிழவன் எனப் பெருநிதியுடையவன். பெருமனைக் கிழத்தியென்னும் மனைவியோடுகூடி அவன் இல்வாழ்க்கையை யினிது நடத்தினன். இங்ஙனம் நடத்திவரும் நாளில் அவனுக்கொரு புதல்வன் தோன்றினன். அப்புதல்வனுக்குக் கோவலன் என்று பெயரிட்டார் மிக்க சிறப்போடு போற்றிவளர்த்தார். இவன் பேரழகுவாய்ந்தவன். பருவம் அடைந்தபின் அந்நகரில் மாநாய்கன் மகளாகிய கண்ணகியென்னும் புண்ணியவதியை இவனுக்குத் திருமணம் முடித்தார். இருவரும் ஒருமனப்பட்டு இல்வாழ்ந்திருந்தார். அன்புடன் இன்பம் ஆரத்துய்த்தார். கோவலன் அறமெறியில் பெற்ற தனது மனைவியை நோக்கி,

"மாசறு போன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அருமறைபயற்ற பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருபட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
தாழிருங் கூந்தற் றையால் நின்னை யென்று
உலவாக் கட்டுரை பல பாராட்டி." (சிலப்பதிகாரம்.)

நாளும் மகிழ்ந்து நலமுற வாழ்ந்தான். இங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் மாதவியென்னும் பெயரினையுடைய ஒரு பொதுமாதைக் கண்டான். அவள்மேற் காதல் கொண்டான். அதனால் கற்புத்தெய்வமாகிய தனது காதலியை மறந்தான். மாதவியுடனே மருவி மகிழ்ந்தான். அவளால் தனது பொருள் முழுதையும் ஒருங்கே இழந்தான். வறியனாயினான். அதன்பின் தன்மனைவிபால் வந்தான். கண்ணகி தன் கணவனைக் கண்டாள். அவன் நிலைமையைநினைந்தாள். நெஞ்சுருகினாள். கலங்கினாள். தனது காலில் அணிந்திருந்த அழகிய பொற்சிலம்பைக் கழற்றிக் கோவலன் கையிற் கொடுத்தாள். இதனை விலைப்படுத்துங்கள் அப்பொருள்கொண்டு நாமிருவருடம் இனிது வாழலாம் என்றுகூறிக் கணவ

னைத்தேற்றினாள். அவனுந் தேறினான். அச்சிலம்பை விற்றற் பொருட்டு மனைவியோடு மதுரைக்குச் சென்றான். சென்றவிடத்தில் தீவினைவயத்தால் கோவலன் கொலையுண்டிறந்தான். இத்துன்பமும் பழியும் மறவிறியால் வந்த மாதவியால் இவனுக்கு வந்தன. இதன் விரிவைச் சிலப்பதிகாரத்தில் காண்க.

தருமமாவதுவே இன்பம் தருமலால் தருமநீக்கு
கருமமாவதுபோல் தோன்றிக் காட்டினும் பசுமட்பாண்டத்
தருமையா நிரப்புந்தண்ணீ ரனைத்துமப் பாண்டத்தோடும்
ஒருமையாக் கெடுதலேபோன் றொருகணத் தழியுமன்றே.
(பிரபோத சந்திரோதயம்.)

ஞானியெனத் தேவனென நல்லனெனச் செல்வனெனக்
கோனெனப்பல் கோடி கொடுக்கும்; சிறப்பினையும்
ஈனும்; மறந்தால் இடர்பலவும் ஈனுமால்
ஆனது செய்க அறன். (இன்னிசை)

மற்றறிவா நல்வினை யாமினையம் என்னுது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்
மூற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு. (நாலடியார்.)

அறமுடையான் இன்ப மடைவானஃ தில்லான்
உறமிகுந்த துன்ப முறும்.

அறவிறியால் வருவனவே ஒருவனுக்கு இன்பமும் புகழும் தருவனவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

40. நல்வினையே செய்தான் நளன்பாம்பின் செய்கைகண்டும்
கொல்வினையேன் விட்டான் குமரேசா—சொல்லிற்
செயற்பால தோரும் அறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. (ய)

இ—ள்.

குமரேசா! நளன் நல்வினையையே செய்தான பாம்பின் செய்கையைக்கண்டும் என் கொல்வினையைத் தவிர்ந்தான்? எனின், அறனே ஒருவனுக்குச் செயற்பாலது; பழி உயற்பாலது என்க.

அறனே என்பதில் ஏகாரம் தெரிநிலேகாரம். ஓரும்

என்னும் இடைச்சொற்கள் இரண்டும் அசைநிலையாயின. உயற்பாலது = ஒழிக்கப்படும் உரிமையையுடையது.

ஒருவன் விரும்பிச் செய்யத்தக்கது அறமே; வெறுத்து ஒழிக்கத்தக்கது பழியே என்பதாம்.

விதியும் விலக்கும் இதில் விதந்து கூறினர். ஒருவன் புகழ் பயக்கும் வினைகளைப் பேணிச்செய்து பழிவினைக்கும் செயல்களை நாணி ஒழிக்கவேண்டும் என்பதாம். இவ்வுண்மை நளன்பால் உணரப்படும்.

கதை.

நளன் நிடதநாட்டிலுள்ள மாவிந்தபுரியில் விளங்கியிருந்தான். சந்திரகுலதிலகன். திகிரியுருட்டி நிலம்முழுதும் ஆண்ட செங்கோல் வேந்தன். விதர்ப்பதேசத்து வீமராசன் மகளாகிய தமயந்தியை மணம்புரிந்தான். அதில் உண்டான செற்றத்தால் கலி இவனைத் தொடர்ந்தான். அதனால் இவன் சூதாடி நாடிழந்தான். மனைவியோடு வனம் புகுந்தான். பின் பிரிந்து அகன்றான். அக்காலத்தில் அங்கே கார்க்கோடகன் என்னும் பாம்புஒன்று காட்டுத்தீயில் அகப்பட்டுப் பதைத்துத் துடித்தது. நளன் அதனைக் கண்டான். இரக்கமுற்று நெருப்பினுட் புகுந்தான். அதனை வெளியேற்றிக் காப்பாற்றினான். பின் அம்மோதார் எதுவால் இவனைத் தீண்டியது. தீண்டி வருத்தினும் அதற்குயாதொரு தீங்கும்செய்யாமல் அரசன் நின்றான். அது பின் இவனுக்கு நன்மையாக முடிந்தது. புகழுக்கேதுவாகிய அறவினையை உளமுருகிச் செய்தான்; பழிவினையை யாண்டும் பற்றுதொழித்தான். ஒருவனுக்குச்செயற்பாலது அறமே உயற்பாலது பழியே; என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான். இதன் விரிவை நள சரிதத்தில்காண்க

கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பின். (நன்னெறி.)

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
விடுந்தான் எழுதலரிதால் மற்றிறன்கொல்
அறங்காலை செய்யாத வாறு. (அறநெறிச்சாரம்.)

பாம்பழல் வாயிறைற் பற்ற மண்டுகம்
தேம்பிநுங் கையருறுஞ் சீவன் தேயுநாள்
ஓம்பிட வல்லரே யுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்தபுண்ணியம். (சிவதருமோத்தரம்)

மெய்யறிவ னோவின் விதித்த விலக்கிய
செய்தலும், செய்யா விடலும், திகழுறன்
மைதீர் மனைநாவால் காயத்தால் வாய்ப்பன
செய்கவெஞ் ஞான்றுந் தெரிந்து. (இன்னிசை.)

இன்றுகொல்! அன்றுகொல்! என்றுகொல்! என்னுது
பின்னைறச்சிய நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை; ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம். (நாலடியார்.)

ஒருவன் செய்யத் தகுவதும், ஒழிக்கத்தகுவதும், இதனுள் கூறப்பட்டன.

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

அறம் உயிர்கட்குச் செல்வமுதலிய எல்லாநலங்களையுந் தந்து சிறப்பையுங் கொடுக்கும். அறமே ஒருவனுக்குச் சிறந்த ஆக்கம். அதனை மறந்தவர் கெடுவார். இயன்றமட்டும் அறத்தை என்றும் எங்கும் செய்தல் வேண்டும். மனத்தில் குற்றம் இல்லாதவனே உத்தம அறவோன். பொறாமை கோபம் ஆசை முதலிய இழி குணங்கள் இல்லாமல் ஒருவன் அறத்தைச் செய்தல் வேண்டும். அதனை இளம் பருவத்தே செய்யவேண்டும். அதன் பயனை அனை வரும் கண்கூடாகக் காணலாம். ஒருவன் அறஞ் செய்வாரைவில் அவன் பிறவி தானே நீங்கிவிடும். அற நெறியால் வருவனவே புகழும் இன்பமும் பொருந்தப் பயக்கும். பிறநெறியால் வருவன பழியும் துன்பமும் இழிவுடன் கொடுக்கும். ஆகலால் ஒருவன் கொள்ளத்தக்கது அறமே; தள்ளத்தக்கது பழியே; என்பனவாம்.

4-வது அறன்வலியுறுத்தல் முற்றிற்று.

பாயிரம் முற்றிற்று.

இல்லறவியல்.

இல்லின்கணிருந்தும் அதனைத் துறந்து நின்றும் அறம் செய்யலாம் ஆதலால் இல்லறம் துறவறம் என அது, இருவகைப்படும். எல்லார்க்கும் எளிதாக இனிதமைந்து நிற்கும் இயல்பினதாகலின் முன்னதாக இல்லறம் கூறுகின்றார். இஃது இல்வாழ்க்கைமுதல் புகழ் ஈறாக இருபது அதிகாரங்களை யுடையது.

5-ம் அதிகாரம் இல்வாழ்க்கை.

அஃதாவது மனைவியோடுகூடி ஒருவன் இல்லின்கண் இருந்து வாழும் இயல்பு. முன்னர் வலியுறுத்திய அறத்திறத்தினை இதில் உணர்த்துகின்றாராதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

41. ஏமமற் றெல்லார்க்கும் இன்றுணையா கன்றுசெய்தான்
கோமம்வல் லாளன் குமரேசா — ஞானமுடன்
இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (க)

இ—ள்.

குமரேசா! வல்லாளன் என்னும் அரசன் எல்லோருக்கும் இனிய துணையாய்நின்று என் உதவிசெய்தான்? எனின், இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை என்க.

நல் ஆற்றின் நின்ற துணை = நல்ல ஒழுக்க நெறியின்கண் நிற்கின்ற நிலையான துணை. ஆறு நெறி வழி என்பன ஒரு பொருளன.

பிரமச்சாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி என்னும் நால்வகை நிலையினரும் ஒருவரிசையில்வைத்து எண்ணப்படுவார்; அவருள் கிருகத்தனாகிய இல்வாழ்வானே வேறுபிரித்தமையால் ஏனையோரை மூவர் என்றார். இது தொகைக்குறிப்பு.

இல்வாழ்பவன், சந்நியாசி முதலிய மூவர்க்கும் உணவும், உடையும், மருந்தும், இடமும் தந்து ஆதரிக்கவேண்டும் என்ப

தாம். அவ்வுணவு முதலியவற்றால் அவர்கள் பசி, குளிர், நோய் முதலியன நீங்கித் தங்கட்குரிய தவவொழுக்கங்களை நன்குசெய்து உய்வார்கள்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்லுகின்ற வழி நடையினர்க்கு இடையிலே புண்டாகும் தடைகளை நீக்கிக் குறித்த இடத்திலே யவரைக் கொண்டுபோய்ச்சேர்க்கும் நல்ல வழித்துணையாளர்போல், பந்தமாகிய இந்த உலகத்திலிருந்து முத்தி உலகை நோக்கிச்செல்லும் அறநெறியாளர்க்குப் பசி முதலியவற்றால் உளவாகின்ற வருத்தங்களை நீக்கி அவரை அறநெறியில் வழுவாமல் செல்லும்படி செய்துநிற்றலால் இல்வாழ்வானை அவர்க்கு "நல் ஆற்றில் நின்ற துணை" என்றார். இனி ஆற்றில் நின்ற நல் துணை எனவும் கொள்ளப்படும். இறைவனே எல்லார்க்கும் துணை எனினும் இம் மூவர்க்கும் வெளிப்படையாக இல்வாழ்வானே துணையாம்என்றபடி.

துறந்தார் முதலிய சிறந்தார் எவர்க்கும் இல்வாழ்வானே நல்ல துணை என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வல்லானால் உணரப்படும்.

கதை.

வல்லாளன் என்பவன் திருவண்ணாமலையில் இருந்த ஒரு சிறந்த அரசன். விழுமிய குணங்கள் பலவும் நிறைந்தவன். நெறி வழுவாதவன். நற்குணம் நிறைந்த இரண்டு தேவிமாரோடு கூடியிவன் இல்வாழ்ந்திருந்தான். எல்லாரிடமும் இரக்கமும் அன்பும் காட்டினான். துறவோர் முதலிய அறவோர் எவர்க்கும் அருந்துணையாய் நின்றான். அவர்கட்கு உணவும்உடையும் தினமும் உதவினான். இவன் செய்துவருகின்ற இல்லறத்தின் சிறப்பையும் இவனது வள்ளற்குணத்தையும் இறைவன் எண்ணினார். மகிழ்ந்தார். அன்புடையிவன்பால் அருளுடன் வந்தார். சங்கமவேடந்தரித்தார். ஒரு சந்நியாசிபோல் நின்றார். கண்டான் அரசன். காலில் விழுந்தான். தனது திருமனைக்குள் அழைத்துக்கொண்டு போய் உபசரித்தான். அவர் விரும்பிய எதையும் வெறுப்பின்றி உதவினான். எல்லாருக்கும் நல்ல துணையாய் நின்று இவன் இல்வாழ்ந்தான். அதனால் தனிமுதல்வனாகிய பரமனே யிவனுக்கு இனிய புதல்வனாய் வந்து இன்பஞ்செய்தான். பின்பு இவன் இசை

பெற்று நின்றான். ஈறில்லின்பம் எய்தினன். இஃது அருணைசலப் புராணத்தில் உள்ளது.

இறந்து படவரினும் எண்ணியறஞ் செய்க
மறந்தும் புரியல் மறம்.
என்று மெவர்க்கும் இதமாய்நின் றில்வாழ்வான்
நன்று புரிவ னயந்து.

இல்வாழ்வான் இயல்பு இதனல் கூறப்பட்டது.

---

42. உற்றதுணை யாய்முன் உதவினனென் பாண்டவர்க்குக்
கொற்ற விராடன் குமரேசா—மூற்றும்
துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (உ)

இ—ள்.

குமரேசா! விராடன் பாண்டவர்க்கு உற்ற துணையாய் நின்று என் உதவினன்? எனின், துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை என்க.

துறந்தார் = ஆதரித்து வந்தவரால் கைவிடப்பட்டவர்.

துவ்வாதவர் = உணவு முதலியன துய்க்கப்பெறுதவர். வறியர் என்றபடி. இறந்தார் = உயிர்நீங்கினவர். செத்தவர் என்றபடி.

கதியற்றவர், பொருளற்றவர், உயிரற்றவர் ஆகிய இம்மூவருக்கும் இல்வாழ்வான் துணையாய்நின்று உதவவேண்டும் என்பதாம்.

துறந்தாரை வினவியடுத்தும், துவ்வாத்வரை உணவு முதலியன கொடுத்தும், இறந்தாரை உரிய நீர் விடுத்தும், ஆதரிக்க வேண்டு மென்பது கருத்து.

மேல் தன்னோடு இயைபுடைய மூவரைக் குறித்தார்; இதில் அஃதில்லாத மற்றொரு மூவரையும் இணைத்து இவ் அறுவருக்கும் இல்வாழ்வான் துணையென உணர்த்தினர். இனி வருவதில் ஐவரை உணர்த்துவர்.

பெரியோர் வறியோர் முதலிய எவர்க்கும் இல் வாழ்வான்

துணையாவான் என்பதும், இதற்குச் சான்றாக விராடன் அனைவருக்கும் துணையாய்உபகரித்தான்என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

விராடன் என்பவன் ஓர் அரசன். மச்ச தேசத்திலுள்ளவன். விராட புரத்திலிருந்து இவன் அரசு புரிந்தான். இக்காலத்தில் மேட்டுப்பாளையத்தை அடுத்துள்ள தாராபுரமே அக்காலத்தில் இப்புரம் இருந்த இடம் என்பர். இந்த அரசன் எல்லார்க்கும் நல்ல துணைவனாய்ச் செல்வாக்கோடு இல்வாழ்ந்திருந்தான். பாண்டவர் பன்னிருவருடம் வனவாசம் செய்து முடித்தபின்னர் ஒருவருடம் இவன் வசம் வந்து உருவங்காரந்து ஒதுங்கி யிருந்தார். அவரை அன்புடன் இவன் ஆதரித்து வந்தான். உத்தரன் என்று ஒரு மகனும், உத்தரை என்று ஒரு மகளும் இவனுக்கு உண்டு. இவன் மனைவி பெயர் சுதேட்டிணை. வருடமுடிவில் பாண்டவரென உண்மை தெரிந்தபின் இவன் பெருமகிழ்வடைந்தான். அதன் பின்னும் பாண்டவர்க்குப் படைத்துணையாய் நின்று வேண்டுவன புரிந்தான். தன் மகளாகிய உத்தரையை அருச்சுனன் மகனாகிய அபிமன்னனுக்கு மணமுடித்துத் தந்தான்.

துறந்தார், துவ்வாதவர் என மறைந்துவந்த பாண்டவர்க்கு இவன் சிறந்த துணையாய் நின்று உயர்ந்த உதவிகள் செய்தான். அதனால் இல்லறத்தில் சிறந்து இவன் இசைபெற்று நின்றான். இவனது மனப்பண்பையும், மனைமாட்சியையும் அனைவரும் புகழ்ந்து போற்றினர். விரிவைப் பாரதத்தில் காண்க.

துறந்தவர் மூவர்தேவர் துளக்கமில் பிரமர்தோயர்
அறந்திகழ் விருத்தர்பாலர் அந்தணர் கல்விருந்தர்
சிறந்ததாய் தன்னைசுற்றந் திருத்தமும் றதற்பின்மிக்க
அறந்தரு மில்லாளோடும் அருந்தலில் லறமதன்றே.

(பரமார்த்த தரிசனம்.)

உற்ற மகவுக் குறுதாய்போல் மற்றவர்க்குப்
பற்றுதல் இல்லறத்தான் பண்பு.

இல்வாழ்பவனே வறியார்க்கு உரிய துணை என்பது இதலால் கூறப்பட்டது.

T24.000403

43. தேடுபுகழ்க் காளத்தி சென்றடைந்தார் தம்மையல்லாம்
கோடாதேன் காத்தார் குமரேசா—பீடுடைய
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங்
கைம்புலத்தா றோம்பல் தலை. (ந)

இ—ள்.

குமரேசா! காளத்தியப்ப முதலியார் விருந்து ஒக்கல் முதலிய எல்லாரையும் என் ஆதரித்து வந்தார்? எனின், தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஐம்புலத்தாறு ஓம்பல் தலை என்க.

ஒக்கல் = சுற்றம். புலம் = இடம். ஐம்புலத்து ஆறு ஓம்பல் = ஐந்து இடத்தும் செய்யத்தக்க அறவினையை வழுவாமல் செய்தல். ஐம்புலத்தார் என்று பாடங்கொண்டால் ஐந்து இடத்தாரையும் என்று கொள்க. தலை = சிறந்த அறமாம் என்றபடி.

தான் என்றது இல்லறத்தானை.

பிரமச்சாரி வானப்பிரத்தன் சந்நியாசி துறந்தார் துவ்வாதார் இறந்தார் தென்புலத்தார் தேவர் விருந்தினர் சுற்றத்தார் என்னும் பதின்மரையும் ஆதரிக்கவேண்டுவது இல்வாழ்வானுக்குக் கடமை என்பதாம். இவ்வியல்பு காளத்தியப்ப முதலியார்பால் காணப்படும்.

கதை.

காளத்தி முதலியார் என்பவர் தொண்டை மண்டலத்திலே நின்றையென்னும் ஊரிலே பிறந்தார். இல்லறத்திலிருந்து எல்லாரையும் ஆதரித்து வந்தார். தையலும் வள்ளற்குணமும் வாய்ந்தவர். வறுமைப்பிணிக்கு மருந்து போல்பவர். நாளும் பல இடங்களில் இருந்தும் இவரை நாடிவந்தார்பலர். அவரனைவருக்கும் வேண்டுவனதந்து அன்போடு அனுப்பிவிடுவர். தம்பால்வந்தவரது முகம் மலர இவரது அகமகிழும். பிறர்க்கு இதம் புரிதலையே யிவர் பேரின்பமாகக் கொண்டார். ஒக்கலையும் விருந்தையும் இவர்பக்கம் வைத்து உண்டார். தம்மையும் காத்துத் தமரையும் போற்றிய இவரது இல்லறமாண்பை யெல்லோரும் புகழ்ந்து போற்றினர். தொண்டை மண்டல சதகமுதலிய பலநூல்களிலும் இவர் சரிதம் காணப்படும்.

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணுன்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை என்ப திருள். (அறனெறிச்சாரம்.)

பல்லறத்தா ரெல்லாம் பயன்பெற் றினிதோங்கார்
இல்லறத்தா னின்றேல் இனிது.

இல்லறத்தான், தென்புலத்தார்முதலிய ஐவரைபு பேணவேண்டுமென்பது இதனல் கூறப்பட்டது.

44. **வ**ள்ளற் சடையன் வழியென்றுங் குன்றுசீர்
கொள்ளநின்ற தென்னே குமரேசா—தள்ளரும்
பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (சு)

இ—ள்.

குமரேசா! சடையவள்ளலது வழி யென்றுங் குன்றுமல் நின்றது என்னே? எனின், பழிஅஞ்சிப்பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல் என்க.

எஞ்சல் = தேய்ந்து அழிதல். வழி = மரபு. தொடர்பாகவருதலின் இஃது இப்பெயர் பெற்றது.

பழிக்கு அஞ்சுதலும் பகுத்து உண்டலும் ஒருவனுக்கு அமையுமாயின் அவன் சந்ததி என்றுங் குன்றுமல் நின்று நிலவும் என்பதாம்.

ஒருவன் வழி அழியாமைக்கு வழி இதில் உணர்த்தினர்.

ஒருவன் நல்வழியிற் பொருளீட்டி அதனைப் பிறர்க்குப் பகுத்துதவி வருவானுயின் அவன் வழியும் வாழ்க்கையும் நெடுதுவாழும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சடையப்பர் வழியில் காணப்படும்.

கதை.

சடையப்பபிள்ளை யென்பவர் சோழநாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். இவரது காலம் இற்றைக்கு எறக்குறைய ஆயிரத்து நூறு வருடங்கட்கு முன்னாகும். பெருந்தன்மையும் வள்ளற் குணமும் ஒருங்கே நிறைந்தவர். பழுதில்லாத உழவு தொழிலால் பொருளீட்டி அதனைப்பலர்க்கும் பகுத்துக் கொடுத்து வந்தார். கஷிச்சக்கரவர்த்தியாகிய கம்பரை அன்புடன் ஆதரித்துவந்தார். "அடையா நெடுங் கதவும் அஞ்சல்என்ற சொல்லும் உடையான் சடையப்பன்" என உலகம் புகழ இவர் உயர்ந்து நின்றார். இதனாலே இவரது விருந் தோம்பும்திறம் காணப்படுகின்றது. இவர் இல்வாழ்க்கை நலம் நல்லோர் பல்லோராலும் நன்கு புகழப்பட்டுள்ளது. சூரியகுலத் தரசர் காலத்திருந்தே இவர் மரபினர் சீரடைந்து விளங்கினர்.

அரியணை அணுமன்தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்தப்,
பரதன்வெண் குடைகவிக்க, இருவருடம் கவரிவீச,
விரைசெறி குழலியோங்க வெண்ணெயூர்ச் சடையன்றங்கள்
மரபுளோர் கொடுக்கவாங்கி வகிட்டனே புனைந்தான்மௌலி.
(முடிசூட்டுப்படலம்.)

இதனால் பல்லாயிர வருடங்கட்கு முன்னரே அவதரித்த இராமர் காலந்தொட்டே வெண்ணெயூர்ச் சடையன் வழியார் சிறந்து விளங்கி வந்துள்ளார் என்பது புலனும். பகுத்துண்டு உபகரித்து வருபவனது மரபு என்றும் இனிதாக நிலைத்துவரும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து நின்றது.

உரம்பெறு பிரம சாவனத்துறைவோர் உலகினத்தையு மறநீத்தோர் பரம்பரன் தெரிதுபுலத்தவர் விருந்து பசையுடை ஒக்கல் மன்றுறந் தோர், அரம்புசெ யிலம்பாட்டின நிறந்தாரென் றையிருவரைபு நண்ணுறும்பி, வரம்பெறு தமைப்பிமேணும்புர ரல்லா தவர் மனையற த்தவ ணிலரே. (பேரூர்ப்புராணம்.)

ஆர்ந்த பறவைகட் கால்போல இல்வாழ்வான்
நேர்ந்தவர்க் கெல்லாம் நிலை.

ஒருவன் இல்வாழ்க்கையை நடத்தும் வகை இதனால் கூறப் பட்டது.

45. மண்டுபுகழ் மாறனார் மாறுத வன்பறனேன்
கொண்டிருந்தார் இல்லிற் குமரேசா - தண்டாத
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இ—ள்.

குமரேசா! இனையான்குடி மாற நாயனார் அன்பும் அறனும் உடையராய் என் இல்வாழ்ந்தார்? எனின், அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையே பண்பும் பயனும் பெறும் என்க.

ஒருவனது இல்வாழ்க்கை அன்பையும் அறத்தினையு முடைய தாயின் அது பண்பும் பயனும் அமைந்ததாம் என்பதாம்.

அன்போடு அறம் புரியும் இல்வாழ்பவனே பண்போடு பயன் பெறுவான் என்பது கருத்து.

அன்பும் அறனும் இல்லையாயின் ஒருவன் இல்வாழ்க்கையால் யாதொரு பயனும் இவ்லை என்பது குறிப்பு.

இல்வாழ்வான் தனது பரிவி மக்களிடத்தில் மிக்க அன்பு செய்தும், பிறரிடத்துப் பகுத்துண்டல் முதலிய அறஞ்செய்தும் வாழவேண்டும் என்பதும், இதற்குச் சான்றாக மாறனார் அன்பும் அறமும் உடையராய் இல்வாழ்ந்தார் என்பதும் இதில் உணர்த்தப் பட்டன.

கதை.

மாறனார் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். பாண்டிநாட்டிலே இனையான்குடி என்னும் ஊரிலே வேளாளர்குலத்திலே இவர் பிறந்தார். அதனால் இவர் இனையான்குடி மாறநாயனார் எனப் பெற்றார். உத்தம குணங்கள் நிறைந்த தம் பத்தினியோடு கூடி இல்வாழ்ந்திருந்தார். நிறைந்த செல்வமும் விரிந்த நிலங்களும் உடையவர். அடியார் முதலிய அனைவர்க்கும் நாளும் கல்லுணவு அளித்தார். மிகவும் அன்புடையவர். இல்லறத்தை யின்புற நடத்தினர். இங்ஙனம் வருகின்றநாளில் இவரது செல்வம் குறைந்தது. வறுமை நிறைந்தது. ஆயினும் அன்பும் அறனும் உடையராய்நின்று இவர் இல்லறத்தை இன்புறச்செய்தார்.

நயன் இல சொல்லினும்—நீதியில்லாத சொற்களைச் சொன்னாலும். உமையால், அதுவும் சொல்லலாகாதென்பது உணர்த்தினார்.

நயன் இல்லாத சொற்களைச் சொல்லினும் பயன் இல்லாத சொற்களை அறிவோர் சொல்லாமை பெறின் அஃது அவர்க்கு நன்மையாம் என்பதாம்.

நயன் இல் சொல்லினும் பயனில் சொல் பெருந் தீது பயக்கும் என்பது குறிப்பு. இவ்வுண்மை மூவேந்தர் பாலும் உணர்த்தப்பட்டது.

கதை.

சோழ சோழ பாண்டியர் என்னும் மூடியுடை வேந்தர் மூவரும் சேர்ந்து இயல்பாகவே ஒருநாள் எகம்பவாணரது திருநகரை யடைந்தனர். அங்கே வாணரைக் காணாது அம்மூவரும் விழுந்தார். அவர், வீட்டிலிருக்கின்றாரா? என்று கேட்டுவரும்படி ஒருவனை விடுத்தார். அவன் சென்று வினவினான். மூதலியார். வயலுக்குப் போயுள்ளார் என்று அங்குள்ளார் மொழிந்தார் மொழிந்ததையவர்பால் அவன் மீண்டு மொழிந்தான். வேந்தர் தெரிந்தார். மூதலியார் மூடநடப் போயினரோ என்று விரைந்தமராக அவர் வெண்மொழி பகர்ந்தார். அதனால் வாணர் மனைவி வன்சினங் கொண்டாள். அம்மூவரும் நாணப் பாவொன்று பாடினர்.

சேனை தழைபாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதிக்க அருந்தேர்ச்சற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்துகட்டான் எகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

இதனைக் கேட்டு அம்மூவரும் வாட்டமுற்றகன்றார். வாணரும் நிகழ்ந்ததை வந்தபின் னுணர்ந்தார். பூதம் ஒன்றேவி அவர் கட்கேதம் புரிந்தார். ஒரு பயனில் சொல்லால் அவர் பல தீப்

பயன் அடைந்தார். நயன் இல சொல்லினும் பயன் இல சொல்லலாகாதென்று தெளிந்தார். விரிவு அவர் சரிதையில் தெரிகாம்.

பயன் இல சொல்லாமையே அறிவோர்க்குப்பெரு நலமென்பது இதனால் கூறப்பட்டது.

---

198. மாறொருசொல்லே மதுரகவி முன்சொன்னர்
கூறுர்வே றென்னே குமரேசா—தேறி
அரும்பய னுயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் (அ)

இ—ள்.

குமரேசா! நம்மாழ்வார், மதுரகவியை நோக்கிச் சொல் ஒன்றே சொல்லி என் வேறென்றையுஞ் சொல்லவில்லையெனின், அரும்பயனை ஆயும் அறிவினர், பெரும் பயன் இல்லாத சொல் லைச் சொல்லார் என்க.

மாறர், சடகோபர் என்பன நம்மாழ்வாரது திருநாமங்கள்.

அரும்பயன் ஆயும் அறிவினர்—அரிய பயனை ஆராயும் அறி விணையுடையார்.

அரிய பயன் என்றது மெய்யுணர்வான் அன்றி வேறென்ற ஞானும் அறிதற்கரிய முத்திப்பேறு முதலிய மறுமைப் பயன்களை என்க.

பெரும் பயன் இல்லாத சொல்லைப் பேரறிவாளர் சொல் லார் என்பதாம்.

அறிவில்லாதவரே பயனில்லாதசொல்லைச் சொல்வர், உடை யவர் பயனுள்ள சொல்லையே, சொல்லுவர் என்பது குறிப்பு.

அறிவின் பெருமைக்குத் தக்கபடியே சொல்லின் பெருமை காணப்படுமாதலால் பேரறிவோர் பெரும் பயனுள்ள சொல்லை யே சொல்லுவர் என்பதும், அல்ல பிற சொல்லார் என்பதும்

இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சடகோபர் பால் உணரப்படும்.

கதை.

குருகைநாதனெனிய நம்மாழ்வார் அருட்பயனையே யாய்ந்தார். பரம்பொருளையே தோய்ந்தார். அதனல் ஒருவரோடும் ஒன்றும் பேசாமல் ஒதுங்கியிருந்தார். எவர் வந்து எதைக் கூறினும் அவரை இவர் எதிர்நோக்கவுஞ் செய்யார். தமது மெய்யுணர்வின் பயனைப் பொய்யுணர்வாருந்குப் புகலுவதில் பயனென்றுமில்லையென்று கருதி மயனேயிருந்தார். இவர் இங்ஙனமிருப்பத் திருக்கோளூரில் அவதரித்துத் திருவயோத்திக்குப் போயிருந்த மதுரகவிபாழ்வார் தென் திசை நோக்கி மீண்டார். இவரை வந்து கண்டார். வியந்தார். சிறிதும் அசையாதிருக்கின்ற இவர்பால் எதனும் உணர்ச்சியுளதா என்று உணர விரும்பினர். ஆசேதனமான உடம்பில் சேதனமாய் அருவாய் உள்ள உயிர் ஒன்றியிருந்தால் அஃது எதனைத் துய்த்து எங்கே இருக்குமென்னும் பொருளையமைத்து: "சேத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்" என்றார். உடனே மாறனர் தமது மலர் விழி திறந்தார். உயிர் உடலோடு கூடித் தனது விளைப் போகங்களை நுகர்ந்து அதன் கண்ணேயே தங்கி நிற்கும் என்று அதற்குவிடையாக "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்றார். தமது மதி நலத்தின் மாண்பைத் தெரிவார் இல்லையென்று கருதியே இதுவரையும் இவர் யாதும் சொல்லாமல் இருந்தார் என்னும் உண்மையை மதுரகவியார் ஓர்ந்தார். உவந்தார். பயன் சேர்ந்த அச்சொல்லின் அருமையையும் அவரது அறிவின் பெருமையையும் பெரிதும் போற்றினர். குருவாகக் கருதினர். அரிய கவிகள் பல அவர் மேற் பாடினர். வேறென்றும் விரித்துச் சொல்லாமல் அடங்கியிருக்கும் அவரது அருமையைப் புகழ்ந்தார். அரும்பயன் ஆயும் அறிவினர் பெருட்பயன் இல்லாதன சொல்லார் என்னும் உண்மையை அவர்பால் தெளிந்தார்.

(விரிவு சரிதையில் தெளிவாம்.

பயன் இல்லாத சொல்லை அறிவாளர் சொல்லார் என்னும் இவ்வுண்மையை அழகிய உவமையால் விழுமிதாகக் கம்பர் விளக்கியுள்ளார். அவரது அவ் இன் கவி இங்கு நன்கு கருதத்தக்கது.

கல்வியிற் றிகழ்ந்தணைக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறுமொனப் பயில்வ பல்லரி
செல்லிடத் தல்லதான் றியம்பல் செய்கலா
கல்லறிவாளரின் அவிந்த நாவெல்லாம்.

(கார் காலப் படலம்)

மழைக்காலம் கழிந்தபின் வருக என்று கட்டளையிட்டுச் சுக்ரீவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பியபின் தம்பியோடு இராமர் அங்கு ஒரு மலைச் சாரலில் தங்கியிருந்தார். அவ்வமையம் கார் காலம் கழிந்தது. குளிர்காலம் எழுந்தது. அவ் இரண்டு பருவங்களின் இயல்பையும் வருணித்துக் கூறுங்கால் இது கூறப் பட்டது.

ஓர் ஆசிரியனுக்கு அடங்கிப் பள்ளிக்கூடத்திலிருந்து ஒருவர் முறை சொல்ல அதன்பின் ஒருங்கே சொல்லி மூல பாடங்களை மனப்பாடஞ்செய்யும் இளம்பிள்ளைகளைப்போல், ஒன்றின்பின்ஒன்றுகப் பேரிரைச்சலிட்டு மழைக்காலத்தில் கத்திக்கொண்டிருந்த தவளைகள், குளிர்காலம் வந்தவுடனே அங்ஙனமின்றித் தமது சொல்சென்று பயன்படும் இடத்தேயன்றி வேறிடத்து ஒன்றுஞ் சொல்லாமல் நாவடங்கியிருக்கும் நல்லறிவாளரைப்போல் ஓவ்வொர் சமயம் மாத்திரங் கத்தி ஓடுங்கியிருந்தன என்பது இதன் திரண்ட பொருளாம்.

மழைக்காலத்தில் வரம்பின்றிக் கத்தும் தவளைகள்போல் பயனில்லாத சொற்களைப் பேதையர் பாரித்துரைப்பர் என்றும், அறிவோர் பயனுறுஞ் சொல்லை நயனுறச் சொல்லி நாவடங்கியிருப்பர் என்றும், இதில் விளக்கியுள்ள உவமையின் நுண்மையும் நயமும் நுனித்துணரத்தக்கன.

அறிவோர் பயனுறுஞ்சொல்லியே நயனுறச் சொல்வர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

199. அன்றேன் இரணியன்சேய் அல்லலுற்றுந் குன்றியசொல் லென்றும் குமரேசா—என்றும் [வில்லை
பொருளோர்ந்த பொச்சாந்துரு சொல்லார் மருளோர்ந்த
மாசறு காட்சி யவர். (அ)

இ—ள்.

குமரேசா! இரணியன் சேய் அல்லலுற்றும் பயன் குன்றிய சொல்லை என் சொல்லவில்லை எனின், மருள் தீர்ந்த மாசறு காட்சியவர் பொருள் தீர்ந்த சொல்லைப் பொச்சாந்துஞ் சொல்லார் எனக.

இரணியன்சேய்—பிரகலாதன். பொச்சாந்தும்—மறந்தும். பொருள்தீர்ந்த—பொருள் நீங்கிய: என்றது பயன் இல்லாத சொற்களை. மருள்தீர்ந்த—மயக்கம் நீங்கிய. மாசறு காட்சியவர்—குற்ற மற்ற அறிவினையுடையவர்.

மயக்கம் இல்லாத மெய்யுணர்வுடையவர் பயன் இல்லாத சொற்களை மறந்தும் சொல்லார் என்பதாம்.

மேல், அறிவுடையார் பயன் இல சொல்லார் என்றுர் மறுதி, அச்சங்களுள் ஏதாவது ஒன்றுன் மருண்டேனும் சொல்லாரோ எனின், எவ்வகையானும் அவர், அதையாண்டுஞ் சொல்லார் என்று மீண்டுந் தெளிவுறுத்தினர்.

மருள் நீங்கிய அறிவினோர் பொருள் நீங்கிய சொல்லை மறந்தும் சொல்லார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பிரகலாதன் பால் உணரப்படும்.

கதை.

பிரகலாதன் என்பவன் இரணியன் புதல்வன். அருள் சேர்ந்த நெஞ்சினன். மருள் தீர்ந்த மாண்பினன். மாசற்ற உணர்வினன். கருவிலே யெய்திய திருவினையுடையவன். இளமைப்பருவத்தே இவனுக்கு வேதத்தைப் போதிக்கும்படி தந்தை ஒரு வேதியனுக்கு ஏதினான். அவன் இவனை அழைத்துச்சென்று தனதருகிலிருத்தினன். அவன் அசுர குருவாகிய சுக்கிரன் மகன். பெயர் சண்டமார்க்கன் என்ப. ஓதுவிக்கத் தொடங்கினன். முன்னதாக முறைப்படி இரணியாய நம: எனச்சொல் என்றான். புதல்வன் அதனைச சொல்ல இசைந்திலன். நாராயணாய நம: என்று சொல்லினன். உலகமெல்லாம் தன் பெயரே சொல்லும்படி செங்கோல் செலுத்துகின்ற உன் தந்தைபெயரைச் சொல்லாமல் என் இந்தப் பெயரைச் சொல்லினாய் என்று குரு மூனிந்தான். குமரன் குறுநகை செய்தான். அது பொருள் தீர்ந்த சொல். அதனை யான் சொல்லேன். வேதத்தின் உச்சியின் மெய்ப்பொருளாய் விளங்கும் இப்பெயரையே செப்புவேன் என்றான். தனக்கு வதம் வருமென்றெண்ணி வேதியன் ஓடினன். நடந்ததை வேந்தனிடம் நவிற்றி ஏதினன். இரணியன் எழுந்தான். புதல்வனைக் கண்டான். புகன்றதைத் தெளிந்தான். சேயெனக் கருதாது தீயெனக்கனன்றான். அப்பெயரைச்சொல்லாதே யென்று அவனுக்கு அல்லல் பல செய்தான். யாது செய்யினும் அவன் அதனையே ஓதினன். தாதையை நோக்கினன்.

காமம் யாவையுந் தருவதும் அப்பதங் கடந்தால்
சேமவீடுறச் செய்வதும் சொற்கழல் முகந்த
ஓமவேள்வியின் உறுபத முய்ப்பது மொருவன்
நாமம் அன்னது கேள் நமோ நாராய ணாய.

தான்று மொழிந்தான். எதிர்நின்று நிகழ்ந்தான். மருள் தீர்ந்த மாட்சியுடையார் பொருள் தீர்ந்ததைப் பொச்சாந்துஞ் சொல்லார் என்பதை யிவன் உணர்த்தி நின்றான்.

(இதன் விரிவு இராமாயணத்தில் உணரப்படும்.)

பொருள் தீர்ந்த சொல்லை அறிவோர் பொச்சாந்துஞ் சொல்லார் சான்பது இதனால் கூறப்பட்டது.

---

200. சீதைதன்மை சொல்லித்தான் செய்ததைமேன் சொல்
கோதில் அனுமான் குமரேசா—ஏதேனும் [லஃதில்லை
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். (ய)

இ—ள்.

குமரேசா! சீதையின் இயல்பை மட்டுஞ்சொல்லி என் அனுமான் தான் செய்தவை ஒன்றுஞ் சொல்லஃதில்லை எனின், சொல்லின் பயனுடைய சொல்லுக; சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க என்க.

சொல்லின் பயனுடைய சொல்லுக—சொற்களிற் பயனுடைய சொற்களையே சொல்லுக.

சொல்லின் என்பதைச் சொல்லவேண்டுமாயின் எனவுங் கொள்ளலாம்.

பின்வருநிலை என்னும் அணிநோக்கிச் சொல் என்பது பொருளுடன் கலந்து இதில் ஐந்து நிலைகளில் நின்றது. அது சொற் பின் வருநிலை, பொருட்பின் வருநிலை, சொற்பொருட்பின் வரு நிலை என மூவகைப்படும். அவற்றுள் இது சொற்பொருட் பின் வரு நிலையாம்.

முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே. (தண்டியலங்காரம்.)

சொற்களில் பயனுள்ளனவே சொல்லுக; பயன் இல்லாதன சொல்லாதொழிக என்பதாம்.

அறிவுள்ள ஒருவன் பயனுள்ள சொற்களைச் சொல்லி பயனில்லாதவற்றை ஒழிக்கவேண்டும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வமைதி அனுமானால் உணரப்படும்.

கதை.

ஆனுமான் தன்னுடன் வந்த இரண்டுவெள்ள வானரங்களை மகேந்திரமலையில் நிறுத்திவிட்டுக் கடல்கடந்து இலங்கையில் புகுந்தான். சீதையைத் தேடினான். கண்டான். உண்மையை உணர்ந்தான். அவர்பால் உறுவன உணர்த்தினான். அதன்பின் அரக்கர் பலரை மாய்த்தான். அக்கினைத் தேய்த்தான். இந்திரசித்தினை எதிர்ந்தான். ஏற்றமர்புரிந்தான். மன்னன் முன் எய்தி மனுமுறை புகன்றான். அவன் செய்த தீமையெல்லாம் இவன் சேர்ந்து பொறுத்தான். தன் வாலில் வைத்த தீயை அவ் இலங்கையில் வைத்தான். எரித்தான். வான் வழியெழுந்தான். மீண்டான். தமரிடை சார்ந்தான். அவரனைவரும் இவனை அன்புறத் தழுவினர். அகமிகமகிழ்ந்தார். போனதும் புகுந்ததும் புகலினைப்போற்றினர். சிறையிடையிருந்தும் சீதையின் செம்மையும் அவர்தந்த அடையாளம் தான்கொண்டவந்த தன்மையும் ஆகிய இரண்டே அமைவுறச் சொல்லினன். தான் அங்குச் செய்த அருஞ்செயல்களுள் ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆயினும் அவையெல்லாம் அவர் குறிப்பாலுணர்ந்தார். அறிவோர் பயனுள்ளனவே சொல்வார் இல்லன சொல்லார் என்னும் உண்மையை அனுமான்பால் தெளிந்தார். விரிவு சரிதையில் தெளிவாம்.

ஆண்டகை தேவியுள்ளத் தருந்தவம் அமைய்ச் சொல்லிப்
பூண்டபே ரடையாளங்கைக் கொண்டதும் புகன்றுபோரில்
மீண்டவா ளரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் தான்தன் வென்றியை யுரைப்பவெள்கி.

(இராமாயணம்.)

பயனில் சொல்லைச் சொல்லாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பயன் இலவாகிய சொற்களைச் சொல்லுவார் பலராலும் இகழ்ப்படுவார். தீய செயலினும் அது தீயதாகும். பயனில சொல்லுவோன் நயன் இலனுவான். அஃது ஒருவனை நயனிலனுக்கி நன்மையின் நீக்கும். அதனால் ஒருவனது சீர்மையும் சிறப்பும் சேரா நீங்கும். பயனில சொல்லுவான் பதரெனப்படுவான். நயன் இல சொல்லினும் பயனில சொல்லாமை நன்று. அறிவோர் அதனைச் சிறிதும் சொல்லார். பெரியோர் மறந்தும் அதனை ஒருபோதும் சொல்லார். இல்லன என்றுஞ் சொல்லாதொழிக. பயனுள்ள சொல்லையே பண்புடன் சொல்லுக.

20-வது பயனில சொல்லாமை முற்றிற்று.

உகும் அதிகாரம் தீவினை யச்சம்.

அஃதாவது தீயவினைகளைச் செய்தற்கு அஞ்சுதல். மனத்தின் கண்ணும் மொழியின் கண்ணும் நிகழுந் தீமைகளை ஒழிக்கும்படியிதுவரை யுணர்த்தினர். இனி, மெய்யின்கண் நிகழும் வெவ்வினைகளையெல்லாம் விலக்கும்படி விளக்குகின்றாராகலின், இஃது ஈண்டுவைக்கப்பட்டது. மேல், பயனில சொல்லாதே என்றார், இதில் நயனில செய்யாதே என்கின்றார். அதிகார அமைவும் இதனோடு தொனிவாம்.

---

201. அன்றறவார் தின்றூர் அமரேன் அஞ்சினர்
கொன்றமீன் தீண்டக் குமிசசா—நன்றகன்ற
தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினையென் றுஞ்செருக்கு. (க)

இ—ள்.

குமரேசா! அசுரர், கொன்ற மீன்களை அஞ்சாமல் தின்றார் என் அமரர் அவற்றைத் தீண்டவும் அஞ்சினர் எனின், தீவினை என்னுஞ் செருக்கைத் தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் என்க. விழுமியார்—மேலோர்.

செருக்கு—மனக்களிப்பு. ஈண்டி அதனால் எய்தும் மயக்கத்தை அது குறித்து நின்றது.

பின் துன்பம் பயக்கத்தக்க தீபசெயல்களை இன்பமென மயங்கி யெண்ணுது செய்தற்கு அச்செருக்கே காரணமாகலின் அதனையே தீவினையாக அமைத்துரைத்தார்.

செருக்கு என்னும் காரணத்தால் தோன்றும் காரியமாகிய தீயசெயல்களையே அதுவாகக் கூறியது அதன் மிகுதி கருதியென்க.

தீய செயல்களையே செய்து வந்தவர் என்பார் தீவினையார் என்றார். பழகிய ஒன்றில் பயந்தோன்றுதாதலான் அவற்றிற்கு அவர் அஞ்சாராயினர்.

கீழோர் தீய செயல்களைச் செய்தற்கு அஞ்சார்; மேலோர் அஞ்சுவர் என்பதாம்.

மேன்மையை வேண்டுவோர் தீவினைகட்கு அஞ்சவேண்டு மென்பது குறிப்பு.

தீயார் அஞ்சாமல் தீவினைகளைச் செய்வர் என்பதும் நல்லார் அவற்றிற்கு அஞ்சுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அசுரர்பாலும் அமரர் கண்ணும் முறையே உணரப்படும்.

கதை.

வீரமகேந்திரத்திலிருந்து சூரபன்மன் அரசுபுரியுங் காலத்தில் தேவர்கள் பெரும் பயங்கொண்டு அவனுக்கு ஏவல் புரிந்து

வந்தார். வரிணவப், இரக்கஞ்சிறிதுமின்றி அவர்பால் அவன் அல்லலே செய்தான். தனது நகரத்திலுள்ள அசுரரனவருக்கும் மீன்களைக்கொண்டுவந்து கொடுக்கும்படி அவரை ஏவினான். அவரனவரும் அவன் கொடுமைக்குப் பயந்து கடலிடைச்சென்றார். மீன்களைப் பிடித்தற்கு மிகவும் அஞ்சினர். பழியென நாணினர் பதைத்து நடுங்கினர். அசுரரனவரும் அவற்றை அஞ்சாமல்கொன்றார். துடிக்கத் துடிக்க அவற்றை யெடுத்துச் சென்றார். நின்று கவித்தார். தீமையை அஞ்சாமல் தினமுஞ் செய்தார். தேவர் நெஞ்சி அயர்ந்தார். (விரிவு கந்தபுராணத்தில் காணப்படும்.)

உரைக்குமொழி யதுகேளா அனையபெரிலாம் உண்ணடுங்கி
யுபங்கிவெள்கித்
திரைக்கடலின் மீன்றனக்குத் தருகென்று னிதற்கினிநாஞ்
செய்வதேதோ
விரைக்கமலத் தனிக்கடவுளிப்படியு நக்குலையில்
வந்ததானென்னை
இரக்கமொடு மறுந்தலைஞ்சி யத்திறமே புரிதுமெனை
யிசைந்துபோனார். (1)

தேனுலவுந் தாருத் திரு நிழற்கீழ் இன்பமுறும்
வானவர்க ளென்றே மதிகருஞ் தனைமையிலேம்
ஈனமொடு மீன்சுமந்தே யெல்லோர் களுநகைக்கத்
தானவர்முன் செல்வதினுஞ் சாதன்மிக நன்றுநன்றே. (2)

(தேவரை ஏவல்கொள் படலம்.)

தீவினைக்கு அஞ்சுவதே மேன்மை என்பது இதனால் கூறப்பட்டது.

---

202. அஞ்சாத பாண்டியனும் அஞ்சினனென் றீயதென்று
கொஞ்சந் தெரிந்து குமரேசா—நஞ்சனவே
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினும் அஞ்சப் படும். (உ)

இ—ள்.

குமரேசா! அஞ்சாத பாண்டியனும் என் தீபவற்றிற்கு அஞ்சினனெ னின், தீயவை தீயபயத்தலால் தீயவை தீபினும் அஞ் சப்படும் என்க.

தீபவை தீய பயத்தலான்—தீவினைகள் துன்பத்தருதலான். தீவினைகள் துன்பமே பயக்கும் இயல்பினவாகலான் அவற்றைத் தீபினுங் கொடியதாகக் கருதி அஞ்சவேண்டும் என்பதாம்.

தொட்டகாலத்தில் தொட்ட உடம்பைமட்டும் தீ சுட்டு வருத்தும் தீவினை, தன்னைச் செய்த உடம்பு அழியினும் அவ்வுயிர் புக்கவிடமெல்லாந் தானும் உடன் புகுந்து அதற்குத் தொடர்ந்துன் பத்தையே கொடுத்துநிற்கும் ஆதலால் தீயினும் தீவினைக்கு அஞ் சவேண்டுமென்க.

தீயைத் தீண்டினும் தீண்டலாம் தீவினையைச் செய்யலாகா தென்பது குறிப்பு.

தீவினைக்கு அஞ்சவேண்டுமென்று மேற்கூறிய உண்மைக்கு உறுதியை யிதில் உணர்த்தினர்.

தீவினை தீயினுங் கொடியதாகக் கருதி அறிவோரால் அஞ் சப்படுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பாண்டியன் பால் உணரப்படும்.

கதை.

இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன்னர் மதுரை யம்பதியில் நெடுஞ் செழியன் என்னும் பாண்டிய மன்னன் அர சாண்டிருந்தான். அக்காலத்தில் தனது மனைவியின் சிலம்பை விலைப்படுத்தும்பொருட்டு அங்குவந்த கோவலனைக் கணகவன்மன் என்னும் பொற் கொல்லன் கண்டான். மன்னனுக்கு இவன் மணியணி செய்வோன். வந்தவனை வஞ்சித்தான். அரசியின் சிலம்பைத் திருடின கள்வனைப் பிடித்தேன் என்று கோவலனைக்

குயித்தான். இந்திய வவலன் சொன்னதை அத்தூய காவலன் நம்பினான். கொல்லும்படி செய்தான். கண்ணகியால் அதன் பின் உண்மை தெளிந்தான். அத்தீவினையை நினைந்தான். அஞ்சா நெஞ்சமும் அஞ்சி நடுங்கினான். தீயினும் அதனைத் தீயதென் றோர்ந்தான். தன் அறிவைப்பழித்தான். வாட்சியை வெறுத்தான்.

"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யாழோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் வாழுளென"

மயங்கி வீழ்ந்தான். மன்னுயிர் நீர்ந்தான்.

(இதன் விரிவு சிலப்பதிகாரத்தில் காணப்படும்.)

தீயினும் தீயனவைக்கு அஞ்சவேண்டுமென்பது இதனால் கூறப் பட்டது.

---

203. செற்ற பகைவனுக்கும் தீதுசெய்யா தேன்விடுத்தார்
கொற்றமிகு மெய்யார் குமரேசா—பெற்ற
அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். (கூ)

இ—ள்.

குமரேசா! மெய்ப்பொருள் நாயனார் தன்னைக் கொன்ற வனுக்குந் தீங்கு ஒன்றுஞ் செய்யாமல் என் செல்ல விடத்தார் எனின், செறுவார்க்கும் தீயவற்றைச் செய்யாதுவிடல் அறிவினுள் எல்லாம் தலையாம் என்க.

செய்யாது என்பது ஈறுகுறைந்து செய்யா என நின்றது.

செறுவார்—துன்புஞ்செய்வார்

செறுவார்க்கும் தீய செய்யாது விடல்—செறுவாரிடத்தும் தீயவினைகளைச் செய்யாது விடுதலை.

தலை என்ப—தலைமையான அறிவு என்பர் பெரியோர். என்ப என்னும் பயனிலைக்கு எற்ற எழுவாய் இதில் வருவிக்கப்பட்டது.

ஒருவன் பெற்றுள்ள அறிவுகளெல்லாவற்றுள்ளும் சிறந்த அறிவாவது யாதெனின், தீது செய்தற்கு எது உள்ள இடத்தும் அதனைச் செய்யாது விடுதலேயாம் என்பதாம்.

பிறர்மாட்டுத் தீயதைச் செய்யாதிருத்தல் அறிவாம்; செறுவார்மாட்டும் அதனைச் செய்யாது விடுதல் பேரறிவாம் என்க.

தம்மைக் கொலைபுரியும் கொடியவரிடத்தும் பேரறிவாளர் தீயதைச் செய்யார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மெய்ப்பொருளார்பால் உணரப்படும்

கதை.

மெய்ப்பொருள் நாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரொரு சிற்றரசராயிருந்தும் உலகப் பொருள்களில் உளப்பற்றற்றார். பரம் பொருளையே மிகப்பற்றி நின்றார். அதனால் மெய்ப்பொருளார் என்னும் நற்பெயர் பெற்றார். இவரது தந்தை பெயர் தெய்வீகன். தாய் பெயர் பொன்னாலை. மலையமானருக்குத் தலைநாய்த் திருக்கோவலூரென்னும் திருநகரிலிருந்து இவர் செங்கோல் செலுத்தினர். பயிர்களுக்கு மேகம்போல் உயிர்களுக்கு இவர் உதவிபுரிந்தார். பரிந்துவருங்கால், முத்தநாதன் என்னும் மறுபுலத்துக் குறுநிலமன்னனொருவன் இவர்மேற் பகைகொண்டிருந்தான். பலமுறையும் இவரை வெல்ல முயன்றான். முடியவில்லை. அக்கொடியவன் ஒருநாள் அடியவர்போல் வேடந்தரித்து இவர்பால் வந்தான். மாளிகையுட்புகுந்தான். இவர் கண்டார். வஞ்சன் என்று அறியாமல் வணங்கினர். உபசரித்தார். அரியதூற் பொருளொன்றைத்

தெரியவுணர்த்த வந்தேன் என்று இவர்பால் அவன் கூசாதுகூறினன். பொய்யே புகலும் அவ்வெய்யவன் குறிப்பை மெய்யே காணும் இவ் ஐயர் கண்டிலர். பணிவி மக்கள் முதலிய அனைவரையும் அகற்றினர். தனியிடம் ஒன்றில் அவனுடன் புகுந்தார். இருவருந் தனித்தார். முறையெடுப்பதுபோல் அவன் உறையினை யவிழ்த்தான். வாளால் இவரை வலிந்து வீசினன். உடல்துணி பட்டது உதிரங்கான்றது. உடனே தத்தன் என்னுந் தானைத் தலைவன் கண்டான். அவனைக் கொல்லத் துணிந்தான். துடித் துங்கிடக்கும் இவர் கடுத்துத் தடுத்தார். நம் இல்லில் வந்தானைக் கொல்லலாகாது. அவனை நமக்கு ஆருயிர்த் துணைவன். ஊறொன்றுஞ்செய்யாது நீ உடன் சென்று அவன் ஊரிடைவிடுத்து வா என்றார். அவனும் சென்று விடுத்துத் திரும்பி வந்தான். அதன்பின் இவருயிர் துறந்தார். மெய்நிலையெய்தி மேவி யின்புற்றார். செறுவார்மாட்டும் தீதுசெய்யாது விடுத்த இப்பெரி யாரது பேரறிவை உலகம் போற்றியது.

(விரிவு பெரிய புராணத்தில் காணப்படும்.)

யார்மாட்டுந் தீதுசெய்யாமையே ஒருவன் பேரறிவுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

204. வெற்றி விசயனுக்கேன் வெம்மூகன் கேடெண்ணிக்
குற்றமுற்று மாய்ந்தான் குமரேசா—எற்றும்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

இ—ள். (சு)

குமரேசா! மூகன் என்பவன் விசயனுக்குக் கேடு எண்ணியதால் என் உடனே மாய்ந்தான் எனின், பிறன் கேடு மறந்தும் சூழற்க; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் என்க.

சூழ்தல் — எண்ணல்.

பிறன் கேடு — பிறனுக்குக் கேடுதரும் செயலை.

மறந்தும் சூழற்க — மறந்தும் எண்ணுதே.

அறம் சூழும் — அறக்கடவுள் எண்ணுமும்.

பிறனுக்குக் கேடு பயக்கும் தீவினையை ஒருவன் மறந்தும் எண்ணலாகாது; எண்ணுவனாயின் உடனே அவன் கெடப்படி அறக்கடவுள் எண்ணுமும் என்பதாம்.

ஒருவன் பிறர்க்குக் கேடு எண்ணுவனாயின் அது அவனுக் கே கேடாய் முடியுமென்பதாம்.

கெடுவான் கேடு நினைப்பான் என்றதுங் காண்க.

கேடு சூழ்வோனைத் தருமதேவதை கெடுத்துவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. (இது மூகன்பால் உணரப்படும்.)

கதை.

மூகன் என்பவன் ஓர் அசுரன். மாயைகள் பலவும் கேய மொடு பயின்றவன். துரியோதனனுக்கு உரிமையான நண்பினன். அவன், விசயனைக் கொன்றழிப்படி இவனை யேவினான். இவனும் இணைசந்தான். ஒரு பன்றியுருவங் கொண்டான். பரமனை நாடித் தவம்புரிந்து நிற்கும் விசயனை நாடி வந்தான். ஈன அசுரன் வனமாய் வருவதை ஞானநாயகன் உணர்ந்தார். வேடவுரு வங்கொண்டார். மலைமகளோடு சிலையெடுத்துச் சென்றார். செல்லும் பன்றியை மெல்லத் தொடர்ந்தார். தவம்புரி சாரலைச்சார்ந்தார். அம்பொன்றை யேவி அதனுயிர் மாய்த்தார். கேடுசூழுமுன் மூகன் கெட்டு விழுந்தான். பிறன்கேடு சூழ்வோனுக்கு அறம் கேடு சூழும் என்பது உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்.)

கேட்டிடீ செவ்வாய்க் கினிநிகர் மொழியாய் கிரீடியைத்
தேடினவர்க ளுடனே
காட்டிலே யொதுக்கி யிவளருந் தாணுவ் கடியவஞ்
சனையிலை கவர்ந்த
காட்டிலே வாழ்வீவான் எவலால் லோக நாமதா
னவகரிவன் றன்னைக்
கோட்டிலே கொலைசெய் எனமாய்வ் வந்திக் குன்றிடை
யின்று புக்கனனால். (1)

மற்றவன் விரைவினுடனமர் மலைந்து வாசவன்
மதலையை வதைத்து
நற்றவம் அநற்றழுன்னமே விரைந்து காழுயிர்
கவருதல் வேண்டும்
கொற்றவன் மதலை கேட்டன வரங்கள் கொடுத்தலும்
வேண்டிமென் றெழுந்தான்
கற்றவர் வணைத்துத் திரிபுமெரித்தோன் கற்றவர்
கருத்தினுற் காண்போன். (2)

(அருச்சுனன் தவநிலைச் சருக்கம்.)

கேடு சூழ்வோன் கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

---

205 உற்ற வறுமை யொழிக்கவொரு தீதுசெய்தேன்
குற்றமுற்றுன் கூலன் குமரேசா—எற்றும்
இலனென்று நீபனை செய்பற்க செய்யின்
இலனுகும் மற்றும் பெயர்த்து. (5)

இ—ள்.

குமரேசா! கூலன் என்பவன் தான் உற்ற வறுமையை
ஒழிக்கக்கருதி ஒரு தீது செய்து என் பெருங்கேடு உற்றான்

எனின், இலன் என்று தியவை செய்யற்க, செயின் பெயர்த்தும் இலன் ஆகும் என்க. இலன் என்று—வறியன் என்று கருதி.

மற்று—அசை நிலை. அதிலுள்ள உம்மை பிரித்துப் பெயர்த்து என்பதன்பின் கூட்டப்பட்டது.

பெயர்த்தும் இலனாகும்—மறுபடியும் வறியனாவன்.

வறியன் என்று கருதி அதனைத் தீர்க்கும்பொருட்டு ஒருவன் தீவினைகளைச்செய்யின் மறுபடியும் அவன் கொடிய வறுமையையே அடைவன் என்பதாம்.

முறையான முயற்சியாலன்றிக் களவுமுதலிய தீவினைகளால் பொருள்செய்து தனது வறுமையை ஒருவன் நீக்க முயலலாகாது என் எனின், தீவினைக்குப் பயன் துன்பமே யாதலால் அது வறுமையை மிகுவிக்குமேயன்றிச்செல்வத்தை வருவிக்காதென்பதாம்

வறியன் என்று கருதிப் பிறனுக்குத் தீவினையைச் செய்யாதே; செய்யின் அதனால் நீயும் வறியவனாவாய் எனவும் இது பொருள்படும்.

முன்னைத் தீவினைப்பயனால் இப்பொழுது வறியனாயிருக்கின்றேன் என்று உணராமல் ஒருவன் அதனை ஒழிக்கக்கருதி மேலும் தீவினையைச் செய்யின் அவன் என்றும் வறியனாயிருந்து கெடுவான் என்பது கருத்து. இது கூலன்பால் காணப்படும்.

கதை.

கூலன் என்பவன் அவந்தியைபதித்திருந்த நிவகூடம் என்னும் ஊரிலிருந்த ஓர் வேதியன். இளமையிலேயே வறுமை பிடித்தவன். பருவமெய்தினான். பொருளாசைகொண்டான். ஆலயம் ஒன்றில் புகுந்தான். அங்கே காணிக்கையாகச் சேர்ந்த பொருளைக் காணாமல் கவர்ந்தான். பின் காணப்பட்டான். அரசனுடைய

ணை அடைந்தான். அதன் பின் ஆருயிர் தீர்ந்தான். பன்னிரு பிறவிகளினும் இன்மையே அடைந்தான். இறுதியில் இழிமகனானான். பிரமசீலன் என்னும் முனிவர் ஒருவர் கங்கையாடி இவன் கண்முன் வந்தார். அவர் சடையிலிருந்து ஒரு துளி நீர் இவன் உடலில்பட்டது. அதனால் தூயவனாகினான். தீயவை நீங்கினான். இலன் என்று தீயவை செய்யின் அவன் மேலும் இலனும் என்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது. (இதன் விரிவைக் காசிமான்மியத்தில் காண்க.)

தீமையால் வறுமையே வருமென்பது இதனால் கூறப்பட்டது

---

206 கூடியமான் கொன்ற கொடுந்தீதால் பாண்டுமன்னன்
கூடியேன் மாய்ந்தான் குமரேசா—நாடியென்றும்
தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். (கூ)

இ—ள்.

குமரேசா! பாண்டுமன்னன் கூடிய மானைக்கொன்ற தீமையால் என் கூடி மாய்ந்தான் எனின், நோய்ப்பால தன்னை அடல்வேண்டாதான் தீப்பால தான் பிறர்கண் செய்யற்க என்க.

நோய்ப்பால—துன்பப்பகுதிகளாகிய பாவங்கள்.

தீப்பால—தீவினைகள்.

துன்பங்கள் தன்னைவந்து வருத்துதலை வேண்டாதவன் பிறர்பால் தீவினைகளைச் செய்யலாகாதென்பதாம்.

தனக்குத் துன்பம் வேண்டாதவன் பிறர்க்குத் துன்பஞ்செய்யாமலிருக்க வேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குத் துயர்செய்வோன் பெருந் துயர் அடைவான் என்பது குறிப்பு.

ஒருவன் எவ்வகையில் பிறர்க்குத் தீமை செய்கின்றானே அவ்வகையே அதனை அவன் அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பாண்டு மன்னன்பால் உணரப்படும்.

கதை.

பாண்டு என்பவன் அம்பாலிகை வயிற்றில் வியாசர் அருளால் பிறந்தவன். குந்தி மத்திரை என்னும் இருவரை மணந்து திருவுடன் வாழ்ந்தான். உத்தம குணங்கள் வாய்ந்து அத்தினபுரியை ஆண்டான். ஆண்டு வருங்கால் மானவியிருவருடன் ஒருநாள் இவன் இமயச்சாரலை யெய்தினன். அவருடன் அமைந்து ஆசமகிழ்ந்துலாவினன். வினைதமாக வேட்டையாடினன். விலங்கினங்கள் கலங்கியோடின. கிந்தமன் என்னும் முனிவன் ஒருவன் தனது மானவியுடனே அங்கோர் தனியிடத்தில் முனியுருக்கொண்டு தங்கியிருந்தான். அவ்விருவருங் கலையும் பிணையுமாய்க் கலந்து துய்த்தார். பாண்டு கண்டான். பகழி தூவினன். மானுருவானவன் மயங்கி வீழ்ந்தான். தேறி நொந்தான். மாறி மன்னனைச் சீறி நோக்கினன். என்போல் நீயும் இறப்பாய் என்றான். கேட்டான் மன்னன். வாட்டமீக்கூர்ந்தான். நிலந்தருங்கினன். நினைந்து நீங்கினன். கலவியின்பத்தைக் கருதாதிருந்தான். வசந்த காலமொன்றில் ஒரு பனிமலைச் சோலையில் குந்தியுடனே கூடியுலாவினன். முயங்கியின்புற மயங்கி விருப்பினன். பெற்ற சாபத்தை முற்றவும் மறந்தான். முயங்கித் துய்த்தான். உடனே மயங்கிச் சோர்ந்தான். மன்னுயிர் நீங்கினான். ஒருவன் தீப்பால் பிறருக்குச் செய்யின் அஃது அவன்பாலே வருமென்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது. (இது பாரதத்தில் உணரப்படும்.)

பொன்னங் கழலா னெதிரவ்வினைடப் போகம்வேட்டு
மன்னுங் கலையும் பிணைமானும் மகிழ்ச்சிகூர
மின்னுங்கணையா லிவனெய்திட வீழ்ந்தபோதின்
முன்னின்ற தந்த வயிர்வந்தோர் முனிவனரோ. (1)

காரிற் கொருகூ ரரணுற்ற தனல்கவெய்த
வேரிக் கணையான் மிகவெகுண்டு வேடமாறிப்
பூரித்த காம கலமிடைய்து பொழுது நின்னைச்
சோரிக் கணையா லறையுண்டுயிர் சோர்ந்துவீழ்ந்தேன். (2)

என்போல இன்பத் திடைதீயும் இறத்தியென்னை
யுன்போ டிறந்தான் முதற்கிங்கம ணைபேரான்
தன்போன் மகிழ்ந ணுடனே சென்றழுவி னையத்திப்
பின் போயினள் மெல்பிணையான வப்போதைதாணும் (3)

(சம்பவச் சருக்கம்.)

செய்த தீமையே ஒருவனச்சென்று வருத்தும் என்பது இதனல் கூறப்பட்டது.

---

207 கொன்றனமுன் சங்கமனைக் கோவலனைய் வந்துபின்பும்
குன்றியேன் மாய்ந்தான் குமரேசா—என்றும்
எனைப்பகை யுற்றருகு முய்வர் வினைப்பகை
வியாது பின்சென் றடும். (எ)

இ—ள்.

குமரேசா! சங்கமனைக் கொன்ற பரதன் கோவலனைப் பிறந்த பின்பும் என் அவ்வினை சென்று அவனைக்கொன்றது எனின், எனைப்பகை உற்றருகும் உய்வர் வினைப்பகை வியாது பின் சென்று அடும் என்க. உய்வர்— தப்புவர்.

வியாது பின்சென்று அடுப்—நீங்காமல் பின் தொடர்ந்து கொல்லும். வியாது என்பது வி என்னும் வினையடியாப் பிறந்த எதிர்மறை வினையெச்சம்.

வி என்பது மலர் பறவை நீக்கம் என்பனவற்றை யுணர்த்தும்.

எவ்வளவு பெரிய பகையை யுற்றவரும் ஒருவகையில் தப்பிப் பிழைப்பர், வினைப்பகை விடாமல் பின்தொடர்ந்து கொல்லும் என்பது கருத்து.

புறப்பணைக்குத் தப்பினும் தப்பலாம் விணைப்பணைக்குத் தப்பரு தியாதென்பது கருத்து.

புறப்பணைவர் எனைத் துணையராயினும் ஒருவன் அவர்க்கு அஞ்சாமல் இருக்கலாம்; விணைப்பணைக்கு அஞ்சவேண்டுமென்பது குறிப்பு.

பிறர்பால் ஒருவன் தீவினைசெய்யின் அஃது அவன்பாலே மீண்டுவந்து அவனை வருத்துமென்று மேற்கூறியதை நோக்கி அவன் இறந்துபடின் அஃது என்செய்யும் எனின், சென்றவிடமெல்லாம் பின்தொடர்ந்து சென்று அஃது அவனைக்கொன்றுவிடும் என்று இதில் நன்குணர்த்தினர்என்க.

இறப்பினும், ஒருவனை விணைப்பணை விடாமல் பின்சென்று கொல்லும் என்பது இதில் கூறப்பட்டது. இவ்வுண்மை பரதன்பால் தோன்றப்படும்.

கதை.

பரதன் என்பவன் கலிங்கநாட்டிலிருந்த சிங்கபுரம் என்னும் நகரத்தில் பிறந்தவன். அதிலிருந்து அரசுபுரிந்தவசு என்பவனுக்கு நண்பன். அக்காலத்தில் கபிலபுரத்தில் குமரன் எனப்பெயரிய அரசன் ஒருவன் இருந்தான். அவ்வசுவேந்தனுக்கும் இக்குமர மன்னனுக்கும் கொடும் பகை மூண்டது. ஒருவரையொருவர் வெல்லக்கருதி யிவ்விருவரும் இருந்தார். இருந்துவருங்கால் கபிலபுரத்திலிருந்து வணிகனொருவன் சிங்கபுரத்துக்கு வந்தான். அவன் பெயர் சங்கமன். பண்டம்பலகொண்டு அங்குப் பலரிடத்தும் விற்றான். அவனைப் பரதன் கண்டான். கேடு சூழ்ந்தான். அரசன்பால் சென்றான். குமரன் என்னும் நமது பகைவனிடமிருந்து சங்கமன் என்றொரு ஒற்றன் இங்கு வந்துள்ளான். விலைசெய்பவும் வணிகன்போல் வேவு பார்க்கின்றான். அவனைக் கொலைசெய்ய வேண்டுமென்று பரதன் கொடுமொழி கூறினான். வசவும் இசைந்தான். ஒன்றும் அறியாச் சங்கமனைக் கொன்று தொலைத்தார்.

அவன் மனைவியாகிய நீலி யென்பவள் தலைவிரி கோலமாய் அங்கு வந்தாள். தன் தலைவனுக்குக் கொலைவினை சூழ்ந்தோன் அவ்வ னையே கொலையுண்டு தொலைக, அவன்மனைவியும் தன்போல் துய ருழந்து கெடுக என்று சபித்தாள். கலிவன் உடலைத் தழுவித் தன்னுயிர் நீத்தாள். அவ்வனையே பரதன் கோவலனுய்ப்பிறந்து மதுரையில் கொலையுண்டிறந்தான். விளைப்பயன் பின்சென்று கொல்லுமென்பது இயன்பால் விளங்கி நின்றது.

இதன் விரிவு மணிமேகலையில் காணப்படும்.)

ஒருவன் புக்குழியெல்லாம் தீவினை புகுந்து கொல்லும் என் பது இதனல் கூறப்பட்டது.

208 பண்டியர்ந்த காளமுனி பாண்டவர்பாற் செய்தீதால்
கொண்டானென் கேதி குமரேச— மண்டுகின்ற
தீயவை செய்தார் கெடுதல் நிழற்சின்னை
வீயாது டியுணறந் தற்று. (அ)

இ—ள்.

குமரேசா! பாண்டவரிடம் காளமுனி செய்த தீமையானது அவனை என்வந்து கெடுத்ததனனின், தீயவைசெய்தார் கெடுத ல் நிழல் தன்னை வீயாது அடியுணறந்தற்று என்க.

நிழல் தன்னை வீயாது—ஒருவன் நிழல் அவனை விடாது தொடர்ந்து வந்து. உணறந்து அற்று—தங்கியதுபோலும்.

தீவினைகளைச்செய்தவர் கெடுவது எதுபோல்வது எனின், ஒரு வன் நிழல் அவனை விடாது தொடர்ந்துவந்து அவன் அடியின்கண் அடங்குவது போலும் என்பதாம்.

நிழல் உடலைத் தொடர்தல்போல் வினை உயிரைத்தொடரும் என்பது குறிப்பு.

ஒருவன் நிழல் வெயிலொளிபால் நெடுந்தூரம் நீண்டிருப்பினும் அவன் சென்றவிடமெல்லாம் தொடர்ந்து சென்று முடிவில் அவனடியின் கண்ணிணை நுங்கநிற்கும்; அதுபோல் ஒருவன் வினை, காலதேதத்தால் பிற அகன்றிருப்பினும் அவன் புகுமிடமெல்லாம் புகுந்து இறுதியில் தப்பாமல் அவனைப்பற்றிக் கொல்லும் என்பதாம். அருவமான வினை உயிரைப்பற்றி வருத்தும் உண்மையை உணர்த்துதற்கு உருவமான நிழலை ஒப்புக்காட்டிய ஒண்மை யின்னினைத்தக்கது.

வினைப்பகை வீயாது பின் சென்று அடுமென்று மேற்கூறிய கை விளக்குதற்கு இவ்வுவமை கூறியதென்க.

ஒருவன் செய்வினையானது அவன் மெய் நிழல்போல் விடாமல் தொடர்ந்து வந்து அவனையே பற்றிக்கொல்லும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது காளமுனிபால் காணப்படும்.

கதை.

காளமுனி என்பவர் அத்தினபுரியை யடுத்திருந்த ஓர் வனத்திலிருந்தவர். திருதராட்டிரனுக்குச் சிறந்த நண்பினர். தவம் புரிந்திருந்தும் அவம்பல புரிந்தவர். இவரை ஒரு நாள் துரியோதனன் அழைத்தான். வனம் புகுந்திருந்த பாண்டவர் ஈண்டு மீண்டு வந்துவிடாமல் ஆண்டு வைத்தே கொல்லவேண்டுமென்று இவரை மெல்ல வேண்டினன். முதலில் மறுத்தார். பின் இசைந்தார். எழுந்துசென்றார். தனியிடம் ஒன்றில் தங்கினர். மாரண வேள்வி ஒன்று செய்தார். ஆணைமுறைப்படி அதிலிருந்து ஒரு பூதம் எழுந்தது. ஐவரைக் கொன்றுவா என்று இவர் அதன்பால் உரைத்தார். வெகுண்டு பூதம் விரைந்து சென்றது. மாயின் அருளால் நால்வர் மாண்டார். தருமர் ஒருவரே அங்குத் தனித்திருந்தார். பூதங்கண்டது. செத்தவர்மீதா கம்மைச்செய்தவன் எவிரென். நன்று நன்றென நகைத்து வெறுத்தது. சினந்து மீண்டது. விரைந்து புகுந்தது. அவன் மெய்யையே சினைத்து

ஓயமென மறைந்தது. செத்தியெய்த முனியன் செத்துத்தீர்ந் தான். ஒருவன் செய்த தீவினை அவன் மெய்நிழல்போல் பின்று வந்து அவனையேபற்றுமென்பதை உலகம் இவ்வாறுணர்ந்தது.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

செய்தவினையே தீவினை சேர்ந்து கொல்லுமென்பது இதனால் கூறப்பட்டது.

209 மாரெதித் செய் மாரீசன் என்மாய்ந்தான்
கோரல் வருந்திக் குமரேசா — ஆரமல்
தன்னைத்தான் காதலுயின் எனைத்தொன்றும்
தன்னற்க தீவினைப்பால். (அ)

ர்—ள.

குமரேசா! மாரெதித் தீவினை செய்த மாரீசன் என் கோரலால் வருந்தி மாய்ந்தான் எனின், தன்னைத்தான் காதலன் ஆயின் தீவினைப்பால் எனைத்தொன்றும் துன்னற்க என்க.

தன்னல்—செய்தல்.

எ ஒன்றுந்துன்னற்க—எத்தீவினைச் சிறிய தினையுஞ் செய்யா

தனக்குத் துன்பமொன்றும் இல்லாதிருக்குட்பட ஒருவன் விரும்புவனையின் பிறரிடம் அவன் யாதொரு தீமையும் செய்யலா காதென்பதாம்.

தனக்கு இன்பம் வேண்டுபவன் பிறர்க்குத் துன்பம் செய் யாமல் இருக்கவேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குத் தீது செய்யின் தனக்கே அஃது உயிர்க்கேடு தரும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மாரீசன்பால் உணரப்படும்.

கதை.

மாரிசன் என்பவன் தாடகையின் புதல்வன். தக்கை யென் பவர் சுகந்தன். இயக்கனான இவன் அகத்தியர் சாபத்தால் அரக் கனாயினான். மா தவஞ் செய்வோர்க்கு ஏதமே செய்தான். வி சுவாமித்திரர் வேள்வியைக் காக்குங்கால் இராகவன் ஒரு கணை யினை யேவி இவனைக் கடலினை வீழ்த்தினர். வருந்தியழுந் தான். அவ்வீரன் வலியைத் தேறி அஞ்சினன். அதனால் தீது ம் அடங்கினன். ஓர் வனத்திற் புகுந்து தனித்திருந்து மனத் தை யடக்கினன் இவ்வனநிருப்ப சினைதபால் காதல்கொண்ட இராவணன் இவனிடம் வந்தான். மானாகிச் சென்று இராமனை வஞ்சிக்கும்படி இவனை வேண்டினன். முதலில் இவன் மறுத்தா ன். பின் இணங்கு சென்றனன். பொன்மானன். சினை முன்னே போனன். சினையும் பயங்கித் தன்னாதனை நினைத்தாழுதாள். பிடித்துத் தானென்றாள். மாயமான் தினைனை அத்தாயவன் தெரிந்திலன். பி டிக்கக் கருதியடுத்துச் சென்றனன். அது கடுத்து விரைந்தது. நெடுந்தூரம் போனபின் அதன் கொடுந் தினை தெளிந்தான். ஓர் அம்பை யேவினன். அவன் வெம்பி வீழ்ந்து வெந்துயிர் நீர்ந் தான். துன்னிய தீவினையால் ஏழுவன் மன்னுயிர் துன்புறும் என் பதை உலகம் இவன்பாலோர்ந்தது.

(இதன் விரிவை இராமாயணத்தில் காண்க.)

தனக்கு நன்மை நாடுவோன் பிறர்க்குத் தினை செய்யலாகா தென்பது இதனால் கூறப்பட்டது.

---

210. பண்டு தயரம் பலிசெய்தும் பொன்னவன்சேய்
கொண்டிலன்கே டென்னை குமரேசா—கண்டு
அருங்கேடன் என்பதறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். (வ)

இ—ள்.

குமரேசா! பிறர் தயர் பல செய்தும் பொன்னவன்சேய்

கேடு சிறிதும் என் அடைந்திலன் எனின், மருங்கோகடித் தீவினை செய்யான் எனின், அருங்கேடன் என்பது அறிக என்க.

பொன்னவன்சேய்—பிரகலாதன். பொன்னவன்—இரணியன். மருங்கு—பக்கம்; அது நேர்வழியல்லாத கொடுநெறியை யிங்கே குறித்து நின்றது.

மருங்கு ஓடா—தீநெறிக்கண் விரைந்து சென்று. அருங்கேடன்—அரிதாகிய கேட்டையுடையன். அருமை, இங்கே இன்மையைக் குறித்து நின்றது. கேடில்லாதவன் என்க.

கொடுநெறிக்கட்சென்று தீவினைகளைச் செய்யாதவனைக் கேடில்லாதவன் என்று அறியற்கண்ணதென்பதாம்.

தீவினை செய்யாத ஒருவனை அடைதற்குரிய கேடியாண்டும் இல்லையென்பது கருத்து.

நெறிநீங்கித் தீவினைகளைச் செய்யும் அறிவிலிகளையே எல்லாக் கேடுகளும் எளிதிலடையுமென்பது குறிப்பு.

நெறியே சென்று நல்வினைபுரியும் அறிவுடையாரைக் கேடுகள் அடையா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பிரகலாதன்பால் உணரப்படும்.

கதை.

இரணியன் புதல்வனாகிய பிரகலாதன் நெறி நின்றொழுகிய அறிவினையுடையவன். அவன் இரணியாய நமவென்று சொல்லவில்லையென்று வெகுண்டு அசுரனே அசுரர் பலர் அவனுக்கு அல்லல் செய்தார். கொல்லத்துணிந்து எல்லாம்புரிந்தார். பாம்புகளைவிடுத்து தீண்டும்படி செய்தார். மலைமேலிருந்து தலை கீழுருட்டினர். நஞ்சையுள்ளே ஊட்டினர். தண்டங்கள் கொண்டு தலைமேலடித்தார். வேலால் எறிந்தார். வாளால் வீசினர். தீயையவனைச் சேரத்தள்ளினர். கல்லுடன் கட்டிக் கடலில் இட்டார். அவ்வெல்லாவற்றினும் பிரகலாதன் யாதொரு கேடும் இல்லாதிருந்தான். பெருமானருளால் பெருமகிழ்வுற்

றன். மருந்தோடித் தீவினை செய்யாதவனுக்கு உறுங்கேடு ஒன்றுமில்லை என்பதை உலகம் இவன்பா லுணர்ந்தது.

(இதன் விரிவை இரணியன் கதையிலுணர்க.)

தீவினை செய்யாதவனுக்குக் கேடொன்றுமில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

தீவினையைச் செய்தற்குத் தியார் அஞ்சார். தூயர் அஞ்சுவர். தீவினை தியிலுங்கொடியது. அதனைச் செய்யாதுவிடுதலே தலையாய அறிவு. பிறன்கேடு சூழ்வோன் பெருங்கேடடைவான். வறுமையுறினும் தீமை செய்யலாகாது. தீவினை செய்யான் நோவினை யெய்தான். விளைப்பதை பின் சென்றுவிடாமல் கொல்லும். அது நிழலெனத் தொடர்ந்து அழலென வருத்தும். தனக்கு இன்பம் விருப்பினான் பிறர்க்குத் துன்பம்புரியலாகாது. தீவினை செய்யாதவனுக்கேது ஒன்றுமில்லை.

உ-வது தீவினையச்சம் முற்றிற்று.

உஉ-ம் அதிகாரம் ஒப்புரவறிதல்.

அஃதாவது உலக இயல்புக்கும் தன் இயல்புக்கும் ஒப்புறும் நலங்களை உய்த்துணர்ந்து உதவிசெய்தல். உரவு—நன்மை. மேல் தீவினைபச் செய்யற்க என்றார். இதில் நல்வினையைச் செய்க என்கின்றார். ஆகவின் அதன்பின் இது வைக்கப்பட்டது.

---

211. வேறுறன்றும் வேண்டாமல் மெய்ப்புதவி செய்துநள்ளி
கூறுதேன் சென்றூன் குமரேசா—வேறுகக்
ணைகம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்றூற்றங் கொல்லோ வுலகு. (க)

இ—ள்.

குடிமரேசா! நள்ளி என்பவன் தேன் றுன்னைறடம் வெண் டாமம் போருதனி செய்து தன் பெயரையும் கூறுமல் என் சென் றுன் எனின், உலகு மாரிமாட்டி என் ஆற்றும் அதுபோல் கடப் பாடும் கைம்மாறு வேண்டா என்க.

உலகம் என்றது உயிர்களை. கடப்பாடு—ஒப்புரவு. அறி வுடையவரால் கடனுகக் கருதிச் செய்யப்படுவது என்க.

கைமாறு—பதிலுதவி. பிறர்க்குதவிபது தன் கைக்குமாறு வது என்னும் வழுவான் வந்தது.

உலகம் மழையினிடத்து என்ன கைமாறு செய்யாநின்றது அதுபோல ஒப்புரவாளரும் கைமாறு நோக்கா என்பதாம்.

தமக்கு நீர் உதவுகின்ற மேகங்கட்கு உயிர்கள் யாதோர் உத வியும் செய்யாவிடினும் அதனை அவை இடையறுது உதவிவருதல் போல் உபகாரிகளும் பயன் கருதாமல் யாவர்க்கும் யாண்டும் உத விசெய்வர் என்பதாம்.

மேகம்போல் நல்லோர் ஆருவ் சாரந்து எல்லார்க்கும் உதவி செய்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது நள்ளிபால் உணரப்படும்.

கதை.

நள்ளி என்பவன் கடைஎழு வள்ளல்களுள் ஒருவன். யா வர்மாட்டும் பொருளுடையவன். இல்லையென்னுமல் ஈந்துமகிழ்ந் தவன். மலைவளம் வாய்ந்த ஒரு சிறு நிலப்பகுதியை ஆண்ட குறு நிலமன்னன். தமனியம் என்னும் நகரிலிருந்து இவன் அரசபுரிந் தான். பெற்றோர் பிள்ளைகளைப் போற்றுவதுபோல் இவன் எல் லாரையும் பேணினன். இவனது உயர் குணங்களைக்கண்ட அனை வரும் இவன்பாற் பெருநண்பு கொண்டார். நள்ளியென்னும் பெயர்க்கு நற்பொருள் கூட்டினன். பரணர் என்னும் புலவரை

ருவர் பல இடங்களுந்குஞ்சென்று வருந்தி இவனது நகரையந்தி திருந்த ஒரு காட்டில்வந்து கனைத்திருந்தார். அங்கு இவன் இயல்பாகச் சென்றான். அவனைக்கண்டான். வறுமையால் வாடிய அவனது மேனியை நோக்கினான். பொருளும் இரங்கினன். சிறந்த உணவைக் கொணர்ந்து பரிந்து ஊட்டினான். தன் கழுத்தில் அணிந்த சிறந்த முத்தாரத்தையும் கையில்விளங்கிய உயர்ந்த கடகத்தையும் அவருக்கு முறைமை பூட்டினான். ஒரு பெருந் தொகைப் பொருளை அவர் இருந்த ஊருக்கனுப்பினன். அவனை பெருஞ்சிலவுவைத்துத் தன் பெயர் ஊர் ஒன்றுஞ்சொல்லாமல் நீங்கினன். புலவர் பின் தெரிந்தார். நைமாறு கருதாமல் தனித்தனிய அவனது வள்ளற்குணத்தை மனங்குழைந்து வாழ்த்தினர். பயிருக்கு மழைபோல் தன்னுயிருக்கு அவன் புரிந்தவுதவியை உன்னியுன்னி மகிழ்ந்தார். நைமாறு கருதாமல் மேலோர் உதவுவர் என்பதை நன்னிபால் உணர்ந்து அவர் நன்றி புரிந்தார்.

(இஃது அகநானூற்றில் அறியப்படும்)

பிறர்க்குதவி செய்தலே பெரியோர் கடமை என்பது இதனால் கூறப்பட்டது.

212. ஈட்டிவைத்த செல்வமெல்லாம் ஏற்பார்க்குந் தக்கார்க்
கூட்டினனேல் பாரி குமரேசா—நாட்டமுடன்
தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (உ)

-ள்.

குமரேசா! ஈட்டிவைத்த செல்வமெல்லாம் ஏற்பார்க்கும் தக்கார்க்கும் என் பாரி உதவினன் எனின், தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டேயாம் என்க. தாள்—முயற்சி. வேளாண்மை—உபகாரம்.

தாள் ஆற்றி—முயற்சியைச் செய்து.

தக்க பொருள் எல்லாம்—தொகுத்த பொருள் முழுதும்.

முயற்சியைச் செய்து தொகுத்த பொருள் முழுதும் தகுதியுடையவர்க்காயின் பிறர்க்கு உதவும் பொருட்டேயாம் எனபதாம். ஆயின் என்பது வருவிக்கப்பட்டது.

தகவிலார் தாமே உண்டுடுத்திக் கண்டு களிப்பர். தக்கார் பிறர்க்குதவி செய்து பேரின்புறுவர் என்க.

ஒருவன் முயன்று தொகுத்த பொருள் முழுதும் தகுதியுடையவர்க்கு உதவி செய்யும்பொருட்டேயாம் எனவும் இது பொருள்படும்.

தக்கோர் தம்பொருள் முழுஞையும் பிறர்க்குதவுவர் என்பது இதினுணர்த்தப்பட்டது. இது பாரிபால் உணரப்படும்.

கதை.

பாரி என்பவன் மேவலிர் குலத் தலைவன். மாரிபோல் வாரி வாரி வழையாது கொடுத்த வள்ளல். முந்நூறு ஊர்களையுடைய ஒரு சிறு நிலப் பகுதியை உரிமையாகவுடையவன். இம்மன்னன் பறம்பு என்னும் மலைச்சாரலில் விளங்கியிருந்த அருளகமென்னும் திருநகரினிருந்து அரசு புரிந்தான். பிறவுயிர்கள் மாட்டுப் பேரருளுடையவன். மலர்தலை யுலகினுக்கு இவன் உயிரென இருந்தான். தான் பெற்ற பொருள் முழுதும் பிறருக்கே உதவினன். இல்லையென்னுமல் ஈந்துவந்த வள்ளற் குணத்தால் இவன் புகழ் உலகெங்கும் பரந்தது. அதனால் சேரசோழ பாண்டியர் என்னும் முடியுடை வேந்தராகிய மூவரும் இவன்மேல் பொறாமைகொண்டார். வெல்லக் கருதினர். படையுடன் திரண்டு இவன் நகர்மேல் வந்தார். அரண்வலியால் பெருஞ் சிறப்புடைய அதனை முற்றுகை செய்தார். பாரியும் அஞ்சா நெஞ்சுடன் அவரோடெதிர்த்தான். வெற்றியை ஒருவரும் முற்றவுங் கண்டிலர். பருவங்கள் பல கழிந்தன. அக்காலத்தில் பாரியின் உயிர்த்தோழனாயிருந்த கபிலர் என்னும் புலவர் பெருமான் வெளியே வந்து அம்மூவரையும் நோக்கினர். அரசீர், "எமது மன்னன் இகாண்

டனொருவனும் ஆண்டை ஊர்களையும் இரவலர்க்குக் கொடுத்து விட்டு இதுபொழுது தனியே யிருக்கிறன். பறப்பும் இருக்கிறது. காலும் இருக்கின்றன். ஆயினும் நீயிர் அதனைப் பொருதுவெல்ல முடியாது. எம்மைமெய்க்கொள்ள விரும்பின் நீயிரும் இரவலராய் வின் விரைவிற் பெறலாம். எம் இறைவன் மாரி தருவான். என்று புகன்றார்.

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே
மூன்றாறாத்தே தண்பறம்பு நாடு
மூன்றா றாரும் பகிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே. (கபிலர்)

இதனால் பாரியினது பெருவீரமும் வள்ளற் குணமும் தாளாற்றித் தந்ததை வேளாண்மை செய்ததனிதுபும் இனிது புலனும்.

மேலோர் பெற்றமையெல்லாம் பிறர்க்கே உதவுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

213. தெள்ளருநகழ் ஆயுத் திரணைப் புரவொன்றே
கொள்ளுமகிழ்ந் தானென் குமரேசா—என்னாத
புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. (க)

இ—ள்.

குமரேசா! ஆயுத்திரன் ஒப்புரவு ஒன்றே நன்று என்று ஏன் கொண்டான் எனின், புத்தேள் உலகத்தும் ஈண்டும் ஒப்புரவின் நல்லபிற பெறல் அரிது என்க.

புத்தேள் உலகம்—தேவருலகம்.

ஒப்புரவின் நல்லபிற—ஒப்புரவுபோல நல்ல செயல்கள்பிற.

வானுலகத்தும் இந்நிலவுலகத்தும் ஒப்புரவுபோல நல்ல செயல்கள்பிற பெறுதல் அரிதென்பதாம்.

ஒப்புரவுக்கு ஒப்பான நன்மை யாண்டும் இல்லை என்றபடி ஒப்பில்லை எனவே உயர்வும் இல்லையாயிற்று.

இருவுலகினும் பெறுதற்கரிய ஒப்புரவைத் தமக்கு உரிமையாகப் பெற்றவரே பெரியோர் என்பது கருத்து.

பிறர்க்குதவி செய்தல் என்னும் பெருநலமுடையவர் அதனை விடுத்து வேறு எதனையும் பெறுவதற்கு விரும்பார் என்பது குறிப்பு. இவ்வுண்மை ஆபுத்திரன்பால் அறியப்படும்.

கதை.

ஆபுத்திரன் என்பவன் சாவி என்னும் ஒரு பார்ப்பனியின் புதல்வன். அருள் நிறைந்த நெஞ்சினன். பிறவுயிர்கட்கு இதம் புரிதலையே பேரின்பமாக எண்ணினான். இவனது மனநலத்தைக் கண்டு மகிழ்ந்த சிந்தாதேவியென்னும் ஒரு தேவி அமிர்தசுரபி என்னும் ஓர் அற்புதப் பாத்திரத்தை இவனுக்கு உரிமையாகத் தந்தாள். அதனால் ஆருயிர்கட்கு இவன் பேருதவி செய்தான். பறவைகளுக்கும் விலங்கினங்களுக்கும்கூட இவன் பரிந்துணைவளித்தான். இவன் ஒப்புரவு செய்திதாழுகும் செப்பத்தை இந்திரன் உணர்ந்தான். இவன்பால் வந்தான். உனது உதவியின் நலத்தை உவந்தேன். என்னுடன் வா என்றான். பொன்னுலகமாகிய உன்னுலகத்தில் எனது உதவியைப் பெறுதற்கு உரியாரில்லை. அஃது எற்பாரில்லாத இயல்பினையுடையது. அதனால் அதனை யெய்தேன். ஒப்புரவு செய்திதாழுகுதற்குரிய இப்புகியே யான் இன்புறத்தக்கதென இசைத்தான். இந்திரன் காவிரிப்பூண்டான். (இதன் விரிவை மணிமேகலையிற் காண்க)

பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்யிலை மருங்கின் எய்தல் அல்லது
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவது அன்மையிற் கையற வுடைத்தே. (புறநானூறு)

ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்தே
வாழ்வாரே வன்க ணவர். (பரி-புனை)

ஒப்புரவொன்றே ஒருவனுக்கு உயர் நலமென்பது இதனால் கூறப்பட்டது.

---

214. என்னேநல் வேங்கடத்தான் இன்பமுற முன்னவனே
னென்னே யிழிந்தான் குமரேசா—உன்னியே
ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (சு)

இ—ள்

குமரேசா! வேங்கடன் என்பவன் சீரும் இன்பமும் சேரப்பெற்றான், அவனுடன் பிறந்தவன் ஏன் பழிக்கப்பட்டான் எனின், ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் என்க.

ஒத்தது என்றது ஒப்புரவை. உலகம் நல்லது என்று ஒப்பியதை என்பார் ஒத்தது என்றார்.

மற்றையான்—உலக இயற்கையையறிந்து உதவி செய்யாதவன்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகி உயிர்கள் இன்புறுத்தக்க விதங்களை யுணர்ந்து தம்மால் இயன்றவரை பிறருக்கு உதவி செய்து வாழ்பவனே உயிர் வாழ்பவனாவான், அல்லாதவன் செத்தவனே ஒப்பாவான் என்பதாம்.

உயிர்கள் இன்புற உதவி செய்யாதவனைச் செத்த பினத்தோடு ஒப்பிடவேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குதவி செய்தலே ஒருவன் பிறவிக்குப் பயனதலால் உபகாரியை யுயிர் வாழ்வான் என்றும் உபகாரமில்லாதவன் உருவுடன் இருப்பினும் உயிரின் குணமில்லையாதலால் அவனை இறந்தவன் என்றும் கருதவேண்டுமென்றபடி.

ஒத்ததையறிபவனை உயிர் வாழ்பவனுவன் அல்லாதவன் செத்தவனை என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை திருவேங்கடனிடமும் அவன் முன்னிடமும் முறையே உணரப்படும்.

கதை.

திருவேங்கடன் என்பவன் வட நாட்டிலே நேரி என்னும் ஊரிலே விளங்கியிருந்த ஒரு பெருஞ் செல்வன். யாவரிடமும் பேரன்புடையவன். இனிய சொல்லினன். சொல்லாலும் செயலாலும் எல்லார்க்கும் இதமே செய்பவன். ஒத்ததறிந்தொழுகும் பேருபகாரியாகிய இவனுக்கு மூத்தவனுய்க் கண்ணுங்கினியான் என்னும் பெயரினையுடைய அண்ணன் ஒருவன் இருந்தான். அவன் வன்கண்ணன். ஒருவர்க்கும் ஒன்றும் உதவாதவன். இவர் நட்டையர் என்னும் புலவர் இருவர் அவன் தம்பிபால் வந்தார். தம்பி மகிழ்ந்து புலவர்க்கு வேண்டியவற்றை விரும்பித் தந்தான். அவன் தந்தான். உடனே தம்பியைப் புகழ்ந்தும் தனையனை யிகழ்ந்தும் புலவரிருவரும் விரவிடையாகப் பாவொன்று பாடினர். இவ்வாயிருவரிடத்தும் ஒப்புரவொழுகியதால் திருவேங்கடன் உயர்ந்தின்புற்றான். முன்னவனிடத்தும் உதவியின்மையால் கண்ணுங்கினியான் கருத்துக்கு இனியாதவனைப்பப் பழியுற்றிழிந்தான். ஒத்ததறிந்தான் உயர்ந்தான். அறியாதான் செத்தான் என்பதை உலகம் முறையே இவர்பால் ஓர்ந்தது.

தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
என் பிறந்தான் கண்ணுங் கினியாளை—வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யென்பிறந்தாள் முன். (இரட்டையர்)

ஒப்புரவறியாதவன் பிணத்தோடொப்பன் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

---

215. வள்ளிரா மன்றிருவால் வையமெல்லாம் பேருவணம்
கொள்ளநின்ற தென்னை குமரேசா—எள்ளாத
ஊருணீர் நின்றிறந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. (ஞ)

இ—ள்

குமரேசா! இராமன் திருவெய்த உலகமெல்லாம் என் பேருவகை யெய்தியது எனின், உலகு அவாவும் பேரறிவாளன் திரு ஊருணி நீர் நிறைந்ததையொக்கும் என்க.

ஊருணி—குளம். இஃது எதுப் பெயர். ஊரில் வாழ்வார் நீர் உண்ணும் இடம் என்பதாம். நிறைதல் என்னும் நீரின் தொழில் அது நிலைத்து நிற்கும் குளத்தின்மேல் நின்றது.

உலகு அவாம்—உலக நடையை விரும்பிச் செய்யும். இதில் அவாவும் என்னும் எச்சம் அவாம் என ஈற்றயிர்மெய் கெட்டு நின்றது.

உயிர்கள் இன்புறத்தக்க விதங்களை யினிதுணர்ந்து உதவி செய்யும் பேரறிவுடையவனது செல்வம் ஊருணியில் நீர் நிறைந்ததையொக்கும் என்பதாம்.

ஓர் ஊருணியில் நிறைந்த நீர் அவ்வூரிலுள்ள எல்லாராலும் உண்ணப்பட்டு அவரனைவர்க்கும் ஒப்ப நின்று தப்பாமல் இன்பம் விளைத்தல் போல் ஒத்ததறியும் உபகாரியினது செல்வம் உலகமெல்லாம் உவந்து துய்க்கும்படி அமைந்து நிற்கும் என்பதாம்.

உலகமுழுவதுக்கும் பயன்படுகின்ற உபகாரியினது செல்வத்தை ஓர் ஊர்க்கு மாத்திரம் பயன்படும் குளத்து நீரோடு ஒப்புமை கூறியது அதனது ஒண்மையும் தண்மையும் எண்ணையும் கருதி யென்க.

ஊருணி நீரும் பேரறிவாளனது திருவும் தடையொன்றின்றி நெடுது நின்று எல்லார்க்கும் இன்பந்தரும் என்பது கருத்து.

உபகாரியொருவன் செல்வமெய்திலை உலகமெல்லாம் உவகையெய்துமென்பது குறிப்பு. இவ்வுண்மை இராமன்பால் காணப்படும்.

கதை.

தசரத மன்னன் தனது தலைமைப் புதல்வனை இராமனுக்குத் திருமுடி சூட்டக் கருதித் தன் கருத்தை அமைச்சர்க

ருக்கு அறிவித்து நாடெங்கும் அறியும்படி செய்தான். இராமன் அரசதிருவை யெய்த வருகின்றான் என்பதைக் கேட்டவுடனே எல்லாரும் அளவி லுவகை யெய்தி ஆர்வமீக் கூர்ந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் உச்சிமேல் அம் மணிமகுடத்தை வைத்ததாகக் கருதிச் சிந்தங் களித்தார். ஓர் ஊருணி நீர் நிறைவதைக் கண்டு அவ்வூரிலுள்ளார் உளமகிழ்வதுபோல் இராமன் திரு எய்துகின்றான் என்பதையறிந்தவுடனே எல்லா உயிர்களும் ஒருங்கே இன்புற்றன. ஊருணி நீர்போல் பேரறிவாளன் திரு எல்லார்க்கும் நெடிது நின்று இனிது தவுமென்பதை உலகம் இராமன்பால் உணர்ந்தது, இதன் விரிவை இராமாயணத்தில் காண்க.

இறையன் சொல்லெனும் இன்னறவு அருந்தினர் யாரும்
முறையி னின்றிலர் முகந்துறு களியிடை முழ்கி
நிறையு நெஞ்சுடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
உறையும் விண்ணகம் உடலொடு மெய்தினர் ஒத்தார். (1)

ஒத்த சிந்தையர் உவகையர் ஒருவர்க்கங் கொருவர்
தத்தமக் குற்ற அரசெனத் தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த நன்றென அன்பிலே டறிவிப்ப தானார். (2)

ஊருணி நிறையவும் உதவு மாதியர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்ந்தநி
வார்புனல் பெருகவும் மறுக்கின் றார்கள்யார்.
(மந்திரப்படலம்.) (3)

பேரறிவாளன் செல்வம் ஊருணி நீர்போல் எல்லார்க்கும் பயன் தரும் என்பது இதனால் கூறப்பட்டது

216. கோட்டி முதலியார் கொண்டசெல்வம் எல்லார்க்கும்
கூட்டியதேன் இன்பம் குமரேசா—காட்டில்
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றுச் செல்வம்
புடையான்கட் படின். (க)

இ—ள்.

குமரேசா! கோட்டி முதலியார் கொண்ட செல்வம் எல்லாருக்கும் என் இன்பங் கொடுத்தது எனின், செல்வம் நயனுடையான் கண்ணே படின் அது, பயன்மரம் ஊருள்ளே பழுத்ததை யொக்கும் என்க.

ஊர் உள் என்பது உள்ளூர் என மாறி நின்றது.

பயன் மரம்—பயனுள்ள மரம்: அஃதாவது இனிய கனிகளை யுதவும் மா பலா முதலிய விழுமிய மரங்கள் என்க.

செல்வம் நயன் உடையான்கண் படின்—செல்வம் உபகாரியினிடத்துப் பொருந்துமாயின்.

உலக நடையையறிந்து உதவி செய்யும் உபகாரியிடத்துச் செல்வந் தங்கி நிற்குமாயின் அது பயனுள்ள மரம் ஊர் நடுவே பழுத்து நிற்பது போலும் என்பதாம்.

ஊருள் நிற்கும கனிமரம் அங்குள்ளார் அனைவர்க்கும் எளிதில் இனிமை தருதல் போல் நயனுடையான் செல்வமும் எல்லார்க்கும் நன்கு பயன் கொடுக்குமென்பது கருத்து.

நல்லோர் செல்வம் எல்லார்க்கும் இன்பந் தரும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோட்டி முதலியார்பால் காணப்படும்.

கதை.

கோட்டி முதலியார் என்பவர் தொண்டை நாட்டிலுள்ள மாகறல் என்னும் ஊரிலே பிறந்தவர். நிறைந்த செல்வமும் சிறந்த ஈகையும் ஒருங்கு வாய்ந்தவர். வறியர் வந்து வாய் திறவாமுன் அவர் குறிப்பறிந்து வினைந்து கொடுத்த பெருந் தகையாளர். இல்லையென்றிரத்தல் இளிவென்று கருதிச் சொல்ல நாணுகின்றவர்க்கும் இனிதுதவ விரும்பித் தமது வீட்டின் முன்னே வெண் மணல் பரப்பி வேண்டுவார்க்கு வேண்டியவை தயங்காதெழுதச்செய்து அதனைக் கண்டு தெளிந்து களிப்புடன் உதவினர். உலக நடையையறிந்து உதவி செய்தல் என்

னும் புண்ணியத்தைத் தினந்தோறும் மனமுவந்து செய்து வந்தமையால் புண்ணிய கோட்டி முதலியார் என்று அனைவரும் இவரைப் புகழ்ந்து போற்றினர்.

நீணிலத்திலுறும் ஏழைமாந்தரீர் நீவிர்வேண்டின இன்புறீஇ
நேரில்கண்மின்னை தருவன்யானலதும் நினைவிலுன்னுமனை
நவிலுநீர்
நாணினென்னுடைய மனைமுன்வாயில்தனில் நன்மணல்மிகுதி
கொட்டியே
நாம்பரப்பியும் இருக்கிறேமுதனில் நாடிவந்ததின யெழுதுமின்
காணிலங்குடனே பருள்வமென்ன அவன்கட்டளைப்படியே
திட்டமாய்க்
கையிலெலுத உவகையோடுபொருன் கண்டளித்த பிரபு
யாரெனில்
பூனிலங்குநதி வரகுலத்தில்வந புண்ணியன்மதிகொள்
கண்ணியன்
புலவர்போற்றுமா கறலின்மேவுமெழில் புண்யகோடியெனும்
பூபனே. (படிக்காசுப் புலவர்)

இதனால் இவர் செல்வம் கனி மரம் போல் எல்லார்க்கும் நனிபயன் பட்டமை நன்கு தெளிவாம்.

நடுவுநிருள் வேதினை சுற்றுக்கோட்டு புக்க
படுபினையன்னர் பலர் நச்சு வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டின் எற்றைப் பினை.

நயனுடையான் செல்வம் எவர்க்கும் எளிதில் பயன்படும் என்பது இதனால் கூறப்பட்டது.

217. கற்றோர் புகழ்சிதக் காதிசெல்வத் தாற்பலோன்
குற்றமற்று வாழ்ந்தார் குமரோசா—மூற்றும்
மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.. (எ)

இ—ள்.

குமரேசா! சிதக்காதி பெற்ற செல்வத்தால் என் பலனும் குற்றமற்று வாழ்ந்தார் எனின், பெருந்தகையான் கண் செல்வம் பின், அது மருந்தாகித் தப்பாத மரத்தையொக்கும் என்க.

மருந்து—பிணி நீக்கும் பொருள். அமுதம் எனினுமாம்.

தப்பா மரம்—பயன் தருவதில் தவறுத மரம்.

மரத்து அற்று—மரத்தை ஒக்கும். மரம் என்னும் பெயர் ஈறு கெட்டு விகியீறாக நின்று அத்துச்சாரியை பெற்று மரத்து என நின்றது. ஆயின் மர— அத்து மரவத்து என்றன்மை நிற்றல் வேண்டும் எனின், நிலைமொழியீற்றில் நின்ற அகரவுயிர்முன் அத்துவரின் அதன் முதல் கெடும் என்க.

அத்தின் அகரம் அகர முனை இல்லை. (தொல்காப்பியம்)

பெருந்தகையான் கண் செல்வம் பொருந்துமாயின் அது, வேர் முதலிய எல்லாவுறுப்புக்களும் மருந்தாகித் தவறுது பயன் தரும் மரம்போலும் என்பதாம்.

நெல்லி முருங்கை வேம்பு சுரபுன்னை முதலியன பிணி நீக்கும் மருந்து மரங்கள் என்பர்.

இலை தளிர் மலர் காய் கனி கட்டை பட்டை வேர் முதலிய எல்லா வுறுப்புக்களும் மருந்தெனும் மாண்பாகித் திருந்தி நின்று உயிர்களுக்கு உறு நோய் நீக்கும் தருவே போலப் பெருந்தகையான் திருவும் எல்லார்க்கும் பெரும்பயனைத் தரும் என்பது கருத்து.

வெளி நின்று எல்லார்க்கும் எளிதில் பயன்படும் மருந்து மரம்போல் திருந்திய பயனைப் பெருந் தகையான் செல்வம் பொருந்தி நல்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிதக்காதி பால் தெளியப்படும்.

கதை.

சிதக்காதி என்பவர் நெல்லையின் எல்லையிலுள்ள காயற்பதியிலிருந்தவர். திருக்க மரபினர். சிறந்த கல்வியும் நிறைந்த

செல்வமும் பொருந்தி வாய்க்கவர். பெருங் கொடையாளி. பிறர்க்கு உதவுதலையே தனக்கு இன்பமாகக் கருதினவர். மழைவளங்குன்றியதால் உணவுப் பொருள்கள் இன்றி உயிர்கள் வருந்திய ஒரு காலத்தில் இவர் துணிந்து நின்று ஆதரித்தார். இவரது அரும் உபகார நலத்தைப் படிக்காதப் புலவர்,

ஓர்நட்டி லே பொன்னும் ஓர் நட்டிலே நெல்லும் ஓக்கவிற்கும்
கார்நட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரிடப்பேர்
ஓர்நட்டினுக் நட்டு வாராமலே யன்னதானத்துக்கு
மார்நட்டிய நுரை மால் சிதக் காதி வதோதபனே.

என்று பாடிப் புகழ்ந்தார். இவர்பால் பரிசில் பெற்று மகிழ்ந்து சென்ற புலவர் பலர். உயிர் நீங்கியபின் இவ்வள்ளலது மெல்லிய திருவுடம்பைச் சமாதிக்குழியில் வைத்து மூடிக்கொண்டிருக்கும் பொழுது இவரை நாடி வந்த புலவர் அங்கு நிகழ்ந்ததையறிந்து வாடி அவர்பால் ஓடிவந்தார். கண்ணீர் சொரிந்தார்.

தேட்டானன் காபற்றுணரசிதக் காதி சிறந்தவத்ர
காட்டான் புகழ்ந்கட்ப நாட்டினைவந்தான் தமிழ்நாவலரை
ஓட்டானண்டியாய்கி அவர்கடம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனுப்ப ஓனித்தான் சமாதிக் குழிபுருத்தி.

என்று மனமுருகிப் பாடினர். உடனே குழியினிருந்து கை ஒன்று நீண்டது. அதில் ஒரு விலையுயர்ந்த மோதிரம் இருந்தது. அனைவரும் வியந்தார். அதனையெடுத்துப் புலவருக்கே தந்தார். அதனால் "கொத்துங் கொடித்தான் சீதக்காதி" என்று உலகம் அவனைப் போற்றியது. தான் வருந்தினும் மருந்து மரம்போல் தப்பாமல் இன்று உதவிபுரிந்த இப்பெருந்தகையினது ஒப்புயர் வற்ற ஒப்புவவண்மையினை உயர்ந்தோர் புகழ்ந்து மகிழ்ந்தார்.

சபாது புல்லர் இருந்திகன்ன போயென்ன எட்டிமரம்
கபா நிருந்திகன்ன காய்த்தும் பலனென்ன மைவிரித்துப்
போயோகமென்ன அனைப்போர்த்துச் சிலம்பான் பிடிபிடியாய்
ஓப்பாடல் சடையன் வேளுசிதக் காதி றுரையனுமே.

வருந்தியும் பெருந்தகையான் பிறர்க்கு உதவிசெய்வான் என் பது இதனால் கூறப்பட்டது.

218. பண்டுசெல்வந் தேய்ந்துப் பரிந்தளிப்பேன் என்றுரகு
கொண்டெழுந்தார் என்னே குமரேசா—கொண்டீ
டினில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சியவர். (அ)

இ—ள்

குமரேசா! இரகுமன்னன் பஞ்சமுற்ற காலத்தும் தன் பால் வந்து இரந்தவனுக்குப் பரிந்து கொடுப்பேன் என்று ஏன் துணிந்து எழுந்தான் எனின், கடன் அறி காட்சியவர் இடனில் பருவத்திலும் ஒப்புரவு செய்தற்கு ஒல்கார் என்க.

இடன்—வினவு. அஃது இங்கே செல்வப் பெருக்கத்தைக் குறித்து நின்றது.

இடன் இல் பருவத்தும்—செல்வம் இல்லாத காலத்தும்.

அறிவுடையார் செல்வந் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்கு உளந்தளரார் என்பதாம்.

எது ஒழிந்தாலும் அறிவோர் ஒப்புரவு செய்தலை ஒழியார் என்பது கருத்து.

அறிவுடையான் திரு எய்தினால் அஃது ஊருணி நீர்போல வும் ஊர்மருவே நிற்கும் கனிமரம்போலவும், எல்லா உறுப்புக்களும் பயன்படுகின்ற மருந்துமரம்போலவும் எல்லார்க்கும் எளிதில் பயன் படுமென்று மேல் மூன்றினும் மூறையே கூறினர். இதில் அத் திருச்சுருங்கினும் அவர் ஒப்புரவு செய்வதில் சுருங்கார் என்றார்.

பிறர்க்கு உதவுதலையே தமக்குக் கடமையாகக் கருதிப் பே றும் பேரறிவுடையார் வறுமையுற்ற காலத்தும் தாம் செய்யத் தக்க உதவியைச் செய்தே விடுவர் என்பது கருத்து. இஃது இரகு டன் வந்தால் உணரப்படும்.

கதை.

இரகு என்பவன் சூரியகுலத்தில் தோன்றி விளங்கியவீரிய மேவந்தன். சீரிய குணங்களெல்லாம் சேரப்பெற்றவன். திர்க்க பாகு என்னும் அரசர்பெருமானது அருமைத்திருமகன். அறிவு, அருள் ஆண்மை அழகு அமைதி வீரம் செம்மை சீலம் முதலிய எல்லா நலங்களும் இயல்பாகவே இவன்பால் எய்தியிருந்தன. குல திலகனைப் விளங்கியிருந்தமையால் இவன் வழித்தோன்றலாகிய இராமமூர்த்தியும் இராகவன் எனப் பெற்றார். இராகவன்—இரகுமரபில் உதித்தவன். இவனதுகீர்த்தி புத்தேளுலகத்தும் புகுந்துலவியது. மகாகவியாகிய காளிதாசர் இவனதுகீர்த்தியையும், மரபையும் வடமொழியில் இனிமையாக விளக்கியுள்ளார். அந்நூல் இரகுவம்சம் என்னும் பெயரான் வழங்கிவருகின்றது. இப்போரறிவான் தான்பெற்ற செல்வமெல்லாம் பிறர்க்கே உதவி இறுதியில் வறுமையையெய்தினன். பொற்கலத்தில் பாலடிசில் உண்ட இப்புண்ணிய வேந்தன் மட்கலங்களேயே மனையில்வைத்து வழங்கிவாழ்ந்தான். அவ்வளவு வறியகாலத்தில் கவுசர் என்னும் வேதியன் ஒருவன் இவனை நாடிவந்தான். வந்தவனை உபசரித்துக் கால்கழுவும்படி மட்கலத்தில் நீரைமொண்டு கொடுத்தான். அரசன் வறிய நிலையை அந்தணன் உணர்ந்தான். கவன்றான். யாதுங்கூறுடல் அகன்றான். இவன் அடுத்து வினவினன். என் குருவுக்குக் காணிக்கை தரும்பொருட்டு நின்பால் பதினாலுகோடி பொன்பெற வந்தேன் நின் நிலைமையைத் தெளிந்து பேசாது நீங்குகின்றேன் என்றான். அவனைத்தடுத்து நிறுத்திக் குபேரனையே அமர்புரிந்தேனும் அவன் விரும்பிய பொன்னைக் கொண்டுவந்து கொடுப்பேன் என்று வில்லுடன் விண்ணேறிச் எழுந்தான். இவ்வதிசயத்தினைவை அந்திபதி யுணர்ந்தான். நெஞ்சருகினன். மணியும் பொன்னும் இவன் அரண்மனையில் அனி அனியாகக் குவியும்படி செய்தான் அதன்பின் ஈந்து மகிழ்ந்து இன்புற வாழ்ந்தான். இடன்இல் பருவத்தும் அறிவோர் ஒப்புரவிற்கு ஒல்கார் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விளைவு இரகுவமிசத்தில் காண்க.)

வறுமையுறினும் அறிவோர் உபகரிப்பர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

219. குன்ற இளையான் குடிமாறர் செய்கீர்மை
குன்ற நொந்தார் எனினே குமரேசா—என்றும்
நயனுடையான் நல்கூர்ந்தா னுதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு (கஉ)

இ—ள்.

குமரேசா! குன்றுத இளையாண்குடி மாறர் என் செய்கீர்மை குன்றியதால் நொந்தார் எனின், நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர்மை செய்யாது அமைகலா வாறு என்க.

நயனுடையான் என்றது உபகாரியை.

நல்கூர்ந்தான் ஆதல்—வறியவனுதல்.

செயும் நீர—செய்யத்தக்க கடமைகள்.

அமைகலா ஆறு—அமைதியுறுத்தன்மை; அஃதாவது மனக் கவலை.

ஒப்புரவு செய்தொழுகும் அறிவுடையானுக்கு வறுமையா வது யாதெனின் தான்செய்யவேண்டுவன செய்யமுடியாதபடி தன்புறவுதே என்பதாம்.

தான் துய்க்கப் பெறுமைக்காக உபகாரி வருந்தான். பிறர்க்கு உதவிசெய்ய இயலாமைக்கே வருந்துவன் என்பது கருத்து.

தனக்கு நுகர்தற்கு உரியன இல்லையே யென்று சிறியோர் கவல்வர், பெரியோர் பிறர்க்கு உதவ இல்லையே யென்று வருந்துவர் என்பதாம்.

வறுமையால் தாம் வருந்துவதினும் பிறர்க்கு உதவப் பெறாமைபற்றி அறிவோர் பெரிதும் வருந்துவர் என்பது இதில் உணர்த்

தப்பட்டது. இவ்வண்மை இசையான்குடி மாறநாயனார் வரலாற்றால் உணரப்படும்.

கதை.

இசையான்குடி மாறநாயனார் உள்ளன வெல்லாவற்றையும் பிறர்க்கே உதவி வறுமையிற்று உணவின்றியிருந்த ஒருநாள் தம் பால் வந்த பெரியவர்க்கு உதவுதற்கு ஒன்றுமில்லையே யென்று உளமிக நொந்தார். தாலுந்தன் மனைவியும் உணவினறி யிருப்பதற்காக வருந்தவில்லை. வந்தவரது பசியை நீக்கமுடியாமையை நினைந்தே பெரிதும் வருந்தினர். பசி நோயால் கஷ்டத்துப் பதித்திருந்த இவர் அப்பெரியவருக்கு உதவிசெய்யக் கருதினர். இருளில் எழுந்து வெளியே சென்றார். இரை முளைகளை வாரிக்கொண்டார். பக்குவஞ்செய்து பரிடன் கல்கினர்.

நமக்கு முண்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு காமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. (1)

உள்ளம் அன்புகொண் டேக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளுறங்கும் வயல்புகப் போயினர்
வள்ள லாரினை யான்குடி மாறனார். (பெரிய புராணம்) (2)

செய்யவேண்டிய ஒப்புரவைச் செய்யமுடியாமைக்கே நாயனார் வருந்தினர் என்பது இவற்றால் நன்கு தெளிவாம்.

பிறர்க்குதவி செய்ய முடியாதபடி யெய்துகின்ற இயல்பையே அறிவோர் வறுமையாகக் கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

220. வெள்ளி கெடுவா யெனவுரைத்தும் மாவலியேன்
கொள்ளென்று தந்தான் குமரேசா—தள்ளாத
ஒப்புரவி னல்வருங் கேடெனினு மஃதிதாருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. (D)

இ—ள்

குமரேசர! வெள்ளி கெடுவாய் எனச் சொலலித் தடுத்தும் மாவலியேன் கொள் என்று கொடுத்தான் எனின், ஒப்புரவு செய்தலினல் கேடு வருமெனினும், அஃது ஒருவன் விற்றுக் கொள்ளுந் தகுதியை உடையதென்க.

விற்றுக் கோள் தக்கது உடைத்து—விலைகொடுத்து வாங்கிக் கொள்ளுந் தகுதியையுடையது.

ஒப்புரவு செய்தலினல் கேடுவருமென்று பிறர் சொல்லினும் அக்கேட்டைத்தன்னின விற்றாயினும் ஒருவன் கொள்ளவேண்டும் எனபதாம்.

தன்னை ஒப்புக்கொடுத்தேனும் அறிவோர் ஒப்புரவைச் செய்தற்கு ஒப்புக்கொள்வர் என்பது குறிப்பு.

பொருட்கேடு வருமென்று பிறர்கடுத்துத் தடுப்பினும் அறிவோர் தம்மைமக் கொடுத்தேனும் ஒப்புரவென்னும் உயர் நலத்தைத் கொள்ள வேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மாவலிபால் உணரப்படும்.

கதை.

மாவலி என்பவன் பிரகலாதன் புதல்வனன விரோசனன் என்னும் அசுரவேந்தன் திருமகன். தாய் பெயர் சயதேவி. கொடையும் வீரமும் அடையப் பெற்றவன். மீதலம் பூதலம் பாதலம் என்னும் மூவகை உலகங்களுக்குந் தலைமை யெய்தி இவன் அரசு புரிந்தான். விந்தியாவலி என்னும் தனது அருமை மனைவியோடு கூடி வாழ்ந்து நூறு புதல்வர்களைப் பெற்று எவ்வுலகத்தாரும் போற்றத்தக்க பெரும் புகழ் பெற்றான். இவனது அரசாட்சி

யையும் பிறமாட்சியையும் கண்டு இந்திரன் பொறாமைகொண்டான். இவனைப் பொருதுவெல்ல முடியாதென்று தெளிந்து திருமாலிடஞ் சென்று ஒரு சூழ்ச்சியைச் செய்து இவன் பொருள் முழுதுங் கவருமாறு வேண்டினன். மாலுங் குறளாய் இவன்பால் வந்தார். மூன்று அடி மண் தா என்றார். மாற்று தொடுத்த மாவலி துணிந்தான். தனக்குக் குருவும் மந்திரியுமாகிய சுக்கிரன் தடுத்தான். "உன்னைக் கெடுக்கக் கருதி இவர் வந்துள்ளார் கொடுக்காதே" என்று கடுத்து அவ்வாஞ்சத்தை நெஞ்சறியத் தேற்றினன். என் கொடையால் எனக்குந் தேடு வரிதும் அதனை நன்றென்று கொள்வேன் என்று அரசன் துணிந்து கொடுத்தான். மாலும் தமது மலரடிபால் உலக முழுவதையும் கொண்டு இவனையும் ஆட்கொண்டார். தன்னைத் கொடுத்தும் ஒப்புரவு செய்த இப் பெருந் தகையின் வள்ளற் குணத்தை உலகம் புகழ்ந்தது. தடுத்துரைத்த வெள்ளியை நோக்கி மாவலி கடிந்துரைத்தவை இனி தனடியில் வருகின்றன.

எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னின
தடுப்பது நினக்கிதழ தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றுப் (1)

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயிரோனும்
கொள்ளுந்தல் தீது கொடுப்பது நன்றுல். (2)

(இராமாயணம்)

ஒப்புரவு செய்வதில் மாவலி கொண்டிருந்த திட்பம் இவற்றுன் இனிது தெளிவாம். தன்னை விற்றுவது ஒப்புரவு செய்யவேண்டுமென்பது இதனுல் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பெருந்தகையாளர் மேகம்போல் ஈகமாறு கருதாமல் ஒப்புரவு செய்வர். அவர் முயன்றிட்டிய பொருள் மெல்லாம் தக்கார்க்கே

உதவுவர். ஒப்புரவுபோல் சிறந்தது யாண்டுமில்லை. உலக நன்மை யெய்றிந்து உதவி செய்யாதவன் பிணத்தோடொப்பன். உபகாரி செல்வம் ஊருணி நீர்போல் எல்லார்க்கும் எளிதில் பயன்படும். அரிந்து ஊர் நடுவே நிற்கும் கனிமரம் போல்வதாம். அது மருந்து மரம்போல் நின்று எல்லாருடைய வறுமை நோயையும் நீக்கும். வறுமைக்காலத்தும் அறிவோர் பிறர்க்கு உதவி செய்வார். பிறர்க்கு உபகரிக்கப் பெறுமையே அறிவோர்க்கு வறுமையாம். தம்மை விற்றுயினும் அறிவோர் ஒப்புரவைச் செய்வர்.

உழவு ஒப்புரவறிதல் முற்றிற்று.

உதவி அதிகாரம் ஈகை.

ஈதல் என்பது இல்லையென்று இரந்தார் எவர்க்கும் இல்லை என்னாது கொடுத்தல். பிறர்க்கு உபகரித்தலையே தமக்குக் கடமையாகக் கருதி ஒப்புரவு செய்தலாழுகும் ஒட்பமுடையார் கண்ணே இஃது ஒப்ப நிகழுமாகலின் அதன் பின் வைக்கப்பட்டது. அது புகழையும் இஃது அதனிடை புண்ணியத்தையும் பயக்குமென்க.

---

221. வள்ளலுயர் பேகன் வறியார்க்கே யிந்துமயில்
கொள்ளவுமேன் றான் குமரேசா — கள்ளும்
வறியார்க்கொன் றீவதே யின்சொ லற்றெல்லாங்
குறியதிர்ப்பை நீர துடைத்து. (க)

இ—ள்.

குமரேசா! பேகன் என்பவன் வறியவர்க்கே கொடுத்து என் ஒருபயிலுஞ்சும் போர்வையைக் கொடுத்தான் எனின், வறியவர்க்கு ஒன்றை ஈவதே ஈகை, மற்று எல்லாம் குறியதிர்ப்பை நீர துடைத்து என்க.

குறியெதிர்ப்பை—கைம்மாற்று: அஃதாவது அளவுகுறித்து நிகழ்வில் கொடுத்து அவ்வாறே எதிர்வில் கொள்வது என்க.

எதிர்ப்பை—எதிர்பெறும்படி இடுவது என்னும் ஏதுவான் வந்தது. பொருளுடையார் பதிலுதவி செய்யும் இயல்புடையார் முதலாயினோர்க்குக் கொடுப்பன எல்லாம் ஒருவகைக் கடன்கொடுத்ததாகக் கருதப்படும் என்பார் மற்று எல்லாம் குறிஎதிர்ப்பை நீது உடைத்து என்றார்.

எதிர் உதவி செய்யமுடியாத வறியவர்க்குக் கொடுப்பதே கொடை. பிற எல்லாம் கைமாற்றாகக் கொடுக்கும் இயல்பினை யுடையது என்பதாம்.

இல்லார்க்கு ஈவதே ஈகை என்பது கருத்து.

ஒரு பொருளும் இல்லாதவர்க்குத் தமது உறுபொருளை உதவுவோரே உயர்ந்த கொடையாளர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை பேகன்பால் உணரப்படும்.

கதை.

பேகன் என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். மலை நாட்டுக்குத் தலைவன். கண்ணகியென்னும் பெயரினையுடைய ஒரு பெண்மணியை மணந்து களிப்புடன் வாழ்ந்தவன். தாழ்ந்தாரை யுயர்த்தும் தண்ணளியுடையவன். தனது அரிய பொருளெல்லாம் வறியவர்க்கே கொடுத்தவன். புறத்தே தகுந்த பொருளும் அகத்தே மிகுந்த அருளும் அமையப்பெற்றவன். வறுமைநோய் நீக்கும் அருமருந்தினை இவனைப் புலவர் பலரும் போற்றி மகிழ்ந்தார். ஒருநாள் இவனது நகரையடுத்திருந்த குளிர்மலைச்சாலையிற் சென்று மாலையில் உலாவினான். அங்கே மயில்ஒன்று தனது அழகிய கலாபத்தை விரித்து விழைவுடன் ஆடியது. உடல் பனித்து மயிர்சிலிர்த்து ஆடியபின் கூவி நின்றது. அதனைக் கேட்டு உடனே இவன் அருள்மீக்கொண்டான். குளிரால்நடுங்கி அது வருந்திக் கூவியதாகக் கருதினான். பொற்சரிகையிட்ட

தனது விலையுயர்ந்த போர்வையை அதன் மேல் போர்த்தான். நகரை நோக்கி மீண்டான். வறியார்க்கே கொடுத்து அரிய புகழைத்தொண்ட இவனது சகாயின் இப்பையும் ஒரு பறவை மாட்டும் அருள் சுரந்து செய்த பெருந்தகைமையையும் உலகம் வியந்து புகழ்ந்தது. (இதன் விரிவைப் புறநானூற்றில் காண்க.)

வானம் வாய்த்த வளமலைக் கவான்
தான மந்தரத்துக் கவிங்கம் நல்கிய
அருந்திறல் அண்ணற் கினியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும். (சிறுபாணாற்றுப்படை)

ஆற்றவர்க்கு அளிப்போர் அறனில பகர்வோர்
ஆற்றுமாக்கள் அருட்படி சுவைப்போர்
மேற்றிறு யுலகின மெய்திறி வாழ்க்கை (மணிமேகலை)

எற்றுணை மாற்றுளம் மென்னுணர்ச் சாய்வையா
ராற்றுதர்ச் கிவதாம் ஆய்கடன்—ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறிவர்ச் கித்தல்
பொலிகடன் என்னும் பெயர்த்து. (நாலடியார்)

இதனால் கொடையின் இயல்பு கூறப்பட்டது.

---

222. வெள்ளிடங் கண்ணனென் றுவந்தகண்ணன் பாலினான் றுங்
கொள்ளாதென் சுற்றான் குமரேசா—உள்ளபடி.
நல்லா றெனினுங் கொளற்றீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று. (2)

இ—ள்.

குமரேசா! கண்ணன், தன்பால் வந்த கண்ணன் பால் தான் ஒன்றுங்கொள்ளாது என் சுற்றான் எனின், நல்ல ஆறு எனினும் கொளல் தீது மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று என்க. மேல் உலகம்—புத்தியுலகம்.

கொல்லல்—வேற்றல். கல் ஆறு எனினும்—கல்லை நெறி என்று சொல்லினும். உண்மை அங்ஙனஞ் சொல்வார் இன்மையைச் சுட்டி நின்றது.

எற்றிலே மேலுலகிற்கு நல்ல நெறி என்று கூறினும் அது தீது, ஈந்தார்க்கு மேலுலகம் இல்லை என்று சொல்லினும் அதில் நன்று என்பதாம்,

கொள்வோர் தன்பலத்தைத் தொடர்வர். கோர் இன்ப வுலகத்தை யெய்துவர் என்பது உண்மை. இதனை மாற்றிக்கூறி யாதினும் மயக்கினும் பயன்களாகாது என்பார் "கொளல் தீது ஈதல் நன்று என்றார்.

தீயனவை யெவற்றினும் எற்றிலே தியது. கள்ளை எல்லாவற் றினும் ஈதலேயிக்கவும் நல்லது என்பது கருத்து.

பிறர் பொருளைத் திருடும் கொள்ளாமல் தன் பொருளைக் கொடுத்தலே ஒருவனுக்கு நன்மை என்பது நினைவு சுருக்கப் பட்டது. இவ்வென்னை கள்ளாமல் உணர்க.

கதை.

சுமையாளும் வானையாளும் எவருடனும் தனக்கு விரோதம் கொண்ட வீரனாகிய கன்னன் பாரதப் போரில் துரியோதனனுக்குத் துணை நின்று பதினைந்து நாள்வரையும் பொருதான். பதினேழாம் நாளில் கடும் போர் புரிந்து முடிவில் விசயனுடைய வெல்லி யக் கணைகளால் உடல் முழுதும் துளை பட்டுத் தளர்வுடன் விழுந்தான். உதிரம் பெருகியது. அவன் தரித்திருந்த மாலையும் முடியும் கவசமும் குண்டலங்களும் நிறம் குலைந்தன. ஆவி அகத்தை புறத்தை என்னுமிடியாயது. அவ்வளவையும் திருமால் ஒரு முனிவர் வடிவங்கொண்டு அவன் பால் சென்று வரமடையுங் குடையேன் ஏதனுந் தருக என்று இரந்தார். அந்நிலைமையி லிருப்பினும் கன்னன் மகிழ்ந்து என்னவேண்டுமென்றான். கண் ணன் அவன் செய்த புண்ணியத்தையே உதவுமபடி வேண்டினார். கன்னன் மகிழ்ந்து கண மார்பில் பாய்ந்துள்ள அம்பை பிரித்து அ

திலிருந்து பெருகிய குருதி நீரால் உறுதி கூறித் தந்தான். மாய முனிவர் கொண்டார். உனக்கு யாது வேண்டும் என்றார். கண்ணன் என்று தெளிந்தும் அவ்வள்ளல் ஒன்றும் கொள்ளவில்லை. அவர் மீண்டும் வேண்டினர். யான் இன்னும் பிறந்தால் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்னுத இதயத்தோடு பிறப்பியென்றன். திருமால் மகிழ்ந்து தன்னுருவங் காட்டி இன்னருள் செய்தார். ஒன்றுங் கொள்ளாமல் இன்னுயிர்த் துணையாய் நின்ற தன் புண்ணியத்தையுங் கொடுத்த அப்புண்ணியன் வண்மையை அனைவரும் எண்ணியெண்ணி வியந்தார். (இதன் விரிவைப் பாரதத்தில் காண்க).

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவர் என்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈந்தவர் அல்ல திரந்தவர் யாரே. (கம்பர்)

ஈதல் ஒன்றே என்றும் நன்றும் என்பது இதனுல் கூறப்பட்டது.

223. தெள்ளு குமணனென்றுஞ் செப்பாம லென்தலையைக்
கொள்ளெனமுன் தந்தான் குமரேசா—எள்ளும்
இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. (க)

-ள.

குமரேசா! குமணன் இல்லையென்று சொல்லாமல் தன் தலையையும் என் கொடுத்தான் எனின், இலன் என்னும் எவ்வம் உரையாமையும் ஈதலும் குலனுடையான் கண்ணே உள என்க.

இலன் என்னும் எவ்வம்—வறியன் என்னும் இளிவு.
குலனுடையான்—மேன்மகன்.

இலன் என்னும் இளிமொழியைச் சொல்லாமையும் தன்பால் என்னைத் பிறர்க்கு உவந்து ஈதலும் ஆகிய இவ்விரண்டு நலங்க

ளும் குலமகனிடமேதான் இயல்பாக அமைந்துள்ளன என்பதாம்.

ஏற்றல் தீது ஈதலே நன்று என்று மேற்குறித்த மெய்மை யைக் குலமகன் ஒருவனே குறிக்கொண்டொழுகுவான் என்பார், "குலமகன் கண்ணே உள" என்றார்.

உள என்பது அஃறிணைப் பன்மைக் குறிப்பு முற்று அஃ தது உரையாமையும் ஈதலும் என்னும் இரண்டு எழுவாயும் கொள் ள

உள என்னும் பயனிலைக்குப் பன்மை குறித்து ஈதல் ஒன் றையே எழுவாயாகக்கொண்டால் இதில் பல பொருள்கள் கொள் ளப்படும்.

இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்—மறியன் என் னும் தூய் மொழியைத் தன்முன் ஒருவன் கூறுதபடி கொடுத் தல் எனவும்,

தன்பால் வந்தவன் இலன் என்னும் எவ்வத்தைப் பின்னும் போய்ப் பிறரிடந் சொல்லாமல் கொடுத்தல் எனவும்,

இலன் என்னும் எவ்வத்தை வந்தவன்பால் தான் சொல்லா மல் கொடுத்தல் எனவும்,

தன்னிடம் வந்துபோனவன் பின்பு அவனிடம் வருபவர்க்கு இலன் என்று உரையாடல் அவன் கொடுக்கும்படி கொடுத்தல் எனவும்,

தன்பால் வந்தவனைக் குறித்து இவன் இல்லாதவன் என்று இகழாமல் கொடுத்தல் எனவும்,

பொருளிருந்தும் ஈயாதவனுதலால் இவன் இல்லாதவனே என்று தன்னைக் குறித்துப் பிறர் பழியாதபடி கொடுத்தல் எனவும்,

இலன் என்று சொல்லி இன்னன் வந்து என்பால் இரந்து

ன் என்று பிறரிடம் அதனை உரையாமல் கொடுத்தல் எனவும்,

தன்பால் வந்தவனை இல்லாதவன் என்று பின்பு பிறர் கொல்லுதபடி கொடுத்தல் எனவும் வருவனவாம்.

இவை முறையே குறிப்பறிந்து கொடுத்தல், வறுமை நீங்கக் கொடுத்தல், காலாறு கொடுத்தல், நிரம்பக் கொடுத்தல், பழியாமல் கொடுத்தல், பயிக்கஞ்சிக் கொடுத்தல், கூழுறு கொடுத்தல், பெருகக் கொடுத்தல் எனக் கருதப்படும்.

பொருள் முதலியன யாவும் இலனுப்தான் எவ்வித நிலையி னை யெய்தியிருப்பினும் தன்பால் வந்து வேண்டினவருக்கு யான் இது பொழுது ஒன்றும் இல்லாதவன் என்று சொல்ல இசையா மையும் தலையினையேனும் மனமுவந்து கொடுத்தற்கு இசைதலும் குலமகளிருவகுப்பே கூடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குமணன்பால் உரைப்படும்.

கதை.

குமணன் என்பவன் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங் களுக்கு முன்னர் கொங்கு நாட்டிலே ஆம்பிராவதி என்னும் நதிக் குத் தென்பால் அமைந்திருந்த குமணபுரி யென்னும் நகரினிருந் து அரசபுரிந்த ஒரு குறுநில மன்னன். பேரறிவாளன் அரு ளால் பொறையால் ஆற்றலால் பெரியவன். எற்றைக மாற்றுடல் எதையும் கொடுப்பவன். நிறையும் நீதியும் இறை வழுவாதவன்.

எந்தவே னோயும் வெந்தவர் தபாறிற் றின்னல்
தந்தபோர் தன மைமந்தென யாயினுற் றக்க
பந்த மாதிய விதிப்படி தண்டனை பணிக்குஞ்
சிந்தை யாதிபன் நிக்கையின் நீங்கிய செம்மல். (1)

மருவி னோக்கினர் வதனமாம் பங்கய மலர்க்கும்
பரவி யேபுவி தடுக்குறும் பாவமாம் பனிக்கும்
சரள மாகிய கவிவலோர் கலியிருள் தனக்கும்
இரவி யாமென விளங்கிய வளங்கொளும் ஏத்தல். (2)

இவ்வண்ண மலங்கமனல்லாடம் ஒருங்கே யெப்திபிருந்த இப்பெருந் தனைக்குத் தப்பி யொருவன் இருந்தான். அவன் பெயர் அமனன். பொருளையெல்லாம் பிறர்க்கே கொடுத்து அண்ணன் கெடுத்தென்றான் எனறு அமைசன் சினந்தான் பின்பு அமர் செயவந்தான். இவ்வயவன் நிலைமையையறிந்து அவனுக்கு மனம்பால் கொடுத்துவிட்டுக் குமணன் கனித்து ஓர் வனத்தில் புருந்து தங்கியிருந்தான். அமைசன் அரசுரிமையை அடைந்து மகிழ்ந்தான். அவ்வளவில் அமையாமல் குமணனைக் கொல்லவுங் கருதினான். அவன் தலைபினைக் கொணர்வோருக்குப் பெருநிதி தருவதாகப் பறை யறைவித்தான். அவ்வள்ளலைக் கொல்லத் துணிவார் யாரும் இல்லை. இந்நிலையிலிருப்ப பெருந் தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஒருவர் குமணனை நாடி வந்தார். நகரில் இல்லையென்று தெரிந்தார். இருந்த இடத்தில் சென்று கண்டார்.

ஆடினி படர்ந்த கோடையம் அதிப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழப்ப
இல்லி தூர்ந்த பொல்லா வெறுதனம்
சுனைதொறுந் சுணைதொறும் பாய்கா ணுமல்
குழனி தாய்முகம் நோக்க
பினைவி யென்முகம் நோக்க யாழும்
நின்முகம் நோக்கி வந்தனன் குமண.

என்று தமது வறிய நிலைமையைத் தெரியப் பாடினார். குமணன் கேட்டான். புலவர் நிலைமையைத் தெளிந்தான். அவரது இன்னமையை நீக்கத் தன்பால் ஒன்றும் இல்லையே என்று எண்ணியேங்கினான். தம்பி கூறியுள்ளதை நினைந்தான். உடனே தெளிந்து மகிழ்ந்தான். புலவீர்! என் தலையைக் கொண்டுபோய் என் தம்பி கைம்மாறுதந்தால் அவன் உமக்குப் பெருநிதி தருவான். தடையொன்றுமின்றி இதனைக் கொய்து கொண்டுசெல்லும் என்று சொல்லிப் புலவர் கையில் வாளைக்கொடுத்துத் தன் தலையை நீட்டினான். புலவர் பதைத்துப் பரிந்தார். உண்மையுணர்ந்தார். அதன்பின் தமது மதிநலத்தால் இருவரையும் இணைத்துக் குமண

னை யாசனைக்கின்ர். இலன் என்னும் எவ்வம் உரையாமல் தன் தலையை ஈந்த இப்பெருந்தகையை உலகம் தலைவள்ளல் என்று புகழ்ந்து போற்றியது. (இதன் விரிவைக் குமணன் கதையில் காண்க.)

அந்த நாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
இந்த நாள் வந்து நீ நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்தன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைமோய் கவ்வே.

இது புலவரை நோக்கிக் குமணன் கூறியது.

இலன் என்னுமல் ஈபவனே குலமகன் என்பது இதனைக் கூறப்பட்டது.

---

224. ஏனை நளன்துன்பம் எய்திஞன் வானவர்தங்
கோனிரந்த போது குமரேசா—தானுக
இன்ன திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணுமள வு. (ச)

இ—ள்.

குமரேசா! இந்திரன் வந்து தன்பால் இரந்தபோது நளன் என் துன்பமுற்ருன் எனின், இரந்தவரது இன்முகங் காணுமளவும் இரக்கப்படுதலும் இன்னது என்க.

இன்னது—இனிது அல்லாதது. துன்பம் என்றபடி.

இரத்தல்—பிறரிடஞ்சென்று ஈ என்று கேட்டல்.

இரக்கப்படுதல்—இரப்பவர்க்கு ஈயும்படி இருத்தல்.

இரத்தலில் தான் துன்பம் உண்டு ஈதலிலும் அஃதுண்டென்றது அதனைச் செய்வாரது தகுதி கருதி என்க.

இரந்தவரது இனிய முகத்தைக் காணும் அளவும் இரக்கப்படுவோருக்கும் துன்பமாம் என்பதாம்.

தன்பால்வந்து இரந்தவன் தான் கொடுத்ததைப் பெற்று அதனால் அவன் முகமலர்ந்து நிற்பதைக்காணும் வரையும் வள்ளல்கள் உள்ளம் மகிழ்வுறுது என்பது கருத்து.

இரப்போர் முகமலர ஈவோர் அகமலரும் என்க. இரந்தவன் விரும்பியது எதுவோ அதைக்கொடுத்து அவனை அனுப்புபவரையும் இலன் என்னுமடல் ஈயும் குலமகளுக்கு இன்மை நீங்கா தென்பது. இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நளன்பால் உணரப்படும்.

கதை.

நளன் தமயந்தியை மணஞ்செய்யும் பொருட்டு அவள்தங்கி யிருக்குந் திருநகரையடைந்தான். அரசர் பலரும் அவ்வாறே அங்குவந்து சென்றிருந்தார் வானவருமே வந்தார். வருணனோடு வானவர் தலைவனும் வந்தான். வந்த இந்திரன் நளனது பேரழ கைநோக்கி மயங்கி மகிழ்ந்தான். அவனையன்றித் தமயந்தி தன் னை விரும்பாளென்று தெளிந்தான். அவனையே தூதனுப்பி அவன் வாயிலாக அவளைப் பெற்றிடவேண்டுமென்று இந்திரன் நளன் பால் தந்திரமாக வந்தான். நளன் பணிந்து உபசரித்தான். இந் திரன் ஒன்று வேண்டி உன்பால் வந்தேனென்றான். நளன் அதனைக் கேட்டான். அவன் கேட்டனைத்தும் குறிப்பறிந்து கொடுக் கவிரும்பினான். ஆனால் விருப்பம் இன்னதென்று தெரிந்திலன். அதனால் பெருந்துயர் அடைந்தான். இரந்தவர் இன்முகம் கா ணும் அளவும் இரக்கப்பந்தலும் இன்னது என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (இதன் விரிவை நளன் தூதில் காண்க.

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழுங்க லாதலின்
பெறற்கரும் ஆசியும் பெட்பி னீருவன்
திறப்பட இவருளந் தெரிந்த தில்லையால். (நைடதம்.)

இரந்தவரது முகமலர்ச்சியைக் காணும் வரையும் ஈவோர்க் கும் துன்பமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

225. அம்பரீ டன்வலிமைக் காற்றுமல் கோபமுனி
கும்பிட்டேன் வீழ்ந்தார் குமரேசா—அம்புவியில்
ஆற்றுவார் ஆற்றல் பகியாற்றல் அப்பகையை
மாற்றுவார் ஆற்றலிற் பின். (இ)

இ—ள்.

குமரேசா! அம்பரீடன் வலிமைக்கு ஆற்றுமல் என் கோபமுனி கும்பிட்டு வீழ்ந்தார் எனின், ஆற்றுவார் ஆற்றல் பகை யை ஆற்றல் அதுவும் அப்பகையை மாற்றுவாரது ஆற்றலிற் பின் னும் என்க.

கோபமுனி—துருவாசர். ஆற்றுவார்—தவஞ் செய்வார்.

ஆற்றுவார் ஆற்றல் பகை ஆற்றல்—தவஞ்செய்வார்க்கு வலி மையாவது தம் பகையைப் பொறுத்தலேயாம்.

தம் பகையைப் பொறுத்தலே தவஞ்செய்வார்க்கு வலிமை; அதுவும், பிறர் பகையை நீக்கும் சமையாளரது வலிமைக்குப் பின் னேயாம் என்பதாம்.

உறுபகையை அடக்கி அருந்தவஞ்செய்யும் தவத்தினரைவிட பிறர் பகையை நீக்கிப் பேருதவி செய்யும் சமையாளர் பெரியவர் என்பது கருத்து.

தானஞ்செய்வோன் தவஞ்செய்பவனினும் வலியன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அம்பரீடன் கன்னனும் துருவாசரிடமும் உணரப்படும்.

கதை.

அம்பரீடன் என்பவன் சூரிய குலத்து வேந்தன். திரு மாலை நினைந்து நெடுநாள் தவம்புரிந்து சிறந்த வர பலங்களைப் பெற்றவன். சமுதரியன் நடம் ஓராழியை மனைந்து சிறந்து வாழ்ந் தான். இந்திரனுடன் ஒர் ஆசனத்திருந்தவன். சிறந்த வீரன். அருச்சுனனுடன் தனித்தும் பொருதவன். இவனது அமர் வெறி

னை கோக்கி அமாரும் போற்றினர். பெருங்கொண்டையானி. வறியவரினவரும் இவனை உயிரெனக் கருதினர். தான் உள்ளு கின்றதுபோலவே எத்திறத்தவர்க்கும் இனிய உணவையிட்டுமகிழ்வான். எகாதசித்தோறும் விரதம் இருந்து அதன் முடிவில் அறுபது கோதானஞ் செய்து துவாதசியன்று அருந்தவர் பலருடனே இருந்து உணவு அருந்துவான். ஒரு முறை துருவாசர் வந்தார். இவன் வருக எனறுபசரித்துப் பாரணை செய்ய விரும்பினன். அவர் காளிந்தி நதியில் நீராடி வருவதாகச் சென்றார். அவர் வரவை இவன் எதிர்பார்த்திருந்தான். உணவு அருந்துதற்கு உரியகாலத்தில் அவர் வரவில்லை. விரதநியமம் தப்பிவிடுமேயென்று சிறிது நீர் பருகினன். முனிவர் வந்தார். உண்மை தெரிந்தார். வருமுன் எச்சில் செய்தாய் என்று சினந்து தமது தவவலியால் ஒரு பூதத்தை யேவினர். அது வெருண்டு வந்தது. அரசன் செய்தவந்த தானமகிமையால் தன்னையில் ஓர் ஆழி வந்தது. அதனால் அதனைக் கொன்றான். அச்சக்கரம் முனிவனையும் கொல்லத் துணிந்தது. அவர் அஞ்சி ஓடினர். அதுவும் பின் தொடர்ந்து விரைந்தது. முனிவர் ஓடிக் கலோத்தர மாவிடம் சென்றார். அவர் உன்னை ஒருசிக்க எம்மால் முடியாது. அம்ப ரீடனிடமே சென்று அடைக்கலம் புகுக. இலதேல் அழிவாய் என்றார். முனிவர் மீண்டார். அரசனையடைந்து விழுங்கி அடைக் கலம் புகுந்தார். அதன்பின் ஆழி அகன்றது. அரசனுக்கு கையால் எப்திபுள்ள புண்ணிய வலியை முனிவர் எண்ணி வியந் தார். பசியை ஆற்றித் தவப்புனிவாரினும் அதனை மாற்றும் சை யனர் வலியர் என்பதை உலகம் இவ்பால் உணர்ந்தது.

(இதன் விரிவைப் பாகவதத்தில் காண்க.)

தவத்திறனும் சை சிறந்ததென்பது இதனால் கூறப்பட்டது.

226. பெற்றனைகொண் டேறை பெறுஞ்சிந் தர்பதிகோய்
குற்றமறத் தீர்த்தார் குமேசகா—முற்றுமே
லற்றுர் அழிபசி தீர்த்தல் அரிதெனருவன்
பெற்றான் பொருள்வகைப் பு. (ஈ)

இ—ன்

குமரேசா! பெருஞ்சித்திரனார் தான்பெற்ற பொருளைத் தொகுத்து வையாமல் ஏன் அதனால் பிறர் பசியைத் தீர்த்தார் எனின், அற்றார் அழிபசி தீர்த்தல் பெற்றான் ஒருவன் பொருள் வைப்புழி அதுவாம் என்க. வைப்பு உழி—வைக்கும் இடம்.

அற்றார்—பொருளற்றவர்; வறியர் என்க.

அழி பசி—கடும்பசி. குடிப்பிறப்பு விழுப்பம் மானம் முதலிய எல்லாநலன்களும் அழியும்படி பசிசெய்யும் ஆதலால் அஃது அழி என்னும் அடைபெற்று வந்தது.

பொருளைப் பெற்றவன் பின்பு தனக்கு உதவும்படி அதனைத் தொகுத்து வைத்தற்கு உரிய இடமாவது வறியவராது கொடிய பசியைத் தீர்க்க இவ்விடமாம் என்பதாம்.

கதை.

பெருஞ் சித்திரனார் என்பார் இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்குமுன் விளங்கியிருந்த ஒரு சிறந்த புலவர். அதிக மான் முதலான வள்ளல்களைப் பாடியுள்ளார். இவரது இனிய கவிகளெல்லாம் புறநானூறு முதலிய பழைய நூல்களிற் காணப் படும். நல்லறிவாளராகிய இவர்பால் பொல்லாத வறுமையும் பொருந்தியிருந்தது. அதனால் அல்லல் பல அடைந்தார். குமண வள்ளல் இவரது மதிநலத்தைதபறிந்து பெரும் பொருள் உதவினார். அதன்பின் மனைவியை நோக்கி வந்து தன் மனோவியைய நோக்கி

னர். தாம் பெற்ற பொருளை எல்லார்க்கும் உதவி வாழும்படி அவனிடம் கூறினர். அவனும் அவ்வாறே ஆற்றி வாழ்ந்தான். இருவரும் அதனல் என்றும் இன்புற்றார். வறுமைத் தியால் வாடி வருந்திய பெருஞ்சித்திரனர் பொருள் பெற்றபின் உயிர்க ளது .மருப்பசியை நீக்கிய பெருந்தலைமையை உலகம்புகழ்ந்தது. பெருஞ்சித்திரனர் தமது மனைவியை நோக்கிக் கூறிய இனிய மொழிகள் இதன் அடியில் வருகின்றன.

நின்னையர் துறைநர்க்கும் நினையர் துறைநர்க்கும்
பன்மான் கற்பினின் இனைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழ நின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்றேர்க் கென்னது என்றெறிந் தூழ
வல்லாங்கு வாழ்தும் என்னது நீயும்
எல்லார்க்கும் ஒருமதி மலைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் கல்லிய வளனே. (புறநானூறு.)

பிறர் பசியைத் தீர்த்தலே ஒருவன் பொருள் வைக்கும் இடம் என்பது இதனல் கூறப்பட்டது.

---

227. பண்டு வனம்புகுந்தும் பாண்டவர்கள் வெம்பசிநோய்
கொண்டிலரீ தென்னே குமரேசா—கொண்டனைதுமுன்
பாத்தான் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தின்டல் அரிது. (எ)

இ—ள்.

குமரேசா! பாண்டவர்கள் வனம்புகுந்தும் என் பசி நோயை அடையவில்லை எனின், பாத்து ஊண்மரீஇ யவனைப் பசி என்னும் தீப்பிணி தின்டல் அரிது என்க.

மருவியவன் என்பது மரீஇ யவன் என நின்றது. மருவியவன்—பழகினவன்.

பாத்து ஊன் மரீஇ பவனை—பகுத்து உண் ஔதலைப் பொருந் தினவனை.

பகையைத் தீப்பிணி என்றது அறிவொழுக்கங்களை யழித்து இழிவைப் தரும்பத்தையுடைமை பற்றி நல்கும் அதன் கொடுமை கருதி என்க.

பகுத்து உண்டலைப் பழுதி வந்தவனை யாண்டும் பகிர்நாய் தீண்டாதென்பதாம். (இவ்வுண்மை பாண்டவர்பால் காணப்படும் கதை.

பாண்டவர்கள் காடு புகுந்து வனம் புகுந்த காலத்தும் இனிய வுணவு கனிகளே அருந்தி இன்புற்றார். தருமர் ஒருநாள் சமுனை முனிவரைக் கண்டு வணங்கினர். முனிவர் தருமரது பெருந்தன் மையை மிகுத்து ஒரு மந்திரத்தை உபதேசித்தார். தருமர் தெ னிந்தார். அதனை உச்சரித்து சூரியனை நோக்கி அருந் தவஞ்செய்தார். சூரியன் தோன்றி ஓர் அற்புதமான பொற்பாத் திரத்தை யுதவினான். எவ்வளவு பேர்களைக் குறித்து எண்ணினு மவ் வளவினர்க்கும் அமுது இன்னுணவளிக்கும் இயல்பினை யுடையது. அமுத அட்சய பாத்திரம் எனப்படும். தன்னு டன் வந்த பன்னீராயிரம் முனிவர்களையும் தம்மையும் அதனால் ஆதரித்துவந்தார். காட்டில் இருந்தும், நாட்டிலும் கிடையாத நல்லுணவெலாம் நாளுந்துய்த்தார். பகுத்துண்டு வாழ்வோரைப் பகிர்நாய் தீண்டாது என்பதை உலகம் இவர்பால் தெளிந்தது.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

சோர்க்குப் பகிர்நாய் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது

---

228. சோருடன் ஏமம் எனிழந்து துண்பழுற்றான்
கோதைகர் ஆழ்வான் குமரேசா—பாருலகில்
சாந்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

இ—ள்.

குடிமோசர! கொலை நூல் ஆய்வான் என் சபாடல் இழுக்கு துன்பமுறுமன் எனின், தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் சத்து உவக்கும் இன்பம் அறியார் என்க.

சத்து என்பது தாதுவை நோக்கி வந்து நின்றது.

வன்கண்மை—இரக்கமின்மை. வன்கண்ணவர் என்றது இரப்பவர்க்கு இரக்கி சபாத இழிமக்களை என்க.

தாம் உடைமை—தாம் உடைத்தாயிருக்கும் பொருள்.

ஈத்து உவக்கும் இன்பம்—கொடுத்து உவத்தல் என்னும் இன்பத்தை. இனி, கொடுத்து (வறியவர்) உவத்தலால் எய்தும் இன்பம் எனவுமாம்.

பிறர் இன்புறக் கொடுத்த அதனால் தாம் எய்தும் இன்பத்தை சபாது வைத்திழக்கும் உலோபர் அறியார் கொல் என்பதாம்.

சிறிய பொருளைக் கொடுத்துப் பெரிய இன்பத்தினை யெய்தாமல் வறிதே யிழப்பது யாது கருதியோ என்பார் "அறியார்கொல்" என்றார். கொல் என்பது ஐயத்தோடு வினாவையும் குறித்து நின்றது. அறிவோர் கொடுத்து இன்புறுவர். அறிவிலர் வைத்திழந்து துன்புறுவர் என்பது கருத்து.

கொடை யின்பத்தை யறியாத மடையரே தமது பொருளைக் கொடாமல் வைத்திழந்து கவல்வர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இது கொலைக்கா லாழ்வானைப் போல் காணப்படும்.

கதை.

சோழநாட்டிலே கோலைக்கால் என்னும் ஊரிலே ஆழ்வான் என்னும் பெயரினையுடைய பொருட் செல்வன் ஒருவன் இருந்தான். இவன் பொருள் மிகப்பெற்றும் அருள் இலனாயிருந்தான். கல்வியறிவுற்று சிறிது காய்திருந்தான். பொருள்மேல் பெரும்

பற்றுடையவன். அதனால் அதனை எவர்க்கும் கொடாமல் மிகப் போற்றி வாழ்ந்தான். இரவலரைக் கண்டால் இவன் கரவுடன் அகல்வான். இவன் நிலைமையையறியாமல் புலவரொருவர் இவன் மேல் பல கவிகள் செய்துவந்தார். பாடிப் புகழ்ந்தார். அவர் இகழ்வர் என்று அஞ்சி இவன் ஒரு வருடம் கழித்துவரின் ஒரு யாதை தருகின்றேன் என்றான். குறித்த காலத்தில் புலவர் வந்தார். இன்னுஞ் சில காலங்கழித்து வாருங்கள் எதாவது கொடுக்கின்றேன் என்றான். இவ்வகையே பலமுறையுங்கூறி முடிவில் ஒன்றுங் கொடாமல் மறுத்தான். இவன் வன்கண்மையை ஔவை அறிந்தாள். வசை ஒன்று பாடினாள். அதன் பயனாக இவன் பொருள் முழுதும் இழந்தான். ஈதலின்பத்தை யெய்தாதிழந்தான்.

கரியாய்ப் பரியாகிக் காலொருமை தானைப்
எருதாய் முழுப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றடிகத் தேய்ந்ததே கொல் ஓய்ந்ததே
கோளைக்கால் ஆழ்வான் கொடை. (ஔவை.)

உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத கல்லறமுஞ் செய்யார்—கொடாதது
வைத்தீட்டி வாழ்பவர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி. (காலடியார்.)

ஈதலின்பத்தைப் பேரறிவாளரே எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

229. என்றும் பலர்சூழ்ந் திருந்துண்ணை என்னுண்டான்
குன்றையூர் எல்லன குமரேசா—கன்றி
இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல் (கு)

இ—ள்.

குமரேசா! குன்றையூர் எல்லன் தனித்துண்ணலால் என் பலரோடுங் கூடியுண்டான் எனின், நிரப்பியதாமே தமியர் உணல் இரத்தலினும் மன்ற இன்னாது எனக்

நிரப்பிய தாமே தமியர் உணல்—தொகுத்ததைத் தாமே தனித்து உண்டல். ஏகாரம் பிரிநிலை.

மன்ற என்பது தெளிவுப் பொருளை யுணர்த்தும் ஓர் இடைச் சொல். மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும் (தொல்காப்பியம்.)

ஈட்டிய வுணவுகளைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தனித்து உண்ணுதல் இரத்தலினும் உண்மையாக இன்னாது என்பதாம்.

நிரப்பிய என்பதை விணையெச்சமாகக் கொண்டால், எதாவது, ஒரு பொருளெல்லையைக் குறித்துவைத்து அதனை நிரப்பும் பொருட்டு ஒருவர்க்கும் ஒன்றுங்கொடாமல் தாமே உண்டு உலோபஞ் செய்தல் இரத்தலினும் இனிவு என்று கொள்ளப்படும்.

ஈயாது உண்ணல் இரத்தலினும் தீது என்க.

முயன்று தொகுத்த பொருளைப் பிறர்க்குதவி வாழ்பவனே குலமகன் என்பது குறிப்பு. இஃது எல்லன்பால் கூறப்படும்.

கதை.

எல்லன் என்பவர் தொண்டை நாட்டிலே குன்றையூர் என்னும் நகரிலே பிறந்தவர். வேளாண் மரபினர். பெரிய நிலப்பகுதியைத் தனக்கு உரிமையாகவுடையவர். யாவர்மாட்டும் பேரன்பு வாய்ந்தவர். எல்லாரும் இன்புற வாழ்ந்தவர். இவர் உலையில் அரிசியிட்டால் ஊர்பசி நீங்கும் என்பர். ஆயிரக்கணக்கான மனிதர்கள் தினமும் இவர் இல்லில் வந்து அன்னம் அருந்திச் செல்லுவர். பலரும் புடைசூழ உண்டால் அன்றி இவர் ஒருநாளும் தனித்து உண்ணுவதில்லை. நான்கு திசைகளினும் இருந்து நாளும் இவரை நாடி வருவார் பலர். எவர் வரினும் இனிய முகத்தோடு உபசரித்து அவர் குறித்ததை உடனே கொடுத்தனுப்புவர். இவரைச் சோதிக்கக் கருதிய ஒருவனுந்தன் உடற்றசையையுங் கொடுக்கத் துணிந்தார்.

ஆலெங்கே யங்கே யரும்பறவை ஆலமர்ந்த
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—கோலஞ்சேர்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை எல்லினங்கே
அங்கே யிரவலல்லல் லாம். (பொய்யாமொழி)

இதனால் இவரது ஈகைக்குணம் இனிது தெளியப்படும்.

ஈயாது உண்டல் இரப்பினும் இனிவென்பது இதனால் கூறப் பட்டது.

230. ஈதலிசை யாமைம்மேகன் இன்னுயிரும் நீங்கநின்ற
கோதறுகா ளத்தி குமரேசா—பூதலத்தில்
சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம்
ஈதலியையாக் கடை. (ய)

இ—ள்.

குமரேசா! காளத்தி முதலியார் ஈதல் இசை யாமைக் காக ஏன் தனது இனிய உயிரையும் நீக்கத்துணிந்தார் எனின், சாதலின் இன்னாதது இல்லை, ஈதல் இசையாது எனின், அதுவும் இனிதாம் என்க.

சாதலின் இன்னாதது இல்லை—சாதல்போலத் துன்பமானது இவ்வுலகில் ஒன்றுமில்லை.

ஈதல் இசையாக்கடை—ஈதல் முடியாத இடத்து.

ஈதல் முடியாமை எய்துமாயின் அது, சாதல் துன்பத்திலும் கொடிது என்பதாம்.

காணம் யாவும் கலங்குற வருகின்ற மரண துன்பமே எவ்வகைத் துன்பங்களினும் உயிர்கட்கு மிக்க துன்பமாம் அதனினும் வறியவர் விரும்பியதொன்றைக் கொடுக்க முடியாதவிடத்துக் குலமகளுக்குத் தோன்றும் துன்பங்கோடி தாம் என்பது கருத்து.

தன்பால் வந்து இரந்தவனுக்கு இல்லையென்று சொல்வதினும் ஒருவன் இறந்து படுதல் நல்லது என்பார் "ஈதல் இயைடாக் கடை சாதல் இனிது" என்றார்.

கொடுக்க முடியாத இடத்துக் குலமக்கள் தம் உயிரையும் விடத்துணிவர் என்பது குறிப்பு. இவ்வுண்மை காளத்திபால் காணப்படும்.

கதை.

காளத்தி முதலியார் வறியவரெவர்க்கும் உறுதுணையாய் நின்று பேருதவிசெய்து நின்றனன் என்னும் ஊரில் நிலத்துவாழ்ந்தார். அதனால் அவரது புகழ் உலகெங்கும் பரவியது. பல திசைகளிலுமிருந்து இரவலர் பலர் நாளும் இவரை நாடிவருவர். அவர் வேண்டிய எல்லாம் இவர் விரும்பியுதவினர். முதலில் பொருள் வளங்குறைந்தது. வறுமை வளர்ந்தது. உணவும் இன்றி ஒருநாட் பட்டினிகிடந்தார். அங்கு இருந்தற்கு நாணினர். மறுநாள் இரவில் தன் மனைவியோடு எழுந்து ஒருவருக்குந் தெரியாதபடி அயலிடஞ்சென்றார். வழியிலிருந்த ஒரு பொது நிலையத்தின் புறந்திண்ணையில் கடும்பசியோடு களைத்துத் தங்கினர். இவர் பால் பரிசில் பெறக்கருதி நின்றையூரை நோக்கிவந்த புலவர் ஒருவரும் அங்ஙனார் மூலையில் பொருந்தியமர்ந்தார். தன்னைவிடாமல் வருத்துகின்ற வறுமையை முன்னிலைப்படுத்திப் புலவர்,

நீளத் தொடர்ந்தலையே நீங்கா நிழல்போல
நாளைத்தன் செய்குவாய் நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு. என்றார்.

முதலியார் இதனைக் கேட்டார். புலவர் குறிப்பைத் தெரிந்தார். நாளை இவர் நமது இல்லைபடைந்து நாம் இல்லாமையை அறிந்தால் அல்லலுறுவரே என்று எல்லை யெழுந்தார். மனைவியை யழைத்து விடியுமுன் மெல்ல வீடுவந்து சேர்ந்தார். அரிதின் முயன்று சிறிது உணவை ஆக்கிவைத்தார். புலவரும் வந்தார். முதலியார் அவரை உபசரித்து உணவூட்டினர். புலவர் குறிப்பின்படி கொ

டுத்தனுப்புதற்கு ஒன்றும் இல்லையேயென்று யெண்ணி யெண்ணி நொந்தார். இல்லையென்று சொல்வதினும் இறந்துவிடுதல் நல்லது என்று துணிந்தார். தமது இல்லின் பின்புறத்திற்குச் சென்று இறக்கக்கருதி அங்கிருந்த ஒரு பாம்பின் புற்றில் கையை விடுத்தார். அதிலிருந்த நாகம் கடித்தலைச் செய்யாமல் தன் சிரத்திலிருந்த செம்மணியை அக்கையில் கக்கிற்று. முதலியார் கையை வெளியே இழுத்தார். ஒளிமணியைக் கண்டார். பெருவணிகனாண்டார். விரைந்து வந்தார். அதனைப் புலவர்க்கே தந்து போற்றியனுப்பினர். காதல் முடியாத இடத்துக் குலமக்கள் காதல் இனிது என்று கொள்வர் என்பதை உலகம் இவர்பால் கண்டது. இதன் விரிவை இவர் காதையில் காண்க.

சாதல்வந் தடுத்தகாலுந் தனக்கொரு சாதலின்றிப்
பூதலம் இறக்குங் காறும் புகழுடம் பிருக்கு மந்தச்
சோதறு புகழின் யாக்கை கொடையிறற் செல்வங் கூட
வாழ்தலே புடைய ரன்றே வானமும் வணங்குநீரார்.

(விநாயக புராணம்.)

ஈதலின்றி வாழ்தலினும் சாதல் நன்று என்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

வறியவர்க்குக் கொடுப்பதே கொடை. எற்றல் தீது. ஈதலே நல்லது. இலன் என்னுமல் ஈவான் குலமகனே யாவன். இரந்தவாது இன்முகங் காணுமளவையும் ஈவார்க்கும் துன்பமாம். பிறர் பசியைத் தீர்ப்போர் தவசிகளினும் வலியவர். பிறர் பசிக்கு இடுதலே ஒருவன் பொருள்வைக்கும் இடமாம். பகுத்து ஈந்து உண்போனைப் பகைநோய் அணுகாது. கொடாமல் வைத்து இழப்போர் கொடியமோயாவர். ஈயாது உண்ணல் இரத்தலினுந் தீது. ஈதலின்றி வாழ்தலினுஞ் சாதல் இனிது.

உடைமை யதை முற்றிற்று.

24-ம் அதிகாரம் புகழ்.

அஃதாவது தனது குணஞ் செயல்களான் உலகம் என்றும் உவந்து போற்றும்படி ஒருவனுக்கு அமைந்து நிற்கும் கீர்த்தி. இன்பம் திப்பு வீரம் கல்வி நியாயங்களானும் எப்தமாயினும் ஈனக் குணங்களை இன்புறுத்தலான்றும் ஆகலான் அதன்பின் இது வைக்கப்பட்டது.

---

231. திண்டோள் இயற்பகைதன் தேவியையும் ஈந்தேதமை
கொண்டார் இசையைக் குமரேசா—தண்டாமல்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை யுயிர்க்கு (க)

இ—ள்.

குமரேசா! இயற்பகையார் தன் தேவியையும் ஈந்து என் இசைபெற்றார் எனின், ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை என்க. ஊதியம்—இலாபம்.

இசைபட—புகழ் உண்டாக. அது என்றது புகழை.

ஈதல் வாழ்தல் என்பன தல் ஈற்று வியங்கோள் முற்றுக்கள் ஆதலான் அவை ஈக வாழ்க என ஏவல் மேனின்றன.

ஈக; அதனால் புகழுண்டாக வாழ்க; அப்புகழல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை என்பதாம்.

ஈதலைச் செய்து அதனால் புகழினை எய்தி வாழ்தலே ஒருவன் பிறவிக்குப் பயன் என்பது கருத்து.

ஈதலின்றி வாழ்தலினும் சாதல் நன்று என்று மேற் குறித்த அதனால் யாது பயன் என்பாரை நோக்கி அஃது உயிர்க்கு ஊதியமாகிய புகழையுண்டாக்குமென்று இதில் உணர்த்தினர் என்க.

எதனையும் இல்லையென்னுமல் ஈந்து புகழுற வாழ்வோரே பிறவிப் பயனை யெய்திய பெரியவராவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இயற்பகையார் பால் உணரப்படும்.

கதை.

இயற்பகையார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் மரபில் பிறந்தவர். எவர் வந்து எதைத் கேட்பினும் இல்லையென்னுமல் ஈயும் இயல்பினையுடையவர். குணவதி என்னும் தனது அருமை மனைவியுடன் அமர்ந்து இல்வாழ்ந்துவந்தார். வருங்கால் இவரது புகழினை உலகறியும்படி செய்ய இறைவன். கருதினர். ஒரு காழுகன்போல் வேடங்கொண்டு இவர் பால்வந்தார். அவரை ஓர் அடியவராகவே கருதி இவர் அவர் அடிவணங்கி நின்று யாது வேண்டும் என்றார். "உன் மனைவியே வேண்டும்" என்று அவர் வேண்டினர். இவர் இல்லை என்னுமல் தம் இல்லாளோடுந்தந்தார். அவர்கொண்டு சென்றார். இவரது உறவினர் அவரைக் கடுத்துத் தடுத்தார். இவர் வெகுண்டு சென்று அவரனைவரையும் அச்சுறுத்திச் சிறிது தூரம் உடன் சென்று அவ்விருவரையும் அனுப்பினர். மாயவண்ணங் கொண்டுவந்த அவர் மனைவியையும் மறுதவண்ணந் தந்த இவர்முன் விடைமேல்தோன்றினர். கண்டு தொழுதார். பின் மனைவியோடு பேரின்பம் எய்தினர். ஈதலும் அதனல் இசைபெற வாழ்தலுமே ஆருயிர்க்குப் பேருதியம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

(விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.)

புகழொன்றே இம்மையில் ஒருவன் எய்துதற்குரிய பெரும் பயன் என்பது இதனல் கூறப்பட்டது.

232. பாரிகண்ண ருதியரைப் பல்லோரும் போன்பு
கூரவுரைப் பானேன் குமரேசா—பாரில்
உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். (உ)

இ—ள்.

குமரேசா! பாரி கன்னன் முதலிய வள்ளல்களுடைய புகழை எல்லாரும் என் உரையாடி மகிழ்கின்றார் எனின், உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்றை ஈயார்மேல் நிற்கும் புகழேயாம் என்க.

பேசுவார் பேசுவன எல்லாம் இல்லையென்றுமல் ஈயும் ஈகையாளர்களுடைய புகழ்களே என்பதாம்.

வள்ளல்கள் புகழ்களே வாய்படைத்த பாக்களால் விடந்து பேசப்படும் என்பது கருத்து.

கல்வியறிவு நிரம்பப் பெற்றவர் வழக்கமான உரையாலும் புலவர்கள் பாட்டாலும் வள்ளல்களுடைய மேன்மையைப் போற்றி மகிழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பாரிகன்னன் முதலானவர்பால் காணப்படும்.

கதை.

இரப்பார்க்கு இல்லையென்றுமீந்து வந்த பாரி கன்னன் குமணன் பேகன் நன்னன் எழினி அதிகமான் மலையமான் ஆய் சோமன் சந்திரன் சுவர்ந்த ஓரி கூவத்தூர்நாரணன் பள்ளிகொண்டான் காரி வாபதியாட்கொண்டான் அந்திமான் சந்திமான் நள்ளி முல்லான் சிபி காளத்தி முதலியார் சீதக்காதி சடையப்ப பிள்ளை முதலிய வள்ளல்களுடைய கீர்த்தியை உரையாலும் பாட்டாலும் உலகம் இன்றும் போற்றிவருவதை எங்கும் காணலாம்.

"கொடைக்குக் கன்னன்"

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பாரி"

"ஈந்து சிவந்தது மால் சீதக் காதி இருகரமே"

"ஈர நன்மொழி இரவலர்க்கீந்த காரி"

"அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த அதிகன்"

"பிறந்த நாட்டொடங்கி யாரும் தலைபுக்க பெரியோன்
பெற்றி மறந்தானுண்டோ"

"மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன்ன சடையன்"

"மாரி யீகை மறப்போர் மலையன்"

எனவரும் இயற்றமிழ் ஈவார் மேல் நிற்குப் புகழ் உரையாலும் பாட்டாலும் உவந்து பேணப்படும் உண்மை காணப்படும்.

வள்ளல்களுடைய புகழே எல்லாராலும் வியந்து சொல்லப் படும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

233. என்றும் சிபிசுதனின் இன்புகழே நின்றதிங்கு
குன்றியதேவன் எல்லாம் குமரேசா—நன்றுக
ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில். (கூ)

இ—ள்.

குமரேசா! சிபி முதலோரது புகழே இவ்வுலகில் நிலை பெற்றது பிற எல்லாம் என் நிலையாமல் அழிந்தன எனின், ஒன்று உயர்ந்த புகழ் அல்லால் உலகத்தில் பொன்றுது நிற்பது ஒன்று இல்லை என்க.

ஒன்று—தன்னோடு ஒப்பது இன்றித்தான் ஒன்றேயாக.
ஒப்பற்றதென்க.

ஒன்று உயர்ந்த புகழ்—ஒப்பின்றுக உயர்ந்த கீர்த்தி.

ஒன்று என்பதை உலகத்துக்கே அடையாக்கி "நிலையா உல

அரிய புகழைத்தவிர இவ்வுலகத்தில் அழியாமல் நிற்பது வேறு ஒன்றும் இல்லை என்பதாம்.

நிலையில்லாத இவ்வுலகில் புகழ் ஒன்றே நிலைத்துநிற்கும் என் பதும் அஃது எவையோனே எய்தப்படும் என்பதும் கொடுத்தற்கு அரியதைக் கொடுத்தேனும் அதனைக் கொண்டவனே உயர்ந்தோர் என்பதும் அவரது பேரும் சீரும் உலகமுள்ள அளவும் யாவரா னும் போற்றப்படுமென்பதும் இதில் தோற்றி நின்றமை காண்க.

இல்லையென்னுஞ் சொல்லை யுங்கொடுத்து வள்ளல்கள் எய்திய அரிய புகழ் ஒன்றே இவ்வுலகில் அழியாமல் நிற்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிபி சுகுணன் முதலா யினர் பால் கூணைப்படும்.

கதை.

சுகுணன் என்பவர் தொண்டைமண்டலத்திலே விழுப் என் னும் நகரிலே விளங்கியிருந்த ஒரு வேளாண் மரபினர். தமக்கு உரிய பொருளையெல்லாம் வறியவர்க்கே கொடுத்து மகிழ்வுடன் வாழ்ந்தவர். அவரது வள்ளன்மையையறிய விரும்பிப் புலவர் ஒருவர் வந்து மனையினைத்தரும்படி கேட்டார். அவர் மாற்றாது தந்தார். புலவர் வியந்து சுகுணரைத் தந்தையேயென்றழைத்து அவர் மனைவியைத் தாயென வணங்கினர். சேயாகிய என் பால் தாய்தந்த தாதாவே என்று மீண்டும் அவளை அவர் பால் சேர்த்தார். கொடுத்தற்கரிய உரிமைப் பொருளையும் கொடுத்த அவரது நைகக்குணத்தைப் புலவர் எண்ணி யெண்ணித் துதித்தார். ஒன்று உயர்ந்த அவர் புகழ் என்றும் நின்று நிலவும்படி நன்று பாடினர். (இதன் விரிவைத் தொண்டை மண்டல சதகத்தில் காண்க.) சிபிபுகழ் நிலைத்தமை மேலே காண்க.

அரிய புகழொன்றே அழியாமல் நிற்குமென்பது இதனால் கூறப்பட்டது.

[ளார்

234. வாலுலகென் போற்றியதோர் வண்புறவை வானிலுள்
கோனையும் போற்றுமல் குமரேசா—மான
நிலவரை நீள்புக ழூற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு. (சு)

இ—ள்.

குமரேசா! வானுலகம் தன்பாலுள்ள தேவரைப் போற் றுமல் பண்டு என் ஒரு பறவையைப் போற்றியது எனின், நிலவரை நின் புகழ் ஆற்றின் புத்தேள் உலகு புலவரைப் போற்றாது என்க.

நிலவரை—பூமியின்கண். நீள்புகழ்—நெடுங்காலம்நிலைத்து நிற்கும் புகழ். புலவர் என்றது தேவரை. புலம்—அறிவு. அதனைப் பெரிதும் உடையராதலால் அவரனைவரும் புலவர் எனப் பட்டார்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின்—நிலவுலகிலிருந்து நெடிய புகழைச் செய்யின்.

இந்நிலவுலகிலிருந்து ஒருவன் பெரும் புகழைச் செய்வானெ கில் அவனையல்லது தெய்வவுலகம் தன்பாலுள்ள தேவர்களைப் பெறாது என்பதாம்.

புண்ணியத்தால் தெய்வவுடம்பையெடுத்துப் புத்தேருலகி னையெய்தி நிற்கும் தேவர்களினும் ஈகையால் புகழுடம்பையெடுத் தது இந்நிலவுலகிலிருக்கும் வள்ளல்கள் சிறந்தவர் என்பது கருத்து.

நெறிநின்றொழுகிய அறிவினையுடையார் மறுமையை மாத்தி ரம் உரிமையாக உடையவராவார், புகழுடையார் இருமையினும் பெருமையையெய்துவராதலான் புத்தேருலகம் அவரினும் இவரை விருப்பிப் பெறும் என்க. இவ்வுண்மை புகழாற்றிய ஒரு புறவின்பால் காணப்படும்.

கதை.

பல்லாயிர வருடங்களுக்கு முன்னர் நிடதமலையையடுத்துப் பெரியவனம் ஒன்று இருந்தது. அடர்ந்த மரங்களும் சிறந்த செடி கொடிகளும் அதில் நிறைந்திருந்தன. வில்லும் கையுமாய் வேடனொருவன் அங்கு வந்தான். வரவும், பெருமழை பெய்தது. [illegible]லை. அதனால் வருந்திக் குளிரால் நடுங்கினான். பறவை

களும் மிருகங்களும் வாடி நொந்தன. நினைந்து மெலிந்த பெண் புறு ஒன்று தரையிடைத் தளர்ந்து கிடந்தது. வேடனெடுத்துத் தன் வலையிற் போட்டுக்கொண்டு தழைத்த ஓர் மரத்தினடியில் கினைத்திருந்தான். இரவும் வந்தது. அம்மரத்தில் தனித்திருந்த ஆண்புறு தனது பேடையைக் காணாது பெரிதும் வருந்தி அடியில் நினைந்திருக்கும் வேடன் வலையில் அகைந்திருப்பக் கண்டு கண் கலங்கிகொண்டது. அதன்பின் வேடன் மெலிவுற்று இளங்கிப் பல இடங்களுக்குஞ் சென்று காய்ந்த விறகுகளைக் கொணர்ந்து குவித்து காட்டுத்தீயைக் கோலில் தாங்கிவந்து மூட்டித் தனது மெல்லிய சிறகுகளால்வீசி நெருப்பை வளர்த்து அவனது குளிரை நீக்கினது. அவனும் நீங்கி நிமிர்ந்தான். உடனே அவன் பசிநோய்க்கு இரையாகப் புறு அதில் பாய்ந்து மடிந்தது. வேடன் கண்டு வியந்து பயந்து தன் வலையில் கிடக்கும் பெண் புறுவை எடுத்து வெளியே விட்டான். தன் துணையைப் பிரிந்திருக்க ஆற்றாது அதுவும் அத்தியில் விழுந்தது. உடனே விமானம் வர அவ்விரண்டும் தெய்வவடம்பெய்திச் சேர்ந்து மேலெழுந்தன. நிலவுலகினிருந்து நீள்புகழாற்றிய அப்புறவிரண்டையும் புத்தேளுலகம் புலவரினும் போற்றி மகிழ்ந்தது.

(இதன் விரிவைச் சாந்தி பருவத்தில் காண்க.)

பேடையைப் பிரிந்தன்னைப் பிடிக்கவந் தடைந்தபேதை
வேடனுக் குதவிசெய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடிறு பசியைநோக்கித் தன்னுடல் கொடுத்தபைம்புள்
வீடுபெற் றுயர்ந்தவார்த்தை வேதத்தின் விழுமிதன்றே.

(இராமாயணம்.)

புகழுடையாரைப் புத்தேளுலகமும் போற்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

235. தண்டார் அமலான் தருசிபோல் மெய்ப்புகழைக்
கொண்டுலகேன் மற்றோர் குமரேசா—கொண்டாடும்
நந்தப்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. (நி)

)— ள.

குமரேசா! அரவான், ததீசிபோல், பிறர் என் பெரும் புகழைக் கொள்ளவில்லை எனின், நத்தம் ஆகும் கேடும் உளது ஆகும் சாக்காடும் வித்தகர்க்கு அல்லால் அரிது என்க.

திருந்தல் வருந்தல் என்பன திருத்தம் வருத்தம் என நிற் றல்போல் நந்தல் என்பது இங்கே நத்தம் என நின்றது.

நந்தல் என்பது வளர்தல் ஆக்கம் முதலியவற்றைக் குறித்து வரும் ஒரு தொழிற்பெயர். சாக்காடு—சாவு.

போல் என்பதை உரையசையாக்கொண்டு ஆகும் என்பதை ஆங்குப் பெய்து பொருள் கொள்ளும்படி இது நின்றது.

ஆக்கம் ஆகும் கேடும் வாழ்நலாகுஞ் சாவும் வித்தகர்க்கு அன்றி மற்றவர்க்கு எய்துதல் அரிது என்பதாம்.

வித்தகர்—அறிவு, அருள், ஆண்மைகளான் மேன்மை பெற் றவர். அழியும் உடலைக்கொடுத்து அழியாத புகழை அடைதல் எல்லார்க்கும் எளிதன்றுதலான் "வித்தகர்க்கு அல்லால் அரிது" என்றார்.

புகழுடம்பை எடுத்தற்காகப் பூதவுடம்பைக் கெடுத்தலும் அது நிலைத்து நிற்கும்பொருட்டு இறத்தலும் தான வீரர்க்கே அமையும் என்பது கருத்து

உடல் உயிர்களைக் கொடுத்தேனும் மேலோர் புகழினை அடை வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரவானி டமும் ததீசிபாலும் அறியப்படும்.

கதை.

அரவான் என்பவன் அருச்சுனன் புதல்வன். உலூபி என்னும் நாககன்னி யிடம் பிறந்தவன். சிறந்த வீரன். நல்ல அங்கங்களும் நிறை உரோமங்களும் வாய்ந்தவன். எவராலும்

வெல்லுதற்கரிய மெய்வலிமை யுடையவன். பாரதப் போரில் தானொருவனே சென்று பகைவரனைவரையும் தொலைத்து வெற்றி பெற விரும்பியிருந்தான். இங்ஙனமிருப்பத் துரியோதனன் போர் தொடங்குமுன் வீரமுறைப்படி களப்பலியூட்ட விரும்பினன். களப்பலி என்பது தனக்கு வெற்றியுண்டாகும்படி சிறந்த ஆண்மையும் நிறைந்த அறிவும் திருந்தியவுருவும் உடலில் எதிரோறிய உரோமமும் உடைய ஒருவனைக் கொண்டுபோய்க் காளி தேவிமுன் நிறுத்தித் தோள் மார்பு தொடை முதலிய அவயவங்களைச் சிறிது சிறிது வெய்து அவளுக்கு மகிழ்வுண்டாகும்படி உதிரமும் தசையும் ஒருவன் ஒருங்கேயிடுவது. மேற்குறித்த இலக்கணங்கள் அரவாணுக்கும் கண்ணனுக்குமே அமைந்திருந்தன. கொடியனான துரியோதனன் அரவானிடம் வஞ்சமாக வந்தான். அவனைப் பெரிய தந்தையாக மதித்து அரவான், யாது வேண்டுமென்றான். நீதான் வேண்டுமென்று அந்தானவன் சொன்னான். தந்தேன் கொள்க என்று அம்மைந்தன் இசைந்தான். அதன்பின் கண்ணன் கவர்ந்து அவனை முன் களப்பலி செய்தான். பூதவுடம்பைக்கொடுத்துப் புகழுடம்பை எடுத்த அரவானது கொடை வீரத்தை அமரரும் துதித்தார்.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

கதை 2

இந்திரனுக்கு முதுகென்பை யீந்து புகழுண்டாகும்படி சாக்காடெய்திய சதுரப்பாடுடைமையைத் திதிபால் காண்க.

பூதவுடம்பைக் கொடுத்தீதனும் புகழுடம்பை ஒருவன் எடுக்கவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

236. பூருவேன் றோன்றிப் புகழ்கொண்டான் எனிருவர்
கூரிகழ்வால் கொந்தார் குமரேசா — பாருலகில்
றோன்றிற் புகழொடு றோன்றுக வஃதிலார்
றோன்றலிற் றோன்றாமை நன்று. (கூ)

இ—ள்.

குமரேசா! பூரு என்பவன் தனது இளமையையும் கொடுத்துப் புகழ்கொண்டான் என் அவன் துணைவர் இகழ்வாவிழிந்தார் எனின், தோன்றின் புகழொடு தோன்றுக; அஃது இலார் தோன்றல் தோன்றாமை நன்று என்க.

புகழ் என்றது இங்கு அதற்கு எதுவாகிய குணத்தைக் குறித்து நின்றது. அஃது இலார்—அக்குணம் இல்லாதவர்.

பிறந்தால் புகழுக்கு எதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணம் இல்லாதவர் பிறந்தலினும் பிறவாமல் ஒழிதல் நன்று என்பதாம்.

உயிருக்கு ஊதியமானது புகழ் ஒன்றே ஆதலான் அதனைப் பெற்றவனே மனிதனாகப் பிறந்தவனாவான்; பெறாதவன், உருவத்தால் மனிதனையினும் அவன் பிறப்பு பயனற்றது என்பது கருத்து.

தோன்றவில்லையானால் புகழில்லாதவனை ஒருவரும் பழியார் ஆதலான் தோன்றாமை நன்று என்றார்.

மக்களாய்ப் பிறந்தால் புகழ்பெறும்படி பிறக்கவேண்டும் இல்லையானால், அப்பிறப்பு இழிக்கப்படும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பூருவின் கண்ணும் அவன் துணைவரிடமும் உணரப்படும்.

கதை.

பூரு என்பவன் சந்திரகுல வேந்தனாகிய அயாதியின் புதல்வன். தெய்வயானை சன்மிட்டையென்னும் அயாதியின் மனைவியருவருள் இவன், இளையவளிடம் பிறந்தவன். மது, தூரு, யது, வசு, என்னுந் துணைவர் நால்வருடன் வளர்ந்து பருவமெய்தினன். சுக்கிரன், தன் மகளாகிய தெய்வயானையிருப்ப மற்றொருத்தியை மணந்தான் என்று சினந்து அரசனைத் தளர்ந்த கிழவனாகும்படி சபித்தான். அரசன் பெருமூப்பெய்தினன். இவ்வின்புந்துய்க்க

இசையாமையை நினைந்து நசைபீக்கூர்ந்தான். இளமையைத் சருப்படி தன் புதல்வரைக் கேட்டான். மறுமுதலிய நால்வரும் மறுத்தார். பூரு மகிழ்ந்து தன் இளமையைத் தந்து அப்முதுமையைக்கொண்டான். அரசன் இளமையெய்திப் பெருமகிழ்வற்றான். மறுத்த நால்வரையும் வெறுத்தகற்றினான். வேண்டிய இன்பந் துய்த்தபின் அவ்விளமையை மீண்டும் பூருவுக்கே தந்தான் தனது உரிமை முழுவதுந்தந்து அவனருளினையே அரசளுங்கினான். அகன்ற நால்வரும் வேவ்வராகி யிழிந்தவர்ந்தார். புகழோடு தோன்றிய பூருவே போற்றப்பட்டான். அஃதில்லாதவர் தோன்றியும் தோன்றாதவராய்த் தூற்றப்பட்டார்.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

புகழுறப் பிறத்தலே உயர் பிறப்பென்பது இதனால் கூறப்பட்டது.

237. ஓதுபுகழ் கொள்ளா உலகனென் றன்னையிகழ்
கோதிலனை நொந்தான் குமரேசா—எதும்
புகழ்படா வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். (எ)

ப—ள.

குமரேசா! உலகன் என்பவன் தன்னை யிகழ்ந்தவரை ஏன் நொந்தான் எனின், புகழ்பட வாழாதார் தம்மை நோவாதே தம்மை இகழ்வாரை நோவது எவனே என்க.

தம் நோவார்—தம்மை நோவாதவராய். நோவார் என்னும் எதிர்மறை முற்று இங்கு எச்சமாய் நின்றது.

ஈதலைச் செய்து புகழுறவாழ்தலே இல்வாழ்வானுக்குக் கடமையாதலால் அதனை யெய்தாதவனை உலகோர் இகழ்வர், அங்ஙனம் இகழுங்கால், தன் குறையையுணர்ந்து அவன், தன்னை நோவாமல் தன்னை இகழ்வாரை நோவதால் பயன் இல்லை என்பதாம்.

தன்னைப், பிறர் இகழ்வராயின் அதனையுணர்ந்து தான் திருந்தாமல் அவரை அவன் வெறுப்பது அறிவின்மையாம் என்பது சருத்து.

புகழ்பட வாழாதவனை உலகோர் இகழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உலகன் பால் உணரப்படும்.

கதை.

சோழ நாட்டிலே ஆங்கூர் என்னும் ஊரிலே உலகன் என்னும் பெயரினையுடைய செல்வன் ஒருவன் இருந்தான். வாணிக முதலிய எல்லாத் துறைகளினும் நல்ல திறமையுடையவன் ஆனால் கல்வியறிவு சிறிதும் இல்லாதவன். புன்மையும் வஞ்சமும் பொருந்திய நெஞ்சினன். பொருள்மேல் பெரும்பற்றுள்ளவன். எவரேனும் வந்து ஏதாவது ஒன்றை ஈ என்று கேட்டால் எமன் வந்து தன்னுயிரைக் கொடு என்று கேட்டதுபோல் மிக நொந்து கவல்வான். இவனது நிலைமையைத் தெரியாமல் இரட்டையர் என்னும் புலவர் வந்து இவன்மேற் பல கவிகள் பாடினர். அப்புலவருக்கும் இவன் ஒன்றுங் கொடாமல் அவமதித்தான். அவர் இவனது படைமையையுங் கொடுமையையுங் தெளிந்தார்.

மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவீரா
ஆடகத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே ஈயகலு மால். என்று வசையொன்று பாடினர்.

அதின் பயனாக அவன் விழியொழியிழந்தான். புகழ்பட வாழாத கண்ணே ஈவாமல் தன்னை இகழ்ந்த புலவரை அறிவின்றி நொந்து வறிதே இழிந்தான். (இதன் விரிவைப் புலவர்மான்மியத்தில் காண்க.

புகழ்பட வாழாதவன் இகழ்படுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

238. பள்ளிகொண்டான் செல்வமெல்லாம் பல்லோர்க்கும் ஈந்
திசையைக்
கொள்ளுமிகொண்டான் என்னே குமரேசா—தள்ளரும்
வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறுஅ விடின். (அ)

இ—ள்.

குமரேசா! பள்ளிகொண்டான் என்பவன் தன் செல்வ மூழுமையும் எல்லார்க்குங் கொடுத்து என்ன இசை கொண்டான் எனின், இசையென்னும் எச்சம் பெறுவிடின் வையத்தார்க் கெல்லாம் அது வசையாம் என்க.

இசை என்னும் எச்சம்—புகழ் என்னும் மகவு.

புகழ் என்னும் பிள்ளையைப் பெறுது ஒழிவாயின் உலகத்தார்க் கெல்லாம் அஃது ஒரு பெரு வசையாம் என்பதாம்.

தம்மை ஆக்கினவன் தருஞ்சினும் தாம் தருஞ்சாமல் எஞ்சி நின்று அவனது பெயரை மகவும், புகழும், நிலைபெறச்செய்யுமெனினும் முன்னதினும் பின்னதே நெடிது நின்று பெரிதும் விளக்குமாகலான் அதனையே உறுதியாக ஒருவன் பெறவேண்டும் என்பது கருத்து.

செல்வ முதலியன பெறுமை வசை அன்று, இசைபெறுமையே ஒருவனுக்கு வசையாம் என்பது குறிப்பு.

இசை என்னும் எச்சம் பெற்றவனே வசையற்றவனாவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பள்ளிகொண்டான் பால் காணப்படும்.

கதை.

பள்ளிகொண்டான் என்பவன் இற்றைக்கு நூற்றிருபது வருடங்கட்குமுன் பாண்டிய நாட்டிலே நெற்கழனி என்னும் பதியிலே விளங்கியிருந்தான். பாக்வர் பதினன். தானிகள்

கொண்டு வாணிகஞ்செய்தான். செல்வமும் கல்வியும் இவனிடம் சிறந்திருந்தன. இரந்துவந்தவர்க்கு இல்லை யென்னுமல் உவந்து ஈந்து உயர்ந்து வாழ்ந்தான். மக்கட்பேற்றினும் செல்வப் பேற்றினும் புகழ்ப்பேற்றையே உயர்வாக மதித்து அதனைப்பெரிதும் போற்றினான். இசை என்னும் எச்சம் பெற்றான். அதனால் இவன் பெயர் திசைதொறும் நின்றது. இவனது குணநலங்களை வியந்து புலவர் பலர்பாடி மகிழ்ந்தார்.

வள்ளிகொண் டான்பயில் வறிக்கொண் டான்மதி
போலுமலி
வெள்ளிகொண் டான்விளை பேறிக்கொண் டான்விண்
ணவர்க்கமுதம்
தெள்ளிகொண் டான்புள்ளில் வறிக்கொண் டான்சுப
சோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புகழ் வறிக்கொண் டான்என்று
பார்க்கவெண்பே.

(கையாண்டிப் புலவர்)

இசைபெற்றவனே உலகில் வசையற்றவன் என்பது இதனால் கூறப்பட்டது.

---

239. பண்டைவளங் குன்றியதிப் பார்என் றரசனுமுன்
கொண்டிருந்த போதுகுமரேசா—கொண்ட
வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். (கூ)

இ—ள்.

குமரேசா! நாகாசுரனைத் தாங்கியிருந்த காலத்தில் என் இவ்வுலகம் வளங்குன்றி இருந்தது எனின், இசையில்லாயாக்கை பொறுத்தநிலம் வசையில்லா வண்பயன் குன்றும் என்க.

வசைஇலா வண்பயன் குன்றும்—பழிப்பில்லாத செழிப்புள்ள விளைவு குறையும்.

குன்றும் என்னும் வினைபொருளின் தொழில் அது வினைதற்குரிய நிலத்தின்மேல் நின்றது.

நிலம்குன்றும்—நிலத்தில் தோன்றும் வினையுள் குன்றும்.

புகழில்லாத உடம்பைத் தாங்கிய நிலத்தில் பழியில்லாததும் செழிப்புள்ளதுமான வினைவு குறையும் என்பதாம்.

புகழில்லாதவன் இருக்கும் இடத்தில் வளமான பொருள்கள் வினையா என்பது கருத்து.

புகழில்லாதவன் தோற்றம் உலகத்துக்கே பெருங்கேடாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நாகசாரன் கதையில் உணரப்படும்.

கதை.

நாகசாரன் என்பவன் சோதிதம் என்னும் நகரிலிருந்து வரை புரிந்த ஓர் அசுரவேந்தன். தூவட்டாவின் புதல்வியாகிய கதே சுனன்பவளை மணந்து காதலின்பத்தைத் துய்த்தான். கொடிய குணமுடையவன். அஞ்சாதநெஞ்சினன். எஞ்சாத வலியினன். பிறர்க்கு இதம் புரிதலைச் சிறிதும் அறியாதவன். பெருங்காமி. பலநூறுயிரம் அழகிய இளங்குமரிகளைக் கவர்ந்து கொண்டுவந்து தன் நகரில்வைத்து வலிந்து துய்த்தான். தத்தங் கணவனையிழந்து இவனுல் சித்தங்கலங்கிய மாதர் பலர். வனையே இனையராக இவன் வளர்த்து வந்தான். இவன் இருந்த நிலப்பகுதிகளில் இடை இடையே கொடிய பஞ்சங்கள் தோன்றின. மக்களினவருமிக்க துன்புற்றார். திருமால்தான்றி இவனைக்கொன்று தொலைத்தார். அதன்பின் உலகம் மகிழ்ந்தது. அன்று எண்ணெயிட்டு சோடிப் பல்வகைச் சிற்றுணவுகளையுண்டு நல்லாடை புனைந்து எல்லாருங் களித்தார். இன்றும் அது நடைபெற்று வருகின்றது. அதுதான் தீபாவளியாம். இனையிலா நாகன் தொலைந்தபின் வனையிலா வளங்களை நிலந்தந்து நின்றது. (இது பாகவதத்தில் காணப்படும்) புகழ்இல்லாதவன் இருந்த இடமும் வினங்காதென்பது இதனால் கூறப்பட்டது.

(புகழ்

240. மண்டுபுகழ் நன்னன்சேய் வாழ்ந்தானன் னன்னனிகொண்டுபுறி நின்றான் எனினேனை குமரேசா — மண்திங்
வசையெபழிப வாழ்வாரே வாழ்வார் இசையெபழிப
வாழ்வாரே வாழாத வர். (வ)

இ—ள்

குமரேசா! நன்னன்சேய் புகழுற வாழ்ந்தான், நன்னன் வாழ்ந்துமென் என் இழ்வால் தாழ்ந்தான் எனின், வசை ஒழிய வாழ்வாரே வாழ்வாராவர்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் என்க. வசை—இகழ், இசை—புகழ்.

வசை ஒழிய வாழ்வார்—வசையின்றி வாழ்வார், என்றது புகழ் பெற்று வாழ்வானை என்க.

இசை ஒழிய வாழ்வார்—புகழ் பெறாமல் வாழ்வார்.

புகழ்பெற்று வாழ்பவரே உயிர் வாழ்பவராவர், புகழ் பெறாமல் வாழ்பவர் இறந்தவரேயாவர் என்பதாம்.

செல்வ முதலிய எல்லா நலங்களும் வாய்ந்து சிறந்து வாழ்பவனாயினும் புகழென்னும் மகளைப் பெறாவிட்டால் அவளை இறந்து தொலைந்தவளாகவே மதிக்கவேண்டும் என்பது கருத்து.

இவ்வாழ்க்கைக்குப் பயன் புகழ் ஒன்றே என்பதும் அதனைப்பெற்றவனே உயர்ந்தவன் என்பதும், பெறாதவன் இழிந்தவனேயாவன் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நன்னன்சேய் இடமும் நன்னன் கண்ணும் காணப்படும்.

கதை

நன்னன்சேய் என்பவன் வேளிர் குலத் தலைமையுடைய குறுநில மன்னன் புதல்வன். இவனது காலம் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முன்னர் என்பர். தொண்டை நாட்

டிலே செங்கண்மா என்னும் நகரிலேயிருந்து இவன் நல்லாசு புரிந்தான். அரசுக்குரிய உயர் குணங்களெல்லாம் இவனிடம் ஒருங்கே குடிகொண்டிருந்தன. அருந்திறலும் பெருங்கொடையும் திருந்திய பண்பும் பொருந்தி இசை திசை பரப்பி இன்புற வாழ்ந்தான். இவனது வீரம் ஈகை அருள் பூதலிய குணநலங்களை வியந்து புலவர் பாடியுள்ளனர். அவற்றுட்சில இங்கு எடுபில் வருவன:

தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவர் அருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகைமாரியும்
இருநிலம் நிழற்பிணிக்கும் ஆற்றலும் புகழொருங்கு
அரசுபுரிந்து கொடுப்பினும் அமரர் நோக்கெனின்
தூக்கணி பொழிந்த பொய்யா வானின்
வியர்த்து சுரக்கும் அவன் காண்மகிழ் இருக்கையும்

(பெருங்கௌசிகனார்)

பாடினர் செலினே,
அருங்கூறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் கன்னன்.

(அகநானூறு)

இன்னும், வசையொழிய வாழ்ந்த இவனை மாட்சியின்படைப்பு முழுதும் மகிழ்படுகடாம் என்னும் அரிய நூலில் இனிது காணப்படும்.

கதை 2.

மேற்குறித்த இசைக்குரிசிலின் தந்தையாகிய கன்னன் என்பவன் பெருஞ்செல்வம் பெற்றிருந்தமை இசை ஒழிய வாழ்ந்தான் ஒளவையும் மூனிந்து அவன்மேல் வசையொன்றுபாடினர். அதனால் வாழ்ந்திருந்தும் வாழாதவனைப்போல் தாழ்ந்து அவமதிக்கப்பட்டான். மகன்பெயர் திசைதொறும் நிற்பத் தன்பெயர் வசையுற்றழிந்தது. வசையொழிய வாழ்ந்தவனே பிறந்தவனாவான், அல்லாத

வன் பிறந்தும் இறந்தவனே என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

உயிருடன் இருப்பினும் புகழில்லாதவன் இறந்தவனேயாவன் என்பது இதனால் கூறப்பட்டது.

ஒருவன் திண்டு யாக்கை யூன்பயி னைசப்பின் யாத்த
உருவமும் புகழுமென்றுங் கவற்றி னீழ் காத்துவந் து
மருவிய வுருவமிங்கே மறைந்துபோ மற்ற யாக்கை
நிருவடார்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்குமன்றே.

(சூளாமணி)

(இவ்வதிகாரத்தின் தொகைப்பிலோருள்)

புகழ்பெறல் ஒன்றே இவ்வுலகில் ஒருவன் பிறந்துவாழ்ந்த தற்குப்பயன். புகழுடையதொருவனே எல்லோராலும் போற்றப்படுவான். அருஞ்புகழ் ஒன்றே அழியாது நிற்கும். புத்தேளுலகமும் புகழுடையாரையே பேணிமகிழும். தமது உடல்விடுத்தேனும் மேலோர் புகழுடம்படைப்பர் புகழ்பெறுதவன் பிறத்தலினும்பிறவாமையன்று. அவன் எல்லோராலும் இகழப்படுவான். எந்நலங்களைப்பெற்றிருப்பினும் ஒருவன் புகழ்படைத்தில்லனாயின் அவன் வசையுடையவனேயாவன். அவன் இருந்தநிலமும் வினவுகூறும். புகழுடையவனே என்றும் உயிருடன் வாழ்பவன், இலனாகுவன் இறந்தவனேயாவன்.

24-வது புகழ் முற்றிற்று.

துறவறவியல்.

உரிமை அதிகாரம் அருநூறாடையது.

அஃதாவது எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாகவே செல்லுகின்ற கருணை. அந்நற்புகழ்பெற வாழ்ந்து வருகின்றமேலோரிடமேபிறவுயிர்களைப் பேணும் இவ் அருநூறாடையை உரிமையாக

அமைந்திருக்கும் ஆகலானும் இல்லறத்துக்கு அன்புடைமை போல் துறவறத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாகலானும் இஃது ஈண்டு வைக்கப்பட்டது.

241. கொண்ட உடம்புங் கொடுத்தமேன் சீமுதன்
சொண்டான் அருளைக் குமரேசர்—கண்ட
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள (க)

இ—ள்,

குமரேசா! சீமுதன் என்பவன் தன் உடம்பையுங் கொடுத்து ஏன் அருள்கொண்டான் எனின், செல்வத்துட் செல்வம் அருட்செல்வமே பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள்ளன்க.

பூரியார்—இழிந்தார். அருட்செல்வம்—அருளால் வருஞ் செல்வம்; அஃதாவது பிறவுயிர்களைப் பேணி அதனால் எய்தும் மேன்மை.

செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வமாவது அருட்செல்வமேயாம்; பொருட்செல்வங்கள் இழிந்தாரிடத்தும் உள்ளன என்பதாம்.

புறத்தே யிருப்பதும் அழிவுள்ளதும் வருத்தத்தான் வருவதுமாகிய பொருட்செல்வத்தினும், அகத்தேயுள்ளதும் அழிவில்லாததும் இன்புறத்தான்றும் இயல்பினதுமாகிய அருட்செல்வமே ஒருவனுக்குச் சிறந்ததென்க.

சிறியாரிடத்தும் பொருந்திவறிதே கழியும் பொருட்செல்வத்தினும் பெரியாரிடத்தே தங்கி உயிர்கள் இன்புறுவுயர்ந்தோங்கும் அருட்செல்வமொன்றே சிறந்ததாகலான் அதனையே ஒருவன் அடையவேண்டுமென்பது குறிப்பு.

பொருளுடையவரினும் அருளுடையவரே உயர்ந்தவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீமுதன்பால் உணரப்படும்.

கண்ணன்.

சிறுதவர்கன் என்பவன் மகததேசத்திலிருந்த ஒரு மந்திரி குமாரன். தன்னுயிர்போலவே மன்னுயிர் ஓம்பினான். பசம்பொடி முதலிய ஓர் அறிவுபிர்கட்குஞ் யாதேனுந் தீங்கு செய்யினும் அவன் விளைந்துசென்று அவைகளைக் காப்பாற்றி வருவான். ஒருநாள் தனியாக ஒரு மலைச்சாரலில் போய்க்கொண்டிருந்தான். அங்கே நாகருடனுக்கும் நாகர்களுக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொருவாரமும் வந்து உரிய இடத்தில் அமைந்திருக்கின்ற நாக குமாரனைக் கருடன் கவர்ந்துசென்று கொன்றுதின்னும். சிறுதன் சென்றிருந்த அன்று முறைப்படிவந்து மூன்றாங்கியிருந்த ஓர் இளங்குமரனைக்கண்டான். அங்கு நிகழ்ந்தவற்றினை அவனிடம் வினவியோர்ந்தான். கலங்கி நிற்கும் அவனது நிலைமையை நினைந்து மிகவும் இரங்கினான். அவனைக்காக்க விரும்பி அவன் போர்வையைத் தன்மேல் போர்த்துக் குமரனை யதன்போம்படி செய்து தான் குறித்த இடத்தில் படுத்திருந்தான். பெரும்பசியோடு வந்து கருடன் இவனைக்கவர்ந்து சென்று தங்கும் இடத்தில் தனித்துநின்று தனைமூழுவனைதும் நசையுடன் உண்டது. அதன்பின் உற்றுநோக்கி வேறொருவன் என்று தெரிந்து நீ யார் என வினவியது. உயிர்நீங்கும் நிலையிலிருந்த சிறுதன் இயல்பினைத் தெய்வ அருளால் அது தெளிந்தது. கருடன் வருந்தி சிறுதன் முன்னைபவுருவத்தை யெய்தும்படி திருமாலை வேண்ட அவனும் அடைந்தான். பொருட்செல்வத்தை ஒரு பொருளென மதியாது அருட்செல்வ நெய்த்த இம்மூவரை அமரரும் போற்றினர். அதுமுதல் அக்கருடனுமகாலையினை நடுத்து அருளுடன் சென்றது. தயாவீரன் என்று வடமொழியில் இவன் போற்றப்படுகின்றான். விரிவை ஆண்டுக் காண்க.

அருட்செல்வமேயெல்லாவற்றினுஞ் சிறந்தது என்பது இதனால் கூறப்பட்டது.

242. ஏமம் அருளொன்றே இன்றுணையாக் கொண்டுநின்றார்
கோமான் புத்தர் குமரேசா—தாமெங்
கல்லாற்றுன் நாடி யருளாள்க பல்லாற்றும்
தேறினும் அஃதே துணை. (2)

இ—ள்.

குமரேசா! புத்தர் அருள் ஒன்றையே துணையாகக்கொண்டு வன் உறுதியாக நின்றார் எனின், நல்லாற்றுன் நாடி அருள் ஆள்க; பல் ஆற்றுன் தேறினும் அஃதே துணையாம் என்க.

அஃதே—அவ் அருளே.

நல் ஆற்றுன்நாடி—நல்ல நெறியிலே நின்று ஆராய்ந்து. பல் ஆற்றுன்—பலவழிகளாலும்; அஃதாவது மதவேறுபாடு நூல் வேறுபாடு மக்களுடைய உணர்ச்சி வேறுபாடு முதலிய எல்லா வற்றாலும்.

நன்றுன நெறியிலே நின்று எவ்வகையாக ஆராய்ந்து தேறினும் அருள் ஒன்றே உயிர்க்கு உறுதுணையாக நிறகும் ஆதலான் அதனையே ஒருவன் தனக்கு உரிமையாகக்கொண்டு ஒழுகவேண்டும் என்பதாம்.

துணைபோல் காணப்படும் மனைவி மக்கள் ஒக்கல் பொருள் முதலியன எல்லாம் பெய்யாக ஆராயின் பொய்யாகமுடியும் என்பதும், அருள் ஒன்றே உயிர்த்துணையாய் ஒன்றி நிற்கும் என் பதும், அஃதே என்னும் பிரிநிலை ஏகாரத்தால் உணரப்படும்.

மேல், பொருளினும் அருளே சிறந்தது என்றார் இதில் அஃது என்றும் நீங்காது நின்று உதவும் என்றார்.

அருளுடையனாக ஒருவன் ஒழுகவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை புத்தர்பால் உணரப்படும்.

கதை

புத்தர் என்பவர் இற்றைக்கு இரண்டாயிரத்தைநூறு வருடங்கட்கு முன்னர் இப்பாத கண்டத்தின் வடபாகத்தில் கங்கை

யின் கிளைஞரியாகிய உரோகிணி என்னும் நதிக்கரையில் விளங்கி யிருந்த கபிலபுரம் என்னுந்திரு நகரிலே அரசு புரிந்த சுத்தோ தனன் என்னும் அரசனுக்குத் திருமகளை யவதரித்தார். இவர் தாய் பெயர் மாயாதேவி. மகன் பிறந்த எழாம்நாள் இவள் இறந் தாள். சித்தார்த்தன் என்று முதலில் இவர் பெயரிடப்பெற்று வளர்ந்து பருவமுற்றார். பலகலைகளையும் வழுவறக்கற்றார். இவ ரது உருவ அமைப்பும் வனப்பும் குணங்களும் காண்பவரெவர் க்கும் பெருங்களிப்பூட்டின. பேரருளுடையவர். சிறியபிரா ணிகள். சிறிது வருந்தினும் உடல் நடுங்கி இவர் உள்ளம் பதைப் பர். தேவதத்தன் என்னுந் தன்மைத்துனனோடு ஒரு பூஞ்சோ லையில் இவர் உலாவிக்கொண்டிருந்த பொழுது ஒரு பறவையை அவன் எய்தான்: அது தரையில் விழுந்தது. உடனே இவர் உள்ளங்கசைந்து ஓடியெடுத்து அதன் உடலில் பட்டுள்ள அம் பை யீர்த்தெறிந்து தனது அழகிய வாயால் ஊதி யூதி அதன் நோ வை யாற்றினர்: அது கலங்குவதைக்கண்டு இவர் கண்ணீர் சொரிந்தார். அது பிழைத்துச் சென்றபின் பெருமகிழ்வுற்றார். தேவதத்தனும் இவரது பேரருளுடைமையறிந்து பெரிதும் நாணி னான். நோய்வாய்ப்பட்ட ஒருவனையும், முதிர்ந்து தளர்ந்த மற் றொருவனையும், இறந்துகிடந்த வேறொருவனையும், ஒருநாள் இவர் கண்டார். இரங்கினர். பிணி மூப்புச் சாக்காடு நிரம்பிடதென்று இவ்வுலகை வெறுத்தார். பெருந்திருவையும் அரம்பையரிலும் சிறந்த அழகியாகிய யசோதரை என்னுநங்கை அருமை மகனை யையும் துறந்து அருளை துணையாகத் தவம்புரிந்தார். அதன் பின் இவர்புத்தர் எனப்பெயர் பெற்றார்.

இதன விரிவை நீலகேசி முதலிய நூல்களிற் காண்க.

அருளொன்றே உயிர்த்துணை என்பது இதனால் கூறப்பட்டது.

243. நாடனைநாட் கொண்ட நல்லருளால் தன்பகன்று
கூடினனின் பென்னே குமரேசர்—தேடும்
அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்ன லுலகம் புகல். (நா)

இ—ள்

குமரேசா! நாடன் என்பவன் ஒருநாள் கொண்ட அருளினுல் என் துன்பமகன்று இன்பமெய்தினென் எனின், இருள் சேர்ந்த இன்ன உலகம் புகுதல் அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை என்க.

இருள்சேர்ந்த இன்ன உலகம்—இருள்நிறைந்த துன்பவுலகம்.

அஃதாவது ஒருவனை நரகத்தை. நரகமாவது பாவிகள் தமது தீவினைப்பயனுகிய துன்பத்தை அனுபவித்துக் கழித்தற்குரிய இடம். அது, ஃகாரம், அதிகாரம், வீமம், சௌரவம், தாலம், கும்பிபாகம், தமசு, எனப்பலவகைப்படும். அவற்றுள் இங்கே குறிக்கப்பட்டது தமசு என்க. இஃது எப்பொழுதும் மிகவொருங்கிய இருளையுடையதாய்த் தன்னை அடைந்தவர்க்குப் பிறாறுத்தற்கரிய துன்பத்தைக் கொடுத்து நிற்கும்.

அருள் நிறைந்த நெஞ்சினையுடையார்க்கு இருள் செறிந்த துன்பவுலக மென்னும் நரகம் புகுதல் இல்லை என்பதாம்.

அருளுடையார்க்கு நரகம் இல்லையென்க. எனவே அருள் இல்லார்க்கு அஃது உண்டு என்பது பெறப்படும்.

மேல், அருளை ஒருவனுக்குத்துணை என்றுர் இதில் அதனையுடையார் மறுமையில் அடையும் பயனை யுணர்த்தினர்.

அருள் சேர்ந்த நெஞ்சினை அடைந்தபின் ஒருவன் நரகினையடையான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நாடன்பால் உணர்த்தப்படும்.

கதை

நாடன் என்பவன் நிடதமலை யருகில் கானதம் என்னும் ஊரில் இருந்த ஓர் வேடன். இவன் தனது குலமுறைமைப்படி அம்மலைச்சாரலில் வேட்டையாடச் சென்றுன். அங்குக்குப்பலாய் இருந்த புருவின் கூட்டங்களில் ஓர் அப்பை எய்தனன்.

அதனால் ஐந்து புலுக்கள் சொந்து விழுந்தன. அவை சிறைபடித்துத்துடிப்பதை இவன் அருகணைந்து கண்டான். உடனே உள்ளங்கலங்கிக் கண்ணீர் சொரிந்தான். எவ்வளவு கொடுமை செய்தேன் என்று ஏங்கியிரங்கினன். தன் வில்லை முறித்து வீசி யெறிந்தான். தன் பிறவினையை வெறுத்தான். அன்று முதல் எவ் வுயிர்க்குந் தீங்கு செய்வதில்லை யென்று துணிந்தான். அருள் சேர்ந்த நெஞ்சினனாய் ஆருயிரோடிப்பிணன். முடிவின்பமே முடிவில் அடைந்தான். அருள் சேர்ந்த நெஞ்சினனுக்கு இருள் நரகம் புகுதல் இல்லை என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது அருளுடையார்க்கு நரகம் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது

---

244. அன்றுநஞ்சை யுண்டும் அல்லலின்றி யேன்வசவர்
குன்றுஇன் புற்றூர் குமரேசா—என்றுமே
மன்னுயிர் ஓம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. (சு)

இ—ள்.

குமரேசா! வசவர் நஞ்சை யுண்டும் துன்பமின்றி என் இன்பமெய்திலர் எனின், மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு தன் உயிர் அஞ்சும் வினை இல்லை என்க.

மன்னுதல்—நிலைத்தல். மன் என்னும் அடையான் உயிரினது நித்தியத் தன்மை உணரப்படும்.

அருள் ஆள்வாற்கு—அருளையுடையவனுக்கு.

நிலைபெற்ற உயிர்களைப் பேணி அருளைத் தனக்கு என்றும் உரிமையாக உடையவனுக்குத் தன் உயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினை உண்டாகாதென்பதாம்.

பிறவுயிர்கள் அஞ்சுதற்கேதுவாகிய கொடுவினையை ஒருவன் செய்யின், பின் அவன் அஞ்சும்படி வந்து பற்றி அஃது அவனை வருத்தும் என்பது குறிப்பு.

அருளுடையவனுக்கு அஞ்சவருவதொரு துன்பம் யாண்டும் இல்லை என்பது கருத்து. இவ்வுண்மை வசவ தேவர் பால் உணரப்படும்.

கதை.

வசவ தேவர் என்பவர் வடநாட்டிலே மங்களாபுரி என்னும் நகரிலே மாதிராசர் என்பவருக்குப் புதல்வராய்ப் பிறந்தார். தாய் பெயர் மாதாம்பிகை. இவர், கங்காம்பை என்னும் ஒரு கன்னியை மணந்து இல் வாழ்க்கையிலிருந்தார். பிறரின் நோயைத் தன் நோய்போல் போற்றும் பேரருளுடையவர். செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருக்கும் பெருவண்மையுடையவர். இவர் இல்லில் இலக்கத்தெண்பதிறுபிரம் அடியவர் ஒரு நாள் உண்டு களித்தார். கொடியவரிருவர் கள்ள வேடந் தரித்து நல்ல அடியவர் போல் அவர் வரிசையில் மெல்லப் புகுந்து உண்ணத் துணிந்தார். உண்மை தெளிந்து அவரைப் பிறர் அடிக்கச் சென்றார். இவர் தடுத்து அவ்வேடதாரிகளை மெய்யடியவராகப்பாவித்து நல்லுணவூட்டி அனுப்பினர். இவர் மீது பொறாமைபுற்ற அரசன் ஒருவன் இவருக்கு நஞ்சை யூட்டினன். அதனை யுண்டும் அல்லலின்றி யிருந்தார். வெகுண்டு வந்த வெய்ய புலி ஒன்று இவரைக் கண்டதும் மெய் வணங்கி நின்றது. அஞ்சுதற்கேதுவாகிய தீவினை ஒன்றுமின்றி இவர் இன்புற வாழ்ந்தார். அருளுடையார்க்கு அஞ்ச வருந் துன்பம் இல்லை என்பதை உலகம் இவர் பால் ஓர்ந்தது. (இதன் விரிவை வசவ புராணத்தில் காண்க)

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனை இன்பமூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் தறம்பார்த்தபோகுமே.

(சீவக சிந்தாமணி.)

அருளுடையாளுக்குத் தீவினை யில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

245. கண்ட திருக்குறிப்பார் கல்லின்மேல் பாய்த்துமல்லல்
கொண்டிலர் முன் என்னே குமரேசா—மண்டுகின்ற
அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி. (ஈ)

இ – ள்.

குமரேசா! திருக்குறிப்புத் தொண்டர் கல்லின் மேல் பாய்த்தும் என் அல்லல்கொள்ளவில்லை எனின், அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை என்பதற்கு வளி வழங்கும் மல்லல் மா ஞால மே கரி என்பதாம்.

ஞாலம் என்பது ஆகு பெயராய் அதில் வாழுகின்ற மக்களைச் சுட்டி நின்றது.

வளி வழங்கும் மல்லல் மா ஞாலம்—காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய உலகத்தாரே சாட்சி. வளி—காற்று. மல்லல்—வளம். மா—பெருமை. ஞாலத்துக்கு அடையாய் நின்ற வளி, மல்லல், மா, என்னும் இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன்று எதுவாதலை யுய்த்துணர்க.

அருளுடையார்க்கு அல்லல் இல்லை; அதற்குச் சான்று, காற்று உலாவுகின்ற வளமுடைய பெரிய உலகத்தில் வாழ்வாரேயாவர் என்பதாம்.

பிறர்க்கு அல்லலைச் செய்தவரே அல்லலை அடைவர்; அருளுடையார் அதனை யாண்டும் செய்யாராதலான் அஃது அவர்க்கு இல்லையாயிற்று; இல்லாததொன்று என்றும் எவராலும் காணப்படாது; ஆதலான் அதனைக் கண்டு கூறுதற்கு உரியார் ஒருவரும் இலர் என்னும் துணிவால் "ஞாலங் கரி" என்றார்.

அருளுடையொருவன் அல்லலையடைந்தான் என்று உலகத்தில் ஒருவருங் கண்டதில்லை என்பது குறிப்பு.

அருளுடையான் தானே வலிந்து அல்லல் அடையவிரும்பி னும் அஃது அவனை யடையாது என்பது இதில் உணர்த்தப்பட் டது. இவ் வுண்மை திருக் குறிப்புத் தொண்டர் பால் கா ணப்படும்.

கதை.

திருக்குறிப்புத் தொண்டர் என்பவர் அறுபத்து மூன்று நா யன்மார்களில் ஒருவர். தொண்டை நாட்டிலே காஞ்சி மாநகரி லே பிறந்தார். இவர், ஆடை யொலிக்கும் வண்ணர் மரபினர். எவ்வுயிர் மாட்டும் தண்ணளி புடையவர். தமக்கு இயன்றவாறு பிறர்க்கு உதவி புரிந்து வந்தார். மன்னுயிர் ஓம்பி அருள் புரிந்து வரும் இவரது பெருந் தன்மையை உலகினுக் குணர்த்த விருப்பி இறைவன் ஓர் அடியவர் போல் வந்தார். குறிப்பு அறிந்து உத வி புரியும் இவர், அவரைக் கண்டார். அவரது மாசு படிந்த ஆ டையை வாங்கி வெளுத்துத் தர விரும்பினர். வேண்டிப் பெற் று வெளுத்து நிற்குங்கால் மழை விடாது பெய்தது. குளிரால் நடுங்குவது போல் அவர், உடல் ஒடுங்கினர். அவரது மெய் நடுங் கும் பொய்த் துன்பத்தைக் கண்டு இவர் பொறுத்து வருந்தினர். அவரைப் பேணமுடியவில்லையேயென்று நாணிக் கல்லின்மீது கடுகப் பாய்ந்தார். நில்லென இறைவன் ஒல்லெனத் தோன்றி யின்னருள் புரிந்தே தன்னுருக் கரந்தார். கல்லிடை மோதியும் இவர் அல்லலில்லாதவராய் அகமகிழ்ந்து வெய்திப் பின் பேரின்ப மெய்தினர். குறிப்பறிந்து பிறவுயிர்கட்கு அருள்புரிந்தமையான் இவர் திருக் குறிப்புத் தொண்டர் எனப் பெற்றார். அருளாள் வார்க்கு அல்லல் இல்லையென்பதை இவர் அன்று காட்டி நின்றார். இதன் விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

அருளுடையார்க்கு அல்லல் இல்லை என்பது இதனால் கூற ப்பட்டது.

---

246. அன்றென் சமணர் அருணீங்கி யல்ல செய்தார்
குன்றினர் பின்பேன் குமரேசா—என்றும்
பொருணீங்கிப் பொக்கசந்தா ரென்பர் அருணீங்கி
அல்லனை செய்தொழுகு வார். (சுக)

)— ள.

குமரேசா! முன்னர் அருளை ஒழிந்து அல்லன செய்த சமணர் என் பின்னர் அழிந்தார் எனின்; அருள் நீங்கி அல்லன்வ செய்து ஒழுகுவார் பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் என்க.

அல்லனவ—தாமினமைகள். பொச்சாப்பு—மறதி, நீது.

பொருள் என்றது இங்கே உறுதிப் பொருளாகிய அறத்தை என்க. மெய்ப் பொருள் எனினுமாம். பொச்சாந்தார்—மறந்தவர்

அருளைத் தவிர்ந்து கொடுமைகளைச் செய்து ஒழுகுவார் உறுதிப் பொருளை இழந்து தாம் பின் வருந்துகின்றமையை மறந்தவர் என்று நல்லோர் சொல்லுவர் என்பதாம்.

அருளிழந்து தீமைகளைச் செய்வோர் பொருளிழந்து பின் கெடுவர் எனவும் இது பொருள்படும்.

பிறர்க்குத் தீமை செய்யின் அது, தமக்கே யாம் என்பதை மறவாதவர் அருள் நீங்கி அல்லனவ செய்யார்; ஆதலான் செய்து தொழுகுவார் பொச்சாந்தார் என்க.

அருளில்லாதவர் அறமும் பொருளும் இழந்து பெருந் துன்பும் அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சதமன் சமன் முதலிய சமணர் பால் காணப்படும்.

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடலிபுரத்தில் சமணர் பலர் குழுமி இருந்தனர். அவரனைவரும் கொல்லாவிரதங் கொண்டவராயிருந்தும் செற்ற மிகுதியால் அருள் நீங்கி திருநாவுக்கரசு நாயனாருக்குக் கொடுமைகள் பல செய்தனர். அது தன் பயனை உறுதிப்பொருள் முழுதும் இழந்து அல்லலிலபடைந்தார். அவருட் சிறந்தவராயிருந்த சதமன் சமன் முதலிய குருமார் பலரையும் உண்மை தெளிந்த அந்நாட்டு வேந்தன் ஒறுத்த கற்றினன் அது முதல் அவரெல்லாரும் சிதறுண்டு அழிந்தார்.

அருள் நீங்கினர் பொருள் நீங்கிப் புன்மையுறுவர் என்பதை உலகம் இவர் பாலொர்ந்தது.

(இதன் விரிவை அவர் சரிதையில் காண்க.)

அருளில்லாதவர் உறுதிப் பொருளையிழந்து பின் வருந்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

247. அன்றறிவாம் என்னாது அஞ்சுக தன்னை யறிவார்முன்
நின்றளிந்தான் என்னே குமரேசா — நன்றும்
அருளில்லார்க் கவ்வுல கமில்லை பொருளில்லார்க்
கிவ்வுல கமில்லாகி யாங்கு. (எ)

இ — ள்.

குமரேசா! காமந்தன் என்பவன் அவ்வுலகில் இன்பம் சிறிதும் பெறுமல் என் பெரிதும் வருந்தினன் எனின், பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லையானைற் போல அருள் இல்லார்க்கு அவ்வுலகில் இன்பம் இல்லை எனக.

அ என்னும் சேய்மைச் சுட்டு துறக்கத்தைச் சுட்டி நின்றது. முத்தியை எனினுமாம். அவ்வுலகம் இவ்வுலகம் என்பன இடவாகு பெயர்களாய் ஆண்டும் ஈண்டும் அனுபவிக்கப்படும் இன்பங்களைக் குறித்து நின்றன.

இல் ஆகி ஆங்கு — இல்லையாயினற்போல்.

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லையாயினற்போல அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகில் இன்பம் இல்லை என்பதாம்.

பொறிகளின் நுகர்ச்சிக்குரிய உணவு உடை முதலியன எல்லாம் பொருளானே உளவாம், அஃதின்றி இல்லையானால் அவை யாவும் இலவாம்; ஆதலான் பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்து இன்பம் இல்லையாயிற்று என்க.

அவ்வுலக இன்பங்கட்கு அருளே காரணம் என்பதை உணர்த்தற்குப் பொருளை எடுத்துக் காட்டினர் அதன் இயல்பு எல்லார்க்கும் எளிதில் தெரியும் என்பது கருதி.

அருளில்லாதவனுக்கு அவ்வுலகத்து இன்பமில்லை யென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை காமநந்தன்பால் காணப்படும்.

கதை.

காமநந்தன் என்பவன் சித்துரு வன் என்னும் ஒரு தனவணிகன் புதல்வன். தாய் பெயர் சுசீலாசனை. இவன், சூடும்பினி என்னும் ஒருத்தியை மணந்து இல்வாழ்க்கை புரிந்தான். பொருள் வளமுடையவனாயிருந்தும் உளத்தில் அருள் சிறிதும் இலனாய் உயிர்களருகு அல்லலே செய்தான். பேதியமிராவதி தீதுறக் கொன்றான் தன் செல்வமெல்லாமிழந்தான். பின், பரிதாபமெலிந்து முன்னைய நிலைமையை யெண்ணி யெண்ணி யேங்கினான். இறுதியில் இறந்தொழிந்தான். அவ்வுலக இன்பம் இலனாய் நரகில் பெருந்துன்பமெய்தினான். பொருளாசையால் இங்குப் பெருமை யெய்தியிருந்த இவன் அருளின்மையால் அங்குச் சிறுமையை யடைந்தான். (இதன் விரிவை விநாயக புராணத்தில் காண்க)

அருளில்லாதவனுக்கு மறுமை யின்பமில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

---

248. அற்றபொருள் பூத்தார்பின் ஐவரத்த நூற்றுவரோன்
குற்றமுற்றே தாழ்ந்தார் குமரேசா—உற்ற
பொருளற்றூர் பூப்ப வொருகால் அருளற்றூர்
அற்றூர்மற் றூதலரிது. (அ)

இ—ள்.

குமரேசா! முன் இழந்த பொருளைப் பின் ஐவர் பெற்றார்; என் நூற்றுவருங் குற்றமுற்றே தாழ்ந்தார் எனின், பொ

ருள் அற்றூர் பூப்பர் ஒருகால் அருள் அற்றூர், அற்றூர் மற்று ஆதல் அரிது என்க. பூப்பர்—தோன்றி விளங்குவர்.

அருள் அற்றூர் அற்றூர் மற்று ஆகல் அரிது—அருள் இல்லாதவர் அழிந்தாரே யாவர் பின் என்றும் ஆதல் இல்லை.

மற்று என்பது அற்றூர் என்னும் விகுதிக்கு மறுதலைபாய் அற்றூர் என்பதை விளக்கி நின்றது ஆகலான் ஆம்து இங்கு விகாரமாற்றின் தண் வந்தது. மற்று ஆதல் அரிது—அழியாமல் ஆதல் இல்லை.

பொருளை இழந்தவர் பின் அதனை ஒருகால் பெறினும் பெறுவர் அருளை யிழந்தவர் அழிந்தாரே யாவர் பின் என்றும் ஆதல் இல்லை என்பதாம்.

இம்மை மறுமை இன்பங்கட்குப் பொருளும் அருளும் முறையே காரணமாமென்று மேலே கூறினார் இதில் அதனினும் இது சிறந்ததென்பதை பெதுவான் விளக்கினர்.

பொருள் இல்லாதவன் அதனையுடையர் எய்தும் பெருமையையுணர்ந்து தானும் முயன்று ஒருகால் அதனை பெறுதலுங் கூடும்; அருளில்லாதவன் பொறுமையே மிகுந்து தனிவன்று மின்றி முடிவில் அழிவையெய்தி ஒழிவான் என்பதாம்.

வறியர் பொருள் பெறினும் கொடியர் நலமடைவதில்லை என்பது கருத்து. இவ்வுண்மை ஐவர்பாலும் நூற்றுவர் கண்ணும் அறியப்படும்.

கதை 1.

தருமர் முதலிய ஐவரும் நாடிழந்து காடுறைந்து வாடியிருந்தார். பதின்மூன்று வருடங்கழிந்தபின் இழந்த பொருளெல்லாம் எய்தப்பெற்று இவ்புற்று வாழ்ந்தார்.

கதை 2.

துரியோதனன் முதலாயினோர் பொருளுடையராய் இருந்தும் அருள் இல்லாராயினர். அதனல் கல்லாராணும் இகழப்பட்டு இழிந்தார். பெருமையெல்லாம் இழந்தார். சிறுமையுழுதும் அடைந்தார். இறுதியில் இழிவே யெய்தியழிந்தார். அவ்வுலகத்து இன்பம் யாதும் இன்றி நரகத்துன்பத்தையே கண்ணினைந்தார். பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர் என்பதும் அருள் அற்றூர் பின் ஆதல் அரிது என்பதும் முறையே இவ்விருதிறத்தார் கண்ணும் உலகம் கண்டு தெளிந்தது.

(விரிவு அவர் சரிதையில் தெளிவாம்.)

கலையெலாம் உணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென உயர்ந்தா னேனும் மனமய லன்ற னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய னையு னேனும்
இலகிய இரக்க மின்றேல் எழுநர கடைவ னன்றே.

(பதிபசு பாசவிளக்கம்.)

அருளில்லாதவர் இழிவேயெய்தி அழிவார் என்பது இதனல் கூறப்பட்டது.

---

249. அன்றுசதா னீகன் அறஞ்செய்தும் எனிழந்து
குன்றினன் இன்பம் குமரேசா—என்றும்
தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூல் தேரின்
அருளாதான் செய்யும் அறம். (கூ)

இ—ள்.

குமரேசா! சதானீகன் என்பவன் அறஞ்செய்திருந்தும் ஏன் அதன் பயனை யிழந்து துன்பம் எய்தினன் எனின், அருளாதான் செய்யும் அறம் தேரின், தெருளாதான் மெய்ப்பொருளைக் கண்டற்று என்க.

அருளாதான் — அருளில்லாதவன்.

தெருளாதான் — அறிவில்லாதவன்.

கண்டு அற்று — அறிந்தாற்போலும்.

மெய்ப்பொருள் என்றது பெய்த்நூல்களில் சொல்லப்படுகின்ற உண்மைப் பொருளை: நூற்பொருள் என்க. பரம் பொருளுமாம்.

அருள் இல்லாதவன் செய்யும் அறத்தை ஆராயின் தெளிவான அறிவில்லாதவன் நூற்பொருளை அறிந்தாற்போலும் என்பதாம்.

தெளிந்த அறிவில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளைக் காணினும் அம்மறு அவனுக்கு நிலையாதலால் நிறைந்த அருளில்லாதவன் அறஞ்செய்யினும் அதன் பயனை அவன் அடையான் என்பது கருத்து.

ஒருவன், புறத்தில் எத்தனை அறஞ்செய்யினும் அகத்தில் அருளில்லையாதலால் அவனுக்கு யாதும் பயனில்லை என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சதாணீகன் பால் உணரப்படும்.

கதை.

சதாணீகன் என்பவன் நாவலந்தீவின் மேல்பாகத்திலிருந்து அரசுபுரிந்த ஒரு முடிபுனை மன்னன். பெருவலி படைத்து நெறியுடன் ஆண்டவன். செயற்கரும் வேள்விகள் பல செய்து முடித்தான். அன்னதான முதலிய சிறந்த அறங்களைச் செய்தான். ஆயினும் குடிகளை வருத்திப் பெரும்பொருள் ஈட்டினான். இவனது அருளின்மையை நினைந்து அறிஞர்பலர் வருந்தினர். அதன் பயனாக இவன் அறப்பயனை இழந்தான். இறந்தபின் நரகத்தன்மையை யெய்தினன். அருந்தவராகிய பார்க்கவ முனிவர் எமபுரம் சென்றிருந்தபொழுது இவனைச் செக்கிலிட்டு எட்டபடர் சிதைப்பதைக் கண்டார். முனிவர் வருந்தியருகில் அணைந்தார்.

அரசே! நீ உறும் பல புரிந்தும் என் இப்பெருந்துபருறுகின் றுப் எனல்லு: முன்னர் அருந்தினலும் பெருந்திருவும் பெற்றிருந் தும் உருளிலனறிதினன். அதனல் எனது அறப்பயன் முழுதை யும் இழந்து இப்பெருந்துபருறுந்து பேதுறுகின்றேன் என்றன். முனிவர் இங்ங இந்திலவுலகில் வந்து அவன் மகனைச் சதுர்த்தசி விரதம் கொள்ளச்செய்து அதனல் அவன் தபோழிந்து உயர் நிலையடையும்படி செய்தார். அருளில்லாதவன் அறஞ்செய்யினும் அதனல் அவன் பயன் எய்தான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (இதன் விரிவைச் சிவபுராணத்தில் காண்க)

அருளில்லாதவன் அறம் புரியினும் அஃது அவனை அழியு மென்பது இதனல் கூறப்பட்டது.

250. தாசரதி முன்பரசு ராமன் தனைநினைந்து
கூசிஞன் பின்திபன் குமரேசா—கூசும்
வலியார்முற் றன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. (ய)

இ—ள்

குமரேசா! தாசரத ராமன் முன், பரசுராமன் தனது நிலையினையுணர்ந்து பின் பார்மாட்டிட்டு தீது செய்யாமல் என் அடங் கினன் எனின், வலியார் முன் தன்னை நினைக்க தன்னின் மெலி யார்மேல் தான் செல்லும் இடத்து என்க.

தன்னை நினைக்க—தனது நிலையினை எண்ணுக.

தன்னினும் வலியார், தன்னை நலிய வருப்பொழுது தான் அவர் முன் அஞ்சி நிற்கும் நிலையினை ஒருவன், தன்னினும் மெலி யார்மேல்தான் நலியச்செல்லுப் பொழுது நினைக்கவேண்டும் என்ப தாம்.

உடற்குத் துணையாகிய பொருள் முயற்சியாலும், உயிர்க்குத் துணையாகிய அருள் உணர்ச்சியாலும் உண்டாம் என்பது கருத்து

பிறர் கன்னை வருத்தவருங்கால் தன் நெஞ்சம் பதைத்ததை ஒருவன் உற்றுணர்வதறிவின் அவன் பிறவுயிர்களை நலியத்துணி யன் என்பது கருதி "வலியார் முன் தன்னை நினைக்க" என்றார்.

அருளுடைமையை ஒருவன் அடைதற்கு இது வழியா மென்ற.

தன்னுயிர்க்கு இன்ப நிலையை ஒருவன் உணர்ந்தபின் பிறவுயிர்கடகு அவன் துன்பம் புரியான் என்பது இதில் உணர்த் தப்பட்டது இவ்வுண்மை பரசுராமன்பால் உணரப்படும்.

கதை.

பரசுராமன் என்பவர் சமதக்கினி முனிவரது தலைமைப் புதல்வர். மாவின் கனியாய் வந்தவதரித்தவர். அருந்தவமும் பெருந்திறலும் அந்தாநெஞ்சமும் அமைபபெற்றவர். சூரிய குலத்தோன்றலாகிய கார்த்தவீரியனை இவர் தொன்றுவென்று தெளிந்து அவன் புதல்வராகிய சயத்துவசன் வீரசேனன் என் னும் இருவரும் வந்து இவரது தர்னை நலியத் தொன்று சென்றார். அதனால் இவர் பெருஞ்சினங்கொண்டார். அந்நில முழுவல்ல எல்லாரையுந் தொன்று தொலைத்தார். இருபத்தொரு தலை முறையாகக் கருவறுத்து வந்த இவர், தசரத இராமனையும் கண்டு சினந்தார் அப்போர் வீரனும் இவர் வன்மை முழுவதும் இழந்து புன்மையடைந்தார். அவர் முன் அஞ்சி நின்று நெஞ்சம் பதைத் தார். அவரது போற்றலை யிபந்து தொழுது விடைகொண்டு சென்றார். அதுமுதல் தன்னின் மெலியாரை நலியச் செல்லும் கொடுமை நீங்கினார். அருளுடையராய் அருந்தவம் புரிந்தார். வலியார் முன் தன் நிலைமையை நினைத்தவன் மெலியார்மேல் தான் நலியச் செல்லான் என்பது இவர்பால் தெளிய நின்றது.

(இதன் விளைவு இராமாவதாரத்தில் காண்க.)

இறப்ப நமக்கடுத்த வெவ்வேறா யாவும்
பிறர்க்குமஃ தாமென்று கொண்மின்—உறக்கருதி
வெவ்வா றுமக்குறுதி பெண்ணுறுதிர்நீர் வெல்லார்க்குஞ்
அவ்வாறே என்னைல் அறம். (பெருந்தேவனார்.)

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகுப் — அருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செனிஇ குப்த்து. (சிறுபஞ்சமூலம்)

தன்னுயிரைப்போலவே பிறவுயிர்களையும் பேணவேண்டு
மென்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

அருளுடைமையே செல்வங்களெல்லாவற்றிற்குந் ஒரு வ
னுக்குச் சிறந்த செல்வம். அருளே உயிர்க்கு உற்றதுணை. அதனை
யுடையார்க்கு நரகம் இல்லை. அவர் அஞ்சுதற்குரிய துன்பம்
யாண்டும் இல்லை. அவர்க்கு இம்மையில் அல்லல் ஏதும் இல்லை.
அருளிழந்து அல்லனவு செய்வோர் பொருளிழந்து பொல்லா
செய்துவர். அருளில்லாதார்க்கு அவ்வுலகத்து இன்பம் இல்லை.
அருளிழந்தவர் அழிதீமையடைந்துவர். அருளில்லாதவன் செய்யும்
யாறமுமபழுதாம். தன்னுயிர்போலவே பிறவுயிர்களையும் பேண
வேண்டும்.

25-வது அருளுடைமை முற்றிற்று.

உசும்-ம் அதிகாரம் புலான் மறுத்தல்.

அஃதாவது ஊன் உண்ணாமை. புலால்—ஊன். மறுத்
தல்—உண்ணாது விடுதல். தன்னுயிரைப்போலவே பிற உயிர்
களையும் பேணவும் அருளுடையார் கண்ணேதான் இவ்வுயர் நலம்
இயல்புற அமையும், ஆகலான் அதன்பின் இது வைக்கப்பட்டது.

251. அன்றென் அருளின்றி ஆதனென்பான் அன்றிலொன்றைக்
கொன்று சிதைத்தான் குமரோசா— நன்றுகத்
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். (க)

இ—ள்

குமரோசா! மருவிமகிழ்ந்த அன்றில் பறவையை ஏன் ஆதன் என்பவன் அருள் இல்லாமல் கொன்றான் எனின், தன் ஊனைப் பெருக்குதற்குதான் பிறிதின் ஊனை உண்பான் அருளை எங்ஙனம் ஆளும் எனக.

பகுவை உணர்த்தும் ஆ என்னுருஞ்சொல் ஆன் என நிற்றல் போல் ஊ என்னும் ஓரெழுத்தே ஒரு மொழியாய் அமைந்து தசையை உணர்த்தி னகரச்சாரியை பெற்று ஊன் என நின்ற தென்க. ஊ என் ஒரு பெயர் ஆகலாகு சிவஞானம்.

(தொல்காப்பியம்)

தன் ஊன் பெருக்கற்கு = தன் உடம்பைப் பருக்கச்செய்தற்கு.
பிறிது ஊன் உண்பான் = பிறிதொன்றின் உடம்பைத் தின்பவன்.
அருள் எங்ஙனம் ஆளும் = அருளை எவ்வகையான் ஆள்வான்?

எங்ஙனம் என்னும் வினா எதிர்மறையில் நின்றது.

தன் உடம்பைப் பருக்கச் செய்வதற்குப் பிறிதொன்றின் உடம்பைத் தின்பவன் எவ்வகையான் அருளினை ஆள்வான் என்பதாம்.

ஊனை உண்பவன் ஒரு வகையாலும் அருளினை உடையவனாகான் என்பது குறிப்பு.

தம் உடம்பைத் தாம் பேணுமாறு போல் பிற வுயிர்களும் அவற்றின் உடம்புகளைப் பேணுமென்னும் உணர்வில்லாமல் அவற்றைச் சிதைத்துத் தின்னும் கொடியோர்பால் அருள் ஒரு சிறிதும் உண்டாகாதென்பதாம்.

ஊனை உண்போன் அருளுடையனாகாது? என்பாரை நோக்கி இது கூறியுள்ளதாக அமைந்தமை காண்க.

புலாலுண்போன் இரக்கமின்றி உயிர்களை வருத்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை ஆதன்பால் அறியப்படும்.

கதை.

ஆதன் என்பவன் ஏமகூடம் என்னும் மலைச்சாரலில் இருந்த ஒரு வேடுவன். காடு புகுந்து விலங்குகளையும் பறவைகளையுந் தேடிக்கொன்று அவற்றின் தசைகளையே உணவாகக் கொண்டு வாழ்ந்தான். பிராணிகளெல்லாம் இவனைக் கண்டவுடனே கலங்கி நடுங்கும். ஒரு நாள் வில்லுங் கணையும் வாளும் கண்ணியுங்கொண்டு செழித்த வனமொன்றில் இவன் புகுந்தான். அங்கோர் உயர்ந்த மரக்கிளையில் பேடுஞ் சேவலுமாகிய இரண்டு அன்றில் பறவைகள் ஒன்றோடொன்று மருவி மகிழ்ந்து கொண்டிருந்தன. மூக்கால் கோதியும் சிறகால் அணைத்தும் கழுத்தோடு கழுத்துப் பிணைந்தும் இணைந்திருந்த அவற்றை இவன் கண்டான். காதலால் கனிந்திருக்கும் அவ் அழகிய பறவைகளின் தசையினை யுண்ண நசைமீக்கொண்டான். மறைந்து நின்று ஒரு கணையை விரைந்து விடுத்தான். அது பட்டது. உடனே அவற்றில் ஒன்று பதைத்து விழுந்தது. துணைபிரிந்த சேவலும் துடித்துச் சோர்ந்தது. அக் கொடிய காட்சியை வான்மீகி முனிவர் கண்டு பெரிதும் இரங்கினர். அருளின்றிக் கொன்று நின்ற அக் கொடியவனை வெகுண்டு வைதார். ஊன் உண்போனுக்கு அருளுண்டாகாதென்பதை உலகம் அவன் பாலுணர்ந்தது. (இதன் விரிவை வான்மீகத்தில் காண்க)

ஊன் உண்பவனுக்கு அருளில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

252 அன்றேன் உதிரன் அருளின்றி யந்தணனைக்
கொன்றானைத் தின்ற குமரேசா—என்றும்
பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்தின் பவர்க்கு (2)

இ—ன்

குடரோசா! உதிரன் என்பவன் அருளின்றி ஓர் அந்தணனைக் கொன்று என் தின்றான் எனின், பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லையாங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை என்க.

பொருள் ஆட்சி—பொருளினை ஆளுதல்;
அருள் ஆட்சி—அருளுடையனாதல்.
ஆங்கு—அது போல; இஃது உவமவுருபு.

பொருளால் பயன் கொள்ளுதல் அதனைப் பெறுதவர்க்கு இல்லையாயிறற் போல அருளால் பயன் பெறுதல் ஊன் தின்பவர்க்கு இல்லையாம் என்பதாம்.

புலால் உண்பவர்க்கு அருள் உண்டாகாது என்று மேற்கூறித்த உண்மையை இதில், உவமையால் விளக்கினர்.

இம்மை இன்பத்திற்கு எதுவாகிய பொருளும் மறுமையின்பத்திற்கு எதுவாய அருளும் முறையே போற்றுதலாலும் புலாலுணவைப் போக்குதலாலும் ஒருவனுக்கு உளவாம் என்பதாம்.

கருத்தூன்றிக் காவாமையால் பொருட் கேடும் புலால் மறுக்காமையால் அருட் கேடும் உண்டாம் என்க.

ஊன் உண்போனுக்கு அருளில்லை யென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உதிரன் பால் உணரப்படும்.

உதிரன் என்பவன் ஓர் அரக்கன். வசிட்ட முனிவனது கோபத்தால் நீங்காத சாபத்தை யடைந்தவன். அருந்தி யென்னும் மலையை யடுத்திருந்த ஒரு பெரு வனத்துட் புகுந்தான். அங்குள்ள விலங்கின் கணங்களைக் கொன்று கொன்று தின்றான். கொடுமையே மிகுந்தான். வனமெங்கும் திரிந்தான்.

ஒரு காள் புது மணம் புரிந்து தன் மனைவியுடனே அவ் வழியே வந்த ஓர் அந்தணனைக் கண்டான். அவனைத் தின்னக் கரு தினான். சினந்து போய்ப் பற்றினான். அவன் மனைவி நடு நடுங்கி அரக்கர் பதியே! என்று கூவி அவன் அடியில் விழுந் தாள். அழுது தொழுதாள். மங்கலப் பிச்சை தரும்படி தன் செங்கை குவித்தாள். உதிரன் அருள் சிறிதுமிலனாய் அவ னைக் கொன்றான். உதிரம் குடித்தபின் ஊன் தின்று சென்றான்.

தன்னனைய தடங்கண் நீர்முகந்துத் தடத்திற் றூவிட்
டொழுக நின்றிரங்கி
அன்றுனைத் திடுஞ் சொற் செவிக் கொளாதுகை யந்தணன்
மைந்தனை விரைவில்
கொன்றுடற் குருதி பிழிந்து மூன் குடித்துக் கொழுந்தசை
கறித்தகல்வாயின்
மென்றுடனருந்திப் பைந்தொடிக் கெதிராய் வெள்ளெலும்
பினைத்தையும் உமிழ்ந்தான்.

இக் கொடுமையைக் கண்ட மணமகளும் பதைத்து மாய்ந் தாள். ஊன் தின்பவனுக்கு அருளாட்சி யில்லையென்பதைத் துக் கொடிய உதிரன் அன்று காட்டி நின்றான். விரிவைப் பாகவ தத்தில் காண்க.

ஊன் தின்பவன் அருளினையாளான் என்பது இதனால் கூறப்பட்டது.

[ண்ணிக்

253. வில்வலன் வாதாவி யென்பார் மெய்த்தவர்க்குங்கெடு
கொல்வினையேன் செய்தார் குமரேசா—கொல்லும்
படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றாக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்.

இ—ள்.

குமரேசா! வில்வலன் வாதாவி என்பவர் என் முனி வர்க்குக் கெடுகொண்ணிக் கொலை வினையைச் செய்தாரெனின்

ஒன்றன் உடல் சுவை யுண்டார்ப் மனம், படை கொண்டார்தது நெஞ்சும் போல் நன்று ஊக்காதது என்க.

உடல்சுவை உண்டார் = உடலைச் சுவையுளதாக்கி உண்டார். படைனன்றது வில் வாள், தூண்டில் முதலிய கொலைக் கருவிகள். நன்று என்றது அருளை. எல்லா நன்மைகளுக்கும் அருளே காரணமாதலான் அஃது இங்கு நன்று என நின்றது.

ஊக்காதது = ஊன்றி நோக்காதது.

கொலைக்கருவியைத் தம் கையில் கொண்டவர் நெஞ்சம் கொலையையே நோக்குவதல்லது கொல்லாமையை நோக்காது அதுபோல் பிறிதொன்றின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ்வூன் உணவையே நோக்குவதல்லது அருளை நோக்காது என்பதாம்.

விழிகளால் எளிதில்காணப்படுமென்பது கருதி உடல் உண்டார் இயல்பை விளக்குதற்குப் படைகொண்டானை உவமை காட்டினர்.

புலி, ஓநாய், முதலிய கொடிய விலங்குகள் போல் கண்ட படியே உண்ணுமல் ஈன ஊனை இன் சுவைத் தாக்கியே அருளில் மக்கள் உண்பர் ஆதலான் "சுவை உண்டார்" என்றார்.

ஊனை உண்போர், என்றும் தீவினைகளையே எண்ணுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை வில்வலன் வாதாவியென்னும் இவர்கள் பால் உணரப்படும்.

கதை.

வில்வலன் வாதாபி என்பவர் சூரபன்மனது தங்கையாகிய அசமுகியின் புதல்வர். தீமையும் வஞ்சமும் செறிந்த நெஞ்சினர். மாயைகள் பலவும் நேயமொடு பயின்றார். பிறவுயிர்களுக்கு இவர் நோயென வளர்ந்தார். பேயெனத் திரிந்தார். பறவைகளையும் விலங்குகளையுங் கொன்று தின்று களித்தார்.

மின்னர் மனிதர்களையுந் தின்ன விரும்பினர். அதனால் முன்னவன் முனிவன் போலவும் பின்னவன் ஆநி போலவும் வேடங் கொண்டு முனிவர் வாழும் வனங்களிற் புகுந்தார். முனி வடிவங்கொண்ட வில்வலன் வழியிடையிற் சூடனை யமைத்துத் தவம் புரிபவன் போலிருந்து வருகின்றவர்களை அழைத்து விருந்து செய்வதாகக் கூறி அவ் ஆட்டினைச் சமைத்து அவர் அறியாமல் ஊட்டினன். உடனே வயிற்றைக் கீறி வாதாவி வெளியே வருவான். இறந்து பட்டவுடம்பை அகன்பின் அவ் இருவரும் தின்னுவர். இவ்வாறு ஊனை விருப்பித் தீமையே புரிந்தார். உடல் உண்டார் மனம் அருளை நோக்காதென்பதை யிவர், அறியக் காட்டி இறுதியில் அகத்தியரால் அழிந்து தொலைந்தார். (இதன் விரிவைக் கந்த புராணத்தில் காண்க)

ஊன் உண்போர் தீவினைகளையே என்னுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

254. உற்ற அரிவிசயர் ஊன்றின்ற லாவமென்றோன்
கொற்றவைமுன் சொன்னர் குமரேசா—பற்றும்
அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். (சு)

இ—ள்

குமரேசா! ஊன் தின்னல் பாவமென்று என் காளிமுன் அரிவிசையர் சொன்னர் எனின், அருள் அல்லது, யாதுஎனின் கொல்லாமை கோறலே ஆகலான் அவ் ஊன் தினல் பொருளல்லது என்க.

அருள் யாதுஎனின் கொல்லாமையே, அல்லது யாதுஎனின் கோறலே எனக்கொண்டு காண்க.

அல்லது — அருளல்லது; கொடுமை என்க.
கோறல்—கொல்லுதல்.

அருளும் அல்லதும் யாது எனின் கொல்லாமையும் கோறலும் ஆம் என முறையே கொள்ளினும் அமையும்.

பொருள் என்றது இங்கே உருதிப் பொருளாகிய அறத்தை. பொருள் அல்லது—பாவம்.

அருள் கொல்லாமையாம்; அல்லது கொல்லுதலாம்; ஆதலால், அக் கொலையால் வரும் ஊனைத் தின்னுதல் பாவம் என்பதாம்.

அருளின்மையால் கொலையும், அக் கொலைப் பாவத்தால் ஊனும் உண்டாம் ஆதலால் அதனைத் தின்னை பாவமாம் என்க. ஊன் தின்போன், கொலைப் பாவியாய் அருளிழந்து இருள் நரகம் புகுவன் என்பது கருத்து.

ஊன் தின்னல் ஆகிய தீவினையை அருளுடையார் பானை டும் புரியார் என்பது குறிப்பு. இவ் வுண்மை அரிவிசயர்பால் அறியப்படும்.

கதை.

அரிவிசயர் என்பவர் வட மதுரையில் இருந்தவர். திருமாலிடம் பெருகிய அன்புடையவர். ஆருயிர் மாட்டுப் பேரருள் வாய்ந்தவர். இவர், ஒரு நாள் பெருமானைக் காணக் கருதிச் சகந்நாதத்துக்குச் சென்றார். இடையே ஒரு சோலையில் தங்கினர். அங்கிருந்த காளி தேவிக்குப் பலியிடும்படி ஒருவன் இரண்டு ஆடுகளைக் கொணர்ந்தான். இவர், அதனை உணர்ந்தார். வருந்தி யெழுந்து விரைந்து சென்றார். காளி பின் சென்றாள். இன்புறவுண்டு போம்படி இவரை அன்புடன் வேண்டினாள். நீ தேவியாயினும் ஊன் உண்ணுதும் பாவியாதலால் உன்னிடம் உணவு உண்ணேன் என்று இவர் மறுத்தார். இவரது அருள் மொழியைக்கேட்டுக் காளி பெரு மகிழ்வெய்தினாள். அன்றுமுதல் கொல்லா விரதங் கொண்டாள். அந் நாட்டு வேந்தன் கனவில் தோன்றி "இனிமேல் எனக்கு உயிர்ப்பலியிடும் வழக்கத்தை

பொருளும் செய்யுளாதிருக்கும்படி நீ செய்யவேண்டும்" என்று கூறினான். அரசனுரை விபரந்து அவ்வாறே செய்தான். அந்நாட்டாரனைவருமுண் தின்னல் விடுத்தார். உயர் நலம் அடைந்தார்.

(இதன் விரிவைப் பக்தமாலையில் காண்க)

ஊன் தின்னல் பெரும் பாவம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

255 பல்லோரை வேத்திரத்தில் பாவிபகன் தின்றேனை
கொல்லுரக காழ்ந்தான் குமரேசா—கொல்லுலகில்
உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ணை
அண்ணாத்தல் செய்யாத தள்று. (ரு)

இ—ள்

குமரேச! பகன் என்பவன் வேத்திரத்தில் பலரையுந் தின்று எம் அதனால் நரகினில் ஆழ்ந்தான் எனின், உயிர் நிலை உண்ணாமையுள்ளது; ஊன் உண்ணாமையின் அளறு அண்ணாத்தல் செய்யாது என்க.

உயிர் நிலை—உயிர், உடம்பில் நிலை பெறுதல்.

ஊன் உண்ணை—ஊனை உண்ணுவாராயின். உண்ணின் என்னும் வினையெச்சம் ஈண்டு உண்ணா எனத் திரிந்து நின்றது.

அளறு அண்ணாத்தல் செய்யாது—நரகம் வாயைத் திறவாது.

ஊனை உண்ணாமையாலேதான் சில உயிர்கள் உடலில் நிலை பெறுகின்றன; ஆ நிலை குலைய ஒருவன் அவற்றை உண்ணுவாராயின், அவனை விழுங்கிய நரகம் பின் உமிழ்தற்கு வாயைத் திறவாது என்பதாம்.

ஊன் உண்ணல் என்னும் தீவினையை மக்கள் செய்யவில்லையானும், ஆடு முயல் மான் முதலிய சில விலங்கினங்களும், கோழி குயில் கொக்கு முதலிய சில பறவையினங்களும், மீன் முதலிய சில நீர் வாழினங்களும், சிதைவின்றி நிறைந்து நெடிது வாழும் என்பார் "உயிர் நிலை, உண்ணாமையின் உள்ளது" என்றார்.

இனி, உயிர் எய்துதற்குரிய பேரின்ப நிலை ஊன் உண்ணாமையானே ஒருவனுக்கு உள்ளது எனவும் இது பொருள்படும்.

உயிர்களைத் துடிக்கக் கொன்று அவற்றின் உடல்களைச் சுவை செய்து உண்போரை நரகம் உண்ணும் என்க.

உண்டவூன் மீளாது அவர் வயிற்றிலிருந்தே யிழிந்து கழிதல் போல் அவரும் நரகினது ஆழ் வயிற்றில் அடங்கியே அழிந்து ஒழிவர் என்பதாம்.

ஊனை விழுங்கினவரை நரகம் விழுங்கி உமிழாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பகன் பால் காணப்படும்.

கதை.

பகன் என்பவன் ஓர் அசுரன். ஏக சக்கிரம் என்னும் பெயரினையுடைய ஒரு வனத்திலிருந்து ஆண்டுள்ள உயிர்களையெல்லாம் கொன்று அவற்றின் உடல்களைத் தின்று வாழ்ந்தான். அதனால் அங்குள்ள பறவைகளும் விலங்குகளும் தேய்ந்தன. அதன்பின் அதனை அடுத்திருந்த வேத்திரகீயம் என்னும் பதியுள் இரவில் புகுந்து எதிர்ப்பட்ட மக்களையெல்லாம் பதைக்கக் கொன்று பழிபடவுண்டான். அவன் ஊன் உணவால் உயிர்கள் நிலை பேறின்றி அழிவடைவதை அவ்வூரார் நோக்கி உள்ளம் கலங்கி ஆவனைப் பணிந்து வேண்டினர். நாள்தோறும் ஒரு சகடம் நிறைய அன்னமும், அதனை யீர்த்துவரும் இரண்டு பகடுகளும், ஓட்டி வரும் ஒருநரனும், முறை தவறுமல் அனுப்பும்படி பகன் கட்டளையிட்டான். என் செய்வார் பாவம்; அவரும் இசைந்தார். அவ்வாறே நடந்துவந்தது. வருங்கால், துரியோதனன் செய்த கொடுமைக்குத் தப்பிப் பிழைத்துத் தயங்கிய தருமன் முதலிய ஐவரும் அவ்வூருட் புகுந்தார். ஒதுங்கியிருந்தார். பகன் செய் கொடுமையால் அந்நகர்படும் அழிவை அறிந்தார். அவருள் வீமன் துணிந்தான். சகடத்தைச் செலுத்துபவனையத் தானே சென்று அவனைப் பொருது தொலைத்தான். அவனும் அழிந்தான். இழி நரகில் ஆழ்ந்து வெளிவராது அழுந்தினன். ஊன்

உண்பவனை நரகம் விழுங்கி உமிழாது என்பதை உலகம் அவன் பால் உணர்ந்தது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

ஊன் உண்பவன், என்றும் நீங்காத நரக துன்பத்தையே யுடையவன் என்பது இதனால் கூறப்பட்டது.

---

256. வில்லாடல் சூரனுக்கேன் மீன்சுமந்து கொண்டுதந்தார்
கொல்லாத தேவர் குமரேசா—எல்லாந்
தின்றபொருட்டாற் கொல்லா துலகெனின் யாருமே
விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல். (கூ)

இ—ள்.

குமரேசா! கொல்லாத தேவர் என் அசுரர்கட்கு மீன் கறைச் சுமந்து கொண்டுவந்து தந்தார் எனின், உலகம் தினல் பொருட்டாற் கொல்லாது எனின், விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல் என்க.

உலகு, தினல்பொருட்டால் கொல்லாது எனின்—உலகத்தார், ஊனைத் தின்னும் பொருட்டுக் கொல்லாராயின்.

உண்ணுதல் காரணமாக உலகத்தார் கொலை செய்யாராயின் பொருளுக்காக ஊன விலைசெய்வார் ஒருவரும் இலர் என்பதாம்.

கொலைப்பாவம் கொன்றவனைச் சேருமேயன்றி ஊன் தின்ற வனைச் சேராது என்பாரை மறுத்து இஃது உணர்த்திபதென்க.

ஊன் தின்பார் இல்லையாயின் இவ்வுலகில் கொலையினை சிறி தும் இலையாம் என்பது கருத்து.

ஊன் தின்போர் உண்மையானே கொலைப்பாவம் உளவாகின் றது என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இது ஏன் முதலாயினோர்பால் காணப்படும்.

கதை.

கொலைத்தொழிலைச்செய்யாத தேவர்களும் சூரன் ஏவலால் மீன்களை வாரிக்கொணர்ந்தார். ஊன் தின்னும் அசுரரில்லையாதலால் அமரர் அன்று மீன்கொண்டு தந்தார். அசுரர் தினற் பொருட்டால் கொன்றதேயன்றி அமரர் விலைப்பொருட்டால் மீன்களைக் கொல்லவில்லை. அம்மீன் கொலைக்கு அசுரர் ஊன்தின்னையே காரணமாயிருந்தது. அசுரர் அழிந்தபின் அமரர் அக்கொலைத்தொழிலைக் கொள்ளவில்லை. ஊன்தின்போர் இல்லையாதலால் உயிர்களைக் கொல்வோர் உலகில் இல்லையென்பது அவர்பால் அன்று உணரநின்றது. (விரிவு சரிதையில் தெளிவாம்)

ஊன் தின்னையே கொலைப் பாவத்துக்குக் காரணம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

257. ஊனென் றுணர்ந்த வுடன்வெறுத் தேன்உண்ணவில்லை
கோன்குமர தேவர் குமரேசா—தானை
உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். (எ)

இ—ள்

குமரேசா! குமார தேவர் ஊன் என்று உணர்ந்தவுடனே என் அதனை உண்ணுமல் வெறுத்து விட்டார் எனின், புலால் பிறிது ஒன்றன் புண்; அது உணர்வாரைப்பெறின் அதனை உண்ணாமை வேண்டும் என்க.

புலால் பிறிது ஒன்றன் புண்-ஊன் பிறிதோருடம்பின் புண்.

அது உணர்வார்ப்பெறின்—புண் என்னும் அவ்வுண்மையை உணர்வார் உண்டாயின். பெறின் என்றது அதனை உணர்வார் அரியர் என்பதை உணர்த்தி நின்றது.

உணர்வோர், ஊன் உண்ணர்; உணர்வில்லாதவரே அதனை உண்டு களிப்பர் என்க.

புலால் என்பது பிறிதோருடம்பின் புண்ணே என்னும் உண்மையை உணர்வாரைப்பெறின் அதனை உண்ணாது ஒழித்தல் வேண்டும் என்பதாம்.

தமது உடம்பில் புண் ஒன்று காணப்படின் அதனைத் தீண்டவும் கூசுகின்ற மக்கள் பிறிது ஒன்றன் உடம்பிலுள்ள தசைகுருதி நிணம் முதலியவற்றை அருவருப்பின்றித் தின்னுவதற்குக் காரணம் என்னையோ எனின் அறியாமையே யாம் என்பது கருத்து.

நரி கழுகு காய் முதலிய இழிந்த பிராணிகளே ஈனவூனை என்னாது உண்பனவாம்; அறிவமைந்த மக்கள் அதனை எவ்வகையானும் உண்ணலாகாதென்பது குறிப்பு.

சிறந்த அமுதத்தோடு கலந்திருப்பினும் ஊன் என்று உணரப்பெறின் அதனை அறிவோர் உண்ணார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குமாரதேவர்பால் காணப்படும்.

கதை.

குமாரதேவர் என்பவர் சுற்றேறக்குறைய இற்றைக்கு மூந்நூறு வருடங்கட்கு முன்னர்க் கன்னடதேயத்தில் மாகபுரி என்னும் நகரில் தோன்றியிருந்த ஒரு மன்னவர். இவர், அரியணையமர்ந்து இருநிலம் புரந்தார். திருவமைந்து நின்று பெருநலந்துய்த்தார். பதி, நிதி, முதலிய யாவுந்துறந்து பின் பல இடங்களுக்குஞ் சென்றார். எவ்வுயிர்களும் இன்புறும்படி இன்னருள் செய்தார். ஒருநாள் இவர், விருத்தாசலம் என்னும் பதியில் புகுந்தார். உச்சியம்போதில் அங்குப் பிச்சைக்குச் சென்றார். இவரை அடியவர் என்று கருதி ஒரு குடியானவன் இவர்கை நிறைய அன்னமிட்டான். அதனைப் பெற்றார். உண்ணுதற்குமுன் உற்று நோக்கினர். மீனின் ஊனை அதில்கண்டார். உண்ணாமல் எந்தியபடியே ஓர் நீர்நிலையை யணுகினர். உபிருண்டாக அருள் புரிந்தார். அது மீறுகி நீரில் தானே பாய்ந்தது. புலாலின் இழிவையும் அதனை உண்ணுவதால் வரும் பழி பாவங்களையும் குமாரதேவர்

அனைவருக்கும் உணர்த்தினர். உணர்ந்தவரெல்லாரும் ஊனுணவை யொருங்கே ஒழிந்தார். புலாலைத் துறந்து ஒன்றன் புண் என்று உணர்ந்தார், அதனை உண்ணேன் என்பதை அவர் உணர்த்தி நின்றார். (இதன் விரிவைத் தேவர் சரிதையில் காண்க.)

நாய்கழுகு கூளை நரிகாகம் ஈயெறும்பு
பேயினைவகள் ஆவி பிரிந்தவூன்—நேயமொடு
தானருந்தல் அல்லாது சற்காரியமனிதர்
தானருந்த லாவதோ சாற்று. (1)

ஊறுகா யாதினன்னில் உதித்ததோர் புழுக்கண்டாலே
வேறவே வீசிச்சிந்தை மெய்மிகக் குலைந்துற்றுயால்
நாறுமூன் புழுத்ததேனும் நனிமிக விருப்பியுள்ளந்
தேறிநீ புண்டவாறென் செப்புதி தெளிவிலாதோய். (2)

பிறிதோருடம்பின் புண்ணை என்று ஊனின் உண்மையை புணரவேண்டும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

258. ஊனென்று ணர்ந்த உடன்வகிட்டார் உண்ணேனென்
னோனைச் சினந்தார் குமரேசா—னெனச்
செயிரித்துலைப்பிரிந்த காட்சியார் உண்ணர்
உயிரிற்றுலைப்பிரிந்த ஊன். (அ)

இ—ள்.

குமரேசா! ஊன் என்று உணர்ந்தவுடனே வகிட்டார் உண்ணுதல் வெறுத்து அரசனை என்னைதார் எனின் செயிரின் தலைப் பிரிந்த காட்சியார், உயிரின் தலைப்பிரிந்த ஊனை உண்ணர் என்க.

செயிர்—குற்றம். தலைப்பிரிந்த—நீங்கிய.

நீக்கத்தை உணர்த்தும் பிரிவு என்னுஞ்சொல் இங்கே அனைடையுத்துவந்தது. இவ்வாறு வருவதை வடநூலார் உபசர்க்கம் என்பர்.

உயிரின் தலைப்பிரிந்த ஊன்—உயிரின் நீங்கிவந்த ஊன்; பிணம் என்றபடி.

குற்றத்தின் நீங்கித் தெளிந்த அறிவினையுடையார் உயிரின் நீங்கிய ஊனை உண்ணார் என்பதாம்.

படைமையும் கொடுமையுமுடைய அறிவிலிகளே ஊனைத் தின்னத் தினையுணராமல் அதனை உண்டுகளிப்பர் என்பது குறிப்பு.

ஊனைவது, உயிர்நீங்கிய பிணமே யென்று உணர்ந்து அதனை எவ்வகையானும் உண்ணாமல் ஒழிப்பவரே உயர்ந்தோர் என்பது கருத்து.

உணர்வுடையார் ஊனின் இழிவை உணர்வராதலின் அதனை யாண்டுந் தீண்டார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வசிட்டர்பால் உணரப்படும்.

கதை.

திருவயோத்தியிலிருந்து அரசுபுரிந்த மித்திரசகன் என்னும் மன்னவன் ஒருநாள் தமது முன்னோர்களை யெண்ணிப் பெருவிருந்து செய்தான். அதில், வசிட்டமாமுனிவரை முதன்மையாக வணங்கி அழைத்தான். முனிவர் வந்தார். அரசன் அவரை உபசரித்து உயர்ந்த ஆசனத்திலிருத்திச் சிறந்த உணவுகளைப் படைக்குமாறு செய்தான். அரசனுக்குப் பணிவனுகிய அரசன் ஒருவன் கரவாகவந்து உணவு செய்பவன்போல் அமைந்து ஒதுங்கியிருந்தான். அவ்வஞ்ச மனமகன் புனிதமான இனிய வுணவுகளோடு ஈன ஊனையும் இன்சுவைத்தாக்கிப் படைத்தான். முனிவர், உண்ணப்புகுமுன் அவ்வுண்மையை உணர்ந்தார். உண்ணுதொழுந்தார். அரசனை நோக்கிப் பெருஞ்சினங்கொண்டார். அரக்கனுகும்படி சபித்தார். வஞ்சமில்லாத மன்னனும் அஞ்சி வருந்தினன். தெயிர் நீங்கிவிட்ட அறிவினோர் உயிர் நீங்கி வந்த ஊனை உண்ணார் என்பதை முனிவர் உணர்த்தி நின்றார்.

(விரிவை விரோபக புராணத்தில் காண்க.)

உயிர்த்தோர் யாண்டும் ஊனை உண்ணார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

259. வெற்றிமிகு பிம்பசரன் வேள்வியினை எண்ணுதற்கும்
குற்றமென்றார் புத்தர் குமரேசா—உற்ற
அவிசொரிந்த காயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்த துண்ணாமை நன்று. (கூ)

இ—ள்.

குமரேசா! பிம்பசரன் என்பவன் செய்யும்வேள்வினையைத் தந்தது என் புத்தர் அது தீது என்று உரைத்தார் எனின், அவி சொரிந்து ஆயிரம் வேட்டலினும், ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று என்க

அவியாவது மந்திர முறையோடு தேவர்களை நோக்கி வேள்வித்தீயில் இடுகின்ற நெய் முதலிய இனிய உணவுகள். ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் இங்கு அத்தொகையினை யுடைய வேள்விசளைக் குறித்து நின்றது. வேட்டல்—ஓமப்செய்தல்.

ஆயிரம் வேட்டலின்—ஆயிரம் வேள்விகளைச் செய்தலினும். ஆயிரம் என்றது இறப்பவும பல என்னும் மிகுதிணைய விளக்குதற்கு என்க.

அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதினும் ஓர் உயிரினைத் தொலைத்து அதன் ஊனைத் தின்னாமை நன்று என்பதாம்.

பல்லாயிரம் வேள்விகளைச் செய்து அவற்றுள் யாதும் கொலைத்திலும் ஊன் உண்ணாமையான் ஒருவனுக்கு உளதாம் நலம் பெரிதாம் என்பது கருத்து.

ஊன் உண்ணாமை என்னும் இவ் ஓர் அறமே அரிய பயன்களையெல்லாம் எளிதிலுதவும் என்பது கருத்து. இது பிம்பசரன் பால் காணப்படும்.

கதை.

பிம்பசரன் என்பவன் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கட்கு முன்னிருந்தவன். சிறந்த ஓர் அரசன். கங்கையின் வடபாலிருந்த இராசகிருகம் என்னும் நகரத்திலிருந்து இவன் அரசுபுரிந்தான். கல்விகேள்விகளில் வல்லுநரான அமைச்சர் பலர் இவன்பால் அமர்ந்திருந்தனர். மனுநலமும் இனநலமும் மாண்புறப் பெற்றவன். அங்கநாட்டையும் வென்று அதனவரையுந் தன் குடைக்கீழ்த் தங்கவைத்தான். வருடந்தோறும் முறையாக அரசன் வேள்விகளைச் செய்துவந்தான். புத்தர் ஒருகான் இவனிடம் வந்தார். அரசே உயிர்ப்பலிசெய்து ஏன் இவ்வேள்வியைச் செய்கின்றாய். எவ்வகையானும் பிறவுயிர்கள் சிறிதும் வருந்தாவண்ணம் ஒழுகுவதே ஒருவன் அறிவுடைமைக்குப் பயனும். பல்லாயிரம் வேள்விகளைச் செய்து உயர்ந்த பதத்தையடைந்தவனிலும் ஓருயிரையும் கொல்லாத ஒருவனே சிறந்தவனான் என்று அருளுடன் கூறினர். அவரது பயனிறைந்த அருள்மொழிகளை அரசன் கேட்டான். அன்றுமுதல் வேள்வி செய்வதை விடுத்தான். வேட்டையாடலுந் துறந்தான். ஊன் உண்ணாமையென்னும் உயர்ந்த விரதத்தைக் கொண்டான். இவன் நாடுமுழுவதும் இந்நல்லறம் பரவியது. உயிர் செகுத்து உண்ணாமை என்னும் உயர் நலத்தால் இவ்வரசன் வேள்விப் பயனிலும் பெரும்பயனெய்தினன். ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்பதை அன்று நின்று காட்டினன். (இதன் விரிவைப் புத்த சரிதையில் காண்க.)

ஊனுண்ணாமை ஒன்றேனை ஒருவனுக்கு எல்லா நலங்களுந் தருங்கை உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

260. மண்டுபுகழ் நந்தனர் வான்மீகர் ஏனுலகம்
கொண்டுதொழ நின்றார் குமரேசா—கண்டதொன்
றுண்டோ புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். (ஐ)

இ—ள்.

சுமதேசா! நாதனரா, வானவர்கள் என்பவர் ஏன் எல்லா உயிர்களுக்கும் தொழப் பெற்றார் எனில், கொல்லான் புலாலை மறுத்தா ரென எல்லா உயிர்களுங் கைகூப்பித் தொழும் என்க.

அவிசையச் சொரிந்து வேள்வியைப் புரிந்திடும் ஓருயிரைக் கொன்று ஊனைத் தின்னுமை நன்றென்று மேற்குறித்ததை நோக்கி அவ்வேள்வியால் இந்திரபதம் முதலிய உயர் நலங்களை யெய்தலாமே இதனால் ஊது பயன் எப்பாற்கு இது கூறியதென்க.

கொல்லான் என்னும் எதிர் மறை முற்று இங்கு எச்சமாய் நின்றது.

கைகூப்பி என்றது தொழுதற்கு ஏதுவாகிய உலகையின் மிகுதியை உணர்த்துதற்கு என்க.

ஓருயிரையும் கொல்லாதவனுமாய் ஊனையும் உண்ணாத ஒரு வனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்பதாம்.

இவ்வாசிரியர் புலால் உண்ணாதவராயினும் இரக்கந் தவிர்ந்திலாமல் உயிர்களைக் கொல்லுவாராயின், ஆவர், யானை, குதிரை, கழுதை, பசு, மான், முதலிய சில ஊன் உண்ணாத விலங்கினங்களைப் போல் கருதப்படுவரே அன்றி, அருளுடையராய் மதிக்கப்படார் ஆதலான், எல்லா உயிரும் தொழும் உயர் நலம் அவர்க்கு இல்லை யாம் என்க.

கொல்லாமையும் புலால் உண்ணாமையுமாகிய இவ்விரண்டு நற்செயலும் ஒருங்கே யுடையார் ஒருவர்க்கு நிகழ்ந்து செய்யார் ஆதலான், அந்நற்செய கிளைத்து எல்லாவுயிரும் அவரைப் போற்றும் என்பதாம்.

மொலை துறந்து புலால் மறந்தவர், எல்லாராலும் தொழுதக்க பெரும் பேற்றை யெய்துவர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வின்மை நற்செயர் கண்ணுமே, வான்மீகி பாலும் காண்க்படுமே.

கதை 1.

நந்தனர் கொலைத் தொழிலும் புலைப்புசிப்புந் துறந்தமை போல் எல்லாவுயிர்களும் அவரை இன்புறத் தொழுதன. தில்லை வாழந்தணர்களந்ச் சிரமேற் கைகூப்பித் திரண்டு தொழுதனர்.

(விரிவை அவர் சரிதையில் தெளிக.)

கதை 2.

வேடர்களோடு கூடிக் களவு முதலிய கொடுந்தொழில் களைச் செய்து திரிந்த வான்மீகியார் மெய்புணர் வுடையராய்த் தெளிந்த பின் ஓருயிரையும் கொல்லாதவராய்ப் ஊன் உண்டலை யொழிந்து எவ்வுயிர்க்கும் இனியராய் அருளே செய்து அரிய தவத்தைக் கொண்டார். கொலையும் புலையுந் தவிர்ந்தபின் அவரை அமரரும் முனிவரும் அகமகிழ்ந்து தொழுதார். அருளுடையராய்ப் புலால் மறந்தவரை எல்லாவுயிருந் தொழும் என்பதை உலகம் இவர்பால் தெளிந்தது.

கொல்லாமையும் புலாலுண்ணாமையுமுடையாரை உலகமெல்லம் உவந்து தொழும் என்பது இதனால் கூறப்பட்டது.

உயிர்கள் ஓம்புமின் ஊன்வினைமுந் துண்ணாமின்
செயிர்கள் நீங்குமின் செற்றம் இகந்தொழிமின்
குதிகள் நல்லுருக் கண்டனர் மைதொழும்
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர். (வினயபதி.)

கொலையும் புலையுங் களவுந் தவிர்.

(ஔவை.)

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

தன்னுடம்புபருக்கப் பிறிதான்றின் உடம்பைத்தின்போன் கொடியனென யாவன். அவனுக்கு அருள் உண்டாகாது. அவன் மனம் தினமனையே யெண்ணும். புலால் உண்டல் பெரும் பாவம். ஊனுண்போனை நரகம் விழுங்கியுமிழாது. ஊன் தின்னையே கொலைப் பாவத்துக்குக் காரணம். ஊன் என்பது பிறிதோருடம்பின் புண்ணெனியன்று தெளிந்து அதனை யுண்ணாது ஒழிதல்வேண்டும்.

அறிவுடையார் அதனை யாண்டும் உண்ணார். பல்லாயிரம் வேள்வி னனைச் செய்வதினும் ஊன்றின்னாமை ஒன்றே நன்று. அருளோடு புலால் மறுத்தவனை எல்லாவுயிர்களுங் கைகூப்பித் தொழும்.

26—வது புலான் மறுத்தல் முற்றிற்று.

உஎ-ம் அதிகாரம் தவம்.

அஃதாவது மனத்தைப் புலன்வழிச் செலுத்தாது நிலைபெற நிறுத்தித் தன்னுயிர்க்கு உறுதியைத் தனிநின்று பொறுத்துப் பிற வுயிர்களைப் பேணும் பெருநலம். புலாலுண்டலேயொழிந்து தூய்மை யெய்திய மனமுடையார்க்கே இஃது இனிது அமைதலான் அதன்பின் வைக்கப்பட்டது.

---

261. உண்டி துறந்தார் உயிர்க்கிரக்கம் கண்ணுறுவ ரேனுங்
கொண்டு புரிந்தார் குமரேச—மண்டியென் றும்
உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் கு. (க)

இ—ள்.

குமரேச! கண்ணுறுவர் தான் வருந்தி நின்று என் பிற வுயிர்களைப் பேணினை னெனின், உற்ற நோயை நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும் ஆகிய அற்றே தவத்திற்கு உரு வென்க.

நோன்றல்—பொறுத்தல். உறுகண்—துன்பம்.

உற்றநோய் நோன்றல்—தமக்கு வருந்துன்பங்களைப் பொறுத்தல். அற்றே என்னும் சுட்டின் அடியை ஒட்டி நின்ற வகாரம் தேற்றப் பொருளைத் தோற்றி நின்றது.

தம் உயிர்க்கு வருகின்ற துயரைப் பொறுத்தலும் பிற உயிர்கட்கு ஒரு துயரும் செய்யாமையும் ஆகிய அவ் வளவினதே தவத்திற்கு வடிவம் என்பதாம்.

பசி பிணி பகை வெயில் பனி மழை முதலியவற்றால் தமக்கு உளவாந் துன்பங்களைப் பொறுத்தும் பிறவுயிர்கட்குச் சிறிதும் தீங்கு செய்யாமல் அருள் புரிந்து ஒழுகலே ஒருவர்க்குத் தவமாம் என்பது கருத்து.

பிறந்தபோதே உடனுறைந்தமைந்து உள்ளேயிருந்து ஓபாதெழுந்து நாளும் கலியும் பசிப்பிணியே உற்றதோய் என்றதற்கு இங்கு முதல் உரிமையாய் நின்றது. ஆதலான் அதனைப் பொறுத்தலே தவ இயல்பென்பதாம். ஆற்றவார் ஆற்றல் பசி ஆற்றல் என்றார் மேலும்.

புலனுகர்ச்சிகளில் புக்குழலாமல் மனம், நிலைபெறும் பொருட்டுச் சுவையுணவு துறந்து உறுதுயர் பொறுத்து ஆநிரைமாட்டு அருள்புரிந்தொழுகலே அருந்தவர் இயல்பென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கண்ணுவர்பால் காணப்படும்.

கதை.

கண்ணுவர் என்பவர் அப்பிரதிரதன் என்னும் முனிவரது புதல்வர். உயர் கலை பலவும் ஓதியுணர்ந்தவர். மரம் கொடி செடி முதலிய ஓரறிவுயிர்களையும் இவர், பேரருளுடன் பேணினர். நடந்து செல்லுங்கால் எறும்பு முதலிய சிறிய உயிர்களும் உறுகண் உறுமேயென்று இரங்கி ஒதுங்குவார். அரிய விரதங் களைக்கொண்டு பொறிகளையடக்கினர். தனிவனம் ஒன்றில் இனிதுற அமர்ந்தார். நிலையான்றிய சமாதியை நெடுது பயின்றார். உற்ற நோயைப் பொறுத்துப் பற்றற நின்றார். இவரது திருவுடம்பைப் புற்று மூடி வளர்ந்தது. பருவங்கள் பல கழிந்தபின் அதன்மேல் மூங்கில் ஒன்று தோன்றி வளர்ந்தது. இவரது தவமகிமையால் அது பெருவலியுற்றது. அதன் அருமையைப் பிரமன் உணர்ந்தார். முனிவரது புனிதமிக்க மனநிலையை வியந்து அதனை மூன்று விற்களாக்கித் தான் ஒன்றைக்கொண்டு மற்றையிரண்டில் ஒன்றை உமாபதிக்கும் ஒன்றைத் திருமாலுக்குங் கொடுத்தார். அம்மூன்றும் முறையே காண்டீபம் பிநாகம் சார்ங்கம் எனப் பெயர் பெற்றன. கண்ணுதற் பரமன், கண்ணுவர் கருதியவெல்

லும் அருளினர். அருந்தவருட் சிறந்தாராய் விளங்கி இவ் வுலகத்தினிருந்த காலத்தில் விசுவாமித்திரருந்து மேனகையிடந் தோன்றிப் போற்றுவாரின்றிப் புலம்பிய பழுத சருந்தலையைக் கண் டார். அருளுடன் எடுத்தார் ஆதரித்து வளர்த்தார். தான் வருந்தியும் பிறவுயிர்களைப் பேணிப் பெருந்தவமுடையராய் எல் லா உலகங்களையும் பொருந்தப் பெற்றார்.

(இதன் விரிவைத் தணிகைப் புராணத்தில் காண்க)

தவத்தின் தன்மை இதனால் கூறப்பட்டது.

---

262. வெம்பித் தவம்புரிந்தும் மெய்ப்பய னேனிழந்தான்
கும்ப கருணன் குமரேசா—நம்புந்
தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
யஃறிலர் மேற்கொள் வது. (உ)

இ - ள்.

குமரேசா! குப்பகருணன் வருந்தித் தவம்புரிந்தும் என் அதன் பயனை இழந்தான் எனின், தவமும் முன் தவம் உடை யார்க்கே ஆகுப்; அதனை அஃது இலார் மேற்கொள்வது அவ மம் என்க.

அதனை—அத்தவத்தை. அஃது என்றது முன் தவமுடை மையை. அவம்—வீண். மேற்கொள்வது—செய்ய முயல்வது

முன் செய்த தவமுடையார்க்கே தவம் பலகூடும்; அஃது இல்லாதவர் அத்தவத்தை மேற்கொள்வது வீண் என்பதாம்.

தவமும், என்பதிலுள்ள உம்மை அதன் பயனையும் சுட்டி நின்றது ஆதலான் அஃது இறந்தது தழுவிய எச்சவும்மையாம்.

தன்னை முன்செய்து பழகினவனுக்கே ஒருதாழில் இனி துற அமையும் அல்லாதவனுக்கு அது தன்கு அமையாது; அது

போல் தவமும், தன்னை முன் செய்தவள்ளவனுக்கே தடையின்றி முடிவுறும், இல்லாதானுக்கு இன்புற முடியாது என்க.

முன்னைத் தவமுடையார்க்கே தவம் இனிதாம்; இல்லாதார் மேற்கொள்வது அபாயம் என்றது இதுவரை தவஞ் செய்யாதவர் இப்பொழுதேனுஞ் செய்து பின் வருங்காலத்தில் முன் தவமுடையராய் அவர் அமைய வேண்டுமென்பது கருதி என்க.

முதல் நாள் இரவு ஒரு செய்யுளை மனனஞ் செய்தவனுக்கு மறுநாட் காலையில் அஃது எளிதாய்த் தோன்றுதல்போல் முன் செய்தவர்க்கே தவம் சிறந்து முடியும் என்பது கருத்து.

இனி, தவமொழுக்கமுடையார்க்கே தவவேடம் நல்லதாகும் அவ் வொழுக்கமில்லாதார் அதனை மேற்கொள்வது தீதாகும் எனவும் இது பொருள்படும்.

இதில் தவம் ஆகுபெயராய் வேடத்தைக் குறித்து நின்றது.

முன்னைய கல்வினையுடையார்க்கே தவம் இனிதாய் முடியும்; இல்லாதார் ஊக்கமும் ஆற்றலுமுடையராய் அதனை ஒருவாறு முடிப்பினும் அதன் பயனை இறப்பர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை குப்பகருணன்பால் உணரப்படும்.

கதை

இலங்கையர் வேந்தனுக்கு உடன் தம்பியாகிய குப்பகருணன், எல்லையும் அடக்கியாளுதற்குரிய உயர் நிலையினை அடைய விரும்பினன். உயிர்கள்மாட்டு அருளிலனாயினும் பொறிகளை யடக்கினன். கொன்றைமரக் கானம் என்னும் பெயரினையுடைய ஒருவனத்தையடைந்தான். உணவும் நீருந் துறந்தான். கோடைக்காலத்தில் கொதிக்கின்ற வெயிலிடை நின்றனன். மாரிக்காலத்தில் குளிர்கின்ற நீர்நிலை நின்றனன். ஒரு மனமுடையனாய்ப் பிரமனை நாடினன். அழலில் இருந்தும் மழையில் நனைந்தும் அருந்தவஞ் செய்தான். ஆண்டுகள் பதினாயிரம் மாண்டு கழிந்தன. அவன், மனந்தளராது நினைந்தே செய்தான். அவனது ஆற்

றலைபும் அருஞ்செயலிபும் அயன் விபத்து அவன் முன் தொன்றி னான். கும்பகருணா! நீ யெண்ணிவ கருதியன் பெயர்ந்தனென்றான். நன்முன முறைகடந்தாக அவன் நடியிருந்தான். உள்ளத்தில் யெள்ள விருப்பியது அதுவாயினும் "குன்றுக உறக்கமேடெனாது" என்று குழறிக் கூறினான். அயனும் உடனே கொதித்தெழுந் தான். அவனும் சொன்னதை நினைந்து குலைந்து நடுங்கினான். அருந்தவத்தை வருந்தி முடித்தும் அதன் பயனை யடையாதிழந் தான். முன்னைத் தவமிலார் முயல்றலும் தவம் இனிது முடி யாது. ஒருவாறு முடியினும் அதன் பயனை அடையாது அவர் அவமே அனைவர் என்பதை உலகம் அவன்பால் உணர்ந்தது.

இதன் விளைவை உத்தரகாண்டத்தில் காண்க.

அள்ளன் மதிவின் முழ்கிக்காம் அருப்பட்டினிபட் டலைந்தும் உள்ளந் தூய வில்லாருக் கொருகாரியமும் பலனாக

கள்ள மனச்செய் தவக்குப்ப கன்னன்க நதும் வரங்கொடுக்கும் வள்ளல் மலசோரன் இடைப்பெற்றவாத்தால் டாறுத்துயில்பெற் றான்.

(ஒட்டக் கூத்தர்.)

எத்தொழிலும் முற்பழக்க மின்றியெய்தா தறமென்னும்
இத்தையபான்றில்லை
அத்தொழில்முற் பழக்கமின்றிச் சாங்காலத் தடையுமோ
வறமன்றற்று
வித்திரம்வேண் டிற்பருத்திவிளைதத்தமுன்னம் நெய்யாமல்
மணஞ்செய்காலத்
தொத்ததுகில் வேண்டுமென எத்தையபோர் முயன்றலும்
முறைமோ நெஞ்சே. (நீதிநூல்.)

தவத்தை ஒருவன் தாழாது செய்யவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

263 வீணை தவப்புரிபா திவ்வி ருந்தார் சேந்தனர்
சோமனை சோமர் குமரேசா — தாணை
துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
பற்றறு யவர்கள் தவம். (க)

இ — ள்.

குமரேசா! சேந்தனர் சோமர் என்பவர் துறந்து தவஞ் செய்யாமல் என் இல்வாழ்க்கையே விரும்பி இருந்தார் எனின், துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மற்றையவர்கள் தவம் மறந்தார் என்க.

துப்புரவு — பொறிகளால் துய்க்கப்படுகின்ற உணவு முதலிய இனிய பொருள்கள். பற்றையவர்கள் என்றது இல்வாழ்வாரை.

துறந்தார்க்கு உணவும் பிறவும் உதவுதலை விரும்பித் தாம் தவஞ் செய்தலை இல்லறத்தார் மறந்தார் போலும் என்பதாம்.

இல் வாழ்பவன், துறந்தார்க்கெல்லாம் உணவும் உடையும் இடமும் உதவி முழுதேயன்றிம் என்பதுபட, துறந்தார், உணவு முதலின ஒரிரண்டுப் பொறிகளையடக்கிப் பட்டினி கிடந்து உயிர் போய் பொறுத்துப் பிறவுயிர்ப் போனபி அருளுடன் அடங்குவேயன்றி என்பதுபட, இதில் விளங்குதல் காண்க.

வேண்டிய எல்லாம் வேண்டியவாறே நல்லதக்க தவத்தைத் துறந்து சென்று விளைந்து செய்யாமல் பலர் என் இல்வாழ்க்கையில் இருந்து வருகின்றார் என்பானை நோக்கி யிது கூறியதன்க. இதனால் இல்லறத்தார் துறவறத்தார் என்னும் இருதிறத்தார் இயல்பும் ஒருங்கே தெரிக்கப்பட்டது. தவத்தின் பயனை இல்வாழ்வார் தம்புரிகின்று தானத்தால் எய்துவர் என்பது கருத்து. இது சேந்தனர் சோமர் எனனும் இருவர் பாலும் காணப்படும்.

கதை.

சேந்தனர் என்பவர் சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திலிருந்தவர். மனைவியென்னும் கன்னிகையை மணந்து

இல்வாழ்க்கையிலமர்ந்து எவ்வுயிர்க்கும் அன்புடையராய் இன்புடன் வாழ்ந்தார். தாம், முதலில் வணிகராய் இருந்தகாலத்தில் பட்டினத்தடிகள் இவரைத் தமது நிதியறைக்குத் தலைவராக்கினர். இவரும் அமைந்து அதனை உரிமையோடு போற்றினர். அடிகள் துறவடைந்தபோது, தம் பொருள் முழுவதையுந் தெருவிலே சூறையிடும்படி சொன்னர். அவ்வாறே இவர் செய்தார். பற்றற்று நின்றார். பல்லுயிர்க்கும் இரங்கினர். அடிகள் ஆசன்ற பின் இவரும் அந்நகரைவிட்டகன்று மனைவியோடு சிதம்பரத்துக்கு வந்தார். அங்குத் தங்கினர். பொருளை வருந்தி யீட்டினர். அதனால், விருந்தினரையுட்டினர். அருந்தவரைப் பேணினர். தவம் புரிதற்குரிய மன நிலையைப் பெற்றிருந்தும் அதனை மறந்து இவர், உயிர்கட்கு உதவியே புரிந்தார். தவத்தின் உயர்வை உணர்ந்திருந்தும் தாம் செய்யும் தானத்தையே விரும்பி இல்வாழ்ந்திருந்தார். இவரது உபகார நலத்தை உலகினுக்கு உணர்த்த விரும்பிச் சிவமூர்த்தி ஒருநாளிரவு இவர் வீட்டுள் நுழைந்தார். அங்கிருந்த கூழை, அன்புடன் உண்டார். மறுநாள் நில்லைப் பரமன் திருமேனி முழுதும் கூழமைந்திருந்தது. கண்டவர் திகைத்தார். உடனே "இது சேந்தனர் ஊட்டிய திருக்கூழ்" என்று ஒருசொல் சிறந்தெழுந்தது. கேட்டவரெல்லாரும் வியந்து சென்று சேந்தனைச் சேவடி வணங்கினர். அவரும், துறந்த வர்க்கெல்லாம் துப்புரவு நல்கிச் செப்பமுற வாழ்ந்தார்.

விரிவைத் திருமுறையில் காண்க.

கதை 2.

சோமர் என்பவர் தினகரன் என்னும் ஓர் அரசன்புதல்வர். அருளும் நீதியும் அமைந்த நெஞ்சினர். பெருங்கொடையாளி. உயிர்களுக்கு உதவிசெய்தலே தவமெனக் கொண்டார். உணவும் பிறவும் எவர்க்கும் உவந்து உதவினர். பற்றில்லாத உள்ளத்தைப் பெற்றிருந்தும் இல்லறத்தையே இவர் பற்றி நின்றார். தானஞ் செய்வதையே விரும்பித்தன் தவத்தையும் மறந்தார். எனைய் யாரும் இவரை அன்புடன் பாடினர்.

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்விணையிற் சாண்மின்—பழுதுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். (ஔவை.)

இல் வாழ்வார் தானத்தையும், துறந்தார் தவத்தையும் இனி து செய்யவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

264. ஏசிச் சிலரை யிழித்தார் திரிசங்கைக்
கோசிகரோன் காத்தார் குமரேசா—கூசாமல்
ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும். (சு)

இ—ள்.

குமரேசா! கோசிகர் சிலரை வைது கெடுத்தார் என் திரிசங்கை வாழ்த்திக் காத்தார் எனின், ஒன்னரைத் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும் என்க.

ஒன்னர்—பகைவர். தெறல்—கெடுத்தல். ஆக்கல்—உயர்த்தல். உவந்தார் என்றது நண்பரை.

பகைவரைக் கெடுத்தலும் நட்பினரை உயர்ந்தலும் தவஞ் செய்வார் எண்ணுவராயின் அவர்க்கு அவை எளிதில் உளவாம் என்பதாம்.

அருளமைந்த உளமுடையராதலால் தவஞ் செய்வார், தமக்குத் தீங்கு செய்யுங் கொடிய பகைவனையும் கெடுக்க எண்ணார் என்பது கருதி "எண்ணின்" என்றார்.

செற்றமும் பற்றும் நீங்கிய மனத்தினையுடைய தவத்தினர்க்குப் பகைவர் இவர், உறவினர் இவர், என்னும் பகுப்பு இல்லையாயினும் எதேனும் ஓர் ஏதுவால் உளராயின் முறையே அவரை அழிக்கவும் ஆக்கவும் அவர், வல்லுநர் என்பதாம்.

படியின் கடந்து உடல் வலிகுன்றி ஒடுங்கியிருப்பினும் தவமுடையார் எண்ணிய தெய்வமானே எல்லா வலிமைகளும் அவர் பால் நண்ணும் என்பது கருத்து.

தவத்தினரைப் பழைத்து இகழ்வோர் கேடுற்றழிவர், உவந்து புகழ்வோர் உயர்ந்து வாழ்வர் என்பது குறிப்பு.

செறுத்தாரை அழிக்கவும் சேர்ந்தாரை ஆக்கவும் தவவலியுடையார்க்கு இயலும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது கோசிகர்பால் உணரப்படும்.

கதை.

கோசிகர் அரசைத் துறந்து அடவியிற் புகுந்து தென் திசை நண்ணி அருந்தவம் புரிந்தார். அக்காலத்தில் திருவயோத்தியிலிருந்து செங்கோல் செலுத்திய சூரியகுலத் தோன்றலாகிய திரிசங்கு என்பவன் தனது குருவின் சாபத்தால் உருநிலைமாறி மனமிக மெலிந்து வனமெலாந் திரிந்தான். முடிவில் இவரை வந்து சுண்டான். பேருவகை கொண்டான். உவந்து தொழுதான். முனிவர், அவனது இயல்பினை முழுவதும் வினவியோர்ந்தார். இரங்கினர். அவன் அடைந்த சிறுமையை நீக்கி அவனை அமரருள் ஒருவனாக ஆக்க எண்ணினர். அதன் பொருட்டு வேள்வி ஒன்று செய்ய விரும்பினர். அங்குள்ள முனிவரை உடன்வர அழைத்தார். சிலர் மறுத்து இவரை அவமதித்தார். அவரனைவரும் இழிந்தவராக இவர், நினைந்தார். உடனே வேடுவர்களாயினர். காடுகள்தோறும் அலைந்தார். கேடுற்றிழிந்தார். அதன்பின் அரசனை நோக்கினர். "நீ போய்த் துறக்கத்தில் நில்" என ஏவினர். உடனே மன்னன் ஓங்கி யெழுந்தான். அவ்வுலகை யெல்லையிலடைந்தான். அங்குள்ள தேவர் அவனைப் புலையனென்று கருதித் தலைகீழாகத் தள்ளினர். அரசனும் புரண்டு அவனியிலிழிந்தான். அபயம் அபயம் என அஞ்சி அறற்றினான். முனிவர் தெரிந்தார். "நில் நில் நில்" எனச் சொல்லி விரைந்தார். அரசனும் ஆங்கே அமைந்து தொங்கினன். முனிவர் முனிந்தார். வான்முதலினைத்தையும் தானே படைக்கத் துணிந்தார்.

அவனது தவ வலிமையைக் கண்டு அமரரும் அஞ்சினர். மூவ ரும் மிடத்து அவர் முன்னே தோன்றினர். அடித்தாரை ஆகரிக் கும் அவனது வருவினையும் தவத்தையும் துதித்தார். பொறுத்த ருளும்படி அவனைப் புகழ்ந்து வேண்டினர். திரிசங்கை வானில் தனியிடமொன்றில் அவர் விரும்பியபடியே தங்கும்படி செய்தார். ஒன்னரைத் தாழ்த்தவும் உவந்தாரை உயர்த்தவும் தவமுடையார் எண்ணின் உடனே அவர்க்கு அவை உளவாம் என்பதை அனை வரும் அவர்பால் தெளிந்தார். (இதன் விரிவை இராமாயணத்தில் காண்க.)

இன்னும், இவர்பால் ஒன்னராகி ஒழிந்தாரும் உவந்தாராய் நின்று உயர்ந்தாரும் பலராவர்.

விஞ்சிய விசுவா மித்திர னீலை
யஞ்சிசால் அசம்பை அருஞ்சிலையாளன்
தஞ்சென நீடு தவத்தவர் தம்பால்
வஞ்ச மிழைத்தவர் வாழ்ந்தவர் மண்மேல். (சேதுபுராணம்.)

தவமுடையார் அழிக்கவும் ஆக்கவும் வலியர் என்பது இதனுல் கூறப்பட்டது.

---

265. பாலப் பருவத்தே பண்டதவம் என்முயன்றீர்
கோலவுப மன்யு குமரேசா—சீலமுடன்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (ந)

இ—ள்.

குமரேசா! உபமன்யு என்பவர் இளமைப் பருவத்தே ரன் பெருந்தவஞ் செய்தார் எனின், வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும் என்க.

வேண்டிய—விரும்பிய பொருள்கள். இது வினையாலணை யும் பெயர். ஈண்டு முயலப்படும்—இங்குச் செய்யப்படும்.

தவமே தம் பெருமம் என்று பெருதி அறிவுடையோரால் செய்யப்படும் ஆதலால் அதனைச் 'செய்தவம்' என்றார். இது செயப்பாட்டு விண்ணப்பொருளில் வந்த செய்வினை எச்சம்.

தவத்தால், விரும்பிய பயன்களை விரும்பியவாறே பெறுமையில் பெறலாம் ஆதலால், செய்யப்படுவதாய தவம் அறிவுடையோரால் இம்மையிலே முயலப்படும் என்பதாம்.

மேல், பனைத்தவரைக் கெடுதலும், அடுத்தவரை உயர்த்துவும் தவம் வல்லது என்றார்; இதில், அருளால் எண்ணியவெல்லாம் எண்ணியவாறே எய்தலாம் என்றார்.

> ஆக்கமும், திறனும், சிறப்பும், ஆயுவும், நலனும், மேலாம், ஊக்கமும், வீடும், எல்லாம், தவத்தினது ஊற்றம் அன்றே என்றார் பிறரும்.

எல்லாநலங்களும் தவத்தால் எய்தலாம் ஆதலால் அதனை இளமையிலேயே ஒருவன் விரைந்து செய்யவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உபமன்யு பால் உணரப்படும்.

கதை.

உபமன்யு என்பவர் வியாக்கிரபாத முனிவருடைய புதல்வர். வசிட்டருடைய தங்கையாகிய வசுமதி பால் பிறந்தார். வறுமை வளர வளர்ந்தார். மாவின் பாலையே காலும் பருகினர். தாய் இவரை எடுத்துச் சென்று தன் தமையனர் வீட்டில் சில காலம் தங்கியிருந்தாள். வசிட்ட பத்தினியாகிய அருந்ததியார் அங்கிருந்த காம தேனுவின் பாலை காலுங் கறந்து இவர்க்கு நன்கு கொடுத்தார். உண்டு மகிழ்ந்தார். பின், ஊருக்கு வந்தார். அப்பாலையே நினைந்து தாயிடம் அழுதார். என் செய்வாள் பாவம்! வசுமதி வருந்தி முன்னைத் தவமின்மையால் வறுமையில் வாடுகின்றமைக்குப் பால் எங்கிருந்து வரும் என்று மதலையை நோக்கி மனம் கவன்று மொழிந்தாள். உபமன்யு கேட்டார். எல்லா நலங்களையுந் தவத்தால் எய்தலாம் போலுமென்று துணிந்து வெளியே சென்றார். திருகூட மலையிலிருந்து இறைவனை நோக்கி

அருந்தவ முயன்றார். பருவங்கள் பல சடந்தன. முடிவில் பரமன் இவர் முன்னே தோன்றி வேண்டுவதென் என வேண்டிக் கூறினர். இவர், தமது தாய் தந்தையர் பொற்கலத்தில் வைத்துப் பாலடிசில் உண்ணவும், திருமகள் என்றுந் தம் இல்லில் உறையவும், இருமை இன்பமும் தாம் உரிமையிற் பெறவும், அருள்க என வேண்டினர் அவ்வாறே பரமன் அகமகிழ்ந்தருளித் திருப்பாற் கடலையும் இவர் விருப்புறத் தந்தார். உபமன்யு, தம் தவ நலத்தால், இம்மையில் எல்லா நலங்களையுந் துய்த்து மறுமையிலும் வேண்டியன வேண்டியவாறே எய்தி மேன்மையுற்றிருந்தார்.

(இதன் விரிவைச் சிவ ரகசியத்தில் காண்க).

ஆற்றலிற் றம்முடல் அலசப் பற்பகல்
தோற்றவ ரல்லரோ நுவலல் வேண்டுமோ
தேற்றுகி னீர்மையாலே தேவ ராகியே
மேற்றிசழ் பதந்தொறு மேவுற் றோரெலாம்.

(கந்தபுராணம்).

எவ்வணைப் பொருள்களும் ஈய வல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
இவ்வுல கத்திலஃ தியற்ற கின்றதே
உவ்வுட லெடுத்தபே ருறுதி யென்பதே.

(திருக்கூவப் புராணம்).

எண்ணியவெல்லாந் தவத்தால் எய்தலாம் என்பது இதனால் கூறப்பட்டது-

266. பண்டுபலர் சிற்றின்பம் பற்றச் சவுனகனே
கொண்டுதவஞ் செய்தார் குமரேசா—மண்டு
தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (கூ)

இ — ள்.

சுமதேசா! பலர் பொருள் இன்பங்களைச் செய்து நிற்ப என் சவுனகர் என்பவர் தவஞ் செய்யச் சென்றார் எனின, தவம் செய்வாரே தம் கருமம் செய்வாராவர்; மற்று அல்லார் ஆசையுட் பட்டு அவம் செய்வார் என்க. அவட்—ரு.

மற்று அல்லார் என்றது தவம் செய்யாதவரை.

செய்தல் என்னும் வினைக்கு மறுதலையாய செய்யாமையை உணர்த்தி நின்றமையின் மற்று இங்கு வினைமாற்றின்கண் வந்தது.

தவம் செய்வாரே தம் உயிர்க்கு இன்பம் செய்தலராவர் அல்லாதார் ஆசையாகிய வலையுட்பட்டு கேடுசெய்பவரே என்பதாம்.

உயிர்க்கு உறு துணையாய் நின்று பிறவியை ஒழித்துப் பேரின்பத்தைத் தர வல்ல தவத்தைச் செய்யாமல் பொறியின்பங்களை விரும்பிப் பொருள்களைப் பெற முயற்சி செய்வோர், ஆசையென்னும் பெருங் காற்றிலகப்பட்டு உணர்விழந்து சுழன்று மேலும் மேலும் பிறந்து பெருந் துன்பத்தையே மருவுவர் ஆதலால் தவஞ் செய்யாதவர் தமக்கே அவஞ் செய்வார் ஆயினர் என்க.

தமக்கு நன்மையை நாடுவோர் தவமே செய்யவேண்டுமென்பது குறிப்பு.

தவமே உயிர்க்கு இன்பம் பயக்கத்தக்கது; அத்தவத்தைச் செய்யாதவர் தமக்கே துன்பஞ் செய்தவராவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சவுனகர் பாலும் சையாதி பாலும் உணரப்படும்.

கதை.

சவுனகர் என்பவர் பிருகுமுனிவருடைய புதல்வர். வேத முதலிய கலைகளையெல்லாம் ஓதியுணர்ந்தார். உணர்வுமிகுந்தார். உருவம் பருவம் முதலியவற்றால் தம்மையொத்த அரசபுதல்வர் பலருடன்கூடி அகமகிழ்ந்திருந்தார். உலகப்பொருள்களால் உளை

வாம் இன்பம், நிலையில்லாதது என்றுமிதளிந்தார். உடனுறாம் இன்பத்தை வெறுத்தார் உயிர்க்குறாம் இன்பத்தை விரும்பினர். தனிவனம் ஒன்றில் இனிதுற அமர்ந்தார். வருந்தின்று ஈருந் தவஞ்செய்தார். இவருடன் இருந்த அரசகுமாரர் அனைவரும் பொருளின் இன்பங்களைப் பொருந்தச்செய்தார். சிற்றின்பங்களை முற்றுந்துய்த்தார். ஆசையுட்பட்டார். அரசராய் நின்றார். அவருள் சையாதி என்பவன் தன் அருமைமகளுடன் ஒருநாள் வேட்டைக்குவந்தான். சவுனகர் இருக்குந் தவனைஞ்சார்ந்தான். அரசன்குமரி அங்கிருந்த ஒருபுற்றினை உற்றுநோக்கினள். அதில் விழிகளின் ஒளியைக்கண்டாள். ஒருசிறு துரும்பையெடுத்தாள். அவ் ஒளி ஒன்றில் உருவக்குத்தினள். அஃது அப்புற்றாள் அடங்கியிருந்த சவுனகரது விழியாதலால், அவர் சிறிது வருந்தினர். அதனல் அவ்வனமுழுதும் இருண்டது. அரசனும் பிறரும் நடுங்கி அப்புற்றினையடைந்தார். உற்றதுணர்ந்தார். உடனே முனிவர் அடியில் அரசன் முடியுறப்பணிந்தான். சவுனகர் பொறுத்துத் தவநிலைநின்றார். சையாதி என்னும் மன்னன் தன் மகளை அம்முனிவருக்கே உதவித்தானும் மெய்யுணர்வுடையவளுய்த் தவஞ்செய்யவிருப்பினன். அமரர் தலைவனகிய இந்திரனும் வந்துவணங்கச் சவுனகர் தவஞ்செய்து உயர்ந்தார். உடனிருந்த அரசரும் பிறரும் பொருளின்பங்களைச்செய்து ஆசைவலையிற் பட்டு அல்லற்பட்டார். தவஞ்செய்வாரே தமக்கு நன்மைசெய்பவர் அல்லாதவரெல்லாரும் தமக்கே அவஞ்செய்தவராவார் என்பதை உலகம்இவர்பால் ஓர்ந்தது. (விரிவைப் பாரதத்தில்காண்க)

பொருளொடு போகம் புணர்த லுறினும்
அருளுதல் சான்ற அருந்தவஞ் செய்மின்
இருளில் கதிச்சென் றினியிவண் வாரீர்
தெருள லுறினுந் தெருண்மின் அதுவே. (வளையாபதி.)

தவஞ் செய்வாரே தம்முயிர்க்கு நன்மைசெய்வார் என்பது இதனல் கூறப்பட்டது.

267. மண்டு புகழ்ச்சிதை வாகீசர் வாசகர்சீர்
கொண்டனரோன் றண்பால் குமரேசா—மண்டிச்
சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் தண்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (எ)

இ—ள்.

குமரேசா! சிதை, வாகீசர், மாணிக்கவாசகர் என்னும் இவர்கள் தண்பம் எய்தியதால் என் மேன்மையை எய்தினர் எனின், சுடச் சுடரும் பொன் போல், நோற்கிற்பவர்க்குத் தண் பம் சுடச்சுட ஒளிவிடும் என்க.

நோற்கிற்பவர்க்கு—தவஞ் செய்வார்க்கு. இதிலுள்ளகில் என்னும் இடைநிலை அவர், அதனை ஆற்றும் ஆற்றலையுணர்த்தி நின்றது.

நீ, சுடச்சுட பொன்னுக்கு ஒளி மிகுமாறுபோல், தண்பம் வருத்த வருத்த தவஞ்செய்வார்க்கு மேன்மை மிகும் என்பதாம்.

பொன்னின் உவமையால் அவர் தன்மை புனைரப்படும்.

பொன்னைத் தீயிடைவைத்து உருக்கி அதனொடு கலந்து நின்ற மாசினை நீக்குவர்; அங்ஙனஞ் செய்தலைப் புடம் இடுதல் என்பர். புடம் இடுந்தோறும் பொன்னுக்கு ஒளியும் மாற்றும் உயர்ந் துதோன்றும், அதுபோல், தண்பந்தோயுந்தோறும் அருந்தவர்க் கு மேன்மையும் ஞானமும் மிகுந்து விளங்கும் என்பார் "பொன் போல் ஒளிவிடும்" என்றார்.

பசி முதலிய உற்ற நோயானும் பிறர் புரியும் மற்ற நோயா னும் வருந்த வருந்த அருந்தவர்க்குப் பெருமையும் ஞானமும் பொருந்தி மிகும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண் மை சிதை, அப்பர், மாணிக்கவாசகர், என்னும் இப்பெரியார்பால் காணப்படும்.

கதை.

சிதை என்பவர் மிதிலை வேந்தனாகிய சனகன் புதல்வி. திரு வின் கலையாய் இவ்வுலகிலவதரித்து இராமபிரானை மணந்து திரு

வயோத்தியிலிருந்து வாழ்ந்தார். இராமன் வனம் புகுங்காலே உடன் புகுந்தார். பஞ்சவடியென்னும் இடத்தில் அமைத்திருந்த இலக்குடிசையில் தங்கியிருந்தார். இராமனும் இலக்குவனும் நீங்கிய அமையம் பார்த்துவந்து இலங்கையர் வேந்தனாகிய இராவணன் இவரைக் காதலித்து எடுத்துச் சென்றான். சிறையிடை வைத்துத் தன் தீய எண்ணத்தைத் தெரிவித்தான். கற்புத் தெய்வமாகிய சீதை தன் நிறைவழுவாமல் நின்று இராமனை நினைந்து நெடுந்தவஞ் செய்தார். கணவனைப் பிரிந்து இலங்கையிலிருந்த காலத்தில் அவர் அடைந்த துன்பங்கள் பல. முடிவில் இராமன் வானரப்படைகளுடன்வந்து இலங்கையை வளைத்து அரக்கரினவரையும் இராவணனையுங் கொன்று வென்றி பூண்டபின் தன் மனைவியையுங் கொணருமபடி செய்தார். சிறையிடையிருந்த சீதையும் விரைவுடன் வந்து தம் கணவனைத் தொழுதார். இராமன், வெகுண்டவர்போல் நோக்கிப் பல வெம்மொழி பகர்ந்தார். அவர் குறிப்பின்படி சீதை தியிடைக் குதித்தார். தீங்கின்றி நின்றார். சிறந்து ஒளி மிகுந்தார். அவர், கற்பின் நலத்தையும் தவத்தின் திறத்தையும் எல்லாரும் புகழ்ந்து துதித்தார். சிறையிருந்து துன்பமெய்தியதால் சீதையின் அறிவும் பெருமையும் முன்னையினும் சிறந்து விளங்கின.

பொன்னைத் தீயிடைப் பெய்தலப் பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளல் தருதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியன் றுலகில்
பின்னைக் காட்டுதற் கரியதென் றெண்ணியிப் பெரியோன்.

இது, துன்பத்தால் வருந்தி நின்ற சீதையைத் தேற்றித் தசரதன் கூறியது.

கதை 2.

அப்பர், மாணிக்கவாசகர், என்னும் இவ் அருந்தவர் இருவர்க்கும் சமணரும், பாண்டியனும், செய்த துன்பங்கள் பல. அத் துன்பங்கள் வருத்த வருத்த அவர்க்கு மெய்யுணர்வும் மேன்மையும் மிகலாங்கி நின்றன. இவ்வுண்மையை அவர் சரிதையில் உணர்க.

வருந்த வருந்த அருந்தவர்க்குப் பெருஞ்சீர் உண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

268. மண்டிபுகழ் நந்திணைபோ லென்மனைவி லாமுவந்து
கொண்டுதொழு கின்ற குமரேசா—கொண்டுநின்ற
தன்னுயிர் தானறப் பெற்றுனை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். (அ)

இ—ன்.

குமரேசா! உயிர்களெல்லாம் நந்திணை என் உவந்து தொழுகின்றன எனின், தன் உயிரைத் தான் அறப் பெற்றுனை ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும் என்க.

தான் அறப் பெற்றுனை—தனக்கே முற்றும் உரிமையாகப் பெற்றவனை. என்றது புலன்களை அவாவி மனவசப்பட்டு அடிமை யாகாமல் தனது உயிரின் உயர் நிலையை ஒருவன் தனக்கே உரித் தாகக்கொள்ளலே. ஏனைய மன்னுயிர் என்றது தன்னுயிரைத் தனக் கு உரித்தாகப் பெறாத மற்றைய உயிர்களை. ஏனைய என்பது குறிப்புப் பெயரெச்சம்.

தனது உயிரைப் பொறிகளுக்கு உரிமைபாக்காமல் தனக்கே முழுவதும் உரிமையாக்கிக்கொண்டவனை மன்னுயிர்களெல்லாம் மகிழ்ந்து தொழும் என்பதாம்

பொய்ப் பொருள்களில் புக்குழன்று புன்மையுறுமல் மெய்ப் பொருளை அடைதற்கு எதுவாகிய தவத்தைச் செய்தவரே உயிர் பெற்ற பயனை யுற்றவராவர்; மற்றவரெல்லாம் பெற்றவரல்லர் என் பது கருத்து. புறத்தேயுள்ள பொருள் முதலியவற்றைத் தனக் கு உரித்தாகப் பெற முயல்வதினும் உள்ளேயிருக்கும் உயிரையே அவ்வகைபெற ஒருவன் முயலவேண்டுமென்பது குறிப்பு.

உடம்பு பெற்றவரெல்லாம் உயிரைப் பெற்றவரே யெனினும் அவ்வுயிர், உயர்நிலை யெய்தி மெய்ம்மின்பத்தைப் பெறும்படி உயர்வு பெற்றவனை அதனைத் தனக்கு உரித்தாகப் பெற்றவன் என்க.

தவத்தால், உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை உலகமெல்லாம் உவந்து தொழும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நந்தி தேவர்பால் உணரப்படும்.

கதை.

நந்திதேவர் என்பவர் சிலாத முனிவருடைய புதல்வர். தாய் பெயர் சித்திரவதியார். தமது பெற்றோர் செய்த அருந்தவத்தின் பெரும் பயனாக இவர் அவதரித்தார். அழகும் அறிவும் அமைதியும் வாய்ந்து எல்லாவுயிர்களும் இன்புற வளர்ந்தார். சைலாதி என்று முதலில் பெயரிடப் பெற்றார். பல்வகைக் கலைகளும் பயின்று தெளிந்தார். உலகப் பொருள்களில் உளப்பற்றற்றார். பொறிவழிச் செல்லும் சிறுமை அகன்றார். மனமொழி மெய்களை இனிதுற அடக்கினர். சிவமே துணையென்று தவமே புரிந்தார். உதிர் சருகு தின்றும் சிறிது நீர் பருகியும் உடல் வருந்தி நின்றார். பருவங்கள் பல கழிந்தபின் பரமன் தோன்றினர். வேண்டியது என் என வினவினர். "நின்பால் அன்பே என்பால் அருள்க" என இவர், வேண்டி வணங்கினர். அவர், அதை அருளி அகன்றார். அதன் பின்னும் இவர், அருந்தவமே செய்து அவர்பால் பெரு நலங்களெல்லாம் பெற்றார். பரமனைப்போலவே திருவுருவமைந்து என்றும் அழிவில்லாதவராய் எல்லாத் தெய்வங்களுக்கும் தலைமைத்தன்மையை யெய்தி சுயஞ்ஞை என்னுந் திரு மனைவியோடு பெருமகிழ்வுற்றார். திருக்கைலையில் நின்று சிறந்து விளங்கினர். அமரரும் போற்றும் உயர்ந்த பதவியில் அமரப்பெற்றார். ஆருயிர் அனைத்தும் இவரை அகமகிழ்ந்து தொழுதன. தன் உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை மன்னுயிரெல்லாம் மகிழ்ந்து தொழும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது.

(இதன் விரிவைச் சிவ புராணத்தில் காண்க.)

தவமுடையாரை உலகமெல்லாம் தொழும் என்பது இதனால் கூறப்பட்டது.

269. சாற்றுபுகழ் மார்க்கண்டர் சாருஞ் சுவேதனோன்
கூற்றினையும் வென்றூர் குமரேசா—சீற்றமிகு
கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு. (கூ)

இ—ள்.

குமரேசா! மார்க்கண்டர் சுவேதர்என்னும் இருவருமென் தமது தவத்தால் கூற்றையும் வென்றூர் எனின், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்குக் கூற்றம் குதித்தலும் கைகூடும் என்க.

கூற்றம்—எமன். இப்பெயர் உடம்புகளினிருந்து உயிரை வேறு பிரித்துக் கூறுபடுத்துவான் என்னும் ஏதுவான் வந்தது.

நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு—தவத்தினுலாகிய வலிமையைச் சார்ந்தவர்க்கு. கூற்றம் குதித்தலும் கைகூடும்—எமனைக்கட்டவும் முடியும். உம்மை, அவனைக் கட்டக் கூடியளவைமையைக் காட்டி நின்றது. தலைப்பட்டவர்க்குக் கைகூடும் என்று காண்க.

தவத்தினுலுண்டாம் வலிமையை யடைந்தவர்க்கு எமனை யுங்கட்டவிட முடியுமென்பதாம்

கை தலை என்னும் உறுப்பின் பெயர்கள் இதில் வேறு வகையில் கலந்து நின்றன.

தவமுடையாரை மண்ணுயிரெல்லாந் தொழும் என்று மேலே கூறினர்; இதில், அவர், எமனையுங் கட்டுவர் என்றூர். தவமானது தன்னையுடையாருக்கு அழிவில் நிலைமையை அருளும் என்பது கருத்து.

கடத்தற்கு அரிய எமனையும், தவமுடையார் கடந்து விடுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மார்க்கண்டர் சுவேதர் என்னும் இவ்விருவர்பாலும் உணரப்படும்.

கதை.

பிருகண்டு முனிவரது புதல்வராகிய மார்க்கண்டர் பதினாறாவது வயதின் முடிவில் தமக்கு முடிவுகாலம் என்பதைத் தெரிந்தார். என்றும் அழியாமல் இருக்கும் நிலைமையை எய்த விரும்பி

னர். தவம் ஒன்றேனை விருப்பிய எல்லாம் விருப்பியவாறே பெறலாம் என்று உணர்ந்தார். உடனே சென்றார். உற்ற நோய் நோற்று உயர் தவஞ்செய்தார். அதன் வலிமைபால் எமனையும் கடந்தார்.

உதவிய மிருகண்டியன் மாலயன்
முதலவர் புகழ்தரு முதன்மை பெற்றனன்
விதிமுறை யனைருள் மிருகண் டோடப்பிலோர்
புதல்வனைப் பெற்றனன் புரிந்த நோன்மையால். (1)

அப்பெருந் திருமகன் ஆற்றும் நோன்பிலன்
தப்பருந் விதிபினைத் தணைத்து கூற்றுவன்
துப்பினை யகற்றியே தொலைவு கண்டபின்
வெப்பொழு தத்திலும் இறப்பின் முயிலனன். (2)

(மார்க்கண்டேயப் படலம்.)

கதை 2.

சுவேதர் என்பார் மாதிபன் என்னும் ஒரு வேதியன் புதல்வர். சிறந்த கல்வியும் நிறைந்த அறிவும் திருந்திய பண்பும் பொருந்தப் பெற்றவர். பிறவியில் என்றும் பெருந்துன்பமே என்று தெளிந்தார். உலக வாழ்க்கையை வெறுத்தார். உண்டி முதலிய வற்றைச் சுருக்கி உயர்ந்த விரதங்களைக் கொண்டார். அதன்பின் அலைகின்ற மனத்தை யடக்கி யருந்தவம் புரிந்தார். புரிந்துவருங் கால் காலமுடிவில் காலன் வந்தான். அவரது அருந்தவங்கண்டான். கலங்கியகன்றான். பின் கூற்றுவன் வந்து கொதித்துப் பிடித்தான். பரமனருளால் அவனை யிறந்தான். அழியாத வாழ்வினைச் சுவேதர் அடைந்தார். இறந்த எமனை எழுப்பித்தரும் படி வேண்டினர். இறைவன் அருள அவனும் எழுந்தான். தவத்தின் ஆற்றலை மிகப்போற்றி யகன்றான்.

தவவலியுடையார் எமனையும் கடப்பர் என்பதை உலகம் இவர்பால்கண்டது. (இதன் விரிவை இலிங்கபுராணத்தில்காண்க.)

தவத்தினில் அமர்புரி சமனை வெல்லலாம்
தவத்தினில் எழுகடல் தமையும் உண்ணலாம்
தவத்தினில் வடவரை கலைந்து தாங்கலாம்
தவத்தினில் அனலையும் தரிக்க லாகுமே.

(திருக்கூவப் புராணம்.)

தவவலியால் எமனையுங் கடக்கலாம் என்பது இதனால் கூறப் பட்டது.

---

270. பண்டு பலரிலராய்ப் பாடுறிந்தார் பாணனென்
கொண்டான் திருவைக் குமரேசா—மண்டி
இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(ய)

இ—ள்.

குமரேசா! பலர் வறுமையால் வாடினர் பாணன் என் பேருந் திருவைவெய்தி அரசனை மகிழ்ந்தான் எனின், இலர் பல ராகியகாரணம் நோற்பார் சில நோலாதவர் பலர் என்க.

இலர்—வறியவர். பொருள் இல்லாதவர் என்னும் எதுவான் வந்தது. நோற்பார்—தவஞ்செய்வார். நோலாதவர்—தவஞ்செய்யா தவர். இலர் பலர் ஆகிய காரணம்—வறியவர் பலர் ஆதற்குக் கார ணம். ஆகிய என்பது இங்கு எதிர்கால வினையெச்சமாய் நின்றது.

பொருளுடையவர் சிலராகவும் பொருளில்லாதவர் பலராக வும் ஆதற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் தவஞ்செய்யா தவர் பலருமாயமைந்தமையேயாம் என்பதாம்.

செல்வர் சிலராகவும், வறியர் பலராகவும், இவ்வுலகில் காணப் படுகின்றதே யிதற்குக் காரணம் யாது என்பாரை நோக்கி யிது கூறியுள்ளதெனக் காண்க.

ஒத்த பிறப்பினையுடைய மக்களுள்ளே சிலர் மாத்திரம் செல்வம்பெற்றுச் சிறந்து வாழவும், பலர் வறுமை மிக்குவருந்தித்

தாழவும், அமைந்தமைக்குக் காரணம் தவஞ்செய்தலும் செய்யா மையுமேயாம் என்று காட்டித் தவத்தின் நலத்தை இஃதுணர்த் தியதென்க.

இனி, நுண்ணிய அறிவு இன்மையே வறுமை அஃதுடை மையே பெருஞ் செல்வம் எனப்படும் ஆதலால் அவ் அறிவினது இன்மை உண்மைகளும் எண்ணிக்கொள்ளப்படும்.

முற்பிறப்பில் தவஞ்செய்தவரே இப்பிறப்பில் செல்வராய்த் திகழ்வர்; செய்யாதவர் வறியராய்த் திரிவர் என்பது கருத்து.

தவம், எமாயத்தை நீக்கி இறுதியில் பேரின்பத்தை ஆக்கும் என்றுமேலேகூறினர்; இதில் அது, பெருந்திருவையும் இங்குப்போ ருந்த நல்குமென்றார். தவம் ஒன்றே இருமையினும் இன்பமெய்து தற்குரிய உரிமைகளையெல்லாம் ஒருங்கே உதவும் ஆதலால் அதை ஒருவன் விரைந்து செய்துகொள்ளவேண்டுமென்பது குறிப்பு. தவஞ்செய்தவரே செல்வராய்ச் சிறந்து வாழ்வார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பாணன்பால் காணப்படும்.

கதை.

பாணன் என்பவன் பலியின் புதல்வன். சோணிதபுரம் என்னுந் திருநகரில் இருந்தவன். அசுரகுலத் தோன்றலாகிய இவன், தந்தை பிறந்தபின் தனிநின்று வாழ்ந்தான். புண்ணிய மொன்றே எண்ணிய எல்லாம் தரும் என்று தன் புந்தியிலுணர்ந் தான். இறைவனை நினைந்தான். நிறையுடன் ஒழுகினான். வருந்தி நின்று அருந்தவம் புரிந்தான். பருவங்கள் பல கழிந்தபின் பர மன் தோன்றினார். அவரருளால் இவன் பெருந்திரு வெய்தி னன். அமரரும் போற்றும் உயர் நலமடைந்தான். அசுரனை யமைந்து ஆநயிர் ஓம்பினன். தன் மரபில் தோன்றினவரும் வேறு பலரும் இல்லாதவராய்த் தன்னை வணங்கித்தாழ்ந்து நின்றார். இவன் மாத்திரம் சென்றால் செலுத்திச் சிறந்து வாழ்ந்தான். முடிவில், பரமன் அருகே நின்று பணிபுரியும் உயர்பதம் பெற் றான். தவத்தளவேயாகுமாந் தான் பெற்ற செல்வம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து மகிழ்ந்தது.

திருவும், அறிவும், தவத்தானே வருமென்பது இதனால் கூறப் பட்டது.

உய்த்தொன்றி யேர்தந் தழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னைக்கும்
மெய்த்தவம் இல்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தேதான் இடர்ப்படு மாறே. (வளையாபதி.)

பிறந்தனர் பிறந்துசாலப் பெருகினர் பெருகிப்பின்னை
யிறந்தன ரென்பதல்லால் யாவரும் இன்றுகாறும்
மறைந்துயிர் வாழ்வாரின்றார் இல்லையால் வாழிநெஞ்சே
சிறந்தது தவத்தின்மிக்க தின்மையே சிந்திகண்டாய்.

(சூளாமணி)

அழகு, இளமை, மேன்மை முதலிய உயர் நலங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்த தெய்வமகளிர் பலர் எனியராய் வந்து பணிகள் புரிய, அரக்கியர் தலைவியராய் நின்று இலங்கையில் நிலவுவதைக் கண்ட அனுமான், அவரது தவப்பயனை வியந்து கூறியதாகக் கம்பர் தீட்டிக் காட்டிய இன்கவி ஒன்று ஈண்டுக் காணத்தக்கது.

ஈட்டுவார் தவமலன்மற் றீட்டிஞல் இனையவதின்மை
காட்டினர் விதியாரஃ்து காண்கிற்பார் காண்மினம்மா
ஆட்டுவார் அமரர்மாதர் ஆடுவார் அரக்கர்மாதர்.
தவமுடையவரே திருவினை அடைவர் என்னும் உண்மையை உணர்த்துகின்ற இதன் நயத்தை ஊன்றியுணர்க.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

உறுநோய் பொறுத்தலும் பிறவுயிர்கட்கு அருள்புரிதலுமே ஒருவனுக்கு அருந்தவமாகும். முன் தவமுடையார்க்கே அஃது எளிதில் ஈகூடும். இல்லறத்தார்க்குத் தானமும்போல் துறவறத் தார்க்குத் தவமே சிறந்தது. அதனால் ஆசிக்கவும் ஆக்கவும் வல்ல ஆற்றல்கள் உளவாம். எண்ணிய எல்லாம் அஃது இன்புற நல்கும். தவஞ் செய்வாரே தன்னுயிர்க்கு நன்மை செய்தவராவர். சுடச்சுடப் பொன் ஒளிவிடுவதுபோல் துன்பம் உற உறத் தவஞ் செய்வார் சிறந்து விளங்குவார். தவமுடையாரை உலகமெல்லாம் உவந்து தொழும். தவமுடையார் எதனையும் கடப்பர். அவரே செல்வமெல்லாமெய்தி சிறந்து வாழ்வர்.

உரைவது தவம் முற்றிற்று.

உஅ-ம் அதிகாரம் கூடாவொழுக்கம்.

அஃதாவது தவத்தோடு பொருந்தாத ஒழுக்கம். உள்ளத்தில் ஒழுக்கம் இலராயிருந்தும் தவமுடையார்போல் புறத்தே பொய் வேடங்கொண்டு உலகத்தாரை வஞ்சித்தொழுகும் இவ்வன்கண்மை, இருமையினும் பெருங்கேடு பயக்குமாதலால் மெய்த் தவமுடையார் இப்பொய்யொழுக்கத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்பது கருதி இஃது ஈண்டுவைக்கப்பட்டது. அதிகாரமுறைமையும் இதனானே தெளிவாம்.

---

271. பண்டுமுத்த நாதன் படிற்றொழுக்கை எல்லாரும்
கொண்டிழித்தார் என்னே குமரேசா—மண்டுகின்ற
வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (க)

இ—ள்.

குமரேசா! முத்த நாதனது படிற்றொழுக்கத்தை ஏன் எல்லாரும் நகைத்து இழித்தார் எனின், வஞ்சமனத்தானது படிற்று ஒழுக்கத்தைப் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்க.

படிறு என்பது பொய் களவு வஞ்சம் என்பவற்றைக்குறித்து வரும் ஒரு சொல். படிறு ஒழுக்கம் என்பது படிற்றொழுக்கம் என நின்றது. படிற்றொழுக்கம்—கள்ளவொழுக்கம்.

பூதங்கள் ஐந்தாவன நிலம், நீர், தீ, வளி, வான் என்பன. இவற்றின் சேர்க்கையானே உடம்பு முதலிய எல்லாப் பொருள்களுந் தோன்றியுள்ளன.

வானின் குணமாகிய ஒலியைச் செவியாலும், வளியின் குணமாகிய ஊற்றை மெய்யாலும், தீயின் குணமாகிய ஒளியைக் கண்ணாலும், நீரின் குணமாகிய சுவையை வாயாலும், நிலத்தின் குணமாகிய நாற்றத்தை மூக்காலும், நுகர்ந்து உயிர்க்கு உறுதுணை

யாயிணைந்திருக்கும் மனத்தின்கண் ஐம்பெரும் பூதங்களும் அஞ்ஞவாயமர்ந்துள்ளன. அவைபறியாத மறைபொருள் யாண்டும் இல்லை; இவ்வுண்மையை உணராமல் எவரும் காணார் என்று கருதி வஞ்ச மனத்தான் கொள்ளும் கூடாவொழுக்கத்தை அவைதாம் அவனது மடமையை நினைந்து அவன் காணுமல் தம்முள்ளே நகைக்கும் ஆதலான் "பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" என்றார்.

வஞ்சங்கலந்த மனத்தையுடையவனது படிற்றொழுக்கத்தை ஐம்பெரும் பூதங்களும் அறிந்து தம்முள்ளே சிரிக்கும் என்பதாம்.

ஆறுவது ஒன்று இன்மையால், ஐந்தும் என்றார். இது முற்றும்மை. இனி, பிறர் புறத்தே நகைப்பர், பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் எனக்கொண்டால், எச்சவும்மையாம். ஐம்பூதங்களும் இறைவனுருவாய் எங்குங்கலந்து நின்று எல்லாவற்றையும் அறிதலால் எவரும் அறியார் என்று கருதிக் கூடாவொழுக்கத்தை ஒருவன் கூடலாகாதென்பது குறிப்பு.

அகத்தே தீயஎண்ணங்கொண்டு புறத்தே நல்வேடங்கொள்வோன் பழியே யெய்தி யிழிவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மூத்தநாதன்பால் உணரப்படும்.

கதை.

மூத்தநாதன் என்பவன் கொங்கு நாட்டின் கீழ்பால்இருந்த ஒரு குறுநில மன்னன். செருக்கும் வஞ்சமும் சேர்ந்த நெஞ்சினன். அழுக்காறுள்ளவன். ஆசை மிக்கவன். கொடுங்கோலனாகிய இவன், அக்காலத்தில் திருக்கோவலூர் என்னுந் திருநகரிலிருந்து செங்கோல் செலுத்திவந்த மெய்ப்பொருளார் மீது பிழைபணைமை கொண்டான். அவரை வென்று அவரது நாட்டைக் கைக்கொள்ளக் கருதினான். படையுடன் சென்று மிடலுடன் பொருதான். போரில் வலிதாலந்து புறமுதுகிட்டான். பல முறையும் வந்தான். ஒரு பயனுமின்றி மீண்டான். அப்புன்னனிய வேந்தன் பெருமையை இப்புல்லியன் எண்ணி யெண்ணிப் புழுங்கினன். வஞ்சனையாலன்றி நேர்நின்று அவரை வெல்ல முடியாதென்று தெளிந்தான். தவமுடையார்போல் பொய்வே

டங்கொண்டு அம்மிமய்யர்பால் வந்தான். அவர், இவன் கரவறி யாது முனிவர் எனக்கருதித் தம் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். தனியிடம் புகுந்தவுடனே இக்கொடியோன் தன் கையில் மறைத்துவைத்திருந்த வாளால் அவர்தலை துணிபடவீசிக் கொலைவினை செய்தான். உயர்ந்த வேடத்தைக் கொண்டிருந்தும் தீவினையால் இவன் இழிந்து தொலைந்தான். குற்றமுற்ற நெஞ்சினர் கொள்ளும் வஞ்சவேடத்தால் யாதும் பயனில்லையென்பதை உலகம் இவன்பால் கண்டது. (இது பெரியபுராணத்திலுள்ளது.)

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு. (குமர குருபரர்.)

தீயார் கொள்ளும் மாய வேடத்தைக் கண்டு மயங்கலாகா தென்பது இதனால் கூறப்பட்டது.

---

272. குன்ற வுயர்தோற்றம் கொண்டும் அதிசூரன்
குன்றினன் என்னே குமரேசா—என்றேனும்
வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின். (உ)

இ—ள்.

குமரேசா! அதிசூரன் நீறுதோய்ந்த மெய்யினனாய் உயர்ந்த தோற்றம் உற்றும் என் இழிந்தான் எனின், தான் அறிந்த குற்றத்தில் தன் நெஞ்சம் படின், வான் உயர் தோற்றம் எவன் செய்யும் என்க. வான் உயர்தோற்றம்—வான்போல் உயர்ந்த தவவேடம்.

வானை உவமை கூறியது தோற்றத்தின் உயர்ச்சி தோன்ற என்க. அறிகுற்றம்—அறிந்த குற்றம். இது வினைத்தொகை.

தான் குற்றமென்று அறிந்ததின் கண்ணே தன் நெஞ்சம் பொருந்துமாயின் வான்போல் உயர்ந்த தவவேடம் என்னபயனைச் செய்யும் என்பதாம். அதனால் யாதும் பயனில்லை என்றபடி.

மனத்தின்கண் மாசுடையோர் புறத்தில் எத்துணை உயர்ந்த தவவேடத்தைத் தாங்கியிருப்பினும் அதனால் அவர்க்குப் பயனில்லை என்பது கருத்து. நீயநெஞ்சினர் கொண்ட வஞ்சவேடத்துக்கு அஞ்சவேண்டாம் என்பது குறிப்பு.

சிறந்த தவவேடத்தை ஒருவன் பொருந்தியிருப்பினும், தன் நெஞ்சம் குற்றத்தின் கண்ணே பொருந்துமாயின் அவன் எல்லாராலும் இகழப்பட்டு இழிவான்என்பது இதில்உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை அதிசூரன்பால் உணரப்படும்.

கதை.

அதிசூரன் என்பவன் சோழமண்டலத்தைச் சார்ந்த எயினன் என்னும் ஊரிலே சான்றோர் குலத்திலே பிறந்தவன். பொறுமையும் வஞ்சமும் பொருந்திய நெஞ்சினன். இவன் காலத்தில் ஏகதிகாதர் எனனும் பெரியார் ஒருவர் அக்குலத்தில் தோன்றி நலத்துடன் வாழ்ந்திருந்தார். அவர், அஞ்சா நெஞ்சினர். குன்று அன்பினர். பின்றிவென்றிபர். சிவனடியாரைச் சிவமென நினைக்கும் தவநலமுடையவர். வாள்வித்தையில் வல்லவர். அதனைப் பிறர்க்குப் பயிற்றுவித்து அதனால் வரும் ஊதியத்தைண்டி அருந்தவரைப் பேணித் தாமும் அருளுடன் வாழ்ந்தார். இங்ஙனம் வாழ்ந்துவருங்கால், வாள்வலிபில் தன்னிலுஞ் சிறந்து விளங்குகின்றார் என்று கருதி அவர்மேல் இவன் பொறாமைகொண்டான். புறங்கூறி வந்தான். பின் வெல்ல முயன்றான். பலமுறை முயன்றும் பழுதுற நின்றான். ஒடுங்கி நொந்து வெகுண்ட சூழ் செய்தான். தனியான இடத்துக்கு வரும்படி அவரைப் போர்க்கு வலிந்து அழைத்தான். அவரும் அங்கு சென்று இவனை யெதிர் பார்த்து நின்றார். ஏகதிகாதர் சிவனடியாரைச் சிவனெனமதிக்கும் இயல்புடையார் ஆதலால், இக்கொடியவன் அவ்வடியவர் போல் தவவேடங் கொண்டான். நீறுதோய்ந்த மெய்யினையும் வாளுயர் தோற்றத்தோடு இப்பொய்யன் அம்மெய்யர்முன் அணுகும்வரையும் தன்கையிலிருந்த கேடகத்தால் தன் முகத்தை மறைத்துச் சென்றான். அவர், இவன் மீது தம் வாளினைவீச அடி

பெயர்த்தார். உடனே தன், பொய்வேடத்தை இவன் பொருந்தக் காட்டினன். அவர் கண்டு மதித்தார். இவன்பால் அன்பு கொண்டார். அவ்வமையம் இத்தீயவன் பாய்ந்து அத்தூயவர் தலையைத் துணித்தான். இறைவன் அருளால் அவர் உயிர்பதமெய்தினர். சிவவேடங் கொண்டும் இவன், அவமேபிழைத்தான். தான் அறிந்த குற்றத்தின் கண் தன் நெஞ்சு விழுமாயின் வானுயர் தோற்றத்தால் ஒருபயனும் அவனுக்கு இல்லையென்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.)

உள்ளந் தீதாயின் வெளிவேடத்தால் பயன் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது.

---

273. மாதவண்போல் இந்திரனன் வல்லுருவந் தாங்கிவந்து
தோதகு புரிந்தான் குமரேசா—ஏதும்
வலியிலில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (கூ)

இ—ள்.

குமரேசா! இந்திரன் என் மாதவன்போல் உருவந்தாங் கிவந்து காதல் இன்பத்தைத் தீதுறத் துய்த்தான் எனின், வலிஇல் நிலையையான் வல் உருவம் பெற்றம் புலியின் தோலைப் போர்த்து மேய்ந்தற்று என்க. பெற்றம்—பசு.

பைங்கூழ் என்றது உணவுப்பொருள்களை யுதவுகின்ற நெற் பயிர் முதலான பசிய பயிர்களை.

வல் உருவம்—வலிய கோலம். அஃதாவது மனத்தின் வழிப் பட்டு மெலியாமல் அதைத் தன்வழிப்படுத்தும் வலியுடையார் கொள்ளும் தவவேடம். இங்கு வலி என்றது அறிவின் திண்மையை

மனத்தைத் தன்வசப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் அவ்வலியுடையார் வேடத்தை மேற்கொள்ளல் பசு, புலியின் தோலைப் போர்த்துப் பசும் பயிர்களை மேய்ந்ததை ஒக்கும் என்பதாம்.

காமம் தன்னுள்ளே தோன்றி நலிய அதனை அடக்குதற்கு உரிய தவவலி இல்லாதிருந்தும், தவமுடையார்போல் வஞ்சவேடங் கொண்டு பிறர் அறிந்து ஐயுறுவாறு ஒழுகி சென்று தான் விழைந் தனை விரைந்து துய்க்கும், வெறியனுக்கு, இயல்பாகவே வலி யில்லாதிருந்தும் வலியுடைய புலியின் தோலைப் போர்த்துத் தனக் குரிய புல்லிவிட்டுப் பிறர்க்குரிய பயிர்களைப் பரந்து மேயும்பட்டிப் பசுவை இங்கு ஒப்புறக்கூறினர். இஃது இல்பொருளுவமையாம். ஆஃதாவது எக்காலத்தும் இல்லாத ஒன்றினை இருப்பதாக்கொண்டு ஒரு பொருளுக்கு உவமையாக அமைத்து உரைப்பது. இதனை வடநூலார் அபூத உவமை என்பர். பசு, புலியின்தோலைப் போர் த்தல் என்றும் இல்லை என்பது நன்று தெளிவாம்.

பசு, புலித்தோலைப் போர்த்து ஒருவன் பைங்கூழை மேய் வதைக் காணினும், புலி புல்லைத் தின்றது என்னுந் துணிவானும் நெருங்கினால் அடித்துவிடுமே என்னும அச்சத்தானும் எவரும் அதனை அகற்றாது அகல்வர்; அதுபோல் வேடமுடையார் தீயொ ழுக்கம் புரியார் என்று நம்பியும், அவர் தவவலியுடையார் என அஞ்சியும் அவரை உலகோர் ஒன்றுங் கூறாதுபோற்ற அவர், தன் கருத்தை நிறைவேற்றிக் களித்துத் திரிவர் என்பதாம்.

உள்ளத்தில் தோன்றி நலியும் காமத்தை அடக்கலாற்றாது புறத்தில் தவமுடையார்போல் வேடங்கொண்டு பிறர்க்குரிய மக ளிரை விழைதல் பெருந்தீது என்பதும் அத்தீயவொழுக்கம் தன் னையுடையானுக்குப் பழியையும் துன்பத்தையும் வழுவாமல் பயந் தேவிடுமென்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை இந் திரன்பால் உணரப்படும்.

கதை.

தன் மனத்தை யடக்குதற்கு உரிய தவவலியில்லாத இந்தி ரன் அவ்வலியினையுடைய கோதமரைப்போல் உருவங்கொண்டு அவருடைய மனைவியாகிய அகலிகைபால் வந்து அவளை வஞ்சித்து மருவினன். அதனால் என்றும் குன்றாத பழியினை யெய்தினன்.

எவரும் அறியார் என்று கருதிக் கரவாக நின்று தியொழுக்கம் புரியினும் அஃது எல்லாராலும் அறியப்பட்டு இழிவே பயக்கும் என்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது. (விரிவை மேலைகாண்க.)

கூடாவொழுக்கத்தால் கேடேவரும் என்பது இதனுல்கூறப் பட்டது.

274. பண்டுதவ வேடமுற்றும் பார்த்தன் சுபத்திரையைக்
கொண்டதன்றுன் என்னே குமரேசா—கொண்ட
தவமறைந்த் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. (சு)

இ—ள்.

குமரேசா! தவ வேடத்தை மேற்கொண்டிருந்தும் பார்த்தன் ஏன் சுபத்திரையை மறைத்துக் கொண்டு போனன் எனின், தவம் மறைந்து அல்லவை செய்தல் வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்து அற்று என்க.

புதல்—தூறு: அஃதாவது செடி கொடிகளின் செறிவு.

புள்—பறவை. சிமிழ்த்தல்—பிடித்தல். பிணித்தலுமாம்.

தவம் என்றது ஆகுபெயராய் இங்கு அதன் வேடத்தை யுணர்த்தி நின்றது. அல்லவை என்றது தான், கொண்டவேடத் துக்கு இயல்பல்லாத கூடா ஒழுக்கங்களை.

தவம் மறைந்து—தவவேடத்தின் கண்ணை மறைந்து நின்று.

அல்லவை செய்தல்—தவம் அல்லாதவற்றைச் செய்தல்.

சிமிழ்த்து அற்று—பிணித்ததை ஒக்கும்.

தவவேடத்தின் கண்ணை மறைந்து நின்று தவம் அல்லாத வற்றை ஒருவன் செய்தல், புதரின் கண்ணை மறைந்து நின்று வேட்டுவன் புட்களைப் பிணித்தாற்போலும் என்பதாம்.

வெளிவேடங்கொள்ளும் வெய்யனைப் பழிவேடர் என்று ஒறிக்கவேண்டும் என்பது குறிப்பு.

மேல், அகத்தில் காமமுடையவன் புறத்தில் தவவேடங்கொள் ளல் பக, புலித்தோலைப் போர்த்தலை ஒக்கும் என்றார். இதில் அவன், பறவைகளைப் பிடிக்கும்பொருட்டுப் புதரில் மறைந்து நிற் கும் வேட்டுவனை ஒப்பன் என்றார்.

கூடாவொழுக்கத்தானது உருவமும் செயலும் இவ் இரு வகை உவமைகளாலும் விளக்கப்பட்டன.

அடிகள் காட்டிய இவ்வுவமையை கற்கியப்பவள்ளல் தம் பாவில் காட்டியுள்ளமை இதனடியில் வருவதால் காணப்படும்.

கேட்டியால் அந்தணனை கேடிலா எம்பிரான்றன்
மாட்டொரு சிறுதுமன்பு மனத்திடை நிகழ்ந்ததில்லை
காட்டிறு புள்ளின்சூழல் கவருவான் புதன்மேற்கொண்ட
வேட்டுவ னியல்போன் மேலோன் வேடம்நீ கொண்டதன்மை.

உமாதேவி தவம் புரிந்தகாலத்தில் பரமன் ஒரு தவயோகி போல் வந்து, அவரது திருவுள நிலையை உலகறியும்படி அவாவிச் சிவ நிந்தனையாகச் சில மொழிகள் பகர்ந்தார். அம்மை பொறாது வெகுண்டு அவரைநோக்கி, தவவேடமுடையராயிருந்தும் இவ் அவ மொழி புகலும் உமது செயலைநோக்கின் புதர்மறைந்து புட்சூழ்ந் கவரும் பொல்லா வேடனது புல்லிய இயல்பை ஒத்திருக்கின்றது. ஆதலால், செல்லும் செல்லும் என்றுசொல்லுங்கால் இது, சொல் லியதென்க.

கருதியதைக் கைக்கொள்ளும் பொருட்டு அரிய தவவேடத் தை மேற்கொள்வாருஞ் சிலர் உளர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை அருச்சுனன்பால் அறியப்படும்.

கதை.

அருச்சுனன் என்பவன் தருமர் முதலிய ஐவருள் ஒரு வன். பங்குனித் திங்களில் உத்திராநாளில் இந்திரமந்திரத்தால் குந்திபிடம் பிறந்தவன். சிறந்த போர்வீரன். வில்வித்தையில் இராகவனுக்கு அடுத்தவன். பார்த்தன், தனஞ்சயன், பற்கு

னன், கிரீடி, விசயன், சவ்வியசாசி, வீபற்சு, அருச்சுனன், கிருட்டிணன், சுவேதவாகனன் எனப் பத்துப்பெயர்களை யுடையவன். இவையெல்லாம் இவனுக்கு வதுவால் வந்தன. ஒரு காலத்தில் இவன், ஓர் வதுவால் இந்திரப்பிரத்தம் என்னும் தன் நகரத்தை விட்டுத் தீர்த்தயாத்திரைக்குச் சென்றான். பல நதிகளிலும் நீராடி மகிழ்ந்து இறுதியில் துவாரகையை அடைந்தான். கண்ணன் தங்கையாகிய சுபத்திரையின் பேரழகைக் கேட்டு அவள் மேல் பெருங்காதல் கொண்டான். பெற்றோரும் உற்றோரும் அவளைத் துரியோதனனுக்கு மணமுடிக்கக் கருதியிருந்தனர். அதன்முன்னர் அவளை இவன் கைக்கொள்ள விரும்பினன். காவிதோய்ந்த ஆடையை உடுத்து தண்டுங் கமண்டலமுங்கொண்டு ஒருமாதவன் போல் வேடங்கொண்டு அங்கோர் மலைச்சாரலில் தங்கிக் கண்ணனைக் கருதினன். அவரும் வந்தார். உண்மை தெளிந்தார். பலராமன் முதல் அவர் மரபினர் அனைவரும் முனிவர் என்று கருதி மனமுறப் பணிந்தார். சில நாட்கள் சூழ்ந்தபின்னர் அவருக்குப் பணிசெய்துவரும்படி சுபத்திரையைத் துணையாக வைத்தார். விரும்பியது கிடைத்ததென்று விசயன் பெருமகிழ்வெய்தினன். பணிவிடை செய்துவருங்கால் காதல் மொழிகளும் இடையிடையே கலந்து நிகழ்ந்தன. இயல்பாகவே சுபத்திரை அருச்சுனன்மீது மயல் கொண்டிருந்தாள். தவமறைந்திருந்தவர் தன்மையை அறிந்தாள். விழைந்திருந்ததை இருவரும் விரைந்துடன்துய்த்தார். பருவங்கண்டு ஒருநாள் அவளை உடன்கொண்டகன்றான். பலராமர் முதலிய அனைவரும் தவமறைந்து அல்லவை செய்தான் என்று அவனை மிக இகழ்ந்து நொந்தார். வேடன் புதரில் மறைந்து நின்று பறவைகளைப் பிணித்தல்போல் சிலர் தவவேடத்தில் மறைந்து நின்று தாம் கருதிய மகளிரை யணைத்தல் வர் என்பதை உலகம் அருச்சுனன்பால் உணர்ந்தது. எத்துணைசிறந்தவர்களாயினும் தவமறைந்து அவம்புரிந்தால் அவர் பழிக்கப்படுவராதலால் அதனை ஒழிக்கவேண்டும் என்பது கருத்து. இதன்விளைவுப் பாரதத்தில் காண்க.

கூடா ஒழுக்கம் கூடாதென்பது இதனால் கூறப்பட்டது.

275. பற்றற்றார் போன்று படிவமுற்ற வில்வலனென்
குற்றமுற்று மாய்ந்தான் சுமேதசா—முற்றவே
பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். (ஞ)

இ—ள்.

சுமேதசா! பற்று அற்றவர்போல் வேடங்கொண்ட வில்வலன் பழியுற்று அழிந்து என் இழிதகவர் உற்றான் எனின், பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் எற்று எற்று என்று பழிக்கத் தக்க ஏதங்கள் பலவுந்தரும் என்க.

எற்று எற்று என்று—என்ன பாவஞ் செய்தேன், என்ன பாவஞ் செய்தேன் என்று தானே வருந்தி இரங்கும் வகை.

ஏதம் பலவுந்தரும்—துன்பங்கள் பலவற்றையும் கொடுக்கும்

எற்று எற்று என்று ஏதம் பலவுந்தரும் என்பது, கொல்லு கொல்லு என்று பிறர் சொல்லிப்பழம்படியான துன்பம் பலவும் தரும் எனவும் பொருள்படும்.

மனத்தில் பற்று அறுதிருந்தும், "யாம் பற்று நீங்கினேம்" என்பாரை வஞ்சவொழுக்கம், என் செய்தேம் என் செய்தேம் என்று பின் அவர் வருந்தி இரங்கும் வகை பல துன்பங்களையும் அவர்க்குக் கொடுக்கும் என்பதாம்.

கூடாவொழுக்கம் பின், தனக்கே கேடு விளைக்குமாதலால் அதனைச் சிறிதும் கொள்ளலாகாதென்பது குறிப்பு.

வேடத்தால் உலகத்தாரை வஞ்சித்து அதனல் இன்புற்று வாழ்வோர் பின் தாமே வாய்விட்டு அலறிப் பெருந்துன்பத்தால் வருந்தி மாள்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வில்வலன்பால் உணரப்படும்.

கதை.

வில்வலன் என்பவன் எல்லாந் துறந்தவன்போல் நடித்து அருந்தவர் தமக்கு விருந்து செய்வதாகக் கூறிப் பெருந்திங்கு

செய்த முடிவில் அகத்திய முனிவரைக் கண்டான். அருந்தவத் தில் சிறந்த அபிடேகத்தையிட்டுத் தரிசனை பண்ணினான். முனிவர் தெளிந்து பெருமுனிவு கொண்டார். தருப் பை ஒன்பது எடுத்து அவன்மேல் வெறுப்புடன் எறிந்தார். அத னால் அவன் ஆவி நீங்கினான். நரகினிலாழ்ந்து பின் பிறவியில் வீழ்ந்தான். வறுமையும் நோயும் வருத்த வருந்தினான். என் செய்தேன் என் செய்தேன் என்று பின் ஏங்கி இரங்கினான். தன் பழவினையை நினைந்து அழுதழுது நொந்தான். பற்று அற்றோம் என்பார்தம் பிழைபொறுக்கும் எற்று எற்று என்று இரங்கும்படி அவர்க்கே பின் ஏதம் தரும் என்பதை இவன் எய்தக் கண்டான்.

கூடாவொழுக்கம் பின்பு தனக்கே பெருந்துன்பந்தரும் என் பது இதனால் கூறப்பட்டது.

[வர்ந்தென்

276. மாதவன்போல் வந்தமதன் மாண்பொருளெல் லாங்க
கோதுசெய்து சென்றான் குமரேசா—யாதொன்றும்
கெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (சு)

இ—ள்.

குமரேசா! மதன் என்பவன் மாதவன்போல் வந்து வஞ் சித்துத் தருமதத்தினையும் இரக்கமின்றிக் கெடுத்து என் ஓட மறைந்தான் எனின், நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித் து வாழ்வாரின் வன்கணர் இல் என்க. வன்கணர்—கொடியார்.

உள்ளத்தில் பற்றுக்களை வைத்துக்கொண்டு துறந்தார்போல் புறத்தில் பொய்வேடம் பொருந்தி வஞ்சித்து வாழ்வாரைப்போல் கொடியவர் உலகத்து இல்லை என்பதாம்.

நெஞ்சு நேர்மையில்லாத வஞ்சவேடத்தைக் கண்டு மயங்க லாகாது என்பது குறிப்பு.

உள்ளத்தில் துறவு இன்றிக் காவியுடை பூண்டு உலகத்தா ரை வஞ்சிக்கும் கூடாவொழுக்கத்தார், தம்மை நம்பி வந்தவர் பொருளை யெல்லாங்கவர்ந்து நன்றியும் அருளுமின்றி அவர்க்குப் பெருங் கேடு விளைக்கும் கொடியர் ஆதலால் அவரை "வன் கண்ணர்" என்றார். இவ்வுண்மை மதன்பால் காணப்படும்.

கதை.

மதன் என்பவன் இற்றைக்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னர் கலிங்க நாட்டிலே மதங்கபுரி என்னும் நகரிலே யிருந்தான். மனநலமில்லாதவன். சொல்வலியால் எவரையும் மயக்க வல்லவன். பொல்லாத சூழ்ச்சியுள் எல்லாந் தெரிந்தவன். இவன் ஒருநாள் தலையை முண்டிதஞ் செய்து, காதில் குண்டலமணிந்து கழுத்தில் கண்டிகை புனைந்து, மெய்முழுதும் வெண்டிரு நீறுபூசி கையில் சிறிய தண்டு ஒன்றை ஏந்தி, முற்றத்துறந்த முனிவன்போல்வந்தான்றி, அந்நாட்டிலுள்ள தரிபுரம் என்னும் ஊரினை யடைந்து தனியான ஓரிடத்தில் தங்கினான். மறுநாள் தருமதத் தன் என்னுந் தனவணிகன் இவனைக்காணநேர்ந்தான். அவன் இக் கொடியவனை அடியவர் என்று பதித்து அடிவணங்கி ஆதரித்து உணவருத்தினான். இவன் உண்டி மகிழ்ந்தான். பற்றற்றவன் போல் நடித்துத் தற்தன் நோக்கினான். அன்பனை "யான் முற் றத்துறந்தவன். நின் அன்பிற்காக ஈண்டு வந்தேன். இருப்பு முதலிய இழிந்த பொருள்களையெல்லாம் உயர்ந்த பொன்னுக்கு வேண்டேன். அருந்தவஞ் செய்கின்ற நான் உனக்கு தவத்தை தரும்படி விரும்பினேன். உன்பால் உள்ள பொருளனைத்தும் கொணர்க. நின் இல்லில் வைத்தற்கு இடம் இல்லையென்று சொல்லிடும்படி அவற்றை மிகப் பெரிதாக்கி நினக்கிவ்வூர் தருவேன்." என்று மாயமொழிகள் பல நேயமொடு புகன்றான். தத்தன் மகிழ்ந்து தன் பொருளனைத்தும் தந்தான். அவ்வளவில் அமையாமல் தம் முன் னோர் நிறுவிய தரும வரிசைகளையும் விற்றுக்கொண்டு பெயரியல்பினை விளக்கினான். வந்தவன் கொண்டு வாவென்று செய்வதேபோல் எதுந் செய்தான். உருக்கிய குளிகையை ஒருபயிலை வைத்தான். பெ ரும்புகை செறிதருமளந் தொன்னையிட்டான். புகையால் தத்தன்

பொறிகலங்கி நின்றான். அவ்வமையம் இவன், பொய்க் குகை யொன்றைப் பொருந்தவைத்து அம்மெய்க் குகைதன்னை மெல்ல மறைத்தான். புகையையும் உணைத்தான். நான்கு நாட்களுள் வருவதாக நயமொழிபுகன்றான். தன்னை மும்முறை வலம்வந்து வணங்கச் செய்தான். பாவம்! தத்தன் சுற்றிவந்து வணங்கித் துவண்டு நின்றான். குகையிலிட்ட பொன், மூன்று நாட்களுள் நூற்றெட்டு மாற்றும் என்று பொருந்த மொழிந்து பொய்வேடன் ஒழிந்துபோனான். குறித்த நாளில் தத்தன் குகையைப் பார்த்தான். மிகையே கண்டான். வருந்தி வீழ்ந்தான். மடிந்து தீர்ந்தான். அற வுரிமைகளை விற்றமையால் தரும தத்தன் மதமீறிய யாணையாய் பாறிப் பிறந்து வனத்தில் திரிந்தான். உணவையும் உண்டிப் பொருளையும் கொண்டு நன்றி சிறிதுமின்றித் தன்னை நம்பினவனுக்கு இருமையினும் பெருங்கேடு விளைத்த கொடியவனை தலால் நெஞ்சிற்முறமின்றி துறந்தார்போல் வந்த அவ்வஞ்சனை வன்கண்ணனை என்று வையம் இகழ்ந்தது. அவனும் மாய்ந்தான். நரகில் ஆழ்ந்தான். இதன் விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

கொடியார் எவரினும் கூடா வொழுக்கத்தாரே கொடியார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

277. சிதைபால் மாதவன்போல் சென்றான் இராவணனுட்
கோதுகொண்டும் என்னே குமரேசா—ஓதும்
புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. (எ)

இ—ள்.

குமரேசா! சிதைபால் மாதவன்போல் வேடங்கொண்டு வந்த இராவணன் என் தன்னுள்ளத்தில் தீய எண்ணத்தைக் கொண்டிருந்தான் எனின், புறம், குன்றி கண்டு அனையரேனும் குன்றி மூக்கின் அகம் கரியாரை உலகம், உடைத்து என்க.

குன்றி என்பது ஒருவகைக் கொடி. அஃது இங்கு ஆகு பெயராய் அதன் கொட்டையை உணர்த்தி நின்றது. நுனியில் கறுத்து மற்றது சிவந்து உருட்சியாயிருத்தலின் அதனைக் குன்றி மணி என்பர்.

புறம் குன்றி கண்டு அனையர் எனும்—புறத்தில் குன்றிமணியைக் கண்டாற்போல செம்மையான வேடத்தையுடையராயினும்.

குன்றி மூத்கின்—குன்றி மணியின் மூக்குப்போல.

அகம் கரியார்—மனம் இருண்டிருப்பார். கருமை இங்கு தீமைமேல் நின்றது.

குன்றி மணியைப்போல் புறத்தில் செம்மையுடையராய்க் காணப்படினும் அதன் மூக்குப்போல அகத்தில் கருமையுடையாரை இவ்வுலகம் உடைத்தாயுள்ள தென்பதாம்.

உள்ளந் தீயாரும், நல்லார்போல் வேடம்பொருந்தி இவ்வுலகில் திரிவர் ஆதலால் அவரை அஞ்சி அகலவேண்டு மென்பது குறிப்பு.

காவிதோய்ந்த ஆடையையுடுத்து புறத்தில் பற்றற்றவர்போல் நடித்து அகத்தில் காமமுடையராய் அறிவிழந்து திரியும் வேடதாரிகளுக்குக் குன்றிமணியை ஒப்புக்கூறியது, செம்மையும் கருமையும் சேர்ந்திருக்கும் அதன் தன்மை கருதி என்க.

நல்ல வேடத்தை மெய்யிலும் தீய எண்ணத்தை நெஞ்சிலும் உடையாரும் இவ்வுலகத்தில் உளராவர் என்பது இதில்உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை இராவணன்பால் உணரப்படும்.

கதை.

இராவணன் சீதைமேற் காதல் பூண்டு அவளிருந்த சோலைக்குவந்து அருந்தவன்போல் வேடங்கொண்டு அவள்முன் சென்

ரூன். அவளுடம் அவனை முனிவனென்றே கருதி இனியமொழி கள் பகர்ந்து எதிர்கொண்டழைத்தாள். வந்தித் தஞ்சித்தாள். இருக்கையும் ஈந்தாள். அவ்வவர் தமக்கு இருந்தான். அவ்வஞ்சி யை நோக்கி நோக்கித் தன் நெஞ்சு வெளிக்தான். உரியவர் வரு வரே என்று பெரிதும் விரைந்தான். பூசைமீக்கூர்ந்தாண். நீர் யாரம்மா? என்ரூன். அகம் கரியகுய்ப் புறம் செய்யரைப் வந்த அவ்வெய்யவன் தீமையை, அம்மெய்யவள் ஓர்ந்திலள். "யான் சன கன் மாமகள், பெயர் சனகி, கா குத்தன் மனைவி" என்று அம்மறு வில் கற்பிரவள் மறுமொழி தந்தாள். இருந்தவன் போன்று இருந் தவன் இவற்றையெல்லாங் கேட்டான். தானுடம் சிலபுகன்ரூன். பின், வானுடம் வையமும் வருந்த அவளை வாரியெடுத்துச் சென் ரூன். நெஞ்சு கரியாரும் வஞ்ச வேடங்கொண்டு உலகில் உலாவு வர் என்பதை அவன் உணர்ந்திலன்.

உள்ளும் புறமும் ஒவ்வாத கள்ள வேடத்தானை உணர்ந்து நீக்கவேண்டுமென்பது இதனால் உணர்த்தப்பட்டது

---

278. பண்டொருவன் ஆசான் பணம்பறிக்கப் பொய்வேடம்
கொண்டுவந்தான் என்னே குமரேசா — கொண்ட
மனத்தது மாசுக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். (அ)

இ—ள்.

குமரேசா! முன், ஒருவன் தன் குருவின் பொருளைக் கவருட் பொருட்டு என் வேடங்கொண்டு மறைந்து வந்தான் எனின், மாசு மனத்தது ஆக மாண்டாராய் நீராடி மறைந்தொழு கும் மாந்தர் பலர் இவ்வுலகில் உளர் என்க.

மாசு மனத்தது ஆக--குற்றம் மனத்தின்கண் அமைந்திருக்க. மாண்டார் நீர் ஆடி—மாட்சிமையுடையார் போன்று நீரின் மூழ்கி. இனி, மாண்டாரது நீர்மையைப் பொருந்தி எனவும் இது பொ ருள்படும். நீர்மையென்றது குணத்தின் தன்மையை.

மனத்தின்கண் மாசு உடையராயிருந்தும், மாட்சிமையுடையார் போன்று நீரில் மூழ்கிப் புறத்தே தவமேவடங்கொண்டி அதன்கண் மறைந்து நின்று ஒழுகும் மாந்தர் பலர் உளர் என்பதாம்.

உள்ளத்தில் அழுக்கு இருக்க அதனை ஒழிக்காது உடல் அழுக்கைக் கழுவிக் கள்ளமேவடங்கொண்டு நல்லார்போல் நடிக்கும் பொல்லாதாரும் பலர் இவ்வுலகில் உளராதலால், அவரை அறிந்து அகற்றவேண்டுமென்பது கருத்து.

உள்ளம் மாசுற உடல் மாசு கழுவிப் பிறர்பொருள் கவர்ந்து காவுடன் ஒழுகும் பழியர் பலருளர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை தேவசன்மன் பாலும், தீவகன் கண்ணும் தெளியப்படும்.

கதை.

இற்றைக்கு எண்ணூறு வருடங்கட்கு முன்னர் மகத நாட்டிலே மாகபுரி என்னும் ஊரிலே தேவசன்மன் என்னும் வேதியன் ஒருவன் இருந்தான். அவன் வறுமை மிக்கவன். வஞ்சித்து வாழுத் தன் நெஞ்சத்தெண்ணினான். துறவிபோல் வேடங் கொண்டான். அருள் பெற்றவன்போல் நடித்துப் பொருள்பெற் வர்பால் சென்றான். அருந்தவன் என்று மதித்து அனைவரும் அவனுக்கு அன்பு செய்துவந்தார் அவர்பால் தொகுத்த பொருளையெல்லாம் பொற்காசுகளாக மாற்றி உள்ளே துளையுள்ள தண்டு ஒன்றில் எவரும் அறியாமல் செறித்து என்றும் அதனைத் தன் கைக்கொண்டிருந்தான். பரம் பொருளினும் அவ் அரும்பொருள் மீதே அவன் பற்று மீக்கூர்ந்தான். என்றும் எவரிடமும் அத் தண்டை எனைத்துணையும் நல்கான். இவ்வாறு ஒழுகி வருங்கால் அத்தண்டின் தன்மையைத் தீவகன் என்னும் ஒருவணிகன் தேர்ந் தான். அதனைக் கைக்கொள்ள விரும்பினன். தக்கார் போலத் தானும் தவவேடம் பூண்டான். பொன்னூறு தண்டுகொண்ட அப்பொய்யன்பால் வந்தான். பொருந்த வணங்கி அருந்தவன் போல் நடித்தான். தொண்டுசெய்வதாகத் தொழுது அடிஅடைந் தான். குருவும் சீடனுமாய் அவ் இருவரும் அமைந்தார். ஆண்டு

ன்று கழிந்தது. இருவரும் ஒருவன் இல்லிடைச் சென்று
தம் இருப்பிடம் மீண்டார். வேடச்சீடன் தன் தலையிலிருந்த
தருப்பு ஒன்றை எடுத்தான். "அந்தோ! அவ் அன்பன் மனை
தருப்பு என் தலையிலிருந்தது, யான் அறியாமல் கொணர்ந்தென்
பெரும்பாவம் செய்தேன். என்செய்வேன்! குருநாதா", என்று
அழுது தொழுது மீண்டு ஓடினன். அவ் இல்லிடையே அதனை
மெல்ல எறிந்துவிட்டு ஒல்லையில் வந்து தன் குருவின் அடியினை
யடைந்தான். அப்பாவங்கழிய அருள் செய்ய வேண்டினன்
எவரையும் நம்பாத அப்பொய்க் குருவும், வியந்து அன்று முதல்
அவனை நம்பினன். தன் கைத்தண்டையும் அவன் கையில் தந்து
வாங்கத்தானே இசைந்தான். கொடுத்தலும் வாங்கலும் அடுத்து
அடுத்து நிகழ்ந்தன. குறி பார்த்திருந்து அத்தண்டை ஒருநான்
தீவகன் கொண்டே போயினன். கருத்தில் அருளில்லாத இவன்
தன் கையிலிருந்த டொருளையுமிழந்தான். மருளுறவுழந்தான்.

"பிறர் மனைத் தருப்பு கொள்ளான்
பிராமணன் தண்டு கொண்டான்"

என்று அந்த நாடெங்கும் ஒரு மொழி ஓடி உயர்ந்தது. தீவக
னும், தேவசன்மனும் மனத்துக்கண் மாசுற்றும் மாண்டார் நீராடி
மறைந்தொழுகி வாழ்ந்தனை உலகம் தெரிந்து இகழ்ந்தது.

உள்ளத்தில் இழுக்கிருந்த உடலழுக்கைக் கழுவுவதால் பய
னில்லை என்பது இதனில் கூறப்பட்டது.

279. கண்டமான் செவ்விதென்ற காகுத்தன் வன்செயலாற்
கொண்டனன்தீ தென்றே குமரேசா—மண்டுங்
கணைகொடிதி யாழ்கொடி செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். (கூ)

குமரேசா! முன் கண்ட மானைச் செவ்வித்து என்று
கொண்ட காகுத்தன் பின் வன் அதன் செயலால் தீயதென்று

தெளிந்தான் எனின், கணைகொடிது, யாழ்கோடு செவ்வி்து, ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் வேண்டும் என்க.

காருத்தன்—இராமன்; குருமரபில் பிறந்தவன் என்பதாம். இவ்வாறு வருவதை வடநூலார் தத்திதாந்த நாமம் என்பர். காசரதி என்பதும் அது.

கணை—அம்பு. கோடு—வீணைதண்டம்.

ஆங்கு அன்ன—அவ்வகையே கொடியர் செவ்வியர் எனபன.

வினைபடு பாலால் கொளல்—தொழில்படு வகையால் தெளிந்துகொள்க. செவ்விய கணை கொலைத் தன்பத்தையும் கோடிய யாழ் இசை இன்பத்தையும் கொடுத்து நிற்றலால், கொடியர், செவ்வியர், என எவரையும் வடிவால் துணியாது செயலால் தெளிக என்பதை அன்ன என்னும் வினைக் குறிப்பால் விளக்கினர்.

அம்பு, வடிவத்தால் செவ்வி்து, ஆயினும் தொழிலால் கொடிது; யாழ், கோட்டால் வளைந்தது ஆயினும் செயலால் செவ்வி்து; அவ்வகையே தவம்புரிவோரைக் கொடியர் செவ்வியர் என அவரவர் வினைபடு வகையால் அறியவேண்டும் என்பதாம்.

இவர், நல்லவர்; இவர், தீயவர்; என எவரையும் வேடத்தால் மதிக்கலாகாது. அவர் அவர் செயல்களால் அறியவேண்டுமென்பது கருத்து.

மாசு மனத்தது ஆய அருந்தவர் போல் மறைந்தொழுகும் பாந்தர் பலர் உலகில் உளர், அவரை அறிந்து நீக்கல் வேண்டுமென்றமேலை கூறி, அவரை அறியும் விதத்தை இதில் பால் விளக்கினர்.

உருவத்தால் செவ்வியர் போன்று வந்தவர், பின் செயலால் கொடியராய்க் காணப்படின் உடனே அவரை ஒறித்து நீக்கவேண்டும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மரீசன் உணரப்படும்.

கதை.

மாரீசன், மாலுகி வந்து சீதைமுன் நின்றதைக்கண்ட இராமன் அதனது உருவச் செவ்வியைக்கொண்டு நல்லதென்றே துணிந்து பற்றும்படி பின்சென்று நெடுந்தூரம் போனபின் அதன் செயலால் கொடுந் தீமை தெளிந்தார். பின் தம்பைகொண்ட அம்பை அதன் மெய்க்கொள்ள விடுத்தார். திரும்பவந்தார். அதனல் சேர்ந்த தீமையால் நொந்தார்.

காயம்வே ருகிச் செய்புங் கருமம் வெருவியிற்றன்றே
ஏயுமே யென்னின் முன்னம் எண்ணுமே இளவற்குண்டே
ஆயுமே லுறுதல் செல்லாம் அரக்கரானவர்கள் செய்த
மாயமேயாய தேதான் வருந்தியதென்றுன் வள்ளல்.

இது, தான் செவ்வித்து என்று கொண்ட மாயமானின் விளைபடு பாலால் அதன் தீமை கண்டபோது இராமன்சொன்னது.

வேடதாரிகளின் இயல்பினை அவரது செயல்களான் உணர வேண்டுமென்பது இதனல் கூறப்பட்டது.

280. பண்டுதவ வேடமொன்றும் பற்றூர் சகுதேசர்
கொண்டார் உயர்வேண் குமரேசா — கொண்ட
மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். (ii)

இ—ள்.

குமரேசா! சகுதேசர் என்பவர், உயர்ந்த தவவேடம் ஒன்றுங்கொள்ளாமல் என் சிறந்து நின்றூர் எனின், உலகம்பழித்ததை ஒருவன் ஒழித்துவிடின், மழித்தலும் நீட்டலும் அவனுக்கு வேண்டா என்க.

மழித்தலும்— தலைமயிரைக் களைதலும், வழித்தல் என்பதும் அது.

நீட்டலும்—கலையாது வைத்து மயிரைச் சடையாக்கி நீட்டலும். உலகம் பழித்தது—உயர்ந்தோர் பழித்துக்கூறிய குற்றத்தை. தீமை நன்மைகளைத் தெரிந்து கூறவல்லார் உயர்ந்தோரே ஆதலானும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றதனானும் உலகம் என்றது ஈண்டு உயர்ந்தோர்மேல் நின்றது.

சிலர் மொட்டையடித்தும், சிலர் சடைவளர்த்தும் துறவியாவர். சமயமதத்தைச் சார்ந்தவர் துறவு கொள்ளுங்கால் மயிரை ஒவ்வொன்றாகப் பறித்து நீக்குவர். மொட்டைச்சாமி, சடைச்சாமி என்று பெயரெடுப்பதினும், ஒழுக்கச்சாமி என்று உயர்ந்தோர் புகழுமாறு ஒழுகுவதே நன்மை என்பது கருத்து.

உயர்ந்தோர் குற்றமென்று விலக்கிய தீய ஒழுக்கத்தை நீக்கிவிடின் மொட்டையடித்தலும் சடைவளர்த்தலும் வேண்டா என்பதாம்.

உள்ளத்தில் உள்ள குற்றத்தை ஒழிக்காமல், உடலிலமைந்த மயிரை ஒழிப்பதால் பயனில்லை என்பது குறிப்பு.

துறந்தவர்க்கு வேடத்தினும் ஒழுக்கமே சிறந்தது என்க. உள்ளும் புறமும் ஒப்ப நின்று நெறிவழுவாதொழுகும் அறிவுடையார், வேடமின்றியும் தவப்பயனை யெய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சகமித்திரர்பால் உணரப்படும்.

கதை.

சகமித்திரர் என்பவர் வடநாட்டிலே பரனி என்னும் ஊரிலே இருந்த ஒரு வேதியர். பெருமானிடத்தே பேரன்புடையவர். வேதமுதலிய கலைகள் பலவும் ஓதியுணர்ந்தவர். கமலை என்னும் கன்னியை மணந்து இல்வாழ்ந்திருந்தார். அறிவும், அருளும் அமைதியுமுடையவர் வறுமையும் இவரை உரிமையாகக் கொண்டது. வறியவராயினும் ஒழுக்கத்தில் பெரியவராதலால் அனைவரும் இவரை அன்புடன் ஆதரித்துவந்தார். பலருதவியால் நலமுற வாழும் இவர்மீது சிலர் பொறாமை கொண்டார். அத்தீயவர், ஒருநாளிரவில் இவர் இல்லில் தீயிட்டு மறைந்தார்.

இல்லம்பற்றி எரிபறந்து தழுந்தது மக்கள் கால்வரும் மனைவியும் தானுமாய் உள்ளே உறங்கியிருந்தார். சகமித்திரர் குடும்பத்தோடு அழிந்தார் என்று எல்லாரும் எண்ணி யேங்கினர். நெருப்புத் தணிந்தபின் நெருங்கிப் பார்த்தார். துன்பமொன்றுமின்றி அறு வரும் இன்புழுற்றிருந்தார். அந்நாட்டுத் தலைவனும் இவரை நாடி வந்தான். உலகுக்கெல்லாம் இவர் உறவினரோ என்று உவந்து புகழ்ந்தான். சகம்-உலகம். மித்திரர்-நண்பர். புலி, கரடி, முதலிய கொடிய விலங்குகளும் கன்று கண்டதாய் என இவரை நின்று கண்டு மகிழும். துறந்தவரெல்லாரும் தவத்திற் சிறந்தவர்என்று இவரைத் துதித்து மதித்தார். இலைமறை காய்போல் வெளியிலடை மொன்றுமின்றி யடங்கியிருந்தும் மாதவப்பயனை இவர் மாண்புறப் பெற்றார். மன நலமுடையார்க்கு மழித்தலும் நீட்டலும் முத லிய வெளி வேடங்கள் வேண்டா என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

அகவொழுக்கமுடையவர்க்கு வெளிவேடங்கள் வேண்டா என்பது இதனால் கூறப்பட்டது.

இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

வஞ்ச மனத்தானது கூடாவொழுக்கத்தை யிகழ்ந்து ஐம் பெரும் பூதங்களும் அகத்தே சிரிக்கும். உள்ளத்தில் குற்ற முடையவன் கொள்ளும் வேடத்தால் பயன் இல்லை. பசு புலி யின் தோலைப் போர்த்துப் பைங்கூழ் மேய்தல்போல் தவவேடம் புனைந்து சிலர் அவமே புரிவர். வேடுவன் புதல் மறைந்து புட் களைப் பிடித்தல்போல் வேடத்துள் மறைந்து சிலர் கேடுகள் புரி வார். பொய்த்துறவுடையவர் பெருந்துன்பம் அடைவர். கொடி யார் எவரினும் அவரே கொடியவராவர். குன்றிமணிபோல் அவர் கோடியிருப்பர். உளம் மாசடைந்தும் சிலர் வெளிவேடங் கொள்வர். வேடதாரிகளை அவர் செய்யும் வினையால் தெளிக. பழியியல்பு இல்லார்க்கு வெளி வேடங்கள் வேண்டா.

உஅ-வது கூடாவொழுக்கம் முற்றிற்று.

உசும் அதிகாரம் கள்ளாமை.

அஃதாவது பிறர்க்குரிய யாதொரு பொருளையும் அவரறியா வகை கவர்ந்துகொள்ளக் கருதாமை. பொருளும் காமமும் பொள்ளாதன என்று தெளிந்து தமக்குரிய எல்லாவற்றையுந் துறந்த நல்ல நெறியிலே நின்றூர்க்குப் பிறர் பொருளை விரும்புதலே பெருமும் பிழை; அதன்மேலும் அதனை வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவர்க்குக் கழிபேரிழிவாம் ஆதலால் அக்கருத்தை யுறவே ஒழிக்கவேண்டும் என்று கருதி இஃது ஈண்டு வைக்கப்பட்டது. உள்ளும் புறமும் ஒப்பநின்றொழுகிய செப்பமுடையார்க்கே இது செவ்விது அமையும் ஆகலால் கூடாவொழுக்கத்தின் பின் இது கூறப்பட்டது. அது காமங் குறித்தும் இது பொருள்பற்றியும் நிகழும் என்க. அதிகார அமைவும் இதனானே தெளிவாம்.

281. கற்ற கலைஞரின் களவானும் கன்னெனிகழ்
குற்றமுற்றூன் என்னே குமரேசா—எற்றுணும்
எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (க)

இ.—ள்.

குமரேசா; கல்வியை வஞ்சித்துக் கற்ற அதனானும் என் கன்னன் இழிவுற்றூன் எனின், எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும் கள்ளாமைதன் நெஞ்சு காக்க என்க.

எள்ளாமை வேண்டுவான் என்பான்—பிறரால் இகழப்படாமையை விரும்புவான் என்று சொல்லப்படுவான்.

எனைத்து ஒன்றும்—யாதொரு பொருளையும்: யாதெனும், எத்துணையளவும் என்றபடி.

கள்ளாமை—களவாகக்கொள்ளக் கருதாமை.

தன்னெஞ்சு காக்க—தன்நெஞ்சினைக் காக்கக்கடவன்.

பிறரால் இகழப்படாத தன்மையை எய்த விரும்புகின்றவன் யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்கவேண்டும் என்பதாம். இனி, எள்ளாமை என்பதை எள்ளி என்னும் எச்சத்தின் எதிர்மறையாத் திரித்து, வீட்டினை இகழாது விரும்புவான் என்பான் எனைத்தொன்றும் கள்ளாவகை தன் நெஞ்சினைக் காக்க எனவும் பொருள் கொள்ளப்படும். 'வீட்டினை' என்னும் வினைக்குரிய செயப்படு பொருள் இதில் வருவிக்கப்பட்டது.

களவே இழிவினுள் எல்லாம் இழிவாம் என்பது கருத்து. எனைத்தொன்றும் என்றதனால் அரிய கல்விப் பொருளையும் முறையானன்றிக் கரவாகக் கொள்ளக் கருதலாகாமை தன்பதும், கருதின் அதனால் இழிவே வரும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கன்னன்பால் காணப்படும்.

கதை.

கன்னன், வில் வித்தையைத் துரோணரிடம் கற்க விரும்பினன். அவர் ஓர் ஏதுவால் அதற்கு இசைந்திலர். அதன்பின் அவன் பரசுராமர் பால் பயிலக் கருதினன். அவர், அரசர் மரபினர்பால் பெரும் பகைமை பூண்டவராதலால் தன்னை அந்தணன் என்று காட்டிக் கன்னன் அவரையடைந்தான். அவரும் நம்பி அன்புடன் பயிற்றினர். கன்னன் பயின்றுவருங்கால் ஒருநாள் அழகிய பூஞ்சோலை ஒன்றில் தானும் குருவும் தனியாயுலாவினர். முடிவில், கன்னன் தொடையில் தம் தலையை வைத்துப் பரசுராமர் துயின்றார். அவ்வனையம் கன்னனது வஞ்சத்தை வெளிப்படுத்தக் கருதி இந்திரன் வண்டுபோல் வந்து அவன் தொடையில் புழையுறும்படி குடைந்தான். உதிரஞ் சிதறியொழுகினும் கன்னன் அஞ்சா நெஞ்சினனாய் அசையாதிருந்தான். குரு விழித்தார். குருதியைக் கண்டார். இதற்கு ஏது யாது என வினவினர். வண்டின் செயலை வணங்கி உரைத்தான். குரு வியந்தார். இத்துணைத் திண்மையும் ஆண்மையும் வேதியர்க்கு உண்டா என்று ஐயங்கொண்டார். கன்னனை நோக்கினர்.

"அந்தணன் அல்லீர்; நீ யார்! உண்மையை ஒளியாது உரை" என உலகத்து கேட்டார். நிகழ்ந்தன எல்லாம் கண்ணன் நெறியே கூறினன். களவாகக் கற்றதனல் இவ்வித்தை பலியாமல்போகக் கடவதுஎன்று சபித்தார். எல்லாரும் எள்ளுவதே என்று கண் ணன் கவன்று மீண்டான். எனைத்தினான்மறையும் வஞ்சித்துக் கொள்ளா வகை தன் நெஞ்சைச் காத்தலே நன்று என்று தெ னிந்தான். விரிவு பாரதத்தில் தெளிவாம்.

யாதொரு பொருளையும் களவினல் கொள்ளக் கருதலாகா தென்பது இதனல் கூறப்பட்டது.

---

282. பண்டுமலர் கள்ளத்தால் பற்றிப் பரந்தகனும்
கொண்டனன்தீ தென்னே குமரேசா—கொண்டுநின்ற
உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கொள்வேம் எனல். (உ)

இ.—ள்

குமரேசா! பரந்தகன் என்பவன் பலரைக் கள்ளத் தால் கொண்டதால் என் பெருந் தீது கொண்டான் எனின், உள் ளத்தால் உள்ளலும் தீதேயாம், ஆதலால் பிறன் பொருளைக் கள் ளத்தால் கொள்வேம் எனல் என்க.

உள்ளலும் தீதே—கருதலும் பாவமே. உம்மை இழிவு சிறப்பு.

பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் எனல்—பிறனு டைய பொருளைக் களவால் கொள்வேம் என்று கருதற்க. எனல் என்பது ஈண்டு எதிர்மறை விலக்கினாய் நின்றது.

இனி, எனல் என்பதைத் தொழிற் பெயராகக்கொண்டு, பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் என்னையே உள் ளத்தால் உள்ளலுந் தீதே எனவுங் கொள்ளலாம்.

பிறனெருவன் பொருளைக் களவினால் கொள்ளவேண்டுமென்று கருதினும் பாவமாம் என்பதாம்.

மேல், களவால் பழிவரும் என்றார்; இதில் அதனைக் கருதினும் பாவமாம் என்றார்.

களவினை, உள்ளினும் கொள்ளினும் உடனே பெருந் தீமையுண்டாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பராந்தகன்பால் உணரப்படும்.

கதை.

பராந்தகன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன் உறையூரை ஆண்டவன். இவன் அரசுபுரிந்து வருங்கால் சாரமா முனிவர் என்னும் பெரியவரொருவர், செவ்வந்தி புலைப்பரமனுக்கு அனைய விரும்பி அதன் மூலங்களை அரிதின் முயன்றுகாண்டு வந்து தனியிடத்தில் வைத்து அவற்றைப் பெரிதும் போற்றிவந்தார். பருவமுற்றபின் அவற்றில் கறுவிய மலர்கள் தோன்றின. மாவலன் என்னும் அரசனுடைய ஏவலன் ஒருவன் அம்மலர்களை முனிவர் அறியாவகை கவர்ந்துகொண்டுவந்து அரசனுக்குத் தந்தான். முனிவர் தெரிந்து அரசன்பால் வந்து பூவா னிகன் செய்த புன்மையைப் பொருந்த உணர்த்தினர். உணர்ந்தும் அரசன் ஒன்றும் சொல்லாது அதற்கு உடன்பட்டிருந்தான். முனிவர் நாளும் பொறுத்தார். மேலும் மேலும் பூவின் களவு பொருந்தி மிகுந்தது. கள்ளத்தால் வருவதென்று தெளிந்தும் தள்ளாமல் அரசன் கொள்ளுகின்றானே என்று முனிவர் கொதித்தார். உடனே அங்கு மண்மாரி பெய்தது. அவனும் மாண்டான். நகரமும் அழிந்தது. தான் கள்ளாதிருந்தும் கள்ளத்தால் வந்ததைக் கொள்வேமென்று கருதியதால் அரசன் பெருங் கேடடைந்தான். பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் என்று கருதினும் தீதாம் என்பதை உலகம் பராந்தகன்பால் தெளிந்தது. விரிவை அவன் சரிதையில் தெளிக.

களவினைக் கருதினும் தீதாம் என்பது இதனால் கூறப்பட்டது.

283 அன்றுகளவால் அடைந்தெல்லாம் வணிழந்து
குன்றினார் சார்வுமீரகா—என்றும்
களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். (கூ)

இ.—ள்.

குமரேசா! களவினல் அடைந்த செல்வமெல்லாம் இழந்து என் சார்வர் குன்றினர் எனின், களவினல் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும் என்க.

அளவு இறந்து ஆவதுபோலக் கெடும்—வரம்பு கடந்து வளர்வதுபோலத் தோன்றி அழியும். ஆவதுபோல அளவு இறந்து கெடும் எனக் கூட்டி ஆவதுபோலத் தோன்றி அளவு கடந்து கெடும் என்று கொள்ளினும் அமையும். அஃதாவது தன்னல் ஆகிய ஆக்கத்தோடு தன்னை ஆக்கினவன் மேன் ஆக்கியிருந்த அறம் புகழ்பாவும் ஒருசேர அழியும் என்பது கருத்து என்க.

களவினல் உளதாகிய செல்வம் மிகப் பெருகுவதுபோல் தோன்றிப் பழியையும் பாவத்தையும் நிறுவி விரைவில் அழியும் என்பதாம்.

களவினல் பழியும் பாவமும் உளவாம் என்று மேலுணர்த்தியதை நோக்கி, அவை வரினும் அதனல் பொருள் உண்டாகுமல்லவா? என்பாரை நோக்கியிது கூறியதென்க.

களவால் தொண்டை பொருதோளோ, தம் பொருளையும் அறத்தையும் இழந்து கள்வர் தன்புறவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வண்மை சுகன் முதலிய சார்பால் உணரப்படும்

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மதுரையம் பதியில் அரசுபுரிந்திருந்த விரபாண்டியன் என்னும் வேந்தர் பெருமானுக்கு அழகிய காமக்கிழத்தியர் பலரிருந்தனர். அப்போக

மாதர்பால் சுகன், மதனன், சுகுணன், சோமன், விக்ரமன், வீர சேனன், வீரகேசகரண, வீராகாமன், விசயன், சயதரன், எனப்புகல்வர் பதின்மர் தோன்றி வளர்ந்தார். சாரப் பிறந்ததால் இவர் சாரர் எனப்பட்டார். அதன்பின் தன் இன்னுயிர்த் துணைவியாகிய நன் மனைவியும் உலகம் மகிழ்வுற ஒரு குலமகனைப் பெற்றாள். அரசன், பேருவகை பூத்துக் குமரனைப் போற்றிவருங்கால் ஒரு நாள் வேட்டைமேல் சென்று அங்கோர் புனிவாய்ப்பட்டான். அனைவரும் எங்கி அழுதிரங்கினர். சுகன் முதலிய புன்மக்கள் பதின்மரும் அற்றம் நோக்கி நிதியறைக்குட் புகுந்து மணி முடியையும், அணிகலன்களையும் கவர்ந்துகொண்டு மறைந்து சென்றார். அமைச்சர் அக்குல மகனுக்கு மணி முடி சூட்ட விரும்பி அணி அறையைத் திறந்தார். அங்கிருந்த மணி மகுடத்தைக் காணாது மதி மயங்கி நொந்தார். முன்னர் வழுதி மருமகனை இவ்விரு நிலம்புரந்த அம் முழுமுதற்பரமனே ஒரு வணிகனாய் வந்து மரகத முதலிய மணிகள் ஒன்பதையும் அணி பெறத் தந்து மன்னன் மகனுக்கு மகுடம் புனைமின் என்று வாழ்த்தி மறைந்தார். அனைவரும் வியந்து பரமனைத் துதித்து அவராருளியபடியே மணி முடி சூட்டி அகிளாண்ட குமரனுக்கு அபிடேக பாண்டியன் எனப் பெயரும் புனைந்தார். தோன்றலும் மன்னுயிர்க்கெல்லாம் இன்னுயிர்த் துணையாய்த் தோன்றி விளங்கினன். தனக்கு ஒரு வகையில் துணைவர்போலத் தோன்றியிருந்த பகைவர் பதின்மரையும் பற்றிக் கொணர்ந்து அவர் கவர்ந்தனவெல்லாம் உவந்து வாங்கினன். களவால் வந்த பொருளோடு தம் பொருளையும் இழந்து பழியும் பாவமுமெய்தி அவரனைவரும் அந்த நகரை விட்டு அகன்றொழிந்தார். களவினல் ஆகிய ஆக்கம் ஆவதுபோலத் தோன்றி அளவிறந்து கெடும் என்பதை உலகம் அவர்பால் ஓர்ந்தது. விரிவைத் திருவிளையாடலில் மாணிக்கம் விற்ற படலத்தில் காண்க.

களவால் வரும் பொருள் பழியை விளைத்து விரைவில் அழிவுறும் என்பது இதனல் கூறப்பட்டது.

284. மாசில் மணிக்கள வால் மந்திரி தன் இன்பதனம்போய்க்
கூசிநொந்தான் என்னே குமரேசா—நீசக்
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமமந் தரும். (சு)

இ—ள்.

குமரேசா! ஒரு மணியின் களவால் கணகேசன் என்னும் அமைச்சன், என் தனது உயர்ந்த பதத்தை இழந்து இழிந்து நொந்தான் எனின், களவின் கண்ணே கன்றிய காதல், விளைவின் கண்ணே வீயாத விழுமத்தைத் தரும் என்க.

கன்றியகாதல்—மிகுந்த ஆசை.

விளைவின்கண்—பயன்தரும்பொழுது. விளைவு ஆகுபெயர்.

வீயா விழுமம் தரும்—தொலையாத துன்பத்தைக்கொடுக்கும்

காதல் தரும் என்று கூண்க. விணைமுதல் அடை பெற்றதற்கேற்பச் செயப்படு பொருளும் பெற்று வந்தது.

களவினிடத்தே மிகுந்த ஆசையானது, பயன் கொடுக்கும் பொழுது, தன்னையுடையோனுக்குத் தொலையாத துன்பத்தைக் கொடுத்துவிடும் என்பதாம்.

பொருளை நெறியான முயற்சியான் அன்றி, இழிவான களவால் ஒருவன் கொள்ள விரும்பின், அவ்விருப்பம் விறகுபெற்ற கழல்போல் முறுகி வளர்ந்து முடிவில்லாத துயரை அவனுக்கு முடிவில் விளைவிக்கும் என்பது கருத்து. இவ்வுண்மை கணகேசன்பால் காணப்படும்.

கதை.

கணகேசன் என்பவன் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன்னர் அங்கநாட்டு வேந்தன்பால் அமைச்சனாய் இருந்தவன். சிறந்த நிலையிலிருந்துட்டு, இழிந்த செயல்களில் இவன் இசைந்திருந்

தான். மேல்வரும்படி யென்று இதுபொழுது வழங்கிவருகின்ற பரிகாரம் என்னும் கீழ்வருவாயினை இவன் நாள்தோறும் விரும்பினான். அதனால் அரசனும் இவன்மேல் ஐயுற்றிருந்தான். ஒரு நாள் அரசன் உருமாறி கள்ளிரவில் நகர்வலம் வருங்கால் எதிரே வந்த ஓர் இளைஞனைக் கண்டு "நீயார், எங்கே போகின்றாய்" என்றான். யான் கள்வன், அரசன் இல்லில் பொருள் கொள்ளச்செல்கின்றேன் என்று அவன் பொய்யாதுபுகன்றான். மன்னன் வியந்து தானும் உடன் வருவதாகச் சொல்லி அவனோடு இணைந்து சென்றான். நிதியறைக்குள் இருவரும் புகுந்து உயர்ந்த மணிகள் மூன்று ஒருங்கிருப்பக் கண்டார். அவற்றுள் இரண்டு மணிகளை மட்டும் எடுத்து உடன்வந்த உரிய கள்வனுக்கு ஒன்றைக் கொடுத்துத் தான் ஒன்றை வைத்துக்கொண்டான். அவ் ஒன்றை ஏன் கொள்ளாது தள்ளினாய் என்று கூட்டாளி கேட்டான். நம்மிருவர்க்கும் பங்கிடுவதற்கு இசையாது ஆதலால் அதனை விடுத்தேன் என்றான். மன்னன் அவனது மனநலத்தை வியந்து, பெயர் ஊர் முதலிய யாவும் தெரிந்து, பிரிந்தான். மறுநாள் அமைச்சனை அழைத்து நமது நிதியறை கள்வரால் கொள்ளை செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது நீர் போய் அதனைக் கண்டு வாரும் என்றான். அமைச்சன் சென்று ஆய்ந்தான். விழுமிய மணிகள் மூன்றுவைத்திருந்த அழகிய பேழையுள் ஒன்றே யிருக்கக் கண்டான். கள்வர் அதனைக் காணாது விட்டனர் என்று கருதித் தானே கைக்கொண்டு மறைத்து மன்னன் முன் வந்து "அரசே உயர்மணி மூன்றும் கொள்ளை போயின" என்று கூசாது கூறினான். அரசன் முன்னர்க் குறித்த கள்வனை அழைத்து அவையில் இருந்து நிகழ்ந்தன முழுவதும் பலரும் அறியும்படி விளக்கி அவன் கொண்டிருந்த ஒன்றையும், தன்பாலிருந்ததையும், அமைச்சனை வைத்து அமைச்சனை நோக்கி நின்பால் உள்ளதையும் கீழுமை; என்று நேரே கூறினான். அவன் உள்ளங்கலங்கி அவ் ஒரு மணியையும் வெளியே வைத்துப் பெருகாணமுற்றான். அதன்பின் அவனது நலமனைத்தையுங் கவர்ந்துகொண்டு அரசன் அவனைச் சினந்தகற்றினான். அவனும் சீர்மையும் சிறப்பும் இழந்து தேம்பிச் சென்றான். களவின் கண்ணே கன்றிய காதலையுடையவர்

அதன் விளவின் கண்ணே தொலையாத துன்பத்தை அடைவர் என்பதை உலகம் முவன்பால் உணர்ந்து தெளிந்தது. இது கண் னழூலத்திலுள்ளது.

களவை விரும்பினோர் முடிவில்லாத துன்பத்தை முடிவில் அடைவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

285. கண்டார்பொன் மூவர் கருணையின்றி யேனிருவர்
கொண்டோடி மாய்ந்தார் குமரேசா—மண்டும்
அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். (ந)

இ—ள்.

குமரேசா! மூவர் கண்ட பொன்னை என் இருவர் அருளின்றி வஞ்சித்துக்கொண்டு போனர் எனின், பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண், அருள்கருதி அன்புடையராதல் இல்லை என்க.

பொச்சாப்புப் பார்ப்பார்கண்—மறவியை எதிர் பார்த்திருப் பாரிடத்து. அருள் கருதி அன்புடையராதல்—அருளின் மேன் மையையறிந்து அதன்பால் அன்புடையராய் ஒழுகுதல். இறை வன் அருளை எய்தக்கருதி உயிர்கள்மாட்டு அன்பு உடையராய் ஒழுகுதல் எனவும் இது பொருள்படும். அன்புடையார்க்கே அவ னருள் உண்டாம் என்க.

பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ளக் கருதி அவர் மறந்திருக் குஞ் சமயத்தை எதிர்பார்த்திருக்கும் வன்கண்ணர்மாட்டு அருள் கருதி அன்புடையராய் ஒழுகுதல் இல்லை என்பதாம்.

கள்வரிடத்து அருளும் அன்பும் உளவாகா என்பது கருத்து. பிறர் சோர்வு பார்த்துப் பொருளைக் கைக்கொள்ளக் கருதிச்செல் லும் கள்வர், தம் கருத்துக்கு மாறுக எதிர்ப்பட்டோர்பால் கொலை முதலிய பழிபடு வினைகள் பலவும் துணிவுடன் செய்வராதலால் அருள் கருதி அன்புடையராதல் அவர்க்கு அமையாதென்க.

கள்வர், அருள் சிறிதும் இலராய்ப் பொருளையே விரும்பிப் பொல்லாதன எல்லாம் புரிவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை ககன் முதலிய கள்வர் மூவர்பால் காணப்படும்.

கதை.

ககன், காடன், சலன் என்னும் மூவர் கலந்து சென்று பிறனொருவன் பொருளை இரவில் கவர்ந்து வந்து பொதுவில் வைத்திருந்தார். ஐந்து நாட்களுக்குப் பின்னர் அதனைப் பங்கிடத் துணிந்தார். தாம் இருந்த இடத்துக்கு அயலிலுள்ள ஓர் ஊரில் சென்று நல்ல சிற்றுணவுகளை வாங்கிவரும்படி சலனிடம் மற்றிருவருங் கூறினர். அவனும் இசைந்து அங்குச் சென்று சிறிது உண்பொருள் கொண்டு மீண்டான். மீளுங்கால் அவ்விரு வரையும் ஒழித்து அப்பொருளைத் தான் ஒருவனே கைக்கொள்ளக் கருதினான். அதனால் தன் கையிலிருந்த சிற்றுண்டியில் கொஞ்சம் நஞ்சைக் கலந்து கொண்டுவந்தான். அவன் வருமுன் அங்கிருந்த இருவரும் அவனைக்கொன்று அதனைத் தம் இருவர்க்கே உரிமையாக்கிக்கொள்ளக் கருதியிருந்தார். வந்தவன் உணவைத் தந்து உவந்திருந்தான். சிறிதுபொழுது சென்றபின் முன் சூட்டியபடியே மறைந்து நின்று ககன் அவனை வெட்டி வீழ்த்தினான். அதன்பின் ககனும் காடனும் களிமிக்கூர்ந்து அவ்வுணவினையுண்டு அப்பொருள்கொண்டு போனார். உடனே விடந்தலைக்கேறி ஒருங்கே மாண்டார். பொருள் கருதும் கள்வர்க்கு அருள் கருதும் தன்மையில்லை யென்பதை அப்புன்மைமீயார் மூவரும் பொருந்தக் காட்டினர். (இதனை மித்திரபேதத்தில் காண்க.)

அருளும், அன்பும், கள்வர்பால் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது.

---

286. மாசில் வசுவரின்முன் வந்தும் களவெழுவர்
கூசாதேதன் செய்தார் குமரேசா—பேசும்
அளவின்கண் நின்றொழுகலாற்றார் களவின்கட்
கன்றிய காதலவர்.

இ—ள்.

சுமதோசா! மாசில்லாத வசவதத்து இல்லின் முன்னே வந்தும், என் எழுவர் கூசாது களவொழுக்கம் கொண்டார் எனின், களவின் கண்ணே கன்றிய காதலவர், அளவின் கண்ணே நின்று ஒழுகல் ஆற்றார் என்க.

அளவு—நிறை. அஃதாவது தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க உணர்ந்து அதின் வழுவாது ஒழுகும் நோன்மை.

அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார்—நிறையின் கண்ணே நின்று ஒழுகுதலைச் செய்யார்.

இனி, அளவு என்றதைக் காட்சி, கருதல் முதலிய அளவைகளாக்கொண்டால், உலகியலையும் உயிரியலையும் உணர்வியலையும் அளவையாலறிந்து அதில் வழுவாது ஒழுகல் ஆற்றார்எனவுமாம்.

களவின் கண்ணே மிக்க வேட்கையையுடையவர், நோன்மையான நெறியின் கண்ணே நிலைத்து ஒழுகமாட்டார் என்பதாம்.

களவில் ஆசையுடையவர் முறையான வழியில் ஒழுகார் என்பது கருத்து. இவ்வுண்மை கலுழன் முதலிய எழுவர்பால் காணப்படும்.

கதை.

கலுழன் முதலிய கள்வர் எழுவர் முன்னொருகாலத்தில் பங்காபுரியிலிருந்த மாதவராகிய வசவ தேவரது இல்லிற்கு வந்தனர். அங்கே சிவனடியவரோடு உடனிருந்து உண்ண விரும்பித் தாங்களும் அடியார்போல் கள்ள வேடந் தரித்து உள்ளேபோனர். அங்கிருந்தவரனைவரும் இலிங்கதாரணமுடைய வீரசைவராதலால், இவர்களும் கத்தரிக்காய்களை மறைத்து மார்பில் தொங்கவிட்டுக்கொண்டு தொடர்ந்துபோயிருந்தார். இவ்வுண்மையைச் சிலர் அறிந்து கள்வர் என்று காட்ட அருள் வள்ளலாகிய வசவ தேவர் அக்காய்களனைத்தும் சிவலிங்கங்களாகக் கருதினர். அங்

ணமே ஆயின. கள்ள வேடந் தரித்துவந்த அப்பொய்யரெல்லா ரும் மெய்யராகிப் பொருந்தி விளங்கினர். தாம் பழகிவந்த கள வினியல்பால் சோற்றின் பொருட்டும் நெறி தவறி வந்தார் என்ற அனைவரும் அவரை யிகழ்ந்து வசவ தேவரது மாண்பினைப் புகழ்ந்தார். களவின் கண்ணே காதலிபுடையவர் அளவின்கண் ணை நின்றொழுகமாட்டார் என்பதை அவ் எழுவரும் அன்று காட்டி நின்றார். (விரிவை வசவர் சரிதையில் காண்க.)

வெள்ளிவணைப் பெருந்தகைக்கி யாஞ்செய்படிமை மெய்யாகக்
கள்ளிடம் புனைந்திருந்த கள்வரெல்லாங் களங்கமறும்
உள்ளமோடு மெய்யடியா ராகவுள்ளத் துள்ளுமருள்
வள்ளலாகும் வசவேசன் மலர்த்தாள் தலையால் வணங்குவாம்.

(பிரபுலிங்க லீலை.)

இது, கள்வர்பால் வசவேசர் செய்த வண்ணமையை வியந்து சிவப்பிரகாசர் கூறியது.

களவில் ஆசையுடையார் அளவிறந்து தீமை செய்வார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

287. அன்றேன் களவை யடியவர்செய் யாரென்றார்
குன்றுதே சோர் குமரேசா—என்றிடம்
களவென்னும் கார்அறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். (எ)

இ.—ள்.

குமரேசா! குலதேசகராழ்வார் பரனடியவர் களவினைச் செய்பார் என்று என் உறுதியாகச் சொன்னீர் எனின், களவு என்னும் கார் அறிவாண்மை அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண் இல்லை என்க.

கார் அறிவு—இருண்ட அறிவு.

என்றது தனக்கு நன்மை இன்னதென்று உணராத ஒருவனது மருண்ட அறிவினை.

அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண் இல்—தேர்மை என்னும் வண்மையைப் பொருந்தினர்மாட்டு இல்லை.

அளவு என்னும் பெருமையைப் பொருந்தினரிடத்துக் களவு என்று சொல்லப்படுகின்ற மருண்ட அறிவு இல்லை என்பதாம்.

நல்ல அறிவினையுடையவரிடத்துக் களவு செய்தற்குரிய பொல்லாத அறிவு பொருந்தாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சோமன்னன்பாலிருந்த திருமாலையவர்பால் தெளியப்படும்.

கதை.

திருவஞ்சிக் களம் என்னும் திரு நகரிலிருந்து சென்கோல் செலுத்திய குலசேகரன் என்னும் சேரர் பெருமான் மாலடிக்கே மனங் குழைந்த மாதவராதலால் அவரது ஆதரவில் பாகவதர்கள் பலர் குழுமியிருந்தனர். அடியவர் பக்கல் அவ் அரசர் பெருமான் ஆற்றிவருகின்ற அருமைகளைக் கண்டு அமைச்சர்கள் பொறாமைகொண்டார். அதனால், விரியுடர்ந்த நவமணி மாலை ஒன்றை அரசமாளிகையிலிருந்து ஒருநாள் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு, மனைவர்களை அதனைக் களவு செய்திருப்பார்கள் என்று அரசனிடஞ் சென்று அமைச்சர்கள் அறிவித்தார். இவ் இழிந்த தொழிலை அவ் உயர்ந்தார் செய்யார் என்று அரசன் சினந்து அமைச்சரையே வெறுத்தான். மாலடியவர் நெறி நின்று ஒழுகிய அறிவுடையவராதலால் களவு என்னும் தீமையை ஒருபோதும் செய்திலர். இஃது என் உளந்தெளிந்த உண்மையாம். உலகறிய இதற்கு நானே உறுதி கூறுவேன் என்று துணிந்து ஒரு குடத்தில் நாகப் பாம்பை அடைத்து அவை நடுவே இருத்தும்படி செய்து, எம்பால் உள்ள மனைவர் மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களும் புனிதமாயிருப்பது உண்மையாயின் இப் பாம்பு என்னைக் கடியாதிருக்கக்கடவது

என்று பலருங் காண அக்குடத்துள் தமது செங்கையைவிட்டார். அது யாதொரு ஊறுஞ் செய்யாது அத்திருக்கரத்தைச் சுற்றிக்கொண்டு கடகம்போல் விளங்கியது. அனைவரும் வியந்து அரசையும் அடியவரையும் புகழ்ந்தார். அமைச்சர்கள் நடுங்கி அடிவணங்கி மன்னிக்கும்படி மன்னனை வேண்டினர். உளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண், களவு என்னும் கார் அறிவு இல்லை என்பதை அரசன் அன்று உலகறிய உணர்த்தினான்.

(விரிவை ஆழ்வார் சரிதையில் காண்க.)

ஆரங்கெடப்பரன் அன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற் கையிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடிவேந்தர் சிகாமணியே.

(மணக்கால் நம்பி.)

மேற்குறித்தவுண்மை இதனால் இனிது தெளிவாதல் காண்க.

களவு என்னும் தீமை நல்லோர்பால் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது.

288. திண்டோட் சயித்தவன்றன் தீரநெஞ்சிற் புன்கரவுங்
கொண்டுநின்றான் என்னே குமரேசா—உண்டாம்
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. (அ)

இ—ள்.

குமரேசா! சயித்தவன் தனது வீரம் பொருந்திய நெஞ்சில் என் வஞ்சம் பொருந்தி நின்றான் எனின், அளவு அறிந்தாரது நெஞ்சத்து அறம் நிலைபெறுதல் போல களவு அறிந்தாரது நெஞ்சில் கரவு நிலைபெறும் என்க.

கரவு—வஞ்சனை. களவு அறிந்தார்—களவையே பழகினவர்.

அளவு அறிந்தார்—உண்மையை அளந்து தெளிந்து அதனையே பழகினவர்.

நெறி அறிந்தவர் நெஞ்சில் அறம் நிலைபெறுமாறுபோல், களவறிந்தவர் நெஞ்சில் வஞ்சனை நிலைபெறும் என்பதாம்.

களவு என்னும் காரறிவானது பேரறிவாளரை அணுகாது என்று மேலே கூறினர், இதில், அவர் நெஞ்சில் அறம் நிலைபெற்றாற்போல அக் கள்வர் நெஞ்சில் கரவு நிலைபெறுமென்றார்.

எவ்வளவு உயர்ந்த நிலையினை யெய்தியிருப்பினும் களவையே பழகினவர் உள்ளத்தில் வஞ்சம் ஒழியாது நிற்குமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சயிந்தவன்பால் உணரப்படும்.

கதை.

சயிந்தவன் என்பவன் சிந்து தேசத்து வேந்தன். சயத்திரதன் என்னும் பெயரினையுடையவன். துரியோதனன் தங்கையாகிய துச்சலையை மணந்தவன். நல்ல போர்வீரனையிருந்தும் இவன் நெஞ்சில் வஞ்சம் நிலைத்திருந்தது. பாண்டவர் காமிய வனத்திலிருக்குங்கால் இவன் ஆண்டுக் கரவுடன் சென்றான். ஐவரும் நீங்கிய அமையம் பார்த்துத் துரோபதைபால் அணுகினான். அவ்வுத்தமி இவனை உபசரித்து நாட்டின்னார் நலங்களை நன்கு வினவினாள். சிறிது பொழுது கழிந்தபின் அவ்வஞ்சனை இவ்வஞ்சன் வலிந்து சுவர்ந்து விரைந்து சென்றான். அங்கல்லாள் அழுகுரலைக் கேட்டு ஐவருந் தொடர்ந்தோடி யிவனைப் பிடித்துப் பிணித்து இழிவினை பலவுஞ் செய்து கழுதைமேல் ஏற்றி அத்தினபுரியை நோக்கி அனுப்பிவிட்டுப் பத்தினியைத் தேற்றிக்கொணர்ந்து பண்டுபோல் அமைந்து பண்புடனிருந்தார். களவு என்னும் காரறிவாண்மையால் அளவில்லாத துன்பத்தையும், அவமானத்தையும் இவன் அடைந்தான். கொடுவினை செய்திருந்தும் இவனைக் கொல்லுதல் தீது என்று ஒழித்து ஐவரும் அறங்குறித்து நின்றார். சிறந்த அரசனையிருந்தும் களவையே பழகியதால் இவன் நெஞ்சில் கரவுடையனுகிக் கடும் பழி பூண்டான்.

விரிவைப் பாரதத்தில் காண்க.

நல்லோருள்ளத்தில் நேர்மையும், கள்வருள்ளத்தில் களவும் குடிகொண்டிருக்குமென்பது இதனல் கூறப்பட்டது.

---

289. அன்று களவால் அமிழ்துண்டார் எனுடனே
குன்றி யழிந்தார் குமரேசா—என்றும்
அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர். (கூ)

இ—ள்.

குமரேசா! அன்றுகளவால் அமிர்தத்தையுண்டவர் என் உடனே அழிவுற்றார் எனின், களவு அல்ல மற்றைய தேற்ற தவர், அளவு அல்லாதவற்றைச் செய்து ஆங்கேவீவர் என்க.

மற்றைய என்றது களவல்லாத வேறு நல்ல முயற்சிகளை.

களவு அல்ல மற்றைய தேற்றதவர்—களவல்லாத பிற நெறி களை அறியாதவர். களவை அன்றி வேறொன்றையும் அறியாதவர் எனினுமாம்.

அளவு அல்ல செய்து—அளவு அல்லாத தீமைகளை எண்ணி. இங்கு அளவு என்றது அறிவால் ஆய்ந்தளந்த நெறியினை.

ஆங்கே வீவர்—அப்பொழுதே கெடுவர். கெடுதல் ஒருதலை எனபதை எகாரம் உணர்த்திநின்றது.

களவினலன்றிப் பொருள் பெறுதற்குரிய வேறு நெறிகளை அறியாதவர் நெறியல்லாத தீமைகளை நினைந்து உடனே கெடுவர் என்பதாம்.

களவே பயின்றவர் கடிதே கெடுவர் என்பது கருத்து.

கள்வர்க்கு இழிவும் அழிவும் உடனே உளவாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராகு கேதுக்கள் பால் அறியப்படும்.

கதை.

இராகு என்பவன் விப்பிரசித்தி என்னும் ஓர் அசுர வீர னுடைய புதல்வன். தாய் பெயர் சிம்மிகை. தம்பி கேது. திரு மால் மோகினி உருவங்கொண்டு அசுரர்களை மயக்கி அமிர்தத் தை அமரர்களுக்குப் பகுந்துகொடுக்கும்பொழுது இராகுவும், தம்பியும் அமரர்போல் உருமாறி ஆங்குப் புகுந்து அவ் அமிர்தத் தைக் களவால்கொண்டு கனிந்து உண்டார். உண்ணுங்கால் அவ் வுண்மையைத் திருமாலுணர்ந்து தன் கையிலிருந்த சட்டுவத்தால் அடித்தார். அவ்அடியால் இராகுவின் தலை துணிபட்டது. அமி ர்துண்டகலத்தால் தலையும் உடலும் இருவடிவாகி இலங்கிநின்றன. தப்பிச்சென்ற தம்பியின்பெயரையே அத்தலையின் உடலுக்கு நல முறை இட்டார். தம்மைச் சுட்டிக்காட்டிய சூரியசந்திரராகிய அவ் இருவர்மீதும் இராகு கேதுக்கள் என்னும் இவ் இருவரும் பெரும் பகைகொண்டு புழுங்கி நொந்தார். களவையே பயின்ற வர் அளவில்லாத தீமைகளைச்செய்து ஆங்கே கெடுவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.)

கள்வர் கடிதில் கெடுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

290. பண்டேடன் வசுக்கள் பசுக்களவால் தம்முடம்பும்
கொண்டனவும் தீர்ந்தார் சுமமீசா — அண்டிநின்று
கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை தள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் ளுலகு. (ஈ)

இ—ள்.

சுமமீசா! வசுக்கள் என்மரும் தமது உடம்பும் உயிர் நிலையும் என் களவினால் ஒருங்கே இழந்தார் எனின், கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும்; கள்ளார்க்குப் புத்தேள் உலகும் தள்ளா தென்க

உயிர்நிலை—உடம்பு. உயிர் நிற்றற்கு இடம் என்னும் ஏது வான் வந்தது. கள்வார்க்கு—களவினைச் செய்வார்க்கு. உயிர் நிலை, உலகு, என்னும் ஈரிடத்தும் நிற்கவேண்டிய உம்மைகள் தொக்குநின்றன.

கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும்—கள்வர்க்குத் தமது உடம்பும் தவறும். என்றது மரண தண்டனையை அரசன் கள்வர்க்கு விதிப்பன் என்பது கருதி.

கள்வர்க்குத் தமது உடம்பும் தவறிவிடும்; களவு செய்யாதவர்க்கு, தெய்வவுலகமும் தவறாது கிடைக்கும் என்பதாம்.

கள்வர் இம்மையில் மரண தண்டனையை அடைந்து மறுமையில் நரகம் புகுவர்; கள்ளாதவர் இங்குப் புகழும் இன்பமும் எய்தி பின்பு புத்தேளுலகமும் பொருந்துவர் என்பது கருத்து.

களவினை விரும்புவோர் தாம் பெற்றுள்ள உயர் நலமெல்லாம் ஒருங்கேயிழந்து பிழிவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை பிரபாசன் முதலிய வசுக்கள் எண்மர் பாலும் உணரப்படும்.

கதை.

வசுக்கள் என்பவர் திசைகாப்பாளர்போல் என்றும் எண்மராய் நின்று விளங்கும் தெய்வ மரபினர். அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்பன அவர்கட்குப் பெயர்களாம். இவருள் பிரபாசன் என்பவன் தன் மனைவியாகிய வசுமதி பால் பெருங் காதலுடைய வனாதலால் அவள், விரும்பிய ஏவற்றையும் விரைந்துகொண்டு தந்து அவள் இன்புறுவதைக் கண்டு தான் இன்புறுபவன். ஒரு நாள் காம தேனுவைக் கொண்டுவரும்படி வசுமதி கணவனிடம் கூறினாள். பிரபாசன் இசைந்து தன் துணைவர் எழுவருடன் கூடி நள்ளிரவில் வசிட்டர் மனைக்கு வந்தான். அங்குத் தங்கியிருந்த அத் தெய்வப் பசுவை அவர் அறியாவகை கவர்ந்துசென்றான். மனைவி பால் தந்து மனமகிழ்ந்திருந்தான்.

விழந்த பின் வசிட்டர் மெய் யுணர்வால் ஆய்ந்து மெய்ம் மையைத் தெளிந்தார். உயர்ந்தவரா யிருந்தும், களவு என் னும் இப் பழிவினையைச் செய்ததால் அவரினவரும் இழிந்தவரா கும்படி சபித்தார். அவ்வாறே அவரினவரும் தெய்வவுருவினை யிழந்து இந்நிலவுலகை நோக்கி யிழிந்தார். அயனிடு சாபத் தால் நிலை யிழந்து வரும் சுரநதியை இடை வழியில் கண்டார். அவள் அடிகளை வணங்கினர். அந்நதி மடந்தை அவர்களுக்கு அருள்புரிவதாக ஆதரவு கூறினாள். அவ்வாறே தான் கங்கை யாய்த் தோன்றிச் சந்தனுவை மணந்த காலையில் தன் வயிற்றில் தோன்றிய புதல்வர் எழுவரையும் புனியில் தோன்றவண்ணம் தொலைத்துப் போக்கினாள். பிரபாசன்மட்டும் பிறந்து வளர்ந் தான். முன்னைப் பெண்வழிச் சென்று பிழை செய்தமையால் பின்னைப் பெண் இன்பம் இன்றிப் பெரு நாள் இருந்தான். இவ னே வீடுமன் என்க. கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும் என் பதை உலகம் இவன்பால் உணர்ந்து நின்றது. விரிவைப் பாரதத் தில் தெளிக.

கள்வர், கள்ளாதார், என்னும் இருவர்க்கும் உளவாம் பயன் இதனால் ஒருங்கு கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.)

பிறருடைய பொருளை வஞ்சித்துக்கொள்ளும் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்கவேண்டும். களவினை உள்ளத்தால் உள் ளினும் பெருந் தீங்கு உண்டாம். களவினால் உண்டாம் செல்வம் பழியை விளைத்து விரைவில் அழிவை அடையும். களவின் மீது காதலுடையவர் அளவில்லாத துன்பங்களையடைவர். களவு செய்வோர் உள்ளத்தில் அருள் உண்டாகாது. நெறி நின்று ஒழுகும் நேர்மையை அவர் அடையமாட்டார். களவென்னும் தீமையை அறிவுடையார் அறிகுவர். நல்லோர் உள்ளத்தில் அறம் நிலைத்திருத்தல்போல் தீயோர் உள்ளத்தில் களவு நிலைத் திருக்கும். களவே பயில்வோர் அறிவே யுடையர். கள்வர்க்கு மரண தண்டனையும் இழி பிறப்பும் உளவாம். களவு செய்யா

திருக்குறட் குமரேச வெண்பா.

தவர் புகழும் இன்பமும் பொருந்திப் புத்தேளுலகத்தை அடைவர் என்பனவாம்.

29-வது கள்ளாமை முற்றிற்று.

ஙய-ம் அதிகாரம் வாய்மை.

அஃதாவது உண்மையினது தன்மை. உள்ளம், வாய், மெய் என்னும் மூன்றிடத்தும் இது தோன்றுமாதலால் உண்மை, வாய்மை, மெய்ம்மை என உரைக்கப்படும். கள்ளம் இல்லாத உளவுமுடைபார்க்கே பொய் சொல்லாமை என்னும் இந் நல்லறம் நன்கு அமையுமாதலால் கள்ளாமையின் பின்வைக்கப்பட்டது.

---

291. உள்ளதே சொன்னன் உயர்தருமன் பொய்யனென்று
கொள்ளநின்றான் என்னே குமரேசா—தள்ளாத
வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். (க)

இ—ள்

குமரேசா! உள்ளதையே சொல்லியும் தருமர் என் பொய்யர் என்றுகொள்ள நின்றார் எனின், வாய்மை எனப்படுவது யாது எனின், யாது ஒன்றும் தீமை இல்லாத சொற்களைச் சொல் லுதலெயாம் என்க.

தீமை யாதொன்றும் இலாத சொலல்—தீங்கு சிறிதும் உண் டாகாத சொற்களைச் சொல்லுதல்; இலாத என்பது ஈண்டுப் பெயராய் நின்றது.

மெய்ம்மை என்று சொல்லப்படுவது யாது எனின், பிறி தோருயிர்க்கு யாதொரு தீமையும் பயவாத சொற்களைச் சொல் லுதலெயாம் என்பதாம்.

உள்ளதை உள்ளதாகவும், இல்லதை இல்லதாகவும் சொல்லுதல் வாய்மையன்று; பிறவுயிர்கட்குத் தீமை சிறிதும் இல்லாத சொற்களைச் சொல்லுதலே வாய்மையாம் என்றபடி.

உண்மை இஃதென்று இதில் உணர்த்திய ஒண்மையை ஊன்றி உணர்க.

உள்ளபடியே நிகழ்ந்ததை ஒருவன் சொல்லினும் அதனால் பிறர்க்குத் தீமை விளையுமாயின் அவன் பொய்யின் பயனை எய்துவான் என்பது கருத்து. இவ் வுண்மை தருமர் பால் காணப்படும்.

கதை.

பாண்டவர்கட்கும் துரியோதனன் முதலானவர்கட்கும் பெரும் போர் தொடங்கி நடந்துவருங்கால் பதினைந்தாம் நாட் போரில் துரோணரைக் கொல்லக் கருதிய கண்ணன் அவ் வில் வீரனை வெல்வது அரிது என்று தெளிந்து வெய்ய சூழ்ச்சி ஒன்று செய்தான். அவருடைய மகனிய அசுவத்தாமன பொருது இறந்தான் என்று தருமர் வாயால் சொல்லப்படின், அச் சொல்லால் உள்ளங் கலக்கி விலை—ாது மெய் மறந்து நிற்பர், அவ்வமையம் அவரை வெல்லலாம் என்று துணிந்து தருமரையணுகி அவ்வாறே சொல்லும்படி வேண்டினர். 'பொய்யிற்கு ஆள்வது இந்தப் புவியாலோ' என்று அவர். வெறுத்து மறுத்தார். மாளவதேசத்து மன்னனாகிய இந்திரவன்மன் எனுமவன் மதயானை ஒன்று அன்று மாள நேர்ந்தது. அதற்கும் அசுவத்தாமா என்றே பெயரிடப்பட்டிருந்தது. உண்மையில் நிகழ்ந்ததால் அதைதியனுஞ் சொல்லுக என்று கண்ணன் தொடர்ந்து மொழிந்தான். என்செய்வார் தருமர்; இசைந்தார்.

"அத்தனை அறிவில்லாண்மை அச்சுவத்தாமா என்னும் மத்தகவா ணைத்துக் கையோ மாருதி சிங்கமா ணென்" என்று பங்க முறக்கூறினர். இவ் வுரையைக் கேட்டவுடனே தன் மகனை இறந்தான் என்று துரோணர் நம்பித தன் வில்லையும் கணையையும் விசயியிறந்து மெறிந்து நின்றார். அவ்—மயம் நிட்டதத் துய்ட்டன் மீட்

டகணையால் அவர் தலை துள்ளி விழுந்தது. மெய்யே விரதமாக வுடைய தருமரும் பொய் புகன்றார் என்று ஒரு புன்மொழி பரந்தது. அதன் பயனைத் தருமர் ஒருமுறை நரகத்தைக் காணும்படி நேர்ந்தது. உண்மையாக நிகழ்ந்ததைக் கூறினும் பிறிதோருயிர்க்குத் தீமை பயக்குமாயின் அது பொய்ம்மையாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

கற்கொண்டு கன்மழைமுன் காத்தகள்வன் கட்டுரைத்த
மொழிப்படியே கருதார் போரில்
முற்கொண்ட விரதமறந் தியாருங்கேட்ப முரசுயர்த்தோன்
பொய்சொன்னென் முடிவிலத்தச்
சொற்கொண்டு வெறுங்கையனும் அளவிற்றிட்டத்
துய்மனென நின்றகுருத்துரோகி கொன்றான்
வில்கொண்டு பொரநினைந்தால் இவனேயல்ல விண்ணவர்க்கும்
எந்தை தனை வெல்லலாமோ.

(பதினைந்தாம் போர்ச்சருக்கம்.)

இது, தம் தந்தையாரை வஞ்சனையால் கொன்ற வகையினை யறிந்து அசுவத்தாமன் வருந்தி யுரைத்தது.

வாய்மை இன்னதென்பது இதனால் வகுத்துக் கூறப்பட்டது.

---

292. மாதர் கலக்கோட்டு மாமுனிபால் பொய்யுரைத்தும்.

கோதடையார் என்னே குமரேசா—தீதுடைய
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் (உ)

இ.—ள்.

குமரேசா! கமலை சுலோசனை என்னும் மாதரிருவரும் கலக்கோட்டு முனிவர்பால் பொய்யுரை புகன்றும் என் நன்மை யெய்தினர் எனின், புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின், பொய்ம்மையும் வாய்மை இடத்தவாம் என்க.

புரை தீர்ந்த நன்மை—குற்றம் நீங்கிய நன்மை.

குற்றமற்ற நன்மையைக் கொடுக்குமாயின், பொய்ம்மைச் சொற்களும் வாய்மைச் சொற்களின் பாலவாம் என்பதாம்.

பொய்ம்மை என்பது பால் பகா அஃறிணைப் பெயராதலால் இடத்த என்னும் பலவின்பால் முற்றுக்கேற்ப இங்குப் பன்மையாய் நின்றது.

தீமையிலாத சொலலே வாய்மை என்று மேலே கூறினர் இதில், அச்சொல் பொய்ம்மையா யிருப்பினும் மெய்ம்மையாம் என்றார்.

பிறர்க்குத் தீமையில்லாதபடி விதேஷமாக ஒருவன் பொய் கூறினும் அது பாவமாகுமாதலால் அதனை விலக்குதற்கு நன்மை பயக்குமெனின் என்றார்.

தனக்கு நன்மை பயக்குமாறு ஒருவன் பொய் கூறி அதுவும் வாய்மை இடத்தவாம் என்று இதனை வலிந்தெடுத்துக்காட்டி வாய்ப் பறை கொட்டலாகாதென்பது "புரைதீர்ந்த" என்னும் அடையால் தெளியப்படும்.

பிறர்க்கு யாதொரு தீமையும் இல்லாமலும், கேடினும் சாவேனும் அடையநின்றதோரு யிர் அவற்றினின்றும் நீங்கி இன்புறுமாறு எழுகின்ற பொய்ம்மையே அறிவுடையோரால் மெய்ம்மையாகக் கருதப்படும் என்பது கருத்து.

பொய்ம்மையாயினும் புரைதீர்ந்த நன்மை பயக்குமாயின் அது மெய்ம்மையாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கமலை சுலோசனை என்னும் இருவர்பாலும் காணப்படும்.

கதை.

கமலை சுலோசனை என்னும் மாதர் இருவரும் உரோமபதன் என்னும் அரசனுடைய திரு நகரிலிருந்தவர். அழகால், பாடலால், ஆடலால் சிறந்தவர். கல்வியறிவோடு சொல்வன்மையும்

வாய்ந்தவர். கலிங்கோட்டு முனிவரின், தன் நாட்டில் மழைவரும் என்று கலிஞர் கூறியதைக் கேட்டு அம்முனிவரனைக் கொணரும் வகையாதென்று அரசன் கவலுங்காலையில் இம்மகளிரிருவரும் எழுந்து யாம் போகி அவ் அருந்தவனைக் கொண்டுவருகின்றோம் என்று கூறிச் சென்றார். மாந்தரை விலங்குகள் என்று உன்னு மனத்தனைப், மாதவத்தனைப் உலக நாட்டமின்றி உணர்வையே காடி நிற்கும் அவ் உயர்தவனை யணுகித் தாழும் அருந்தவர்போல் நடித்து இனிய மொழிகள் பல அவர் மனங்கொள மொழிந்தார். நாள் பல கழிந்தபின் தம் பொய்ம்மைச் சொற்களால் அம் மெய்ம்முனிவனை மயக்கித் தம் நகருக்கே கொணர்ந்தார். மாதவன் வருகையால் மழையும் பெய்தது. அரசனும் பிறரும் அறிந்து ஓடிவந்து அருந்தவனை வணங்கினர் மன்னரும் பொய்ம்மையால் மயங்கி வந்தோம் என்று முனிவர் தெளிந்தார். முனிவுகொண்டார். அடிகள் எய்தியதால் யான் பெய்தியிருந்த கேடு நீங்கி அளவிலின்ப மெய்தினேன் என்று அரசன் போற்றினன். முனிவர் முனிவு நீங்கி இனிதருள் செய்தார். தமது பொய்ம்மையால் புரைதீர்ந்த நன்மையை விளைவித்த அம்மாதர் நலம் பல பெற்று நன் மதிப்புற்றார்.

உம்மையின் மறுமைதன்னில் உறுபயன் இரண்டும் பார்க்கின்
இம்மையில் விளங்கும் யார்க்கும் யவரவர் இயற்கையாலே
மெய்ம்மையே ஒருவர்க்குற்ற விபத்தினை விலக்குமாகிற்
பொய்ம்மையும் மெய்ம்மைபோலப் புண்ணியம் பயக்குமாதோ.

(பாரதம்.)

பொய்யும், நன்மை பயக்குமாயின் மெய்யாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

293. வேதாவும் தாழுபுழுன் வெய்யதொரு பொய்புகன்றேன்
கோதடைந்து நொந்தார் குமரேசா—வேதனும்
தன்னைஞ் சறிவது பொய்பற்ற பொய்த்தபின்
தன்னைஞ்சே தன்னைச் சுடும்.

(கூ(

இ.—ள்.

குமரேசா! அயனும், தாழையும் வெய்ய பொய்யை முன் புகன்று, பின் என் துன்பமெய்தி நொந்தார் எனின், தான் நெஞ்சு அறிவதைப் பொய்யற்க; பொய்த்தபின், தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்க.

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க—தன் மனம் அறிந்ததை மறையாது மொழிக.

ஒருவன், தன் மனம் அறிந்ததொன்றனைப் பொய்யாது மொழியவேண்டும்; பொய்த்தாலுயின் தன் மனமே பின் தன்னை வருத்தும் என்பதாம்.

எகாரம் உரிமையை விளக்கிநின்றது. சுடும் என்றது துன்பமிகுதி தோன்ற என்க.

மனம் அறிந்ததை மறைத்து, மாறொன்று கூறின், அம்மனமே கரியாய் நின்று பெருந் துன்பத்தை விளைவிக்கும் ஆதலால் அதனை ஒருவன் மறந்தும் கூறலாகாதென்பது கருத்து.

பிறர் அறியார் என்று கருதி ஒருவன் பொய் கூறின் அது பின் உலகறிய வெளிப்பட்டு அழியாத பழியையும் தொலையாத துன்பத்தையும் அவனுக்கு நிலையாகக் கொடுக்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிரமன் பாலும் தாழை மலர் பாலும் உணரப்படும்.

கதை.

ஆதியூழியில் அழலுருவாய்த் தோன்றிய இறையனது திருமுடியை அறிந்து வருவதாக மாலிடம் வாது கூறி அயன், அன்ன வடிவங்கொண்டு மேலெழுந்து பறந்தான். பல்லாயிர வருடங்கள் கழிந்தும் ஒரு சிறிதும் யாரைது உளந் தளர்ந்து நொந்தும் ஊக்கம் விடாமல் மேன்மேல் உயர்ந்து சென்றான். செல் லுங்கால் விளைந்து தாழ்ந்து வருகின்ற தாழம் பூ ஒன்றை இடை

யே கண்டான். "நீ யார் எங்கிருந்து வருகின்றாய்" என்று அதன் இயல்பினை வினவினான். அது தெய்வ மலராதலால், தன் திருவாய் திறந்து "யான், தவ நலத்தால் தாழும் பூவாகிப் பரமன் திருமுடியிலிருந்தேன், ஓர் இழுக்கால் அதிலிருந்து வழுவி வீழ்ந்தேன், நாற்பதிரண்டு வருடங்களாயின இழிந்துபோகின்றேன்" என்று உளைந்து மொழிந்தது. அயன் கேட்டு அஞ்சித் தன் கருத்து முற்றுதென்று தெளிந்து தன் இயல்பினை அதற்கு உணர்த்தி, தான் பரமன் முடியினைக் கண்டதாகத் தன்னுடன் வந்து மாலிடம் உறுதிசொல்லும்படி அதனைப் பெரிதும் வேண்டினன். அதுவும் இசைந்து, அவ்வாறே வந்து மாலிடங் கூற, அயனும் நானதுவாம் என மொழிந்தான். உடனே ஒளியுருவாய் நின்ற தனிமலபரர் என்று வெடித்து "பொய், பொய்" என்று உலகறிய ஒலித்தது. அயனும் கைதையும் அஞ்சி நடுங்கினர். உள்ளந் தியவுயிருந் தேம்பினர். ஈசன், அயனை எசி நோக்கி

"வாசமா மலரவ உனக்கு மண்ணின் மேல்
பூசையும் கோயிலும் போக என்றனன்."

அதன்பின் தாழும் பூவை நோக்கி

"கைதையே இவனெடு கரவு நீயுரை
செய்ததால் தீண்டிலேம் என்று நீர்த்தனன்." என்றான்.

இவற்றைக் கேட்டு,

அவ் இருவரும் பொய்ம்மையாலெய்திய புண்மையை எண்ணி யெண்ணி யேங்கினர். பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்பதை அவர் அன்று உணர்ந்து நாணினர்.

பிறரறியார் என்று ஒருவன் பொய்கூறின், அது பலரும் அறியத் தோன்றி அவனுக்குப் பழியையும் துன்பத்தையும் விளைவிக்கும் என்பதை உலகம் அவர்பால் உணர்ந்தது.

அண்ணிய கினையுமில்லும் அரும்பெறன் மகவும் அன்பும்
திண்ணிய பெருமை மிக்க செல்வமுந் திறலுந் தேசும்
எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமுமேனைப்
புண்ணியம் அனைத்துஞ்சேரப் பொய்ம்மையாற் பொன்றுமன்றே.

(பாரதம்.)

தன் நெஞ்சே தன்னை வருத்துமாதலால் பொய்யை ஒருவன் யாண்டும் கூறலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

---

294. வள்ளலரிச் சந்திரனே னைபத்தா ருள்ளமெல்லாங்
கொள்ளநின்றா னின்றுங் குமரேசா—எள்ளளவும்
உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (சு)

இ—ள்.

குமரேசா! அரிச்சந்திரன் உலகிலுள்ள எல்லாருடைய உள்ளங்களிலும் என் இன்றும் நின்றுளான் எனின், உள்ளத்தால் ஒருவன் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அவன் உளனும் என்க.

பொய்யாது ஒழுகின்—பொய் கூறாது ஒழுகுவனையின். ஒழுகின் உளன் என்று காண்க.

தன் உளம் அறிய ஒருவன் பொய் சொல்லாது ஒழுகுவனையின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அவன் உளனுவன் என்பதாம். மெய்யுடை ஒருவனை உணர்வுடையாரெல்லாரும் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றுவராதலால் "உள்ளத்துள் எல்லாம் உளன்" என்றார்.

மேல், தன் நெஞ்சறியப் பொய்த்தானை அந்நெஞ்சே சுடும் என்றார்; இதில், அங்ஙனம் பொய்யாதானை உலகிலுள்ளார் உள்ளங்களெல்லாம் உவந்து போற்றுமென்றார்.

பொய் சொல்லாத ஒருவன் எக்காலத்தும், எவ்விடத்தும் எல்லாராலும் புகழ்ந்து போற்றப்படுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரிச்சந்திரன்பால் உணரப்படும்.

கதை.

அரசர் பெருமானாகிய அரிச்சந்திரன் கோசிகர் செய்த பொல்லாத சூழ்ச்சிகள் எல்லாவற்றினும் நிலை கலங்காமல் நின்று

பொய்யாதொழுகினர். அதன் பொருட்டுப் பதியும் நிதியும் இழந்து, தனது அருமை மனைவியையும் இனிய புதல்வனையும் பிரிந்து, தானும் பறையனொருவனுக்கு விலைப்பட்டுச் சுடலை காத்து நின்று, பொறுத்தற்கரிய பெருந்துயரங்களை அடைந்து அகங்குழைந்திருந்தார். ஆங்கும், முனிவர் வந்து காவுடன் நின்று ஒரு பொய் புகலின் இத்துன்பங்களெல்லாம் உனக்கு நீங்கியிது மென்று தனக்கு இனியவர் போன்று மொழிந்தார். அவ்வமை யத்தும் இவர் நெஞ்சினும் பொய்யைநினையாது நின்றார். அதன் பயனாக முதல்வர் மூவரும் இவர் முன்னே தோன்றி இன்னருள் புரிந்தார். இழந்தன எல்லாம் எய்தியின்புற்றார். நாடகசாலை களிலும் இவர் சரிதம் நடிக்கப்படுகின்றது. இவ் ஐயனைப் "பொய் சொல்லா மெய்யன்" என்று உலகம் இன்றும் போற்றிவருகின்றது. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்உள்ளத்துள் எல் லாம் அவன் உளனும் என்பதை உலகம் இவர்பால் கண்டது.

(விரிவை அரிச்சந்திர புராணத்தில் காண்க.)

சேய்மை யண்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையாம் மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி. (1)

புலையனும் விரும் பாதகிப் புன்புலால் யாக்கை
நிலையென மருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தகுமோ
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ. (2)

இம்மை யம்மைவீ டெனுமறை பொலன்கொள இயம்பும்
மும்மை யுந்தரும் முறையுடைத் தெனுநிலை முயலின்
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டெழிற்சுரை எளிவாய்
வெம்மை கூர்தர நுப்த்தனை மெய்ந்நனை ஜீ டமர்ஸ். (3)

பதி யிழந்தனம் பாலினை யிழந்தனம் பணைத்த
நிதி யிழந்தனம் இனியெமக் குளதென நினைக்கும்
கதி யிழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றூர்
மதி யிழந்துதன் வாயிழந் தருந்தவன் மனைந்தான். (4)

இவை, ஒரு பொய்யேனும் சொல்லுக என்று முனிவர் சொன்னபோது மன்னவன் சொன்னவை.

பொய்யாத ஒருவனை உலகமெல்லாம் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

295. பண்டு மனம்பொருந்தப் பாஞ்சாலி மெய்புகன்று
கொண்டாள்சீர் என்னே குமரேசா — உண்டாம்
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை. (5)

இ—ள்.

குமரேசா! பாஞ்சாலி மனம்பொருந்த மெய் சொல்லி வன் அதனால் மாண்பு எய்தினாள் எனின், மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு தானம் செய்வாரின் தலை என்க.

மனத்தொடு வாய்மை மொழியின் — உளம் பொருந்த உண்மையைச் சொல்லின். செய்வாரின் தலை — செய்பவரிலும் சிறப்புடையன்.

மேல், பொய்யாதொழுகுவானை உலகம் போற்றுமென்றார்; இதில், அருந்தவரிலும் பெருங்கொடையாளரிலும் அவன், சிறந்தவன் என்றார். பொய் சொல்லாதவன் புகழும் அறமும் பொருந்தி விளங்குவான் என்பது கருத்து.

மனம் பொருந்த மெய்ம்மையை ஒருவன், சொல்லுவனையின் அவன், தவமும் தானமும் ஒருங்கே செய்வாரிலும் சிறந்தவன் என்பதாம்.

வனம் புகுந்து தவம்புரிவாரினும், இல் இருந்து தானஞ்செய் வார்ரினும், மெய் சொல்வோரே மேலோர் என்றபடி.

பொறிகளை அடக்கியும், வருந்தி யீட்டிய பொருளை வை யாது கொடுத்தும் எய்துகின்ற பயனை மெய்ம்மையொன்றுனே ஒருவன் எய்தலாம் என்பது குறிப்பு.

மனம் பொருந்த மெய் சொல்வோர் மாதவரினும் மாண்பு டையவர்என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரோ பதைபால் உணரப்படும்.

கதை.

துரோபதை என்பவள் பாஞ்சால தேசத்து அரசன் புதல்வி. அதனால் பாஞ்சாலி என்று பெயர் பெற்றுள். இவள் பாண்டவரை மணந்து அவரோடு வனம் புகுந்து வருந்தி வாழுங் காலத்தில் ஒருநாள் அமித்திர முனிவருக்கு உரியதும் அருமைபு டையதும் இனியதுமாகிய விழுமிய நெல்லிக்கனி ஒன்றைக் கண்டு உண்ண விரும்பினள். உடனே அருச்சுனன் அதனைக் கொய்து கொடுத்தான். தருமர் கண்டு அதனியல்பைத் தெரிந்து முனி வர், முனிவரே என்று கலங்கித் தம்பியருடன் கலந்து கண்ண னைக் கருதினர். உடனே கண்ணனும் வந்து உண்மையை உணர்ந்து அவரை உரிமையோடு நோக்கி நீங்கள் அறுவரும் உங்கள் உள்ளத்தில் உள்ளதை ஒளியாது மொழியவேண்டும் என்றார். தரு மர் முதலிய ஐவரும் தம் மனத்தியல்பைத் தனித்தனி மொழிந் தார். அதன்பின் பாஞ்சாலி "அழகும் ஆண்மையும் வாய்ந்த கணவர் எனக்கு ஐவர் அமைந்திருந்தும் என்மனம் அமைதியின்றி இன்னும் ஒருவனை நாடுகின்றது; விழுமிய என் உள்ளமே இங்ங னம் விளைபுயாயின் மற்ற பங்கையரை எங்ஙனம் நம்புவது" என்று மகளிரது உணர்தற்கரிய மன நிலையை யாவரும் உணரு மாறு தன் நெஞ்சையே சான்று காட்டி உணர்த்தினள். உள்ள த்தின் இயல்பை உள்ளபடி சொல்லிய பாஞ்சாலியின் வாய்மை யின் மாண்பினை யாவரும் புகழ்ந்தார். விழுந்திருந்த பழமும் எழுந் துபோய்ப் பொருந்தினின்றது. உற்றது சொன்னல் அற்றது

பொருந்தும் என்ற ஓர் உயர்மொழி அன்று உதித்ததுழந்தது. மனத்தொடு வாய்மை மொழிந்ததால் தவத்தொடு தானஞ்செய் வாரினும் பாஞ்சாலி தலைமையுடையளாய் விளங்கினள்.

(விரிவைப் பாரதத்தில் காண்க.)

உலமந் தீர்ந்திடு வாய்மையி னான்றோயுறின் உலகிற்
றவமுந் தானமும் ஒருங்குறச் செய்தலிற் றலையாய்ப்
பவம கன்றுநான் மறைமுடி வாகிய பரம
சிவனு ரும்பதம் பெறும்படி யுயர்த்திடுந் தெரியின்.

(திருக்கூவப் புராணம்.)

தவஞ் செய்வாரினும் பொய் சொல்லாதவரே உயர்ந்தவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

296. போத உதத்தியனேன் பொய்யாமை பூண்டதனால்
கோதிலறங் கொண்டான் குமரேசா— தீதகன்ற
பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா அறமுந் தரும். (கூ)

இ.—ள்.

குமரேசா! உதத்தியன் என்பவன் பொய்யாமை ஒன்றே னை எல்லா அற நலங்களையும் என் ஒருங்கே எய்தினன் எனின், பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் என்க.

எய்யாமை என்பது, அறிதல், மெலிதல், இளைத்தல், என்ப வற்றை உணர்த்திவரும் எய்த்தல் என்பதன் எதிர்மறை. இஃது இங்கு எச்சமாகி வருந்தாமல் என்னும் பொருளில் வந்தது. இனி, எய்யாமையென்பதற்கு அறியாமை ஒன்றே பொருள் என்று கொண்டு பொய்யாமையானது எல்லா அறங்களையும் தன்னையுடை யானுக்குளவரும் அறியாவகை தானே கொணர்ந்து கொடுக்கும் எனவும் இது பொருள் கொள்ளப்படும்..

எய்யாமையே அறியாமையே. என்றது தொல்காப்பியம்.

ஒருவனுக்குப் பொய்யாமையை ஒத்த புகழ் இல்லை; அவன் வருந்தாதபடி எல்லா அறங்களையும் அது தானே கொணர்ந்து அவனுக்குக் கொடுக்கும் என்பதாம்.

கொடை, வீரம், முதலியவற்றினும் புகழ் உண்டாம் ஆயினும் பொய் சொல்லாமையால் ஒருவனுக்கு எய்தும் புகழ் போல் அது சிறந்ததில்லை என்பார் "பொய்யாமை அன்ன புகழ் இல்லை" என்றார். புகழ் என்னுங் காரிய ஆகு பெயராய்த் தான் தோன்றுதற்குரிய காரணத்தின்மேல் நின்றது. வள்ளல், வீரன், கல்வியாளன், எனப் பெயரெடுப்பதினும் பொய் சொல்லாதவன் என்று பெயர் பெறுவதே ஒருவனுக்குப் பெருஞ் சிறப்பாம் என்பது கருத்து.

பொய்யாமை, புகழையும் அறத்தையும் பொருந்தப் பயக்கும் என்றதனால் பொய்த்தல், பழியையும் பாவத்தையும் இழிவுடன் கொடுக்கும் என்பது பெற்றாம்.

மேல், வாய்மையுடையான் தானம் தவம் செய்வாரினும் மேன்மையுடையான் என்றார்; இதில், அவன் வருந்தாவண்ணம் எல்லாப் புகழறங்களையும் ஒருங்கே பொருந்தி இருமையினும் இன்பமெய்துவான் என்றார்.

பொய்யாமை ஒன்றுனே எல்லா நலங்களையும் ஒருவன் பொருந்தி விளங்குவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உதத்தியன்பால் உணரப்படும்.

கதை.

உதத்தியன் என்பவன் கோசல நாட்டிலிருந்த தேவதத்தன் என்னும் ஒரு வேதியன் புதல்வன். தாய் பெயர் உரோகிணி. பெற்றோர் கல்வி பயிலும்படி இளமைப் பருவத்தே ஓர் நல்லாசிரியன்பால் இவனை உய்த்தார். இவனுஞ் சென்று பயின்றான். வயது பன்னிரண்டாகியும் ஓரெழுத்தேனும் இவன் உணரப்பெற்றிலன். கல்வியை வருந்தி முயன்றும் அதுகை கூடாது

மையால் இவன்கலங்கி நொந்தான். தாயும் தந்தையும் தம்உள்ளே வருந்தினர். அவர் காணுந் தோறும் இவன், நாணங்கொண்டான். கல்லா உடம்பினும் கல்லே நல்லதென்று சொல்லி வெறுத்து ஒருநாளிரவு மெல்ல எழுந்து இல்லைவிட்டகன்று வனமொன்றில் புகுந்து தனியே வாழ்ந்தான். எவ்வகையாயினும் பொய் சொல்லலாகாதென்று துணிந்திருந்தான். ஆண்டுகள் பல கழிந்தும் இவன் ஆண்டே தங்கினன். முனிவர் பலரும் இவன் இயல்பினை முற்றுந் தெளிந்து சத்திய விரதன் என்று இவனுக்கோர் தனிப் பெயரிட்டார். வேட்டையில் தப்பித் தன் முன்னோடித் தன் குடிசையின் அயலிருக்கும் ஒரு புதரில் மறைந்த முள்ளம் பன்றியை ஆதலன் என்னும் வேடனொருவன் தேடி வந்தான். அடிச்சுவடு கண்டு இவனை அணுகிக் கேட்டான். உன்னதைச் சொன்னால் அப் பன்றியை இவன் கொன்றெறிவான். சொல்லவில்லையாயினும் பொய்யுரைப்போனே என் செய்வேன் என்று எங்கித் தன் நெஞ்சமுருகிக் கண்ணீர் சொரிந்தான். உடனே உலகமாதாவாகிய தேவி இவன் முன்னே தோன்றி "சத்திய விரத! நீ எண்ணிய எல்லாம் எண்ணியவாறே பெறுவாய்; அஞ்சற்க;" என்று அருள் செய்தனள். வேடனும் கேட்டு வியந்து நடுங்கினன். அதுமுதல் வேட்டலுஞ் செய்தலை விடுத்தான். சத்திய விரதனும் எல்லாக் கலைகளிலும் வல்லுநனைப்பப் பெருந்திருவெய்தித் தந்தை தாயரை அணுகி அன்பு செய்தாழுகி அரும் புகழ் படைத்து என்றுங் குன்றாத இன்பமெய்தினன். எல்லாப் புகழறங்களுந் பொய்யாமையால் ஒருவன் எய்யாமல் எய்துவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவைத் தேவி பாகவதத்தில் காண்க.)

பொய் சொல்லாதவனுக்கு எல்லா நலங்களும் ஒருங்கே உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

297. ஓரறமும் செய்யான் உயர்ந்தான் பொய்யாமை
யான்றால் கோரனென்பான் என்னே குமரேசா—சிருடைய
பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறப்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (எ)

இ.—ள்.

குமரேசா! கோரன் என்பவன் ஓர் அறமுஞ் செய்யாதிருந்தும் பொய்யாமை ஒன்றுதானே ஏன் எல்லா நலங்களையும் எய்தினன் எனின், பொய்யாமை பொய்யாமை ஆற்றின், பிற அறங்கள் செய்யாமை செய்யாமை நன்று என்க.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—பொய் சொல்லாமையையே பொய் சொல்லாமையையே ஒருவன் செய்ய வல்லனெயின்.

இடைவிடாதபடி மெய்மையையே என்பார் இருமுறை கூறினர். அதனைக் கடைபோகக்காக்கும் அருமை கருதி ஆற்றின் என்றார்.

பொய் கூறாமை என்னும் நன்மையை ஒருவன் இடைவிடாது செய்து வருவானெயின் அவன், வேறு அறங்கள் செய்யவே வேண்டாம் என்பதாம்.

வருந்திச் செய்யவேண்டிய தானம், தவம், முதலிய பிற அறங்களின் பெரும் பயன்களெல்லாவற்றையும் பொய்யாமை ஒன்றே எய்துவிக்கும் ஆகலால் அதனையே செய்தல் நல்லது என்பார் "அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" என்றார். அடிக்குகள் ஈரிடத்தும் உறுதியை உணர்த்திநின்றன.

இனி, பொய்யாமையைப் பொய்யாமல் ஆற்றின், பிற அறம் செய்யாமையைச் செய்யாமை நன்று எனவும் இது பொருள்படும். இதில், பொய்யாமல் என்பது வழுவாமல் என்பதையும், செய்யாமை செப்யாமை என்னும் இரண்டெதிர்மறையும் சேர்ந்து செய்தல் என ஓர் உடன்பாட்டையும், குறித்தன என்க.

பொய் சொல்லாமை என்னும் ஓர் அறத்தைத் தனக்கு உரிமையாகக் கொண்டவன் வேறு அறங்கள் யாதும் செய்யாவிடினும் அவற்றின் அரும் பயனனைத்தும் அவன் ஒருங்கே அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோரன்பால் தோற்றப்படும்.

கதை.

கோசன் என்பவன் கொங்கு நாட்டிலே வல்லம் என்னும் ஊரிலே யிருந்தவன். களவு முதலிய இழிதொழில்கள் பலவுஞ் செய்து வாழ்ந்துவந்தான். வருங்கால் கணிகர் என்னும் முனிவரொருவரைக்கண்டு இனிய மொழிகள் புகன்றான். அவர், இவன் மீது அருளுடையராகி இவனது தீய ஒழுக்கங்களைத் தெரிந்து இரங்கினர். தீவினைகள் துன்பத்தைப்பயக்கும் ஆதலால் அவற்றை ஒழிக என்று மொழிந்தார். இவனும் ஒன்றையும் ஒழிக்கா தொழுகினன். களவு முதலிய யாவும் விடமுடியாது. பொய்யைமாத்திரம்சொல்லாதிருப்பேன்என்று குருமுன்உறுதிசொல்லினன். குரு இசைந்து சென்றார். பொய் கூறலாகாதென்ற அவ் ஒரே துணிவினால் அவன் பழகிவந்த இழிவினைகளெல்லாம் தாமே ஒழியலாயின. இவனது மனநலத்தையும் வாய்மையின் மாண்டையும் அந்நாட்டுச் சிற்றரசன் ஒருவன் தெரிந்து இவனைத் தனக்கு அமைச்சனாக்கிக்கொண்டான். இவனும் சிறந்த புகழும் நிறைந்த இன்பமுமெய்தி உயர்ந்து விளங்கினன். பொய் கூறாமை என்னும் புண்ணியத்தையுடைய ஒருவன், வேறு அறங்கள் செய்யாவிடினும் அவற்றின் பயனை அவன் அடைவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இது கன்னமூலத்தில் காணப்படும்.

மெய்யே கூறுவோன் வேறொரு நறமுஞ் செய்யவேவேண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

298. மண்டு புகழ்ப்பர தன்மா சின்மை
கண்டறிந்தார் கொண்டமெய்யால் கன்னே குமரேசா—கொண்ட
புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையிற்காணப் படும். (அ)

இ.—ள்.

குமரேசா! பரதனது மனத் தூய்மையை அவனது வாய்மையால் என் தெளிந்தார் எனின், புறம் தூய்மை நீரான் அமையும்; அகம் தூய்மை வாய்மையால் காணப்படும் என்க.

புறம்—உடம்பு. அகம்—மனம். ஒருவனது உள்ளத்தின் தூய்மை அவன் சொல்லுகின்ற மெய்ம் மொழிகளானே உணரப் படும்; ஆதலால் "அகம் தூய்மை வாய்மையால் காணப்படும்" என்றார்.

புறம் தூய்மை நீரையின்றியமையாது, அதுபோல் அகம் தூய்மை வாய்மையை யின்றி அமையாதென்க. கருத்துப் பொருளை விளக்குதற்குக் காட்சிப் பொருளை எடுத்துக் காட்டினர்.

நீரால் உடம்பு புனிதமாம்; அதுபோல் வாய்மையால் மனம் புனிதமாம் என்பதாம்.

வெளிமாசு நீராலும், உள்மாசு மெய்ம்மையாலும் ஒழியுமெ மென்றுணர்த்தினர் இருவகைத் தூய்மையும் ஒருவன் எய்தவே ண்டுமென்பது கருத்து.

ஒருவனது மனத்தின் தூய்மை அவன் மெய்ம் மொழியால் உணரலாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரதன்பால் உணரப்படும்.

கதை.

இராமபிரானுடைய அருமைத் தம்பியாகிய பரதன் உத்தம குணங்களுக்கெல்லாம் உறைவிடமானவன். உண்மைக்கு ஓர் உயிரென இருந்தவன். இராமன் வனம்புகுந்த காலத்தில் தொடர்ந்து பின்சென்று அரசை வந்து ஆளும்படி அண்ணனை வருந்தி அழைத்தான். பதினான்கு வருடங்கள் கழித்து வருவ தாக அப்பெருமான் உறுதி கூறினான். குறித்த நாளில் வானில் ஓர் அறிகுறி தோன்றாமை கண்டு பரதன் உருகி மெலிந்

24.000+043

தான். மறுகிரீண்டான். இரகுகுலத்துள்ளான் வாக்கிற் பொய்யான் வரும் வரும் என்று உயிர்போக்கிப் போக்கிப் பொருமியிருந்தான். சூறிக்க எல்லையில் இராமன் வரவில்லை என்று கருதி முன் கூறியிருந்தபடி தன் ஆருயிரை அகற்றத் துணிந்தான். சோசலை முதலானவர் வந்து தடுத்தார். வாய்மை தப்பி வாழுவதினும் மாள்வதே எனக்கு மாண்பு என்று சொல்லி நெருப்பில் விழுச்சென்றான். அவ் அமையம் அனுமான் வந்து அதனை அவித்து இராமன் வரவை உணர்த்தினன். உடனே இராமன் வரக் கண்டு பெருங் களிப்போடு அவரது அடிகளில் தன் முடிபட வீழ்ந்தான். அவரும் அணைத்து மகிழ்ந்தார். அரச இன்பத்தை விரும்பாமல் மெய்யினுக்காகத் தனது அழகிய மெய்யினையும் நீக்கத் துணிந்த பரதனது மாசற்ற தன்மையை வியந்தார். அகந் தூய்மை வாய்மையால் காணப்படும் என்பதை அனைவரும் அவன் பால் உணர்ந்தார். (விரிவை இராமாயணத்தில் காண்க.)

வாய்மையால் மனம் தூய்மைபாம் என்பது இதனால் கூறப் பட்டது.

---

299. வென்றிக் கதிரத்தோர் மெய்க்காமன் மெய்யினையே
குன்றுமற் கொண்டார் குமரேசா—குன்றுக
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (சக)

இ.—ள்.

குமரேசா! கதிரதன் சத்தியகாமன் என்னும் இருவரும் மெய்ம்மையைத் தம் உயிரினும் உயர்வாகக் கருதி என் கைக் கொண்டார் எனின், எல்லா விளக்கும் விளக்கு அல்ல சான்றோர்க்குப் பொய்யாத விளக்கே விளக்காம் என்க.

நெய்விளக்கு, மணிவிளக்கு, கற்பூர விளக்கு முதலிய விளக்குகள் பலவுண்மையின் "எல்லா விளக்கும்" என்றார்.

பொய்யாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் ஈறு கெட்டுப் பொய்யா என நின்றது.

பொய்யா விளக்கு—பொய் கூறாமையாகிய விளக்கு.

எல்லா விளக்குகளுஞ் விளக்காகா அறிவானிறைந்தோர்க்கு பொய்யாமையாகிய விளக்கே விளக்காம் என்பதாம்.

மேல், வாய்மையை நீர்நாடு உவமித்தார், இதில், அதனை நெருப்போடு உருவகித்தார். விளக்கு உலகப் பொருள்களை விளக்கும்; மெய்ம்மை பரம்பொருளை விளக்கும்; ஆதலால் அவ்வுரிமை தோன்ற இதில், அவற்றைப் பொருந்தவைத்தார்.

சூரியன், சந்திரன், தீ என்னும் பேரொளிகளும் இயன்ற அளவிலைமைந்து விளங்கும் எல்லா விளக்குகளும் புறத்திருளை மாத்திரம் நீக்கி உலகப் பொருள்களைத் தோன்றச்செய்யும், பொய்யாமை அகத்திருளை நீக்கி, அறிதற்குரிய அவ் ஒரு பொருளையும் அறியும்படி செய்யும் ஆதலால் அவ் எல்லாவற்றினும் இம்மெய் விளக்கையே உயர்வாகக்கருதி அறிவோர் உரிமையாக்கொள்ளவேண்டுமென்பது கருத்து. வாய்மை தூய்மைக்கும், அது பரனருள் அடைதற்கும் ஏதுவாம் என்க.

பொய்யாமையுடையவரே பொன்றாத புகழைப் பொருந்தி விளங்குவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தசரதன்கண்ணும் சத்தியகாமன்பாலும் காணப்படும்.

கதை.

மெய்ம்மையைக் கடைபோகக் காத்தவருள் தசரதர் தலை நின்றவர். தான் சொல்லியிருந்த ஒரு சொல்லை மறுத்தற்கு கானிக் கண்ணினும் உயிரினும் சிறந்ததாகவெண்ணியிருந்த தன் தலை மகனைப் பிரிந்தார். உண்மைக்காகத் தனது அரிய வுயிரையுந் துறந்தார். பொய்யாமையை யாண்டும் இவர் பொய்யாமற் செய்த அருஞ் செயல்களை இராம கதையில் பல இடங்களினும் காணலாம். மெய்ம்மையும் மரபுங் காத்து மண்ணுயிர் தூறந்த வள்ளற் றன்மையன் எனவும், கைத்த சொல்லால் உயிரிழந்தும் புகழ்வாழ்பிரிந்தும் கடைபோட மெய்த்த வேந்தன் எனவும், மெய்யினுக்கு

இன்னுயிரீந்துபோய் வானுளெய்திய மன்னவன் எனவும், பொய்ப் பகையே மெய்க்கு அணியே புகழின் வாழ்வே எனவும், வாய்மை மாண்பால் இவர் வாழ்த்தப் பெறுவார். விரிவை இராமாயணத்தில் தெளிக.

கதை 2.

சத்திய காமன் என்பவன் சாவாலி என்னும் ஓர் முனிவன் புதல்வன். மெய்ம்மையையே என்றும் விரும்பி நின்றதனால் இப்பெயர் அவனுக்குக் காரணத்தான் வந்தது.

பொய்மையே பாவமெல்லாம் வினைகரு பூமியாகும்
பொய்மையே பிறவியெல்லாம் புகப்புரி வித்துமாகும்
பொய்மையே வறுமையெல்லாம் போதரப் புரிவதாகும்
பொய்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தாநிற்கும்.

என்னும் உண்மையை இனிது தெளிந்து அதனை யாண்டுந் தீண்டாது அருந்தவம் பூண்டவன். வாய்மையின் வழுவாத அவனது தூய்மையை அமரரும் முனிவரும் அகமகிழ்ந்து புகழ்ந்தார். இவற்குக் குறித்த இருவரும் பொய்யாமையைப் பொய்யாமல் ஆற்றி அதனால் என்றும் பொன்றாத புகழினை யெய்தினர். சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு என்பதை உலகம் இவர்பால் பொருந்தக் கண்டது.

மெய்ம்மை ஒன்றே மேலோர்க்கு விளக்கு என்பது இதனால் கூறப்பட்டது.

---

300. மாறில் சகாதேவன் வாய்மையினை யன்னையென்று
கூறினன் என்னே குமரேசா—தேறிநின்று
யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (ய)

இ.—ள்.

குமரேசா! சகாதேவன் வாய்மையே தனக்குத் தாய் என்று என் கூறினன் எனின், யாம் மெய்யாக் கண்டவற்றுள் எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை என்க.

யாம் மெய்யாக் கண்டவற்றுள்—யாம் உண்மையாகக் கண்டவற்றுள். வேதம் முதலிய எல்லா நூல்களினும் வாய்மை மெய்மை ஏகன்தே தலைமையாக நிலவுகின்றதென்பதும், அதனின் மிக்க நன்மையாண்மும் இல்லை என்பதும் கூறுவார் "யாம் கண்டவற்றுள் வாய்மையின் நல்ல பிற இல்லை" என்றார். "யாம்" என்று தாமே சான்றாய் நின்று உண்மையின் தலைமையை உணர்த்திய தேவரது தெளிவையும் தகவையும் இதில் ஊன்றி உணர்க.

யாம், உண்மையாகக் கண்ட அறங்களுள் எவ்வகையானும் வாய்மைபோல் மேன்மை வாய்ந்தது வேறு எதுவும் இல்லை என்பதாம்.

வாய்மையே எல்லா நலங்களும் தரும் தன்மையுடையதுள்ளது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சகாதேவன்பால் உணரப்படும்.

கதை.

சகாதேவன் தன் உள்ளத்தியல்பைக் கண்ணன்பால் உரைக்கும்பொழுது வாய்மையைத் தாயாகவும், தத்துவ வுணர்வைத் தந்தையாகவும், தருமத்தைத் தோணவனாகவும், கருணையைத் தோழனாகவும், அமைதியை மனைவியாகவும், பொறுமையை மகனாகவும், தான் கருதியிருப்பதாகத் தெரியவுணர்த்தினன். மற்றெல்லாரினும் தாய் எப்படி மக்களுக்குச் சிறந்தவளோ அப்படியே மற்றெல்லா அறங்களினும் வாய்மையே சிறந்ததென்று மதித்து அதனைப்போற்றி ஒழுகினன். அதனால் சகாதேவனும் அறமும் பொருந்தி விளங்கினன். இதனைப் பாரதத்தில் தெளிக.

மெய்ம்மையே எல்லா அறங்களினும் மேலானது என்பது இதனால் கூறப்பட்டது.

வாய்மை யென்னுமீ தன்றி வையகம்
தாய்மை யென்றுமொன் றுண்மை சொல்லுமோ
தீய்மை தானதிற் றீர்த லன்றியே
யாய்ம் மெய் யாகவே றறைய லாவதே. (இராமாயணம்)

பொய்யின் நீங்குமின் பொய்யின்மை யூண்டுகொண்
டையு மின்றி அறவெறி யூற்றமின்
னைகல் வேதனை வந்துறல் ஒன்றிண்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டோ தை. (வளையாபதி)

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

வாய்மை என்பது தீமையில்லாத சொற்களைச் சொல்லுதலே யாம். பொய்ம்மையாயினும் புரைதீர்ந்த நன்மை பயக்குமாயின் அது மெய்ம்மையாம். ஒருவன் பொய்கூறின் அவன் உள்ளமே அவனைச் சுடும். பொய்கூறுத ஒருவனை உலகத்தாரெல்லாரும் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றுவர். வாய்மையே சொல்பவன் தவந்தானங்கள் செய்வாரினும் உயர்ந்தவனாவான். புகழறங்களெல்லாம் பொய்யாமையாலே எய்தாமல் உளவாம். பொய்சொல்லாதவன், எல்லா அறங்களையும் எய்தி மகிழ்வான். வாய்மையாலே எவர்க்கும் மனத்தூய்மையுண்டாம். மெய்ம்மை ஒன்றே மேலோர்க்கு விளக்காம். எல்லா அறங்களினும் வாய்மையே சிறந்தது என்பனவாம்.

இது-வது வாய்மை முற்றிற்று.

நகம்-ம் அதிகாரம் வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்யாமை. அறிவைக்குலைத்துப் பழிபாவங்களை விளைத்துத் தன்னையுடையானுக்கு அழிவையே கொடுக்கும் இவ் இழிகுணம் களவும் பொய்யும்போல் அறமே விலக்குதற்கு உரியதாயினும், கள்ளாமை பொய்யாமைகளின்பின் வைக்கப்பட்டது.

[தைத்

301. தெவ்ளுபகழ் அல்லமனுர் செல்லிடத்தும் வெஞ்சினத்
கொள்ளாத தென்னே குமரேசா — கள்ளாமற்
செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
கொல்லிடினென் காவாக்கா லென்ன. (க)

இ—ள்.

குமரேசா! அல்லமனர் தன் சினம் செல்லும் இடத்தும் ஏன் அதனைக் கொள்ளாதிருந்தார் எனின், செல் இடத்துக் காப்பானே சினம் காப்பான்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் என்க. செல் இடத்து—பலிக்கும் இடத்து.

சினம்காப்பான் காப்பான்—வெகுளியைக் காப்பவனே காப்பவனுவான். அல் இடம் என்றது சினம் செல்லுதற்கு இயலாத இடத்தை. தன் சினம் பலிக்கும் இடத்தில் அதனைத் தடுப்பவனே அறிவால் தடுப்பவனுவான்; ஏனைப் பலியாத இடத்தில் அதனைத் தடுத்தால் என்? விடுத்தால் என்? என்பதாம். வினைக்கள் ஊக்கடுத்தல், விடுத்தல்களால் யாதும் பயனில்லை என்பதை விளக்கி நின்றன.

ஒருவனுடைய சினம், தன்னினும் மெலியார்பாற் சென்றே நலிவு செய்யுமாதலால் அதனைச் செல் இடம் என்றும், மற்றை வலியார்கண் அது பலியாதாதலால் அதனை அல் இடம் என்றும் கூறினர். செல்லும் கோபம், செல்லாக் கோபம் என இடவகையாற் சினம் இரு வகைப்படும் என்க.

மெலியவர் மேற்செல்லும் தனது வலிய கோபமே கொடுந் தீமைக்கு ஏதுவாகுமாதலால் அதனை அறமே ஒருவன் ஒழிக்க வேண்டுமென்பது கருத்து.

தன் கோபம் செல்ல வல்ல இடத்தும் அதனைச் செலுத்தாது அடக்கினவனே அறிவால் சிறந்தவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அல்லமர் பால் அறியப்படும்.

கதை.

அல்லமர் என்பவர் வள்ளிகாவை என்னுந் திரு நகரிலே இறைவன் கிலையாய் அவதரித்தவர். தாய் பெயர் சுஞ்ஞானி. தந்தை பெயர் நிராங்காரன். அவ் இருவரும் செய்த அருந்தவப் பயனால் அவர்க்குப் புதல்வராய்த் தோன்றினர். ஆராயிர்க்

கெல்லாந் தலைவராய் நின்று அருள்புரிந்தொழுகினர். இவர் இள மைப் பருவத்தே துறந்து பல்வேரிடங்கட்குஞ் சென்று நல்ல நீதி நூல்களெனிந்து எல்லாரும் நன்மையெய்துமாறு நயந்து கூறி அருந் தவக்கொள்கையில் திருந்தியிளங்கினர். காமம் வெகுளி முதலிய இழிகுணங்கள் சிறிதுமில்லாத பெரியவராகிடஇவர், ஒருநாள் இத் தராமன்னனும் தருமமோகினையக் காணவிரும்பி அவ்விருக்கட்டு புகுந்தார். அங்ஙனார் குளத்தைத் தோண்டிக்கொண்டிருந்த அவருடைய பணியாளராகிய சில ஓட்டான்களைக்கண்டு "தலைமை யில்லாத உங்கள் தலைவன் எங்குள்ளான்" என்று தம் தலைமை தோன்றக்கேட்டார். இதனைக் கேட்டவுடனே ஓட்டான்கள் கிளர்ந்து சினந்தார். தொட்டதை விடுத்து அவர் கிட்டவந்தார். வைது தெளித்தார். அல்லமரை வளைந்து கொதித்தார். சிலர் கட்டுமின் என்று கடுத்தார். சிலர் வெட்டுமின் என்று விரைந்தார். இன்னுஞ் சிலர் எறிமின் எய்புமின் என்று எழுந்தார். பின்னுஞ்சிலர் குட்டுமின் கொல்லுமின் என்று குலிந்தார். வேறு சிலர் அவரது வெண்டலையைத் தட்டுமின் என்றார். இங்ஙனம் வாய் கொண்டமட்டும் வைதுதோடமையாது அப்பொல்லாத ஓட்டான் கும் அல்லமர்மேல் கல்லும் எறிந்தார். தம் ஒரு சொல்லால் அவ் அனைவரையும் ஒருநொடியில் ஒருங்கே சுடவல்ல தவ வலியுடை யராயிருந்தும் சிறிதும் வெகுளாமல் அக்கொடியவர் எறிந்த கற் களின் குவியன்மேல் தம் தவமாண்பால் ஊறு ஒரு சிறிதுமின்றி உவந்து நின்றார். அவ்வெய்யவரனைவரும் அஞ்சி நடுங்கி அகன்று ஓடினர். பிறகு இடந்தோறும் தம் சினத்தைச் செலுத்தாமல் காத்த அல்லமரை எல்லாரும் போற்றினர். (இதன் விளைவு பிரபுலிங்க லீலையில் காண்க.)

கொடியவ ரெறிந்தகல் குவியக் குன்றென
முடிமிசை நின்றனன் முத்தன் அல்லமன்
புடவியின் உடனிழல் புதைப்ப அங்கிழல்
கடிதினின் மீமிசை காணுந் தன்மைபோல்

இதனைன் மேற்குறித்த வுண்மை இனிது புலனுதல் காண்க.

வலியவனிடத்தும் ஏதான் மாட்டினும் வெகுளிகாத்தல்
பொலிவுசெய் அறமதென்னப் பொருக்குறு தீயர்தம்பால்
நலியுறு வெகுளிசெல்லா தாதலால் நலியலாற்று
மெலியவனிடத்திற் காக்கும் வெகுளிமே அறமதென்பார்.

மெலியவர் மீது வெகுளாதமையே மேலோர் என்பது இதனால் கூறப்பட்டது.

302. செல்லாச் சினத்திறந்தார் செல்லிடத்தும் கோசிகனே
கொல்லுதலே செய்தார் குமரேசா—பல்லிதத்தும்
செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற. (உ)

இ—ள்.

குமரேசா! கோசிகர் தம்சினம் செல்லாத இடத்தில் இழிவுற்றார்; செல்லும் இடத்தும் என் கொலைப்பாவத்தை எய்தினர் எனின், சினம் செல்லாத இடத்துத் தனக்கே தீதாம், செல்லும் இடத்தும் அதனின் தீய பிற இல்லை என்க.

மெலியவனிடத்து வெகுளின் அளவில்லாத தீமைகள் உளவாம் என்பார் "செல்லிடத்தும் அதனின் தீய பிற இல்" என்றார்.

அதனின் தீயபிறஇல்—அச்சினத்தினும் தீயன வேறு இல்லை.

ஒருவன் சினம், தன்னினும் வலியார்பால் பலியாதாதலால் அதனைச் செல்லா இடம் என்றும், மெலியார்பால் பலிக்கும் ஆதலால் அதனைச் செல்லும் இடம் என்றும் கூறினர்.

ஒருவன் சினம் வலியார் மாட்டு எழின் தனக்கே தீதாம்; ஏனை மெலியார்மேற் செல்லின் அதனினும் பெருந்தீது உண்டாம் என்பதாம்.

வலியார்மேல் ஒருவன் சினங்கொள்ளின் கண்மேலடித்த கழி போல் தானே கெடுவான், ஏனை மெலிடார் மேலெனின் அவர்

கலிய ஆகலைன்தான் பழியும் பாவமும் எய்தி இழிதான் ஆதலால் சாரிடத்தும் சினம் தீதே பயக்கும் என்பது கருத்து.

இவ்புண்ணை விசுவாமித்திரர்பால் உணரப்படும்.

கதை.

விசுவாமித்திரர், வசிட்டர்மேற் சினந்து வல்லமர் புரிந்தார். அவ் அமரில், தமது உடல் வலியும், படை வலியும், பிற வலியும் தொலைந்து தக்க ஆருமைப் புதல்வரினைவரையும் இழந்தார். மற்று படியும் மாதவமும் புரிந்து மாண்பெய்தினர். அதன் பின்னரும் அரிச்சந்திரன் பொருட்டு அவதாரி மாறுபட்டுத் தம் தவத்தில் பாதியிழந்து பழிப்பும் எய்தினர். ஒருவன் சினம் தன்னினும் வலியார்மேல் எழின், அதனால் தனக்கே கேடு வருமென்பதை இவர் உணர்ந்து வருந்தினர். செல்லாத இடத்தச் சினம் தீராமென்பதை முனிவர்சிலரும் இவர்பால் கினையலயினர். திரிசங்குவின்பொருட்டுத் தாம் செய்யவிருந்திய வேள்வியை அமைத்த வசிட்டருடைய மக்களை வேடர்களாகச் சபித்தார். தம்சொல்லை மறுத்த தம்முடைய புதல்வர்களையும் சினந்தார். அதனால் அவரும் புலையராகி யிழிந்தார். தம்மை விருப்பிய அரம்பையர் சிலரை அரக்கர்களாக்கினர். மாலி, மகேந்திரன் என்னும் அரசர் சேனையைச் சினந்துச் சாம்பராக்கினர். இவரது வெகுளித்தீபால் அழிந்தும், இழிந்தும் அல்லல் எய்தினர் பலர். அதனால் இவர் தமது தவமும் குன்றிப் பழியும் அடைந்தார். பின்பு சினமகன்று தவம்புரிந்தே சிறந்து விளங்கினர். செல்லா இடத்தும் செல்லுமிடத்தும் சினம் தீதேதரும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (இதன் விரிவை இராமாயணமுதலிய நூல்களிற் காண்க.)

பெரியவர் தம்மைக்காய்ந்தான் பிறங்கல்கள்ளிய கோலொப்பான்
புரிவன புரியப்பட்டுப் புலம்புவன் ஒத்தார்க் காய்ந்தான்
எரிநகனினில் வீழ்வன் இழிந்தவர்க் காய்ந்தானென்றால்
ஒருவர்தம் இடத்தும் சீற்றம் உறுமையே நன்றாமோ தான.

(பிரபுலிங்கலீலை.)

செல்லும் இடம், செல்லாத இடம் என்னும் சரிடத்தும் சென்ம் தோத பயக்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

303. கொள்ளா வெகுளியினைச் சாந்தனிங்கர் யாம்மாட்டும்
கொள்ளாத தென்னே குமரேசா—தள்ளி
மறத்தல் வெகுளியை யாம்மாட்டுந் தீய
பிறத்தல் அதனான் வரும். (கூ)

இ—ள்.

குமரேசா! சாந்தலிங்கர் யாவர்மாட்டும் வெகுளியைக் கொள்ளாதது என்னே எனின், யாம்மாட்டும் வெகுளியை மறத்தல் வேண்டும்; தீய பிறத்தல் அதனான் வரும் ஆதலால் என்க.

யாம்மாட்டும் வெகுளியை மறத்தல்—யாவரிடமும் வெகுளியை ஒழிக. மறத்தல் என்பது ஈண்டு உடன்பாட்டு வியங்கோளாகி மறக்க என்னும் பொருள் மேல் நின்றது. வெகுளி என்பது மன்சுதில் தோன்றும் ஓர் இழிகுணமாதலால் அதில் அது தோன்றுவண்ணம் ஒழிக்கவேண்டு மென்பார் "வெகுளியை மறத்தல்" என்றார். எல்லாப் பழிபாவங்களையும் வெகுளி விளைவிக்கும் ஆதலால் "தீயபிறத்தல் அதனான் வரும்" என்றார். வெகுளியே தீமைக்குக் காரணம் என்பது குறிப்பு.

எல்லாத் தீமையரும் வெகுளி ஒன்றுனே உளவாம், ஆதலால் யாவரிடமும் அதனை ஒருவன் செய்யலாகாதென்பதாம்.

எளியவர் வலியவர் என்னும் இருவர்மாட்டும் வெகுளலாகாதென்று மேலே கூறினார்; இதில், உலகிலுள்ள யாவர்மாட்டும் அதனைச் செய்யலாகாதென்றார்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏந்தவர், என்னும் மூத்திறத்தார் மாட்டும் எத்திறத்தானும் ஒருவன் வெகுளலாகாதென்பதனருத்து

ஆறிவுடையவர் யாவர்மாட்டும் வெகுளார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சாந்தலிங்கர்பால் உணரப்படும்.

கதை.

சாந்தலிங்க சுவாமிகள் என்பவர் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்க் கொங்கு காட்டிலே யிருந்தவர். சிறந்த வீர சைவர். அடக்கம் பொறை அருள் முதலிய உயர் குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர். பலநூற் புலமையும் விழுமிய இனிய செஞ்சொற்களால் அழகிய கவிகள் பாடும் தலைமையும் இயற்பால் அமைந்திருந்தன. ஞானுபதேசம் என்னும் ஓர் உத்தமினை மணந்து இல்லறத்திலிருந்து சிலகாலம் வாழ்ந்து பின் துறவியாயினர். சிவஞான தேவர் என்னும் பெரியார் ஒருவர் பால் அருளுபதேசம் பெற்றார். புறமும் அகமும் புனிதமுடையராய் எவ்வுயிர்கட்கும் இனியராய் விளங்கினர். ஆருயிர்மாட்டுப் பேரருளுடையவர். அருந்தவக் கொள்கையில் திருந்திய தன்மையர். இவர் சமாதியிலிருந்து வெளிவருங்கால் எவரை நோக்கினும் அவர்தம் புன்மை நீங்கி மெய்யுணர்வுடையராய் மேலான நன்மை எய்துவரென்பர். வெகுளியை எவரிடமும் எனைத்தும் கொள்ளாது சாந்த சீலராயிருந்தமையால் இவரைச் சாந்தலிங்கர் என்று உலகம் வந்தி நின்றது. பெரியவரொருவர் ஒருநாள் இவர் பால் வந்று "வசிட்டர் விசுவாமித்திரர் குருவாசர் முதலிய அருந்தவர்களும் என் வெகுளியைப் பொருந்தி நின்றார்களுள்" என்று வினவினர். சுவாமிகள் "தாம் செய்த வினைப்பயன்களே இறைவன் அருவமாய் நின்று உயிர்களை முன்னிலையாக்கொண்டு ஊட்டுகின்றன் என்று தெளிந்திருத்தும் அவர்கள் வெகுளி கொள்ளுவதுளன்னகாரணமோயான் அறியேன்" என்றுபுன்னகைசெய்தார். கொலைமறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கிய தீபம், அறிவோதவுந்தியார், என்னும் நான்கு விழுமிய நூல்கள் இவரால் செய்யப்பட்டுள்ளன. கோயம்புத்தூருக்கு மேல்பாலுள்ள பேரூர் என்னும் திருநகரில் இவர் சமாதியாயினர். இவர் பெயரால் அங்கு மடம் ஒன்று இன்றும் சிறந்து விளங்கிவருகின்றது. யார்மாட்டும் வெகுளியை மறத்தலே அறவோர்க்கழகு என்பதை உலகம் இவர்பாலுணர்ந்தது.

வெகுளியை ஒருவரிடமும் கொள்ளலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

304. தீதுபகை யேதுமில்லாச் சித்தரா மன்சினத்தாற்
தோதடைந்தான் என்னே குமரேசா—போதும்
நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையும் உளவோ பிற. (ச)

இ—ள்.

குமரேசா! பகை ஏதும் இல்லாத சித்தராமன் என் சினத்தால் தீதுற்றான் எனின், நகையையும் உவகையையும் கொல்லுகின்ற சினத்தினும் பகை பிற உளவோ என்க.

நகை—முகமலர்ச்சி. உவகை—மனமகிழ்ச்சி.

சினத்தின் பிற பகையும் உளவோ—சினத்தைப்போல வேறு பகைகளும் உளவோ. இல்லையென்பதை ஏகாரம் உணர்த்திநின்றது.

முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் அழித்தொழுகின்ற சினத்தைப்போலத் தீயபகை ஒருவனுக்கு வேறு யாதும் இல்லை என்பதாம்.

சினம் தோன்றுங்கால் அகம் புறம் என்னும் எவ்விடத்தும் அமைந்துள்ள இனிய இயல்புகளை அறிவு அழிக்கும் ஆதலால் சினம், நகையும் உவகையும் கொல்லும் என்றார். பொறாமை, வெறியாமை முதலியவற்றால் புறத்தேயிருந்து துயர்விளைக்கும் பகைவரினும் உள்ளிருந்தே தன் உணர்வின்பங்களை அழிக்கும் வெகுளியே ஒருவனுக்குக் கொடும்பகை என்பது கருத்து.

பகைவனைப் பகைவனென்று வெகுளற்க; அவ் வெகுளியே உனக்குப் பெரும் பகை என்றபடி. புறப்பகைவரினும் அகப்பகையாகிய வெகுளியே தனக்குப் பொறாமை விளைக்கும் ஆகலால் அதனையே ஒருவன் அறிவால் அடக்கவேண்டுமென்பது குறிப்பு.

வெகுளியை ஒருவன் அடக்காவிடின், அதனால் அவனுக்கு இறிவும் துன்பமும் உளவாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சித்தராமனபால் உணரப்படும்.

கதை.

சித்தராமன் என்பவர் கருநாட தேசத்திலுள்ள சொன்னலாபுரம் என்னும் நகரில் இருந்தவர். திருவும் அறிவும் சேரப் பெற்றறவர். சிறந்த வீணைசவர். சித்திகள் செய்து சிறப்புப்பெற்றவர். பல நூல்களையும் பயின்று தெளிந்தவர். தாம் செய்கின்ற நற்கருமங்களே பரமுத்திக்குக் காரணமென்று கருதிப் பெரிதும் அவற்றையே பொற்றிவந்தார். தத்துவ ஞானமும் முத்திக்கு ஏதுவென்று உணராதிருக்கும் இவரது மன நிலத்தை உணர்ந்து உண்மையை இவர்க்கு உணர்த்த விரும்பி அல்லம தேவர் என்னும் அருள்வள்ளல் ஒருநாள் இவர்பால் வந்தார். சரியை, கிரியை, யோகம், என்பன ஞானம் உண்டாதற்கு ஏதுவேயாகும் இதனையுணராது கதியென அவற்றையே கருதிக் களிப்பவர் கயவரானவர் என்று இவரது அமைதியை அறிய அல்லமர் அருளினர். இதனைக்கேட்டவுடனே சித்தராமர் சிந்தை கொதித்தார். தவறதிற் பெரியதாய நம்மை அவமதித்தாரே என்று கருதியும், தம் பணியாளராகிய ஏட்டர்கள் உரைத்ததையறிந்தும் அவர்மேல் இவர் பெருஞ் சினங்கொண்டு தமது யோக மகிமையால் ஒரு பெருநெருப்பை அவர்மேல் எவினர். அத் தீ அல்லமரை ஒன்றுஞ் செய்யாமல் சித்தராமரது நகரத்தையே பற்றி யெரித்தது. இவர் அஞ்சி நடுங்கி அவர் அடியில் விழுந்தார். அதன்பின் அவர் அருள்செய்தனன்றார். தன் சினத்தால் தானடைந்த துன்பத்தை நினைந்து கவன்று பின் அதனைத் துறந்து விளங்கினர். விரிவைப் பிரபுலிங்க லீலையில் காண்க.

தன் சினமே ஒருவனுக்குக் கொடும் பகையாம் என்பது இதனால் கூறப்பட்டது.

305 கின்றோன் இரணியன்றன் மேய்மேற் சினந்ததனால்
கொண்டான் அழிவேண் குமரேசா—கொண்டாடும்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

இ.—ள்.

குமரேசா! இரணியன் தன் மன்மேற் சினந்ததனால் வன் அழிந்தான் எனின், தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் என்க.

தன்னைத்தான் காக்கின்—தன்னைத் துன்பம் அடையாவண்ணம் ஒருவன் காக்கவிரும்பின். சினம் காக்க—சினத்தை மனத்தில்லாவண்ணம் தடுத்து நீக்குக.

துன்பம் யாதொன்றும் தன்னை அடையாதிருக்குமாறு ஒரு என் விருப்புவனாயின், அவன் வெகுளியைக் கொள்ளலாகாது; கொள்ளின் அஃது அவனையே கொன்றுவிடும் என்பதாம்.

வெகுளியால் துன்பமே விளையுமென்பது கருத்து.

வெகுளி, தன்னையுடையானது அறிவைக் கெடுத்துப் பழி பாவங்களை விளைத்து இருமையினும் அவனுக்குப் பெருந் துன்பத்தை நல்கும் என்பார் "சினம் தன்னையே கொல்லும்" என்றார்.

ஒருவன் வெகுளி அவனது முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் கொல்லும் என்று மேலே கூறினர்; இதில், அவனையே அது கொன்றுவிடும் என்றார்.

இன்பத்தைக் கொள்ள விரும்புவோன் கோபத்தைக் கொள்ளலாகாது என்பது குறிப்பு.

வெகுளி தன்னையுடையானுக்கு அழிவையே விளைவிக்குமெனபது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராமாயணம் பால் உணரப்படும்.

கதை.

இரணியன் என்பவன் திதியிடம் தோன்றிய அசுரகுலத் தோன்றல். பொன்னிறமுள்ளவனாதலால் இப்பெயர் இவனுக்கு இடப்பட்டது. இரணியம்—பொன். எல்லா அண்டங்களையும் தனக்கே உரிமையாக்கொண்டு அரசுபுரிந்தவன். ஒப்பற்ற உடல் வலியுடையவன். ஆண்மையில், திண்மையில், எவருந் தனக்கு நிகரில்லாதவன். யாண்டும் எவராலும் எவற்றாலும் எவ்வகையாலும் இறவாவண்ணம் உயர்வரம் பெற்றவன். உயிர்களெல்லாம் தன் பெயரையே சொல்லித் துதித்து வாழும்படி ஆணை செலுத்தினான். இவன், கயாதி என்னும் பேரழகுவாய்ந்த ஒரு மானை மணந்து கிலாதன், சமகிலாதன், அநுகிலாதன், பிரகலாதன் என நான்கு புதல்வர்களையும் சிம்மகி என்னும் ஒரு புதல்வியையும் பெற்றான். எல்லா நலங்களையும் ஒருங்கே எய்திப் பெரு மகிழ்வோடு இவன் பேரரசு புரிந்து வருங்கால் தன் புதல்வனை பிரகலாதன் வேதம் ஓதப்புகுந்து முதலில் மாலின் பெயரையே மாலறை ஓதினான். அதனால் அவன்மேல் இவன் கொதித்தான். அம்மாயன் எங்குள்ளான் என்று சினந்தான். எங்கும் உள்ளான என்று அவ் இளைஞன் இசைத்தான். அவனை இங்குக் காட்டுக; இல்லையானால் உன்னைக் கொல்வேன் என்று சினந்து அடுத்திருந்த ஒரு கம்பத்தில் தன் அடலுறுகையால் ஓங்கி அடித்தான். அதிலிருந்து அரி, நரசிங்கமாய்த் தோன்றி இவனைக்கொன்று தொலைத்தார். சினத்தை ஒருவன் காவாக்கால் அஃது அவனையே கொல்லும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இதன் விரிவு இராமாயணத்தில் இரணியன் வதைப் படலத்தில் இனிது காணப்படும்.

சினம், தன்னை உடையவனையே கொல்லும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

306. வெற்றித் திரிசங்கேன் வெஞ்சினத்தால் தன்குருவைக்
குற்றமுறத் தீர்ந்தார் குமரேசா—உற்ற
சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(ந)

இ—ள்.

சூமரேசா! திரிசங்கு மன்னன் தன் குருவையும் என் கினத்தால் பிரிந்தான் எனின், சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் என்க.

புணை—மரக்கலம். சேர்ந்தாரைக்கொல்லி என்றது தெருப் பினை. தனினை அடித்தயற்றை அழிப்பது என்னும் காரணம் பற்றி இதற்கு அப்பெயர் இடப்பட்டது. இனம் என்றது தனக்கு உறுதியை உணர்த்தும் உற்றார்முதலிய நல்லினத்தை.

இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்—இனம் என்று சொல்லப்படுகின்ற இனிய மரக்கலத்தையும் சிதைக்கும். இறக் தது தாழ்கிய எச்சவும்மை இதில் தொக்குநின்றது.

தெருப்புத் தன்னைச் சேர்ந்த பொருளை மாத்திரம் எரித்துத் தொலைக்கும், சினம் சேர்ந்தாரையும் சேராதாரையும் சேர அழிக் கும். ஆகலால் அதனினும் கொடியதாக அஞ்சி இதனைஒருவன் ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு.

துன்பக்கடலில் விழுந்து வருந்தா வண்ணம் இன்பக்கரையி லேற்ற வல்ல இனிய நல்ல துணை என்பார், ஏமப்புணை என்றார்.

சினம் என்னும் தீ தன்னை எடுத்தவரையேயன்றி அவரை அடுத்தவரையும் கெடுத்துவிடும் என்பதாம்.

தனக்கு இதந்தைச் செய்ய வல்ல குருமார் முதலிய நல்லோ ரையும் சினமுடையான் தன் சினத்தின தீமையால் இழந்து வரு துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை திரி சங்குபால் உணரப்படும்.

கதை.

திரிசங்கு என்பவன் சூரிய குலத்தோன்றலாகிய சத்திய விரதன் புதல்வன். சத்திய சீலராகிய அரிச்சந்திரன் தம்பி. இவன் சத்தியவதி என்னும் உத்தமியை மணந்து அரசுபுரிந்து வருங்கால் ஒருநாள் தமது குலகுருவாகிய வசிட்டனையழைத்

உடலோடு தான் துறக்கத்தில் புகவேண்டுமென்று வேண்டினான். அதற்கவர் இப்பூத உடம்போடு அங்குப் போதல் கூடாது ஆதலால் இதனை ஈண்டு இகந்தபின் நீ போகலாமென்றார். "என்மனைக் கொண்டதைத் செய்ய தாவில்லையானால் நீர் என்ன குற்ற" என்று அரசன் சினங்கொண்டான். உம்மால் இயலவில்லையானால், யான் கருதியதைத் தருதற்குரிய பெரியார் ஒருவனைக்கொண்டு அருமகம் ஒன்று புரிந்து யான் எண்ணியதை எண்ணியாங்கே எய்துவேன் என்று எதிர்ந்து மொழிந்தான். உடனே முனியாதமுனிவரும் முனிவுகொண்டார். வழி வழி வந்த எனக்கும் இழிமொழி தந்தாய் ஆதலால் நீ நீசனுகக் கடவையென்று வசிச் சினந்தார். அரசன் அவ்வாறே தனது அழகிய வடிவமாறி உடனே புலையனுன். முனிவரும் பிரிந்து ஒரு தனிவனம் புகுந்தார். தமக்குரிய இனத்தின் நலத்தை இருவரும் தம் தம் சினத்தால் இழந்தார். சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் எமப்புனையைச் சுடும் என்பதை உலகம் இவ்விருவர்பாலும் உணர்ந்தது. (விரிவை இராமாயணத்தில் காண்க:)

தன்னையடுத்தவரையெல்லாம் சினம் தீயைப்போல் கெடுத்துவிடும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

307. கொண்டார்சினம்பொருளாக்கொங்கணர்என் வாசகியாற்
கொண்டாரோன் கேடு குமரேசா—மண்டி
சினத்தைதப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தலறந்தான் கைபிழையா தற்று. (எ)

இ—ள்.

குமரேசா! சினத்தையே தனக்குத் துணையாகக் கொண்டிருந்த கொங்கணர் என் வாசகியால் அதனையிழந்து இறந்தார் எனின், சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு நிலத்து அறந்தான்கை பிழையாத அற்று என்க.

சினத்தைப் பொருள் என்று கொண்டவன்—சினமே தனக்கு உறுதி தரும் பொருள் என்று கொண்டவன். பொருள் என்றது உரிமை தோன்ற நின்றது.

பிழையாத அற்று—தப்பாத வாறு போல். இதில் அகரம் தொக்கு நின்றது. கொண்டவன் கேட்டுக்கு அறைந்தான் கை உவமை காட்டியது தவறுதல் என்பதை உணர்த்துதற்கென்க.

நிலத்தின்கண் அறைந்தவன் கை அதில் தப்பாது படுதல் போல் சினத்தையுடையான் கெடுதல் தப்பாது என்பதாம்.

தனது வலிமையையும் பெருமையையும் உலகிற்காட்டுதற்கு தானே உரிய துணை என்று கருதி அதனையே எவரிடமும் காட்டுகின்றவன் தவறாது கெடுவான் என்பதை நிலத்து அறைந்தான் கையால் தெவ் எடுத்துக்காட்டிய நயத்தை ஈண்டுச் சிறிது நிலைத்துத் காண்க.

சினமுடையவன் தனது பெருமையை வினைவிளைந்து தவறாது கெடுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கொங்கணர்பால் உணரப்படும்.

கொங்கணர் என்பவர் கொங்கு நாட்டிலிருந்த ஒரு சிற்றாரில் பிறந்தவர். இவரது காலம் இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னதாகும். இவர், அணிமா, மகிமா முதலிய அட்டமா சித்திகளும் உடையப் பெற்றவர். ஒரு காலத்தில் தம் உட்கழுங்கைத் திரட்டித் திருமழிசையாழ்வார்முன் வைத்து அதனை ஒரு சிறு பொன் மலையாகப் பொருந்தக் காட்டினர். இவர் போக முனிவர்பால் போரன் புரட்டியவர். அவர் கருதியவெல்லாம் உரிமையிலுதவி அவரோடு உவந்திருந்தார். பின் அவரைப்பிரிந்து ஓர் அடவியிற் புகுந்து ஐம்பொறியடக்கி அருந்தவம் புரிந்தார். புரிந்துவருங்கால் ஒரு கொக்கின் எச்சம் இவர்மேல் பட்டது. இவர் அதனை நிமிர்ந்து பார்த்தார். உடனே அஃது எரிந்து கரிந்தது. தமது மகிமையைத் தாமே வியந்து எவரையும் தமது

சினத்தால் வெல்லலாம் என்று அதன்பின் தணிந்தார். சினமே பொருளெனக்கொண்டு வணமெலாந் திரிந்தார். அறியாதவர்க்கெல்லாம் தம் ஆற்றலையுணர்த்திரைர். ஒருநான் திருவள்ளுவ நாயனார் திருமனை முன் நின்று பலிதருக என்றார். அவ்வமையம் நாயனுக்குப் பணிபுரிந்திருந்தமையால் வாசுகியம்மையார் உடனே வரவில்லை. சிறிது பொழுது கழிந்தபின் பலிகொண்டு வந்தார். வரைவில் வரவில்லையே என்று கருதிச் சித்தர் நம் அம்மையைச் சினந்து விழித்தார். அக்கற்புத் தெய்வம் அவர் தன்மையைத் தெளிந்து புன்னகை செய்து "கொக்கென்று பார்த்தீரோ கொங்கணரே" என்றுகூறியருளினர். சித்தர் அம்மையாரது மெய்யுணர்வையும் மேன்மைப்பயந் தெளிந்து நடுங்கிப் பணிந்தார். நாணிச் சென்றார். சினத்தால் சித்தர் சீரிழந்தார் என்று அனைவரும் சிரித்து இகழ்ந்தார். சினத்தையே பொருளென்று கொண்டவன் தப்பாது கெடுவான் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சித்தர் சரிதையில் காண்க.)

சினமுடையான் தப்பாது கெடுவான் என்பது இதனுல்கூறப்பட்டது.

308. எள்ளித் துயர்செய்தும் எம்மை சிவஞானர்
கொள்ளவில்லை கோபம் குமரேசா—தள்ளி
இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (அ)

இ.—ள்.

குமரேசா! சிவஞான தேசிகர் தனக்குப் பெருந் துன்பஞ் செய்தவனிடத்தும் என் வெகுளியைச் செய்யவில்லையெனின் இணர் எரி தோய்வு அன்ன இன்ன செயினும் வெகுளாமை புணரின் நன்று எனக.

இணர் என்பது பூங் கொத்தை உணர்த்தும் ஒரு சொல். அஃது ஈண்டு அக் கொத்தைப்போற் செறிந்த பல தீச்சுடர்களைக் குறித்து நின்றது.

இணர் எரி—கற்றைத் தீ; என்றது பல சுடர்கள் தொகுதியான பெருந் தீயை. எரி என்றது தண்பதத்தின் கொடுமையையும், இணர் என்னும் அடை அதன் மிகுதியையும் உணர்த்தி நின்றது. தனக்குத் தண்பஞ் செய்கானிடத்தும் வெகுளியைச் செய்யாமல் பொறுத்திருக்க எவர்க்கும் முடியாதாகலின் "புணரின்" என்றார்.

தொகுதியான பெருந்தீ வந்து தோய்ந்தாற்போல ஒருவன் மிகுதியான தண்பத்தைதச் செய்தானெயினும் அவனிடமும் வெகுளாமை ஒருவனுக்கு அமையுமாயின் அது நன்று என்பதாம்.

சினத்தையே பொருளென்று கொண்டவன் கெடுவான் என்று மேலுணர்த்தியதை நோக்கி, அதனை அங்ஙனம் கொள்ளாவிடினும் தமக்குக் கொடுந்தீங்கு செய்தானிடத்தேனும் அதனைச்செய்யலாகாதா? என்று ஐயுறுவார்க்கு இஃது அருளியதென்க. இன்னுஞ்செயினும் வெகுளாமை நன்று என்றார் புகழும் அறமும் அதனால் உளவாம் என்பது கருதி.

தனக்குத் தண்பஞ் செய்பவனிடத்தும் வெகுளியைச் செய்யாதிருப்பவனே மேலான நன்மையை எய்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிவஞான தேசிகர்பால் உணரப்படும்.

கலை

சிவஞான தேசிகரென்பவர் [illegible] கட்கு மூன்னர் வடநாட்டிலே பெருமுக்கல் என்னும் மலையினை அடுத்த ஒரு சிற்றூரில் இருந்த அம்மலை என்பவருடைய புதல்வர். பொறுமை அடக்கமுதலிய உயர் குணங்களெல்லாம் இயல்பாகவே அமையப் பெற்றவர். பால சித்தர் என்னும் ஞான யோகிபால் அருளுபதேசம் பெற்று இருவகைப் பற்றுமற்று பொம்மபுரம் என்னும் நகரில் சித்திகள் பல செய்து சிறந்து விளங்கியிருந்து பின் விருத்தாசலத்தை அடைந்து வதியுநர் பினியாளர் கொடியவர் முடவர் முதலானவர்களையும் அடியவராக்கி அருள் புரிந்தார். புரிந்துவருங்கால், கூனிமேடு என்னும் ஊரிலிருந்த

தானீகன் என்னும் மந்திரவாதி ஒருவன் இவர்மீது பொறாமை யுற்று இவர்க்கு அல்லல் பல செய்தான். கொல்லவும் முயன்று கொடுந்தூழ் செய்தான். தமது தவமகிமையால் அவ் எல்லாவற் றினும் இவர் தப்பி உய்ந்தார். அக்காலத்தில் சென்சியிலிருந்து அரசபுரிந்த திரியப்பகன என்பவனை அணுகி இவர்மீது அவன் அடாப்பழி புகன்றான் அவ்வேவந்தனும் செற்றமுற்று வந்து தே சிகரது குற்றமற்ற தன்மையை யுணர்ந்து நற்றூள் தொழுதான். நயந்து சென்றான். இங்ஙனம் சொல்லாலும் செயலாலும் தமக் குப் பெருந்துன்பஞ்செய்துவந்த அத்தானீகன்மீது இவர் சிறிதும் வெகுளாமல் அவனுக்கு இதமே செய்தார். இவரது சினமின்மையையும், மன நன்மையையும் தெளிந்து அவனும் வந்து இவர் அடிகளை வணங்கி அடியவனானான். அனைவரும் இவரது பொறுமையை வியந்து புகழ்ந்து போற்றினர். இவரும் எல்லா நலன்களுமெய்தி இறுதியில் நிலின்பமெய்தினர். தனக்கு இன்னுதவற்றைச் செய்தார் கண்ணும் வெகுளாமலிருத்தல் அமை யுமாயின் அஃது ஒருவனுக்கு நலமாம் என்பதை உலகம் இவர் பால் உணர்ந்தது. விரிவை மயூராசல புராணத்தில் உணர்க.

மிகு நோய்-செயினும் வெகுளாதிருத்தலே ஒருவனுக்கு நல மாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

309. பண்டு வெகுளாப் பரத்துவரேன் உள்ளியதைக்
கொண்டார் உடனே குமரேசா—கொண்டாடி
உள்ளிய வெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். (கூ)

இ—ள்.

குமரேசா! நாம் நினைத்தவற்றை எல்லாம் பரத்துவாசர் எண் நினைத்தவுடனே பெற்றார் எனின், உள்ளத்தால் வெகுளி னைய உள்ளான் எனின், அவன் உள்ளிய எல்லாம் உடனே எய் தும் என்க.

உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின்—நெஞ்சால் வெகுளியை நினையானுயின். மேல், வெகுளாமை எய்தின் ஒருவனுக்கு நன்று என்றார், இதில், அவன் கருதியன எல்லாம் அதனல் எய்தும் என்றார்.

மனத்தால் வெளியை ஒருவன் நினையானுயின் அவன் நினைத்தவற்றையெல்லாம் உடனே பெறுவான் என்பதாம்.

எண்ணியமெல்லாம் எண்ணியவாறே ஒருவன் எய்தவேண்டுமெனுயின் அவன் வெகுளியை எண்ணலாகாது என்பது கருத்து.

சினத்தை ஒழித்தவனுக்கு நினைத்தனவெல்லாம் உடனே கிடைக்குமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரத்துவாசர்பால் உணரப்படும்.

கதை

பரத்துவாசர் என்பவர் உதித்திய முனிவருடைய புதல்வர். காய்பெயர் மமதை. இவர் சிறந்த தவ வொழுக்கம் வாய்ந்தவர். உயிர்கள் யாட்டுப் பேரருளுடையவர். முனிவில்லாத முனிவரென்று இவரை அனைவரும் புகழ்வார். பரம்பொருளிடத்தே என்றும் தம் உளத்தையிருத்தியதால் இவர் பரத்துவாசரெனப் பெற்றார். இதுபொழுது பிரயாகை என வழங்கப்படுகின்ற இடமே பண்டு இவரிருந்து தவம்புரிந்த தலமாம். இராம மூர்த்தி இராவணவேட்டையாடி வானரசேனைகளுடன் திருவயோத்தியை நோக்கி மீளுங்கால் அவரை எதிர்கொண்டு சென்று தமது தவச்சாலைக்கு அழைத்துவந்து இனிய உபசாரங்கள் செய்து அரியவிருந்து ஒன்றை இவர் ஆற்றவிருந்பினர். தெய்வ வுலகத்தில் எய்தியிருக்கும் இனிய பொருள்களெல்லாம் தம்மிடம் எய்தும்படி எண்ணினர். அவ்வாறே சுரபி சிந்தாமணி அமிழ்தம் முதலிய போகப் பொருள்களெல்லாம் உடனே எய்தின. அவற்றால் அரசர் முதல் அடியவரீறாக அச்சேனையிலுள்ள அனைவருக்கும் ஒருபடியாக உயர்ந்த இன்பத்தை ஊட்டினர். எல்லாரும் உண்டு மகிழ்ந்தார். இவரது மனநலத்தையும் தவ வலத்தையும்

வியந்து இராமமூர்த்தியும் புகழ்ந்து போற்றினர். உள்ளத்தால் வெகுளியை உள்ளாதவர்க்கு உள்ளியன எல்லாம் உடனேனெய்தும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

வெகுளியில்லாதவர்க்கு விரும்பியன எல்லாம் விரைவில் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

310. சினஞ்சேடாட் சுகரார் சினந்திறந்தார் அஞ்சுமான்
கொண்டான் உயர்வேவன் குமரேசா—மண்டி
இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைதத்
துறந்தார் துறந்தார் துணை. (ய)

இ.—ள்.

குமரேசா! சகரர் சினத்தால் இறந்தார்; அஞ்சுமான் வன் வெகுளாது உயர்ந்தான் வனின், சினத்தின் இறந்தார், இறந்தாரை அனையர்; சினத்தைதத் துறந்தார் துறந்தார் துணை என்க.

இறத்தல் என்பது மிகுதல் சாதல் கடத்தல் என்பவற்றை உணர்த்தி நிற்கும். சினத்தின் இறந்தார் இறந்தார் அனையர்—சினத்தின் மிக்கவர் செத்தவரோடொப்பர். இதில் சினம் இடைநிலைத்தீவகமாய் நின்று இருமருங்கினும் சென்றிணைந்தது.

சினத்தைதத் துறந்தார்—வெகுளியை விட்டவர்.

துறந்தார் துணை—சாதலை யொழிந்தாரை யொப்பர்.

சினத்தை மிகுத்தவர் செத்தவரையும், அதனை விடுத்தவர் சாகாதவரையும் ஒப்பர் எனபதாம்.

வெகுளி யுடையவர், உயிருடையராயினும் தாம் பிறந்த பயனை இழத்தல் நோக்கி அவரை இறந்தவர் என்றும் அஃதில்லாதவர் மெய்யுணர் வுடையராய் அழிவி வின்பத்தை அடைவ தென்பது கருதி அவரை இறவாதவர் என்றும் கூறினர் என்க.

எரிதிகர் வெகுளிபொங்க மயக்கம்வந் தெய்தும் எய்தத்
தெரிபவை சிதைதபும் உள்ளந் தெரிந்தவை சிதைந்தபோதே
உரியதன் உணர்வுமாயும் உணர்வுமாய்ந் தொழிந்தவாறே
அரியவென் றறிஞர்போரும் அனைத்துமாய்ந் தொழியுமன்றே.

(பக்வற்கீதை.)

வெகுளி மிக்கவர்க்கு வீடு பெறுதல் அரிது என்பதை இத னனுணர்க. இனி, துறந்தார் என்பதற்கு துறவிகள்என்று பொ ருள்கொண்டால், வெகுளியை மாத்திரம் துறந்தவர், எல்லாவற் றையும் துறந்த பெரியாரோடொப்பர் என்று கொள்க.

வெகுளியுடையவர் இறப்புத் துன்பத்தையும், அஃதில்லாத வர் இறவா இன்பத்தையும், எய்துவரென்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை சகரர் பாலும் அஞ்சுமான் கண்ணும் உணரப்படும்.

கதை 1.

திருவயோத்தியிலிருந்து அரசுபுரிந்த சகர மன்னனுக்கு சுமதியென்னு மனைவிபால் இறைவனருளால் அறுபதினாயிரம் புத ல்வர்கள் தோன்றினர். அவரனைவருக்கும் ஒரு தொகையாகச் சகரர் என்றே பெயர். உருவில், திருவில், உரனில், உணர்வில் ஒரு நிகரானவர். விரிந்த அறிவு இலராயினும் சிறந்த ஆண்மை யுடையவர். ஒருவரையொருவர் பிரிதல் இலராய் யாண்டுச் செல் லினும் ஒருங்கே செல்வர். பாதலத்திலிருந்து அருந் தவம் புரி யுங் கபில முனிவரைக் கண்டு அவரது மன நிலையை உணரா து அவர்மேற் சினமீக் கூர்ந்தார். அனைவரும் அதனால் ஒருங்கே அழிந்தார். சிறந்த பிறவியை எய்தியிருப்பினும் இறந்த சினத் தார் இறந்தவரே யாவர் என்பதை இவர் அன்று உணர்த்தி ஒழிந்தார்.

கதை 2.

அஞ்சுமான் என்பவன் சகர மன்னனுடைய பேரன். பொறுமையும் அறிவும் பொருந்திய பண்பினன். தின்மையுள்ள

வனையினும் யாவர்மாட்டும் தண்மைபெறுக்கவன். சகரர் இறந்தமை யைத் தெரிந்து தாம் புரிகின்ற பரி வேள்விக்கு இடையூறு வந்த தேயென்று கவலுகின்ற தன் பாட்டனாகிய சகரனைத் தேற்றிவிட் டுப் பாதலத்தில் புகுந்து கபில முனிவனைக் கண்டு அவரது அடி களிற் பணிந்து இனிய மொழிகள் பல அவர் உவகையுற மொழி ந்தான். இவனது மன நலத்தையும் தினமென்ற தன்மையையும் முனிவர் தெளிந்து இனிதருள்செய்து பரியையும் உதவினர். அ தனைப் பெற்றுவந்து அரு மகம் முடித்து அரசனுக்கு மகிழ்ஞட் டித் தனது அமைதியினலத்தால் அனைவரும் போற்றத்தக்க பெரும்பதத்தை அடைந்தான். தினமுடையவர் அழியுந்துயரை யும், அஃதில்லாதவர் அழியா இன்பத்தையும் பெறுவார் என் பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

செல்லும் இடத்தும் தன் சினத்தைக் காப்பவனே சிறந்த வனவான். செல்லும் இடம், செல்லாத இடம், என்னும் ஈரிடத் தும் சினம் தீதே பயக்கும். யாவர்மாட்டும் சினத்தை ஒருவன் ஒழித்தல் வேண்டும். மன மகிழ்ச்சியையும், முக மலர்ச்சியை யும் சினம் அறவே தொலைக்கும். அதனை அடக்காதவனை அது கெடுத்தேதீரும். அதனையுடையவன் தனக்குரிய நல்வினத்தை யெல்லாம் இழப்பான். அதைக் கொண்டவன் தப்பாமல் துன்ப த்தைக் கொள்வான். தீயைப்போல் வந்து பிறர் துன்பஞ் செய் யினும் சினங்கொள்ளாமையே ஒருவனுக்கு உயர் நலமாகும். வெகுளி இல்லாதவனுக்கு உள்ளபவெல்லாம் உடனே உளவாம். சினம் மிகுந்தவர் செத்தவரோடு ஒப்பர். அதனைத் துறந்தவர் அழிவிலின்பத்தைப் பெறுவர் என்பனவாம்.

31வது வெகுளாமை முற்றிற்று.

நடீ-ம் அதிகாரம் இன்ன செய்யாமை.

அஃதாவது தன்பமான செயல்களைப் பிறவுயிர்கட்கு எவ்வகையானுஞ் செய்யாமை. இன்னாமை—தன்பம். இஃது இனிமை என்பதன் எதிர்மொழி. வெகுளி, அறியாமை, கன்னயங் கருதல், மறதி என்பவற்றால் இது நிகழுமாயினும் பெரும்பாலும் வெகுளி-பற்றியே விளையுமாதலால் அது தோன்றினும் இது செய்யலாகாதென்பதை உணர்த்துதற்கு வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

311. உற்றமுன்னேன் இன்ன வுறவினென ஏனிளங்கோ
குற்றமற நீத்தார் குமரேசா—முற்றும்
சிறப்பினும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள். (க)

இ—ள்.

குமரேசா! அரச செல்வத்தைப் பெறுவதாயிருந்தும் தன் அண்ணனுக்கு இன்ன செய்யலாகாதென்று எண்ணி வன் அதனை இளங்கோ துறந்தார் எனின், சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப்பெறினும் பிறர்க்கு இன்னதன்மையைச் செய்யாமை மாசு அற்றாரது கோள் என்க.

சிறப்பு என்பதற்குப் பொருள் ஈண்டு இயல் கோக்கிக் கொள்க. கோள்என்பது புறங்கூறல், இடையூறு, கரகம், கோட்பாடு, குணம் என்பவற்றை உணர்த்தும்ஒரு சொல். அஃது ஈண்டு கோட்பாடு என்பதைக் குறித்து நின்றது.

மாசு அற்றார் கோள்—குற்றம் அற்றாரது துணிவு.

சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறுவதாயினும் பிறர்க்குத் தன்பத்தைச் செய்யாமை குற்றமற்றாரது துணிவு என்பதாம்.

எத்துணைச் சிறந்த செல்வமாயினும், பிறர்க்குத் துன்பஞ் செய்து அதனைல் எய்துவதாயிருப்பின் அதனை மனந் தூயார் விரும்பார் என்பார் "செல்வம் பெறினும் இன்ன செய்யாமை மாசற்றார் கோள்" என்றார். இன்ன செய்யாமையே குற்றமற்ற தது குணம் என்பது குறிப்பு.

இனி, சிறந்த செல்வத்தைப் பெற்றிருப்பினும் பிறர்க்குத் துன்பஞ் செய்யாமை மாசு அற்றார்க்கு இயல்பு எனினும் பொருந்தும். ஒருவனுக்கு இம்மைக்குரிய எல்லாச் சிறப்புகளையும் செல்வம் நல்கும் ஆதலால் அது சிறப்பு ஈனும் என்னும் அடைபெற்று வந்தது. எத்துணை அறிவுடையாரையும் சித்தத்தைத் திரித்துச் செருக்கை மிகுத்துப் பிறர்க்குத் தீங்கு செய்யும்படி செல்வம் தூண்டுமாதலால் அது பெறினும் மாசற்றார் இன்ன செய்யார் என்றார். இன்ன செய்யும்படி செல்வம் செய்யும் என்பதை உம்மை விளக்கிநின்றது. எவ்வளவு சிறந்த செல்வமாயினும் பிறர் துன்புற வருவதாயின் அதனை அறிவோர் விரும்பார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இளங்கோ பால் உணரப்படும்.

கதை.

இளங்கோ என்பவர் சேர நாட்டிலே வஞ்சி நகரத்திலிருந்து செங்கோல் செலுத்திய சேரலாதன் என்னும் அரசனுடைய புதல்வர். தன்னுடன்பிறந்த மூன்னையகிய சேரன் செங்குட்டுவனோடு சேர்ந்து வளர்ந்து யாவர்மாட்டும் ஆர்ந்த அன்பினராய் அமர்ந்து வினங்கினர். அரியணை அமர்ந்து திருவுடன் விளங்கும் அரசன் முன்னர் இவ் இருவரும் இருப்ப ஒருநாள் நிமித்திகன் ஒருவன் வந்தான். வணங்கி நின்றான். குமரர் இருவரையும் மாறி நோக்கிப் பின் அரசனை நோக்கினன். அரசே! "நும்புதல்வர் இருவரில் அரசுரிமையை யெய்துதற்குரியகலங்களெல்லாம் இளங்கோவுக்கே அமைந்துள்ளன ஆதலால் அவனே இனி அரசனுவான்" என்று அறைந்து சென்றான். மூத்தவனுக்கே அரசுரிமை என்னும் முறைமை மாறியதோ என்று செங்குட்

டுவன் சினந்து சென்று மனந்திரிந்தான். அதனை இளங்கோ உணர்ந்தார் தம்மால் அண்ணனுக்கு இன்னல் வந்தமை என்று வருந்தி அதனை அவனடையாவண்ணம் தாம் துறவினை அடைந்தார். வஞ்சியின் கீழ்பாலிருந்த திருக்குணவாயில் என்னும் தலத்திலமர்ந்து தவத்திலிருந்தார். உயர்ந்த சிறப்பைத் தருகின்ற சிறந்த அரசு செல்வம் தமக்கு வருவதாயிருந்தும் முன்னோனைய தம் இன்னைமைக்கு இரங்கி அருளுடன் துறந்த இப்பெரியபாதுமாசற்ற தன்மையை அனைவரும் வியந்தார். துறவுகொண்டபின் இளங்கோவடிகள் என்றும் சேர முனி என்றும் இவரைப் புகழ்ந்து போற்றினர். சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காவியம் இவரால் இயற்றப்பட்டது. இவரது மதி நலமும், மன நலமும், அருளுடைமையும் இந்நூலில் பலஇடங்களிலும் புலனாகின்றன. பிறர்க்குத் துன்பமான செயல்களைப் பெரியோர் எவ்வகையிலும் செய்யார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சரிதையில் காண்க.)

தமக்குப் பெருஞ் செல்வம் வருவதாயினும் பெரியோர் பிறர்க்குத் துன்பமானவற்றைச் செய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

312. செற்றங்கொண் டின்னுமுன் செய்தார்க்கும் செய்திலேன்
கொற்றங் குடியார் குமரேசா—முற்றும்
கறுத்தின்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள். (உ)

இ—ள்.

குமரேசா! செற்றங்கொண்டு இன்னுகவற்றைத் தமக்குச் செய்தாரிடத்தும் கொற்றங்குடி உமாபதியார் என் அதனை மறுத்துச் செய்யவில்லை எனின், கறுத்து இன்னு செய்த அக்கண்ணும் மறுத்து இன்னு செய்யாமையும் மாசு அற்றார் கோள் என்க. தொக்கு நின்ற உம்மைமேலதைத் தழுவிநின்றது.

கறுத்தல்—வெகுளிக் குறிப்பு.

கறப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள. (தொல்காப்பியம்.)

செய்த அக்கண் ணும்—செய்த அவ்விடத்தும். செய்தவன் கண் ணும் எனவும் பாடம்.

இன்ன தவற்றைத் தமக்கு ஒருவன் விகுண்டு செய்தவிடத் தும் அவற்றைமாறி அவனுக்குச்செய்யாமை மாசற்றாரது இயல்பு என்பதாம்.

செல்வம் பெறினும் பிறர்க்குத் துன்பமான செயல்களை மாசற்றார் செய்யார் என்று மேலே கூறினர்; இதில், தமக்குத் துன்பஞ்செய்தாரிடத்துக் அதனை அவர் செய்யார் என்றார்.

சினங்கொண்டு பிறர் இன்ன செய்யினும் அதனை மனங்கொள்ளாது பெரியோர் மறந்துவிடுவர் எனபது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உமாபதி சிவாசாரியர்பால் உணரப்படும்.

உமாபதி சிவாசாரியர் என்பவர் சோழ நாட்டிலே திருவெண்ணெய்நல்லூரிலே அந்தணர் குலத்திலே அவதரித்தவர். வேதங்கள், சிவாகமங்கள், இதிகாச புராணங்கள், முதலிய பல கலைகளிலும் தலைமையான புலமை வாய்ந்தவர். அருள், அடக்கம் பொறை முதலிய அரிய குணங்களெல்லாம் அமையப் பெற்றவர். மறை ஞான சம்பந்தர் என்னும் பெரியாரொருவர் பால் அருளுபதேசம் பெற்று இறைவனருளையே நாடி இளமையிலேயே துறவு நெறி மேற்கொண்டார். சாதி முதலியவற்றின் இழிவரம்புகளைக் கடந்து பரந்த நோக்குடன் யாவர்மாட்டும் பேரருளுடையராய்ப் பொருந் திவிளங்கினர். தமது முறைப்படி ஒருநாள் பொன்னம்பலவருக்கு இவர் தூசை செய்யப் போயினர். திருவெண்ணெல்லூருஞ்சேர்ந்து இவரைச் சூல முறை தவறினவென்று பழி மொழி பகர்ந்துபணி செய்பலரானதென்று தடுத்துத் தம் குழுவிலிருந்து விலக்கினர். அவ்விளவி லமைபாது இன்ன செயல்களையும் இ

சைந்து செய்தனர். ஐயம் நீங்கிய மெய்யுணர்வுடைய இவ் ஐய ரது பெருமையைச் சிறிதும் அறியாமல் அவர் செய்த அல்லல் கள் பிசப் பல. இவர் யாதுஞ் செய்யாது அமைதியோடு அப் பதியைவிட்டகன்று அதன் கீழ்பாலிருந்த மொற்றங்குடி என் னும் சிற்றாரையடைந்து தனி முதலே நாடித் தனியே யிருந்தார். மறுநாள் திலலை வேதியர் அம்பலத்திற் சென்று பூசை செய்தற்கு ஆதி அறையைத் திறந்தார் அங்கு அம்பலவாணரைக் கண்டி லர். அஞ்சி நடுங்கி அயர்ந்தார். உடனே "யாம் உமாபதி பால் உவந்திருக்கின்றோம்" என்று ஓர் ஒலி இறைவன் அருளால் வானில் ஒலித்திதழுந்தது. வேதியர் கேட்டு வெருண்டோடி உமாபதியா ரை வணங்கித் தம் ஊருக்கழைத்தார். அருள் வள்ளலாகிய இவர் யாதுங் கூறாமலடைந்தார். அம்பலவாணரும் ஆங்கு வந் தமர்ந்தார். நாள் பல கழிந்த பின் மீண்டு சென்று உமாபதி யார் மொற்றங்குடியே குடியாக் கொண்டார். பெற்றான் என் னும் ஓர் உத்தமனுக்கு முத்தி கொடுக்குமாறு ஒரு பாலை எழு தித் பெருமான் ஏவ அதனைப் பெற்று இவர் அவ்வாறே செய் தார். அப்பாட்டு இதனடியில் வருகின்றது.

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டிப்—படிமிசைநற்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

இங்ஙனம் இறைவனருளை நிறையப்பெற்று உண்மை நெறி விளக்கம், சிவப்பிரகாசம், விளை என்பன, நெஞ்சுவிடுதூது முதலிய ரிய நூல்கள் பல அருளிச்செய்து யாவர்க்கும் இனியனவே செய்து இசை பெற்றிருந்தார். வெறுத்துத் தூயர் விளைத்தவ ரிடத்தும் பொறுத்து அருள் செய்த இவரது மனத் தூய்மை யை அனைவரும் போற்றிப் புகழ்ந்தார். கறுத்து இன்ன செய்த வரிடத்தும் மாசற்றார் மறுத்து இன்ன செய்யார் என்பதை உல கம் இவர் பால் உணர்ந்தது. (விரிவை இவர் புராணத்தில் காண்க.)

எவரிடமும் மேலோர் இன்னதனை செய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

313. தின்டோள் நிமிவசிட்டார் சீறியின்ன செய்ததுண்பம்
கொண்டார்பின் என்னே குமரேசா—பண்டொன்றும்
செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். (ங)

இ—ள்.

குமரேசா! நிமியும் வசிட்டரும் ஒருவர்க்கொருவர். இன்னாசெய்து பின் ஏன் இருவரும் இடும்பை எய்தினர் எனின், செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்த பின் அஃது உய்யா விழுமம் தரும் என்க.

செய்யாமல் செற்றார்—ஒருவன் யாதொரு தின்பமும் முன்பு செய்யாதிருக்க அவன்மேற் சினந்து தின்பம் செய்தவர்.

உய்யா விழுமம் தரும்—கடக்க முடியாத துன்பத்தைக் கொடுக்கும்.

முன் யாதொரு தின்பமும் தான் செய்யாதிருக்கத் தன்மேற் செற்றங்கொண்டு தின்பஞ் செய்தவர்க்கும் ஒருவன் அதனைச் செய்வனையின் அவனுக்குக் கடக்கமுடியாத துன்பத்தை அச்செயல் கொடுக்கும் எனபதாம்.

கறுத்து இன்ன செய்தார்க்கும் மேல் மறுத்து இன்ன செய்யலாகாதென்றார்; செய்தாலென்னை? யென்பார்க்கு அதனல்லதா லயாத துன்பம் உளவாம் என்று இதில் உணர்த்தினரென்க.

இன்னைமை இன்னைமையையே யீனுமாதலால் அதனை எவ்விடத்தும் எவ்வகையானும் செய்யலாகாதென்பதும், செய்யின் செய்தார்க்கே அது துன்பத்தை விளக்கும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நிமியின்கண்ணும், வசிட்டர்பாலும் உணரப்படும்.

கதை.

நிமி என்பவன் சூரியகுலத் தோன்றலாகிய இக்குவாகுவின் புதலவன். அமரரும் வியக்கத்தக்க அருந்திறல் படைத்த

வன். சிறந்த போர்வீரன். மலர்தலை யுலகினுக்கு உயி ரென இருந்து இசை திசை பரப்பி வசையற ஆண்டவன். துறந்தவர் தம்மினும் தூய்மை வாய்ந்தவன். இவன் சத்திரவே ள்வி ஒன்று செய்யவிருப்பி வசிட்டனை அதற்குத் தலைவராயிருக் கும்படி அழைத்தான். இந்திரன் வேள்வி ஒன்று புரிகின்றான் அங்குச் சென்றுவருகின்றேன் என்று அவர் செப்பிப் போயினர். கௌதமனைக்கொண்டு தனதுவேள்வியை நிமி இனிது முடித்தான். அத்திரி, பிருகு, அங்கிரா முதலிய முனிவர்களையும் அங்கு வந் திருந்த மன்னர்களையும் தன்னாளிடையோடு அனுப்பிவிட்டு வேள்வி யின் இலைப்பால் மென்று துயில்புரிந்தான். வசிட்டர் வந்தார். "யான் வருவதற்கு முன் வேறொருவனைக்கொண்டு வேள்வியை முடித் தான், யான் வந்திருந்தும் இங்கு வந்து காணாது மன்னன் என்னை அவமதித்தான்" என்று முனிவர் மனங் கொதித்து "அவன் ஆவி தீர்க" என்று சாபங் கூறினர். அமைச்சர் எழுப்ப நிமி எழுந்து நிகழ்ந்ததையறிந்து தான் ஒன்றுஞ் செய்யாதிருந்தும் தன்மேற் சுமத்து இன்னா வினைத்தாரோ என்று முனிவனை வெறுத்து "அச்சாபம் உன்னையும் சார்க" என்று மன்னவன் சபித்தான். இருவரும் இறந்து இன்னுடல் கழிந்தார். பிரிந்து நொந்து பின் பிறந்து வருந்தினர். செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய் யின் அச்செயல் உய்யா விழுமம் தரும் என்பதை உலகம் இவர் பால் உணர்ந்தது. விரிவைப் பாகவதத்தில் காண்க.

என்னை முன் வரித்துப்போன யான்வருவதற்கு முன்போர்
அன்னியன் றன்னைக் கொண்டாங் கருமகம நடாத்துகின்ற
மன்னவன் காண நான்றன் வந்திடப் புறப்படாதே
தன்னுடல் விடுக ஆவி யெனமுனி சபித்தான் அன்றே.

அன்னவன் சபிக்கக்கேட்ட அரசர்கோன் அழலிற்பொங்கித்
தன்வரவறியேன்பாயல் சார்ந்துநித்திரைகான் பண்ணை
என்னையங் நியாயத்தாலே யெரிவித்த சாபம் அன்றன்
தன்னையுஞ் சார்கவென்று சபித்தனன் தவத்தின் மிக்கான்.

(உத்தரகாண்டம்.)

இவற்றுல் மேற்கூறித்தவுண்மை இனிது புலனுதல் காண்க.

இன்னுத செயல் எவ்வகையாலும் தன்னைச் செய்தார்க்கே துன்பம் விளைக்கும் என்பது இதனல் கூறப்பட்டது.

---

314. பண்டு சுயோதனனைப் பாண்டவரேன் கட்டவிழ்த்துக்
கொண்டுவந்து விட்டார் குமரேசா—மண்டிவந்து
இன்ன செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (சு)

இ.—ள்.

குமரேசா! தமக்கு இன்ன செய்யவந்த துரியோதனனைக் கட்டவிழ்த்துக்கொண்டுவந்து என் ஐவர் இனியன செய்து விடுத்தார் எனின், இன்ன செய்காரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடலேயாம் என்க.

நன்னயம்—இனியவை. நல் நயம் எனப் பிரித்துக் காணினும் பொருத்தமாம்.

நன்னயம் செய்துவிடல்—இன்புறும் நலங்களைச் செய்து விடுக. விடல் என்பது உடன்பாட்டு வியங்கோள்.

தனக்குத் துன்பம் செய்தாரை ஒருவன் தண்டித்தலாவது அவர் தாமே நாணும் வகை அவர்க்கு இன்பம் செய்துவிடுதலேயாம் என்பதாம்.

தான் யாதும் செய்யாதிருக்க தனக்குத் தீது செய்தாலுக்கு இன்ன செய்யினும் தீதாம் என்று மேலே கூறினர்; இனி அவன் பால் செய்ய வேண்டுவதுதான் யாது என்பார்க்கு இது கூறினுனென்க.

தமக்கு இன்னுதன செய்தாலுக்கும் அறிவோர் இனியனவே செய்வார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பாண்டவர்பால் உணரப்படும்.

கதை.

பாண்டவர்கள் வன வாசஞ் செய்யுங்காலத்தில், துரியோதனன் தன் செல்வ நலத்தையும் சிறப்பையும் அவர்க்குக் காட்ட விரும்பிச் சிறந்த அணிகளும் உயர்ந்த ஆடைகளும் அணிந்து மனைவிமக்களும் உரிய துணைவரும், கன்னன் சகுனி முதலிய நண்பரும் நால்வகைச் சேனையும் புடைசூழ எழுந்து வனம் புகுந்து அவர் தங்கியிருக்கும் இடத்தைச் சார்ந்தான். நறுமிய மலர்கள் நிறைந்த ஓர் இனிய வாவியை யணுகித் தமது படைகளோடு நீராடினான். தனது அழகிய மகளிரோடு அங்கு வந்திருந்த சித்திரசேனன் என்னும் வித்தியாதரனுக்கும் இவனுக்கும் வாதம் நிகழ்ந்தது. முதலில் சொற்போர் தொடங்கி முடிவில் விற்போர் நிகழ்ந்தது. அதில் அனைவரையும் வென்று துரியோதனனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சித்திரசேனன் தேர்மேலேறி வான் மேல் போனான். வெஞ்ச னெஞ்சன் அஞ்சி அலறினான். அவனது அபயக் குரலை அறன் மகன் கேட்டார். மனமிக இரங்கித் துணைவரையனுப்பினர். காலினுங் கடுகி நால்வரும் ஓடினர். வான்வழிச் செல்வோன் மேல் வாளி தூவினர். அருச்சுனனைக் கண்டு தன் நட்புரிமையை நினைந்து தான் பிடித்திருந்த சிறையினை விடுத்து இனிய மொழிகள் புகன்று அவன் மகிழ்வுடன் சென்றான். துரியோதனனைக் கொண்டுவந்து தருமர் முன் விடுத்தார். இவரும், அவனை அன்புடன் தழுவி அரிய கனிகளை ஊட்டி யினிய உபசாரங்களைச் செய்துவந்தவரோடு வாழ்த்தியனுப்பினர். சொல்லுதற்கரிய பெருந் துன்பங்களைத் தான், அவர்க்குச் செய்திருந்தும் தனக்கு அவர் அன்று செய்த நன்றிகளை நினைந்து நினைந்து நாணங்கொண்டான். ஆயினும், காட்டிலிருந்து இவ்வளவு சுகமாக வாழ்கின்றார்களே என்னும் புல்லிய பொறாமையும் அவனுள்ளம் புகுந்திருந்தது. தமக்கு இன்னதவற்றைச் செய்த கொடியவனை துரியோதனனுக்கும் இனியவற்றையே செய்து அன்புடன் விடுத்த தருமர் முதலிய ஐவரது மன நலங்களை அனைவரும் போற்றினர். விரிவைப் பாரதத்தில் காண்க.

தமக்கு இன்னை செய்தவர்க்கும் இனியன செய்வோரே பெரியோர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

315. தின்றோட்ட பவணனேன் சிற்றுயிர்நோய் கொண்டாலும்
கொண்டான் துயரம் குமரேசா—கொண்ட
அறிவினன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றுக் கடை. (ந)

இ—ன்.

குமரேசா! சிற்றுயிர்கள் சிறிது தன்புறக் கண்டாலும் பவணமாதேவன் என் டொளிதும் வருந்திப் போற்றினன் எனின், பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றுக் கடை அறிவினன் ஆகுவது உண்டோ என்க. இல்லை என்பதை ஓகாரம் உணர்த்திநின்றது. அறிவுக்குப் பயன் இதில் அறிந்துகொள்க.

பிறிதின் நோய்—பிறிதோர் உயிர்க்கு உறும் நோய்.

போற்றுக் கடை—பேணுதவிடத்து.

பிறர் நோய் என்னுது பிறிதின் என்று அஃறிணையாற் கூறியது நுண்ணிய வுடம்புகளையுடைய எறும்பு புழு முதலியவற்றையும் தம் உயிர்போல் பேணவேண்டுமென்று கருதி என்க.

பிறிதோருயிர்க்கு வரும் நோயைத் தம் உயிர்க்கு வந்ததாகக் கருதிக் காவாதவிடத்து மக்கள் அறிவினல் ஆவதொரு பயன் யாதும் இல்லை என்பதாம்.

நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல் முதலிய செயல்களானும் சிற்றுயிர்கள் வருந்தாவண்ணம் உற்றறிந்து ஒழுகவேண்டுமென்பது கருத்து. பிறவுயிர்களைத் தன் உயிர்போல் பேணுதவன் எவ்வளவு அறிவுடையவனாயினும் அவனை அறிவில்லாதவனாகவே கொள்ளவேண்டுமென்பது குறிப்பு.

பிறவுயிர்கள் சிறிது வருந்தினும் அறிவுடையார் பெரிதும் இரங்கி அவற்றைப் போலுவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பவணமாதேவன்பால் உணரப்படும்.

கதை.

பவணமாதேவன் என்பவன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தாதகி நாட்டிலே யிருந்த பூமி திலகம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்தவன். அருளும் பொறையும் அறிவும் நிறைந்தவன். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியொழுகிய புண்ணிய சீலன். இவனுடைய அருமை மனைவிக்குச் சயமதி என்பது பெயர். அவள்பால் நலமெலாந் திரண்ட ஒருகுலமகன் பிறந்தான். பருவமெய்தி அவன் இளவரசாய பின் அழகிய மகளிர் ஐவரை மணந்து அருங் போகந் துய்த்தான். துய்த்துவருங்கால் பொய்கை ஒன்றில் பொருந்தியிருந்த ஓர் அன்னப் பார்ப்பை அவர்பால் தந்தான். அவர் பெற்றுப் பெருமகிழ்வுற்றுக் காலில் மணியணி புனைந்து பாலமுதூட்டி மார்போடணைத்து இனிது பேணிவந்தார். அதனை ஒருநாள் அரசன் கண்டான். இனிது பேணிலும் தாயினை யிழந்து மறுகி நிற்கும் அதன் நோயினையுணர்ந்தான். நொந்து துடித்தான். அந்தோ! "குழந்தாய் என்ன பாவஞ் செய்தாய்!! இவ் இளங் குஞ்சை என் இவ்வாறு இனம் பிரித்து வருத்துகின்றாய். இது சாலவுந் தீது" என்று சொல்லி அதன்பால் ஓடி அதனை உற்றுநோக்கி உள்ளங்கலங்கினான். மன்னனது பேரருளையும் மனப்பண்ணமையும் கண்டு மைந்தன் அஞ்சி நடுங்கி அதனை விரைந்தெடுத்துச் சென்று முன் இருந்த வாவியில் விடுத்தான். சிறு துயருற்ற ஒரு பறவைக்காகப் பெருந் துயரெய்திய தந்தையின் பண்பையே பின் தானும் கொண்டான். பிறவுயிரையும் தன்னுயிர்போலக் கருதிப் போற்றலே ஒருவன் அறிவுக்குப் பயன் என்பதை உலகம் பவணமாதேவன் பால் உணர்ந்து மகிழ்ந்தது. (விநாயகச் சிந்தாமணியில் காண்க.)

பிறவுயிர்களையும் தன் உயிர்போல் கருதிப் பேணுதலிடத்து ஒருவனது அறிவால் பயனில்லை என்பது இதனால் கூறப்பட்டது.

316. பற்றியகை அன்னம் படுதுயர்கண் டேனுடனே
கொற்றநளன் விட்டான் குமரேச — எற்றேனும்
இன்ன வெனத்தான் உணர்ந்தவை தன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல் (சு)

இ.—ள்.

குமரேசா! தன் கையிற் சிக்கிய அன்னம் அடைந்த இன்னலைக் கண்டு இரங்கி என் நளன் அதனை விடுத்தான் எனின் இன்ன என தான் உணர்ந்தவற்றை பிறன்கட் செயல் தன்னுமை, வேண்டும் என்க. தன்னல்—நெருங்கல்.

பிறன்கண் செயல்—பிறனிடத்துச் செய்தலை.

தன்னுமை வேண்டும்—பொருந்தாமை வேண்டும்.

தன்பமென்று தான்உணர்ந்தவற்றைப் பிறனிடத்து ஒருவன் செய்யலாகாதென்பதாம்.

மேலை, பிறவுயிரையுந் தன் உயிர்போல் பேணி ஒழுகுதலை ஒருவன் அறிவுக்குப் பயன் என்றார்; இதில், தன்பமானவை என்று உணர்ந்தவற்றை எவரிடமும் அவை செய்யலாகாதென்றார்.

தாம் தன்பமென்று உணர்ந்தனை அறிவுடையார் பிறரிடஞ் செய்யார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது நளன்பால உணரப்படும்.

கதை.

நளன் ஒருநாள் காலையில் தனது அழகிய பூஞ்சோலையில் புகுந்து உலாவினன். அங்குள்ள விரூபிய களங்கள் பலவுங்கண்டு முடிவில் அதனிடையே அமைந்திருந்த மலர்த் தடத்தை யணுகினன். பொன்னிறமுள்ள தெய்வ அன்னம் ஒன்று தழைமுறு சிறகரால் தன் தலையினை மறைத்து உடல் வளைந்து ஒரு காலை ஊன்றி செந்தாமரை மலரொன்றில் நின்று தூங்கிற்று. அந்த அரச அன்னத்தின் எழிலையும், நலத்தையும், வியந்து பதுங்கிச் சென்று அரசன், தன் கையாற் பற்றினன். கைப்படு சிறை அன்

னம் கலங்கி வெருவிப் புலம்பித் துடித்தது. அது தன்புறுவதைக் கண்டு மன்னனுந் தன்புற்று என்ன தீங்கு செய்தேன் என்று தன்னை நொந்தான். தெய்வ அன்னம் ஆதலால் அதனை நோக்கி இன்னுரை சில புகன்று நன்னயஞ் செய்து எகுழி எனை இணைந்து விடுத்தான். இன்ன னெனத் தான் உணர்ந்தபின் அறிவோர் அதனைப் பிறர்மாட்டுச் செய்யார் என்பதை உலகம் நன்பால் உணர்ந்தது. விரிவை மைடதத்தில் காண்க.

கைப்படு சிறையனங் கலங்கி வாய்வெரீஇ
துப்புறழ் தோலடி துடிப்பத் தன்பமுற்
றெய்ப்பொடு சிறையடித் தேக லாமையின்
மைபடுய லனையகை மலரிற் கொத்திற்றால். (1)

ஆளிக்கொரு கடலனன் அதனைக்கண்டுகண்
தளிததிடு தண்புனற் றுவலை வீழ்தலிற்
றளிர்த்தமென் சிறையனந் தளர்வு நீங்கியுட்
களித்தது காவலன் கருணை நோக்கியே. (2)

ஆகுலத் துடன்மட வனத்தை நோக்கி நின்
சேகுறு பொனனிறச் சிறகர் நோக்குறும்
மோகமே பிடித்தனன் முழுதும் நோக்கினன்
எகுழி யேகென இறை விடுத்தனன். (3)

(அன்னத்தைக் கண்ணுற்ற படலம்.)

இவற்றால் மேற்குறித்தஉண்மை இனிதுதெளிவாதல் காண்க.

உணர்வுடையார் பிறவுயிர்கட்குத் தீயர் வினை செய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

317. நந்தும் உயிரென்றென் நாணிக் குசேலர்முன்
குந்தி நடந்தார் குமரேசா—முந்தும்
எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானும்
மானை செய் யாமை தலை. (எ)

இ—ள்.

சுமேதசா! சிற்றுயிர்களும் சிறிதும் வருந்தாவகை தெரிந்து என் குசேலர் முன் சென்றார் எனின், எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான் ஆம் மாண செய்யாமை தலை என்க.

மாண என்றது மாண்பு இல்லாதன என்று அறிவார் விலக்கியுள்ள இழி செயல்களை. எனைத்தானும்—சிறிதாயினும்.

மனத்தான் ஆம் மாண—மனம் அறிந்த துன்பங்களை.

மனத்தானும் என்று பாடங்கொண்டால் பிறர்க்குத் துன்பமான செயல்களை நெஞ்சினாலும் நினைக்கலாகாது என்று கொள்க.

எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதேனும் துன்பமான செயல்களை மனமாரச் செய்யாமையே ஒருவனுக்கு தலையான அறம் என்பதாம்.

செல்வம் அதிகார முதலிய நலங்களை யெய்தித் தன் செல்வாக்குச் செல்ல வல்ல காலத்தும் என்பார் "எஞ்ஞான்றும்" என்றார். யார்க்கும் என்றது எளியவர் மெலியவர் முதலிய யாவர்க்கும் என்பது கருதி.

ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவருக்கும் எவ்வகையானும் துன்பமான செயல்களை ஒரு சிறிதும் ஒருவன் செய்யலாகாதென்பது கருத்து. இவ்வுண்மை குசேலர்பால் காணப்படும்.

கதை.

குசேலர் கண்ணனைக் காணக் கருதி துவாரகையின் இராசவீதியில் செல்லுங்காலத்தில் இரு புறங்களிலும் வரிசையாக வைத்திருந்த குளிர்ந்த மரங்களின் நிழலில் செல்லாமல் வெளியிடையே சென்றார். நிழல்வழி நடந்தால் வெயிலுக்கு ஒதுங்கி ஆங்கு அடைந்திருக்கும் ஊர்வனவாகிய சிற்றுயிர்கள் துன்புறுமே என்று இரங்கித் தன் மேனி மேல் வெயில்பட வெம்பியும்

உயிர்களைப் பேணினர். வெயிலின் கொடுமைக்கு ஆற்றாது இரு கரங்களையும் விரித்துத் தம் தலை மீது கவித்துக்கொண்டு தாங்கி நடந்தார். எனைத்தானும் மனத்தானும் இன்னல அறிவோர் எவ்வுயிர்க்கும் செய்யார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

முன்னும் பார்க்கும் முதிரொளி தோன்றலால்
பின்னும் பார்க்கும் பெருநிலத் தூருயிர்
உன்னும் பார்க்கும் உறுவர் குழாமெலாம்
இன்னும் பார்க்க எழுதிடும் சீர்த்தியான். (1)

சீதநீழற் செவிற் சிற்றுயிர்த் தொகை
போதச் சாய்புமென் றெண்ணிய புந்தியான்
ஆதவந் தவழ் ஆறு நடந்திடுங்
காத லங்கை விரித்துக் கவித்தனோ. (2)

இவற்றுல் மேற் குறித்த வுண்மை இனிது தெளிவாதல் காண்க.

இன்னாத செயல்களைச் சிறிதும் யார்மாட்டும் செய்யாமையே பேரறம் என்பது இதனுல் கூறப்பட்டது.

---

318. மண்டுதுயர் தானறிந்தும் மாரிதத்தன் என்பிறர்க்குக்
கொண்டுசெய்தான் இன்ன குமரேச — கொண்டுநின்ற
தன்னுயிர்க் கின்னமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்ன செயல். (அ)

இ—ன்

குமரேசா! துன்பத்தைத் தான் அனுபவித்து அறிந்தும் மாரிதத்தன் என் பிறர்க்கு அதனைச் செய்தான் எனின், தன் உயிர்க்கு இன்னமை தான் அறிவான், மன்உயிர்க்கு இன்ன செயல் என்கொலோ என்க.

என் கொலோ என்றது அறிந்திருந்தும் அறிவிழந்து செய்கின்ற அவனது அறியாமைக்கு இரங்கி என்க.

பிறர் செய்யும் இன்னல்கள் தன் உயிர்க்குத் துன்பமாந் தன்மையை அனுபவித்து அறிகின்றவன் பிறவுயிர்கட்கு அவற்றைச் செய்தல் யாது காரணத்தானே என்பதாம்: அறியாமையே காரணம் என்பது கருத்து.

அறிவிலிகளே பிறவுயிர்கட்குத் துன்பமான செயல்களைச் செய்வார் என்பதும் அறிவறிந்த மக்கள் அவற்றையாண்டுஞ் செய்யார் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை மாரிதத் தன்பால் உணரப்படும்.

கதை.

மாரிதத்தன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மகத நாட்டிலே இராசமாபுரம் என்னும் நகரிலிருந்த அரசு புரிந்தவன். திண்ணிய அரசனுயினும் நுண்ணிய அறிவில்லாதவன். எவர் எதைச் சொல்லினும் அதை நம்பியுழல்வான். இவன், வசந்தகால மொன்றில் தன் படைகள் புடைசூழ ஓர் அழகிய பூஞ்சோலைக்குட் சென்றான். அங்கே தொங்கிக்கொண்டிருந்த தென்னங்குரும்பை ஒன்று காற்றிலலைப்புண்டு இவன் தலைமேல் விழுந்தது. அதனால் நொந்து துடித்தான். குடிகள் சிலர் வந்து அரசே! இஃது இவ்வனதேவதையாகிய தேவி செய்த வஞ்சனையாதலால் அவள் மகிழுமாறு பூசைசெய்யவேண்டுமென்றார். அதற்கு என் செய்வதென்றான். பன்றி, கோழி, முதலியவற்றைக் கொன்று பலியிடுக என்றார். அவ்வாறே செய்தான். அவ்வமையம் அவ்வழியே சென்ற அபயருசி என்னும் முனிவரொருவரைக் கண்டான். அவரையும் கொணர்ந்து நரபலியிட்டால் தேவி மிக மகிழ்வாள் என்று கருதிச் சண்டகருமன் என்னும் ஒரு தண்டத் தலைவனை விடுத்து அவரைக் கொண்டு வரும்படி செய்து காளிமுன் நிறுத்தி வாளினை எடுத்தான். அப் பெரியவர் சிறிதும் கலங்காமல் நின்று புன்னகை செய்தார். வெட்

டத்தணிந்த அரசன் வியந்து முன்வந்தான். ஏன் சிரித்தாய் யென்று எதிரே நின்றனன். "இளமைப் பருவத்தில் உன் கையில் வைத்திருந்த தேங்கா யொன்றை விளையாடமாக ஒருவன் தலையில் வீழ்த்தினைப். அவ்வினைப்பயனே இன்று உன் தலையில் அது விழும் படி செய்தது. அதற்காக இன்று பலவுயிர்களைக் கொன்றனைப். இக் கொலைபால் நீ எத்தனை தலைமுறை கொலையுண்டுகழிவாயோ என் று கருதியும், உன் உயிர்க்கு உற்ற அச்சிறு துன்பத்தை உணர்ந் தும் பிறவுயிர்கட்கு இப்பெருந்துன்பத்தைப் புரிகின்ற உன அறி யாமைக்கு இரங்கியும், யான் நகைத்தேன்" என்றார். கேட்டான் அரசன். அஞ்சி நடுங்கி அவர் அடியில் விழுந்தான். அருளு டையராகி அன்றே துறந்தான். மன்னுயிர்க்கு இன்னைசெயல் மடமையாம் என்பதும் அதனை அறிந்தோர் செய்யார் என்பதும் இவண்பால் உணர நின்றன. விரிவை யசோதரீயத்தில் காண்க.

பிறவுயிர்கட்குத் துன்பஞ்செய்வோர் அறிவிலிகளே யாவர் என்பது இதனால் கூறப்பட்டது.

319. கூடல்சேர் கோவலனைக் கொன்றேனென் றாகுலன்பின்
கூடிளைஞர் துன்பேன் குமரேசா—நாடுப்
பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் றாமே வரும். (கூ)

இ.—ள்.

குமரேசா! முன் கோவலனைக் கொல்வித்த கோவலனும் ஆகுலனும் பின் என் தாமே கொலையுண்டிறந்தார் எனின், பிறர்க்கு இன்னு முற்பகலிற் செய்யின் தமக்கு இன்னு பிற் பகலில் தாமே வரும் என்க.

முன்பகல், பின்பகல், என்பன ஒரு பகலின் முற்பகுதியையும் பிற்பகுதியையும் என்க.

பிறர்க்குத் துன்பமானவற்றை ஒருபகலின் முற்பாகத்தில் ஒருவன் செய்வானையின் தமக்குத் துன்பமானவை பிற்பகலில் அவர் செய்யாவிடினும் தாமே வரும் என்பதாம்.

செய்த தீவினை செய்தவனையே சென்று சேர்தல் ஒருதலை யாதலால் தானேவரும் என்றார். பிற்பகல் என்றது வினைவில் வரும் என்பதை உணர்த்துதற்கு என்க.

துன்பமான செயலைப் பிறர்க்கு ஒருவன் செய்யின் அச்செ யல் அவனுக்கே பின்பு துன்பமாய் முடியும் என்பது இதிலுணர் த்தப்பட்டது. இவ்வுண்மை நெடுஞ்செழியன் கண்ணும் இராகு லன்பாலும் உணரப்படும்.

கதை 1.

நெடுஞ்செழியன் ஆராயாமல் கோவலனை முன்பு கொல் லும்படி செய்தான். அதனால் பின்பு தானே துன்புற்று மாய்ந் தான். இன்னா, தன்னைச் செய்தானையே சென்று பற்றித் துன்பு றுத்தும் என்பதை உலகம் இவன்பால் நன்குணர்ந்தது.

கோப்பெருந் தேவி கொடுவினை யாட்டியேன்
யாவுந் தெரியா இயல்பினை யுயிர்ளும்
முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிகாண். —சிலப்பதிகாரம்.

மன்னன் தேவியை நோக்கிக் கண்ணகி கூறிய இவ்வுண்மை மொழிகளால் மேற்கூறித்த உண்மை தெளிவாதல் உணர்க.

கதை 2.

இராகுலன் என்பவன் காந்தார நாட்டிலே இடவயம் என் னும் திருநகரிலிருந்து அரசுபுரிந்த அத்திபதி என்னும் அரசனு டைய புதல்வன். தாய் பெயர் நீலபதி. இவன், அறிவிலும், ஆண்மையிலுஞ் சிறந்து பருவமெய்தினன். இலக்குமி என்னும் ஓர் உத்தமியை மணந்து இன்பந்துய்த்து இனிது வாழுங்கால் பிரமதருமர் என்னும் முனிவரொருவருக்கு அமுதருத்த விரும்பி விழுமிய வுணவுகளை விரைவில் ஆக்குக என்று ஆணை என்னும் மடைத்தொழில் வல்லானுக்கு முதல்வாள் ஆணைதந்தான். மறு

நாள் அவன் சிறிது தாமதமாகிவந்து அட்டில்புகுந்து அடுதொ ழில் முயன்றான். முனிவருக்கு வேண்டிய இனிய உணவுகளை இன்னும் ஆக்கவில்லையா! என்று இராகுலன் முனிந்தான். அச் சத்தால் அவன் அடிதடுமாறி அங்கிருந்த நண்கலங்கள் ஒலிபட விழுந்தான். விழுந்தனைதற்கண்டும் இரங்காமல் தனது வாளால் அவனது தோளும் தலையும் துணிபட வெட்டினன். இவனும் பாம்பொன்று கடிக்கப் பின்பு பதைத்து மாய்ந்தான். தான் செய்திருந்த நல்வினைப்பயனல் கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து பெரியனெனிச் சிறந்து விளங்கிவருங்கால் காஞ்சனன் என்னும் வித்தியாதரன் ஒருவன் தன் மனைவியை விரும்பினன் என்று மாறுபட மதித்து இவனது தோ ளும் தலையும் துணிபடத் தன் வாள்கொண்டு வெட்டினன். இவ னும் துடித்துயிர் துறந்தான். முன்பு தன் பணியாளனைத் தான் கொன்றபடியே பின்பு தான் கொலையுண்டிறந்தான். பிறர்க்கு இன்னு முற்பகல் செய்யின் தமக்கு இன்னு பிற்பகல் தாமேவரு மென்பதை உலகும் இவர்பால் உணர்ந்தது. இதன் விரிவை மணி மேகலையில் காண்க.

பிறர்க்கின்னு செய்தலிற் பேதமை யில்லை
பிறர்க்கின்னு தென்று பேரிட்டுத்—தமக்கின்னு
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலிற்
பித்தும் உளவோ பிற. (அறநெறிச்சாரம்.)

அல்லித்தாள் அற்றபோதும் அறுதறு லதனைப் போலத்
தொல்லைத்தம் உடம்புநீங்கத் தீவினைதொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச்சூழ்ந்து புக்குழிப்புக்குப் பின்னின்
றெல்லையில் துன்பவெந்தீச் சுட்டெரித்திடுங்க ளன்றே.

(சீவகசிந்தாமணி.)

ஒருவன் பிறர்க்குத் துன்பஞ்செய்யின் தனக்கே பின்பு அது துன்பமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

320. வண்டுகட்கு நோய்செய்த மாண்டவியர் பின்தொடுநோய்
கொண்டுநொந்தார் என்னே குமரேசா — மண்டிவரும்
நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (ய)

இ—ள்.

குமரேசா! வண்டுகட்கு முன் நோயினைச் செய்த மாண்டவியர் பின் தாம் கொடுநோய் கொண்டு ஏன் நொந்தார் எனின், நோய் எல்லாம் நோயினைச் செய்தார் மேலவாம் ஆதலால் நோயின்மை வேண்டுபவர் நோயினைச் செய்யார் என்க.

நோய் எல்லாம — தின்பங்களெல்லாம்.

நோய் செய்தார் மேலவாம் — பிறிதோருயிர்க்குத் துன்பங்களைச் செய்தார்கண்ணே சேர்வனவாம்.

துன்பங்களெல்லாம் பிறவுயிர்கட்குத் துன்பங்களைச் செய்தார்கண்ணே சேர்வனவாகும்; ஆதலால் துன்பமின்மையை விரும்புகின்றவர் பிறிதோருயிர்க்குத் துனபத்தைச் செய்யார் என்பதாம்.

தம் உயிர்க்கு இன்பத்தை விரும்புகின்றவன் பிறவுயிர்க்குத் துன்பத்தைச் செய்யலாகாது என்பது குறிப்பு.

முற்பகலில், பிறர்க்கு ஒருவன் துன்பம் செய்யின், பிற்பகலில் அஃது அவனுக்கே துன்பமாய் வரும் என்று மேலே கூறினர்; இதில், அவ் வுண்மையை உணர்ந்து தனக்குத் துன்பமின்மையை வேண்டுகின்றவன் எவ்வுயிரிடத்தும் அதனைச் செய்யாதிருக்கவேண்டுமென்று உணர்த்தினர்.

நோய் செய்தவரே நோயினை அடைவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மாண்டவியர்பால் உணரப்படும்.

கதை.

மாண்டவியர் என்பவர் மறையவர் மரபினர். இவரது காலம் இற்றைக்கு ஐயாயிரம் வருடங்கட்கு முன்னராகும். இவர், இள

மைப் பருவத்தில் அளவில்லாத அல்லல்களைப் பிறவுயிர்கட்குச் செய்தார். மீன் தவளை முதலிய சில நீர்வாழினங்களையும் வண்டு தும்பி முதலிய சில புன்சிறு பறவைகளையும் பிடித்துக்கூரிய முட்களை அவற்றின் உடல்களிற் புகுத்தி அவை துடிப்பதைக்கண்டு இவர் நகைத்துக் களிப்பர். பருவமுற்றபின் பல்கலை தேர்ந்து நல்லவராயினர். இல்லறத் துறந்து துறவறம் புகுந்தார். தனியிடமொன்றில் இனிதுற வமர்ந்தார். பொறிகளை யடக்கி இறையருள் நாடினர். இவர் இவ்வகையிருக்கையில் சாருவ தேசத்து அரசனது மர்னிகையில் கள்ளர் சிலர் புகுந்து கொள்ளை செய்து மீண்டு இவரிருக்கும் பாழ்மண்டபத்தை யடைந்து கிடைத்த பொருள்களைப் பங்கு செய்துகொண்டிருந்தார். உடனே அவ்வரசனுடைய வீரர்கள் பின்தொடர்ந்து குறித்த இடத்தை அடைந்தார். கள்வர் அங்கிருந்த புதரொன்றிற் புகுந்து மறைந்தார். வந்த வீரர்கள் அங்குக் கண்மூடி யோகத்திலிருந்த இவரைக்கண்டு பக்கத்தில் சிதறிக்கிடந்த அணிகளையும், மணிகளையுந் தெரிந்து இவரைக் கள்வர் தலைவனென்றே கருதிப் பிடித்துத் தம் காவலன்பால் காட்டினர். காவலன் சினந்து இவரைக் கழுவில் ஏற்றும்படி கட்டளையிட்டான். உடனே ஏற்றினர். மூவிவர் கதறித் துடித்தார். உதிரம் சிதறித் துளித்தது. வழுவில்லாத முனிவரைக் கழுவில் ஏற்றுதற்குக் காரணம் யாதென்று தேவர் சிலர் காலவினவினர். இளமைப் பருவத்தில் வண்டுகளுடல்களில் முட்களை யேற்றினமையே காரணமென்று காலன் கூறினன். அவ்வுண்மையைத் தம் மெய்யுணர்வால் முனிவரும் உணர்ந்தார். அறியாப்பருவத்தில் அறிவில் உயிர்கட்குச் சிறுதீங்கு செய்த அப்பெரியாரும் பின் பெருநோயுற்றார். நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் என்பதை அறிஞர் சிலர் இவர்பாலுணர்ந்து பிறவுயிர்கட்கு நோய் செய்யாதொழுகினர். அதனால் பின் நோயிலராய் உயர்ந்தார். (இதன் விரிவை மாண்டவியத்தில் காண்க.)

தனக்குத் துன்பமின்மையை விரும்புகின்றவன் பிறர்க்குத் துன்பஞ் செய்யலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.)

எதுவரினும் பிறர்க்கு இன்னாதவற்றைப் பெரியோர் செய்யார். சினந்து ஒருவன் தமக்குத் துன்பஞ் செய்யினும் மாறி அவன்பால் அதனை உயர்ந்தோர் செய்யார். காரணமின்றித் தனக்குத் துன்பஞ் செய்தவனிடத்தும் தான் அதனைச் செய்யாமையே ஒருவனுக்கு நன்மையாம். தனக்கு இன்னாதன செய்தார்க்கு ஒருவன் இனியனவே செய்துவிடின் அதுவே அவர்க்குத் தண்டனையாம். பிறிதின் நோயைத் தன் நோய்போற் போற்றுதலே ஒருவன் அறிவுடைமைக்குப் பயனும். தான் துன்பம் என்று உணர்ந்ததை ஒருவன் யாண்டுஞ் செய்யலாகாது. என்றும் எவர்க்கும் சிறிதேனும் துன்பஞ்செய்யாது ஒழுகுதலே ஒருவனுக்குத் யாய அறமாம். தனக்குத் துன்பமென்று

றைப் பிறவுயிர்க்குச் செய்பவன் உணர்வில்லாதவனே யாவன். முற்பகலில் பிறருக்கு ஒருவன் துன்பம் செய்யின் பிற்பகலில் அஃது அவனுக்கே வரும். துன்பங்களெல்லாம் தம்மைச் செய்தார்கண்ணே பின் சேர்வனவாகும். தனக்குத் துன்பமின்மையை விரும்புகின்றவன் பிறர்க்கு அதனைச் செய்யலாகாது என்பனவாம்.

32—வது இன்னா செய்யாமை முற்றிற்று.

33-ம் அதிகாரம் கொல்லாமை.

அஃதாவது யாதோர் உயிரையும் எவ்வகையானும் கொல்லுதலைச் செய்யாமை. முனிவிகந்து யாவர்மாட்டும் இனியவை புரிந்து புனிதமெய்தியவர்க்கே கொல்லாமை என்னும் இந்நல்லறத்தைக் கொண்டொழுக லமையுமாதலால் வெகுளாமை இன்னா செய்யாமைகளின் பின் இது வைக்கப்பட்டது.

321. கொன்றிழிந்த கேடன்பின் கொல்லாமை யாலுயர்ந்தோன்
குன்றனான் புற்றன் குமரேசா—என்றும்
அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். (க)

இ—ள்.

குமரேசா! கொல்லுதலைச் செய்து இழிந்துநின்ற கோடன் பின் கொல்லாமையால் என் உயர்ந்து இன்புற்றான் எனின்; அறவினை யாது எனின் கொல்லாமை; கோறல், பிறவினை யெல்லாம் தரும் என்க. பிறவினை என்றது—பாவச் செயலை.

கோறல் பிறவினை எல்லாம் தரும்—கொல்லுதல் பாவச்செயல்கள் எல்லாவற்றையும் கொடுக்கும்

கொல்லாமையே அறச்செயல்; கொல்லுதல் பாவச்செயல்கள் எல்லாவற்றையும் கொடுக்கும் என்பதாம்.

கொல்லாமை ஒன்றினை எல்லா அறங்களின் பயனையும் ஒருவன் கொள்ளலாம் எனபதும், எல்லாப் பாவங்களின பயனையும் லுதல் ஒன்றே கொடுத்துவிடும் என்பதும் கூறியபடி.

அறம் பாவங்களிவையென தேவர் அருளிய திருவாயை இதில் ஆய்ந்து உணர்க. எல்லா அறங்களின் பயனையும் ஒருவன் ஒருங்கே கொள்ளவேண்டுமாயின் கொல்லாமை என்னும் விரதத்தை அவன் கொள்ளவேண்டும் என்பது குறிப்பு.

கொல்லுதல் என்னும் தீவினையை விடுத்துக் கொல்லாமை என்னும் நல்வினையை ஒருவன் கொள்வானாயின் எல்லா நலங்களையும் அவன் எளிதிலெய்துவான் என்பதை இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விபுலன்பால் உணரப்படும்.

கதை.

விபுலன் என்பவன் ஓர் வேடுவர் மகபினன். இமயமலையை அடுத்திருந்த ஏமதம் என்னும் வனத்திலிருந்தவன். கொல்லுதல் என்னும் புன்மை செயலையே கொண்டு உயிர் வாழ்ந்தவன். அருள் வள்ளலாகிய அல்லமதேவர் அப்பெருவனத்திடைபுகுந்த பொழுது இக்கொடியவனைக் கண்டார். அருள்பூக்கொண்டார். கொல்லுதலின் தீமையையும், கொல்லாமையால் எய்தும் நன்மை

யையும் அவன் உணருமாறு உணர்த்திஞர். ஆகூழ்வலியால் அவனும் உணர்ந்தான். அன்றுமுதல் கொல்லாத விரதங்கொண்டான். அதனால் எல்லா நலங்களும் கண்டான். முன் தான் கொன்றதால் எய்திய தீமைகளெல்லாம் நீங்கின. எல்லா அறங்களினையும் பயனையும் பின் அவன் கொல்லாமை ஒன்றால் எய்தினன். கொல்லாமையைக் கொண்டவன் எல்லா அறங்களையும் ஒருங்கே கொண்டவனுவான் என்பதை உலகம் இவன் பாலுணர்ந்தது. இதன் விரிவை மூனிவரர்கதியில் காண்க.

ஆனை யடியில் யுடங்கா அடியில்லை
தான தும்போல் நிற்கின்ற தன்மைதான்—ஊனுயிரைக்
கொல்லா அறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கும்
எல்லா அறமும் இணைந்து. (பெருந்தேவனர்.)

கொல்லாமையே அறவினையாம் கொல்லுதல் பாவமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

322. தண்டார் இயக்கோடன் சத்தன் பகுத்துண்டு
கொண்டார் மகிழ்வேன் குமரேசா—கொண்ட
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. (உ)

இ.—ள்.

குமரேசா! நல்லியக்கோடன் சத்தஞப்பிரத்தன் என்னும் இவர் என் பகுத்துண்டு மகிழ்வற்றூர் எனின், பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்க.

பகுத்து உண்டு—உண்பதனைப் பகுத்த உயிர்கட்குப் பகுத்துக்கொடுத்து உண்டு. வினைக்கேற்ற செயப்படுபொருள் இதில் வருவிக்கப்பட்டது. பல் உயிர் ஓம்புதல்—பல உயிர்களையும்

பேணல். ஊர்வன நீர்வாழ்வன முதலிய எல்லா வுயிர்களையும் என்பார் பல் உயிர் என்றார். இதில் முற்றும்மை தொக்கது.

எல்லாம் தலை—எல்லாவற்றினுஞ் சிறந்தது.

உண்டு ஓம்புதல் எல்லாவற்றுள்ளுந் தலை என்று கொண்டு காண்க. பகுத்துக் கொடுக்கவும் பரிந்து ஓம்பவும் தான் இருந்து வாழவேண்டுமாதலால் அவற்றிற்கிடையே தனக்குரிய உண்டி என்பது உற்று நின்றது. ஓம்புதல் இன்மேறல் அவன் ஒழுதல் நன்று என்பது குறிப்பு.

தமக்குக் கிடைத்த உணவைப் பகித்தவர்க்குப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதை உண்டு பல உயிர்களையும் பாதுகாத்தல் நூலோர் கிரட்டிய அறங்களெல்லாவற்றினும் தலையாய அறம் என்பதாம்.

பகித்த மக்கட்குத் தம் உணவைப் பகுத்து ஊட்டிப்பல் உயிர்களையும் பரிந்து பேணுவோரே சிறந்த அறமுடையவராய் உயர்ந்து விளங்குவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நல்லியக்கோடனிடமும் சுத்துப்பிரத்தன்பாலும் உணரப்படும்.

கதை.

நல்லியக்கோடன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்த் தொண்டைநாட்டிலிருந்த ஆமூர் என்னும் ஊரிலிருந்து திருவுடன் விளங்கிய ஒரு குறுநில மன்னன். நல்ல சிலமுள்ளவன். இரக்கமும், ஈகையும் இவன்பால் இயல்பாகவே அமைந்திருந்தன. அருவாவடதலை நாட்டினும் இவனுக்கு உரிமையான ஊர்கள் பல இருந்தன. ஊருணி நீர்போல் இவனது செருந்தெல்வம் எல்லா உயிர்களுக்கும் இன்புற நின்றது. பாரி, பேகன், அதிகமான், நள்ளி முதலிய வள்ளல்கள் எழுவருக்கும் பிற்பட்டவன். பேருபகாரி. அக்காலத்தில் இவனுக்கு ஒப்பான கொடையாளர் ஒருவரும் இல்லை. இவனது அருங்குணங்களையும் பகுத்துண்டு பல்லுயிரோம்பிய பெருங்கைமையையும் கல்லார்

நத்தத்தனார் என்னும் புலவர்திலகர் புகழ்ந்தாடியுள்ளார். தனது ஈகையாலும், இரக்கத்தாலும் மேலான அறமுனைடையதனைப் இவன் மேன்மை டெற்றான். விரிவைச் சிறுபாணாற்றுப்படையில் காண்க.

கெழுசமம் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்புள்
களிற்றுத் தழும்பிருந்த கழல்தயங்கு திருவடி
பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கை
நல்லியக் கோடனை நயந்து சென்றேன்
அழிபசி வருத்தப்வீடப் பொழிதவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவண் நின்றும் வருதும் நீவிரும்
செல்வீராயின் சீர்பல பெறுவீர்.

இது, நல்லியக் கோடனை யணுகிப் பரிசில் பெற்றுமீண்ட பாணனொருவன் மற்றொருவனை நோக்கிக் கூறியதென்க. அவன் பகுத்துண்டு உயிர்போற்றிய திறம் இதனால் பகுத்துணரப்படும்.

கதை 2.

சுத்துப்பிரத்தன் என்பவன் ஓர் உத்தம உணர்வினன். சிலர் வேதியன் என்பர். சிலர் இவனை அசுமரபினன் என்பர். சுமதி என்னும் மனைவியோடுகூடித் தனியிடமொன்றில் இனிதுற வாழ்ந்தான். மிகவும் வறியவன். சுகேசன் என்று இவனுக்கு ஒரு குமரனிருந்தான். அவனும் பருவமெய்திக்கமலை என்னும் ஒரு கன்னியை மணந்தான். தனது உரிமை மனைவியையும் இனிய மகனையும் அருமை மருகியையும் இவனே ஆதரித்து வந்தான். பொருள்பெறு முயற்சியில் புகாமல் அருளையே நாடி நின்றான். அதனால் மிகவும் வறியனானான். ஆயினும் செம்மையில் வழுவாது நன்மையில் நின்று பல்லுயிரோம்பி இயன்ற அளவில் இல்லறம் புரிந்தான். ஆரிதின் முயன்று வந்து

ஆக்கிய வுணவைவந் தாக்கை மூதலிய பறவைகளுந்தே ணும் ஊட்
டியபின்பே இவன் உண்டு மகிழ்வான். ஓரறிவுயிர்க்கும் இவன்
ஓர் ஊறுசெய்தறியான். பிறவுயிர்கள் வருந்தக்கண்டால் இவன்
உள்ளம்பதைத்துக் கண்ணீர் உகுப்பான். பஞ்சகாலமொன்றில்
இவன், ஐந்துகாட் பட்டினி கிடந்தான். ஆறாவதுநாள் மாலையில்
அரிதாய்க் கிடைக்கப்பெற்ற அரிசிமாவைப் பக்குவஞ்செய்து
நான்கு சிறுபாகங்களாக்கி மனைவிமுதல் மூவருக்குங்கொடுத்துத்
தானும் உண்ணமுயன்றான். இவனது மனநிலையை உணர விரும்பி
தருமதேவதை ஓர் அதிதிபோல் வந்து அருகில் நின்றது. தான்
உண்ணஎடுத்ததை அதற்கு உவந்து கொடுத்தான். அதுகொ
ண்டு உண்டு பின் களைதீர்ந்தது. மனைவியும் தன்னதை மாறாது
கொடுத்தாள். அதுவும் போதாதென்றது. மகனும், மருகியும்
உரியதை முறை முறை கொடுத்தார். அனைத்தையும் உண்டு இவ
ரது ஆருட்குணங்களை வியந்து அவ்வறக் கடவுளும் அகமகிழ்ந்து
அகன்றது. இவரனைவரும் அன்றே ஆருயிர் துறந்தார் பின்
பிறவா இன்பம் பெற்று மகிழ்ந்தார். பகுத்தறிவு பல்லுயிர் ஓம்பு
தலில் அறங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததென்பதை உலகம் இவர்
பாலுணர்ந்து தெளிந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. மணிமேகலை

உயிர்களைப் பேணுதலே அலையாய அறமென்பது இதனால்
கூறப்பட்டது.

---

323. கண்ட பசுவொன்னைறக் காப்பாற்ற ஆமகனும்
கொண்டான்பொய் என்னே குமரேசா—கண்டறிந்தால்
ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (க)

இ.—ள்.

குமரேசா! பசு ஒன்றைக் கொலையுறுமல் காக்கும்பொருட்டு ஆபுத்திரனும் என பொய்யைப் பொருந்தினன் எனின், ஒன்றை நல்லது கொல்லாமை; பொய்யாமை மற்று அதன் பின் சார நன்று என்க. ஒன்றுக—முதன்மையாக. அதன் பின் சார—அக்கொல்லாமையின் பின் நிற்க.

எல்லா அறங்களினுஞ் சிறந்து முதன்மையாய் இருத்தற்கு உரியது கொல்லாமையே என்பதும் அதன்பின அடுத்து நிற்றற்குரியது வாய்மையே என்பதும் கூறுவார் கொல்லாமை ஒன்றுக நல்லது; பொய்யாமை அதன்பின்சார நன்று; என்று கூறினர். இங்ஙனந் தகுதி கூறியது அவ்விரண்டறங்களின் இயல்பு நோக்கி என்க.

கொல்லாமையே முதன்மையாக நல்லது; பொய்யாமை அதன் பின்றுக நன்று என்பதாம்.

கொல்லாமையை முதலாவதாகவும் பொய்யாமையை இரண்டாவதாகவும் அறங்கள் கொண்டுள்ளன எனபது குறிப்பு. மக்களுள் அரசனும் அமைச்சனும போல, அறங்களுள் கொல்லாமையும் வாய்மையும் சிறந்தன என்க.

பொய்யாமை யுடையவன் வேறொர் அறமும் செய்யவேண்டாம் என்றும், அஃதொன்றே அறப்புகழ் யாவும் ஒருங்கே உதவுமென்றும், யாம் மெய்யாக்கண்டவற்றுள் வாய்மைபோல நல்லது வேறு இல்லை என்றும், மேல் வருனி இதில் எல்லா அறங்களினும கொல்லாமையே நல்லது என்று கூறலையுமோனினை, பிறிதோருயிர்க்கு நன்மை பயக்கும் வழி பொய்யாயிருப்பினும் மெய்யாயும், நன்மை பயவாவழி மெய்யாயினும் பொய்யே யாகியும் இதனை நோக்கி அது திரிந்து நிற்றலால் இதன்பின் சார்ந்து நிற்கவே அது நன்றும் என்றது அமையுமென்க. அறங்கள் பலவினும் வாய்மையே சிறந்தது, அதனினும் கொல்லாமை உயர்ந்தது என்ற அடிகள் அருண்மாண்பை இதில் ஓர்ந்துணர்க.

கொல்லாமை ஒன்றையே அறிவுடையார் தலைமையாகக்கொள்ள வேண்டுமென்பதும், அதனைக் காக்குபொருட்டு பொய்யாமை முதலிய உயர்நற்கூறுகளும் நிகழுமென்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை ஆதித்தன்பால் உணரப்படும்.

கதை.

ஆதித்தன் தன் தாயை யிழந்தபின் பாண்டி நாட்டிலுள்ள வயனங்காடு என்னும் ஊரிலிருந்த பூதி என்னும் அந்தணன் பக்கலிலிருந்து வளர்ந்துவந்தான். அருள் நிறைந்த உள்ளத்தனைய இவன் ஒருநாள் திருவிடைச் செல்லுங்கால் அங்கோர் மறையவன் வீட்டில் வேள்வியில் கொல்லும்பொருட்டு மாலைசூட்டி கொணர்ந்து வைத்திருக்கும் ஆவினைக் கண்டான். கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி, வலையிடைப்பட்ட மானே போன்று, அங்கு அஞ்சிநின்று அழைக்கும் அதன் அருந்துயர் தெரிந்து, நெஞ்சு நடுக்குற்று இவன் நெடுங்கண்ணீருகுத்தான். அந்தோ! இந்த ஆவை இன்று கொன்றுவிடுவரே! என்று கலங்கி அதனைக் காப்பாற்றும்பொருட்டுப் பொய்யாத இவனும் பொய்த்திட எண்ணினான். உள்ளங்கரந்து ஆங்கு ஒருபுடையொதுங்கிநின்று எவரும் அறியாதபடி இரவில் அதனைக் கவர்ந்து சென்றான். சிலர் தொடர்ந்து பின்சென்று இவனைப்பிடித்து இப்பொய்ப்படு களவினை நீ என் புகுந்து செய்தாய் என்று கடிந்து மொழிந்து கதிந்தியர் செய்தார். கொல்லாமாண்புடைய இவன் அப்பொல்லாதவர்களை நோக்கினான்.

நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்
விடுநிலை மருங்கிற் படுபுல் ஆர்ந்து
நெடுநிலை மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந் தூட்டும்
இதனெடு வந்த செற்றம் என்னை
மூதுமறை அந்தணீர் மூனனியது உரைமோ?

என்று இன்னுரை பகர்ந்து எல்லா அறங்களினும் கொல்லாமையே சிறந்தது என்று உணர்த்தினன். பொய்யாமையினும் கொல்லாமையே முதன்மையானதென்று புத்தன் அன்று கொண்டிருந்த திண்மையை அவ்வளவும் கொண்டாடி மகிழ்ந்தார். (விரிவை மணிமேகலையில் காண்க.)

கொல்லாமையே எல்லா அறங்களினும் தலையானதென்பது இதனால் கூறப்பட்டது.

---

324. நாடி மருளசங்கர் நல்லதென்று கொல்லாமை
கூடி நின்றூர் என்னே குமரேசா!—தேடியென்றும்
நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. (சு)

இ—ள்

குமரேசா! மருளசங்கரதேவர் கொல்லாமை ஒன்றே நல்லதென்று என் கூடி நின்றூர் எனின், நல் ஆறு எனப்படுவது யாது எனின், யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி என்க.

யாதொன்றும்—யாதோரு யிரையும். ஓரறிவுயிரையும் என்றபடி. சூழ்தல்—கருதல், வளைதல்.

கொல்லாமை சூழும் நெறி—கொல்லாமை யென்னும் நன்மை சூழ்ந்த நெறி. தன்னையுடையானுக்கு நன்மை பயத்தலின் நல் ஆறு என்றூர்.

கொல்லாமை என்னும் நலஞ்சூழ்ந்த நெறியே பேரின்ப வீட்டை அடைதற்கு நேரான நல்ல நெறி என்பதாம்.

கொல்லாமை சூழாத நெறி பொல்லாத நெறி யென்று கொள்க. முத்தி நிலத்தைச் சேர்தற்கு நல்ல வழி யாது? என்பாரை நோக்கி இது கூறியதாகக் காண்க.

கொல்லா விரதத்தைத் கொண்டவர்க்கே அழிவில்லாத இன்ப வீடு எளிதில் எய்தும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மருளசங்கரர் பால் உணரப்படும்.

கதை.

மருளசங்கரர் என்பவர் சிறந்த ஒரு ஞான யோகி. பேரருளுடையவர். ஓரறிவுடைய கொடி செடி உளுந்தும் இவர், கொடுமை செய்தறியார். செற்றம் நீங்கிய பற்றறு பண்பினர். கனி காய் கிழங்கு முதலியவற்றை எவ்வாறேனும் கொணர்ந்து உண்ணும்படி கொடுப்பின் அவற்றின் உருவமும் அழகும் சிதைபுமே என்று இரங்கி அவற்றை உண்ணாது விடுவர். வசவு தேவரது திருமனையில் சிவனடியவர் உண்டு மிகுந்த எச்சில் இலையை யிடுகின்ற குழியின்கண் அமர்ந்திருந்து பசி வந்தபோது அதிலுள்ள எச்சிலுணவைச் சிறிதுண்டு பெரிது உவந்திருப்பர். முத்தரான இவர் ஒன்றுமறியாப் பித்தர்போல் இருப்பதை அல்லம தேவரறிந்து கொல்லாநலத்தை இவர் கொண்டிருக்கு மாண்பை எல்லாருக்கும் உணர்த்தினார். அல்லல் யாதுமின்றி இவர் அறிவில் வீட்டையடைந்தார். கொல்லாமை சூழும் நெறியே வீட்டினை அடைதற்கு நல்லாறென்பதை இவர் உலகினுக்கு உணர்த்தினர். விரிவைப் பிரபுலிங்க லீலையில் காண்க.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லவர் மற்
றல்லாதார் யாரோ அறிகையன் பராபரமே. (தாயுமானவர்)

கொல்லாமையெனும் வீட்டினை அடைதற்கு நல்ல நெறி என்பது இதனால் கூறப்பட்டது.

325. பண்டு துறந்தார் பலருள்ளும் புத்தரோன்
கொண்டார் உயர்வைக் குமரேசா—கொண்ட
நிலையஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

இ—ள்.

சுமதேசா! துறந்தார்பலருள்ளும் புத்தர்மட்டுமன்சிறந்து நின்றார்எனின், நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை யென்க. சூழ்தல்—எண்ணுதல். மறவாது குறிக்கொள்ளுதலை இங்கு அது குறித்து நின்றது.

பிணி, மூப்பு, இறப்பு முதலிய துன்பங்களெல்லாம் பிறப்பின் கண்ணே அணி அணிபாக அமைந்துள்ளன என்று அதன் நிலையை அறிந்து அஞ்சுதலே துறந்து அடங்குதற்கு ஏதுவாகுமாதலால் அம்முறை கருதி நிலை அஞ்சி நீத்தார் என்றார்.

கொல்லாமை சூழ்வான் தலை—கொல்லாமை என்னும் விரதத்தைக் கொள்வோனே உயர்ந்தவன்.

பிறப்பின் நிலைமையை அஞ்சித் துறந்தவர் எல்லாருள்ளும் கொலையின் தீமையை அஞ்சிக் கொல்லாமையாகிய நன்மையைக் கொண்டவனே உயர்ந்தவன் என்பதாம்.

நிலை அஞ்சுதல் நீத்தலுக்கும், கொலை அஞ்சுதல் கொல்லாமைக்கும் காரணமாதல் காண்க. சூழ்வான் என்றார் கருதினும் பெருமையாம் என்று கருதி.

கொல்லா விரதமுடையவன் இல்லறத்திருப்பினும், துறந்தார் எல்லாரினும் அவன் சிறந்தவன் எனினும் அமையும்.

உலகைத் துறந்தவரெவரினும் கொலையைத் துறந்தவன் சிறந்தவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை புத்தர்பால் உணரப்படும்.

கதை.

அருள்வள்ளலாகிய புத்தர், அரசைத் துறந்து சிறந்த ஞானியாய் அருந்தவம் புரிந்து வேணுவனம் என்னும் தனியிடமொன்றில் இனிது அமர்ந்திருந்தார். அங்கிருந்த துறவிகளெல்லாரும் இவரது குணநலங்களையும் கொல்லாமாண்பையும் தெ

ளிந்து அடி தொழுது அன்பு செய்தார். பின்பு அடியவராயி னர். அருள்நிறைந்த இவரது இனிய மொழிகளால் ஒருநாள் தொள்ளாயிரம் பேர் துறவிகளாயினர். பல்வேறிடங்கட்குஞ் சென்று கொல்லாநலத்ததையே கொள்ளும்படி எல்லாருக்குஞ் சொல்லினர். அனைவரும் இவர் சொல்வழி ஒழுகினர். கொல்லாமை என்னும் நல்லறம் உலகமுழுவதும் மிகவும் பரவியது இவரால் என்னலாம். பல்லாயிரம் துறவிகள் புடைசூழ விளங்கி இரணியவதி என்னும் ஆற்றின் கரையில் எண்பதாவது வயதில் தமது அழகிய திருவுடம்பைத் துறந்து அழிவிலின்பத்தை அடைந்தார். அக்காலத்தில் அங்குக் குழுமியிருந்த நீத்தாரனைவரும் நெஞ்சங் கலங்கி அவரது பிரிவை ஆற்றாது அலறி அழுதனர்.

மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமால்
என் செய்கேம் யாம்
அருளிருந்த திருமொழியால் அறவழக்கங் கேட்டிலமால்
என் செய்கேம் யாம்.
பொருளறிந்த அருந்தவத்துப் புரவலரைக் கண்டிலமால்
என் செய்கேம் யாம்
தெருளிருந்த கொல்லாத திருவணையாம் தெரிந்திலமால்
என் செய்கேம் யாம்.

என்று எல்லாரும் புலம்பித் தவித்தார். இவரது திருவுடம்பை எரித்தபின் என்பையும் சாம்பரையும் தனித் தனி எடுத்துச் சென்று பொதிந்துவைத்து ஆலயம்புனைந்து வழிபாடுசெய்தனர். கொல்லாமை சூழ்வான் எல்லாரினும் தலை என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவு சரிதையில் தெளிவாம்.

கொல்லா விரதமுடையவன் எல்லாரினுஞ் சிறந்தவன் என்பது இதனால் கூறப்பட்டது.

326. கொல்லாத நாணையினைக் கூரருள்சேர் நாகனையபென்
கொல்லவில்லை கூற்றம் குமரேசா—நல்லதன்று
கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. (சு)

இ.—ள்.

குமரேசா! கொல்லாமையை மேற்கொண்ட நாயகரின் மேலும், நாகன்மீதும் கூற்றுவன் ஏன் செல்லவில்லை எனின், கொல்லாமையே மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாள் மேல் உயிர் உண்ணும் கூற்று, செல்லாது என்க.

மேற்கொண்டு—விரதமாகக் கைக்கொண்டு.

ஒருயிரையும் கொல்லாத பேரறமுடையான் பின் பிறவா இன்பம் பெறுவதலால் அவனது வாழ்நாள் மேல் கூற்றுச் செல்லாதாயிற்று. கொல்லா நலமுடையவர் கூற்றால் கொல்லப் படார் என்பது குறிப்பு.

கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாள் மேல் உயிர் உண்ணுங் கூற்றுச் செல்லாது என்பதாம்.

உயிரை உடம்பிலிருந்து பிரித்துக்கொள்ளும் இயல்பினை யுடைய கூற்று அதனை உண்டதாகக் கூறியது அவனது துணிவும் கொடுமையும் தோன்ற என்க. உண்ணுதற்கு உரியதல்லாத உயிரை இங்ஙனம் குறித்தது உபசாரமாகும்.

உண்டற் குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே. (தொல்காப்பியம்.)

கொல்லாமை என்னும் நல்லறமுடையவர் எமபய நீங்கி ஈறில் இன்பத்தை எய்துவரென்பது கருத்து. இவ்வுண்மை காரணவிடமும். நாகன்பாலும் காணப்படும்.

கதை 1.

பண்டொரு காலத்தில் மதுரையம்பதிக்குத் தென் பால் அடர்ந்த வனமொன்றிருந்தது. அதில் குளிர்ந்த நீர் நிலை ஒன்று விளங்கியிருந்தது. இரையின்றி மெலிந்த செங்கால் நாரையொன்று அங்குவந்து தனியாகத் தங்கியிருந்தது. முனிவர்கள் அப்பொய்கையில் புகுந்து தோய்ந்து எழுங்கால் அங்குள்ள மீன்களுக்கு ஊறு ஒன்றும் செய்யாது அவர்கள் உதவி செய்வதை இந் நாரை கண்டது. நல்லறிவு பிறந்து அன்று முதல் யாதொன்றையும் கொல்லலாகாதென்று துணிந்தது. மீனுணவு துறந்து மெலிந்து தளர்ந்தது. ஆயினும் ஒன்றையும் கொல்லாது உணர்வோடிருந்து பின் மதுரையையடைந்து பொற்றாமரை என்னும் நற்றடம் புகுந்து கொண்ட விரதம் குலையாதிருந்தது. எல்லாம் அறியும் கூடற்பரமன் அதன் கொல்லா நலத்தை வியந்து அழிவில்லாத முத்தியை அதற்கு அருளினர். தன் கொல்லா நலத்தால் கூற்றைக் கடந்து அந் நாரை எய்திய பேற்றைப் புகழ்ந்து அனைவரும் போற்றி மகிழ்ந்தார். விரிவைத் திருவிளையாடலில் காண்க.

பிரிவறக் கொன்று தின்னும் கடைப்படும் பிறப்புநாரை
வரனுறு தேவராகி வான்றொழ இருப்பங் கண்டீர்
கருதுதிர் என்றும் பொல்லாக் கடையராயினுங் கொல்லாமல்
அரனெவந் திப்ப சேல்வான் ஆள்வதற் கையமின்றே.
(பழைய திருவிளையாடல்.)

கதை 2.

நாகன் என்பவன் தண்டகவனத்திலிருந்த ஒரு வேடுவன். விப்பிரதாதன் என்றும் இவனுக்கு ஒரு பெயருண்டு. மான், முயல் முதலிய விலங்கினங்களை முதலில் இவன் கொன்று வாழ்ந்தான். ஒருநாள் முற்கல முனிவரைக் கண்டான். அவரையும் கொல்ல வெகுண்டான். அவர், இவனைநோக்கி மக்கட் பிறப்பின் அருமையையும் கொல்லாமையால் எய்தும் நன்மையையும் எளிய நடையில் இனிய மொழிகளால் தெளிய வுணர்த்தினர். அவன்

உணர்ந்தான். அன்றுமுதல் யாதொருயிரையும் கொல்வதில்லை யென்று உறுதிகொண்டான் ஓரறிவுடைய கொடி செடிகளுக்கும் ஊறு செய்யாது இவன் ஒடுங்கியிருந்தான். உதிர்ந்த சருகும் தின்னலாகாதென்று உயர்ந்த அருளைக் கொண்டான். இவனது கொல்லா மாண்பை மகிழ்ந்து விநாயகப் பெருமான் தோன்றித் தம்போல் தெய்வவுருவை இவன் எய்தும்படி திருவருள் செய்து புருசுண்டி என்று ஒரு பெயரும் தந்தார். கொல்லாமையை மேற் கொண்டிருந்த இவன் அதன் பயனாக அத் தெய்வ வுருவை எய்தி அப் பெயருடன் சிறந்து விளங்கி என்றுங் குன்றாத இன் பத்தை அடைந்தான் விரிவை முனிவர் சரிதையில் காண்க.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவார் வாழ்நாள் மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது என்பதை உலகம் இவ்வேடன் கண்ணும், அந் நாயிடமும், உணர்ந்து மகிழ்ந்தது.

கொன்றுமுன் தின்றாகன் கொல்லாமை மேற்கொண்டன்று
நின்றதால் இறவா இன்பம் நிலைபெறப் பெற்றனம்மா
நன்றறி மக்களிந்த நலமுணர் கிலராயந்தோ
கொன்றபின் கூற்றுங்கொல்லக் கும்பிவீழ்ந் தழுந்தலென்னே.
(தனியன்.)

கொல்லாமையுடையவர் கூற்றால் கொல்லப்படார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

327. நீதிமன்னன் சேயுயிரை நீக்கவஞ்சி னேமைச்சன்
கோதிலுயிர் நீத்தான் குமரேசா—மோதிவந்து
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (எ)

இ.—ள்.

குமரேசா மனு நீதிகண்ட சோழனுடைய திருமகனது உயிரை நீக்குதற்கு அஞ்சி சத்திய சீலன் ஏன் தன் உயிரை நீக்கி

ணன் எனின், தன் உயிரை நீப்பினும், பிறிதோர் இன் உயிரை நீக்கும் வினையைத் தான் செய்யலாகாதென்க.

தன் உயிர் நீப்பினும்—தன் உயிர் நீங்கினிடமாயினும்.
செய்யற்க—செய்யாதுவிடுக.

தன் உயிர் நீங்கினும் பிறிதோர் இன் உயிரை நீக்கும் வினையை ஒருவன் செய்யலாகாது என்பதாம்.

மேல், கொல்லாமையை ஒருவன் யாண்டும் விரதமாகக்கொள்ளவேண்டுமென்றார் ஆயின், ஊனை விரும்பிக் கொல்லாவிடினும் தன்னைக் கொல்லவந்ததையாவது கொல்லலாகாதா? என்பார்க்கு இது கூறியதென்க. இங்ஙனங் கூறியது தன் பாவங் கழிந்து மறுமை இன்பத்தை அவன் பெறுவன் என்பது கருதி.

ஊனையேயுண்டுவந்த ஒருவன் கொல்லா விரதம்கொள்க என்றதை உணர்ந்து அதனை உண்ணவில்லையாதல் தன் உயிர் போய்விடுமே! என்றுகூற, "உன் உயிர் நீங்கினும் பிறிதோர் இன் உயிரை அது நின்ற உடம்பிலிருந்து நீ நீக்காதே" என்று அவனை நோக்கி இஃது அருளியதெனினுமமையும்.

தன் உயிர் போனாலும் அறிவுடையார் பிறிதோருயிரைக் கொல்லார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்தியசீலன்பால் உணரப்படும்.

கதை.

சத்திய சீலன் என்பவன் மனுச் சோழ மன்னனுடைய முதல் அமைச்சன். நிறைந்த அருளும், சிறந்த அறிவும் உடையவன். பசுவின் கன்றைக் கொன்றதால் தன் மகனைக் கொல்லும்படி மன்னன் இவனுக்குக் கட்டளையிட்டான். இவன் அவனது இன் உயிரை நீக்குதற்கு நாணித் தன்உயிரையே நீக்கினன். இவனது கொல்லா மாண்பையும், மனவுறுதியையும், வியந்து அவனவரும் இரங்கினர். இழந்த உயிரை இறைவனருளால் பின் இவன் எய்தப்பெற்றான். தன் உயிர் நீப்பினும் மேலோர் பிறி

து. ஓர் இன் உயிரை நீக்கார் என்பதை இவன் அன்று உணர்த்தி நின்றான். (விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.)

என்றும் எவ்வகையானும் பிறிதோருயிரை மேலோர் கொல்லார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

328. கொன்றுசெய்யும் வேள்வி கொடிதென்றேன் கும்பமுனி
குன்ற வுரைத்தார் குமரேசா—என்றுமே
நன்றுகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகும் ஆக்கங் கடை. (அ)

இ—ள்.

குமரேசா! கொலைபுரிந்து வேள்விசெய்தல் தீதென்று அகத்தியனார் என் அன்று கூறினர் எனின், நன்று ஆகும் ஆக்கம் பெரிது ஆம் எனினும் சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை என்க.

செல்வம் உயர்ந்த நலங்களை உளவாக்கும் ஆதலால் அது நன்றுகும் என்னும் அடைபெற்று வந்தது. இனி, நன்மையும் ஆகும் ஆக்கமும் பெரிதாம் என்னினும் அமையும்.

கொன்று ஆகும் ஆகமு கடை—மகால்வதால் உண்டாகின்ற செல்வம் கீழானது.

கொன்றுகும் ஆக்கம் என்றது வேள்வியால் எய்தும் செல்வத்தை. அதில் கொலைவினை கலந்திருத்தலால் சான்றோர் அதனை விரும்பார் என்பது கருத்து.

இன்பமிகும் செல்வம் பெரிதாம் எனினும் கொல்வதால் வரும் செல்வம் மேலோர்க்கு இழிவாம் என்பதாம்.

வேள்வி செய்யின், நன்மையுண்டாகும், ஆக்கமும் பெரிதாம் என்றாலும் கொலையுறு வினை என்று அருளுடை அறவோர் அதனைப் புரியார் என்பது கருத்து.

ஆடு, பசு, குதிரை சனுள் ஒன்றைக் கொன்று அதன் வயிற் றுக்குள் இருக்கும் வலை என்னும் வெள்ளிய நிணம் ஒன்றை எடுத்து ஓமத் தீயில் மடுத்து இந்திரனை நோக்கி மந்திரபுரியின் இன்பமாகும் துறக்கச் செல்வம் எய்தலாம் என்று விதித்திருப்பி னும், பிறவுயிர்களையும் தம் உயிர்போல் பேணும் அருளுடையார் அக் கொலை வினையால் எய்தும் அவ் ஆக்கத்தை வெறுத்து இகழ் வராதலால், "சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை" என்றார். சான்றோர்க்குக் கடை என்றதனால் அதனைத் தலை என்று கொள்வோரின் நிலை காணலையையும்.

தன் உயிர் நீப்பினும், பிறிதோர் இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க என்று மேற்கூறியதை நோக்கி, வேள்விக்கட் செய்ய லாமென்று விதித்துள்ளதே எனின், அவ்விதி ஈறில் இன்பத்தை எய்த விரும்பிய பேரறிவாளர்க்கு விலக்காமென்று இதில் உணர்த் திற்றெனக.

எண்பதிற்றுப்பிரம் வெண் பொற்காசு பெறத்தக்க நன்முத்து ஒன்று இச்சிப்பியில் உள்ளது; இதனைச் சிறைத்து நீ அதனை எடுத்துக்கொள்க என்று சித்தர் ஒருவர் ஒருநாள் புத்தர்பால் கொடுத்தார். அவர், "அந்தோ! இந்தக் கொலை வினையால் அந்தமில் இன்பத்து அழிவில் வீடு எனக்கு வருவதாயினும் யான் அதனை வேண்டேன்" என்று அருளுடன் அகன்றார். இப் பெரியாரது அருளைப் பண்பு ஈண்டு அதுவும் இவ்வமையத்து மிக வும் கருதத்தக்கது. இவ்வமையம் என்றது 1926 மார்ச்சில் இவ் வூரில் முதற்வேட்டை நிகழ்ந்த காலத்தை என்க.

பெருங்கலத்தருவதாயினும் ஒருயிரைக் கொல்லுந் தீமையை உயர்ந்தோர் கொள்ளார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை அகத்தியர்பால் அறியப்படும்.

கதை

மூன்றிருகாலத்தில் முனிவரும் பிறரும் குழுமி ஒரு பெரு வேள்வி செய்ய விரும்பி ஆடு ஒன்றை அங்குக் கொணர்ந்தார்.

அகத்தியர் கண்டார். ஐயகோ உயிர்க் கொலை நீதி என்று மறுத்தார். அசம்கொண்டு அருமகம் புரிக என்று லோகத்தில் கூறியுள்ளதே என்று அவரனைவரும் கூறினர். அசம் என்பது ஆடையும் மூன்று ஆண்டின் நெல்லையும் குறிக்கும் இருபொருளொரு சொல். அம்மூவாண்டு நெல்லே யாகத்திலுள்ள அசம் என்னும் சொல்லுக்குப் பொருள் இவ் உண்மையை உணராமல் என் படுகொலை புரிந்து கெடுகின்றீர்கள் என்று பரிந்து உணர்த்தி அவ் ஆட்டினை அகற்றித் தாங் கூறியவாறே வேள்வியை முடித்துவித்தினைக் கொண்டே அமரருக்கு அவியளித்தார். கொலை வினை நிகழாமல் செய்யும் வேள்வியே தலைமையானதென்று மேலுமுறக் கூறி அனைவரும் நலமுற அருள்புரிந்தனன்றார். கொன்று ஆகும் ஆக்கம், சான்றோர்க்குக் கடையாம் என்பதை அன்று உலகம் அகத்தியர்பால்உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில்காண்க.

கொலையால் வருஞ் செல்வம் பெரிதாமாயினும் பெரியோர் அதனை விரும்பார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

329. பண்டு பராசர்தம் பாலரையும் ஈனரென்றே றன்
கொண்டார் கொலையால் குமரேசா—நொண்ட
கொலவினைய ராகிய மாக்கள் புலவினையர்
புன்மை தெரிவா ரகத்து. (கூ)

இ—ள்.

குமரேசா! தம்முடைய மக்களையும் கொலை வினையால் ஈனரென்று பராசரர் ஏன் பழித்தார் எனின், கொலை வினையராகிய மாக்கள் புன்மை தெரிவார் அகத்து புலை வினையர் என்க.

கொலை வினையர்—கொலைத் தொழிலையுடையவர்.

புலை வினையர்— அக் கொலையால் வரும் ஊனைத் தின்னும் இழிவினையுடையவர்.

மாக்கள் என்றூர் மக்கள் அறிவு பாழ்போனமையின். பிற வுயிரையும் தம் உயிர்போல் பேணி ஒழுகுவோரே மக்களாவார் என்க.

புன்மை தெரிவார் அகத்து—இழிவினைத் தெளிவார் நெஞ் சத்தில்.

கொலைத் தொழிலினராகிய மாந்தர், அறிவுடையார் மனத் தில் புலைத் தொழிலினராக மதிக்கப்படுவாரென்பதாம்.

பிறவுயிர்களை அருளின்றிக் கொல்லுகின்ற பழியின் இழி னை உணர்கின்றவரே உயர்ந்தவரென்பதும், அவருள்ளம் அக் கொலையாளரைப் புலையரென்று இகழ்ந்து தள்ளும் என்பதும் கூறுவார், "புன்மை தெரிவார் அகத்துப் புலவினையர்" என்றூர்.

ஆவுரித்துத் தின்று வருவோர் சாதிப் புலையர் என்றும், ஆருயிர்களைக் கொன்று திரிவோரும், வேறு ஊன்களைத் தின் றூ மகிழ்வோரும், கன்மப் புலையரென்றும் வேறுபாடு காண்க.

கொலை வினையாளரைக் கன்ம சண்டாளர் என்று கருதவே ண்டுமென்பது இது கருத்து.

பிறப்பால் உயர்ந்தவராயினும், கொலைத் தொழிலைப் புரிவ ோர் ஈனர்களென்று அறிவுடையோரால் அவர் இழிக்கப்படுவ ரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தத்தன் முத லிய அறுவர்பால் காணப்படும்.

கதை.

தத்தன், அனந்தன், சதுமுகன், சந்தி, பரதி, மாலி என் னும் இவ் அறுவரும் பராசர முனிவருடைய புதல்வர்கள். இச் சிறுவர்கள் அறுவரும் ஒருங்கு சேர்ந்து ஒருநாள் சரவணப் பொய்கையை அணுகி விளையாடினர். நீரில் பாய்ந்து நீந்தியும் மலர் பல கொய்து மகிழ்ந்தும் உலாவினர். தவள முதலிய நீர்வா ழுயிர்களை இரக்கமின்றி எறிந்து கொன்றூர். அதனபின் அதி லுள்ள மீன்களைப் பிடித்துக் கோரைப் புல்லிற் கோத்துக் குதித்

துத் திரிந்தார். அவ்வமையம் பராசர முனிவர் அங்கு நீராட வந்தார். குழந்தைகள் செய்த கொலை வினையைக் கண்டார். உளங் கலங்கினர். நல்ல மரபிற் பிறந்திருந்தும் இப் பொல்லாத செயல்களைப் புரிந்தீர் ஆதலால் ஈன மீன்களாகி நீவீரிவ்வீரும் இழிந்து தொலைமின் என்று சினந்து மொழிந்தார். அவரும் அவ்வாறே ஆகி யுழன்றார். உயர்ந்த குலத்தில் தோன்றியும் தாம் புரிந்த கொலை வினையால் இழிந்து கொந்தார். கொலை வினையரா கிய மாக்கள் புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையராவர் என் பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைக் கந்தபுராணத் தில் காண்க.

கொலையிலான் உதவும் அன்னம் கூறிற்பே ரமுதமாகும்
கொலையுளான் உதவுமன்னம் கூறில்வல் விடமதாகும்
புலையர்தம் மனையி லுண்போன் புலையனே மாறுபோலக்
கொலையர்தம் மனையி லுண்போன் கொலைஞனே யாவனன்றே.
(பதினெண்கம்.)

கொலை வினையாளனைக் கண்ம சண்டாளர் என்று அறிவோர் கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

330. பண்டு கவந்தன் பழியுடம்பும் தீவாழ்வும்
கொண்டுழந்தான் என்னே குமரேசா—கொண்ட
உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (ய)

இ—ள்.

குமரேசா! கவந்தன் பழி உடம்பும் இழி வாழ்வும் கொண்டு என் உழந்தான் எனின், செயிர் உடம்பில் செல்லாத் தீ வாழ்க்கை யவர் உயிர் உடம்பில் நீக்கியார் என்பர் என்க.

செயிர் உடம்பு—குற்றமான உடம்பு: அஃதாவது உறுப்புக் குறைவும் நோயும் உடையது.

செல்லாத் தீ வாழ்க்கை—இனிது நடவாத கொடிய வாழ்க்கை; என்றது வறுமையும் சிறுமையும் மலிந்த வாழ்க்கையை.

பிணி நிரம்பிய பழி யுடம்பும் வறுமை மிகுந்த இழி வாழ்க்கையும் உடையாரை உயிர்களை உடம்பில் நின்று நீக்கினகொடிய வரென்று பெரியோர் மொழிவர் என்பதாம்.

மேல், கொலைவினையரைக் கன்மப்புலையர் என்று கருதவேண்டும் என்றார் இதில், அவர் பின்பிறப்பில் இயல்பாகவே புலையராவர் என்றார். முற் பிறப்பில் உயிர்களைக் கொன்றவர் பிற் பிறப்பில் தொழு நோய் கழுவிய பழியுடம்பும் அழிதுயர் மிகுந்த இழி வாழ்க்கையும் அடைந்து வருந்துவர் என்பது கருத்து.

கொலைவினையால் வறுமையும் நோயும் தொடருமாதலால் அதனை ஒருவன் அறவே ஒழிக்கவேண்டும் என்பது குறிப்பு.

ஊன உடம்பும், ஈன வாழ்க்கையும் கொலை வினையாளர்க்கு உளவாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கவந்தன்பால் உணரப்படும்.

கதை.

கவந்தன் என்பவன் தண்டகவனத்திலிருந்த ஓர் அரக்கன். இவன், முற் பிறப்பில் தனு என்னும் பெயரினையுடைய ஒரு காந்தருவனாயிருந்தான். மிக்க செருக்குடையவன். உயிர்களை இரக்கமின்றிக் கொன்றான். விலங்கினங் களுக்கும் மக்களுக்கும் இவன் வெந்துயர் செய்தான். தூல சிரசு என்னும் முனிவருக்கும் நனிதுயர் புரிந்தான். அவர், இவனை அரக்கனாகச் சபித்தார். அங்ஙனமேயாகி ஆருயிர்களைக் கொன்று தின்று திரிந்தான். இவன் கொடுமையை யறிந்து சினந்து இந்திரன் தன் குலிசத்தால் இவன் தலையில் புடைத்தான். அதனால் இவன் தலை உடலில் புகுந்தது. அன்றுமுதல் இவனுக்குக் கவந்தன் என்று பெயர் வந்தது. தலையில்லாத குறை உடலுக்குக் கவந்தம் என்று பெயர். எழுந்து திரிதற்கு இயல்பில்லாத ஈன வுடம்புடன் தண்டக வனத்தில் கிடந்து கண்ட வுயிர்களைக் கைக்கொ

ண்டு தின்று தயங்கியிருந்தான். உயிர்களை உடம்பில் நின்று நீக்கினவர்க்கு செயிர் உடமையும் தீ வாழ்க்கையும் உளவாம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இராம இலக்குவரால் இவன் சாபம் நீங்கப் பின் மேண்மை எய்தினன். விரிவை இராமாயணத்தில் காண்க.

கொலை வினையாளர்க்கு இழி பிறப்பும் ஈன வாழ்க்கையும் எய்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

சிலையினன் மாக்கள்கொன்று செழுங்கடல் வேட்டமாடி
வலையினல் மீன்கள்வாரி வாழ்பவர்க் கூற்றமான
கொலைஞரைக் கும்பிதண்ணட் கொழுந்தழ லழுத்தியிட்டு
நலிகுவர் நாளுநாளும் நரகரை நாமமேலோய். (1)

வயிரமுள் நிரைத்துநீண்ட வார்சிலை யிலவமேற்றி
செயிரிற்றி மடிப்பர்கீழாற் சென்னுனைக் கழுவிலேற்றி
மயிருருக்கிநான் முகலாங்கி வலைகத்தணைத் திடுவர்மன்ன
உயிரைப்பே துறுத்துமாந்தர் உயிரைபபே துறுக்குமாறே (2)

(சீவகசிந்தாமணி.)

இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

கொல்லாமையே அறவினையாகும். கொல்லுதல் எல்லாப் பாவங்களையும் கொடுக்கும். உயிர்களைப் பேணுதலே தலையாய அறம். எல்லா அறங்களினும் சிறந்து முதலில் நிற்றற்குரியது கொல்லாமையே. எல்லையில்லாத இன்ப வீடடைதற்குக் கொல்லாமை ஒன்றே நல்ல நெறியாம். துறந்தவரெவரினும் கொல்லாமையுடையவரே சிறந்தவராவர். கொல்லாவிரதியர் மேல் கூற்றுவன் செல்லான். தன் உயிர் நீங்கினும் பிறவுயிரைத் தான் நீக்கலாகாது. கொலையால் வரும் செல்வம் பெரிதாமாயினும் அதனைப் பெரியோர் வெள்ளார். கொலை வினையாளரைக் கண்ம சண்டாளரென்றே கருதவேண்டும். அதனையுடையவர் ஊனை உடம்பும் ஈன வாழ்க்கையும் எய்தி உழல்வார்.

நடந்தது கொல்லாமை முற்றிற்று.

நசை-ம் அதிகாரம் நிலையாமை.

அஃதாவது தோற்ற முடையனவாவும் நிலையா என்னும் உண்மை. கொல்லா விரதத்தைக் குறிக்கொண்டொழுகிய நல்லறிவாளர்க்கே இவ்வுண்மை இனிது புலனும் ஆதலால் இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

---

331. கொண்டவுடல் நிற்குமென்று கோரக்கர் சீரிழந்து
கொண்டார் இழிவேன் குமரேசா—கண்டறிந்தும்
நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (க)

இ—ள்.

குமரேசா! தனது உடல் என்றும் நிலைநிற்கும் என்று துணிவுகொண்டிருந்த கோரக்கர் என் அதனால் இழிவுகொண்டார் எனின், நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை கடை என்க.

நில்லாதவற்றை—நிலையில்லாத பொருள்களை.

நிலையின என்று உணரும்—நிலையுடையன என்று கருதுகின்ற. புல் அறிவு ஆண்மை கடை—புல்லிய அறிவினை ஆளுந் தன்மை இழிவானது. தன்னை யுடையானைக் கீழ்மைப்படுத்துமாதலால் அது கடையாயிற்று. தான் மயங்கி அறிந்ததையே மெய் என்று துணிந்து அது மூன்னாந்து நிற்குமென்பது ஆண்மைத் தொடர்பால் அறியப்படும்.

நிலையில்லாத பொருள்களை நிலையுடையன என்று கருதுகின்ற புல்லிய அறிவுடைமை அறிவோர்க்கு இழிவாம் என்பதாம்.

அநித்தமான யாங்கை முதலியவற்றை நித்தமென்று கருதி அவற்றின மேல் பற்று வைப்போர் மூடவல் குற்றமே கண்டு குலைந்து தாழ்வராதலால் "புல்லறி வாண்மை கடை" என்றார்.

புல்லறிவு இழுக்கே பயக்குமாதலால் அதனை ஒருவன் ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு. பொருள்களின் இயல்பை மயலற உணருஞ் நல்லறிவுதலையானதால் புல்லறிவு கடை எனப்பட்டது.

நிலையில்லாத இயல்பினை புடைய உடம்பு முதலியவற்றை நிலைநிற்குமென்று கருதிக் களிப்பவர் சிறுமைப் படுவர் என்பது கருத்து. இவ்வுண்மை கோரக்கர்பால் காணப்படும்.

கதை.

கோரக்கர் என்பவர் சயிலமலைச் சாரலிருந்து காய சித்தி செய்துகொண்டு வந்த ஒரு யோக சித்தர். இவர், தமது சித்தின் இயல்பால் எவ்வளையாலும் சிதைவுறாதபடி உடல் வலி பெற்றிருந்தார். அதனல் என்றும் அது நிலைபெறுமென்று நம்பியிருந்தார். இவரது புல்லறிவாண்மையைப் போக்குதற்கு நல்லறிவாளராகிய அல்லமதேவர் ஒரு நாள் இவர்பால் வந்தார். சிறிது போழ்து விளையிளர். சித்தர், என் உடல் என்றும் அழியாது நின்று நிலவும் என்றார். மின்னின் நிலையில மன் உயிர் யாக்கைகள் என்னும் மெய்ப்பாடுமையை நீர் இன்னும் உணர்கிலீர்போலுமென்று அல்லமர் புன்னகை செய்தார். யாது கூறினும் அவர் வாது பற்றினர். அதன்பின், காணப்படுகின்ற பொருள்களின் மூலகாரணங்களையும், அவை யாவும் அழியும் இயல்பின என்னும் உண்மையையும், விண்ணில் எறிந்த கல் மண்ணில் விழுதல் தப்பாதவாறுபோல் நிகழ்வனவுமுடையன யாவும் தொலையும் என்னும் தன்மையையும் அவர் உணர்ந்து தெளியுமாறு உணர்த்தினர். சித்தர் உணர்ந்தார். நிலையாதவற்றை நிலையின என்று இதுவரை தாம் நினைந்து நின்றது இழிந்ததென்று தெளிந்து தெருகாண்டொண்டார். உடற் பற்று அற்று உயர் வீடெய்தினர். (விரிவைக் கோரக்கர் கதியில் காண்க.)

பிறந்த ஆகமொன் றிறந்திடாப் பெருமையும் உடைத்தோ
எறிந்த வாண்சிலை வீழ்ந்திடா திருப்பதிங் கில்லை
செறிந்த காரியம் என்பதென் றுயினுஞ் சிதையும்
இறந்திடாதுகா ணெனைப் பவிவதே யென்றும். (1)

மருந்தினுடல் நித்தமா மென்றுநீ வகுத்த
திருந்து வாழுநாட் பண்ணமெகாண் டன்றி வேறில்லை
பொருந்தி நீ யுடல் அழிந்திடாதென்பது பொருந்தா
தருந்தவா! இனி வீடுவேண் டென்றனன் ஐயன். (2)

இவை, கோரக்கரை நோக்கி ஆல்லடரருளியன.

நிலையில்லாததை நிலையென உணர்தல் அறிவோர்க்கு இழி வாமென்பது இதனுல் கூறப்பட்டது.

---

332. வென்றிமிகு சூர்முதலோர் மேலான செல்வமெல்லாம்
குன்றியேன் போன குமரேசா—குன்றுதக
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (உ)

இ—ள்

குமரேசா! சூரபன்மன், இராவணன், முதலியபோரசர் பெருஞ் செல்வமெல்லாம் என் நிலையாமல் போயின எனின், பெருஞ் செல்வம், கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே; அதன் போக்கும், அது விளிந்தற்று என்க.

கூத்தாட்டு அவை என்றது நாடகசாலையை. குழாம்—கூட்டம்.

அது விளிந்தற்று—அக் கூட்டம் போயிறுற்போலும்.

ஆங்காலத்தில் ஒருவனுக்குப் பெருஞ் செல்வம் வருவது எதுபோல்வதெனின் கூத்தாடுகின்ற இடத்தில் கூட்டம் கூடுவது போலும் என்பார், "பெருஞ் செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்து அற்றே" என்றார்.

தான் இருத்தற்குரிய காரணம் இருக்கும்வரையுமே செல்வம் நிற்கும் என்பதை உவமை உணர்த்திநின்றது.

ஒருவனிடம் பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடுகின்ற அரங்கின்கண் கூட்டம் வந்து சேர்தல்போலும்; அக்

செல்வம் குலைந்து போதல் அக் கூட்டம் கலைந்து போதல் போலும் என்பதாம்.

ஆங்காலத்தில் செல்வம் ஒருவன் பால் பல வழிகளாலும் வந்து சேர்ந்து பின் போங் காலத்தில் அவனை விட்டு ஒருங்கே அது போய்விடுமாதலால் அறிவுடையார் அதனை நிலையென்று கருதலாகாதென்பது கருத்து.

மேல், நில்லாதவற்றை நிலையென்றுணர்தல் புல்லறிவென்றார்; இதில், அந்நிலையாதவொன்றின் நிலைமையை உவமையால் விளக்கினர்.

செல்வம் என்றும் நிலைத்திராதென்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை சூரபன்பன் கண்ணும், இராவணன்பாலும் உணரப்படும்.

கதை 1.

அண்டமாயிரத் தெட்டையும் தனியர சாட்சி
கொண்டு வைகினன் குலத்திதாடும் அமர்தங் குழுவைத்.
தொண்டுகொண்டனன் யாவர்வந்திதிர்க்கினுங்தொலையேன்
உண்டுகொல் இவண் எனக்குநே ராகவே ஒருவர்.

என்று இறுமாந்திருந்த சூரபன்மனது பெருஞ் செல்வமும் முடிவில் அவனையகன்று சென்றது.

கதை 2.

இலங்கையர் வேந்தனாகிய இராவணன் பதினாயிரம் ஆண்டுகள் அருந்தவம் புரிந்து அதன் பயனைப் பல்வகைப்பட்ட செல்வங்களும் தாமே வந்து தன் பால் படிந்து நிற்கப் பெற்றான். முடிவில் அவனையும் ஒருங்கே இழந்து தானும் அழிந்தான்.

மாமடங்கலும் கற்பகம் மணியெலாங் கனகம்
ஆமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
ஓமடங்கிவர் துணையரா யுழல்பவரொருவர்
தாமடங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால்.

மரகதத்தினும் மற்றுள மணியினும் வினைந்த
குரகதத்தடந் தேரினம் அவைபயில் கொட்டில்
இரவி வெள்கதின் றிலைக்கின்ற இயற்கையவென்றால்
நரகம் ஒக்குமால் நண்ணெடுந் துறக்கமிந் நகர்க்கு.

என்னும்படி சிறந்து விளங்கிய இலங்கைச் செல்வமும் பின் சிதைந்து தொலைந்தது.

புலைமேலுஞ் செலற்கொதுத்துப் பொதுநின்ற செல்வத்தின்
புன்மைத் தன்மை
நிலைமேலும் இனியுண்டோ நீர்மேலக் கோலமெனும்
நிலைமைத் தன்றே
தலைமேலுந் தோண்மேலும் தடமுதுகிற் படர்புயத்தும்
தாவி யேறி
மலைமேனின் றுடனேபோல் ஆடனவால் வானரங்கள்
வரம்பிலாத.

தன் பெருஞ் செல்வத்தை யிழந்து இராவணன் இறந்து பட்டபோது இது கூறியதென்க. செல்வம் கூத்தாட்டுக் கூட்டம் போல். திரண்டுவந்து பின் சிதைந்துபோம் என்பதை உலகம் இவர்பாலுணர்ந்தது. விரிவை இவர் சரிதைகளிலுணர்க.

செல்வம் என்றும் நிலையாதென்பது இதனால் கூறப்பட்டது.

---

333. தண்டார்க் கலையமர்ந் தாவியிற்றும் ஆங்கறமே
கொண்டுசெய்தார் என்னே குமரேச—மண்டியென்றும்
அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். (கூ)

இ—ள்.

குமரேச! குங்குலியக் கலையனர் தாவினை விற்றும் என் அப்பொழுதே அறத்தைச் செய்தார் எனின், செல்வம் அற்கா இயல்பிற்று அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் என்க.

அற்கா—நிலைநில்லாத. அற்குப—நிலைநிற்கின்ற

செயல் என்பது இக்கு உடன்பாட்டு வியங்கோள்ளாய் நின்றது.

அற்கா என்றது அல்கல் என்னும் வினையடியாப் பிறந்த எதிர் மறைப் பெயரெச்சம். அல்கல் என்பது நிலைத்தல், தங்கல், சுருங்கல்களை உணர்த்தும்

செல்வம் அற்கா இயல்பிற்று— செல்வம் நிலையாத இயல் பினையுடையது. அற்குப என்றது நிலையுள அறங்களை.

செல்வம் நிலைத்து நில்லாத இயல்பினையுடைது; அதனைப் பெற்றால் நிலையுடைய அறங்களை அப்பொழுதே செய்க என்பதாம்.

கூத்தாடுக் கூட்டம்போல் செல்வம் வினைவில் நீங்கு மென்று மேலுரைத்தார்; அது நீங்கிவிடுமுன்னே அதனால் செய்யவேண்டியது என்னவென்பதை இதில் உணர்த்தி அருளினார்.

நிலையில்லாத பொருள் தம் கையில் எய்தப் பெற்றால் உட னே நிலைநிற்கின்ற அறங்களை அதனால் அறிவுடையார் செய்து கொள்வதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கலையனார் பால் உணரப்படும்.

கதை.

கலையனார் என்பவர் சோழ நாட்டிலே திருக்கடவூர் என்னுந் தலத்திலே, வேதியர் குலத்திலே பிறந்தவர். சிறந்த செல்வமு டையவர். பிறவுயிர்களையுந் தம் உயிர்போல் எண்ணிப் பேணுந் தண்ணளியுடையவர். இவர் அத்தலத்தில் விளங்கும் திருக்கோ விலுட் சென்று நாளும் வாசனைத் தூபம் இட்டு ஈசனைப் போற் றிவந்தார். உயிர்கள் மாட்டு ஆருளும் பரமன் மாட்டுப் பேரன் பும் கொண்டு ஒழுகிவருங்கால் இவர், செல்வந்தேய வறுமை மிக் கது. அதனால் மிக வருந்தினர். ஆயினும், உயிர்களுக்குச் செய் யும் உதவியினும் பரமனுக்குப்புரியும் பணியினும் சிறிதுங் குறை ந்திலர். குடும்பத்தோடு இரண்டு நாட்களாப் பட்டினி கிடந்தார்.

மூன்றாம் நாள் தமது அருமை மனைவியார் பொரிதும் இரங்கித் தாளிண்ய எடுத்து உணவுப் பொருள்கள் வாங்கி வரும்படி இவர் கையில் கொடுத்தார். இவரும் அதனைக் கொண்டு சென்றார். செல்லுங்கால் ஒரு வணிகன் கொண்டு வந்துள்ள குங்கிலியப்பொ தியை இடையே கண்டார். நிலையாத உடம்பைப் பேணுதலினும் நிலையுள்ள அறத்தைப் பேணுதலே நலம் என்று துணிந்தார். ஈசனுக்குத் தூபம் இடுதற்கு மிகவும் இனிதாமென்று மகிழ்ந்து அவ் வாசனைப் பொருளையே வாங்கினர். நிலை நில்லாத இயல்பினையுடைய செல்வம் தம் கையில் எய்தப் பெற்றால் அறிவுடையார் அது கொண்டு நிலையான அறங்களையே செய்துகொள்வர் என்பதை இவர் அன்று உணர்த்தி நின்றார். மங்கிலியம் கொடுத்துக் குங்கிலியம் கொண்டதால் அன்றுமுதல் இவர் குங்கிலியக் கலயனார் என்று கூறப்பட்டார். அற்கா இயல்பினவான செல்வம் அமையப்பெற்றால் அறிவோர் அப்பொழுதே அதனால் அறத்தைச் செய்வர்என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

மூல்லை மூகைசொரிந்தாற் போன்றிணிய பாலடிசில் மகளிர்ந்த
நல்ல கருணையால் நாள்வாயும் பொற்கலத்து நயந்துண்டார்கள்
அல்லலடைய அடுகிடுமின் ஓட்டகத்தென் றறிவார்க் கண்டும்
செல்வம் நமரங்காள் நிலையண்மின் செய்தவமே நினைமின்கண்டீர்.

சீவக சிந்தாமணி.

செல்வம் நில்லாது ஆதலால் உடனே அதனால் அறஞ் செய்தல்வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

---

334. மாசில் உரோமமுனி வாழ்நாள் நனிபெற்றும்
கூசினேன் வாழக் குமரேசா—கேசமுறும்
நாளென் ஒன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாளரணர்வார்ப் பெற்றின்.

(சு)

இ—ள்.

சுமதேசா! உரோமமுனி நீண்ட ஆயுள் காலைப் பெற்றிருந்தும் என் வாழ்நற்கு நாணினர் எனின், நாள் என ஒன்று போல் காட்டி உயிர் ஈரும் வாள் அஃது உணர்வார்ப் பெறின் என்க. ஈர்தல்—அரிதல், பிளத்தல்.

நாள் என்றது பகல் இரவு என்று கதிரவனால் கணிக்கப் பட்ட காலக் கூறுபாட்டை. நாள் என—நாளென்று.

ஒன்றுபோல் காட்டி—ஒரு பொருள்போல் காட்டி.

உயிர் ஈரும் வாள்—உயிரை ஈர்கின்ற வாளாயுள்ளது.

உயிரானது ஈரப்படுவதொரு பொருளன்றாயினும் அஃது உற்றுநிற்கும் உடம்பைப்பிரித்தலால் நாள் அதனை ஈரும் என்றார்.

அஃது உணர்வார்ப் பெறின்—அவ் உண்மையை உணர்வார் உளராயின். பெறின் என்றது அவ் உணர்தலின் அருமையை உணர்த்தி நின்றது. அஃது என்னும் குற்றியலுகரம் செய்யுள் நோக்கி அதுவென நின்றது.

நாளென்று காலவளையாறையாகிய ஒரு பொருள்போல் தன்னைக்காட்டி உயிரை ஈர்கின்ற வாளாயுள்ளது அவ் உண்மையை உணர்வார் உளராயின் என்பதாம்.

உணர் வுடையார் வீழ்நாள் படாமல் நாளும் நன்றே ஆற்றுவர்; உணர்வில்லாதவர் பொழுதைப் பழுதே போக்கி முடிவில் இழிவே அடைவர் என்பது குறிப்பு.

நாளானது வெளித் தோற்றத்தில் ஒரு கால அளவைபோல் காணப்படினும், உண்மையில் உயிர்களை அரிந்துகொண்டிருக் கின்ற வாளாகவே உள்ளது; ஆதலால் அதன் கழிவை நும் அழிவெனக் கருதி அறிவிலின்பத்தை அடைதற்குரிய வழிகளை அது சுழியுமுன் தேடுமின் என்று உணர்வுடை மக்களை நோக்கி இஃது உணர்த்தியதென்க.

நானின் கழிவை உயிரின் கழிவாக உணர்வோர் உணர்வு ரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை உரோம முனிவர்பால் உணரப்படும்

கதை.

உரோமமுனிவர் என்பவர் புசுண்ட முனிவருடைய புதல்வர். அருந்தளமுடையவர். இவர் உடம்பு முழுவதும் நீண்ட மயிர்கள் அடர்ந்திருந்தமையால் இவருக்கு இப்பெயர் வந்தது. முற்றுந் துறந்தவர். நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தும் ஒன்றினிடத்தும் பற்றில்லாமல் நிலையாமையையே நினைந்து நெடுந்தவம் புரிந்தார். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய இந்நான்கு யுகங்களுஞ் சேர்ந்தால் ஒரு சதுர்யுகமாகும். அது நாற்பத்து மூன்று இலக்கத்து இருபதினாயிர வருடங்களையுடையது. இத்தகைய சதுர யுகங்கள பல்லாயிரங் கழிந்தால் பிரமாவுக்கு ஆயுள் முடிவாம். அவர் அழியும்பொழுது இம்முனிவருக்கு மயிர் ரென்று உதிரும். இவருடம்பில் மூப்பத்து மூன்று கோடி மயிர்கள் இருந்தனவாம். அவை முற்றும் உதிரின் இவர் இற்று முடிவர். நாரதர் முதலிய முனிவர் பலரும் இந்திரன் முதலிய அமரர் சிலரும் இவரது தவச்சாலைக்கு வந்து நெடிய வாழ்நாளையுடைய நீர் ஏன் இச்சிறிய குடிசையில் இருக்கின்றீர் என்றார். நாளும் கழிந்துகொண்டு போகின்ற ஆயுள் நிலையெனக் களித்தல் மிகவும் இழிவாகும். என்னினும் மிக்க ஆயுளையுடைய ஒருவர் உளர். அவருக்கு அட்டகோண முனிவர் என்று பெயர். என் உடலிலுள்ள மயிர் முழுதும் உதிர்ந்து நான் முடிவடையும்பொழுது அவருக்கு ஒரு கோணல் நிமிரும. அவ்வாறு, அவ் எட்டும் நிமிர்ந்தால் அவர் இற்றுவிழுவார். அவரைப்போய்க் காண்மின் என்றார். அனைவரும் வியந்து அவர்பால் வந்தார். நிலையாமையை நினைந்தே நெடுந்தவம் புரிகின்ற அவர் நிலைமையைக் கண்டார். நெடு நான் கொண்டார். நாளின் கழிவை உயிரின் கழிவாகவே உணர்வுடையார் உணர்வதென்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

விரிவை முனிவர் மாண்பியத்தில் காண்க.

பாலையாந் தன்மைசெத்தும் பாலனுந் தன்மைசெத்தும்
காலையாம் பருவஞ்செத்தும் காமுறும் இளமைசெத்தும்
மீளுமிவ் வயதுமின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகுஞ்சூமால் நமக்குநாம் அழாததென்னே.
(குண்டலகேசி.)

தினங்கள் செலச்செல வதோபெற்றனபோல் களிக்கும்நெஞ்சே
தினங்களோடு
கணங்களாளும் உன்ஆயுளுநாள் கழிவதுணராய் உயிர்தீர்
காயஞ்சேரும்
வணங்குதிகி வாவென்ன விளித்துன்பால் தினைநருங்கும்
வண்மையுன்னி
மூணங்கொளறி யாமையைநீ இனங்கெள்ளா தறஞ்செய்ய
முயலுவாயே. (நீதிநூல்.)

நாளின் கழிவை உயிரின் கழிவாகவே உணரவேண்டுமென்
பது இதனால் உணர்த்தப்பட்டது.

---

335. மண்டு புகழ்க்கட்டு வாங்கன் விரைந்தேனை
கொண்டுசெய்தான் நன்மை குமரேசா—கொண்டாடும்
நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் கல்விஃ—
மேற்சென்று செய்யப் படும். (ந)

இ.—ள்.

குமரேசா! கட்டுவாங்கன் வன் விரைந்து தவஞ் செய்
தான் எனின், நாச்செற்று, விக்குள் மேல் வாரா முன் நல் வினை
மேற் சென்று செய்யப்படும் என்க. விக்குள்—விக்கல். விக்கல்
மேல் எழும்பொழுது நாளழாது ஆதலால் "நாச் செற்று விக்குள்
மேல் வாராமுன்" என்றார்.

மேற்சென்று செய்யப்படும்—விரைந்து செய்யப்படும்; வாய்
பாட்டுக்கேற்ற எழுவாய் இதில் வருவித்துக்கொள்க.

உயிர் உடம்பை விட்டுப் பிரியுங் காலத்தில் தோன்றுகின்ற துன்பங் கூறுபாடுகளுள் மிக்கது ஆய விக்கல் தோன்றுமுன்னே வீட்டிற்கேதுவாகிய நல் வினையை விரைந்து செய்யவேண்டு மென்றது அது தோன்றியபின் யாதும் செய்யமுடியாதென்பது கருதி.

நாவை அடக்கி, விக்குள் மேல் எழுவதற்கு முன்னே அறி வுடையோரால் வீட்டிற்கு உரிய அறம் விரைந்து செய்யப்படும் என்பதாம்.

மேல், நெருநல் உளனொருவன் இன்று இலனென்னும் என்னூர்; இதில், அவ் இன்மை வருமுன்னமே நன்மை செய்க என்னூர். உண்மையை உணர்த்தி உறுவனவற்றை விரைவில் செய்க என்ற அடிகள் அருள் மாண்பை இதில் ஆய்ந்துகொள்க.

கருவிகள் தளராதிருக்கும்பொழுதே உயிர்க்கு உறுதியான நன்மையை ஒருவன் விரைந்து செய்துகொள்ளவேண்டுமென்பது கருத்து.

நிலையில்லாத உடல் நிலைத்திருக்கும்பொழுதே நிலையான அறத்தை அறிவுடையார் செய்து கொள்வர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ் உண்மை கட்டுவாங்கன் பால் உணரப்படும்.

கதை

கட்டுவாங்கன் என்பவன் சூரியகுலத்து வேந்தனாகிய விசு வகன் குமரன். சிறந்த போர்வீரன். இவனுடைய மகன் பெ யர் தீர்க்கபாகு. மனைவி சதமதி. இவன், மன்பதை இன்புற மாநிலம் புரந்தான். அக்காலத்தில் அசுரருடன் அமராற்ற ஆற் றுது. அமரர் சிலர் இவன்பால் வந்து துணைவர வேண்டினர். இவன் சென்று அசுரரை அடங்கவென்று அமரருக்கு உரிய மேன்மையை உதவினன். அதனால் இந்திரன் மகிழ்ந்து "வெண் றிவேந்தே! உனக்கு வேண்டுவது யாது" என்றான். இவன் எனக்கு ஆயுள் முடிவு எப்பொழுது என்று நீ அறிந்து கூறுக

என அவனை அமைந்து வேண்டினன். அவன் யோகவுணர்வால் நோக்கி "ஐயகோ! இன்னும் இரண்டுநாழிகைதானே உள்ளது" என்றான். மன்னன் மாகதர் வந்தான். அரியவை யாவும் உரிமை யினுதவி அறவினையெல்லாம் விரைவினில் செய்தான், பற்றறத் தெளிந்தான். பற்றற்றானையே பற்றி நின்று சுவஞ்செய்து மூழ்தியடைந்தான். விக்குள் மேல் வருமுன்னை நல் வினையை அறிவோர் விரைந்து செய்வரென்பதை உலகம் இவன்பால் உணர்ந்து மகிழ்ந்தது. (விரிவைப் பாகவதத்தில் காண்க.)

இளமையும் எழிலும்வானத் திடுவிலின் எண்ணைடமையும்
வளமையுங் கிளையும்வாரி புதியதன் வரவுபோலும்
வெளியிடை விளக்கின்வீயும் ஆயுவுமென்று வீட்டுக்
குளபகலுக்கஞ் செய்வர் உணர்விறற் பெரியதீரார்.

(மேருமந்தர புராணம்,)

இளமையும் நிலையாவால் இன்பமும்நின்ற வல்ல
வளமையும் அஃதேயால் வைகலுந் துன்பமெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக்கென்று மென்றும்
விளைநிலம் உழுவார்ப்போல் வித்துநீர் செய்துகொண்மின்.

(வளையாபதி)

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியேசெய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படுதலால்.

(நாலடியார்)

பசிவந்தபின்நெல்லை விதைப்பதுபோல் வீட்டில்தீ பற்றிக்கொண்டு
நசியும்போததையவிக்க ஆறுவெட்டல்போலும்போர்நடக்குங்காலை
விசிகநூல் கற்கமுயல் வதுபோலும் கபமிஞ்சி விக்கிச்சிக்கி
இசிவுகொண்டுசாங்காலத்தெப்படிநீ அறம்புரிவாய்எனை நெஞ்சே.

(நீதிநூல்)

விக்கிச் சா முன்னே நல் வினையை விரைந்து செய்யவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

336. பண்டு மணமகனைப் பத்தினியைக் கைகப்பிடித்தான்
கொண்டனன்றேன் மாண்டான் குமரேசா—கண்ட
நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (கூ)

இ.—ள்.

குமரேசா! மணமகனாகி மகிழ்ந்து நின்றவன் அன்றே ஏன் பிணமகனாகி இழிந்துபோனான் எனின், ஒருவன், நெருநல் உளன்; இன்று இல்லை என்னும் பெருமையை இவ்உலகு உடைத்து என்க.

ஒருவன் நெருநல் உளன்—ஒருவன் நேற்று உனையிலன்.

இன்று இல்லை—இன்று இல்லையாயினன்.

என்னும் பெருமை என்றது இகழ்ச்சிக் குறிப்பு. உலகோர் சொல்லின்மேல் வைத்து இம்முணர்த்தியதென்க.

ஒருவன் நேற்றுப் பிறந்தான் இன்று இறந்தான் என்று சொல்லும்படியான நிலையாமையையே இவ் உலகம் நிலையாகக் கொண்டுள்ளது என்பதாம்.

"நேற்று இருந்த ஒருவன், இன்று இல்லையாயினன்" என்னும் பெருமைதான் இவ்வுலகில் மிகுதியாகவுள்ளது ஆதலால் உள்ளபோதே உயிர்க்கு உறுதியைச் செய்துகொள்ளுக என்பது குறிப்பு. இறத்தலும் பிறத்தலும் இரு பாலார்க்கும் உளவாயினும் உயர்வுபற்றி ஒருபால்மேல்வைத்துக் கூறினர்.

மேல், விக்குள் வருமுன்னே வேண்டியதை விரைந்துசெய்க என்றார்; மூப்பு வந்த பின்னர்தானே அது வரும் என்று அயர்ந்து இராதே என்று இதில் அருளினர் என்க.

இன்று இருந்தான் தன் கேள் அலற இப்பொழுது ஒருவன் இறந்துபோனான் என்று இவ்வுலகில் அடிக்கடி சொல்லப்படும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தனதன்பால் உணரப்படும்.

கதை.

தனதன் என்பவன் மதுரையிலிருந்த ஒரு வணிகர் குல மகன். இவன்காலத்தில் குலோத்துங்க பாண்டியன் அரசுபுரிந் தான். தனது மரபுக்குரிய மங்கை ஒருத்தியை இவன் மணம் புரிந்தான். பெற்றோரும் உற்றோரும் பிறரும் புடைசூழ்ந்து மதி முத் திருமணம் அழகுற நடந்துகொண்டிருந்தது; அப்பொழுது அங்கோர் இளங் கன்றையுடைய பசு ஒன்று வெருண்டோடி வந்து இவன்மேற் பாய்ந்து விளைந்து சென்றது. அதனால் குடர் சரிந்து இவன் உடனே மாண்டான். மணமகளையிருந்தவன் பிண மகளைனன். இன்று இருந்தான் இப்பொழுது இறந்தானே என்று அனைவருங் கலங்கி அழுது துடித்தார். நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்பதிலும் மிக்க நிலையாமையை இவன் பால் உலகம் அன்று கண்டது. விரிவைத் திருவிளையாடலில் காண்க.

ஓட்டியபல் கிளைதுவன்றி ஒல்லொலிமங்கலந் தொடங்கக்
கொட்டியபல் இயமுழங்கக் குழுமியமேவா சையின் வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றுஒன்றதிர்ந் தோடி
மூட்டியதால் மணமகனை முடித்ததால் அவளை. (1)

மணமகனே பிணமகளைய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலியே அழுகையொலியாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க்கொன்றுமிலை. (2)

இவற்றுல் மேற்குறித்த உண்மை தெளிவாதல் காண்க.

மன்றங் கறங்க மணப்பறை போயின
அன்றவர்க்காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஏறித்தூறும் உண்டோமென் றுயர்ந்தோமோமாறே
வேறித்தூறோம் மாண்டார் மனம். (காலடியார்)

நிலையாமையே இவ் உலகில் நிலையாக உள்ளதென்பது இதனால் கூறப்பட்டது.

337. கோடி கருதிக் குதித்தான் சயத்திரதன்
கூடிணன் சாவேன் குமரேசா—கூடி
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (எ)

இ—ள்.

குமரேசா! வெற்றி பெற்றேமென்று தன் வாழ்வைக் குறித்துப் பல கோடி எண்ணிய சயத்திரதன் என் உடனே மாண்டான் எனின், ஒருபொழுதும் வாழ்வது அறியார், கோடியும் அல்ல பல கருதுப என்க.

கருதுப—எண்ணுவர். கோடி ஓர் எண்: அஃதாவது நூறு நூறாயிரம். உம்மை இழிவு சிறப்பு. கோடியும் அல்ல பல என்றது மனத்தில் தோன்றும் எண்ணங்கள் அளவிடலரியன என்பது கருத்து.

அறியார் கருதுப என்று கூட்டுக. கருதுப என்பதைப் பெயராகக் கொண்டு கருதப் படுவன பல என்று காணினும் அமையும்.

ஒரு பொழுதளவும் தாம் நிலையாயிருந்து வாழ்வமென்பதை உணராதவராயிருந்தும் கோடியினும் பலவாய எண்ணங்களை அறிவிலார் கருதுவர் என்பதாம்.

அற்ப வாழ்வையும் அற்ப அறிவையுமுடைய மக்கள் கற்ப கோடி காலம் வாழ்வார் போன்று பல கோடி எண்ணங்களை நினைந்து நினைந்து நெஞ்சு புண்படுவர் என்றபடி.

உலண்டு கூடு கட்டியாங்கு அறிவிலார் பல கோடி நினைவுகளால் மனக்கோட்டை கட்டி மகிழ்வர்; அறிவுடையார் தமது நிலையாமையின் நிலைமையைத் தெளிந்து நிலையானதையே நினைந்து நிற்பர் என்பது கருத்து.

ஒரு கணமேனும். இவ்வுலகில் நிலைத்திருப்போம் என்னும் நிலைமை தமக்குத் தெரியாதிருந்தும் பல கோடி எண்ணங்களை நினைந்து களித்து அறிவிலார் அழிவர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ் உண்மை சயத்திரதன்பால் உணரப்படும்.

கதை.

சயத்திரதன் பாரதப் போரில் பதின்மூன்றும் நாளில் ஒரு சூனனுடைய மகனாகிய அபிமன்னனைக் கொன்றுவிட்டான். அதனால், அருச்சுனன் சினந்து மறுநாள் பொழுதுபடுமுன் அவனைக் கொல்வதாகவும், இல்லையானால் நெருப்பில் விழுந்து தான் மடிந்து செல்வதாகவும் சூளுரை புகன்று துணிந்திருந்தான். முறைப்படி மறுநாள் போர் தொடங்கினது. அன்று சயத்திரதனை நடுவே வைத்து எண்பதினாயிரம் தேர் வீரர்களை அவனைப் புடைசூழநிறுத்துப் பல்லாயிரங்கோடி போர்வீரர்களை அதன்மேல் நிறுத்துத் துரோணர் படைத் தலைவராய் நின்று, நால்வகைச் சேனைகளையும் நடத்திப் பொருதார். இருபதினாயிரம் நாழிகையாகியும் அவனை இருந்த இடத்தையுங் கூட அருச்சுனன் பொருந்தப்பெற்றிலன். சாரதியாயிருந்த கண்ணன் தன் கதிராழியால் கதிரவனை மறைத்தான். உலகம் இருண்டது. துரியோதனன் முதலானவர் மகிழ்ந்து சயத்திரதனை ஓர் அழகிய தேரில் அலங்கரித்துவைத்து "சயம் சயம்" என்று முழங்கிக் குதித்து அருச்சுனன் முன்னே நிறுத்தினர். "உடன்படிக்கையின்படி பொழுதுபோய்விட்டது இனித் தீயில் விழுந்து அருச்சுனன் இறந்து படுவான்; அவன் இறந்தவுடன் தருமர் முதலிய நால்வரும் தொலைவர்; அவர்கள் தொலைந்தபின் படைகளனைத்தும் பறந்துபோம்; அதன் பின் அரசு முழுவதும் நம் அரசனுக்கே உரியதாகும்; அதனால் புகழும் வெற்றியும் பொருவருஞ் செல்வமும் யான் பெற்று மகிழ்ந்து பெருஞ் சிறப்படைவேன்" என்று இங்ஙனம் பல கோடி எண்ணங்களைச் சயத்திரதன் கருதிக் கருதிக் களித்தான். கதிரவன் மறையவில்லை யென்னும் உண்மையைக் கண்ணன் விசயனுக்கு உணர்த்தி 'விடுக அம்பு' என விரைந்து நின்றார். உணர்ந்து வீரனும் உடனே விட்டான். துள்ளி நின்றவன் தலை துள்ளி எழுந்தது. ஒரு பொழுதளவும் தாம் வாழ்வதை அறியாதிருந்தும்

கோடியினும் பலவாய எண்ணங்களை அறிவிலிகள் எண்ணினெண்ணி மகிழ்வர் என்பதை உலகம் அன்று இவன்பால் உணர்ந்தது.
(விரிவைப் பாரதத்தில் காண்க.)

உண்பது நாழி உடுப்பது நான்குழமும்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். (ஔவை.)

முன்னொரு காலத்தில் காகன் என்னும் வேடனொருவன் வேட்டைக்குச் சென்றான். அங்கோர் யானையைக்கண்டு அதன் மேல் அம்பினை எய்தான். அதனால் அது மாண்டு விழுந்தது. வேடன் மயங்கி அதன்பால் விரைந்து சென்றான். அங்குக் கிடந்த பாம்பு அவன் காலில் கடித்தது. அதனை வில்லால் அடித்தான். அது மடிந்தது. விடந்தலைக் கேறி வேடனும் மடிந்தான். சிறிதுபொழுது கழித்து நரி ஒன்று அங்கு வந்தது. பெருமகிழ்வு கொண்டது. யானை ஆறு மாதங்கட்கு உணவாகும், வேடன் மூன்று நாட்களுக்கு அமையும், அரவம் இன்னதற்குக் காணும், என்று சுருதி நரி அன்று கொண்ட உவகைக்கு அளவேயில்லை. சுற்றிச் சுற்றி வந்தது. நரம்பால் கட்டியுள்ள வில்லின் நாணியை முதலில் தின்னக் கருதி நுனிப் பக்கம் இருந்து நரி அதனைக் கடித்தது. நாண் இற்றவுடன் வில் விரைந்து எற்றியது. அதனால் நரி மாண்டது. தன் மனைவியுடன் வந்து அவ்வனத்தி லுலாவிநின்ற மன்னன் இந்நிகழ்ச்சியைக் கண்டு நாமும இவ்வாறுதானே பல கருதி மாள்கின்றோம் என்று நிலையாமையை யஞ்சி உடனே துறவுகொண்டான். இதுவும் ஈண்டு கருதத்தக்கதாதலான் இதனடியில் காட்டப்பட்டது.

கரியொரு திங்களாறு கானவன் மூன்றுநாளும்
இரிதலைப் புற்றுநாகம் இன்றுணும் இரையாமென்று
விரிதலை வேடன்கையில் விற்குணை நரம்பைக்கவ்வி
நரியனர் பட்டபாடே நரர்களும் படுவர்மாதோ.
(நரி விருத்தம்)

தம் நிலைமையை உணராமலே அறிவிலிகள் பல கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

338. கூடிவந்த தன்மனைவி கொண்டவுயிர் காணுதேன்
கூடுமட்டுங் கண்டான் குமரேசா—நாடுங்
குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (அ)

இ—ள்.

குமரேசா! "தேவசன்மா, தன் உடன் வந்த மன்னவ்யின் உயிரைக் காணுது என்-ன் உடம்பை மட்டும் கண்டான் எனின், உடம்போடு உயிரிடைநட்பு, குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று என்க. குடம்பை—பறவைக் கூடு.

புள்—பறவைகளெல்லாவற்றிற்கும் பொதுவான பெயர்.

உடம்போடு உயிரிடை நட்பு—உடம்புக்கும் உயிர்க்கும் உளதாய உறவு. உயிருடை எனவும் பாடம்.

புள் பறந்தற்று—பறவை பறந்து போன தன்மைத்து.

நட்புப் பறந்தற்று என்று காண்க. உயிர்க்கும் உடம்பிற்கும் அமைந்துள்ள உறவின் தன்மையை உணர்த்துதற்கு நட்பு என்றார். அதன் புண்மை குறிப்பாலிழுக்கப்படுதலால் இது குறிப்பு மொழி என்க.

குடம்பையை விட்டுப் பறவை பறந்து போதல் போல் உடம்பினை விட்டு உயிர் பிரிந்துபோம் என்பதாம்.

உடம்பு தனியே கிடக்க உயிர் பிரிந்து போதல் எதுபோல்வு தெனின், கூடு தனியே கிடக்கப் பறவை பறந்து போதல் போலும் என்பார் "உயிரிடை நட்பு, புட் பறந்தற்றே" என்றார்.

உடம்பு தனித்தொழிய உயிர் போதலை உணர்த்துதற்குப் புள்ளை உவமை காட்டியது அதன் இயல்பு நோக்கி என்க.

குடம்பையும் புள்ளும், உடம்பிற்கும் உயிர்க்கும் இதின் முறையே ஒப்பாய் நின்றன.

இனி, உடன்றோன்றல், ஒண்ணுய் நிற்றல், காலம் வந்தழிப் பிரிந்துபோதல், பின் அதில் புகாது ஒழிதல ஆகிய உடலுயிர்க் னின் செயல்கள் முட்டாக்கும், அதனுள் இருக்கும் புள்ளுக்கும் பொருந்தியிருத்தலால் குடம்பையை மூட்டை என்று கொண்டு பொருள் காணினும் அமையும்; ஆயினும், மூட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்டுத் தவண்டு கிடக்குமே யன்றிப் பறந் துபோதல் இல்லாமையானும், அவ்வமையம் அது புள் என்று பெயர்கொள்ளாமையானும, "புள் பறந்தற்று" என்பதே இங்குச் சிறந்தமையானும், இவ் அரிய அமைவில் ஒருவகை எளிய அமை வின்மையும் அமைந்துள்ளது என்க.

உடம்பைத் தனியே ஒழித்துவிட்டு ஒருவரும் அறியாவண் ணம் உயிர் ஒளிந்துபோம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கமலவதிபால் உணரப்படும்.

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் மதுரையின் வடகிழக்கிலுள்ள திருப்புத்தூர் என்னும் நகரில் தேவ சன்மா என்றொரு வேதியனிருந்தான். அவன் கமலவதி என்னும் கன் னியை மணந்து இல்வாழ்க்கை புரிந்துவருங்கால் ஒருநாள் தன் மாதலனைக் காண விரும்பி மனைவியையும் குழவியையும் உடன் கொண்டு மதுரையை நோக்கி வந்தான். நெறியிடையிருந்த ஓர் ஆல மர நிழலில் அவ் இருவரையும் இருத்திவிட்டு அவர்க்காக நீர் நாடிச் சென்றான். அவ் ஆலமரத்தின் துளையில் முன்னோ தொங்கிக் கிடந்த அம்பு ஒன்று காற்றால் அசைப்புண்டு கீழே இரு ந்தவள் மேலே விழுந்தது. அதனால் அவள் உயிர் துறந்தாள். சென்றவன் நீர்கொண்டு திரும்பி வந்தான். அயில்பட்ட மயில் போல் உயிர்போய்க் கிடக்கும் அவ் அழகியைக் கண்டு ஆருயிர் பதைத்தான். கலங்கி அறிவழிந்து கதறி அழுதான். இவ் அழகிய உடம்பினிருந்து பழகிய அவ் உயிர் எவ்வாறு போயிற் றோ என்று ஏங்கி நொந்தான். பருவம் வந்தழிக்குட ம்பையை விட்டுப் பறந்து செல்லும் பறவைபோலக் காலம் வந்து

ழிஉடம்பை விட்டு உயிர் பிரிந்து போய்விடும் ஆதலால் நீ வருந் திவாய்விடாதே என்று சிலர் மொழிந்து தேற்றினர். உடம்பிற் கும் உயிர்க்கும் உளதாய நட்பின் நிலைமையை இவன் உணர்ந்து தெளிந்து குழந்தையோடு தன் ஊரினையடைந்தான். (விரிவைக் கூடம்காண்டத்தில் காண்க.)

கேளாதே வந்து கூவோகளாய் இற்றேன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மாறெழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து. (நாலடியார்.)

விடம்பயில் எயிற்றர வுயிரும் வீந்துழை
குடம்பையும் காணலுங் கொள்கைத்தே கொலாம்
நடம்பயில் கூத்தரின் நடிக்கும் ஐவர் வாழ்
உடம்பையும் யானென வுணைசக்கற் பாலதோ. (அதிசி.)

உடம்போடு உயிர்கொண்டுள்ள உறவின் இயல்பு இதனால் உரைக்கப்பட்டது.

---

339. அன்றிறந்த சத்தியவான் அவ்விருத்தை என்பிறந்து
குன்றுதெழுந்தார் குமரோசா—நன்று
உறங்குவதுபோலுந் சாக்காடுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (க)

இ—ள்.

குமரோசா! அன்று இறந்த விழுந்த சத்தியவானும் விருத்தையும் என் உடனே பிறந்து எழுந்தார் எனின், சாக்காடு, உறங்குவதுபோலும்; பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும் என்க.

சாக்காடு— இறப்பு. காடு தொழிற்பெயர் விகுதி.

இறத்தல் உறங்குதலையும் பிறத்தல் உறங்கி விழித்தலையும் ஒக்கும் என்பதாம்.

உறங்குவதையும் விழிப்பதையும் இறப்புக்கும் பிறப்புக்கும் ஒப்பிட்டார் இயல்பாகவும் விரைவாகவும் உயிர்கட்கு அவை மாறி மாறி உளவாம் என்பது கருதி.

கூடம்பையை விட்டுப் பறவை போதல்போல் உடம்பினை விட்டு உயிர் போம் என்று மேலே கூறினர்; இதில், அவ் உயிர் மீண்டும் மீண்டும் உடம்பெடுத்து நின்று மாண்டு மாண்டு தோன்றும் என்பதை உவமையால் விளக்கினர்.

நீரோடு தட்பமும், நெருப்போடு வெப்பமும் எப்படி இயல்பாக அமைந்துள்ளனவோ அப்படியே உடலோடு சாக்காடு உறைந்துள்ளது என்க.

உறக்கமும் விழிப்பும் போல் இறப்பும் பிறப்பும் உயிர்கட்கு மாறி மாறி வருமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்தியவான்சாவித்திரியும், விருத்தைபாலும் உணரப்படும்.

கதை 1.

சத்தியவான் தனது மனைவியாகிய சாவித்திரியுடன் நீபகம் என்னும் வனத்தில் ஓர் ஆலமர நீழலில் உலவந்து இருந்தான். அப் பொழுது அவனுக்கு முடிவுகாலம் வந்தது. சாய்ந்து படுத்தான். உடனே மாய்ந்துபோனான். உடனிருந்த மனைவி உள்ளங் கலங்கித் தன் கற்பின் மாண்பால் காலனைத் தொடர்ந்து மங்கலத் தோடு தன்னைக் காத்தருளும்படி வேண்டினாள். இவளது தூய்மைக்கு மகிழ்ந்து அவ்வாறே ஆகுக என்று அவனும் அருள்புரிந்தன்றான். இவளும் மீண்டுவந்து தன் கணவனைத் தீண்டினாள். இறந்துகிடந்தவன் உறங்கி விழித்தவன்போல் எழுந்தான். இருவரும் மகிழ்ந்து தம் இருப்பிடஞ் சென்றார். விரிவைச் சிவமகாபுராணத்தில் காண்க.

கதை 2.

விருத்தை என்பவள் இற்றைக்குப் பல்லாயிர வருடங்கட்கு முன்னர் அர்த்தமயம் என்னும் வனத்திலிருந்த உச்சத்தியன் என்னும் ஒரு முனிவன் புதல்வி. தாய் பெயர் மங்கலை. இவள்

நு நாள் மங்கையர் பல்நூடன் மலர் கொய்யச் சென்றுள்.
ங்கோர் மத யானை முழங்கி வந்தது. அதனால் அனை நரும்
தறி ஓடினர். இவளுந் கலங்கி ஓடிப் புதர் மூடியிருந்த ஒரு
ாழங் கிணற்றிற் பாய்ந்து மாய்ந் தாள். பெற்றோர் அறிந்து
பதறற்றுவந்து மகளைனத்து வெளியேகிடத்தி மயங்கி நொந்தார்.

அறங்காட்டிற் சென்றதுவோ தெய்வதமும் இங்கிலையோ
அரிதா முத்திக்
திறங்காட்டுந் தவநெறியும் பொய்த்தனவோ கலியுமினிச்
சேர்ந்த தேயோ
மறங்காட்டும் வண்க்கனிறு வந்தடர்ந்த ஈண்டெனது
மா துமாண்டு
புறங்காட்டிற் கிடந்திடுமோ ணென்னையென்னே யிதுவோர்
புதுமையுமே.

என்று புலம்பியழுதார். அவ்வமையம் அங்குக் குச்சக முனிவர் வந்து தம் தவ மகிமையால் அவ்வுயிரை மறலியிடமிருந்து மீட்டிக் கொணர்ந்தார். உடனே அஃது அவ் உடலிற் புகுந்தது.

உடற்குள்உயிர் வந்திடலும்புகுந்ததுமெய் யுணர்வுசிறி
துயிர்த்த நாசி
துடித்தனகால் பதைத்ததுரத் துளங்கிமுகம் விளங்கியதால்
துவண்ட தாகம்
எடுத்தனைக் அணைந்தனதோள் இணைத்தனகண் விழித்தனவா
யினைய காலே
மடக்கொடியும் துயிலுணர்ந்தாள் போலெழுந்தாள் எல்லோரு
மருங்கிற் சூழ்ந்தார்.

இவ்விருத்தையே மார்க்கண்டருடைய தந்தையின் தந்தையாகிய மிருகண்டுவ முனிவருக்கு மனைவியாயினள். உறங்குவதுபோலும் இறப்பு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்பதை உலகம் இவ்விருவர் பாலும் அன்று உணர்ந்து தெளிந்தது. விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

இறப்பும் பிறப்பும், உறக்கமும் விழிப்பும்போல் மாறி மாறி வருமென்பது இதனால் கூறப்பட்டது.

340. திண்டோட சசித்துலசன் செய்பவுயிர் பல்லுடம்பு
கொண்டலைந்த தென்னே குமரேசா—கொண்டுநிற்கும்
புக்கில் அமைந்தின்று கொல்லோ வுடம்பிலுள்
தக்கி லிருந்த வுயிர்க்கு.

ஈ—ள்

குமரேசா! சசித்துலசனது மெய் உயிர், என் பல —— ம்புகளிலும் புகுந்து அலைந்தது எனின், உடம்பிலுள் தக்கில் இருந்த உயிர்க்கு புக்கில் அமைந்தின்று கொல் என்ன.

புக்கில்—புகுந்து நிலையா யிருக்கு மிடம்.
அமைந்தின்றுகொல்—அமைந்திலலே போலும்.

தக்கில்—ஒதுக்கிடம்; அஃதாவது இரவலாக ஒதுங்கித் தங்கும் இடம். தக்கில் இருந்த உயிர்க்குப் புக்கில் அமைந்திலலே என்றது பல்வகை உடம்புகளிலும் புகுந்து அஃது ஒன்றிலும் நில்லாது நீங்குமென்பது கருதி.

நிலையான உயிர், நிலையாயிருத்தற்கு ஒரு நிலையான நல்ல இல்லம் அதற்கு இதுகாறும் அமைந்திலலே என்பது கருத்து.

நிலையில்லாத உடம்புள் நிலைத்திருக்கும்பொழுதே நிலையே றுடைய நன்மையை ஒருவன் பெறவேண்டுமென்பது குறிப்பு.

உடம்புகளுள் இரவலாக ஒதுங்கித் தங்கியிருக்கும் உயிர்க்கு என்றும் நிலையாகப் புகுந்து இருத்தற்கோர் இடம் இன்னும் அமைந்திலலையோ என்பதாம். புக்கில் அமைந்ததாயின் தக்கில் இருந்து உயிர் அலையாதென்பது தெளிவாதலால் கொல்லோ என்றது ஐயமாயிற்று. நிலைபெற்ற இல்லாகிய வீட்டினை அடையும்வரையும் உயிர் நிலையின்றி அலையும் என்பது கருத்து.

ஓர் இல்லில் ஒதுக்குக் குடியிருப்போர் அவ் இல்லிற்குரியவர் விரும்பும்வரையும் இருந்து வெறுத்தவுடனே வெளியேறி விடுவர்; அதுபோல், கொடு நோய்களுக்கு உரிய இடமாயுள்ள உடம்புகளுள் உயிர் புகுந்து ஒதுங்கியிருந்து அவை அடங்கியி

சூக்கும வுடையம் அமர்ந்து அவை நிலை நின்றவுடனே அகன்று போய் அவ்வாறே மாறி மாறி அலைந்துவரும் என்க.

ஒருத்திக்குக் குடியிருக்கின்ற ஒருவனுக்கு அவ் வீடு எவ்வளவு உரிமையுடையதோ அவ்வளவே உயிர்க்கு உடம்போடு உளதாய உறவு என்பது குறிப்பு.

பல்வேறு உடம்புகளுள்ளும் புகுந்து சிறிது காலந் தங்கி ஒன்றினும் நிலையின்றி உயிர் திரிந்து வரும் என்பதைப்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்தினைத்தேன் எம்பெருமான்"

என்னும் அருள்மொழிகளினிது விளக்குகின்றன.

ஒரு நிலையில் நில்லாமல் உடல்கள்தோறும் உயிர் புகுந்து மீளும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிந்தாமணி பால் உணரப்படும்.

கதை.

சீவித்தவசன் என்பவன் இற்றைக்குப்பல நூற்றாண்டுகட்கு முன்னர்ப் பல்லவதேயத்தை ஆண்டிருந்த ஒரு மன்னவன். நல்ல சீலமுள்ளவன். இவனுடைய மனைவி பெயர் சுசாந்தை. இவ்விரு வரும் கணவனும் மனைவியுமாய் முன்னைப்பல உடம்புகளிலும் புகுந்திருந்து பொருந்தியின் புற்றார். பின்னர் வணிகமரபில் தோன்றி மருவிவாழுங்காலத்தில் அண்டவாயுவு என்னும் ஓர் நோயால் அவன் ஆவிதீர்ந்தான். மனைவிவருந்தி அழுதாள். அவ்வமையம் அங்கு வந்த சவுபரி என்னும் முனிவரொருவர் இரக்கமுற்று அவன் எழும்படி மொழிந்தார். அவரது தவமாண்பால் அவனும் எழுந்தான். மிகுதியாகப்புலால் தின்றுவந்த பாவத்தால் அவ்விரு வரும் பின் கழுகுகளாய்ப் பிறந்து காடன் என்னும் வேடனொரு

வன் கண்ணியிற்சிக்கிக் கண்டகி நதிக்கரையில் கொல்லப்பட்டார். மேடன் அவற்றைச்சுட்டு ஊனை உண்டு எஞ்சிய என்புகளை நதியில் வீசிச்சென்றான். அந்நதியிற்கலந்த நலத்தின் பயனை அரசனும் அரசியுமாக அவ்விருவரும் அமைந்து தோன்றி ரமா என்னும் ஒரு புதல்வியைப்பயந்து கல்விக்குமணம் புரிந்து தன் சிறந்த உடம்பை விடுத்து அரசன் இறந்து போனான். பல்வகை உடம்புகளுள்ளும் ஒதுங்கி ஒதுங்கி நின்று ஒன்றினும் நிலையில்லாமல் உழன்று திரிந்து அழிவின்பத்தை முடிவில் அடைந்தான். உயிர்க்கு ஒதுக்கிடமாகவே உடம்பு அமைந்துள்ளது என்றும் அஃது அதில் நிலையாக நில்லாதென்றும் தோன்றியபோதும் இதை உலகத்து அழியும் என்றும் நிலையாமையின் இயல்பை இவன் நினைந்து தெளிந்தான். (விரிவைக்கல்கி புராணத்தில் காண்க)

ஓருடம்பினும நிலையாக நில்லாமல் உயிர் மாறி மாறி ஆலிபு மென்பது இதனால் கூறப்பட்டது.

கடிந்தால் நெடுவெளி இடிந்சுட ரென்ன
ஒருங்குடன் நில்லா உடம்பிடை உயிர்கள். சிலப்பதிகாரம்.

உழுநரிக் கணங்களுக் குதவும் ஒண்பொருள்
கழுகினுக் குணவுகட் டிய களஞ்சியம்
தழலினுக் கிந்தன மான சட்டகம்
எழிலுறப் புனையினும் இருப்ப தல்லவே.
(செவ்வந்திப் புராணம்.)

ஓரிடத்தோ ருயிர்நெடுநாள் உறைவதிலை உதயமெனும்
நீரிடத்துப் புரிவினையால் நிலையிலுடம் பிதுபோலும்
பாரிடத்திற் சுவர்க்கத்திற் பவர்க்கமதில் எங்கெனினும்
சேரிடத்திற் சேருமிது திண்ணமென தெளிந்திடுதி.
(சேதுபுராணம்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணைசெய் யாவிற்-
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.
(இராமாயணம்.)

இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

நில்லாதவற்றை நிலையென்று உணர்தல் புல்லறிவாகும். செல்வம் கூத்தாட்டுக் கூட்டம்போல் திரண்டுவந்து பின் பிரிந்துபோம். அது நிலையாக நில்லாதாதலால் உடனே அதனால் அறம் செய்து கொள்ளவேண்டும். நாளினை நம்உயிரை அறுக்கும்வாள் எனஉணர வேண்டும். மூப்பு வருமுன்னரே நல் வினையை விரைந்து செய்து கொள்ளவேண்டும். நேற்று இருந்தான் இன்று செத்தான் என்னும் பெருமைதான் இவ் உலகில் மிகுதியாக உள்ளது. ஒரு கணமேனும் உயிர், உடலோடு கூடி வாழும் என்பதை ஒருவரும் அறியார். குடம்பையை விட்டுப் பறவை பறந்துபோதல்போல் உடம்பினைவிட்டு உயிர் பிரிந்துபோய்விடும். இறப்பும், பிறப்பும் உறக்கமும், விழிப்பும் போல் மாறி மாறி வரும். ஓருடம்பிலும் உயிர் நிலையாக நில்லாது.

நடசவது நிலையாமை முற்றிற்று.

நநி-ம் அதிகாரம் துறவு.

அஃதாவது உடல்முதல் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின்மேலும் உளதாய பற்றுக்களை அறவே விடுதல். உற்ற பொருள்களெல்லாம் முற்றும் அழியும் என்னும் உண்மையுணர்வு உதித்த பின்னரே இஃது உதிக்கும் ஆதலால் நிலையாமையின் பின் நிறுத்தப்பட்டது. அதிகார நிலையும் இதனானே தெளிவாம்.

---

341. பெற்றசெல்வம் எல்லாம் பிருகசதன் என்றுறந்து
குற்றமற நின்றான் குமரேசா — உற்றறிந்தே
யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (க)

இ.—ள.

குமரேசா! அரச செல்வம் முழுவதும் நீங்கிய பிருகதன் என் யாதொரு நோதலும் இலனாய அமைதியுற்றிருந்தான்

எனின், யாதனின் யாதனின் நீங்கி யான், அதனின் அதனின் நோதல் இலன் என்க.

நோதல் — துன்பம். நீங்கியான் — துறந்தவன்.

யாது என்னும் வினைப் பெயர் தன்சாரியையும் இன் உருபும் அடைந்து யாதனின் என நின்றது. அஃது என்னும் சுட்டுப் பெயர் ஆய்தங் கெட அன்சாரியையும் இன் உருபும் பெற்று அதனின் என நின்றது. பொருள்கள் பலவாகலின் அடுக்கியருளினர்.

துறந்தவனுக்குத் துன்பம் இல்லை என்பார் நீங்கியான் நோதல் இலன் என்றார்.

யாதொரு பொருளின் நின்றும் யாதொரு பொருளின் நின்றும் ஒருவன் பற்று நீக்கினான், அதனின் நின்றும் அதனின் நின்றும் வருகின்ற துன்பம அவன் அடைதல் இலன் என்பதாம்.

பொருள்களிடமெ லுள்ள பற்றுக்களை ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு விடுகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு துன்பத்தில் நின்று அவன் விடுபடுகின்றான் என்பது கருத்து.

உலக வாழ்க்கையில் பற்று நீங்கினவனுக்குத் துன்பம் நீங்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருகு தன்பால் உணரப்படும்.

கதை.

பிருகுதன் என்பவன் விதேகநாட்டு வேந்தன். அழகும் வீரமும் அமையப் பெற்றவன். பேரறிவுடையவன். தேவ விரதன் என்னும் புதல்வனைப் பெற்றுச் சிறந்து வாழ்ந்து வருங் கால் ஒரு நாள் மேன் மாடத்தில் நிலா முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தான். முதிர்ந்து உதிர்ந்த மா இலை ஒன்று தன்முன் விழக் கண்டான். தனது அழகிய கையால் அதனை எடுத்தான். தளிரா யிருக்கும்பொழுது அது பெற்றிருந்த அழகும் செவ்வி யும் இப்பொழுது எங்கே போயின என்று அதன் முதுமையை நினைந்து தன் பிறவியை மூனிந்தான். துறவினை விரும்பினன்.

எரிபுரை எழிலதாய இளந்தளிர் இரண்டுநாளின்
மரகத உருவமெய்தி மற்றது பசலைகொண்டு
கருகிலை யாகிவீழ்ந்து கரிந்துமண் ணுதல்கண்டும்
வெருவிலர் வாழ்துமென்பார் வெளிற்றினை விலக்கலாமோ.

என்று அவ்இலையின் இயல்பால் நிலபாமையை உணர்ந்து இரங்கி அரசரிணமை போல ஒவ்வொன்றாக நீக்கினான். முடிவில் தன்னுடையமுந்த மகனுக்கு முடி புனைந்து முடியா இன்பத்தைத் தான் அடையமுயன்றான். அனைத்தையுந் துறந்து அடவியிற் புகுந்து ஆகவனை நோக்கி அருந்தவம் புரிந்து திருந்திய ஞானியாய்ச் சிறந்து விளங்கினான். பற்று இன்மித்தனிபிருக்கும் மனத்தைப் போல் பனி மதியும் பதுமத்தோனும் பொற்றிருள்சேர் இருநிலனும் சுகம் அடையார் என்று தான் உணர்ந்து மகிழ்ந்தான். தண்டம் யாதும் இன்றி இன்பமெய்தி யிருந்தான். பொருள்கள்மேல் பற்று நீங்கினவனுக்குத் துன்பம் நீங்கும் என்பதை இவன் பொருந்தித் தெளிந்தான். (விரிவை மைத்திரா யணி உபநிடதத்தில் காண்க.)

உறவு தந்தைதாய் ஒண்டொடி மாதரார்
சிறுவர் வெண்பொனி செல்வம் பெருப்புகழ்
பிறவினும் படும் ஆசை பிரிந்தமெய்த்
துறவின் அல்லது துன்பம் அகலுமோ. (திருக்கூவப்புராணம்)

பற்று நீங்கினவனுக்கே துன்பம் நீங்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

342. பண்டேன் இளமைப் பருவத்தே சான்றார்மேற்
கொண்டார் துறவைக் குமரேசா—மண்டுகலம்
வேண்டினுண் டோகத் துறப்ப துறந்தபின்
ஈண்டியற் பால பல. (2)

இ.—ள்.

குமரேசா! சங்கரர் என் இளமைப் பருவத்தே துறவினை மேற் கொண்டார் எனின், துறந்தபின் ஈண்டு இயற்பால பல; அவை வேண்டின் உண்டாகத் துறக்க என்க.

ஈண்டு இயற்பால—இம்மையில் உளவாம் இயல்பினை யுடையன.

பின்னர் நெடுங் காலம் உளதாயிருக்கும்படி முன்னரே ஒருவன் துறக்கவேண்டும் என்பார் "உண்டாகத் துறக்க" என் றார். என்றது இளமையிலேயே பற்று நீங்குக என்பதாம்.

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் என்றபடி. இன்பம் வேண்டின் இளமையிலேயே துறவு கொள்க; துறவு அடைந்தபின் இங்கு எய்தும் முறைமையையுடைய நலங்கள் பல என்பதாம்.

துறவால் துன்பம் நீங்குமென்று மேலே கூறினார்; இதில் அஃது அளவின்பத்தை உளவாக்குமாதலால் இளமையிலே யே அதனை அடைக என்றார்.

பேரறிவுடையவர் இளமைப் பருவத்தே துறவினை அடை வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சங்கரா சாரியர்பால் உணரப்படும்.

கதை.

சங்கராசாரிய சுவாமிகள் இற்றைக்கு ஆயிரத்துத் தொளா யிரத்து எழுபது ஆண்டுகட்குமுன்னர்க் கேரளநாட்டிலே, காலடி என்னும் ஊரிலே, வேதியர்குலத்திலே சிவகுரு என்பவருக்குப் புதல்வராய்ச் சுசாவருடம் வைகாசிமதியில் அவதரித்தார். தாய் பெ யர் ஆரியாம்பாள். சிவ கலையாகிய இவர் இளமையிலேயே உயர் கலை பலவும் ஓதாதுணர்ந்தார். இவரது அழகும், அறிவும் குண நலங்களும் எவருடைய உள்ளங்களையும் கவருந் தன்மையன. இளைப் பருவத்தை இவர் எய்துமுன்னரே தந்தையார் காலம்

போயினர். உலகப் பொருள்களில் ஒரு பற்றும் இன்றி உயாக அறவொழுக்கத்தை இவர் கொண்டார். அதனைக் கண்டு தந்தை தமது அருமைத் தாய்க்கு இதம் பல கூறித் தனியே இருத்திவிட்டுப் பல இடங்கட்குச் சென்றார். அற்புதங்கள் பல அருளுடன் புரிந்தார். மிக வறுமையுற்றிருந்த அயாசிதர் என்னும் ஓர் அந்தணன் மனைவிபால் தாம் பிச்சையாக ஏற்ற ஒரு நெல்லிக்கனியின் பொருட்டு அவ் இல்லம் எங்கும் பொன் மாரி பெய்வித்தார். நெடுங்காலம் வருந்தியிருந்த சத்திய சந்தன் என்னும் ஓர் அரசனுக்குப் புத்திரப் பேற்றை அருளினர். பரதகண்டம் முழுவதுந் திரிந்து முனிவர் பலரைக் கண்டு இனியவுரைகளாடி மதங்கள் பலவற்றையும் மறுத்துத் தம் மதத்தையே அணிப்பற நிறுத்தினர். அரிய சுருதிப் பொருள்களைத் தமக்கு உறுதிப் பொருளென எவரும் எளிதில் உணருமாறு தெளிவுறத் திருத்தினர். பல்லாயிரவரைத் தம் சொல் வழி ஒழுக்கினர். பதுமபாதர், மண்டலி மிசிரர், ஆனந்தகிரி, அத்தாமலகர் என்னும் இந்நால்வரும் அன்புறு சீடராய் எப்பொழுதும் இவரை அணுகியிருந்தனர். சேதாரம், சதுர்தாதம், துவாரகை, பதரிகாச்சிரமம் முதலிய இடங்களில் தம் பெயரால் மடங்களை நிறுவித் தமது அருமைச் சீடர்களை அவைகளில் அமரச் செய்து மைசூர் நாட்டிலுள்ள ஒரு மலையின் சாரலில் ஓர் உயர்மடம் புதுக்கிக் கலிமகள் பிடத்தை அங்கு நிலைபெற அமைத்துத்தாம் நிலைபெற்றஇன்பத்தை மலைவறச் செய்தினர். அப்பதி இப்பொழுது சிருங்கேரி என்று வழங்கப்படுகின்றது. இவரது மத போதனை உலகமெங்கும் பரவியுள்ளது. "வேதாந்த சூரியன், வியாக்கியான வீரியன், அருங்கலை விநோதன், அந்தணர்சிந்தாமணி, பூமண்டல ஆசாரியன், புரையறு துறவினன்" என்று இவரை அனைவரும் புகழ்ந்தார். உலக குரு என்று உலகம் இன்றும் இவரைப் போற்றி வருகின்றது. இளமையில் துறந்தவர், அதனல் உளவாம் உயர் நலங்களை நெடுங்காலம் அடைவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சங்கர விசயத்தில் காண்க.)

காலமுண் டாகவே காதல்செய் தும்மின் கருதரிய
ஞாலமுண் டாமிறுதி நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டாரெனக்கள் பாண்டிப் பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றுன்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

துறந்தவனுக்கு இம்மையிலேயே பல தலங்களும் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

343. வெற்றிமிகு சீவகனேன் மேனியவெல் லாமொருங்கே
குற்றமென விட்டான் குமரேசா — முற்றும்
அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு. (ங)

இ—ள்.

குமரேசா! தான் கொண்டிருந்த செல்வ முழுவனை யும் என் சீவகன் ஒருங்கே துறந்தான் எனின், ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் என்க.

அடல்—கொல்லுதல், கெடுத்தல், சுடைமத்தல், பொருதல். ஐந்து என்றது மெய், வாய், கண், முதலிய ஐம்பொறிகளை.

ஐந்தன் புலத்தை அடல்வேண்டும்—ஐம்பொறிகள் வழியாக அடைகின்ற சுவை முதலிய ஐந்து புலன்களையும் அடுதல் வேண்டும். உலக இன்பங்களை நுகர்தற்காகத்தான் முன் விரும்பித் தொகுத்தவற்றை எல்லாம் அறவே துறக்கவேண்டுமென்பார் "வேண்டிய எல்லாம் ஒருங்குவிடல் வேண்டும்" என்றார்.

பொறிகளின் வாயிலாக அடைகின்ற ஐம்புல நுகர்ச்சிகளை யும் கெடுத்தல் வேண்டும்; அவற்றிற்காகத் தான் விரும்பித்தொகுத்திருந்த எல்லாவற்றையும் ஒருங்கே விடுத்தல் வேண்டும் என்பதாம்.

புல்லிய புலனுகர்ச்சிகள், எல்லையில்லாத அல்லல்களுக்கே காரணமாகுமாகலால் பிறவித்துன்பத்தை அறுக்க நின்ற துறவோர் அவற்றை அறவே முதலில் வெறுக்கவேண்டும் என்பதும் அவற்றிற்கு உரிமையாயிருந்த பொருள் முழுவதையும் ஒருங்கே துறக்கவேண்டும் என்பதும் கருத்து.

அடலும் விடலும், அகத்தும் புறத்தும் முறையே அமையும் என்க

அகத்தே பொறிகளை அடக்கிப் புறத்தே உள்ள பொருள்களை யெல்லாம் அறிந்தவர் அகலவிடுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீவகன்பால் உணரப்படும்.

கதை:

சீவகன் என்பவன் வமாங்கத நாட்டிலே இராசமாபுரியிலேயிருந்த சச்சந்தன் என்னும் அரசனுடைய அருமைத்திருமகன். அறிவும் அழகும் ஆண்மையும் வாய்ந்தவன். சிறந்த போர்வீரன். இளமையும் எழிலும் இயல்புற அமைந்த காந்கருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் தனது மனைவியர் எண்மரோடும் இனிதமர்ந்து எல்லா நலங்களையும் நன்கு நுகர்ந்து இன்பமுற்றிருக்குங்கால், ஒருநாள் அவரனைவரையும் உடன்கொண்டு அழகிய பூஞ்சோலை ஒன்றில் புகுந்து அதன் வளமெலாங்கண்டு மகிழ்ந்து முடிவில் ஒரு பலாமரத்தின் அடியில் தேவியர் சூழச்சிறந்து வீற்றிருந்தான். அவ்வமையம் ஓர் ஆண்குரங்குத் தான் கவர்ந்து கொணர்ந்த பலாப்பழத்தைப் பிதிர்த்துச் சுளைகளை யெடுத்துத் தன் காதல் மந்தியைக் கனிந்து தழுவி உண்ணும்படி உவந்து கொடுத்தது. உடனே அச்சோலையைக் காப்பவன் ஓடிவந்து அனைகளை ஓட்டிவிட்டு அக்கனியைக் கவர்ந்து தானே உண்டு களித்தான். அதனைக் கண்டிருந்த சீவகன் புலனுகர்வின் இழிவையும் அதனால் உயிர்களுக்கு விளையும் பழியையும், தெளிந்து தன் தந்தையைக்கொன்று கட்டியங்காரன் கவர்ந்த அரசை

தான் வென்று கொண்டதுபோல் கடுவனைக் கலக்கிக் காப்பான் கவர்ந்துவாழும் இவ் உலகவாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்து ஆருயிர்த்துணைவிகளையும், அரசுமுதலிய அரிய நலங்களையும் ஒருங்கே துறந்து அடவியில் புகுந்து அருந்தவம் புரிந்தான். மெய்யுணர்வுடையவர் ஐம்புலன்களையும் அட்டு வேண்டிய எல்லாம் ஒருங்கே விட்டுவிடுவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை முத்தியிலம்பகத்தில் காண்க.

இன்கனி சுவருமந்தி கடுவனே டுரியவாட்டி
நன்கனி சிலதனுண்ண நச்சுவேல் மன்னனேக்கி
என்பொடு மிடைந்தகாமம் இழிபொடு வெறுத்துநின்றான்
வுண்புடை வுரிவை கூட்டம் பிறனுணழுக் கண்டதொத்தே. (1)

கைப்பழம் இழந்தமந்தி கட்டியங் காரணைத்த
திப்பழந் தாரந்துகொண்ட சிலதனும் என்னவொத்தான்
இப்பழம் இன்றுபோகத் தின்பதே போலுமென்று
மெய்ப்படவுணர்வு தோன்றி மீட்டிது கூறினானே. (2)

வேட்டகமை யென்னும் காவிற் காமவெங் தேறன்மாந்தி
மாட்சி யொன்றுணுமின்றி மயங்கினேற் கிருளைநீங்கக்
காட்டினார் தேவராவர் கைவிளக்கதனை யென்று
தோட்டியால் தொடக்கப்பட்ட செச்சிமதக் களிற்றின் மீண்டான் (3)

இனைவ, மெய்புணர்வு தோன்றிய பொழுது சீவகன் சொன்னவை.

புலன்களை வுடுதலும் எல்லாவற்றையும் ஒருங்கே விடுதலுமே சிறந்த துறவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

ஓர்நாய் உடைமைக்கும் ஒங்குபுகழ்ப் பத்ரகிரி
கூர்நோவேன் கொண்டார் குமரேசா—தேரின்
இயல்பாகும் தோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்க்க. (சு)

இ.—ள்.

குமரேசா! ஒரு நாயைத் தனக்கு உடைமையாக வைத்திருந்த பத்திகிரியார் பின் என் அதனை மடைமை என்று கருதி வருந்தினர் எனின், ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும்; உடைமை மற்றும் பெயர்த்து மயல் ஆகும் என்க.

நோன்பு என்றது இங்கு அதனைச் செய்வார் மேல் நின்றது.

ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் — ஒரு பொருளும் இல்லாணமையே தவம் செய்வோர்க்கு இயல்பாகும்.

மற்றும் பெயர்த்து மயல் ஆகும்—மீண்டும் மறுபடியும் மயங்குதற்கு ஏதுவாகும்.

மெய்யுணர்வுடையவராய்த் துறந்து சென்றவர் எதேனும் ஒன்றை உடையவராயிருப்பின், அப்பற்று மறுபடியும் அவரை மயக்கத்தில் ஆழ்த்திவிடும் ஆதலால், "உடைமை மற்றும் பெயர்த்து மயலாகும்" என்றார்.

இன்மை, இயல்பாகும்; உடைமை, மயலாகும்; என்று காண்க.

முத்தியை எய்த விரும்புவார் தாம் பெற்றுள்ள பொருள் முழுதையும் முற்றும் விடவேண்டுமென்று மேலுரைத்து அங்ஙனம் விடுத்தால் ஒன்று உடையராயினும் ஆகாது அவர்க்கு நன்றாகாதென்று இதில் உணர்த்தினர் என்க.
இன்மையே தவமுயல்வார்க்கு நன்மையாம் என்பது கருத்து.

ஒரு பொருளும் இல்லாணமையே தவஞ் செய்வார்க்கு இயல்பாகும்; எதேனும் ஒன்று உடைமை அவர்க்கு மீண்டும் மயலாகுமென்பதாம்.

இவ்வுலகில் இன்மை இழிவையும் உடைமை உயர்வையும் மக்கட்கு அடைவிக்குமாயினும், பிறவா இன்பம் பெற விரும்பிய பெரியோர்பால் அம் முறை மாறி நிற்கும் என்க.

தவஞ்செய்பவர் யாதாயினும் ஒரு பொருளை உடையராயிருப்பின் அதனால் அவர்க்கு இழிவே வருமென்பது இதில் உணர்த்தப்பட்டது, இவ்வுண்மை பத்திகிரியார்பால் உணரப்படும்.

கதை.

பத்திரகிரியார் தாம் பெற்றிருந்த அரச செல்வ முழுதையும் முற்றும் துறந்து திருவாரூரை அடைந்து தனியான இடத்தில் அமர்ந்து தவப்புரிந்திருந்தார். இருக்குங்கால், ஒரு நாய் இவர்பால் நன்றியறிவோடு நடுவுகி யிருந்தது. உச்சிப்போதில் தாடை உண்டு மிகுந்த பிச்சைச் சோற்றை அதற்கும் இட்டு அன்பு செய்து வந்தார். தமக்குத் திருவாருள் புரிந்த ஞானமூர்த்தியா. கிய பட்டினத்தடிகளும் அதலத்தில் எழுந்தருளி யிருந்தார் அவர், இவரது உயர்ந்த அன்பை ஒழுங்க விருபபித் தம்பால் பிச்சைசந்தாந்த ஒரு யோக சித்தரை நோக்கி, "அதோ ஒரு சுமை சாரி இருப்பவரின் அவரைபாற் செல்க" என்று அருளி விடுத்தார். சித்தர் வந்து பத்திரகிரிபால் பிச்சை கேட்டார் என்பால் ஒன்றும் இலதே எனறு அவர்பால் அன்போடு சொன்னர். நீ பெரிய சமுசாரி எனறு அங்கிகாருவர் கூறி விடுப்ப யான் தேறி வந்தேன் என்று அப்மன் னு மாதவர் இன்னுரை பகர்ந்தார். எனை கையில் இருந்த ஓர்பம், நாயுட, அவ்வளவே என்னை இவ்வளவு எண் ணும்படி. செய்தனை கூறு வருந்தி, அவ் இரண்டையும் ஒருங்கே ஒழித்தார். ஒன்றும் இன்னைமேய தூறவோர்க்கு நன்று என்று அடிகள் கூட்டிக்காட்டியதை அவர் அறிந்து தெளிந்தார். துறந்திருந் தும் ஒரு நாயின் உடைமையால் தாம் அடைந்த இழிவினை என்னி இரங்கினர். துறவோர்க்கு உடைமை மடைமையாம் என பதை இவர் அன்று உலகறிய உணர்த்தினர். (இனிவை இவர் சரி தையில் காண்க)

மன்னவியர் மக்களில் வாஞ்சை யுண்மையே
பன்னுகரு நல்வினையும் போக்கித் தாழ்த்திடும்
மன்னவியர் மக்களில் வாஞ்சையின்மையே
பன்னுதரு பாகதி பொருந்த உய்த்குமே. (காசிராகசியம்).

மன்றும் இன்மையே துறவோர்க்கு நன்று என்பது இதனால் கூறப்பட்டது.

345 பூவலீனயும் பொற்கலனும் போக்கியுயர் பட்டனைத்தாம்
கோவணமென் கொண்டார் குமரேசா—பூவுலகில்
மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்புக் மிகை.

இ—ள்.

குமரேசா! பூவலீனயையும், பொற்கலன்களையும் துறந்து பட்டினைத்தார் என் கோவணம் கொண்டார் எனின், பிறப்பு அறுக்கல் உற்றார்த்து உடம்பும் மிகை; ஆன பின் மற்றும் தொடர்ப்பாடு என் கொல் என்க

பிறப்பு அறுக்கல் உற்றார்—பிறவியை நீக்க நின்ற துறவோர். உடம்பின் உரிமைச் சிறப்பை உம்மை உணர்த்தி நின்றது. மற்றும் தொடர்ப்பாடு என்றது மனைவி, மக்கள், தாயினர், ஒக்கல் இல்லம் முதலிய வேறு சில புறப்பொருள்களை. பிறப்பினை அந்த புறப்பொருள்கள் எல்லாவற்றையுந் துறந்து பேரின்பத்தை எய்தற்கு விளைந்தெழுகின்ற தூய உயிர்க்கு, வினையுள்ள அளவும் விடாது நிற்கும் உடம்பு தடையாயிருக்குமாதலால் அது மிகையாயிற்று என்க. உற்றார்க்கு மிகை என்று உணர்க.

பிறவியை அறுக்க நின்ற துறவிகட்கு தம் உடம்பே மிகையாகத் தோன்றும் என்னின், வேறு பொருள்கள் அவர்க்கு என் ஆம் என்பதாம். வெறுத்து நீக்குவர் என்பதை வினை குறித்து நின்றது.

இனி, தம் உடம்பையே மிகை என்று கருதவேண்டிய துறவிகள் பற்றுஞ் சில பற்றுக்களை உற்று நிற்பது என்ன படன் வருமோ எனவும் இது பொருள்படும்.

எல்லாப் பொருள்களையுந் துறந்து, உடம்பையும் மிகை என துறவோர் கருதுவார் என்பது இதில் உணர்த்தப்பட இவ் உண்மை பட்டினத்தார்பால் உணரப்படும்.

கதை.

அரசரும் விரும்பத்தக்க பெருந் திரு உடையராய் எல்லா நலங்களையும் இனிது நுகர்ந்திருந்த பட்டினத்தார், உலகப் பொருள்கள் ஒன்றும் நிலையா என்னும் உண்மை உணர்வு உதித்த உடனே தாம் பெற்றிருந்த எல்லாப் பொருள்களையும் முற்றத் துறந்து பற்றற்று நின்றார். தனியிடம் ஒன்றில் இனிதுற அமர்ந் தது அடிகள் ஒருநாள் அகமகிழ்ந்திருந்தார். பண்டு இவரோடு பழகியிருந்த அரசனொருவன் கண்டு அருகில் வந்து நின்று பூவணையையும், பொற்கலன்களையும் ஒழித்துவிட்டு ஒன்றும் இல்லா தவராய் ஒடுங்கியிருக்கும் நீர் இதனால் என்ன பயன் கண்டீர் என்று இரங்கிக் கேட்டான். "எல்லாமுடைய நீ நின்று செல்லலும், ஒன்றுமில்லாத நான் இருந்து கேட்கவும் எற்றைநாள் பயனை யான் இன்று கண்டேன் இனி எல்லாங்காண்பேன்." என்று இவர் எதிர்மொழி தந்தார். அடிகளது அகத்துறவையும், அருட் பெருக்கையும் அரசன் அறிந்து அகமகிழ்ந்தகன்றான். அடிகள் பல இடங்களிலுந் திரிந்து முடிவில் திரு ஏற்றியூரை அடைந்து தாம் உற்றிருக்கும் உடம்பு நீங்கு வரையும் பொறுத்திராமல் அதனுடனே சமாதியில் அடங்கி மறைந்தார். துறவோர் தம் உடம்பையும் பிணமென்று கருதி வீட்டினை அடைய விரைவர் என்பதை உலகம் இவர்பால் அமையக் கண்டது. விரிவை இவர் புராணத்தில் காண்க.

என்பினை நரம்பிற் பின்னிக் குடர்வழும் பிறைச்சி மெத்தித்
புன்புழுப் பொதிந்து செஞ்சீர்ப் புண்ணைசும் பொழுகி நாறித்
துன்பமோய் எலற்றினுக்கும் உறையுளாய்ப் புறந்தோல் மூடும்
வன்புலை யுடம்பே ஆவி வருத்திநிம் பிணிமேவற்கில்லை.

(காஞ்சிப்புராணம்).

நாயினுக் கிரையோ நரியினுக் கிரையோ நகுநனைக்குழிவிழிப்
பிறழ்டற்
பேயினுக் கிரையோ கழுகினுக்கிரையோ பெரிது காரியபுழுக்
குரம்பை

ஈயினுக் கினரேயோ யாதினுக் கினரேயோ யான் சுமந்தமுன்னிடப்
பணித்தாய்
தாயினுக்கழகோ சேயினைவருத்தல் சாற்றிடா இளைசவா
னவனே. (இளைசயந்தாதி).

இருப்பது பொய் போவது மெய் என்றெண்ணு நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன்னேத—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் போய்தழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான். (1)

மண்ணுக் கணைலாற வொணும் புனையாற
எண்ணரிய தாயும் இளைப்பாறப்—பண்ணுமயன்
னையாற வும்அடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா திருவையாற். (பட்டினத்தார்.) (2)

ஐயாறனிடத்தில் ஐவகை ஆறுதலை மேண்டிய அடிகளது புலமை நயத்தையும், உடம்பையும் பிணைகளென்றெண்ணிய தறுவின் திறத்தையும், இவற்றில் உய்த்துணர்க.

உற்ற உடம்பினும் தூறேவார் பற்றலையா எனபது இதனல் கூறப்பட்டது.

346 ஏமே அயனுலகும் எண்ணர்ச் சரபங்கர்
கோனுலகே புக்கார் குமரேசா—நானைமுற
யாவினை தென்னுஞ் செருக்கறுப்பான் வாளேர்க்
கூயர்ந்த வுலகம் புகும். (கூ)

இ—ள்.

குமரேசா! சரபங்கர் அயனுலகத்தையும் தள்ளி என் அதனினும் உயர்ந்ததின் கண்ணே புகுந்தார் எனின், யான் என் து என்னும் செருக்கை அறுப்பான், வாளேர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்க.

செறுக்கு அறுப்பான்—மயக்கத்தை ஒழிப்பவன்.

வானோர்க்கு உயர்ந்த உலகம் என்றது, முத்தி உலகத்தை. யான் எனது என்னும் செருக்கு என்பது ஊன உடம்பைத் தான் என்றும், ஒரியும் பொருளோத்தன்னுடையது என்றும் கருதிக் களிக்கும் மயக்கத்தை. அதனை அறுத்தலாவது நிலையாமையாகிய அவற்றின் இயல்பினையுணர்ந்து அவற்றின் மேல் வைத்துள்ள பற்றுக்களை அறவே ஒழித்தல். அவை அகப்பற்று எனவும், புறப்பற்று எனவும் உரைக்கப்படும். அறுப்பான் புகும் என்று கொண்க.

யான் எனது என்னும் மயக்கத்தை அறுத்தவன், வானவர் கருதும் அனைத்தாகிய முத்தியுலகத்தை அடைவான் என்பதாம்.

எல்லா உலகங்களினும் மேம்பட்டுள்ள வீட்டுலகத்தை ஒருவன் அடையவேண்டுமாயின் அவன் இவ் உலகப்பற்றுக்களை அறவே ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு.

அகம் புறம் என்னும் இருவகைப் பற்றுக்களையும் விட்டவர் இந்திரன் முதலிய இமையவர் பதங்களையும் எய்தாமல் அந்த மில்லின்பத்து அழிவில் வீட்டையே எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சரபங்கர்பால் உணரப்படும்.

கதை.

சரபங்கர் என்பவர் இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தண்டக வனத்தில் இருந்த ஓர் அருந்தவர். மன்மத னுடைய சரத்தைப் பங்கஞ் செய்தமையால் இவர் சரபங்கர் எனப்பெற்றார். சரம்—அம்பு. இதனால் இவரது புலனடக்கம் எவர்க்கும் இனிது புலனும். காமம், வெகுளி என்னும் தீமையினில் லாத நூய்மையுடையவர் என்று இவரை அமரரும் போற்றினர். பிரமா இவரது மனப்பண்பை வியந்து தன் உலகத்துக்கு அழைத்துவருப்படி இந்திரனை விடுத்தார். இந்திரன் வந்தான். அவன் கருத்தை உணர்த்தி அழைத்தான். அங்கு வருவதில்லை யென்று மறுத்து இராமபிரானதுவரவையே இவர் எதிர்நோக்கியிருந்தார். முனிவரது பற்றற்ற தன்மையைப் புகழ்ந்து அமரர் தலைவனும் அகன்றான். அதன்பின் இராமர் மனைவியோடும், தம்பியோடும்,

ஆங்கு எய்தக் கண்டார். அவரைக் கண்ட அளவில் இவருக்கு உண்டான உவகைக்கு அளவேயில்லை. அவரும் புகழ்ந்து இவரது தவச்சாலையில் அன்று தங்கியிருந்தார். நிலைபேறுடைய உயிர், நிலையில்லாத உடம்போடு கூடியிருந்து தன் வினைப்பயன்களை நுகர்ந்து முடிவில் அதனை விட்டுப் பிரிந்து போய்விடும் என்றும், அதனை யான் எனக் கருதித் தான் முடையவர்க்கு எனமாம். என்றும், வந்தவர் வாழ்த்தினும் வசையுரைக்கினும், சந்தனம் பூசினும் தசையைக் கொய்யினும் முந்துறு வினையினல் முன்டதாமெனச் சிந்தையில் தெளிந்து சினத்தைத் துறந்தவனே தவத்திற் சிறந்தவன் என்றும், துறவொழுக்கங்கள் பலவற்றையுங் குறித்து அவ்விரவு முழுவதும் இராகுவீரனுடன் இவர் உரையாடி மகிழ்ந்தார். விடிந்தவுடன் தன் மனைவியுடன் தெருப்பில் பாய்ந்து மேலான வீடுபேறடைந்தை எய்திறர். யான் எனது என்னும் செருக்கை ஒழித்தவர் வானோர்க்கும் உயர்ந்த உலகின்கண் மேன புகுவர் என்பதை உலகமே இவர்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

சிறுகாலை யிலை நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம் வேறுபடா
உறுகால் கிளர் பூதமெலா முகிலும்
மறுகா தெறி யெய்துவன் வானுடையாய்

இஃது, அயனுலகம் வருக என்று அமரர்கோன் அழைத்த பொழுது சரட்ங்கர் மொழ்லியது. நித்தியவுலகின் இயல்புகளையும் தத்துவ ஞானிகளது சுத்த நிலைகளையும் இதில் உய்த்து உணர்க.

இருவகைப் பற்றுக்களையும் விட்டவரே இன்ப வீட்டினை எய்துவரென்பது இதனுல் கூறப்பட்டது.

---

347 பண்டு சுவுபரியும் பற்றொன்று பற்றியதால்
கொண்டாரேன் துன்பம் குமரேசா—வண்டியென்றும்
பற்றி விடாது இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாது தவர்க்கு. (எ)

இ—ள்:

குமரேசா! சுவுபரி என்பவர் ப்ற்று ஒன்று பற்றியதால், என் தண்டம் உற்றார் எனின், பற்றினைப் பற்றி விடாதவர்க்கு இடும்பைகள் பற்றி விடா எண்க. பற்றுதல்—இறுகப்பிடித்தல்.

விடாதவர்க்கு—விடாதவனை. குவ்வுருபு இதில் ஐயுருபாகத் கொள்ளப்பட்டது. யாதன் உருபிற் கூறினும் பொருள் செல்லும் வழியே உருபு செல்லும் எண்க. விடாதவனை விடா என்று காண்க.

பிறவித் துன்பம் தன்னைப்பற்றுதொழிய ஒருவன் விரும்புவனேயின் தான் பற்றி நிற்கும் உலக இச்சைகளை அவன் ஒருங்கே ஒழித்துவிடவேண்டுமெனபது கருத்து.

பற்றுக்களைப் பற்றி விடாதவர்களைத் துன்பங்களும் பற்றி விடா என்பதாம்.

இருவகைப் பற்றையும் அறவே விடுத்தவர் ஈரிடின்பத்தை எய்துவர் என்று மேலே கூறினர். அவற்றை விடவில்லையாயின் என்னை என்பதனை நோக்கி விடாதவனைத் துன்பங்கள் விடா எனறு இதில் உணர்த்தினர் என்க.

தனக்கு இன்பந் தருமென்று கருதி உலகப் பொருள்கள் மேல் ஒருவன் பெருங் காதல் கொள்வனேயின், அம்மை அளவில் லாத பிறவித் துன்பங்களை என்றும் அவனுக்கு உளவாக்கும் ஆதலால் "பற்றினை விடாதவனை இடும்பைகள் விடா" என்றார்.

பற்றினையுடையவர் துன்பங்களை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சுவுபரிபால் உணரப்படும்.

கதை.

சுவுபரி என்பவர் வேதமித்திரர் என்னும் ஓர் அந்தணருடைய புதல்வர். இவர் மனோமணி என்னும் கன்னியை மணந்து இல்லுறைந்திருந்து இன்புற்று வாழ்ந்து பின் நிலையாமையை அஞ்சி

கெடுந் துறவடைந்தார். தவநலத்தால் பலநலங்களையும் எய்தினவ ரிவர், ஒருநாள் யமுனை நதியையடைகிறார். அதன் அகன் கரை மணற்பரப்பில் உலாவினர். அதில் நிரண்டு பிள்ளைகள் [illegible] பார்த்தார்கிற்பாலைகையும், பாலகுஞ்சுகள் அவற்றை [illegible] கோர் பணிமலர்ச் சோலையில் அன்றிலொன்று தன் பேடையை பருவி ஆரா அன்போடு அணைந்து நிற்பதையும் அமைந்து கண்டார். மையல் கொண்டார். தாமும் அவ்வாறே பெண் இன்பம் பெற எண்ணி விரைந்தார். உற்ற துறவை ஒழித்துவிட்டுப் பற்றுடன் சென்றார். மாந்தாதாவின் புதல்வியர் பலரைத் தம் மதி நலத்தால் மணந்தார். அமைந்த இன்பத்தை அவர்பால் அமர்ந்து துய்த்தார். தாம் அடைந்த காதலால் இம்பைகள் பல தம்மை அடையக் கண்டார். பற்றே பிறவித் துன்பங்கட்குக் காரணம் என்பதைத் தாம் உற்றறிந்தார். அதன்பின் உற்ற பற்றையெல் லாம் முற்றும் ஒழித்துவிட்டு உண்மைப் பொருளையே நாடி உயர் தவஞ் செயதார். பற்று நீங்கினவர்க்கே துன்பம் நீங்கும் என்ப தையும் அதனை விடாதவரைத் துன்பங்கள் விடா என்பதையும் உலகினுக்கு இவர் உணர்த்தி நின்றார். விரிவைப் பாகவதத்தில் உணர்க.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர்க் குறுவது அறிகென் றருளி. (மணிமேகலை)

பற்று நீங்காதவர்க்குத் துன்பங்கள் நீங்கா என்பது இதனால் கூறப்பட்டது.

---

348 சிற்றம் பலம்முத்தி சேர்ந்தார் சிவசருமர்
குற்றமுற்றார் என்னே குமரேசா—முற்றத்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
யலைப்பட்டார் மற்றை யவர். (அ)

இ—ள்.

குமரேசா! சிற்றம்பல நாடிகள் முத்தியை அடைந்தார் சிவசருமர் வன் குற்றம் பொருந்தி நின்றார் எனின், தீரத் துறந்தார் தலைப்பட்டார், மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் என்க.

தலைப்படுதல்—கூடுதல், அடைதல். தீரத்துறந்தார்—முற்றத் துறந்தவர். தலைப்பட்டார்—முத்தியை அடைந்தார். மற்றையவர் என்றது உலகப் பற்றுக்களை ஒழியாதவரை. வலை என்றது சண்டிப் பிறப்பினை. தம்மிரும்பியாங்கு உரிமையோடு திரிய ஓட்டாது விலங்குகளையும் பறவைகளையும் தன்னகப்படுத்தி இன்னல் தருகின்ற வலைபோல், தமக்கு இயல்பான உயர்நிலை எய்திப் பேரின்பத்தினை நுகர ஓட்டாதபடி உயிர்களைப் பிணித்து வருத்தலின் பிறபடு வலை எனப்பட்டது. இம்மை உருவாகும். தலைப்பட்டார் என்று இறந்த காலத்தாற் கூறியது விரைவும் தெளிவும் பற்றி எனை.

முற்றத்துறந்தார் முத்தியை அடைந்தார்; அங்ஙனம் துற வாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையில் அகப்பட்டார் என்பதாம்.

மேல், பற்று விடாதவனைத் துன்பம் விடாது என்றார்; அதனை விட்டவரது உயர்வையும், விடாதவரது இழிவையும் இதில் விளங்க உணர்த்தினர்.

பற்றறத் துறந்தவர் யீட்டினைப் பொருந்தி மெய்யின்புறுவர் என்பதும் அங்ஙனம துறவாதவர் பிறவியிற் சிக்கிப் பெருந்துன்ப மடைவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ் உண்மை சிற்றம்பல நாடிகள் பாலும், சிவசருமர் கண்ணும் தெளியப்படும்

கதை.

சிற்றம்பல நாடிகள் என்பவர் சற்றேறக்குறைய இற்றைக்கு அறுநூற்று இருபது ஆண்டுகட்கு முன்னர்த தென்னாட்டுச் சோழ நாட்டில் தோன்றியிருந்தவர். கருவி நூல்களையும், அறிவு நூல்களையும் கசடறக் கற்றவர். நல்ல சிலமுள்ளவர். தம்மரபில் இருந்த ஒரு

சிறந்த இளம் பெண் இறந்துபோயினள். அதனைச் சுடுதற்கு உறவினரோடு முறைப்படி இவர் உடன் சென்றிருந்தார். அங்குச் சிதறிக் கிடந்த பல எலும்புகளையும் பிரித்து ஒருசார் எத்தனை நன்மக்கள் இங்கு எரிந்து மறைந்தனரோ எனப் பல நொந்தார். இவ் உலக நிலையினை எண்ணி வைந்தார்.

கவித்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
சற்றிளம் பெண்டிர் ஏற்றுப் பாலர்
முதியோர் எனைவர் இளையோர் எண்ணர்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப இவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக்கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ.

என்னும் இவ் அருமைப் பகுதியை நினைந்துநினைந்து நெடுமூச்செறிந்தார். அன்றுமுதல் உலகப் பொருள்களில் ஒரு பற்றுமின்றி உண்மையை நாடி ஏங்கியிருந்தார் இவரது மதிநலத்தைக் கண்டு பலர் தூறவிகளாகி இவரை அணுகியிருந்தார். முற்றத் துறந்த இவரைத் தம் இல்லிற்கு எழுந்தருளச்செய்து ஓன்பர் விருந்து செய்தார் அடியவர்களோடு அடிகளிருந்து அருந்திங்காவ அவசரத்தில் அறியாமல் அவ் அன்பர் அங்கிருந்த வேப்ப எண் ணெயை நெய்யென எடுத்து இலைதாறிட்டு விடுத்தார் தூத் துறந்த இவர், யாதுங்கூறாது அமைதியோடுண்டார். பிறரும் அவ் வாறே உண்ணச் சிவசருமர் என்பவர் மாத்திரம் 'இது வேம்பின் எண்ணெய் மிகவும் கசக்கின்றது'' என்று சிவருக்குரைத்தார். அடிகள் அவரது பற்று அறுத்தன்மைக்கு இரங்கி அவரைத் தனியே பிரித்துவிட்டு இனிதே சென்று சிலகாலந் தங்கியிருந்து தன்னைப் பின்பற்றிவந்தவர்களோடு ஒருங்கே சமாதியாய் உயர்பதம் அடைந்தார். சிவசருமர் பற்றறுமையால் இறந்து பிறந்து பின்வருந்தியுழன்றார். முற்றத் துறந்தவர் முத்தியை அடைவர் என்பதையும், அங்ஙனம் துறவாதவர், பிறவியில் பற்றர் என்பதையும் உல

கும் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. (விரிவைச் சிவப்பிரகாசத்தில் உணர்க).

முற்றத் துறந்தவரே முத்தியை எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

349 உற்றபற்றை முற்றும் ஒழித்தமணி மேகலையேன்
குற்றமில்லீ டுற்றுள்ளாய் சுமதேசா—உற்றுநின்ற
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். (கூ)

இ.—ள்.

சுமதேசா! பற்றுக்கள் முற்றும் விட்ட மணிமேகலை என் வீட்டின்பக்கத்தைப் பற்றினாள் எனின், பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் என்க.

பற்று என்றது உடம்பின் கண்ணும், பொருள்கள் மேலும், வைத்துள்ள இச்சையை. பற்றெனப்படுவது பசை இய அறிவே என்றதற்கு காண்க. மற்று என்றது அறுதல் என்னும் வினை ஈற்று மறுதலையாய் நின்றது. நிலையாமை என்றது பிறப்பினை.

மற்று நிலையாமை காணப்படும்—பற்று அறுதலொழுகு பிற வியே காணப்படும். இருவகை அறுதல்களும் ஒருங்கே நிகழும் என்பதை எகாரம் உணர்த்தி நின்றது. இரவு நீங்கியபொழுதே இருள் நீங்குவது போல், பற்று நீங்கியபொழுதே பிறவி நீங்கி விடும் என்க. பற்றே பிறப்புக்குக் காரணம் என்பது கருத்து.

இருவகைப் பற்றும் ஒருவனுக்கு அற்றபொழுதே அவன் அவன் பிறப்பினை அறுக்கும்; அவை அறுதலொழுகு அழிவுறும் பிறப்பே அவனுக்குக் காணப்படும் என்பதாம்.

அறும் எனற்பாலது அறுக்கும் என எதுவின்மேல் நின்றது. ஒருவன், இருவகைப் பற்றையும் அறவே விடுவனையின், அவன் பிறவியினின்று விடுபட்டு வீட்டினை அடைவான் எனபதுகருத்து.

பற்றுண்மையே பிறவிக்குக் காரணம் என்பதும். அஃது இல்லாதவர்க்குப் பிறப்பு இல்லை என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ் உண்மை மணிமேகலைபால் உணரப்படும்.

கதை.

மணிமேகலை என்பவள் கோவலனுக்கு மாதவியிடம் பிறந்தவள். அழகு நிரம்பிய விழுமிய உருவினள். மணிமேகலை என்னும் காப்பியத்தின் தலைவி. சிறந்த கல்வியும், திருந்திய சிலமும் பொருந்தப் பெற்றவள். இளமையிலேயே மெய்யுணர்வுடையவளாய் உலக இன்பங்களை நீத்தே னெறுத்தாள். தனது கட்டழகைக் கண்டு காமுற்று நின்ற உதய குமரனுக்கு மெய்யுணர்வு உதயமாகுமாறு பல இத மொழிகளை இனிது கூறினாள். தன் பாட்டியாகிய சித்திராபதி என்பவள் உலக இன்பங்களில் தன்னை உட்படுத்தப் பல வகை முயன்றும் ஒன்றினும் மயங்காது உணர்வுடன் சென்றாள். ஓடுங்கியிருந்து அருந்தவம் புரிந்தாள். அதன் பயனைத் தனது பழம் பிறப்பையும் உணர்ந்து தெளிந்தாள். முற் பிறப்பில் தனக்குக் கணவனாயிருந்தவனும், இப்பிறப்பில்தன் மீது பெருங் காதலால் வருந்துபவனுமாகிய உதயகுமரன் ஒருநாள் இவளை அழுகி உன் இளமைக்கும், பேரழகுக்கும் சிறிதும் இயல்பில்லாத கடுந் துறவை நீ ஏன் கொண்டாய் எனறு இரங்கி வினவினன். உடனே அவனை இவள், உவந்து நோக்கினாள்.

பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க கல்லறம் விரும்புதல் புரிந்தேன். என்றும்,

வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கைக்
பற்றின் பற்றிடம் குற்றக்கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலைக் கையாறழுங்கல்

திவளா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய். என்றும்,

அவன் உணர்வுற ஓதி உணர்த்தினள். பல்வேறிடங்கட்குஞ் சென்று தன் கல்வி நலத்தால் எல்லா மதத்தினரையும் எதிர்த்துரையாடிப் பற்று அற்றவர்க்கே பிறவியறும என்னும் உண்மையை அனைவரும் ஒப்ப உணர்த்தித் துறவு நிலை நின்று தான் வழுவாதோழுகிப் பிறவா இன்பம் பெற்று மகிழ்ந்தாள். பற்று அற்றவர்க்குப் பிறப்பு அறும் என்பதை உலகம் இவள்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை மணிமேகலையில் காண்க.

அற்றது பற்றெனில், உற்றது வீடியிர்
செற்றது மன்னுயிர், அற்றிறை பற்றே. (திருவாய்மொழி)

பற்று நீங்கினவர்க்கே பிறவி நீங்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

350 பற்றகன்ற காரைக்காற் பத்தினியேன் பற்றிங்ஙனூர்
குற்றமற்றான் பற்றைக் குமரேசா—முற்றுகப்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (ய)

குமரேசா! எல்லாப் பற்றுக்களையும்விட்ட காரைக்கால் அம்மையார் என் இறைவன் தாளைப்பற்றி நின்றார் எனின், பற்று அற்றான் பற்றினைப் பற்றுக; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு என்க.

பற்று அற்றான் என்றது இறைவனை. பற்று—ஆசை, அன்பு தொடர்ச்சி, பிடித்தல் முதலியவற்றை உணர்த்தி நிற்கும்.

பற்று என்றது இங்கு அவ் இறைவன் அருளிய ஞானநெறியை. பற்றுக—பற்றிக்கொள்க. என்றது தியானம்செய்தலை.

ஒருவன் பற்று விடவேண்டுமாயின் பற்றற்றான் பற்றினையே அவன் விடாது பற்றவேண்டுமென்பது கருத்து.

இயல்பாகவே பற்று அற்று விளங்கும் இறைவனது அருளியல்களைப் பற்றிக்கொள்க; விடாது வந்த உனது பற்று விடுதற்குக் கெடாது நின்ற அவற்றையே விடாது பற்றுக என்பதாம்.

மேல், பற்று அற்ற கண்ணே பிறப்பு அறும் என்றார்; அப் பற்று அறுதற்குப் பற்றுக்கோடாகப் பற்றவேண்டியது இன்னது என்பதை இதில் இனிது உணர்த்தினர்.

எல்லாப் பற்றுக்களையும் விட்டவர் இறைவனருளையே பற்றி நின்று ஈறில் இன்பம் எய்துவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை காரைக்கால் அம்மையால் காணப்படும்.

கதை.

காரைக்கால் அம்மை என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்க் காரைக்கால் என்னும் ஊரினிருந்த தனதத்தன் என்னும் வணிகர் தலைவனுடைய அருமைத் திருமகள். புனிதவதி என்று பெயரிட்டு இந்த அம்மையைப் போற்றிவளர்த்தார். பருவமெய்தியபின் நாகபட்டினத்திலிருந்த பரமதத்தன் என்னும் வணிகனுக்கு மணம்புரிவித்து இந்த அம்மை போகும் மகனுமகளையும் தம் நகரிலேயே அடர்ந்து வாழும்படி பெற்றோர் பணித்தார். இருவரும் பகிழ்ந்து வாழ்ந்து வருங்கால், பரமதத்தன் இரண்டு மாங்கனிகளைக் கொணர்ந்து மனைவிபால் தந்தான். அம்மை பெற்று வைத்திருக்குங்கால் ஓர் அடியவர் வந்தார். உணவோடு ஒரு கனியை உண்ண உதவினர். பின்னர்த் துணைவன் வந்து உணவுகொள்ளுங்கால் ஒன்றை அரிந்து உணவுடன் வைத்தார். அவன் உண்டபின் இனனும் ஒன்று கொண்டுவா என்றான். அம்மை உளங்கலங்கி என் செய்வேன் என்று வருந்தி நிற்கையில் கண்கையில் ஒரு பழம் திருவருளால் பொருந்தி நின்றது. இறைவனருளை வியந்து அதனையும் இட்டார். காயதன்உண்டான். அழுதினும் இனித்து இனியசுவையினையுடையது, யான் தந்தவற்றுள் ஒன்று அன்று; இதன்உண்மை யாது என்றான். அம்மை அஞ்சி உண்மை உரைத்தார்; அவன் மீண்டுந் தெளிந்து அம்மையாரது மாண்பினைவியந்து அதுமுதல் அவளை மனைவியாகக் கொள்ளாது மேவிருந்தினையே மணந்து விளங்கி

வாழ்ந்தான்; அவ் உண்மையை உணர்ந்த அம்மையார் எல்லாப் பற்றுக்களையும் அறவே விட்டு இறைவன் அருளையேபற்றி நின்று பெரியோர்களை முறைப்படி சென்று வணங்கி அவர்களால் பரமனது திருநடனங்களைக் கண்டு அவனை அழகிய திருவாயால் "அம்மையே" என்று அழைத்தப்பெற்று முடிவில்லாத முத்தியில் அடைந்தார். அவர் பற்றை யறுக்கிய பற்றி நின்று தம் பற்றை முற்றும் அற்றார். எல்லாப்பற்றுக்களையும் விடுத்து இறைவனருளையே பற்றி நின்று பெரியோர் பேரின்புறுவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

பரனது அருளையே துறவொர் பற்றி நிற்கவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

நீர்நுமது என்றினைவ சேர்முதல் மாய்த்தினைற
சேர்மின் உயிர்க்கது தேர்நிறை யில்லே. (திருவாய்மொழி)
மோகவற்சுரா பிக்கொடி முளைத்தெழு மூலம்
சோகமாசுணம் இருந்தர சாள்வதோர் சூழல்
ஆகமேழுதல் யானென தென்னு மஞ்ஞானம்
ஏகமாகிய பராப்பரன் தோன்றினை லிறக்கும்.

(ஞானவாசிட்டம்).

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

எவ்வளவுக்கு எவ்வளவு உலகப்பொருள்களில் ஒருவன் பற்று நீங்குகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவனுக்குத் துன்பங்கள் இலவாம். அறிவுடையவர் இளமையிலேயே துறவினை யுடையவர். புலன்களை யடுத்தலும் எல்லாப் பொருள்களையும் ஒருங்கே விடுத்தலுமே சிறந்த துறவாம். ஒரு பொருளும் இல்லாமையே துறவோர்க்குப் பெருநலமாகும். உற்ற உடம்பினையும துறவோர் பற்றினை லையார். இருவகைப்பற்றும் இல்லாதவரே இவ்வுலகினை யெய்தி மகிழுவர், பற்று நீங்காதவர்க்குத் துன்பங்கள் நீங்கா. முற்றத்துறந்தவரே முத்தியை அடைவர். பற்றுஅற்றபொழுதே ஒருவன் பிறப்பும் அறுபடும். பரனது அருள் நினைவையே துறவோர் பற்றவேண்டும்.

35-வது துறவு முற்றிற்று.

36-ம் அதிகாரம் மெய்புணர்தல்.

அஃதாவது மெய்ப்பொருளியல்பை மெய்யாக உணர்தல். ஐயமும், மயக்கமும் கலந்த அறிவு பொய்புணர்வு ஆகலால் இது மெய்யுணர்வு என நின்றது. இதனைத் தத்துவ ஞானமென்பர். தத்துவம்—உண்மை. பொய்ப் பொருளைத் துறந்து மெய்ப் பொருளைப் பற்றி நிற்கும் மேலோரது தூய உள்ளத்திதான் இம்மெய்புணர்வு தோன்றுமாதலால் துறவின் பின் இது வைக்கப் பட்டது.

---

351. தண்டார்ச் சுலபனுத் தக்கனுத் புன்பிறப்பே
கொண்டார் மருளால் குமரேசா—கண்ட
பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளாணும் மாணாப் பிறப்பு. (க)

இ—ள்.

குமரேசா! சுலபன், தக்கன் என்பவர் என் தமது மயக்கவுணர்வால் இழி பிறப்பை எய்தினர் எனின், பொருள் அல்ல வற்றைப் பொருள் என்று உணரும் மருளான் மாணாப் பிறப்பு உளதாம் என்க.

மருள்—மயக்கம். மாணாப் பிறப்பு—மாண்பு இல்லாத பிறப்பு. மாணை என்றது பிறப்பின் அல்லல் இயல்பினைப் பொதுவாக உணர்த்தி நின்றது.

பொருள் அல்லாதவைகளைப் பொருள் என்று உணருகின்ற மயக்கத்தினாலே இன்பமில்லாத பிறப்பே உளதாம் என்பதாம்.

மெய்ப் பொருள், பொய்ப் பொருள் எனப் பொருள் இரு வகைப்படும். நித்தப் பொருளாகிய பரம்பொருளல்லாத பற்றப் பொருள்களெல்லாம் பொய்ப் பொருள்களேயாம் அவற்றை அன்னவாறு உணராது உறுதிப் பொருளாகவே கருதி மயங்

குவார் தன்பம் பிறப்பையே தோய்த்து தியங்குவர் என்பது கருத்து. பொருள்களின் உண்மையை உள்ளவாறு உணர்கின்ற தெருளுணர்வால் பிறவி நீங்கிவிடும் என்பது குறிப்பு. இவ்வுணர்வை வடநூலார் நித்தியாநித்யவத்துவிவேகம் என்பர்.

எத்துணைச் சிறந்தவராயினும் விபரீத உணர்வினையுடையவர் பிறப்பிற்கு அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சுலபன் கண்ணும், தக்கன்பாலும் உணரப்படும்.

கதை. 1.

சுலபன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் அவந்தி நாட்டை ஆண்டுவந்த ஒரு வேந்தன். பல கலைகளிலும் நல்ல பயிற்சியுள்ளவன். அழகும் ஆண்மையும் அமையப் பெற்றவன். அருங் குணங்களும் பெருஞ் சுற்றமும் ஒருங்கமைந்த சுலபை என்னும் ஓரழகியை மணந்து ஆள அவளோடமைந்து வாழ்ந்தான். உலக இன்பங்களையே நிலை என்று கருதினான். மறுமை நலங்களையும் இருவினைப் பயன்களையும் மதியாதிகழ்ந்தான். தனது கல்வியறிவினாற்றலையும் அல் வழியிற் செலுத்தி இல் வாழ்ந்து வருங்கால் மதுசூதனன் என்னும் முனிவர் ஒருவர் இவன்பால் வந்தார். அவரது துறவொழுக்கத்தையும், தவவேடத்தையும் இவன், எள்ளி நகைத்தான். அவர் அதனைப் பொறுக்காமல் சினந்து இவனை வருதாகச் சபித்தார். இவனும் உடனே ஆவி தின்றான். இதனைக் கண்ட சுலபை தன் கணவன் இகழ்ந்தனை ஒரு பொருளெனக் கருதி உணர்வுடைய முனிவரும் இப் பெருமை பூண்டிலரே என்று சினந்து தன் கற்பின் மகிமையால் அவரைக் கழுதையாகும்படி சபித்தாள். அவரும் இவளைப் புகழ்ந்து ஆசனப் பொங்கி மொழிந்தார். இருவரும் அவ்வாறே இதி நிகழ்படைந்தார். ஒரு நாள் அப்புகழ்ந்தன் மடியில் வைத்திருந்த பசும் புல்லை அவ்வருது ஈர்த்தது. அவ்வருதின் வாய்ப் புல்லை அக்கழுதை பற்றியது. அப்பொழுது அங்கிருந்தவர் அவற்றை வெருட்டி ஓட்டினர். அவை வெருண்டு ஓடிக்கால் கழுதை வாயிலிருந்த புல் அங்கிருந்த

ஒரு பிள்ளையார் மீது துள்ளி விழுந்தது. அண்டர் சாத்தும் அறுகம் புல்லைப்போல் அவ் எச்சிற் புல்லும் பிள்ளையார் மேல் இணைந்து நின்றது. அதனால் அம் மூவரும் தம் பழம் பிறப்பையுணர்ந்து முதல்வராலால் உயர் பதம் பெற்றார். இரு வினைப் பயன்களையும் அவற்றை நெறியேயூட்டும் மூழுமுதற் பரமனையும் நம் பாடல் உலக இன்பத்தையே பொருளென்று கொண்டதால் அரசனும், தன்னை அரசன் இகழ்ந்தானே என்று தானல்லாத உடம்பையான் என்று கருதிபதால் முனிவரும் வினை விளைவுகளை உணராமையால் சுலையையும் இழி பிறப்படைந்தார். இவ் உண்மையை உணர்ந்து முனிவர் சிலர் இரங்கினர். பொருளல்லவற்றைப் பொருள் என்று உணர்வார்த்து இழிவுறும் பிறப்பே உளதாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விளைவு விநாயகர் மான்மியத்தில் காண்க.)

கதை 2.

பரம் பொருளை மெய்ப் பொருள் என்று மதியாமல் பொருளல்லாதவற்றையே பொருள்என்று கொண்டதால் தக்கன் மாண்பிழந்து வன்பிறப்பெய்தினன். ஆட்டுப் பிறப்பை அடைந்தானே தக்கன் தன் கோட்ட உணர்வால் என்று உலகம் இவனைக் காட்டி மொழிந்தது. விரிவைத் தக்க காண்டத்தில் காண்க.

மெய்யுணர்வு இல்லாதவர் வெவ்விய பிறவியையே எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

352. கண்டமயல் நீங்கியபின் காசிபரேன் பேரின்பம்
கொண்டவராய் நின்றார் குமரேசா—பண்டிம்
இருவினைக்கு இன்பம் பயக்கும் மருளினீங்கி
மாசறுகாட்சி யவர்க்கு. (உ)

இ—ள்.

குமரேசா! தாம் கொண்ட மயக்கம் நீங்கிய பின் காசி

பர் என் றேபின்பம் கொண்டவராய் நின்றார் எனின், மருள் நீங்கி மாசு அறுகாட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் என்க.

மருள்—மயக்கம். காட்சி—பார்வை, தோற்றம், அறிவு.

மாசறு காட்சி என்றது மெய்யுணர்வை.

மாசு அறு காட்சியவர்—குற்றமற்ற உணர்வினையுடையவர்.

இருள் என்றது பிறவியை. அறியாமை மிகுந்து அச்சமும் கவலையும் அல்லலும் நிறைந்துள்ளன ஆதலால் பிறவி, இருள் எனப்பட்டது. நீக்கி என்பது நீங்கி என மெலித்து நின்றதாக் கொண்டு பயக்கும் என்னும் வினைக்குறிற் றொழில்வாய் வருவிக்கப் பட்டது. இனி, நீங்கிப் பயக்கும்என்பதைத் தன் வினையாக்கொண்டால் துன்பம் நீங்கி இன்பம் உண்டாகும் என்று கொள்க.

குற்றமற்ற உணர்வினை ஒருவன் உடையவனுடின் அம் மெய்யுணர்வு அவனுக்குப் பிறவித் துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுக்கும் என்பதாம்.

மருள் நீங்கின் இருள் நீங்கும்; மாசறு காட்சி இன்பம் பயக்கும் என்க. மேல், பொய்யுணர்வால் பிறப்பு வருமென்றார்; இதில், மெய்யுணர்வு பிறவியை நீக்கிப் பேரின்பத்தைத் தருமென்றார்.

துன்ப நீக்கமும் இன்பம் பேறும் மெய்யுணர்வால் உளவாம் என்பது கருத்து.

மருள் நீங்கி மெய்யுணர்வு எய்தினோர் இருள் நீங்கி இன்பம் பெறுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை காசிபர் பால் உணரப்படும்.

கதை.

காசிபர் என்பவர் பிரமனின் தலையைப் புதல்வரான மரீசியின் புதல்வர். தாய் பெயர் கலை. அயனருள் முழுவதும் இவர் அமையப் பெற்றவர். பேரருளுடையவர். அதிதி, திதி, தனு,

அருட்டை, சுனை, கணை, சுரபி, விநதை, மதி, இலை, கத்துரு, குரோதவனை, தாம்பிரை என்னும் தக்கன் புதல்வியர் பதின்மூவரை மணந்து இனிதுற வாழ்ந்து அமரர், அசுரர், மனிதர் முதலிய பல்கோடி வகையினரையும், அவர்பால் தோன்றச் செய்தார். தமது ஆண்மைத் திறத்தால் உலக முழுவதையும் பரசுராமர் தமக்கு உரிமையாக்கிக்கொண்ட காலத்தில் அவரால் இன்னல் மிகுமென்று கருதி அவரிடமிருந்து இப்பூமியை இவர் தானமாகக் கொண்டார். அன்றுமுதல் இவ் உலகிற்கு இவர் பெயரால் காசினி என்று ஒரு பெயரும் தோன்றிற்று. அதன் பின் இல்லற நிலையை அகன்று துறவு நிலையில் புகுந்து அருந்தவங் கொள்கையில் திருந்திய தன்மையராய்ப் பொருந்தி விளங்கினர். அக்காலத்தில் அசுரேசன் மகளாகிய சுரசை என்பவள் இவரால் தமது மரபினர் உயர்வர் என்று கருதி இவரைத் தன் வயப்படுத்தித் தூவ விழைந்து இவரது தவ வனம் சார்ந்தாள். விழுமிய உருவுடன் தனியே வந்து அழகொழுக நிற்கும் இவளைக் கண்டவுடனே முனிவர் உணர்வெல்லாம் கலங்கி உள்ளம் உருகினர். மெள்ள நெருங்கினர். ஆசை நோயைக் கூசி மொழிந்தார். "வழியே கண்ட ஓர் வனிதையை வலிய வந்து விழைவது நும்போன்ற தவ நல முடையார்க்குத் தகுதியாகுமா! சிறந்த குலமாகிய நீர் இவ் இழிந்த எண்ணத்தை எம்பால் இனி மொழியாதகலுமின்" என்று முனிந்தவள் போன்று முனைந்து மொழிந்தாள். அவன் யாது கூறினும் இவர், அவள்மேல் காதல் பிறிந்தார்.

பண்ணெடுந்தவம் பற்பல வாற்றியான்
முன்னிநின்றது முத்திபெற் றாய்ந்திட
அன்னதேயெற் கருள்செய வந்தனை

உன்னை மேவலன் றேவுயர் முத்தியே. என்று முனிவர் சித்தந் தெரிந்தார். அவளும் கருதியது எய்துமென்று கனிந்து தழுவிச் சூரபன்மன் முதலிய அசுர குலம் முற்றையும் அடங்கப்பெற்று அகன்று சென்றாள். அவளது பிரிவை நினைந்து பெரிதும் நொந்தார். தன்னை மறந்து தனி மயல் கொண்டார். சிறி

யவர் போன்று தியங்கியுழன்றார். இவரது அவிச்சையை நீக்க அயன்னர் தோன்றி அருளுடன் சோக்கினர்.

வேதமும் கலைகளும் உணர்ந்து மேலதாம்
மூதறி வெய்திய முனிவ நீயொரு
மாதுதன் பொருட்டினல் மையல் எய்தியே
பேதுறு கிற்றியோ பேதை மாந்தர்போல். என்று பேணி மொழிந்தார். முனிவர் கேட்டார். தன் இழி நிலைக்கு இரங்கினர். உற்ற மயக்கமும் முற்றும் ஒழிந்தார். உணர்ந்து தெளிந்து பின் உயரின்புற்றார். மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் என்பதை உலகம் அன்று இவர் பால் உணர்ந்தது. விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

353 மாறில் கருவூரார் வானத்தின் சீரெல்லாம்
கூறிநின்றார் என்னே குமரேசா—ஆறுக
ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. (கூ)

இ—ள்.

குமரேசா! கருவூரார் இவ்வையத்திருந்தும் என் வானத்தின் சீரெல்லாம் வழுவறக் கூறினர் எனின், ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்திலும் வானம் நணியது உடைத்து என்க.

ஐயம்—சந்தேகம். அஃதாவது ஒன்றினும் துணிவு தோன்றுது உழன்று திரியும் உணர்வு.

வானம்—மேலுலகம். ஈண்டு அது விட்டுலகத்தைக் குறித்து நின்றது. நணியது—அணுகி நிற்பது.

ஐயம் நீங்கித் தெளிந்த மெய்யுணர்வினையுடையவர்கட்கு இந்நிலவுலகத்திலும் அவ்விட்டுலகம் அணுகி நிற்கும் இயல்பினையுடையது என்பதாம்.

மெய்புணர்ந்தவர், இவ்வுலகத்திருப்பிலும் மேலான பேரின்பத்தை விரைவில் எய்துவராதலால் அவர்க்கு இவ்வையத்திலும் வானம் நணியது ஆயிற்று என்க.

மெய்ம்மையை ஐயமறத் தெளிந்தவர் பொய்யுலகத்தில் அழுந்தாமல் மெய்யுலகதையே பொருந்தி நிற்பர் என்பது கருத்து. இவ் உண்மை கருவூர்ப்பால் காணப்படும்.

கதை.

கருவூர் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்ச்சோழநாட்டிலே கருவூரிலே சோமயாதர் என்னும்வேதியர்க்குப் புதல்வராய்த் தோன்றினர். இவர், இளமையிலேயே பல நூல்களையும் வழுவற உணர்ந்து துறவு நிலையிற்படிந்து பிறவித் தீ முயன்று பெருந்தவம் புரிந்தார் உலகியற்கையின் இயல்புகளையும் இறை அருளையும் தமது யோக முதிர்ச்சியால் உணர்ந்து தெளிந்தார். ஒரு பற்றுமின்றி உலவந்து திரிந்தார். சாதி குலம் பிறப்பு, இறப்பு, பந்தம், துறக்கம் என்னும் இவற்றில் பிணிப்புண்டு உயிர்கள் தம் வினைக்கீடாக அலைந்து திரிவதை நினைந்து இரங்கி நீதிகள் சில நிலைபெற ஓதினர். ஊனம் முதலிய எல்லா உலகங்களினும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை இருந்த இடத்திலிருந்தே தமது யோகவுணர்ச்சியால் உணர்ந்து உரைத்தார். பரமனை நோக்கி அன்புறு பாடல்கள் பல அருளுடன் பாடினர். அவை திருவிசைப் பா என்று இதுபொழுது வழங்கப்படுகின்றன. தாம் எய்தியிருந்த வையம்போல வானத்தினும் புகுந்து உலாவி அற்புதங்கள் பல அருளுடன் புரிந்தார். முடிவில அவ்வூர் ஆலயத்துட் புகுந்து அருளொளியில் இரண்டறக் கலந்தார். இவரது மேன்மையை வியந்து அனைவரும் இவரைக் கருவூர்த் தேவர் என்று புகழ்ந்து போற்றினர். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வீட்டுலகம் விரைவில் எய்தும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைக் கருவூர்ப் புராணத்தில் காண்க.

ஐயமறத் தெளிந்தவர்க்கு வீட்டின்பம் விரைவில் எய்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

354 சென்றுணர்ந்தும் மெய்க்கண்ட தேவரெதிர் நந்தியார்
குன்றிநின்றார் கவ்வே னகுமரேசா—நன்றுக
ஐயுணர்வெய்தியக் கண்ணுறும் பயமின்றே
மெய்யுணர்வில்லா தவர்க்கு. (சு)

இ.—ள்.

குமரேசா! கல்லுணர்வு எய்தியிருந்தும், மெய்கண்ட தேவர் முன்னர் அருணந்தியார் என்னும் பேர்குன்றி நின்றார் எனின் ஐயுணர்வு எய்தியக் கண்ணுறும் மெய்யுணர்வு இல்லாதவர்க்கு அதனால் பயம் இன்று என்க.

ஐயுணர்வு—ஐவகையுணர்வு. அஃதாவது மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளானும் அறியும் அறிவு.

மெய்யுணர்வு—மெய்ப்பொருளை உணருமுணர்வு.

பயம் இன்று—பயன் இல்லை. எகாரம் இசை நிறைத்தலைக் குறித்து நின்றது. தேற்றம் எனினுமாம்.

ஒருவன் ஐயுணர்வினை எய்தியவிடத்தும் அவன்பால் மெய்யுணர்வு இல்லையாதலால் அவனுக்கு அதனால் யாதும் பயன் இல்லை என்பதாம்.

இனி, ஐந்தறிவும் புலன்கள்மேற் செல்லாது தன்வயமாகி யோக நிலையில் உறையப் பெறினும், மெய்யுணர்வு இல்லாதவர்க்கு அதனால் பயன் இல்லை எனினுமாம். இதில் ஐந்தறிவு என்றது ஐம்பொறிகட்கு மூலமாம் மனத்தை. எய்துதற் கருமையை உம்மை இதில் விளக்கி நின்றது.

ஐயுணர்வு உடையராயினும் மெய்யுணர்வு இல்லையாயின் அதனால் யாதும் பயனில்லை யென்றார் இருளை நீக்கி ஆஃது இன்பம் பயவாமையின்.

எவ்வளவு உணர்வினை எய்தியிருப்பினும் மெய்யுணர்வு இல்லாதவர் அதனையுடையார் முன் ஒடுங்கி நிற்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மெய்கண்டார் கண்ணுறும், அருணந்தியார் பாலும் அறியப்படும்.

கதை.

மெய்கண்ட தேவர் என்பவர் இற்றைக்கு எழுநூறு ஆண் டுகட்கு முன்னர் நடுநாட்டிலே திருப்பெண்ணை கடகம் என்னும் திருநகரிலே வேளாளர் குலத்திலே அவதரித்தவர். இவர் கருவி லேயே திருவினையுடையவர். தந்தையார் பெயர் அச்சுத களப் பாளர். சுவேதவனப் பெருமாள் என்று பெயரிடப்பெற்று திரு வெண்ணெய் நல்லூரிலே தமது மாதுலர் வீட்டிலிருந்து வளர்ந்து வந்தார். குழவிப்பருவத்தே பரஞ்சோதி முனிவர்பால் அருளுப தேசம் பெற்றுப் பொல்லாப் பிள்ளையார் அருளால் எல்லாந் தெ ளிந்தார் அதனால் மெய்கண்ட தேவர் என்னும் விழுப்பெயர்பெற் றார். இவர் மெய்யுணர்வுடையவராய் மேவியிருக்குங் காலத் தில் தமக்குக் குலகுருவும், ஆதி சைவகுல திலகரும், பல்வேறு வகைப்பட்ட கலைகளையெல்லாம் ஒருங்கே கற்ற பெரும்புலவரும் உயர்குண சீலரும், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவரும் ஆகிய அருணந்தி சிவாசாரியார் என்பவர் ஒருநாள் இவர்பால் வந்தார். இளஞ் சூரியன்போல் விளங்கி அமைதியுற் றிருக்கும் சுவேதவனப் பெருமானைப் பார்த்தார். ஆசிரியராகிய தம்மை இவர் வணங்கவில்லையென்று எண்ணினார். மனச்செ ருக்கோடு எதிர்த்து நின்று மதர்த்து நோக்கி ஆணவமலத்தின் இலக்கணம் என்ன என்று இவரை அவர் வினவினர். நின்போல வே முனைந்து நிற்கும் என்னும் பொருள் புலப்படத் தமது சுட் டுவிரலை நீட்டி அவரையே இவர் சுட்டிக் காட்டினர். ஆசாரியர் உணர்ந்தார். தாம் கொண்டிருந்த முனைப்பைத் துறந்தார். இவரது அடிகளை வணங்கி அருளுபதேசம் பெற்றுப் பொய்யுணர்ந்தன் புன்மையெல்லாம் போக்கியெனை யினிதாண்ட மெய்யுணர்வே என்று இவரது மேன்மையை வியந்து துதித்தார். எவ்வளவு உணர்வு உடையவராயினும் மெய்யுணர்வு இல்லையாயுல் பயனில் லை எனவும் மெய்யுணர்ந்தோரே மேலோர் எனவும் உணர்ந்து தெ ளிந்தார். இவ் இருவரும் சந்தான குரவர் வரிசையில் நின்று சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் இரு பெருநூல் களை இயற்றியருளினர். இவர் சரித விரிவைச் சந்தான குரவர் புராணத்தில் காண்க.

எவ்வளவு உணர்வுடையராயினும் மெய்யுணர்விலரேல் அதனால் பயனில்லை என்பது இதனால் கூறப்பட்டது.

---

355 பண்டுகண்ணான் மெய்வழியே பார்த்திச் சகதேசுவர்
கொண்டுணர்ந்தார் என்னே குமரேசா—கண்டவற்றுள்
எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (ரு)

இ—ள்.

குமரேசா! பல வழிவமாகத் தோன்றினும் கண்ணான மெய் வழியே சகதேசுவன் என் பார்த்து உணர்ந்தான் எனின், எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்க.

எத்தன்மைத்து ஆயினும்—எவ்விதமாகத் தோன்றினும்.

எப்பொருள் என்றது பொருள்கள் பலவாதலின் என்க.

காண்பதே அறிவு என்று காண்க.

மேல், ஒருவன் ஐயுணர்வு எய்தியிருப்பினும் மெய்யுணர்வு இன்றேல் அதனால் பயனில்லை என்றார்; அம் மெய்யுணர்வுதான் யாது என்பார்க்கு அதன் இலக்கணத்தை இதில் விளக்க உணர்த்தினர் என்க.

யாதொரு பொருள் எவ்விதமாகத் தோன்றினும் அப்பொருளினது உண்மைத்தன்மையை ஆய்ந்து காண்பதே மெய்யுணர்வு எனப்படுதலாம்.

காணப்படுகின்ற பொருள்களினுடைய பெயர் வடிவங்களைக் கண்டு மயங்காது அவற்றின் மூலகாரணங்களை முன்னி உணர்வதே ஒருவனுடைய மெய்யுணர்வுக்குப் பயன் என்பது கருத்து.

மண்ணால் செய்யப்பட்ட ஒரு பொருளைக் காணின் குடம், சட்டி என்று வழங்கி வருகின்ற அதன் பெயரையும் உருவத்தையும் குறித்து நில்லாமல், அதற்கு மூலகாரணம் மண் எனவும்,

அதற்குக் காரணம் நிலம் எனவும், அதற்குக் காரணம் நீர் எனவும் இவ்வாறே மற்றக் காரணங்களையும் கண்டு சென்றால் முடிவில் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயுள்ள முழுமுதல் ஒன்று காணப்படும். அம் மெய்ப்பொருட் காட்சியால் ஈண்டு வாராதனவும் ஈறிலின்பமும் எளிதில் உளவாகும். ஆகலால் அம்மெய்யுணர்வையே பிறவிப் பயனாக ஒருவன் பெறவேண்டும் எக்பதாம்.

மெய்யாகிய பொருளை ஐயமறக் கண்டவனே மெய்யுணர்வுடையவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சகதேவன்பால் உணரப்படும்.

கதை.

பாரதப்போர் நிகழாதிருத்தற்கு எதாவது உபாயமிருந்தால் சொல்லுக என்று சகதேவனை நோக்கிக் கண்ணன் ஒருநாள் எண்ணிச் சொல்லினன். மாயவன் கூறிய இம் மாயமொழிகளைக் கேட்டு அத்தூயவன் நகைத்தான். என் நகைத்தாய் என்று அவ் வந்தல் இசைத்தான். விரித்த கூந்தலை முடித்தற்குத் தோழமையும், குறித்த சபதத்தைத் தொடுத்தற்கு அருச்சுனனும், கடித்து வெல்வதற்குக் கண்ணனும், பாரின் பாரத்தைத் தீர்த்தற்கு நீயும் அப்போரின் முடிவையே பொருந்தி நிற்கின்றீர்; நீவிர் நால்வரும் இல்லையானால் அப்போரும் இல்லையாம். ஆகலால் அம் மூவரையும் கொன்று உன்னையும் கட்டினால் யாரமல் காக்கலாம் மாபாரதம் என்றான். எல்லாம் முடித்தாலும் என்னை நீ எவ்வாறு கண்டுணர்ந்து கட்டுவாய் என்று கண்ணன் பகர்ந்து பதினாயிர வடிவம் கொண்டு பரந்து நின்றான். தோன்றி நின்ற வடிவங்கள் எல்லாவற்றையும் விடுத்துக் கண்ணனது மெய் உருவத்தையே கண்டு தெளிந்து சகதேவன் கருத்திற் பிணித்தான். கண்ணன் அவனது மெய்யுணர்வை வியந்து அவன் எண்ணிய யாவினிதின் உதவினன். ஒரு பொருள் எத்தன்மைத்தாய்த் தோன்றினும் அப்பொருளினது மெய்யின் தன்மையை மெய்யாகக் காண்பதே மெய்யுணர்வு என்பதை உலகம் காண இவன் அன்று உணர்த்தி நின்றான். (விரிவைப் பாரதத்தில் காண்க.)

இன்னதுதான் மெய்யுணர்வு என்பது இதனால் கூறப்பட்டது.

356 கண்டார்முன் மெய்ப்பொருளைக் கற்றமணி வாசகர்பின்
கொண்டார்வீ டென்னே குமரேசா—மண்டருளால்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (கூ)

இ.—ள்.

குமரேசா! மாணிக்கவாசகர் மெய்ப்பொருளைக் கண்ட வுடன் ஏன் வீட்டினை எய்திஞர் எனின், கற்று ஈண்டு மெய்ப் பொருளைக் கண்டார், மற்று ஈண்டு வாரா நெறியைத் தலைப்படு வர் என்க.

மற்று ஈண்டு வாராநெறி—மறுபடியும் இப்பிறப்பிற்கு வாராத வழியினை. என்றது முத்தி நெறியை,

மெய்ப்பொருள்—மெய்யான பொருள்: என்றது இறைவனை. அழிவு இல்லதோர் ஆனந்தப்பொருள் என்றபடி.
தலைப்படுவர்—அடைவர்.

மெய்ப்பொருளை அறிந்த மெய்யுணர்வினர்க்குப் பின்பு பிற ப்பு இல்லை என்பது கருத்து.

ஈண்டு வாரா வழியருள்புரிபவன்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவிசாராமே
கள்ளப்புலக்குரம்பை கட்டழிக்கவல்லான். என வருவும் இவற்றை ஈண்டு உணர்க. கற்று இப்பிறப்பில் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டு இவ் உலகில் வாரா நெறியினை அடைவர் என்பதாம்.

எல்லா உயிர்க்கும் இறைவனேயாயினும், கல்லாதார் நெஞ் சத்தும் காண ஒண்ணுதே எனவும், கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே எனவும், கற்றவர் வளைத்துத் திரிபுரம் எரித்தோன் கற்ற வர் கருத்தினுள் காண்போன் எனவும், வருவனவாற்றல் கல்வியே மெய்ப்பொருளைக் காண்டற்குரிய மெய்யுணர்வைப் பயக்குமென் பது காணப்படுமாதலால் காண்டலுக்குக் கற்றல் முதன்மையாய் நின்றது. கற்றுக்கண்டார் தலைப்படுவர் என்று காண்க.

மேல், மெய்ப்பொருளைக் காண்டலே மெய்யுணர்வு என்றார் அவ்வுணர்வால் பயன் என்னை எனின் பிறவினை நீக்கித் தன்னை யுடையானுக்கு அது பேரின்பத்தைக் கொடுக்கும் என்று இதில் உணர்த்தினர் என்க.

இப்பிறப்பில் மெய்ப்பொருளைக் கண்டவர் மீண்டு எண்டு வந்து பிறவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை மாணிக்கவாசகர்பால் உணரப்படும்.

கதை.

நூல் பல கற்று நுண்ணுணர்வெய்தி சீலம் நிறைந்து சிறந்து விளங்கித் தெளிந்து நின்ற மாணிக்கவாசகர் அரசனு ணையால் பரிகள் வாங்கும் பொருட்டுத் திருப்பெருந் துறையை அடைந்த காலத்தில் அங்கு இவரை ஆட்கொண்டருளுமாறு வந்து சிவகணங்கள் புடைசூழ மணிமுடிவந் தாங்கிக் குருந்த மரத் தடியில் குருமூர்த்தியா யெழுந்தருளியிருந்த அவ் ஒரு மூர்த்தியைக்கண்டார்; உள்ளம் உருகினர். அவரது மணிமலரடியை உவந்து வணங்கித் துவண்டு நின்றார். அம் முழுமுதற் பரமன் இவரது விழுமிய அன்பை வியந்து மகிழ்ந்து விட்டுநெறியை விளங்க உணர்த்தினர். அதனால் இவர் பிறவி தீர்ந்தார். ஈண்டு மெய்ப்பொருளைக் கண்டவர் மீண்டுபிறவார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைத் திருவாதவூர்ப் புராணத்தில் காண்க

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
யூரா அமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கு மொளி. (1)

இரந்திரந் துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே
இமையோர்
சிரந்தனிற் பொலியுங்கமலச்சேவடியாய் திருப்பெருந்துறையுறை
சிவனே
நிரந்தவா காயம் நீர்நிலம் தீகால் ஆய்வுனை அல்லையாய்
ஆங்கே

காந்தீதார் உருவே களித்தனன் உன்னைக் கண்ணுறுக் கண்டு
கொண்டின்ற (2)

இவை மெய்ப்பொருளைக் கண்டபின் தாம் எய்திய மெய்ந்நெறியை விபந்து மாணிக்கவாசகர் அருளினபன.

மெய்ப்பொருளை அறிந்தவர்க்குப் பிறப்பு இல்லை என்பது இதனுல் கூறப்பட்டது.

---

357 திண்டோட் சிகித்துவசன் சிங்கவண்மன் உள்ளுணர்ந்தன்
கொண்டபிறப் பற்றூர் குமரேசா—கண்டாமல்
ஓர்த்துள்ளம் உள்ள துணர்வின் ஒருதலையாப்
போர்த்துள்ள வேண்டா பிறப்பு. (எ)

இ—ள்.

குமரேசா! உண்மைப் பொருளை உணர்ந்து தெளிந்த தால் சிகித்துவசன் சிங்கவண்மன் என்பவர் என் தம் பிறப்பு நீங்கினர் எனின், ஒருவன் உள்ளம் ஓர்ந்து உள்ளதை ஒருதலையாக உணர்வின் அவனுக்குப் போர்த்தப் பிறப்பு உள்ள வேண்டா என்க.

ஓர்ந்து—ஆராய்ந்து. இஃது ஓர்தல் என்னும் வினையடியாகப் பிறந்தது. ஓர்தல்—ஆராய்தல், தெளிதல்.

உள்ளது என்றது மெய்ப்பொருளை; என்றும் நிலையாயிருப்பது என்றபடி. ஒருதலையா—தெளிவாக.

மெய்ப்பொருளைக் கண்டவர் பிறவியைக் காணர் என்று மேற் கூறியதை நோக்கி ஐயுறுவார் உளராயின் அஃது உள்ளதாக ஒருதலையாக நீவிர் உள்ளவேண்டாம் என்று அவரை நோக்கி இஃது உணர்த்தியதென்க.

ஒருவன் உள்ளம் மெய்ப்பொருளைத் தெளிய ஆராய்ந்து உணருமாயின் அவனுக்குப் பின்பு பிறப்பு உளதாக நினைக்க வேண்டாம் என்பதாம்.

உள்ளம் உள்ளது உணரின், பிறப்பு உள்ளதாக உள்ளவேண்டா என்றது மெய்ப்பொருளைத் தெளிந்து சிந்திப்பவர்க்குப் பிறப்பு இல்லை என்பது கருத்து என்க.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், பாவித்தல் என்னும் இந்நிலைகள் யாவும் முறையே பிறப்பினை நீக்கும் பெருமையுடைய உள்ளதை ஒருதலையாக உணர உணர அவ் உள்ளம் உயிரிலும் அவ் உயிர் மெய்ப்பொருளிலும் கலந்து இரும்புண்ட நீர்போல் திரும்பாதடங்கிவிடும் ஆதலால் அது பின்பு பிறவாதென்க.

மெய்ப்பொருளையே ஒருவன் சிந்தித்திருப்பனையின், அவனுக்குப் பின்பு பிறப்பு இல்லையென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சிகித்துவசன் கண்ணும், சிங்கவண்டன்பாலும் உணரப்படும்.

கதை

சிகித்துவசன் என்பவன் மாளவதேயத்து மன்னன். இவனது காலம் இற்றைக்கு ஆயிர ஆண்டுகட்கு முன்னர் என்பர். இவன் மனைவி பெயர் சூடாலை. மிக்க மெய்யுணர்வுடையவள். அவளால் இவன் ஞானவுபதேசம் செய்யப்பெற்றான். மெய்ப்பொருள் பொய்ப் பொருள் என்னும் இருவகைப் பொருள்களின் இயல்பு களையும் மயலறத் தெளிந்தான். அதன்பின் ஆசுமுதலிய அவத்தைகளும் துறந்தான். மறுமை ஆசையும் இகந்தான். உள்ள மெய்ப்பொருளையே உளத்திற்கொண்டான். உணர்ந்து தெளிந்து உவந்து பாவித்தான். பின்பு பிறப்பு நீங்கிப் பேரின்பமுற்றான். முதற்பொருளை உணரின் பிறப்பு நீங்கும் என்பதை அவன் உணர்த்தி நின்றான். விரிவை வாசிட்டத்தில் காண்க.

கதை 2.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் மதுரையின் வடமேற்கில் ஓர் அடர்ந்தவனம் இருந்தது. அதில் விலங்கினங் களும், பறவைக்கூட்டங்களும் மிடைந்திருந்தன. முற் பிறப்பில் தான் வலிய்வனையிருந்து மெலியவர்க்குச் செய்த தீவினைப் பய

னல் சிங்கவன்மன் என்னும் அரசனொருவன் கரிக்குருவியாகி அங்குக் கலந்திருந்தான். அதனை மற்றப் பறவைகளெல்லாம் கொத்தித் துன்புறுத்தின. அது நடுங்கி ஓடித் தயரியாக ஒரு ஆலமரத்தில் அடங்கியிருந்தது. சிவனடியார் சிலர் ஒருநாள் அதன் அடியில் அமர்ந்து மதுரைப்பெருமான் அருளைப் புகழ்ந்தார். மறைந்திருந்த பறவை அப்மொழிகளைக் கேட்டது. மகிழ்ந்து பறந்து மதுரையையடைந்தது. கூடற் பரமனையே தன் உள்ளம் கூடப்பெற்றது. ஓர்ந்த பொருளையே ஒருதலையாக உணர்ந்து நின்றது. அதனல் அதனது பிறவி அறவே தீர்ந்தது. ஒருவன் உள்ளம் உள்ளதை ஓர்ந்து உணரின் அவனுக்குப் பிறப்பு இல்லை என்பதை உலகம் இதன்பால் கண்டது; விரிவைத் திருவிளையாடலில் கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலத்தில் காண்க.

மற்றது கேட்டுக் கொடம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவையாகிப் பிறந்ததும் பிறவுந் தேற்றம்
உற்றது நாமிச் சன்மம் ஒழிப்பதற்கறிவா னிங்ஙன்
சொற்றதே உறுதியென்று துணிவுகொண் டடைந்தன் றன்றே.
குருமொழி பயின்று முள்வாய்க் குருவிதன் குலனுந்தன்போல்
அருமறை முதல்வனீந்த ஆற்றலால் பறவைக்கெல்லாம்
பெருமைசால் வலியான் என்னும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்பொற் கழலடி சேர்ந்தன் றன்றே. (2)

இவற்றால் மேற்குறித்த வண்மை இனிது தெளிவாதல் காண்க.

ஒருவனுள்ளம் மெய்ப்பொருளை அடையின் அவனைப்பிறப்பு அடையா என்பது இதனல் கூறப்பட்டது.

[தற்சேகன்

358 தேடரிய செம்பொருளைத் தேர்ந்துமொன்னுள் காண்பவர்
கோடிவகை செய்தாள் குமரேசா—பீடில்
பிறப்பென்னும் பேதகமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு. (அ)

இ—ள்.

குமரேசா! பொன்னையாள் என்பவள் பரம்பொருளைத்

காண்பதற்கு என் பெருங்கவலை கொண்டாள் எனின், பிறப்பு என்னும் பேதைமை நீங்க சிறப்பு என்னும் செம்பொருளைக் காண்பதே அறிவு என்க.

பேதைமை— அறியாமை; அஃதாவது உண்மையை உணராமை. பேதைமை பிறப்பிற்குக் காரணமாதலால் அதனையே பிறப்பென்றார்.

சிறப்பு என்னும் செம்பொருள்— சிறந்தது என்று சொல்லப்படுகின்ற செவ்விய பொருள்; அஃதாவது பாம்பொருள் என்க. எல்லாவற்றினும் சிறந்ததாய வீட்டின்பத்திற்குக் காரணமாய் என்றுங்கோடாமல் நின்று நிலவுதலால் அது சிறப்பு எனவும் செம்பொருள் எனவும் நின்றது.

பிறப்பிற்குக் காரணமாகிய பேதைமை நீங்குமாறு முத்திக்குக் காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பதே ஒருவனுக்கு மெய்யுணர்வு என்பதாம்.

பேதைமையே பிறவிக்குக் காரணம் என்பதும், அது நீங்கிஞல் பிறவி நீங்கிவிடும் என்பதும் இதனடியில் வருவனவற்றால் இனிது காணப்படும். பேதைமை மீளச் செய்கைமீளும்; செய்கை மீள உணர்ச்சி மீளும்; உணர்ச்சி மீள அருவுரு மீளும்; அருவுரு மீள வாயில் மீளும்; வாயின் மீள ஊறு மீளும், ஊறு மீள நுகர்ச்சி மீளும்; நுகர்ச்சி மீள வேட்கை மீளும், வேட்கை மீளப் பற்று மீளும், பற்று மீளக் கருமத்தொகுதி; மீளும்கருமத் தொகுதி மீளத்; தோற்றம் மீளும்தோற்றம் மீளப்; பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச், சாக்காடவலமரற்றுக்கவலை, கையாறென்றிக்கடையில் துன்பம், எல்லாமீளும் இவ்வகையான் மீடசி, யாதிக்கண்டமாகும் என்ப; பேதைமை செய்கை என்றிவையிரண்டும், காரணவகைய ஆதலானே, எனவரும் மணிமேகலையின் அணிமொழிகளாண்டு மனங்கொண்டுணர்க.

செம்பொருளைக் காண்பவர்க்கு வெம்பிறவி நீங்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பொனனையாள்பால் உணரப்படும்.

கதை

பொன்னனையாள் என்பவள் மதுரையின் கிழ்பாலுள்ள திருப்பூவணம் என்னும் திருநகரில் இருந்தவள். உருத்திர கணிகையர் மரபில் உதித்தவள். அழகும், குணமும், அறிவும் நிறைந்தவள். குழலினும் யாழினும் குரலிசை வாய்ந்தவள். பெருந்திரு உடையளாய்ச்சிறந்து விளங்கிய இவள், உலக இச்சைகளை அறவே வெறுத்து உண்மைப்பொருளையே உளங்கொண்டிருந்தாள். சிவனடியாரைச் சிவனென மதித்தாள். நாளும் அவர்க்கு நயந்தொண்டிழைத்தாள். தன் பிறப்பினை நினைந்து பெரிதுங்கவன்றாள். பிறவாஇன்பம் பெற மிகவிழைந்தாள். பரமனருளையே பாவித்து வந்தாள்; அவ் உருவிலா ஒருவனை உருவிலுங்காண உருகியுழந்தாள். இவளது சித்தந் தேர்ந்து இறைவர் ஒரு சித்தராய்த் தோன்றி விரும்பிய பொன்னை அருளி மறைந்தார். வடிவில்லான் வடிவத்தை அதனால் ஆக்கினாள். கருவில் அமைத்த அவ் உருவைக் கண்ட அளவில் அவள் கொண்ட உவகைக்கு அளவேயில்லை. தன் அகத்தில் குறித்திருந்ததையே புறத்தில் கண்டாள். அவ் உருவ அழகினைப் பருக நோக்கினாள். ஆர்ந்த அன்போடு அதன் கன்னத்தைத் தன் கையால் அள்ளி முத்தங் கொண்டாள். ஓர் ஆலயம் புதுக்கி வைத்து அதனைக் தன் அகத்தில் பாவித்தாள். அப்பாவனையால் தன் பிறப்பு நீங்கிப் பேரின்பமுற்றாள். சிறப்பு என்னும் செப்பொருளைக் காண்பார்க்குப் பிறப்பு நீங்கும் என்பதை இவள் உணர்த்தி நின்றாள். முத்தங் கொள்ள இவள் அழுத்திய கைத்தழும்பை அம்மூர்த்தியின் கபோலத்தில் இன்றுங் காணலாம். விரிவைத் திருப்பூவணத் தலபுராணத்திலும் திருவிளையாடலிலுங் காண்க.

மழவிடை யுடையான்மேனி வணப்பினை நோக்கி ஆர்த்தே
அழகிய பிரானே வென்ன அள்ளிமுத் தங்கொண்டன்பிற்
பழகிய பரனையாளைப் பரிவிலும் பதிட்டை செய்து
விழவுடைத் தாடாத்தித் தின்னாள் கழிந்தபின் வீடுபெற்றாள்.

(திருவிளையாடல்)

36-ம் அதிகாரம் மெய்யுணர்தல்.

பிறவி நீங்குமாறு மெய்ப்பொருளைக் காண்டலே மெய்யுணர்வுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

359 சண்டேடசர் தாளெறிந்தும் சார்தருநோய் சாராடல்
கொண்டார்சீர் என்னே குமரேசா—உண்டான
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (கூ)

இ—ள்.

குமரேசா! சண்டேடசர் தம் தந்தையின் தாளினை வாளால் எறிந்தும் என் அத்திவினை நோய் அவரைச் சாரவில்லை எனின், சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் சார்தரு நோய் அழித்து மற்றுச் சார்தரா என்க.

சார்பு—இடம், பற்று, குணம்.

முதலில் சார்பு என்றது இறைவனை என்க. எல்லாப்பொருள்களும் தன்னைச் சார்தற்கு இடனைப் நிற்பது என்னும் எதுவான் வந்தது. சார்பு உணர்ந்து—மெய்ப்பொருளை உணர்ந்து.

சார்பு கெட ஒழுகின்—பற்று அற ஒழுகுவனையின்.

மற்றுச்சார்தரா—பின்சாரமாட்டா.

சார்தரும் நோய் என்றது தம்மைச் செய்தவினைச் சார்ந்து துன்புறுத்துதற்குக் காலம் ஓர்ந்து நிற்கும் வினைத்தொன்பங்களை.

பரம்பொருளை உணர்ந்து ஒருவன் பற்றற ஒழுகுவனையின், அவனைப் பற்றநின்ற நோய் அவன் நிலையினை அழித்துப்பின்பற்றமாட்டா என்பதாம்.

உணர்ந்து ஒழுகின் நோய் சாரா என்று காண்க.

தனக்கு என்றும் நிலையான சார்பினை உணர்ந்து நிலையில்லாத பொருள்கள்மேல் தான்வைத்துள்ள சார்பு கெடமாறு பொறிக

ளைடக்கி ஒருவன் ஒழுகுவனையின், அவன் பிறவி நோய் நீங்கிப் பேரின்பம் அடைவான் என்பது கருத்து.

இறைவன் அருளைச் சார்ந்து இருவகைப்பற்றுக்களும் அறக் கற்குரிய ஞான நெறியில் நிலைத்து ஒருவன் ஒழுகவல்லனாயின், அவனை எவ்வகை வினைத்தொன்பந்களும் சாரமாட்டா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சண்டேசுரர்பால் உணரப்படும்.

கதை.

சண்டேசுரர் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரிலே காசிப கோத்திரத்திலே தோன்றியிருந்த எச்சதத்தன் என்னும் ஒரு விச்சைவேதியனுக்கு எச்சமாகித் தோன்றினர். தாய்பெயர் பவித்திரை; விசாரசருமர் என்று பெயரிட்டுப்பெற்றோர் இவரைப்பேணி வளர்த்தார். இளமையிலேயே கலைகள் பலவும் நலமுற உணர்ந்து ஆருயிர்மாட்டுப் பேரருளுடையராய் அடங்கி ஒழுகினர். வழக்கமாக அவ்வூர்ப் பசுக்களை மேய்த்துவந்த இடையனொருவன் ஒருநாள் தன்னைப் பாய்ந்த பசு ஒன்றை ஓங்கி அடித்தான். அதனை இவர் கண்டார். அருள்மிகக் கொண்டார். அன்று முதல் அவனை நீக்கிவிட்டு அவ் ஆ நிரையைத் தானே மேய்க்க இசைந்து அன்புடன் போற்றிவந்தார். பசுக்கள் முன்னையிலும் பால் மிகுதியாகக்கொடுத்தன. ஊரார் அனைவரும் உவந்து புகழ்ந்தார். மேய்ந்து நிற்குங்கால் பசுக்கள் மடிகளிலிருந்து பால் பெருகியோடுவதைக் கண்ட விசாரசருமர் அதனைக் குடத்திலேந்தி மண்ணியாற்றங்கரையிலுள்ள மணலில் சிவலிங்கமாகச் செய்து அதன்மேல் மஞ்சனம் ஆட்டி மகிழ்ந்து போற்றினர். இதனைக் கிளரறிந்து இவர் தந்தைபால் வந்து "நும் மகன் எங்கள் பசுவின் பாலை வீணே மணலில் விட்டுத் தொலைக்கின்றான்" என்று வெகுண்டு கூறினர். மைந்தன் செயலைக் காணும் பொருட்டுத் தந்தையார் ஒருநாள் மறைந்து வந்தார். தூசையும் முறையே பொருந்தி நோக்கினர். மறைந்து நின்றவர் சினந்து வந்து மகனைக் கோலால்

அடித்துப் பாவின்குடத்தைக் காலால் உதைத்தார். சருமர் வருந்தி அங்குக்கிடந்த ஒரு சிறு கோலை எடுத்துவீசினர். அது கூரிய மழுவாய்ச் சென்று அவரது காலைத் துணித்தது. ஐயர் அலறி விழுந்தார். அம்மையப்பர் மீண்டும் பூசையில் மூழ்ந்து நின்றார். சார்பை உணர்ந்து தன்னையிடத்தும் சார்பு இன்றி ஒழுகிய அமைச்சன் தன்மனையவியத்து உடனே பரமன் உமையோடு விடை மேல் தோன்றி அவரை அருளோடு நீண்டினர். பரமனுருவையே உடனே சருமர் எய்தினர். "எம்மை வழிபடுவோர்க்கு எப்போல் நின்று நீயே அருள் புரிக" என்று தம் அருளின் இயல்பை அவர்க்கு அருளி அகன்றார். அன்று முதல் அவர் சண்டேசுரர் என்னும் பெயருடன் விளங்கி உயிர்களுக்குத் தண்ணளி புரிந்து பிறவி நோய் நீங்கிப் பேரின்பந் துய்த்தார். சார்பை உணர்ந்து ஒருவன் சார்பு கெட ஒழுகின் சார்தரு நோய்கள் அவனைச் சாரா என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

மெய்யுணர்வோடு நெறிநின்று ஒழுகுவோரை வினைத் துன்பங்கள் சாரா என்பது இதனால் கூறப்பட்டது.

---

360 உற்றநோய் ஒன்றும் உறுதுன் சுதிக்கண்ணார்
குற்றமில்இன் புற்றார் குமரேசா—பற்றிநின்ற
காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். (வ)

இ—ன்.

குமரேசா! சுதிக்கண்ணார் யாதொரு துன்பமுமின்றி என் உயர்ந்த இன்பத்தை எய்தினர் எனின், காமம், வெகுளி, மயக்கம் என்னும் இம்மூன்றனுடைய நாமம் கெட நோய் கெடும் என்க. நாமம்—பெயர். நோய்—துன்பம்.

காமம் வெகுளி முதலிய இழிகுணங்களே துன்பங்கட்குக் காரணமாகும் ஆதலால், அவை அறவே இல்லையாதல் அத்துன்

பங்களும் இலவாம் என்பார் "முன்றன் நாமம்கெட கோய்கெடும்" என்றார். காமம் இல்லை எனிற் கதிங்கேகெடனும்

நாமம் இல்லை நரகமும் இல்லையே. என்றார் கம்பரும்.

இச்சைக்கு இடையூறு நிகழ்ந்த இடத்திகதான் வெகுளி தோன்றும் ஆகலால் அது காமத்தின் பின் நின்றது. காய் முன் சேய்கள் நிற்றல்போல் தமக்குக் காரணமாய மயக்கத்தின் முன் இவ் இரண்டும் மயங்கி நின்றன.

ஆசை காமம் அவிச்சையென்னும் இம்மூன்றனுடைய பெய ருங் கூட ஒருவனிடம் நில்லாமல் நீங்குமாயின் பிறவித் தண்பம் அவனை விட்டு நீங்கிவிடும் என்பதாம்.

தண்பங்கள் தன்னைத் தொடராமலிருக்க ஒருவன் விரும்பு வதின் அவன் காமம் வெகுளி முதலிய குற்றங்களை அறவே ஒழிக்கவேண்டும் என்பது குறிப்பு.

அவாவும், சினமும் இல்லாதவனுக்குப் பிறவித்தன்பங்கள் உளவாகா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சுதீக்ஷ்ணர்பால் காணப்படும்.

கதை.

சுதீக்ஷ்ணர் என்பவர் திரேதாயுகத்தின் முற்பகுதியி லிருந்த ஒரு முனிவர். தண்டக வனத்தில் தனிமையிருந்து அ ருந்தவர் வியந்திடப் பெருந்தவம் புரிந்தார். சுதீக்ஷ்ணர் என் னும் இவரது வடமொழிப் பெயர்க்கு நல்ல ஒளியினை யுடையவர் என்பது பொருளாம். அருந்தன் அன்ன முனிவன்; இடரில்லான் எனக்கம்பரும் இவரை இனைத்தார். இதனால் இவரது மறுவற்ற காட்சியும் முனிவில் மாட்சியும் இனிது புலனும். காடங்கடந்து கடுஞ்சினந் துறந்து மருளொரு சிறிதும் மருவாதென்றும் ஒரு மெய்ப்பொருளையே உளங்கொண்டிருந்தார். இருக்குங் கால் கூனும் சிறிய கோதண்டமும். கொடுமை இழப்பக் கோல் குறைந்து

கானம் புகுந்த இராமர் இவரை வந்து கண்டார். இவரடி தொழுதார். முனிவர் பெருமகிழ்வோடு இருகைத்தழுவி யின்னுரை பகர்ந்தார். தாம் செய்திருந்த தவமுழுவதையும் அவர் நலமுறத் தந்தார். தவத்தையும் தானம் செய்த அவரது மனத்தூய்மையையும், அவாவற்ற தன்மையையும் வியந்து இராமர் மிக மகிழ்வுற்றார். அவரருளை அமையப்பெற்று அகன்று சென்றார். முனிவர் இடர் ஒன்றுமின்றி இனிதமர்ந்திருந்து முடிவினபத்தை முடிவிலடைந்தார். காம வெகுளிகள் இல்லாதவர்க்கு நோய்கள் இலவாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

காமமும் வெகுளியும் ஒழிந்தால் பிறவி நோய் ஒழியும் என்பது இதனால் கூறப்பட்டது.

ஆசைசற் றிருந்திடின் அநுனிமித்தம் வந்
தாசைசால் வெகுளியும் ஒருங்கு நண்ணிடும்
மாசையார் அஃதுற மயக்க முப்முறும்
ஈசையார் அடிக்கலப் பிரிக்கும் இன்னலே. (காசிமகரியம்)

ஈட்டுறு பிறவியும் வினைகள் யாவையும்
காட்டிய திணையிலார் காமமாதலின்
வாட்டமில் புந்தியான் மற்றந் நோய்யினை
வீட்டினர் அல்லரோ வீடு சேர்ந்தனர். (கந்தபுராணம்)

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

மெய்ப்பொருள் அல்லவற்றை மெய்ப்பொருள் என்று உணருகின்ற மயக்க உணர்வால் பிறப்பு உண்டாகும். மயக்கம் நீங்கி மெய்யுணர்வடைந்தவர் பிறப்பு நீங்கிப் பேரின்பம் அடைவார். ஐயந் திரிந்த மெய்யுணர்வோர்க்கு வையமதனிலும் வானுலகு அனித்தாம். எவ்வளவு உணர்வுடையராயினும் மெய்யுணர்வு இல்

லாதவர்க்கு மேன்மை இல்லை. பொருள்களின் உண்மையை உள்ளவாறு அறிதலே மெய்யுணர்வாகும். மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டு பிறப்பிலை அடையார். உண்மைப் பொருளை ஒருவன் உள்ளந்தெளிய உணரின் அவனுக்குப் பிறப்பே இல்லை. எவம் பிறவி நீங்குமாறு செம்பொருளைக் காண்பதே ஒருவன் மெய்யுணர்விற்குப் பயனும். தனக்கு நிலைபெற்ற சார்பாய இறைவனை யுணர்ந்து தன் சார்புகெட ஒருவன் ஒழுகுவனாயின் அவனை வினைத் துன்பங்கள் சாரா. ஆசை சினம் அச்சம் என்னும் இம் மூன்றையும் அறவே ஒருவன் ஒழிப்பனையின் அவனுக்குத் துன்பமேயில்லை.

நடுவது மெய்யுணர்தல் முற்றிற்று.

நன்-ம் அதிகாரம் அவாவறுத்தல்.

அஃதாவது ஆசையை ஒழித்தல். மெய்யுணர்வெய்தி மெய்ப்பொருளை உணரினும் பொய்ப்பொருள்கள் மேல் முன் பொருந்தியிருந்த ஆசை சிறிது இருக்குமாயின், அது பிறவிக்கு வித்தாய்ப் பெருகி வளர்ந்து பின் பெருந்துயர் விளைக்கும் ஆகலால் அதனை அறவே ஒழிக்கவேண்டுமென்பதை யுணர்த்துதற்கு இஃது எண்ணி வைக்கப்பட்டது. நிலையாமையை யறிதல் உலகத்தோற்றத்திற்கும், மெய்ப்பொருளை உணர்தல் பொய்ப்பொருளவாவைப் போக்குதற்கும் முறையே வதுவாகுமாதலால் அதிகார நிலைகளும் அம்முறையில் நின்றன.

---

361 கண்டமான் பாற்சிறிது காதலுற்ற காற்பரதர்
கொண்டார் பிறப்பேன் குமரேசா—கொண்ட
அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாவப் பிறப்பீனும் வித்து. (க)

இ—ள்.

குமரேசா! ஒரு மான் மேல் வைத்த அவாவால் பாதர் என் பிறப்பிணை அடைந்தார் எனின், எல்லா உயிர்கட்கும் எஞ் ஞான்றும் தவா அப் பிறப்பு ஈனும் வித்து அவாவேயாம் என்க.

தவா என்பது தவுதல் என்னும் வினை அடியாகப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம்; தவுதல்—கெடுதல். சுருங்குதல்.

தவாப் பிறப்பு—கெடாத பிறப்பு. தவாஅ என்பதில் அகரம் அளபெடை. அஃதாவது பாட்டில் ஓசை குறையுமிடத்து அதனை நிறைக்க இடுவது:

இதைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை கெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே. கன்னூல்

எல்லாவுயிர்கட்கும். எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பை விளைத்தற்கு வித்தாயிருப்பது அவாவே என்று அறிந்தோர் சொல்லுவர் என்பதாம். அவாவை வித்து என்றது அதன் இயல்பு நோக்கி என்க. நுண்ணியதோர் ஆலம் வித்தானது எண்ணருங் கிளைகளாய்ப் பரந்து விரிந்த ஒரு பெரிய பழுமரத்தைப் பயந்து விடுதல்போல் அருவாய் அணுவாயுள்ள அவாவும் கடந்தற்கரியதோர் பிறவிப் பெருங்கடலை விளைத்து நிற்கும் ஆதலால் அது வித்து என நின்றது. தான் சிறிதாயிருந்தே பெரிதான ஒன்றைத் தோற்றுவிக்கும் ஏற்றம் கருதி அங்ஙனம் கூறியிருப்பினும் வித்து வினவு தோன்ற விளியுப எனவும் அவா பிற வினை விளைத்துத் தானும் அழியாது நிற்கும் எனவும் வேறுபாடு காண்க.

இச்சைவித்து உருத்துழி யான்எனப்பெயரிய
நச்சுமாமரம் நணிமிக முளைத்துப்
பொய்யென் கவிகள் போக்கிச் செய்யும்
பாவப்பல்நறை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து

தூண்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மாணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பிற் கழியும். என்றதன்காண்க.

அவாவே பிறவிக்குக் காரணம் ஆதலால் பிறவியை அறுக்க நின்று துறவோர் அதனை அறவே முதலில் அறுக்கவேண்டும் என்பது கருத்து. அருந்தவக் கொள்கையிற் சிறந்தவராயினும் அவாவினைச் சிறிது உடையவராயின் அதனால் அவர் பிறப்பினை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரதர் பால் உணரப்படும்.

கதை.

மணுகுல திலகனைய இடபசிங்கனுக்கும் சயந்திக்கும் புதல்வனைப் தோன்றி இந்நிலவுலக முழுவதும் தனக்கே உரிமையாகப்பெற்றுப் பன்னெடுங் காலம் பரிவுடன் ஆண்ட பரத மன்னன் பருவமுதிர்ந்த பின் அனைத்தையும் துறந்து அடவியிற் புகுந்து அருந்தவம் புரிந்தார். புரிந்து வருங்கால் ஒரு நாள் சுண்டகி நதியை அடைந்தார். சூல் முதிர்ந்த மான் ஒன்று அதில் நீர் பருக வந்தது. அங்குத் தோன்றிய ஒரு சிங்க முழக்கத்தால் தன் கருப்பம் நழுவ அது கலங்கி மாய்ந்தது. தாய்மான் மாயக் கூட்டி- தனியே சந்தளித்துத் தவித்தது. அதனை அரச முனிவர் கண்டார். அகமிக உருகினார். அதனை அணைத்தெடுத்துத் தமது தவச்சாலைக்குக் கொணர்ந்தார். அளவில்லாத காதலை அதன் மேல் வைத்தார். தமது அரிய ஞான உணர்ச்சி முழுதும் அச்சிறிய மானை வளர்ப்பதில் சென்றது. நெடுங்காலம் அருந்தவங் கிடந்து பெற்றெடுத்த ஓர் அரசிளங் குழவினையப் போல் அதனை இவர் பேணி வருங்கால் தமது உடம்பு நீங்குங் காலம் வந்தது. இளமான் பிரிவை நினைந்து நினைந்து இவர் உளமிக உருகினர். பின் உயிரும் பிரிந்தது. அம் மான்மேல் வைத்த அவாவினால் பின்பு ஒரு மானுருவே பிறந்தார். மந்திரலங்குன்றுதனை வலம்வரலில் திரிந்து சின்னாளில் மடிந்து பின் ஆங்கிரசோகாத்

24.00+043

திரத்தில் அங்கிரா என்னும் ஓர் அந்தணனுக்குப் புதல்வனாய்த் தோன்றி அவாவினால் எய்திய அல்லலையஞ்சி அதனை அறவே நீக்கி ஒன்றம் அறியாப் பித்தர் போல் திரிந்து பின் பிறப்பு நீங்கினர். அவாவே பிறப்பு ஈனும் வித்து என்பதும் அஃதற்றவர்க்கே பிறப்பு அறும் என்பதும் உலகம் இவர்பால் ஒருங்கே கண்டது.

(விரிவைப் பாகவதத்தில் காண்க)

திரியொடு நெய்சொறி வுற்ற செஞ்சுடர்
எரிதருங் கிருதவுற் றிலங்கு மாறுபோல்
விரியுமுக் குணத்தொடு மேவின் மாமனம்
உரைதரு பிறவியை ஒழிப்பதில்லையே. (1)

பன்னுமுற் பிறந்தையில் பரதன் என்னவான்
இந்திலம் புரந்திடர் அகற்றி யாவும்விட்
டுன்னிய தவத்தொடும் ஒழுகும் நாளினேர்
கன்னிமானுனை முழு மனம் கலந்திறத்தலால் (2)

அவ்வுனை முழு உருவமும் அடைந்துவிட்டபின்
இவ்வுருவெடுத்தனன் இன்னம் ஒன்றினும்
கவ்வைசெய் மனங் கதுவாது நின்றனன்
செவ்வியோய் பலக்கடற் செலவு மாற்றியே. (3)

இவை ரகுகுணனை நோக்கிச் சடபரதர் கூறியன. இவற்றால் மேற்குறித்த உண்மை இனிது தெளிவாதல் காண்க. அவாவே பிறப்பிற்கு வித்து என்பது இதனால் கூறப்பட்டது.

---

362 வேறொன்றும் வேண்டார் விரும்பிப் பிருங்கியேன்
கூறின்பங் கொண்டார் குமரேசா—தேறியே
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (2)

இ—ள்.

குமரேசா! ஒரு பொருளையும் தாம் வேண்டாதவராயிருந்தும் பிருங்கி முனிவர் வன் பேரின்பத்தை அடைந்தாரெனின்,

வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் அது வேண்டாமையை வேண்ட வருமென்க அது என்றது பிறவாமையை.

வேண்டத்தக்கதும், வேண்டியதை எய்தும் நெறியும் இதில் விளக்கியுள்ளமை காண்க.

பெரியோர் உள்ளம் ஒன்றை விரும்புங்கால் பிறவாமையே விரும்பும், அப்பிறவாமை ஒரு பொருளையும் விரும்பாமையை விரும்ப அவருக்குத் தானே எய்தும் என்பதாம்.

இனி, ஒருவன் ஒன்றை விரும்புங்கால் பிறவாமையையே விரும்பவேண்டும்; அது விரும்பாமையை விரும்ப தானே அவனுக்கு வரும் எனவும் இது பொருள்படும்.

அவா இல்லாதவர்க்குப் பிறப்பின்மை தானே யுண்டாகும் என்பது கருத்து.

மேல் பிறவிக்குக் காரணம் கூட்டினர்; இதில் பிறவாமைக்கு உபாயம் கூறினர்.

வேண்டாமைமால் வேண்டியது வரும் என்று அடிகள் உணர்த்திய ஒன்மையை இதில் ஊன்றியுணர்க. மெய்யுணர்வுடையவர் எதையும் விரும்பாமல் பிறவாமையையே வேண்டுவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருங்கி முனிவர்பால் உணரப்படும்.

கதை

பிருங்கி என்பவர் மூற்றத்துறந்த ஓர் முனிவர். தெய்வ காலம் தவத்தவம் புரிந்தவர். எல்லாத் தண்பங்களுக்கும் இறைவனே காரணம் என்பதை இனிது தெளிந்து அதனை அறவேவழுத்து உண்மைப் பொருளையே உளங்கொண்டிருந்தார். பிறவி நீக்கத்தையே பெற்றிடவிழைந்தார். இவர் தமது யோக மகிமையால் மேருமலையடைந்தார். அங்கு அருளுருவாகி யிறைவியோடு எழுந்தருளியிருக்கும் இறைவனைக்கண்டார். தெவிட்டாத பேரின்பத்தினெல்லாம் எளிதில் எய்தினிடம் என்பது கருதி அவர்

றை வேண்டாதவராய் ஐயீண்மாத்திரம் வலம்வந்து வழிபட்டார். அம்மை சிறிது தனிவுடன் அம்முனிவரை நோக்கத் தமது கூருகிய உடல் வலி குன்றி உதிரமும் கசையும் ஒருங்கே உதிர்ந்தன. முனிவர் தளர்ந்தார். உடனே ஒரு காலும் கோலும் அவர்க்குக் கண்ணுதல் உதவி அம்மைமக்கு உண்மையை உணர்த்தினார். பிரிந்திருந்ததனலன்றே இப்பிரிவினை வந்ததென்று கருதி அம்மை அருந்தவம் புரிந்து ஐயன் இடங் கலந்திருந்தார். அதனையே அத்த நாரீசன் என்பர். மீண்டும் முனிவர் வேறொன்றையும் வேண்டாமல் பிறவாமையையே வேண்டி வணங்கினர். அவரது அவாவற்ற தன்மையை வியந்து அம்மையும் அருள்புரிந்தருளினார். முனிவர் பின் பிறவாமையையே பெற்று மகிழ்ந்தார். மெய்யுணர்வுடையவர் பிறவாணையையே வேண்டுவர் என்பதும் அவா இல்லாதவர்யதே அச்சமுண்டாகும் என்பதும் உலகம் இவர்பால் கண்டது. (வினைவச் சிலதகியத்தில் காண்க)

அவா அற்றவர்க்கே பிறப்பு அறும் என்பது இதனுல் கூறப்பட்டது.

---

363 மேலரகும் கன்னிகையும் வேண்டாதென் வேதசரர்
கோலமுறச் சென்றூர் குமரேசா—சிலமுடன்
வேண்டாமை யன்ன விழுச் செல்வம் சண்டில்லை
யாண்டும் அச்சமதாப்ப தில். (கூ)

இ—ள்.

குமரேசா! வேதசரர் என்பவர் அரசு செல்வத்தையும் அரசினது குமரியையும், வேண்டாமென்று விடுத்து என் வினைந்தூரசென்றூர் எனின், வேண்டாமை அன்ன விழுச்செல்வம் சண்டு இல்லை ஆண்டும் அச்சது ஒப்பது இல்லை என்க.

வேண்டாமை அன்ன—அவாவாமை போன்ற.

விழுச் செல்வம்—மேலான செல்வம்.

சண்டு ஆண்டு என்பன இவ்வுலகத்தையும் அவ்வுலகத்தை

யும் குறிக்து நின்றன. யாண்டு என்று கொண்டால் எவ்வுலகத்தும் இல்லை என்று கொள்க. உம்மை இறந்தது தழுவியது.

அவாவின்மையானது தன்னிடையவனுக்கு அளவில்லாத பெருஞ்சிறப்பினை அமைய நல்கும் ஆதலால் அது விழுச்செல்வம் என நின்றது. கவலையாதுமின்றி இருமையினும் இன்பம் பயக்கும் அருமையை விழுமிய என்னும் அடை விளக்கிநின்றது.

மேல், வேண்டாமையால் பிறவாமையுண்டாம் என்றார் இதில் விழுமிய செல்வமாய் நின்று இம்மையிலும் அது மேன்மையைத் தருமென்றார். துறக்கத்தில் இருப்பினும் அவாவுடையவர் மேலும் மேலும் விரும்பித் தலைக்கழகியே யடைவராதலால், அவா இன்மையன்ன நன்மை ஆண்டும் இல்லையாயிற்று.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவா எனப்படுமே. என்றதுங்காண்க.

அவாவாமைபோல் ஒத்த செல்வம் இவ்வுலகத்தில்லை; அவ்வுலகத்தும் அதனை ஒப்பது இல்லை என்பதாம்.

இல்வாழ்வார் செல்வத்தாலும் துறவிகள் அவாவின்மையாலும் சிறப்புறுவர் என்பது குறிப்பு. செல்வமுடைமையும் அவாவின்மையும் இருவகை நிலைபார்க்கும் முறையே உரிமையாம் என்க. அவா இன்மையே அறிவோர்க்கு விழுமிய செல்வம் என்பது கருத்து,

மெய்யுணர்வுடையவர் அவாவின்மையையே விழுமிய செல்வமாகக் கொள்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வேதசார்பால் உணரப்படும்.

கதை.

வேதசார் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் வடநாட்டிலிருந்த சயசீலன் என்னும் ஓர் வேதியன் புதல்வர். சிலர் இவரை அரச மரபினர் என்பர்; பலநூற்புலமையும் இவர் நலனுறப் பெற்றவர். நிலையாமையைத் தெளிந்து

இளமையிலேயே உலகைத் துறந்தவர். தனியிடமொன்றில் இனி தமர்ந்திருந்து தனித்தவம் புரிந்தார். நாள் பல கழிந்தபின் ஓர் நக ரினை அடைந்தார். அங்கு அந்நாட்டு வேந்தனுடைய அருமை மகளின் சுயம்வரம் நிகழ்ந்தது. சுயம்வரம் என்பது ஒரு பெண் தனக்கு விருப்பமான ஒருவனை மணமகனைத் தானே வரித்துக் கொள்வது. வேறு ஆண் மகவின்றி அவளே அவ் அரசுக்குரிய ளாயிருந்தனள். அதனால் அவளை அடைபவனே அவ் அரச பத வியையும் அடைவான் என்று அறிவித்திருந்தது. அவ் இருவகை நலனுங்கருதி ஆயிரக் கணக்கான அரசர்களும் பிறரும் வந்து அங்குக் குழுமியிருந்தனர். அரசிளங்குமரி தாதிகள் புடைசூழ வந்தாள். அவைநடுவேயிட்டிருந்த உயர்ந்தபீடத்தின் மீது உவந்து ஏறினாள். அப்போழுதினைக் கண்ட அளவில் அவ் அவையில் உள வாய உவகைக்கு அளவேயில்லை. நாற்புறமும் நயந்து நோக்கி னாள். மிக்க அலங்காரத்துடன் எனக்கு எனக்கு என்று தத்தம் தலைகளை நீட்டிக்கொண்டு எதிர்நோக்கியிருக்கின்ற எவரையும் அவள் விரும்பவில்லை. இவ்விசேடத்தைக் ஒரு மூலையில் ஒதுங்கி நின்று பார்த்துக்கொண்டிருந்த நமது வேதசரையே விரும்பி னாள். தன் கையில் இருந்த மலர்மாலையை இவருக்குச் சூட்டு தற்கு விரைந்து வந்தாள். இவர் வேண்டாமென்று வெருண்டு சென்றார். அவளுந் தொடர்ந்து அடவியையடைந்தாள். அவளை நோக்கித் தம் மனவுறுதியை உணர்த்தி இதம் பல மொழிந்தார். அவள் உணர்ந்தாள். ஆசை வெறுத்துத் தவநெறி நின்றாள். சிறந்த அழகையையும் உயர்ந்த பதவியையும் ஒருங்கே வேண்டா மென்று வெறுத்துச் சென்ற இவரது துறவின் பெருமையை அமரரும் வியந்தார். அவாவில்லாதவர் இருமையினும் பெருமை எய்துவர் என்பதை உலகம் இவர்பால் கண்டது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

அவா இன்மைபோல் மேன்மையான செல்வம் வேறெங்கும் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது.

364 மாசில் நமசிவயர் வாய்மையொன்றே வேண்டுமெல்லாம்
கூசியன் றீத்தார் குமரேசா—ஆசகன்ற
தானுய்மை யென்பதவாவின்மை மற்றது
வாயுய்மை வேண்ட வரும். (சு)

இ.—ள்.

குமரேசா! நமசிவாயர் யாதேனும் அவாவறின்றி மெய்ப் பொருள் ஒன்றையே என் மேனி நின்றார் எனின், தூய்மை என்பது அவா இன்மையே; அது வாய்மை வேண்ட வரும் என்க.

அனபெனடைகள் இணை நிறைத்து நின்றன.

தூய்மை என்றது முத்தியை; மாசற்றது என்பதாம்.

வாய்மை என்றது கடவுளை; மெய்ப்பொருள் என்றபடி.

அவா இன்மையை மேல் விழுப்பிய செல்வம் என்றார்; இதில் அதுவே முத்தியின்பம் என்றார்.

முத்தி என்று சொல்லப்படுவது அவாஇன்மையேயாம்; அது மெய்ப்பொருளை விரும்பத் தானே எய்தும் என்பதாம்.

ஆசை இன்மையே முத்தி என்பதும் அது மெய்ப்பொருளைச் சிந்திக்கலால் தானே வந்துசேரும் என்பதும் இதன் கருத்தாமென்க. இனி, தூய்மையைச் சுத்தம் என்றும் வாய்மையைச் சத்தியம் என்றும் கொண்டால், சுத்தம் என்பது ஆசையின்மையாம்; அது சத்தியத்தை விரும்பத் தானே உண்டாம் என்று கொள்க. அவா இல்லாதவர்க்கே மோனபம் உண்டாம் என்பது குறிப்பு.

அவாவற்று மெய்ப்பொருளைப் பற்றினோர் பிறவா இன்பத்தை விரைவில்எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை நமசிவாயர் பால் உணரப்படும்.

கதை.

நமசிவாயர் என்பவர் சற்றேறக்குறைய இற்றைக்கு அறு நூறு ஆண்டிகட்கு முன்னர்த் திருவண்ணாமலையி லிருந்தவர். அத்தலத்தில் துறவியாய்த் தனித்திருந்த குகை நமசிவாயர் என் னும் ஞானயோகிபால் பேரன்புடையவர். பல நூல்களிலும் நல்ல பயிற்சியுள்ளவர். செய்யுள் இயற்றும் திறமையும்வாய்ந்தவர். உலக நாட்டமின்றி உண்மைப் பொருளையே உளத்திற் கொண்ட வராய் ஒழுகி வருகின்ற இவர் தமது ஆடையை இரு கைகளா லும் பிடித்து ஒரு நாள் விரைந்து தேய்த்தார். என் தேய்த்தாய் என்று ஆசிரியர் இசைத்தார். தில்லைப் பரமன் திருமுன் நின்ற திரைச் சீலையில் நெருப்புப் பிடித்தது அதனை அவிக்கத் தேய்த் தேன் என்றார். ஆசிரியர் உற்றதை முற்றும் வினவி உண்மை யென்று உணர்ந்தார். சீடரது முற்றுணர்வைத் தெளிந்து வியந் தார். "குருவே" என்று அழைத்தார். அதுமுதல் இவரைக்குரு நமசிவாயர் என்று உலகம் கூறி வந்தது. தேசிகர் தில்லைக்கேகென் றார். ஆசிரியர் பணித்தபடியே, இவர் சிதம்பரத்தை அடைந்தார். இவரது அன்புக்கிரங்கி அம்பிகையே வந்து பொற்கலத்தில் அன் னம் ஊட்டி அகன்றார். அத்தலத்திலிருந்து சித்திகள் பலசெய்து வந்தார். இவரது மேன்மையைத் தெளிந்து ஆயிரக் கணக்கான பேர்கள் தங்களைக் குருவாகக் கருதித் தம்மாவியன்றனை இவர் முன் காணிக் கையாகச் செலுத்தினர். அவற்றுள் ஒன்றையுந் தீண்டாது ஒதுங் கியிருந்தார். கிடந்த பொருள்களைக் கண்டவரெல்லாம் கொண் டே சென்றார். மெய்ப்பொருள் ஒன்றையே இவர் விரும்பியி ருந்தார்.

ஈசனை யிருத்தும் இதயத் தோர்பொருள்
ஆசையை பிருத்துதல் அந்த ணாளர் தாம்
யாசமுற் றிடும் ஒரு மனையில் புண்பவ
நீசனை யிருத்துதல் நிகர்க்கும் என்பரால், என்னும் உண் மையை இவர் இனிதுணர்த்தினர். அவா என்பது யாதும் இன்றி,

இறைவனருளாலே அவாவினின்ற இவர் நெடுங்காலங் கழிந்த பின் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கு ஈசர வருடம் வை காசிமதியில் நவமிதிதியில் இறையருளாளரில் இரண்டறக்கலந் தார். அண்ணாமலை வெண்பா, பரமரகசிய மாலை முதலிய சில நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. வேறு ஆசையினாலாய் மெய்ப் பொருளாலே விருப்பினுள்ளவர்க்குப் பிறவா இன்பம் விளைவில் உண்டாம் என்பதை உலகம் இவர் பால் கண்டது. (விரிவை அருணை மான்மியத்தில் காண்க)

அவா இன்மையே முத்திநிண்பம் என்பது இதனால் கூறப் பட்டது.

---

365 ஆசையற்ற நாதர்பின் அற்றயர்க்கார் மற்றவரென்
கூசிய நொந்தார் குமரேசா — ஆசறவே
அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றர் அற்ற திலர். (இ)

இ.—ள்.

குமரேசா! அவா அற்ற நாதர் பிறவியற்றார்; அஃது அறுத கபி முதலானோர் தோற்றிருந்தும் என் பிறந்து உழன்றார் எனின், அற்றவர் என்பார் அவா அற்றோர்; மற்றையார் அற்றத அறாதது இலர் என்க. அற்றவர் என்பதற்கு ஈண்டு இயைந்த ஒன்றை இயைத்துக்கொள்க.

மற்றையார் என்றது அவா அறுதவர்களை. அற்றதாவது — அத் தன்மையாக; அஃதாவது அவா அற்றார் பிறவி அற்றதுபோல.

பிறவி அற்றவர் என்று சொல்லப்படுவார் அவா அற்றவரே அஃது அறுதவர் அவர்போல் பிறவி அற்றவராகார் என்பதாம்.

இனி, புறத்தில் பற்று அற்றவர் என்று சொல்லப்படுவோர் உளத்தில் அவா அற்றவரே; அவ் அவா அறுதவர் அவ்வளவாகப் பற்று அற்றவராகார் எனவும் இது பொருள்படும்.

அவா இல்லார்கவரே பிறவா இன்பத்தைத் தலைப்பெறுவர் என வும், அதனையுடையவர் பிறவித் துன்பத்தைதேடி அலைவர் என வும் இவ்வதிகாரத்தியலதென்க. விதி, மறை, என்னும் இரு சொல் யாலும் அவா அறுத்தாரது சிறப்பு இதில் விளக்கப்படுகிறது.

அவா அற்றவர்க்கே பிறவி அறும் என்பதும் அவ்வா வர்க்குப் பிறவி அறுதல் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. வுண்மை நாரதர்கண்ணறியும், கபிலதேவரிலும் உணரப்படும்.

கதை

நாரதர் என்பவர் பிரமாவின் மானச புதல்வர். முனிவர் கணத்துள் முதன்மை வாய்ந்தவர். நெடுங்காலம் பெய்யாதிருந்த மழை இவர்பிறந்தவுடனே பெய்ததால் இவருக்கு நாரதர் என்று பெயர்வந்தது என்பர். நாரம்—நீர். யாழ்இசையில் இவர் மிகவும் வல்லவர். பாரதியம் என்னும் ஓர் இசை நூலை இயற்றியுள்ளார். இவரது யாழுக்கு மகதி என்று பெயர். முற்றத் துறந்தவர். தத்துவவுணர்வினர். ஒரு நிலையின்றி எவ்வுலகங்களிலும் இனிது திரிபவர், மனிதர்களாயினும் தேவர்களாயினும் செருக்குக் கொள்வராயின், உடனே சென்று அவர்களது சிறுமையை வெளிப்படுத்தித் திருத்திவிடுவர். இவரது நடை, உடை, பாவனை, பேச்சு, செயல் எல்லாம் விசித்திரமுள்ளனவேயாம். இவருக்குக் கலகப்பிரியரென்று ஒரு பெயரும் உண்டு. ஆனால் இவர் மூட்டும் கலகங்கள் மறைந்தடிந்து உயிர்களுக்கு நலம் புரிவனவாகும். இவர் செய்துள்ள மித்திர பேதங்கள் அளவிடலரியன. அனைவராலும் இறுதியில் இதமாகவே காணப்பட்டன. இவரது பெயரைக் கேட்ட அளவில் அமரர் முதல் அனைவரும் அடங்கி ஒழுகுவர். அவரே எல்லாத் துன்பங்கட்கும் காரணம் என்பதை இனிது தெளிந்து அதனை இவர் அறவே அறுத்தார். அதனால் பிறவி நீங்கிப் பெருநலமுற்றார். அரிச்சந்திரன், தருமன், சித்திரசேனன், முதலிய அரசர் சிலரும், சுகர் அரிய சுவர் முதலிய முனிவர் பலரும் இவரது ஞான மொழிகளைக் கேட்டு மேன்மையடைந்தனர். அவா அற்றவர்க்கே பிறவி அறும் என்பதை உலகம் இவர்பால்உணர்ந்தது. விரிவைப் பிரமனைவந்தடுத்தில்காண்க.)

கதை 2.

கபி, இமசரன், குலோதனன், தூடன், பிகரன், பிதுர்வர்த்தி, சொருபன் என்னும் இவ் எழுவரும் பரத்துவாசருக்குப் புதல்வராய்த் தோன்றித் துறவிகளாயினர். கார்க்கவ முனிவனை யடுத்துக் கலைகளுணரும் பயின்றார். ஆயினும், பொறியின்பங்களை அவாவி அறிவில் செயல்கள் புரிந்தார். அதனால் இவரனைவரும் வேடராகப் பிறந்தார். வெம்பழி அடைந்தார். அவர் அழிதவர்க்குப் பிறவி அழிதென்பதை உலகம் இவர்பால் எளிதே கண்டது. விரிவைச் சிவமகாபுராணத்தில் காண்க.

அற்றன் என்று சொலப்படுவான் ஆசையற்றன் ஒருவனே
மற்றுதரவினஃதொன்றும் வைத்துப் பிறதேவதைக்களெல்லாம்
செற்றுண்ணினும் அலையாக்குரங்கு செயிர்த்துண்பதன்றோனையன்றி
உற்றார் ஊணங்குறும் அவன்போல ஒழிந்தான்விசால்லாவுறுபிறவி

(சூசேலோபாக்கியானம்)

அவா நீங்காதவர்க்குப் பிறவி நீங்காதென்பது இதனால் கூறப்பட்டது.

---

366 கூடுமவா வுக்கஞ்சிக் கோசிகரும் மாகதரும்
கோடியேன் சென்றார் குமரேசா — நாடியென்றும்
அஞ்சுவ தோராரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோராரும் அவா. (சு)

இ—ள்.

குமரேசா! கோசிகரும், மாகதரும் அவாவினை அஞ்சி ஏன் திசைகள் தோறும் அகன்றார் எனின், ஒருவனை வஞ்சிப்பது அவாவே; ஆதலான், அதனை அஞ்சுவதே அறன் என்க.

ஓரும் என்பன இரண்டும் ஆசை நிலைகளாய் நின்றன. ஒருவனை என்றது பிறவியற நின்ற அறிவனை என்க.

பற்றற்று மெய்யுணர்வெய்தி முத்தியை அடையவிருக்கும் நற்றவருள்ளத்துமே அவா மெல்லப் புகுந்து அவரைத் தன்வய மாக்கிக் கெடுத்துவிடுமாதலால், "அவா வுஞ்சிப்பது" என்றார்.

ஒருவனை மயக்கிக் கெடுக்க வல்லது அவாவே ஆதலால் அதனை அஞ்சிக்காப்பதே அறனும் என்பதாம்.

ஒன்றுக்கும் அஞ்சாத துறவோர் ஆசையை அஞ்சிக் காக்க வேண்டுமென்றது, தாம் பெறுகின்ற இன்பத்துக்கு உறுபகையா யிருப்பது அதுவேயாகலான் எனக. ஆசையைத் தம் உள்ளத் தில் புகவொட்டாதபடி உண்மைப் பொருளையே உணர்ந்து பாவித்து உயர்வாது நிற்றலே துறந்தவர்க்குச் சிறந்த அறம் என்பது குறிப்பு.

அவாவினை அஞ்சிக் காத்தலே துறவோர்க்கு அறம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோசிகர் கண்ணோட்டமும் கதர்பாலும் உணரப்படும்.

கதை

கோசிகர் ஆசையைத் துறந்து தமது நகரைவிட்டகன்று கிழக்குத் திசையை நண்ணி அருந்தவம் புரிந்திருக்குங்கால் இவர் தவ நிலையைச் சிதைக்க விரும்பி இந்திரன் திலோத்தமை யை அனுப்பினன். அவளும் இசைந்து ஆங்கு வந்து இருந்தவர் முன்னே பொருந்தி நின்றாள். அவள்தம் உருவ அழகைக்கண்டு இவர் உளங்கரைந்துருகினர். மன நிலை குலைந்து மயல் மிகக் கொண் டார். அவள் இணங்க, உவந்து அணைந்து மகிழ்ந்தார். அவளது போகக் கடலில் புகுந்து தாழ்ந்திருந்த இவர் சிறிதுகாலம் போன பின் போதந் தோன்றப்பெற்றார். தம் பிழைகருதி இரங்கினர். பெருங்கி எழுந்தார். அவாவின் கொடுமையை அஞ்சி நடுங்கினர். இவ்வஞ்சம் இந்திரன் செய்ததென்றுணர்ந்து அவ்வஞ்சியை நோக்கி வஞ்சினங் கொண்டார். மண்மகளாகென்று அப் பெண்மணி யைச் சபித்தார். அங்கிருந்தால் இன்னும் வஞ்சம் நிகழுமென்று

அஞ்சி அகன்றார். தென்திசையடைந்து திருந்திய தவத்தைச் செய்து தெளிந்திருந்தார். அங்கும் தமது உள்ளத்தில் அவாவும் வெகுளியும் அற்பற்ற அஞ்சி அதனையகன்ற மேல் திசை நண்ணினார். ஆண்டும் அஞ்சி அதனைவிட்டகன்ற வடதிசை புகுந்து திடமுடனிருந்து யாதோரவாவும் தம்மையணுகா வண்ணம் அஞ்சிக்காத்து எவரும் அடைதற்கரிய உயர்பதம் அடைந்தார் அவாவை அஞ்சிக் காப்பதே துறவோர்க்கு அழகு என்பதை இவர் உணர்த்தி நின்றார். (விரிவை இராமாயணத்தில்காண்க.)

கதை 2.

மாகதர் என்பவர் வசிட்டரது மரபில் தோன்றியவர். சிறந்த துறவொழுக்கமுடையவர். இவர் மேருவின் தென்பால் மர்ந்து தவம்புரிந்திருந்தார். வீடுபேறெய்தற்குரிய விழுமிய நலன்களெல்லாம் ஒருங்கே மேவியிருந்த இவர்பால் விபுதை என்னும் ஓர் அசுர கன்னிகை வந்தாள். அசுர குலத்துதித்தோர் தலைமையான புதல்வனைப் பெறற்கருகி அசுர குருவாகிய சுக்கிரரே அவளிடம் அனுப்பினார். அவளது எழிலைக் கண்டு முனிவர் அழனிடி மெழுகாய் அவா மேற்கொண்டார். அருகிலணைந்து உருகி மொழிந்தார். அவள் இசைவுற மருவி களைபுற இருந்தார். தான் பல கழிந்த பின் நல்லுணர்வெய்தினர். ஆசை நோயால் தாமடைந்த மாசினையோர்ந்தார். அஞ்சி நடுங்கி அவளை அகல விடுத்தார். இவனைத் தோய்ந்த நலத்தால் அவள்பால் கபமுனன் தோன்றினன். தமது இழிநிலையினை எண்ணி எரியுறு தளிர்போல் வாடி இன்னலுங்கடலுட்பட்ட முனிவர், வேதோரிடத்தை அடைந்து ஆசையை அறவே நீக்கி ஈசனை நோக்கி அருந்தவம் புரிந்தார். அவாவின் வஞ்சத்தை அஞ்சி அகற்றலே அறிவோர்க்கு அறம் என்பதை உலகம் இவர்பாலும்உணர்ந்தது. (விரிவைக் கந்த புராணத்தில் காண்க.)

மெய்ப்பொருளுணர்தல் முடிவாக வேண்டுங் கருவி யெலாம் பெற்றுச் செய்யமுத்தி யடைவதற்குச் சிறந்தவேளாண்மறவிவழிப்

பையத் துணைழந்து பவமீட்டும் பாய்த்திக்கெடுக்க வல்லதவா
ஐய அதனுக்குளாகுங்கி அஞ்சிக்காத்தல் அறிஞர் தொழில்.

(குசேலோபாக்கியானம்)

அவாவை அறுத்தலே அறிஞர்க்கு அறம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

367 சாருரும் அவாவறுக்க தத்தாத் நிரையரின்பம்
கூருநின்றூர் எண்னே குமரேசா—நேருரும்
அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றுன் வருரும். (எ)

இ—ள்.

குமரேசா! ஒரு பொருளையும் அவாவாத தத்தாத்தி னையர் யாதொரு துன்பமுமின்றி எல்லா நலங்களையும் என் எனிதில் எய்திஞர் எனின், அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை தான் வேண்டும் ஆற்றுன் வருரும் என்க

ஆற்ற என்பது மிகுதியை யுணர்த்தும். ஈண்டு அது மூழுதும் என்பதைச் சுட்டி நின்றது.

அவாவினை ஆற்ற அறுப்பின்—ஆசையை அறவொழிப்பின். தவாவினை என்றது விடாத அறங்களை; அறமே அழியாதலினை யாதலால் அதனைத் தவாவினை என்றூர்.

ஆசையை ஒருவன் அறவே ஒழித்தால், அழியாத நலங்கள் எல்லாம் அவன் விருப்பியவாறே உளவாம் என்பதாம்.

மேல் நெஞ்சு புகாவண்ணம் அவாவினை அஞ்சிக் காக்கவேண்டும் என்றூர்; அதனல் பயன் யாது என்பார்க்கு இது கூறிய தென்க. ஆசையில்லாதவன் அழிவில் இன்பத்தை எனிதில் எய்துவன் என்பது கருத்து.

அவாவின்மை முற்ற வறுத்தவன் அருந் தவத்தின் பெரும் பயன் யாவும் ஒருங்கே எய்துவான் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை தத்தாத் நாயர் பால் உணரப்படும்.

கதை.

தத்தாத்நாயர் என்பவர் அத்தினி முனிவருடைய அருந் தவப் புதல்வர். இவர், கண்ணன் தோன்றுதற்குப் பதினெரு தலைமுறைகளுக்கு முன் அயுத்தியிலிருந்த எது என்னும் அரசனுடைய காலத்திருந்தவர். உயர்ந்த ஒழுக்கமுடையவர். பொறியின்பங்களை அறவே வெறுத்தவர். குளிர்மதி போல் எப்பொழுதும் இனிய இயல்பினர். முனிவர் சிலர் சீடராகி இவரை அணுகியிருக்க விரும்பினர். அதனையும் பற்றும் என்று கருதி அவரனைவரையும் அகன்று சென்று தியம் பரதராகித் தனியேயிருந்தார். மேட்டைடமேல்சென்ற எதுமேவந்தன் ஒருநான் இவரைக் கண்டு ஒன்றுமிலராயிருந்தும் எல்லாமடைந்த வர்போல் இன்பரிமயத்திருக்கும் இவரது திருமுகப் பொலிவை வியந்து "உடைகோவணமுமின்றி எதுவுள் இங்ஙனம் உவந்திருக்கின்றீர்" என்றுபணிந்து வினவினன். முனிவர் அருளுடன் நோக்கி அவாவின் தீமையையும் அதனை அறுத்தார்க்கு உளவாம் நலங்களையும் பல உதாரணங்களால் இனிது விளக்கினர். அரசனும் உணர்ந்து அவா அற்று உயர்ந்தான். அருங்கலம் புரிந்து வருந்தியடையவேண்டிய உயர்ந்த பதங்களை இருந்த இடத்திருந்தே இவர் வருந்தாதடைந்தார். அமரரும் முனிவருமிவரது அவாவற்ற தன்மையை வியந்து போற்றினர். அவாகிறுமும் இலராகியஇவர் எண்ணிய நலங்களை எண்ணியாங்கெய்தி அழிவின்பத்தை முடிவில அடைந்தார் அவாவின்மை அறவே அறுத்தவர் விரும்பினஎல்லாம் விரைவில் அடைவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்துதெளிந்தது. (விரிவைப்பாகவதத்தில்காண்க.)

ஆசை அறுமின்கள் ஆசை அறுமினைகள்
ஈசனே டாயினுமே ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே. (திருமந்திரம்.)

அவா இல்லாதவர்க்கு எல்லா கலங்களும் எளிதிலுளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

368 அன்ற மழிதைசயின்பம் ஆர்ந்தார் அவாவுற்றுக்
குன்றினரேன் நால்வர் குமரேசா—என்றும்
அவாவில்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேடல்
தவாஅது மேன்மேல் வரும். (அ)

இ—ள்.

குமரேசா! பொருளை விரும்பாமல் சென்ற திருமழிசை யாழ்வார் இன்பமுற; அதனை அவாவி நின்ற நால்வர் என் துன்ப முற்றார் எனின், அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும்; அஃது உண்டேல் தவாது மேல் மேல் வரும் என்க.

அஃது என்றது அவாவை.

தவாது—குன்றாது. மேல் மேல் வரும்—இடைவிடாமல் வரும்.

அது என்னுஞ் சுட்டு துன்பத்தைக் குறித்து நின்றதாக் கொண்டு தவா அது எனப் பிரித்துக் காணினும் பொருத்தமாம்.

அவா இல்லாதவர்க்கு யாதொரு துன்பமும் இல்லை; அஃது உண்டாயின் எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடா மல் வரும் என்பதாம்.

துன்பங்கட்கெல்லாம் அவாவே காரணமாதலால் அதனை யுடையார்க்கு அவையுளவாதலும் அஃது இல்லார்க்கு அவை இலவாதலும் இயல்பாம் என்க.

ஆசையில்லாதவர்க்குத் துன்பம் இல்லையென்பதும், அதனை யுடையவர்க்குத் துன்பம் உண்டாம்என்பதும் இதில் உணர்த்தப் பட்டன. இவ்வுண்மை திருமழிசையாழ்வார் கண்ணனும் சிறுக கண்ண முதலிய நால்வர்பாலும் உணரப்படுமே.

கதை.

திருப்பழிசையாழ்வார் என்பவர் திருமாலடியவருட் சிறந்தவராகிய ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர். இவரது காலம் இற்றைக்கு எண்ணூறு வருடங்கட்கு முன்னராகும். சிலர் துவாபர யுகத்தின் பிற்பகுதியில் சித்தார்த்தி வருடம் மைமாதத்தில் பிருது மூனிவரது சுவமகிடையால் ஓர் அரம்பையால் இவர் தோன்றினர் என்பர். பேறுவாரின்றி வனத்தில் தனியே கிடந்து அழுதுகொண்டிருந்த இவரை வேடனொருவன் எடுத்துச் சென்று தன் மனைவியால் தந்து இனிது வளர்த்தான். பருவம் எய்தியபின் உலகைத் துறந்துபோய்த் தனியேயிருந்தார். அருந்தவரனைவரும் வியந்துபோற்றத்தக்க தெளிந்த ஞானியாய்ச் சிறந்து விளங்கினர். எல்லாச் சித்திகளும் இவரெய்தியிருந்தார். மாலைப்பொழுதில் தனியே செல்லுங்காலத்தில் வழியே கிடந்த பல பொற்காசுகளைக் கண்டு "ஆட் கொல்லியா கிடக்கின்றது" என்று சொல்லி அகன்று சென்றார். வாணிகத்தின்பொருட்டு அவ்வழியே வந்த சிறுகனன், சேனன், பலகன், தேவகன் என்னும் நால்வரும் அச்சொல்லைக் கேட்டு அந்த இடத்தை அடைந்தார். கிடந்ததைக் கண்டார். இப்பொன்னை விரும்பாமல் விரைந்து சென்றவன் பித்தன்போலும் என்று எள்ளி நகைத்து அவற்றை எடுத்துச் சென்று அங்கோர் தனி இடத்தை அடைந்து நால்வரும் பங்கிடத் துணிந்தார். உண்டபின் பகுந்துகொள்ளலாம் எனறு சிறுகனன் கூறினன். பலகனும், தேவகனும் அயலிருந்த நகரில் அன்னம் வாங்கச் சென்றார். போனபின்னர் இருந்த இருவரும் அப்பொன்னைத் தமக்கே உரிமையாக்கக் கருதி அவ் இருவரையும் கொல்லத் துணிந்து குறிக்கொண்டிருந்தார். சென்றவரும் அதனைத் தாமே கொள்ளவிரும்பியதால் திருப்புங்கால் சோற்றில் மிகுதியாக நஞ்சைக் கலந்து கொணர்ந்தார். வந்தவர் தந்தனை இருந்தவர் வாங்கினர். அவ் இருவரையும் நீர் கொண்டுவர ஏவினர். அவர் கூவத்திலிறங்கி நீர் மொண்டு நிற்குங்கால் குப்புறத் தள்ளி அவரை மேலாழாதபடி செய்து இவ்

இருவரும் மீண்டுவந்தார். இருந்த உண்வை விரைந்து உண்டார் விட வேகத்தால் உடனே மாண்டார். அவா இலராய் அகன்று சென்ற திருமழிசையார் யாதொரு துன்பமும் இன்றி அகமகிழ்ந்திருந்தார். அவாவுடைய நால்வரும் வழியோடு மாண்டார். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லை என்பதையும், அதனையுடைய வர் முடிவில்லாத துன்பத்தை அடைவர் என்பதையும், உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவை ஆழ்வார் சரிதையில் காண்க.)

அவாவே துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

369 என்றுமழி இன்பத்தை ஏமை பிருகுமுனி
குன்றுயல் கொண்டார் குமரேசா—என்றுமே
இன்பம் இடையழி தீண்டும் அவாவென்னும்
துன்பத்துட் டுன்பங் கெடின். (கூ)

இ—ள்.

குமரேசா! அவாநீங்கியபின் பிருகுமுனிவர் என் அழியா இன்பத்தை எய்தினர் எனின், அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின், இன்பம் இடையறாது ஈண்டும் என்க.

துன்பத்துள் துன்பம்—துன்பங்கள் எல்லாவற்றுள்ளும் மிக்க துன்பம். அவாவையே துன்பம் என்றது அதன் இயல்பும் தீமையும் கருதி என்க.

அவா என்று சொல்லப்படுகின்ற பெருந் துன்பம் ஒருவனுக்கு கெடுமாயின், இன்பமானது அவன்பால் இடையறாது வந்து பெருகும் என்பதாம்.

இனி, ஈண்டும் என்பதைப் பெயராகக் கொண்டால் இவ் உலகத்தும் இன்பம் இடையறாது என்று கொள்க. இதில் உம்மை ஈண்டும் என்பது தொன்றுநின்றமையின் எச்சவும்மையாம்.

அவாவினை ஒழித்தவன் அழிவில்லாத இன்பத்தை இடையறாது எய்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருகு முனிவர்பால் உணரப்படும்.

கதை.

பிருகு என்பவர் அந்தணர் மரபில் தோன்றிய ஓர் அருந்தவர். பிரமாவின் மானசபுத்திரருள் ஒருவர் என்பர். எல்லாக் கலைகளிலும் வல்லவர். பிறந்தபொழுதே பேரொளியுடையராயிருந்தமையால் இவர் பிருகு என்று பெயரிடப் பெற்றார். புலோமசை, கியாதி என்னும் மனைவியிருவரை மணந்து முதலில் இவர் இல்லறம் புரிந்தார். முற்றத் துறந்த முனிவர்களும் இவரது சிறந்த தவ ஒழுக்கத்தைக் கண்டு புகழ்ந்து போற்றினர். திருமாலோடு அமர் புரிந்திகந்த அசுரர் சிலர் இவருடைய முதல் தேவியிடம் வந்து அடைக்கலம் புகுந்தார். அந்த அம்மையார் அவர் அல்லலும் அடையாதபடி அவர்கட்கு அருள் புரிந்தனுப்பினள். அதனால் மால் சினந்து அவளை மடியச் சபித்தார். அவள் மாண்டமையறிந்து முனிவர் மாலை நோக்கி "நீர் மண்மேற் பிறந்து மனைவியைப்பிரிந்து வருந்துவீர்" என்று சபித்தார். அதன் பயன்தான் இராமாவதாரத்தில் நிகழ்ந்தது என்பர். இறந்த மனைவியைத் தமது தவ மகிமையால் முனிவர் எழுப்பிக்கொண்டார். பின்பு துன்பங்களே மலிந்துள்ளன என்று கருதிப் பிறவியை வெறுத்தார். எல்லாத் துன்பங்கட்கும் அவாவே காரணம் என்று தெளிந்து அதனை அறவே அறுத்தார். அதனால் அல்லல் யாதுமின்றி ஈண்டும் அமர்ந்து இன்புற்றிருந்து பின் மீண்டும் வாரா மேண்மையை மேவினர். அவா ஒழியின் இருமையிலும் இன்பம் மிகும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைத் தேவிபாகவதத்தில் காண்க. அவா ஒழியின் அணவில்லாத இன்பம் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

370 அன்றேன் அரியசுவர் ஆசையற்ற அப்பொழுதே
குன்றுஇன் புற்றூர் குமரேசா— என்றுமே
ஆரா இயற்கை அவாநீப்பின் அங்கிலையே
பேரா இயற்கை தரும். (ஐ)

இ—ள்.

குமரேசா! அரியசுவர் என்பலர் அவா நீங்கிய அப்பொழுதே என் பிறவா இன்பம் பெற்றார் எனின், ஆரா இயற்கை அவா நீப்பின் அங்நிலையே பேரா இயற்கை தரும் என்க.

ஆரா பேரா என்பன ஆர்தல் பேர்தல் என்னும் வினையடியாகப் பிறந்த எதிர்மறை யெச்சங்கள்.

ஆர்தல்—நிறைதல். பேர்தல்—நிலைதிரிதல்.

ஆரா இயற்கை அவா—நிரம்பாத இயல்பினையுடைய ஆசையும்.

பேரா இயற்கை என்றது முத்தியை; என்றும் நிலைதிரியாத இயல்பையுடையதாதலால் அஃது இங்ஙனங் கூறநின்றது.

ஒருகாலும் நிறைதலில்லாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் ஒழித்துவிடுவானாயின் அப்பொழுதே அஃது அவனுக்கு வீட்டுன்பத்தைக் கொடுத்துவிடும் என்பதாம்.

அவா நீங்கியபொழுதே ஒருவனுள்ளத்தில் பேரின்பம் ஓங்கிவிடும் என்பது கருத்து.

ஒருகாலும் நிறையாத அவாவினை ஒழித்தவர் என்றும் நிலையான இன்பத்தை எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரியசுவர் பால் உணரப்படும்.

கதை.

அரியசுவர் என்பவர் தக்கனுடைய புதல்வர்களை. தாய பெயர் வேதவல்லி. இறைவனருளால் பதினாயிரவராக இவர்

இசைந்து தோன்றினர். இவரிவரென்றும் ஒரு தொகையாக அரியசுவர் என்றே பெயர். உருவிலும், குணத்திலும், அறிவிலும், அழகிலும், ஒரு நிகரானவர். தக்கன் விருப்பியாங்கு படைப்புத் தொழிற்குரிய உயர்ந்த பதவியைத் தாம் அடைய வேண்டி இவர் தவத்திற்கேகினர். விந்த மலைச் சாரலில் விளங்கியிருந்த ஓர் அழகிய பொய்கையை அடைந்து தாம் விரும்பியதை மேவ அருந்தவம் புரிந்தார். ஆண்டுகள் பல கழிந்தபின் ஆண்டு நாரதர் வந்தார். தவம் புரி பாலரை வியந்து நோக்கினர். "யாது வேண்டி இம் மா தவஞ் செய்கின்றீர்" என்றார். அவரிவரும் உற்றதை யுரைத்தார். முனிவர் இரங்கினர். "எத்துணைச் சிறந்த பதவியாயினும் அதில் துன்பங்கள் நிறைந்தே யிருக்கும். துன்பங் கலந்த ஒன்றை இன்பமெனலாகுமா? மாசற்ற இன்பத்தையே நீர் மருவுதல் வேண்டும். அஃது ஆசையற்றவர்க்கே அமைவதாகும். உணர்வோர் பெறும் பயன் அவ்வையர் கலைமையாம்" என்று உண்மையை உணர உரைத்தார். அவரிவரும் உணர்ந்தார். உற்ற அவாவை முற்றும் ஒழித்தார். முத்தராகி உடனே முத்தியை அடைந்தார். நிறையாத அவாநீங்கியபொழுதே நிறைவான பேரின்பம் உண்டாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைக் கந்தபுராணத்திலும் பாகவதத்திலும் காண்க.)

ஆராத அவா அற்றபொழுதே போராத இன்பம் பெருகும் என்பது இதனால் கூறப்பட்டது.

நன்றாய் ஞானங்கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ்உலப்பிலதனையுணர்ந்தணைச்
சென்றாங் கின்பத்துன்பங்கள் செற்றுக்கழாந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடும் அதுவேவீடு வீடாமே.

(திருவாய்மொழி.)

மாடத்துளான் அல்லன் மண்டபத்தான் அல்லன்
கூடத்துளான் அல்லன் கோயிலுள்ளான் அல்லன்
வேடத்துளான் அல்லன் ஏவடஞ்சவிட்டோர் நெஞ்சின
மூடத்துளே நின்று முத்திதந்தானே. (திரு'மந்திரம்)

(இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்)

அவாவே பிறப்பிற்கு வித்து. அவா இல்லாதவர்க்குப் பிற வாமையுண்டாம். அவா இன்மையே அறிவார்க்கு அரும்பெருஞ் செல்வம். அதுவே முத்தியின்பமாம். அவா அற்றவரே பிறப்பு அற்றவராவார். தன் நெஞ்சிற் புகாவண்ணம் அவாவை அஞ்சிக் காக்கவேண்டும். அவா இல்லாதவர்க்கு எல்லா நலங்களும் எளிதில் உளவாம். அவா இல்லாதவர் இன்பத்தையும் அதனையுடையவர் துன்பத்தையும் அடைவர். தொலையாத அவா தொலையின் நிலையான இன்பம் விளையும். அது நீங்கிய அப்பொழுதே என்றும் நீங்காத இன்பம் எய்தும்.

நூ-வது அவா வறுத்தல் முற்றிற்று.

நூ அ-ம் அதிகாரம் ஊழ்.

அஃதாவது வினையின் விளவு. வினையாவது மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று காரணங்களிலிருந்து தோன்றுகின்ற நினைவு, சொல், செயல்கள். அவை நல்லனவாயின் நல்வினையாம். தீயன வாயின் தீவினையாம். நல்வினை இன்பத்துக்கும் தீவினை துன்பத்துக்கும் காரணமாகும். கடவுள் வாழ்த்து முதல் அவாவறுத்த லீறாக உரைத்தன யாவும் துன்பம் நீங்கி இன்பம் எய்தும் நெறிகளேயே இனி துணர்த்தின; மூன்பு செய்த நல்வினையே பின்பு நல்லூழாய் இன்பம் விளக்குமாதலால் இதுவரை செய்யாதொழிபினும் இனிமேலாவது அதனையே ஒருவன் செய்யவேண்டும் என்பதும், அடுத்துவருகின்ற பொருள், இன்பங்கட்கும் அவ் வூழே காரணமாகும் என்பதும், உறுதியாக உணர்த்தவேண்டியே இஃது இறுதியாக வண்டு வைக்கப்பட்டது. அதிகார முறைமையும் இதனையே புலனும்.

371 அன்றறிவர் நீரின் றகன்றார் மடிகொண்டு
குன்றினரேன் மற்றோர் குமரேசா.—என்றுமே
ஆகூழாற் றோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்றும் மடி. (1)

இ—ள்.

குமரேசா! வீமன் முதலிய அறுவரும் நீரின்று அகன்றார்; சகன் முதலிய எழுவரும் என் மடிகொண்டு மாய்ந்தார் எனின், ஆகும் ஊழால் அசைவின்மை தோன்றும்; கைப் பொருள் போகும் ஊழால் மடி தோன்றும் என்க.

ஆகு ஊழ், போகு ஊழ் என்னும் வினைத்தொகைகள் பொதுவாய் நின்று பெயரெச்சப் பொருளை மாத்திரம் உணர்த்தாமல் காரணப் பொருளவாய் நின்றன.

அசைவின்மை என்றது முயற்சியை. அசைவு—மடி.

ஒருவன் செய்த நல்வினை பின்பு நல்லூழாயும், தீவினை தீயூழாயும் வினைந்து அவனது இன்பதுன்பங்கட்கு முறையே காரணமாகுமாதலால் அவை ஆகூழ் எனவும், போகூழ் எனவும் அமைந்து நின்றன.

கைப்பொருள் ஆகற்கு ஏதுவாகிய ஊழால் ஒருவனுக்கு முயற்சி உண்டாம்; அஃது அழிதற்கு ஏதுவாகிய ஊழ் தோன்றினால் மடியுண்டாம் எனபதாம்.

பொருள் ஆகி வருதற்கும், அஃது அழிந்து தொலைதற்கும் ஊழே காரணம் என்பது கருத்து.

நல்லூழ் உடையவர் முயற்சியுடையராய் உயர்ச்சியடைவர் என்பதும், தீயூழ்உடையவர் மடிமிகுந்து அழிவுறுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை வீமன்கண் ஒழும் சகன் முதலிய எழுவர்பாலும் உணரப்படும்.

கதை.

துரியோதனனது புண்மைக்கு இரங்கி வீடுமர் முதலியோர் பாண்டவர்களைக் காசியில் சிறிதுகாலம் தங்கியிருக்கும்படி செய்தார். துரியோதனன் சூழ்ச்சியால் புரோசனன் என்னும் மந்திரியும் அவரோடு பொருந்தியிருந்தான். கால் பல கழிந்த பின் மெழுகால் இவன் அங்கோர் மாளிகை அமைத்து ஐவரையும் அதில் குடியேறச் செய்து உடன் வாழ்ந்திருந்தான். அவர் அயர்ந்து தூங்குங்கால் அவர் மாயும் வகை அதில் தீயை வைத்தற்கு இவன் அமையம் நோக்கியிருந்தான். இங்ஙனம் இருக்குங்கால் துரியோதனன் அவர்களை விரைந்து கொல்லக்கருதி சகன், தரன், சலன், சாகுலன், வலன் என்னும் வேடர் ஐவரை அழைத்து விடம் அருத்திக்கொன்றுவரும்படி ஐயாயிரம் பொற்காசுகளைக் கொடுத்து விடுத்தான். அக்கொடியவரைவரும் ஒருதாய் வயிற்றிற் பிறந்தவர். சாசனி என்னும் தம் தாயையும் அழைத்துக்கொண்டு தேன் விற்பவர் போல் அங்குவந்து சேர்ந்தார். பொழுதும் போயிற்று. விடிந்தபின் பார்ப்போம் என்று அம் மாளிகையின் முன்புறத்தில் தங்கினர். தாம் கொண்டுவந்த விடம் கலந்த தேனையும், பரிசிலாகப் பெற்ற பொருளையும் பொதிந்துவைத்துக்கொண்டு சிறுதுநேரம் சென்றபின் அயர்ந்து தூங்கினர். பாதி இரவில் வீமன் எழுந்தான். இங்கிருந்தால் என்னானும் தீங்குநிகழுமென்றுகருதி தாயையும் தாயையும் உடன்கொண்டு வெளியே போயினன். போனவுடன் தீயும் பொங்கி எழுந்தது. மாளிகை முழுதும் தீந்து கரிந்தது. கைப்பொருளும்போய், வேடரும், தாயும், விரகனும் வெந்து தொலைந்தார். ஐவரும், தாயும் அகன்றுபிழைத்தார். மடிகொண்டார் பொருளிழந்து மாண்டார். மடியில்லார் பின் முடிபுனைந்தாண்டார். ஆகூழால் ஒருவனுக்கு முயற்சி தானே உண்டாகும் என்பதையும், போகூழால் மடி தோன்றும் என்பதையும் உலகம் இவர்பால் ஒருங்கே கண்டது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

முயற்சியும் மடியும் ஒருவனுக்கு ஊழானே உண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

372 பண்டிருளன் பேதைமையாற் பாரிழந்தான் புட்கரனே
கொண்டுவந்தான் செல்வம் குமரேசா—மண்டிவந்து
பேதைப்படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. (உ)

இ.—ள்.

குமரேசா! நல்லறிவுடைய நளன் அறிவு திரிந்து தன் அரசினை இழந்தான்; புல்லறிவுமிக்க புட்கரன் என் அதனைப் பெற்று மகிழ்ந்தான் எனின், இழவூழ் பேதைப்படுக்கும்; ஆகல் ஊழ் உற்றக்கடை அறிவு அகற்றும் என்க.

உற்றக்கடை—பொருந்தியபொழுது.

இழவூழ்—இழத்தற்கு ஏதுவாகிய ஊழ்.

ஆகல் ஊழ் அறிவு அகற்றும்—ஆதற்கு ஏதுவாகிய ஊழ் அறிவை விரிக்கும். அகற்றல்—விரித்தல், நீக்கல், தூரத்தல்.

நல்லறிவாளரைப் புல்லறிவினராக்கவும், புல்லறிவாளரை நல்லறிவினராக்கவும் ஊழ் வல்லது என்பார் "இழவூழ் பேதைப்படுக்கும் ஆகலூழ் அறிவு அகற்றும்" என்றார்.

இழவூழ் ஒருவனுக்கு அறியாமையை யுண்டாக்கும்; ஆகலூழ் உற்றவிடத்து அறிவை விரிக்கும் என்பதாம்.

மேல், பொருள் வருதற்கும், குறைதற்கும் ஏதுவாகிய முயற்சியும் படியும் ஊழாலே வரும் என்றார்; இதில் ஒருவனது அறிவைச் சுருக்கவும், பெருக்கவும் அது வல்லது என்றார்.

நல்ல அறிவினையுடையராயினும் தீயூழ் அடைந்தால் தம் அறிவெலாம் இழந்து இழிவடைவர் என்பதும், அறிவிலராயினும் நல்லூழ் உற்றால் எல்லா அறிவுமுடையராய் உயர்வடைவர் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நளன் கண்ணும், புட்கரன் பாலும் உணரப்படும்.

கதை.

நல்லறிவாளனாகிய நளன் பேரழகுடைய தமயந்தியை மணந்து இன்புற்று வாழுங்கால் புட்கரன் என்னும் பெயரினையுடைய குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஆணவமும், பொறாமையும், அச்சமும் அமைந்தவன்.

நஞ்சினுங் கொடியவன் நாளுந் தீமையே
நெஞ்சினில் உடையவன் நீதி யில்லவன்
வஞ்சனை சூதுபொய் மாயம் வல்லவன்

அஞ்சையும் ஆறென அகத்தில் கொண்டவன். என்றபடி புல்லிய குணங்கள் எல்லாமுடைய இவன், கலியின் சூழ்ச்சியால் நளன்பால் வந்தான். தன் முடி படியிற் பட அவன் அடியில் விழுந்தான். அவன் இருக்க என்றணைத்த பின் இவன் இணங்கியிருந்தான். சூதாட வரும்படி நளன்பால் இவன் ஓதாமல் ஓதினன். எய்தும் நல்குரவினுக்கு இணையந்த தாது; வெம்பொய்யினுக்கு அருந்துணை; புன்மைக்கு என்ற தாய்; மெய்யினுக்கு உறுபகை; என்று சூதின் தீமையை நன்குணர்ந்திருந்தும் நளன் எதும் ஆராயாமல் அவனுடன் ஆட இசைந்தான். அதில் தனது அரசு முழுவதும் இழந்தான். நல் அறிவு சிறிதுமில்லாத புட்கரன் விரிந்த அறிவுடையனாய் அதனை வென்று கைக்கொண்டான். தீயூழால் நளன் பேதையனாகிப் பெரும்பொருளிழந்தான். நல்லூழால் அறிவு மிகுந்து புட்கரன் அரசை அடைந்தான். எல்லா அறிவும் உடையனாயினும் இழவூழ் உற்றவிடத்து ஒருவனுக்கு அறிவுகுன்றும் என்பதையும், அறிவிலனாயினும் ஆகலூழ் உற்றால் அவனுக்கு அறிவு விரியும் என்பதையும், உலகம் இவ்விருவர்பாலும் ஒருங்கே கண்டது. (விரிவை நளசரிதையில் காண்க.)

ஆவது விதியெனின் அனைத்தும் ஆயிடும்
போவது விதியெனின் எவையும் போகுமால்
தேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ
எவரும் அறியொணா ஈசற் கல்லதே. (கந்தபுராணம்.)

ஒருவன் அறிவைக் குறைக்கவும் விரிக்கவுப் ஊழ் வல்லது என்பது இதனல் கூறப்பட்டது.

---

373 திண்டோள் இராமனுமேன் தேராமல் மான்பின்போய்க்
கொண்டான் குமரேசா — கண்டாமல்
நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். (க)

இ—ள்.

குமரேசா! நூல் பல கற்ற இராமரும் ஏன் ஆராயாது மான்பின் சென்று துன்பம் எய்தினர் எனின், நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றும் தன் உண்மையறிவே மிகும் என்க.

உண்மை என்றது ஊழை. பால், முறை, தெய்வம், விதி நியதி, உண்மை, கன்மம், என்பன ஊழையே யுணர்த்தி வரும் ஒரு பொருட் சொற்கள்.

நுண்ணிய நூல்—நுண் பொருள்களை உணர்த்துகின்ற நூல்; அஃதாவது தன்னைக் கற்பவருடைய அறிவை மிக்க நுட்பமாக்குந் திறனுடையது. உண்மை சிறப்பு உண்மை.

உண்மை அறிவு—ஊழறிவு. முன்னரே செய்துபோந்த வினையினல் தோன்றி நிலைபெற்றிருக்கலின் இஃது இப் பெயர் பெற்றது.

நுண்ணிய நூல்கள் பலவற்றையும் ஒருவன் கற்றிருப்பினும் பின்னும் அவனுக்குத் தன் ஊழறிவே மிக்குத் தோன்றும் என்பதாம்.

நூலறிவு சாலவுடைய மேலோராயினும் தீயூழ் அணுகின் தமது உயர் மதி மயங்கி அதன் வயமாகி நன்றென ஒன்றை நயந்து செய்து பின் இரங்கி மெலிவர் என்பது கருத்து.

மேல், ஒருவனது அறிவைச் சுருக்கவும், பெருக்கவும் ஊழ் வல்லது என்றார்; இதில் நூலறிவையும் அது கீழ்ப்படுத்தும் என்றார். கல்லார் அறிவை ஊழ் கலைக்குமே யன்றி, நூல் வல்லார் அறிவை அஃது என்செய்யும் என்பார்க்கு இஃது இயம்பியதன்க.

சிறந்த அறிவுடைய உயர்ந்தவர்களையும் ஊழ் தன் வயப்படுத்திவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை இராமர்பால் உணரப்படும்.

கதை.

இராமபிரான் பஞ்சவடியில் தங்கியிருக்குங் காலத்தில் சீதையை வஞ்சித்துக்கொள்ளக் கருதிய இராவணன், அழகிய ஒரு மான் வடிவங்கொண்டு சீதைமுன் போய் நில் என மாரீசனை ஏவினான். அவனும் அவ்வாறே ஆகி வந்தான். சீதை கண்டாள். ஆசை கொண்டாள். அப் பொன்மானைப் பற்றித் தரும்படி தன் நாயகரை வேண்டினாள். இராமரும் இசைந்துசென்று அப் பொன் மானை நோக்கிப் பெரிதும் வியந்தார். அதன் அழகில் மயங்கி ஆர்வமீக் கூர்ந்தார். பிடிக்கத் துணிந்தார். அடுத்து நின்ற தம்பி தடுத்து வணங்கி "அண்ணா, இம்மானின் வடிவையும், அழகையும், ஒளியையும், இயல்பையும் ஊன்றி நோக்கினால் ஒருமாயம் என்றே எனக்குத்தோன்றுகின்றது. மாரீசன் என்னும் அரக்கனே இவ் வடிவங் கொண்டு இங்கு வந்துள்ளான் என்று எண்ணுகின்றேன். இதன்பால் செறற விருப்பத்தை அடிகள் அறவே ஒழிதல் வேண்டும்" என்று மிகவும் நயந்து மொழிந்தான். இராமர், ஒன்றுந் தோராமல், அதனை மெய்ம்மான் என்றே நம்பி இதம் பல கூறித் தம்பியை இருத்திவிட்டு அதன் பின்பே சென்றார். ஆண்டிலும் அறிவிலும் இளையவனாகிய இளையவனுக்கு உண்மை தோன்றவும், நுண்ணிய நூலறிவுடையோரெல்லாரும் எண்ணிப் போற்றுகின்ற புண்ணிய மூர்த்தியாகிய இராமருக்கு அது தோன்றாமல் அம் மான் பின் போய் அல்

லல் பல எய்தி ஆகங் கரைந்திரங்கிஞர். நூல் பல கற்பினும் ஊழ்வலியே மிகும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. (விரிவை ஆராய்ச்சி காண்டத்தில் காண்க.)

இம்மான் இருநிலத்தினில் இல்லையெனை
எம்மானி தெனச்சிறி தெண்ணல் செயான்
செம்மானவள் சொற்கொடு தேமலரோன்
அம்மானும் அருத்திய ஞயினனல்.

கோக்கிய மானினோக்கி நுதியிழை மதியிலென்றுந்
தூக்கிலன் நன்றிதென்றான் அதன்பொருள் சொல்லலாகும்
சேக்கையின் அரவுநீங்கிப் பிறந்தது தேவர்செய்த
பாக்கிய முடைமையன்றே அன்னது பழுதுபோமே. (கம்பர்.)

இவை, மானை நோக்கியபொழுது இராமனைக் குறித்துக் கூறியன. இக்கவிகளில் அமைந்துள்ள அழுகுகளையும், பதங்களையும், பொருள் வளங்களையும் ஆய்ந்து மகிழ்க.

நூலறிவையும் ஊழ் கீழ்ப்படுத்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

374 தெள்ளியனுய்ந் நின்றும் துரோணன் துருபனிடம்
கொள்ளவந்தான் என்னே குமரேசா—கொள்ளும்
இருவேறு லகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (சு)

இ—ள்.

குமரேசா! துரோணர் அறிவுடையரா யிருந்தும் பொருள் இலராகித் திரு ஒன்றே உடைய துருபனிடம் ஏன் வந்தார் எனின், உலகத்து இயற்கை இரு வேறு; ஆகலால் திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு என்க.

திரு—செல்வம். தெளிவு—அறிவு.

திரு வேறு—செல்வமுடையராதலும் வேறு.

தெள்ளியர் ஆதலும் வேறு—அறிவுடையராதலும் வேறு.

திருவும் தெளிவும் ஒருவன்பால் ஒருங்கே அமைந்திருத்தல் அரிது என்பார் உலகத்தியற்கை இருவேறு என்றார்.

உலகத்தின் இயல்பு இரண்டு வகை; ஆதலால் திருவுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு என்பதாம்.

பேல், நூலறிவையும் ஊழ் வேறடுத்தும் என்றார்; இதில், அறிவுடையார்க்குப் பொருள் இன்மையையும் பொருளுடையார்க்கு அறிவின்மையையும் உணர்த்து அமைத்து நிற்கும் என்றார்.

திருவும் அறிவும் ஊழாலே வரும் எனினும் அறிவில்லார் சிலர் செல்வராகவும் அறிவுடையார் பலர் வறியராகவும் பெரும்பாலும் இவ்வுலகில் காணப்படலான் ஒன்றற்காகும் ஊழ் ஒன்றற்கு ஆகாது என்பதை இவ்வாறு உணர்த்தியதென்க.

அறிவும் திருவும் ஒருவன்பால் ஒருங்கே அமைவது அரிதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரோணன் கண்ணும் தருமன்பாலும் உணரப்படும்.

கதை

துரோணர் என்பவர் பரத்துவாசருடைய புதல்வர். இவர் பிறப்பு மிகவும் வியப்புறத்தக்கது. பரத்துவாசர் ஒருகால் திலோத்தமையைக் கண்டார். அவள்மேல் பெருங் காதல்கொண்டார். அதனால் தமதுவீரியம் வெளிப்பட அதனை அங்கிருந்த ஒரு துரோணத்தில் விடுத்தார். துரோணம் என்பது பதக்கு நீர் கொள்ளும் ஒரு கும்பத்திற்குப் பெயர். அதிலிருந்து இவர் தோன்றியதனால் இவருக்குத் துரோணர் என்ற பெயர் வந்தது என்பர். இவர், எல்லாக்கலைகளிலும் வல்லவர். நல்ல சீலமுள்ளவர்.

ஈரேழ் விஞ்சைத்திறனும் என்றேன் தன்பாலெய்தி
நீரேழென்ன யாவும் நிறைந்தகேள்வி நெஞ்சன்

பாரேழுண் ணூறும் படைசூள் பரசுராமன் கன்பால்
ஓரேழ் பகலினுலகுந் கொருவனென்னைக் கற்றான்
இக்கணைய பேரறிவுடைய இவர் யாதொரு பொருளும் இல்லாத வராயிருந்தார். இவர் கிருபி என்னும் ஓர் அழகிணை மணந்து ஒரு புதல்வனைப் பயந்தார். துணைவினையும் சூழ்வினையும் பேணை முடியாமல் நாணி வருந்தினர். தனது பழைய நண்பனாகிய துரு பனிடம் வந்தார். அவன் பெருந் திருவுடையனாய்ச் சிறந்து விளங்கினும் போதிய அறிவு பொருந்தப் பெறாதவன். அவன் பால் இவர், தம் எளிமையைக் கூறி ஏதேனும் ஒன்று தருக என் றிரந்தார். அவன், இல்லே போ என ஒல்லை மொழிந்தான். எ ள்ளி நகைத்தான். இவர் இரங்கி நொந்தார் பின் இயன்ற தைச் செய்தார். அறிவுள்ள இ ர் பொருள் இலராகவும், தெளி வில்லாத துருபன் திருவுடையனாகவும், திகழ்வதைக் கண்டு அனை வரும் இரங்கினர். அறிவுடையராதற்காகும் ஊழ் செல்வமுடை யராதற்கு ஆகாது, செல்வமுடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்காகாது எனபதை உலகம் இவ் இருவர் பாலும் அன் று உணர்ந்து தெளிந்தது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

திருவையும் அறிவையும் ஊழ் இருவேறு வகையாகத் தரும் என்பது இதனல் கூறப்பட்டது.

---

375 சாதுவன் முன் நன்றுயந்தும் தாழ்ந்தான் பின் தீதடைந்தும்
கோதகலா நூன் எனனே குமரேசா — ஆதலினல்
நல்லனவை எல்லா அந் தியவாந் தியவும்
நல்லவாந் செல்வஞ் செயற்கு. (ஈ)

இ—ள்.

குமரேசா! நல்ல உபாயங்களைச் சூழ்ந்து கொண்டும் சா துவன் தாழ்ந்து நொந்தான்; பின் தீயவனவற்றைச் சார்ந்து நின் றும் என் செல்வம் பெற்றான் எனின், செல்வம் செயற்கு நல்ல வை எல்லாம் தியவாம்; தியவும் ஊழ் வயத்தான் நல்லவாம் என்க.

ஊழ் வயத்தான் என்பது இதில் வருவிக்கப்பட்டது. நல்லனவை எல்லாம் என்றது செல்வத்தை ஈட்டுதற்கு உதவியான கருவியின் நலங்களை.

செல்வத்தை ஒருவன் ஈட்டுங்கால் நல்லனவு எல்லாம் தீயனவாய் நின்று அழிக்கவும்; தீயவை எல்லாம் நல்லனவாய் நின்று ஆக்கவும் ஊழ் செய்விக்கும் என்பதாம்.

நல்ல காலத்தில், நல்ல இடத்தில், நல்லவிதமாகச் சூழ்ந்து செய்யினும் நல்லூழ் இல்லழி அவையாவுந் தீயனவாய்க் கேட்டை விளைக்கும் என்பதாம், அக்காலம் முதலியன தீயனவாயினும் நல்லூழ் உற்றால் அவை நலமுடையனவாய் நின்று ஆக்கத்தைப் பயக்கும் என்பதும் இதன் கருத்தாம் என்க.

மேல், அறிவில்லார்க்குத் திருவையும் திருவில்லார்க்கு அறிவையும் ஊழ் சேர்க்கும் என்றார்; இதில், அது நல்லதைத் தீயதாக்கவும் தீயதை நல்லதாக்கவும் வல்லதென்றார்.

தீயூழ் உற்றால் ஒருவனுக்கு நல்லவுந் தீயவாகும் என்பதும் நல்லூழுற்றால் தீயவுமை நல்லவாகும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. (இவ்வுண்மை சாதுவன்பால் உணரப்படும்.)

கதை.

சாதுவன் என்பவன் பெரு நிதியுடைய ஒரு வணிகர் தலைமகன் இவன் மனைவி பெயர் ஆதிரை. சிறந்த கற்புடையவள். அவளுடன் அமர்ந்து இவன் இல்வாழ்ந்து வருங்கால் போகவதி என்னும் ஒரு தாசி வசப்படுத்தித் தன் செல்வ முழுதும் சேர இழந்தான். பின் தேறி வருந்தினன். மீண்டும் பொருள் தேடனிருப்பி நண்பர் சிலருடன் கலந்து நல்ல ஓரையில் கப்பலேறிச் சென்றான். இடை வழியில் வந்த கடு வளியால் அக் கப்பல் உடைந்தது. அதிலிருந்தாரனைவரும் பெருந் துயரடைந்தார். பலர் மாண்டார். சிலர் திருவருளால் கரை சேர்ந்தார். அங்கு ஓடிந்து விழுந்த பாய்மரத் துண்டைச் சாதுவன் பற்றிக் கிடந்

தான். அம்மது அலைகளால் அலைந்தலைந்து ஒரு மலையினை அடைந்தது. அதற்கு காகர் மலை என்ற பெயர். அத்தீவில் உள்ளவர்கள் உடையில்லாதவர்களாய்க் கொடிய குணமுடையராய் எதையும் தின்னும் இயல்பினரானவர். அந் நாகர்கள் அயர்ந்து சேர்ந்த இவனை விரைந்து கொல்ல வந்தார். இவனது இனிய மொழிகளைக் கேட்டு இரங்கிக் கொடுபோய்த் தம் தலைவன் முன் விடுத்தார். தலைவனும் இவனது நிலைமையைத் தெளிந்தான். எமக்கு நல்லறம் எடுத்துரை என்றான்.

நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்றனக்கு ஒல்லும் நெறியுறம் உரைக்கேன்
உடைகலை மாந்தர் உயிருயிர்த்து ஈங்குறின்
அடிசார்ந்தில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்துறினி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகெனச் சாதுவன் உரைத்தான்
அவனும், ஈங்கெமக்காகும் இவ்வறஞ் செய்கேம்
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டிடம் அமர்த்தும் உறுபொரு ளீங்கினை
விரைமரம் மென்துகில் விழுங்கிக் குப்பையோ
டினைவினை கொள்கென எடுத்தனன் கொடுத்தான்.

அப்பொருளனைத்தையும் பெற்றுக்கொண்டு அகனை யடுத்துவந்த சந்திரதத்தன் என்னும் ஒரு வணிகனது கப்பலிலேறித் தன்னாடு அடைந்தான். நல்லனவற்றைத் தீயனவாக்கி அல்லல் அளிக்கவும், தீயனவற்றை நல்லனவாக்கிச் செல்வம் விளக்கவும், ஊழ் வல்லதென்பதை உலகம் இவன்பால் கண்டது. (விரிவை மணிமேகலையில் காண்க.)

நல்லதைத் தீயதாக்கவும், தீயதை நல்லதாக்கவும் ஊழ் வல்லது எனப்பட்டது இதனால் கூறப்பட்டது.

376 கட்டி வைத்தும் தந்தன் பூன் கைவிட்டான் எவ்லென்
கொட்டியுமேன் பெற்றான் குமரேசா— முட்டப்
பரியினும் ஆகாவாம் பால்அல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. (சு)

இ—ள். குமரேசா! தருமதத்தன் வருந்திக் காத்தும் தன் பொருளை இழந்தான்; எவ்லென் கடலிடைச் சொரிந்தும் என் தன் கைவரப் பெற்றான் எனின், பால் அல்ல பரியினும் ஆகாவாம்; தம உய்த்துச் சொரியினும் போகா என்க.

பால்—ஊழ். பரிதல்—வருந்திக் காத்தல்.

பால் அல்ல—ஊழால் தமக்கு உரிமையில்லாத பொருள்கள்.

தம—தமக்கு உரிமையான பொருள்கள்; தம்முடையன என்றபடி.

ஊழால் தமக்கு உரிமையில்லாத பொருள்களை வருந்திக் காப்பினும் அவை நில்லா; தமவாய பொருள்களை வெளியே கொண்டு போய்ச் சொரிந்து விடினும் தம்மை விட்டு அவை போகா என்பதாம்.

செல்வம் நிலைத்தலும், போதலும் ஊழால் ஆகுமேயன்றி மக்களது காத்தல் ஒழி தல்களால் அமையாதென்பார் "பால் அல்ல பரியினும் ஆகா; தம சொரியினும் போகா" என்றார்.

ஊழால் தம்முடையதல்லாத பொருள் கண்ணோன்றிக் காத்தாலும் நில்லாது, தமவாயது கடலிடை எறிந்தாலும் போகாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தருமதத்தன் கண்ணுறும் எவ்லென் பாலும் உணரப்படும்.

கதை 1.

தருமதத்தன் என்பவன் கலிங்க நாட்டிலே அரிபுரம் என்னும் நகரிலேயிருந்த தேவதத்தன் என்னும் ஒரு வணிகனுடைய

தலைமகன். பெரும்பொருளுடையவன். ஆயினும் சிறந்த அறி வில்லாதவன். எவர் எதைச் சொன்னாலும் அதை நம்பி யுழல் வான். பொருள்மேல் பெரும் பற்றுடையவன். கண்ணினும் உயிரினும் சிறந்ததாக அதனை எண்ணிக்காத்துவந்தான். வருங் கால் இரசவாதி என்று ஒரு வஞ்சன் இவன்பால் வந்தான். அவன் செய்த வஞ்ச வினையினால் இவன் வருந்திக் காத்துவந்த பொருள் முழுவதையும் தன் கண்முன்னே வறிதே இழந்தான். அதனால் இறந்தான். பால் அல்லாயினும் ஆகாயம் என் பதை உலகம் இவன்பால் கண்டது. (விரிவைக் கந்த புரா ணத்தில் காண்க.)

கதை 2.

வணிக குல திலகராகிய ஏலேல சிங்கர் பிறவுந் தமபோல் பேணி நெறி வழுவாது வாணிகம் புரிந்துவருங்கால் இடையே பஞ்சம் தோன்றிற்று. அதினும் நெஞ்சங் கோடாமல் நின்று உண்ண பொருள்களை உயிர்கள் இன்புற இனிது உதவிவந்தார். அதனால் பெரும் பொருள் திரண்டது. அதிலொரு பெரும் பகுதி யை எடுத்துப் பொன்னாக மாற்றி யுருக்கிப் பொற் கல்லாகச் செய்து அதன்மேல் "இஃது ஏலேலசிங்கனது" என்று எழுதி அதனைக் கடலிடை எறிந்தார். இங்ஙனம் செய்யும்படி நமது நா யனுமே கட்டளையிட்டனனென்பர். எறிந்த அப் பொற் பாளம் நாள் பல கழிந்தபின் ஒரு மீனால் விழுங்கப்பட்டது. அதன் பின் ஒருவன் வலையிற் பட்டது. ஈர்த்துப் பிழந்தான். அதன் வயிற் றிற் கிடந்து பாளி படிந்து ஒளி மழுங்கியிருக்கும் அதனைக் கண் டான். இன்னதென அறியாது எடுத்துச் சென்று துறைமுகத் தலைவராகிய சிங்கரிடமே சேர்த்தான். அவரும் கடற் கல் னை வேமதித்துப் புறங்கடையில் கால் கழுவுவதற்கு உரியராகப் போடச் செய்தார். நாள் பல கழிய அதன்மேல் மாசு தேய்ந் தது. ஒரு நாள் அதனை உற்று நோக்கினர். தம் பெயரினைக் கண்டார். பெருமகிழ்வு கொண்டார். அதனை வியந்தெடுத்துப் புனைந்து போற்றினர். ஏலேலசிங்கன் பொருள் எறிந்தாலும் போகாது என்று அன்றுமுதலாக ஒரு சிறந்த பழமொழி இன்

றும் வழங்கிவருகின்றது. தம உய்த்துச் சொரியினும் போகா என்பதை உலகம் இவர்பால் கண்டது.

செல்வம் நிலத்தலும் போதலும் ஊழாலே ஆம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

377 ஊழி அமுதசுரர் உண்ணத் தொழிந்தாரோன்
கோடி தொகுத்தும் குமரேசா—நாடி
வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (எ)

இ—ள்.

குமரேசா! அமிழ்தைத் தாம் வருந்தித் தொகுத்தும் என் அசுரர்கள் அதனை நுகராது ஒழிந்தார் எனின், வகுத்தான் வகுத்த வகை அல்லால், கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது என்க. மிகுதியை விளக்குதற்குக் கோடி என்றார்.

வகுத்தான் என்றது ஊழை. தன்னைச் செய்த உயிரையே விழுங்கப் பயன் சேர வகுத்தலின் அஃது இப் பெயர் பெற்றது. வகுத்தது என்னாது வகுத்தான் என உயர்திணையாக் கூறியது அதன் ஒண்மை கருதி என்க.

உம்மை சிறப்பும் எச்சமும் தொக்கு நின்றது.

பொருள்களைக் கோடி கோடியாக ஒருவன் சேர்த்தாலும் ஊழ் வகுத்த வகை அல்லால் அவற்றை அவன் அனுபவிக்கமுடியாது என்பதாம்.

வகுத்தான் என்பதற்குக் கடவுள் என்று பொருள்கொண்டால் விழுங்கப் பயன்களை உயிர்களுக்கு ஊட்டவிக்கும் இறைவன் முன்னம் வகுத்தபடியன்றி ஒருவன் பெரும் பொருளைத் தொகுத்தாலும் அதனை அவன் நுகர முடியாதென்று பொருள் கொள்க;

பொருளை மிகுதியாகத் தொகுத்தும் அதனைச் சிறிதும் துய்க்காமல் வறிதே வைத்திருக்கும் சில செல்வரை நோக்கி இதற்குக் காரணம் யாது என்று கருது வார்க்கு இஃது அருளியதென்க

பொருளை ஒருவன் வருந்தியீட்டினும் திருந்த இருந்து நுகர்ந்து மகிழ்தற்குரிய ஊழ் இல்லையாயின் அவன் உண்ணமுடியாதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை அசுரர்கள்பால் உணரப்படும்

கதை.

அசுரர் உடல் வருந்திக் கடல் கடைந்து அமிர்தம் திரட்டினர். பின்பு தமருடனிருந்து அனைவரும் அதனை நுகரவிரும்பினர். அதுபொழுது திருமால் ஒரு மோகினி வடிவங்கொண்டு அவர் முன்னே நின்றார். அம் மோகினியின் பேரழகையே நோக்கி அசுரர் பேதுற்று நின்றார். அவ்வமையம இந்திரன் முதலிய அமரரனைவரும் அவ் அமிர்தினை அமர்ந்து நுகர்ந்தார். மகிழ்ந்தெழுந்து பின் மறைந்து போனார். வருந்தியீட்டியும் அமிழ்தைத் துய்க்கப் பெறாமல் அசுரர் தன்புற்றழுந்தார். கோடி தொகுத்தாலும் நுகர்தற்குரிய ஊழ் இல்லையாயின் அதன் பயனை உண்ணமுடியாதென்பதை இவர் அன்று உணர்த்தி நின்றார்.

மதியினை மலரச்சூழ்ந்து வருந்தித்தாம் படைக்கப்பட்ட
நிதியினை நுகர்துமென்று நினைத்தினி திருக்கபோழ்திற்
பதியினைக் கலங்கிச்சென்று பறித்துத்தாம் பிறர்க்குரீட்டும்
விதியினை விலக்கமாட்டா மெலிபவால் வெளியதீரார்.

(சூளாமணி)

செல்வமிருந்தாலும் ஊழ்இல்லையாயின் அதனை நுகரமுடியாதென்பது இதனால் கூறப்பட்டது.

378 தள்ளா தெறுமையுறுமஞ் சத்நிபுத்தர் நற்றுறவு
கொள்ளாத தென்னே குமரேசா—உள்ளித்
துறப்பார்பற் றுப்புர விவ்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின். (அ)

இ—ள்.

குமரேசா! ஒரு பொருளும் இல்லாதிருந்தும், அறிவு மிக்க சத்திமுத்தர் என் துறவினைக் கொள்ளாதிருந்தார் எனின், உறற்பால ஊட்டா கழியும் எனின் துப்புரவு இல்லார் துறப் பார் என்க.

துப்புரவு—துய்த்தற் குரிய பொருள்கள்.

உறற்பால—உறுதற்பாலவாய துன்பங்கள்.

ஊட்டா கழியும் எனின—உறவியாது ஒழியுமாயின்.

துறவு என்பது உள்ளன எல்லாம் ஒருங்கே விடுதலேயாம், அவ் விடுதலே இயல்பாகவே அமையப் பெற்றிருந்தும் சிலர் என் துறவு கொள்ளாமல் வறிதே துயிருக்கின்றார் எனின், அதற்குக் காரணம் ஊழ் வலியேயாம் என்று அவரை நோக்கி யிஃது ணர்த்தியதென்க.

உறுதற்பாலவாயதுன்பங்களை ஊழ் ஊட்டாது ஒழியுமாயின் துய்த்தற்குரிய பொருளில்லாதவர் துறந்து செல்வர் என்பதாம்.

மேல், பொருளிருந்தாலும் ஊழ் இல்லையானால் அதனை நுகரமுடியாதென்றார்; இதில், ஒரு பொருளும் இல்லையானாலும் ஊழ் இல்லையானால் துறவும் கொள்ளமுடியாதென்றார்.

இல் வாழ்ந்திருந்து இன்பம் நுகர வேண்டினும் துறந்து சென்று பயன்பெற விரும்பினும் ஊழ் இன்றியமையாதென் பது கருத்து.

ஒன்றும் இல்லாமையே துறவுக்கு இயல்பாகுமாயினும் ஊழ் இல்லையானால் அஃது ஒருவனுக்கு உண்டாகாதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சத்தி முத்தர் பால் உணரப்படும்.

கதை.

சத்திமுத்துப் புலவர் என்பவர் இற்றைக்குப் பல நூற் றாண்டுகட்கு முன்னர்ச் சோழ நாட்டிலே சத்திமுத்தம் என் னும் ஊரிலேயிருந்தவர். பலநூல்களிலும் நல்ல பயிற்சியுள்ளவர் அடக்கம் பொறை முதலிய உயர் குணங்களுமுடையவர். அருமையான கவிகளை விரைவில் பாட வல்லவர். இங்ஙனங் களெல்லாம் அமைந்திருந்தும் மிக்க வறுமையும் இவரை மேவி யிருந்தது. "வெறும் புற்கையும் அரிதாம் வீட்டில் வரும் எறும் புக்கும ஈற்பதம் இல்லை" என்றது போல வறுமையைக் குறித்து இவரே சொல்லி நொந்தனார். வறுமைப் பிணியால் வாடி ஒரு நாள் இவர் மதுரைப் பதியையடைந்தார். அங்கோர் பாழ்மண் டபத்தில் பசியுடனே கூடிப் படுத்துக்கிடந்தார். நடுயாமத்து மாறுவேடம் பூண்டு நகரியல் பறியுமாறு வழுதி மேவந்தன் அதனருகே வந்துகொண்டிருந்தான். அவ்வமையம் இரண்டு நாரை கள் ஆகாயத்தில் பறந்து சென்றன.

காராய்! காராய்! செங்கால் காராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுனின் மனையியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்கும் எனமனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பனைமுளன் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே.

என்று நாரையை நோக்கிப் புலவர் தம் இயல்பை விரித்தார். மன்னன் கேட்டுத் தான் கருதியிருந்த நாரையின் கூர்வாய்க்கு

நோய உவமை அதில் நோக்திருப்பதை வியந்து புலவருக்கு வேண்டிய நலங்களை விரும்பியுதவினன். இல்லாதவராயிருந்தும் நல்லறிவாளராகிய இவர், துறவிற் செல்லாது நின்றார். அதனை நினைத்து பின் இவரே இரங்கினர். ஊழ் இல்லையாயின் வறுமையுறினும் ஒருவன் துறவினையடையான் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைப் புலவர் சரிதையில் காண்க.)

ஊழ் உதவா வழி ஒருவனுக்குத் துறவும் உதியாதென்பது இதனால் கூறப்பட்டது.

---

379 அன்றுதுயர் எய்துங்கால் அல்லலின்றிச் சச்சந்தன்
குன்றுதேன் நின்றான் குமரோசா—என்றுமே
நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுவ தெவன். (சக)

இ—ள்.

குமரோசா! இன்பமெய்தி நின்ற சச்சந்தன் பிற்பு துன்பமுறுங்காலும் அல்லலின்றி ஏன் அமைந்து நின்றான் எனின், நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்று ஆங்கால் அல்லற் படுவது எவன் என்க. நன்று—நன்மை. அன்று—தீமை.

நல்வினை விளையுங்கால் அதன் பயனாகிய இன்பங்களை இனிதாக நுகர்பவர் ஏனைத் தீவினை விளையுங்கால் அதன் பலனைத் துன்பங்களையும் இனங்கி அனுபவியாமல் உணங்கி உளைவது எதற்காக என்பதாம்.

இன்பமும் துன்பமும் தாம் செய்த வினையின்படியே வரும் அவற்றுள் ஒன்றுக்கு இசைந்து மகிழ்தலும் மற்றொன்றுக்கு அசைந்து நெகிழ்தலும் அறிவுடையோருக்குத் தகுதியன்று ஆதலால் "அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன்" என்றார். வினைப்பயன் துய்க்காமல் தொலையாதாதலால் அதற்கு வருந்துவதால் பயனில்லை என்பது குறிப்பு.

கடலிடை நிற்குமொருவன் அஞ்சினும் அஞ்சானிடினும் உலகள் அடியாடல் அரிது; அதுபோல் பிறவியில் நிற்பவன் வேண்டினும் வேண்டாவிடினும் வீடினப்பயன்கள் உறுதல்தெளிபா எனக.

எதுவரினும் அறிவுடையார் இகழ்ந்து அனுபவிப்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சச்சந்தன் பால் உணரப்படும்.

கதை.

சச்சந்தன் என்பவன் ஏமாங்கத நாட்டை வந்தான். இராசமாபுரி எனனும் நகரிலிருந்து அரசுபுரிந்தவன். அரசுக்குரிய எல்லா நலங்களும் அடையப்பெற்றவன். இவனது காலம் இற்றைக்கு முன்னாயிர ஆண்டுகட்கு முன்னரென்பர். பேரழகியாகிய விசையையை மணந்து இவன் பெருநலம் துய்த்துவருங்கால் கட்டியங்காரன் என்னும் அமைச்சன் கொடுஞ் சூழ்ச்சியால் அரசபதவியைத் தன்வசப்படுத்திணன். பின் அடைய வந்தான். அவ்வமையம் நிறைந்த கருப்பவதியாயிருந்த மனைவி அஞ்சி நடுங்கினள். அவளை இவன் ஆணைத்துத் தேற்றினன். நமது நல்வினைப்பயனல் இந்திர திருவுடனிருந்து இதுவரை இன்பந் துய்த்தோம். இனித் தீவினைப்பயன் சேரநின்றது. அதனை அஞ்சுவதால் பயன் யாதும் இல்லை. ஓடினும் ஒளிப்பினும் ஒடுங்கி நிற்பினும், கூடிடும் வினைப்பயன் குறைந்தும் என்பயன். ஆதலால் எது வரவெண்டுமோ அது வருக எட்டமை விடுத்து எது அகல வேண்டுமோ அது அகலுக என்று இணங்கியிருப்பதே உணர்ந்தோர்க்கழகு என்று அவள் உணர உணர்த்தினன். வினைப்பயனை உவந்து அனுபவித்தான். அறிவுடையார் வினைத்தன்பங்கட்கு அஞ்சி அல்லலுழுவார் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (சிறிவளச் சிந்தாமணியில் காண்க.)

சாதலும் பிறத்தல் தானும் தன்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவைபொருட்கியல்புகண்டாய்.
சோதனை நீபோதும் பொல்லாய் பெய்வளைத்தோளினென்றான்.

இது, மகனை அச்சமுற்றபோது சச்சந்தன் சொன்னது. அன்று ஆற்சால் இவன் அல்லற்படாது நின்ற உண்மை இதனால் இனிது தெளிவதல் காண்க.

வாழ்வின் பயன் எதுவாயினும் அதனை இனிதாகக் கொள்வோனே அறிவுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

380 சிந்தாபதி முற்சூழ்ந்தும் தேர்ந்துடாிச் சித்தநின் றும்
குந்திபேன் மாய்ந்தார் குமரேசா—முந்துகின்ற
உளத்திற் பெருவலி யாவுள மற்றென்று
சூழினுங் தான்முந் துறும். (ய)

இ—ள்.

குமரேசா! சிந்தா தேசத்து வேந்தனும், பாிச்சித்து மன்னனும், விசோவிளவுசிலை விலக்குதற்குாிய சூழ்ச்சிகளை முன்னாகவே சூழ்ந்திருந்தும் என் அறிவினை எப்சிறார் எனின் உளத்திற் பெருவலி யாவுள; மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும் என்க. வலி என்பது ஆகு பெயராய் அதனையுடையவற்றை உணர்த்தி நின்றது

சூழ்தல்—எண்ணுதல்; அஃதாவது விதியை விலக்குதற்கு உாிய உபாயத்தைத் தெரிந்து தெளிதல்.

மற்று ஒன்று சூழினும்—பிறிதோர் உபாயத்தை எண்ணினும். உய்கை பிழையாமை என்பதைத் தட்டி நின்றமையால் எச்ச உம்மையாயிற்.

தான் என்றது தன்னை. முந்துறும்—முன்னாகி நிற்கும்.
தெளிதலில் விலக்குதற்கு எதிராவதும் ஓர் உபாயத்தை எண்ணினும் உளத்தில் அதனினும் பெரிதாய்ப் பிறிதொன்று தன்னை உளட்டிவிடும் ஆகலால் அதனைத் தீர்ப்பான் சிறிது வலியையுடையன யானை உள என்பதாம். யானுமே இவ்வா என்பதும் கருத்து.

மேல், தன் சூழ்ச்சின் பயனை மகிழ்ந்தனுபவிப்பதுபோல் இரு சூழ்ச்சினையும் அமைத்தறைபவிப்பதே அறிவுடைமைக்கு அழகாம என்றார். அச் சிறுசூழ்ச்சி எதாவது ஓர் உபாயத்தால் விலக்கிவிடலாகாதா? என்பார்க்கு இவ்வாறு தெளிவித்தபடி கண்டுகொள்க.

விசோ விளவுசிலை விலக்குதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்பிறர் உளராக அவையனைத்தையும் கடந்துவந்து தன்பயனைத் தப்பாது கொடுத்துவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வினைமரபு விருத்தசூத்திரன் கண்ணும் பாிச்சித்து பாலும் உணரப்படும்.

கதை.

விருத்தச்சத்திரன் என்பவன் சிந்து தேசத்து வேந்தன். சயத்திரதன் தந்தை. தன் மகன் இன்ன நாளில் இறந்து படுவான் என்று கணவிலுலும் அசரீரியாலும் முன்னரே யுணர்ந் தான். அதுகிடாவண்ணம் விரைந்து சூழ்ந்து சமந்த பஞ்ச கன்னன்னும் தனியிடத்தை அடைந்து தென் திசைநோக்கியிருந் தியமனை நினைந்து "என்மகனுடைய தலையை எவன் தரையில்வீழ்த் திகின்றானே அவனதுதலை உடனே வெடிக்கக் கடவது" என்று உளத்திற் குறித்து உரிய மந்திரங்களை உளைத்துக்கொண்டிருந் தான், இங்ஙனம் இருக்குங்கால் அத்தினபுரியில் நடந்த பாரத போரில் பதினைன்காம் நாள் மாலையில் சயத்திரதன் தலை அருச்சுனன் கணையால் துணிபட்டது. அப்பொழுது சிந்துமன் னன்சூழ்ந்திருக்கும் உண்மையைக் கண்ணன் உணர்த்தினன். உணர்ந்த விசையன் அத் தலை கீழே விழாதபடி அம்பினை எவிக் கண் முழி மந்திரம் புரிகின்ற தந்தையின் கையில் விழுத்தினன் பாவம்! விழித்து நோக்காமல் போதா! என்று அதனை அவன் கீழே எறிந்தான். அது தரையில் படலும் அவன் தலை பொடி பட்டது. உலைழ விலக்குதற்கு முற்சூழ்ந்திருந்தும் அதனிலும் அது முற்பட்டு நின்றது. அதனல் இருவரும் பட்டார். உழவின் பெருவலியை உலகம் இவன்பால் உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

கதை 2.

பரிச்சித்து என்பவன் அருச்சுனன் குமாரனுகிய அபிமன் னனுடைய புதல்வன். தாய் பெயர் உத்தரை. இவன் கருப்ப த்திலிருக்கும்பொழுது பாரத யுத்தம் கடந்தது. அசுவத்தா மன் பாண்டவர் மரபு நாசமாகும்படி மந்திர முறையாய் ஓர் அம்பை ஏவினன். அது உத்தரை வயிற்றிலிருக்கின்ற இக்குரு வையும் அழிக்கும்படி கடுகிவந்தது. கண்ணன் அருளுவாய்ப் புகுந்து அதனை அதட்டி நீக்கினன். மானின் பரிசம் கருவிலே யே பட்டதால் இவனுக்குப் பரிச்சித்து என்று பெயரிட்டனர் என்பர். இவன் நல்ல நீதியுடையவன். சிறந்த போர் வீரன். பொறையும் அருளும் பொருந்திய நெஞ்சினன், வனத்திலிருந் த சமீக முனிவர்பால் விரோதமாக இவன் செய்த சிறுபிழைக்காக "ஏழு நாட்களுள் பாம்பு கடித்து மடிவாய்" என்று அம்முனிவ ருடைய புதல்வராகிய சிருங்கி முனிவர் சாபமிட்டனர். அதனை உணர்ந்த இவன், அவ் வினை விளைவை விலக்குதற் பொருட்டு அறிஞர் பலருடன் நன்காராய்ந்து ஒரு பிராணியும் அருகில் அணையாதபடி ஓரழகிய புனையில் சிலருடன் அமர்ந்துபோய்க் கடனிலையிருந்தான். யாதும் அருகில் அணுகாவாறு அனைவரும்

மிக்க ஆயத்தமாயிருந்தனர். குறித்த காலம் வந்தது. கார்க் கோடகன் என்னும் பாம்பு அரசனைக் கடிக்க எழுந்தது. அரசன் முன்னுற ஆய்ந்திருக்கும் தன்மையை யுணர்ந்தது. எலி மிச்சம் பழம்போல் உருவெடுத்துக் கடலில் விழுந்தது. அலையால் ஆலந்து அலந்து யலந்து புணையின் அருகே ஆணைந்தது. ஊது ஒன்றும் இல்லையென்று தேர்ந்திருந்த அரசன் உவர்ந்து வரும் இப் பழத்தை உற்று நோக்கினன். தன் கையால் உவந்தெடுத்தான். பழமாயிருந்தது பாம்பாய்க் கடித்தது. மன்னன் துடித்தான். உடனே மாண்டு விழுந்தான். ஊனை விலக்கு சற்கு முற்சூழ்ந்து மிக்க எச்சரிக்கையாயிருந்தும் மன்னன் ஊழ் வயப்பட்டான். மற்றொன்று சூழினும் ஊழ் முந்துறும் என்பதை உலகோர் இவன்பால் உணர்ந்து தெளிந்தார் (விரிவைப் பாகவதத்தில் காண்க)

முதிர்ந்த தவமுடை முனிவராயினும்
பொதுவற நிருவெரு பொலிவராயினும்
மதியின ராயினும் வலியரா யினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார். (கந்தபுராணம்)

அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
அதியறு பிறவியின் இன்பத் துன்பந்தான்
விதிவச மென்பதை மேற்கொள்ளா விடின்
மதிவலியால் விதி வெல்ல வல்லமோ. (இராமாயணம்)

ஊனை விலக்க எவராலும் முடியாதென்பது இதனால் கூறப்பட்டது.

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

ஆகும் ஊழால் முயற்சி தோன்றும். போகும் ஊழால் மடி உண்டாய். நல்லூழ் அறிவைக் கொடுக்கும். தீயூழ் அதனைக் கெடுக்கும். நூல் பல கற்பினும் ஊழறிவே மிகும். தெய்வமும் அறிவையும் ஊழ் இருவேறு வகையாய் நின்று உதவும். தீயதை நல்லதாக்கவும், நல்லதைத் தீயதாக்கவும் ஊழ் வல்லதாம். செல்வம் நிலைத்தற்கும் போதற்கும் ஊழே காரணம். செல்வம் பெறினும் நல்லூழ் இல்வழி அதனை நுகரமுடியாது. ஊழ் உதவாவழித் தானமும் உதியாது. விரைப்பயன் எதுவரினும் அதனை உவந்து அனுபவித்தலே உயர்வோர்க்கு அழகு. ஊனை விலக்க ஒருவராலும் முடியாது. ஊழின் வலியே உலகில் மிக்கது.

நடவது ஊழ் முற்றிற்று.

அறத்துப்பாலும் இப்பாலுடன் முடிந்தது.

உ

அறத்துப்பாலின் திரட்டுப்பால்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் கள் நான்கனுள் முன்னதாகிய அறத்தின் இயல்பை உணர்த்தி தால் இஃது அறத்துப்பால் என நின்றது. அறத்துப்பால் என் பதற்கு அறத்தை உணர்த்தும் பகுதி என்பது பொருள். அற மாவது நல்லன செய்தலும் அல்லன ஒழிதலுமாம். அதனை இல் வாழ்க்கை, துறவு, என்னும் இருவகை நிலைகளிலுமிருந்து செய்ய லாம். கடவுள் வாழ்த்துமுதல் ஊழ் ஈறாக முப்பத்தெட்டு அதி காரங்களால் அதன் இயல்புகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

நூலின் முன்னுரை.

உலகு, உயிர் எவற்றிற்கும் முதல்வர் ஒருவர் உளர். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர். என்றும் உள்ளவர். இன்பவுருவினர். அவரை அன்புடன் நினைத்தலே நம் அறி வுடைமைக்குப் பயன். அவர் மழை வடிவாய் நின்றும் உயிர் களைப் பேணுகின்றார். அம்மழையாலேதான் இவ் உலகும் நிலை பெறுகின்றது. பொறிகளை அடக்கி அரிய செய்வோரே இவ் வுலகிற் பெரியவராவர். அவர் அருள்நெறி ஒழுகலே அறநெறி யாகும். இவ் அறத்தை இல்வாழ்க்கையில் இருந்து செய்வதே எவர்க்கும் நல்லது.

இல்லறம்.

கற்புடைய மங்கலனை மகனைத் தன்மக்களைப்பெற்று, ஒத் தல்பால் மிக்க அன்புடையனாய்ப் பெரியவர், வறியவர் முதலிய எவரையும் பேணி, உணவும் உடையும் உறையுளும் உதவி, இன் சொல் இயம்பி, பிறர் செய்த நன்றியை நினைந்து, நடுநிலை நின்று அடக்கமுடையனாய், ஒழுக்கம்பேணி, பிறருடைய மனைவியை விழையாமல், பொறையை மேற்கொண்டு, பொறாமையை ஒழித் தல், பிறர் பொருளை விரும்பாமல், புறங்கூறாமல், பயனில சொல்

லாமல், நினைவுக்கு அஞ்சி, ஒப்புரவறிந்து, இயன்றவரை ஈதலைச் செய்து, புகழ்பெற வாழ்வோனே இல்லறத்தான் ஆவான்.

துறவறம்.

ஆசாபாசத்தைத் தொலைத்தவனாய், உள்ளுணர்வை ஒழுங்குபடுத்து, எஞ்சாமும் களவும் நெஞ்சங்கொள்ளாமல், வாய்மைகாத்து, வெகுளியை ஒழித்து, இன்னாசெய்யாமல், ஒன்றையுங் கொல்லாமல், நிலையாமையை நினைந்து, நெடுந்துறவைடந்து, மெய்யுணர்வு எய்தி அவாவினை அறுத்துப்பிறவி அறுதிற் போனே துறவறத்தான் ஆவான்.

வாழ்.

இவ் எல்லாவற்றிற்கும் ஊற்றாய காரணமாதலால் அவ் உண்மையை உணர்ந்து நல்வாழ்க்குரிய நல்வினைகளையே மன்பதை நாடிச்செய்தல் வேண்டும்.

உறுதி.

பிறருடைய மனவியல்பை நயவாமலும் புறங்கூறாமலும் உள்ளவரே இல்வாழ்வோருட் சிறந்தவர். மெய்யுணர்வுடையராய் அவாவினை ஒழித்தவரே துறவோருள் உயர்ந்தவர். இவ் இருவகை நிலைகளிலும் நின்று தலைசிறந்த இவ் உயர்நலங்களை அடைந்தவர் எல்லா நலங்களையும் இங்கு எளிதில் அடைந்து அழிவில் வீட்டை முடிவில் அடைவர். இவ்வுண்மையைப் பாலில் நெய்போல் இப்பாலில் காண்க.

உள்ளிர் நமரங்காள் ஓதுந் திருக்குறளாம்
தெள்ளமிழ்து மாந்தித் தெளியுமின்கள்—மெள்ள மெள்ள
எல்லா நலங்களுமவர் தெய்துநமக் கன்றேதான்
வல்லான் அருளும் வரும்.

வளருவப் பொருந்தலை டாலை-வாழ்க.

அறத்துப்பாலில் அடங்கியுள்ளவை.

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
கடவுள் வாழ்த்து	11	பயனிலசொல்லாமை	375
வான் சிறப்பு	35	தீவினையச்சம்	395
நீத்தார் பெருமை	50	ஒப்புரவறிதல்	414
அறன்வலியுறுத்தல்	73	ஈகை	434
இல்வாழ்க்கை	91	புகழ்	455
வாழ்க்கைத்துணைநலம்	109	அருளுடைமை	472
மக்கட்பேறு	127	புலான்மறுத்தல்	490
அன்புடைமை	151	தவம்	509
விருந்தோம்பல்	173	கூடாவொழுக்கம்	532
இனியவை கூறல்	193	கள்ளாமை	553
செய்ந்நன்றியறிதல்	211	வாய்மை	572
நடுவு நிலைமை	230	வெகுளாமை	593
அடக்கமுடைமை	248	இன்னாசெய்யாமை	614
ஒழுக்கமுடைமை	265	கொல்லாமை	635
பிறனில்விழையாமை	283	நிலையாமை	658
பொறையுடைமை	302	துறவு	683
அழுக்காறாமை	320	மெய்யுணர்தல்	707
வெஃகாமை	338	அவாவறுத்தல்	730
புறங்கூறாமை	355	ஊழ்	753